
இந்திரா சௌந்தர்ராஜன்
திருவரசு புத்தக நிலையம்
சேது நாட்டு
வேங்கை

# முன்னுரை

**பு**திய நூற்றாண்டின் முதல் சரித்திரப் பெரு நாவலை எழுத வந்திருக்கிறேன்.

வரலாறு என்றாலே சேர, சோழ, பாண்டியர்கள் மட்டுமே என்பதாக ஒரு மாயை நம்மிடையே உண்டு. பள்ளிக்கூடங்களிலோ அக்பரின் 'தீன் இலாஹி' மற்றும் அசோகர் மரம் நட்டு, குளம் வெட்டிய சுருக்கங்களே மிகுதி.

ஆனால் நிஜமான வரலாறு என்பது வேறு. அது காட்டும் உண்மைகள் குருதி தோய்ந்தவை. சிந்திக்கச் சிந்திக்க நம்முள் பற்றி எரிபவை. இன்றைய முன்னேற்றங்களை அளக்க அடித்தளமாக நிற்பவை.

அப்படி என்னை எரித்த ஒரு வரலாறுதான் சேது நாட்டு வரலாறு... ஆன்மிக நோக்கில் இது ஒரு மிகப் பெரிய புண்ணிய பூமி. இங்குள்ள ராமேஸ்வரம், காசிக்கு அடுத்து மக்கள் நேசிக்கும் பாவம் போக்கும் பட்டினம்.

இந்திய மண்ணிலும் இதுபோல் கடல்மிசை அமைந்த ஒரு ஆலயம் ஏதுமில்லை. கட்டடக்கலையும் சரி, சிற்ப சாஸ்திரமும் சரி உப்புக் காற்றுக்கு நடுவில் நெம்பிக் கொண்டு எழும்பி நிற்பது இங்கேதான்.

இதற்கடுத்து பல்லவனின் மாமல்லையை நாம் ஆழியை அண்டி நிற்கும் மேழியாகக் காணலாம். ஆனால் இங்கே சிற்பம் மட்டும்தான் இருக்கிறது. தெய்வம் நிலை பெற முடியவில்லை என்பது கண்கூடு.

இப்படிக் கலாபூர்வமாகவும் சிலாபூர்வமாகவும் பக்திபூர்வமாகவும் சக்திபூர்வமாகவும் தலைசிறந்து விளங்கும் ராமேஸ்வரம், சேது நாட்டின் ஒரு கலசப் பகுதி.

இங்குள்ள கடற்கரையில் மட்டும் புயல் வீசியிருக்கவில்லை. சேது நாட்டின் மீதே பலவித கலாசாரப் புயல்களும் அரசியல் புயல்களும் வீசி, விதவிதமான வண்ணங்களைக் காட்டி இருக்கின்றன.

அவற்றிற்கு ஈடுகொடுத்து மறவர்கள் வாழ்ந்த வாழ்க்கை மனதை நிறைக்கின்றது. இவர்கள்தான் சேத நாடாக இந்த சேது நாடு ஆக முயன்ற போதெல்லாம் அதோடு மோதி, இந்த நாட்டையே மீட்டிருக்கின்றார்கள்.

இந்து வம்சாவளியில் இராமனுக்கும் சிவனுக்கும் நாதனாகி 'இராமலிங்க விலாசம்' என்றே தங்கள் கோட்டைக்கும் கொத்தளத்திற்கும் பெயரிட்டுக் கொண்டிருந்தாலும் இந்தச் சேதுபதிகள் இஸ்லாமியர்களோடும், கிறித்தவர்களோடும் காட்டிய இணக்கம் வீரியமிக்கது.

சைவச் சார்பு நெறியில் தீவிரம் இருப்பினும் வைணவம் தழைக்கவும் வாரி வழங்கி இருக்கிறார்கள்.

இத்தனைக்கும் கங்கை போல் ஒரு நதியோ, காவிரியின் ஒரு பகுதியோகூடப் பாயாத வானம் பார்த்த பூமி இந்தச் சேது நாடு.

மழை வந்தால்தான் தழைப்பு. இல்லாவிட்டால் மலைப்புதான். அந்த மழையைப் பிழையின்றிப் பிடித்தாட்கொள்ளத்தான் கண்மாய்கள், ஊருணிகள், அணைகள்... இருப்பினும் பஞ்சம் அவ்வப்போது



வந்து நெஞ்சம் கனக்க வைக்கும். இதனால் செல்வர் கூட்டத்தைவிட, வந்து செல்வோர் கூட்டம் மிகுந்த இந்த நாட்டுச் சேதுபதிகளில் கிழவன் சேதுபதிக்கு ஒரு தனியிடம் உண்டு.

பெயரிலேயே விநோதத்தைக் கொண்ட இவன் நிஜமான கிழட்டு வயதிலும் ஒரு இளைஞன் போல் வீரத்தோடு வாழ்ந்தவன். எதனாலோ தன்னை எல்லோரும் கிழவன் என்றே விளிக்க விரும்பினான்.

நானறிய இவன் போல ஒரு விசித்திரமான மன்னன் வரலாற்றில் இல்லை. இவனுக்கு 45க்கும் மேல் மனைவியர்...! அத்தனை பேரும் இவன் மரணத்தின்போது உடன்கட்டை ஏறியது நிச்சயமாக உலக அதிசயம்.

எவ்வளவோ யுத்தங்கள்— தொண்ணூறு சதம் அதில் வெற்றி மட்டுமே... வெள்ளையனிலிருந்து இஸ்லாமியர்கள் தொட்டு கிறித்தவர்கள் வரை இணக்கத்திற்கு இணக்கம், சுணங்கினால் பிணக்கம் என்று இவன் வாழ்ந்த முறை...

பாளையக்காரனைப் போன்ற அந்தஸ்தில் இருந்த போதிலும் ஒரு சக்கரவர்த்தி போல மதுரை, தஞ்சை என்று தொட்டு டெல்லியில் ஔரங்கசீப் வரை அரசியல் சதுரங்கத்தில் ஆடிச் சாய்த்த சாதுர்யம்...

தனது சின்ன நாட்டிலும் பட்டு நெய்து, முத்துக் குளித்து, புகையிலை பயிரிட்டு, கடல் வாணிபம் கண்டு, கலைகளையும் வளர்த்து கஜகர்ணமடித்த சாதுர்யங்கள் அடேயப்பா...!

இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கும் அத்தனை நெருக்கடிகளும் அன்றும் இருந்தன. ஒற்றை மனித

னாகக் கிழவன் அவற்றைப் பந்தாடிய விதம் என்னை உந்தித் தள்ளிக் கொண்டேயிருக்கிறது!

கொஞ்சம் நிலவு கொஞ்சம் நெருப்புப் போல, கொஞ்சம் கற்பனை, கொஞ்சம் ஊகம்—இவற்றிற்கு நடுவில் வலுவான ஆதாரங்களோடு இந்த வேங்கைக் கிழவனைத் தாங்கி வருகிறேன். உடன் தொடருங்கள்.

அன்புடன்,
**இந்திரா சௌந்தர்ராஜன்.**

# சேது நாட்டு வேங்கை

## 1

அகபதி கெசபதி நறபதிரெகுனாதச் சேதுபதி
றாச்சிய பரிபாலனஞ் செலுத்தி வருகையில்– சாலிவ்வ
ாகன சகாற்த்தம் 1609க்கு மேல்ச் செலானி
ன்றை பிறபவ வருடம் ஆனி மாதம் மதுரை சே
காமாகிய சின்ன இளமனூரிலிருக்கும் சோள
கை சேருவைக்காறன் பெண்ஞ்சாதி கொண்டே
டாடிக்காரி இருவகைப்பபேரும் இளமனூ
ரிலிருந்து சேது ஆதிக்கம் மகா றாசா றாயஸ்த்தி
ரி துரையவர்கள் சம்ச்செபத்தில் வந்
து கண்டு வெகுநாள் வரைக்கும் சோளக
சேருவைக்காறன் பெண்ஞ்சாதி கொ
ண்டோடிக்காரியும் காத்திருந்ததில் ஷை
யாளுக்கு அரமனை வாசலூளிய தானாபதிக்க
மும் சோளக சேருவைக்காறனுக்கு பாளையப்
பட்டு சேருவையும் குடுத்து ஷை சோ
ளக சேருவை காறனை கள்ள பக்தி நாட
ளை ஒடுக்கி வரச் சொல்லியும் சேதுமா

*றக்கங்கள் அசோத்தியம் ஒடுக்கி வரச் சொல்லியும்*
*—உத்தரவும் கட்டளையுமிட்டு வெகுமதியும் கு*
*திரையும் குடுத்து யாருக்கு சீவன காரியத்துக்*
*கு இளமனேரியில் காடு கரை வெட்டிகுடி*
*யேத்திவிச்சு...'*

*— சேதுபதி மன்னர் செப்பேட்டிலிருந்து...*

**பா**ர்த்துப் பார்த்து நெய்யும் பட்டுத் தறிக்குள் வண்ண ஊடு பாவு எப்படி நீந்திச் செல்லும்?

அதுபோல் இருந்தது இராமேஸ்வரத்து அக்னி தீர்த்த சமுத்திரக் கரை அலைகள்!

அங்கும் இங்குமாய் அனேகம் பேர் அந்தச் சமுத்திரத்தில் மூழ்கி எழுந்தும், கும்பிட்ட கரங்களோடு பிரார்த்தனை செய்த வண்ணமுமாய் இருக்க அவர்களில் ஒருத்தி மட்டும் இவை ஏதும் செய்யாதபடி அலைபாயும் சமுத்திரத்தின் அதன் நீள அகல பரிமாணங்களையுமே பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள்.

ஆடை அணியையும் அங்கலாவண்யங்களையும் பார்த்தால் செல்வச் செழிப்புள்ள குடியில் வந்தவளாகத்தான் தெரிந்தது.

கண்டாங்கிச் சட்டு உடுத்தியிருந்தாள் ஜரிகை மின்னும் முந்தியும் அதில் இரட்டைக் கிளிகள் சிறகடிப்பது போன்ற வேலைப்பாடும் பரமக்குடி பட்டுநூல் காரர்களை ஞாபகப் படுத்தியது.

அவர்களுக்குத்தான் அப்படி எல்லாம் புட்டா போட்டு கம்பி எடுத்துப் பொறுமையாகவும் கர்மசிரத்தையாகவும் ஆடை முடாய வரும்.

ஒருவேளை இந்தப் பெண்ணே அந்தச் சமூகத்தவளோ என்று எண்ணத் தோன்றியது.



அந்தக் கடற்பிராந்தியத்தின் ஒரு மூலையில் ஒரு பனை ஓலைச் சாவடிக் குடிசை ஒன்று இருந்தது. அதன் முன்னால் சில புரவிகளும் வாலைக் குழைத்த வண்ணம் நின்று கொண்டிருந்தன: சாவடிக் குடிசை மேல் பறக்கும் மஞ்சள் நிற லிங்கக் கொடியானது அது ஒரு அரசுக் காவலர்கள் சாவடிக் குடிசை என்பதை நிதர்சனமாக அறிவிப்பது போலிருந்தது. ஆமோதிக்கும் ரகமாய் அதனுள்ளிருந்து ஆஜானுபாகுவாய் ஒருவன் வெளிப்பட்டான்.

முழங்காலைத் துளி கடந்த கள்ளர்கட்டும் இடைக்கச்சும பாகையுமாகத் தோரணையிலேயே லீரலட்சணம் எழுதினான்.

மார்பும் புஜங்களும் உருக்கை உருக்கி வார்த்துப் பிடித்த மாதிரி இருந்தன. நிஜத்திலும் கறுப்புதான்... அவன் கைக் காப்பில் சேதுநாட்டு லிங்க முத்திரை மேவிய பித்தளைப் படாகம் ஒன்று கட்டப்பட்டிருந்தது.

ஒட்டு மொத்தமாய் அவன் ஒரு காவலன் என்பதாக அவதானிக்க முடிந்தது. நீண்ட கடற்கரைக்கு அவனும் மற்றும் இராமநாதர் ஆலயத்தைச் சுற்றி நாற்புற வீதிகளுக்கு மேலும் பலரும் காவற்பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள்.

எல்லாம் சேதுபதிக் கிழவனின் உத்தரவு!

நாவல் பூமியில் நாடுகள் பல இருந்த போதிலும் சேதுநாடு இராமேஸ்வராலயத்தைத் தன்னுள் கொண்டிருந்தமையால் வடவரும் சரி, தென்னவரும் சரி வந்து போக வேண்டிய க்ஷேத்திரமாகிவிட்டது.

இதிலும் பாகுபாடே துளியும் இல்லை.

நாவலந்தீவின் நெற்றிப் பொட்டில இருக்கும் டெல்லியில் இருந்து மார்புப் பாகத்து மஹாராஷ்ரர்களும், இடவலமாக உள்ள ராஜஸ்தானிகளும், கலிங்கத்து மக்களும், ராஷ்டிரகூடர்களும் கங்கையில் முதல் காலை வைத்தால் அடுத்து ஒரு

பானை கங்கை நீரோடு மறுகால் பதிப்பது சேது மண்ணில் தான்...

அத்தனை பேரின் ஒரே நோக்கும் அந்த ராமநாத ஸ்வாமி மீதுதான்— இதனால் புண்ணிய வேட்டை நிகழ்த்துவோரின் பண்ணைய ராஜ்யம் இது என்றாலும் மிகையேயில்லை.

அப்படி வருவோரை அடித்துப் பிழைக்கும் ஒரு கூட்டமும் இருக்கத்தான் செய்தது. பெரிதென்றால் சிறிது. வலிதென்றால் எளிது. கறுப்பென்றால் வெளுப்பென்று பாகுபாடுகள் இருக்கிற மாதிரி மனிதக் கூட்டத்திலும் சிலர் உழைப்புக்குப் பிழைப்பு என்றில்லாதபடி கள்வும் களவுமாக மாறி விடுகின்றார்களே...?

இவர்களால் சேது நாட்டுக்கே சிறுமையும் வெறுமையும் ஏற்பட்ட நிலையில் அதைப் போக்கிட சேதுபதிக் கிழவன் நினைத்ததன் எதிரொலிதான் ஊரெங்கும் காவற் பணியாட்கள்.

அதிலொருவன்தான் அந்தக் கடற்கரைக் காவலன். அவனது பார்வையில் அந்தப் பட்டுக் கண்டாங்கிக்காரி நெடு நேரமாய்ச் சமுத்திரக் கரையில் நின்ற வண்ணமிருப்பது அவனை உலுக்கியது போலும்...

நெருங்கிச் சென்று உசாவ விரும்பினான். அதன் பொருட்டு அவனது புரவியை நாடிச் சென்று அதன் மேலேறினான்.

ஒரு பருவப் பெண் துணையின்றிக் கடற்கரைக்கு வருவதென்பது அத்தி பூப்பதைவிட அரிதான ஒன்றாக இருக்கும் காலமாயிற்றே...?

கூட்டம் கூட்டமாகத்தான் வண்டி கட்டி வருவார்கள். அதிலும் பகல் பொழுதில்தான் பயணம். ராவானால் சத்திரஞ் சாவடிகளில் தங்கித்தான் சென்றாக வேண்டும். அணையாத அடுப்போடும், அன்னம் கிடக்கும் அண்டாக்



களோடும் அங்கே உபசரிக்கத்தான் கிழவனார் பலரைப் போட்டிருக்கிறாரே?

அப்படி இருக்க தன்னந்தனியாய் ஒருத்தி இத்தனை தூரம் வந்து எதற்காக இப்படிக் கடலையே வெறித்த வண்ணமிருக்கிறாள்? யார் இவள்?

அவனுள் அடுக்கடுக்காகக் கேள்விகள்.

அவளைச் சமீபித்தது அவன் புரவி... ஈர மணலில் மணலைக் கெல்லி குதிதாளமும் போட்டு, கனைப்போடும் பெருமூச்சோடும் அவளைத் திரும்பிப் பார்க்க வைத்தது.

"ஆரு பிள்ள... எதுக்காக இப்படிக் கடலையே வெறிச்சுகிட்டு நிக்கே?"

—அவன் கேள்வியை அவள் உடனடியாகப் புறம் தள்ளினாள். ஓர் அற்பச் சிணுங்கல் இதழ்க்கடை மேலேறி அரைக் கன்னம் வரை பரவிப் போனது. தொடர்ந்து எதிரே அலை மோதும் சமுத்திரத்தைப் பார்க்கத் தொடங்கினாள்.

"ஏய் கேக்கேன்ல... என்ன வெறிச்சினமா?"

—அவன் புரவி ஒரு அரைவட்டம் போட அவனும் சீறலானான். இம்முறை அவள் அவனை ஊன்றி விட்டு மெல்ல இதழ் பிரித்தாள்.

"யாருன்னா கேட்டே?"

—அவனிடம் ஆமோதிப்பு.

"நீ அரமண ஆளா?"

"தல வீரன்— எதுக்குக் கேட்கறே?"

"ரொம்ப நல்லதா போச்சு. ஆமா சேதுபதி ராசாவைப் பாப்பிகளா?"

"எதுக்குக் கேக்கே?"

"பாப்பிகளா, மாட்டிகளா அதச் சொல்லும்."

"பாக்காம... நான் கேட்டதுக்குப் பதில் சொல்லாம இதென்ன சங்கடையா கேள்வி?"

"கேள்விதான்... அப்படிப் பாத்தா அழகம்மையைத் தெரியுமா ராசான்னும் ஒரு கேள்வி கேளும். அப்போ தெரியும் நான் யார்னு..."

—அவள் புதிர் போட்டாள். அவன் சுமாராக விக்கித்து விட்டு அவளைச் சில வினாடிகள் ஊன்றிப் பார்த்தான்.

"அது சரி.. சாமி சேவிக்க வந்தீகளோ?"— கேட்டான்.

"எல்லாத்துக்கும்தான்..."— அவள் சொன்னபடியே அங்கிருந்து விலகத் தொடங்கினாள். அவனுக்குத் திகைப்பாக இருந்தது.

யார் இவள்?

இளமனேரி!

வயலும் வனப்பும் சூழ்ந்த இந்த நல்லூரின் வண்டிப் பாதை மேல் கடற்கரைக் காவலனின் சென்னிறப் புரவி மிதமான ஓட்டத்தில் இருந்தது.

பங்குனியை நெருங்கும் அறுவடைக்கால முடிவு நாட்கள் என்பதால் வயல்களில் அறுப்பு முடிந்து அங்கங்கே குறுமலையாக நெல்லைக் குவித்து அதைக் கலங்களில் அளந்து கொண்டிருந்தார்கள்.

வயலைக் கடந்து சிறிதாக ஒரு வாழைத் தோட்டமும் தோட்டத்து இலைகளூடே இளமனேரியின் மாரியம்மன் கோயில் ஆலயக் கோபுரமும் ஒரு திரைச்சீலை ஓவியம் போல் திவ்யமாகத் தெரிந்து கொண்டிருந்தது.

ஆலயத்தை ஒட்டி ஐந்தாறு தெருக்கள்.

முன்பெல்லாம் வயலாடிகள் மட்டுமே இருந்த தெருக்களில் இன்று கைக்கோளர்கள், சாணார்கள், குயவர்கள் என்று எல்லாத் தரப்பினரும் குடியேறியிருந்தார்கள்.



இப்படிச் சொல்வதைவிட சோளகை சேர்வைக்காரன் அவர்களை எல்லாம் அங்கே குடியமர்த்தியிருந்தான் என்றால் மிகையில்லை.

அவன் வரையில் இளமனேரி ஒரு சின்ன சேது நாடு. அவனைத் தேடித்தான் உள் நுழைந்து கொண்டிருந்தான் புரவி வீரன். அதற்குத் தோதாக சேர்வையும் ஒரு வீதியிலேயே இன்னொரு புரவி மேல் தென்பட்டு அவனுக்குத் தேடும் வேலையைக் குறைத்தான்.

"வாவே... ஏது இத்தனை காதம்?" என்ற கேள்வியுடன் அந்த வீரனையும் எதிர்கொண்டான். பின் இருவரும் இறங்கிப் பக்கமாய்ப் பனைவெல்லம் காய்ச்சும் ஒரு குடிசை நோக்கிப் போய் அங்கே ஓங்கி வளர்ந்திருக்கும் ஒரு சொரகவுந்தி மரத்தின் சுமாரான நிழல்பாகத்தில் நின்று கொண்டனர்.

ஊடே வெல்லம் காய்ச்சுபவன் குடிசைக்குள் போய் ஒரு குடுவை நிறைய பனங்கள்ளைப் பிடித்துவந்து இருவருக்கும் கொடுத்து உபசாரம் செய்ய, அதை ரசமாக அங்கீகரித்தபடியே கடற்கரைக் குதிரை வீரன் பேசலானான்.

"சேர்வை.. ராமலிங்க சகாயத்துல சில நாட்களா கள்ள உபாதை இல்லை. கோவிலுக்கு வந்து போகும் சனக்கட்டும் சந்தோஷ மந்தோஷமாதான் திரும்பறாக. ஊடால ஒரு ஆச்சரியம்."

"என்ன?"

"யாரோ அழகம்மைன்னு ஒரு பொண்ணு..."

"அழகம்மையா?"— பதிலுக்குச் சேர்வைக்காரன் கேட்ட விதத்தில் அதிர்ச்சி துளி தெரிந்தது.

"உனக்குத் தெரியுமா அவளை?"

"அவுகளை நீ எங்க பாத்தே? என்ன சேதி?"

"ராமநாதர் கோயில் புறத்துல அக்னி தீர்த்தமாண்ட—"

"ஆத்தாடி... அம்மாச்சி அருவரை வந்து நோட்டம் போடத் தொடங்கிட்டாகளா?"

"அம்மாச்சியா? ஆரு சோலை அது?"

"சரிதான்... ராஜபுத்திரிலையே உனக்கு அடையாளம் தெரியலியோ?"

"ராஜபுத்திரியா?"

"ஆமாம்... நம்ம கிழவரோட இஷ்டக் கிழத்தி."

"அவுக பேர் காத்தாயின்னுல்ல கேள்வி..."

"காத்தாயி இவுகளுக்கு ஒரு படி மேல. இவுக நம்ம கிழவரை நினைச்ச தனக்குத் தானே பொட்டுகட்டிகிட்டவுக. ஆட்டம் பாட்டத்துல பேரெடுத்த நாட்டியக்காரியும் கூட... கிழவர் தெரிஞ்சும் தெரியாமத்தான் இருந்தாரு. ஆனா விடலையே இவுக."

"அப்படியா...? நெடுநேரம் கடலை வெறிச்சாக... நான் போய் கேட்டப்ப, போய் ராசாகிட்ட சேருன்னு சொல்லிட்டுப் போய்ட்டாக, நான் அவுகளைப் பின் தொடர்ந்தேன். ஆனா கிழக்குத் தெருவுல கூட்டத்துல மறைஞ்சிட்டாக."

"அப்படின்னா... கிழவரும் அங்கதான் இருக்கணும்."

"பாளையப்பட்டார் இப்படியும் படைபரிவாரம் இல்லாமலா வருவாரு?"

"பாளையப்பட்டாரா? பண்ணாட கிழவர் ராசாடா! காதுல விழுந்தது உனக்குத் தோலு உரிதான்..."

சோலைக்காரன் சற்று அதட்டலாகச் சொன்னவன் அதன் நிமித்தம் கோபமும் கொண்டான். மூக்கு விடைத்துப் போய் மீசை துடித்தது.

"இதுக்கு என் சோலை இப்படி கோபிக்கிறே?"

"பின்ன... திருமலையார் காலத்துலையே இந்த ராமநாத புரம் சீமை சேதுச் சீமையா தனிநாடா ஆயாச்சே... இதை



இன்னும் மதுரைக்குக் கப்பம் கட்ற பாளையமாவா நீ எண்ணி யிருக்கே?"

"எனக்கு ராஜ்ய உள் விவகாரம் தெரியாது சோலை. தெரிஞ்சிருந்தா அந்த அழகம்மையையே நான் யாருன்னு உன் கிட்ட வந்து கேட்பேனா?"

—இருவரும் பேசும் அந்தத் தருணத்தில் ஒரு வயதானவர் கழுத்தில் சிலுவைச் சங்கிலியுடன் கடந்து கொண்டிருந்தார். உடம்பில் வெள்ளையங்கி.

சோலையைப் பார்த்து நெருங்கி வந்து, "நலம்தானே?" என்று நல்ல தமிழில் கேட்டார்.

"நல்லாருக்கேன் சாமி..." என்ற சோலையைப் பார்த்து ஆசீர்வதிப்பது போல் கையைக் காட்டிவிட்டுத் தொடர்ந்து நடக்கலானார்.

சோலை முகம் ஒரு க்ஷணம் கலங்கிப் போனது.

"அவரு பேக சாமி ஆள்தானே?"— அந்தக் கடற்கரை வீரன் சந்தேகத்துடன் கேட்டான்.

"ஆமாம் முத்துக்கனி" என்று அவன் பெயரை முதலாவதாகச் சொல்லி அவனையே பார்த்தபடி சோலை கூறும்போது, அவர்கள் இருவரும் பார்க்கும்படியாக ஒரு புரவி இராமேஸ்வரச் சாலைமேல் ஒரு புயற் காற்றாய் வந்த வண்ணமிருந்தது. குதிரை மேல் அமர்ந்திருப்பவன் ஆடையும் அணியும் தாடையை மூடிக் கட்டிய பாகையும் அவன் சேது நாட்டவனே இல்லை என்று ஊர்ஜிதமாகக் கூறியது.

அதை உணர்ந்து கொண்ட சோலை விநாடியும் தாமதியாமல் தன் புரவிமேல் தாவி, ஏறி அவனைத் தொடரத் தொடங்கினான்.

சில காத தூரத்தில் இருக்கும் இராமநாதபுரம் அரண்மனையான 'இராமலிங்க விலாசம்' நோக்கியே அவன் செல்வது பின் தொடரும் சோலைக்குப் புரிந்து விட்டது.

# 2

'...கொண்டநாடு கொடாதான், பாண்டி மண்
டலத் தாபனாசாரியன், சோளமண்டல பிறதிஷ்டாபனாசாரி
யன், தொண்டமண்டல சண்டப்பிரசண்டன் ஈளமுங் கெ
ாங்கும் யாப்பாண பட்டணமு மெம்மண்டலமு மளித்து
கெசவேட்டை கொண்டருளிய ராசாதிராசன் ராசபர
மேகபரன், ராசமாற்தாண்டன், ராய ராவுத்தமுண்டன்
மன்னரில்மன்னன் மருவலர்கள் கேசரி, துஷ்டரில்து
ஷ்டன், துஷ்டநெட்டூரன், சிஷ்டபரிபாலனன் ஒட்டியர்தளவி
பாடன் ஒட்டியர் மோகந் தவிள்த்தான் துலுக்கர் தளவிப
ாடன் துலுக்கர் மோகந் தவிள்த்தான் சம்மட்டம்
நாறாயணன், சாடிக்காற கண்டன்...'

— சேதுபதி மன்னர் செப்பேட்டிலிருந்து

ராமலிங்க விலாசமெனும் அந்த அரண்மனைக்கு ஒரு மாபெரும் விலாசமுண்டு. அற்புதமானதொரு கருங்கற் கோட்டையாயும், விலாச்சுண்ணம் பூசிய மகா இடிதாங்கி யாகவும், அன்னை மகா சக்தியின் ஸ்ரீபுரம் போல அகத்திலும் புறத்திலும் வாஸ்து லட்சணம் மிக்கதாகவும் காவற் கூண்டு, வீரர்சாவடி, அகழ், கொட்டாரம், தரிசனமாடம், நாற்பத்து நான்கு அலங்கங்கள், வாயுச் சாளரம், வட்டத் தூக்கல், மைதானம் என்கிற கோட்டை லட்சணங்களை எல்லாம் மிகுதியாகவே கொண்டிருந்தது அது.

வாஸ்தவத்தில் சேது பந்தனத்தால் சேது நாடாகிய இந்த மறவர் சீமையின் தலைமையிடமாகப் போகளூர்தான் இருந்தது.



கிழக்கு எல்லையில் வங்கக்கடலும், மேற்கு எல்லை மதுரைச் சீமையாகவும், வடக்கு எல்லை பாம்பாறுக்கரை யாகவும் தெற்கு எல்லை வேம்பாறும், வைப்பாறாகவும் இருந்த நிலையில் போகளூரில் இருந்து கொண்டு ராஜ்ய பரிபாலனம் செய்வது யாருக்கு இடைஞ்சலாக இருந்ததோ இல்லையோ, கிழவன் ரகுநாத சேதுபதிக்கு அது உறுத்தலாக உத்பாதமாகவே இருந்தது.

ஆடையை வைத்துத்தான் ஆளுக்கு மதிப்பு. கோட்டையை வைத்தே அரசனுக்கு மதிப்பு என்று புதுப்பொருள் கொண்ட கிழவன் அடங்காக் கொதிப்போடும் ஆசை முனைப்போடும் கட்டிக் கொண்டதுதான் இராமநாதபுரம் கோட்டை. முகப்பில் தும்பிக்கை நாதனுக்கும் குலதெய்வமாகிய இராஜ இராஜேஸ்வரிக்கும் கூட ஆலயத்தைக் கட்டிவிட்டுத்தான் உள்கூடுகளைக் கிழவன் உருவாக்கினான்.

கிழவன் எழுப்பிய இந்தக் கோட்டை அவனது நாலாபுறத்திலும் கூடச் சலசலப்பை உருவாக்கிவிட்டது. 'அவனுக்கென்ன சக்கரவர்த்தி என்று நினைப்பா?' என்று கேட்ட மதுரை சொக்கநாத நாயக்கர், தஞ்சை நாயக்கரான செங்கமலதாஸ், செஞ்சி ஷாஜி என்று ஆளாளுக்குப் பொருமித் தீர்த்து விட்டார்கள். ஆனால் நெல்லை பாளையக்காரரும் மற்ற எழுபது பாளையக்காரர்களும் கிழவனை நினைத்தால் வீர மதிப்புதான் கொண்டார்கள்.

இவர்கள் மதுரை நாயக்கருக்குக் கப்பம் கட்டிக் காலில் விழுந்து தெண்டனிடுபவர்கள். அதில் கூட முறைகள் உண்டு. நெல்லை நாயக்கர் மூன்று முழ தூரம் முன்நின்று முதுகு வளைய வந்தனம் சொல்ல வேண்டும். ராசபாளையத்தார் சாஷ்டாங்க நமஸ்காரமே செய்ய வேண்டும். புதுக் கோட்டையார் போற்றித் துதி பாட வேண்டும். இதெல்லாம் வழக்கத்தில் வந்ததா, இல்லை கட்டளையிட்டு நடத்தப்பட்டதா என்பது தெரியவில்லை. ஆனால் இந்த மாதிரிக் கும்பிடுகள்

கிழவனிடம் மட்டும் நடக்காது. கும்பிடச் சொல்லவும் யாருக்கும் தைரியம் கிடையாது. இவை எல்லாம் அரை நாழிகைக்குள் அறுபதாயிரம் பேரைத் திரட்டி அவர்களோடு முப்பது காதம் முழு மூச்சோடு ஓட முடிந்த ஒரு வீரனுக்குக் கிடைத்த சன்மானம் என்று கூடச் சொல்லலாம்.

அதிலும் கிழவனின் படையிடம் எல்லாவித வீரப் பிரயாசைகளும் உண்டு. வெறும் குதிரைகள் மிரண்டு ஓடி வருகிற மாதிரி இருக்கும்– ஆனால் பக்கவாட்டில் வீரர்கள் பல்லி போல் ஒட்டிப் படுத்திருப்பார்கள். பக்கம் வரவும் நிமிர்ந்து கட்டாரியை விசையோடு பாய்ச்சுவார்கள். சிலர் ஈயக் குண்டுகளை வீசிப் பொட்டிலடித்துக் கொல்லுவார்கள். பலருக்கு மழுவாயுதம் சுழற்றுவது மிகப் பிடிக்கும்

எல்லாமே கிழவனின் ஏற்பாடு–பிரயாசை. அதற்கும் மிஞ்சிய ஒரு சொல் இருந்தால் அதைக் கூடப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்த வீரக்கூட்டம்தான் அவன் பலம். அவன்தான் அவர்களுக்குப் பலம்–

"நாயக்கர்கள் இந்த மண்ணைச் சார்ந்தவர்கள் அல்ல. மறவர்களே– நாம்தாம் இங்கே அவதரித்தவர்கள். வண்ணத் தமிழ் நம் இனிதான மொழி. தெலுங்கர்கள் வேற்றவர்கள். இவர்கள் கட்டளையிட நாம் செயல்படுவதா?

ஆற்றைக் கடக்கப் படகில் ஏறியவன் ஆறே தனக்கு அடங்கிவிட்டதாகவா நினைத்துக் கொள்வது?" என்பது போன்ற அவன் கேள்விகள், சிந்தனைகள் விந்தையானவை.

ஒரு சமயம் இப்படிச் சிந்தித்தாலும் மறு சமயம் அவர்கள் அளித்த வாய்ப்பால்தான் சேதுநாடே சிறப்புப் பெற்றது. மனிதரில் தமிழன், தெலுங்கன், இசுலாமியன், கிறித்தவன் என்கிற பேதமெல்லாம் அபத்தம். மகா அபத்தம் என்றும் பேசிச் சற்றுக் குழப்பவும் செய்வான். எது எப்படி ஆனாலும் அடங்கிக் கிடந்தும் அடையாளங்கள் இல்லாமலும் இருந்த



மறவர்களுக்குக் கிழவன் புது ரத்தம் பாய்ச்சிப் புத்துணர்ச்சி அளித்தவன் என்றால் மிகையேயில்லை. அதிலும் இளைஞர் குழுவிற்கு அவனொரு குதிரைமேல் ஏறிவரும் கருப்பசாமி, காட்டுத் தெய்வம்! பல்லக்கில் வந்தால் அந்த ராமேஸ்வரன், நடந்து வந்தால் ஆரண்ய ராமன்!

அவனது இராமலிங்க விலாசக் கோட்டையோ ஒரு பெருங்கோயில். அப்படிப்பட்ட அந்தக் கோட்டை நோக்கி வந்த குதிரை வீரனின் புரவி அசுழி குறுக்கிட்டதால் தேங்கி நின்றது. நாவண்ணங்களிலும் நுரை தப்பிப் பெருமூச்சு கனன்றது அதனிடம்.

பின்னாலேயே வந்த சோளகைச் சோலைகாரனும் இப்பொழுது அவனை நெருங்கி வந்து நின்றான். பார்வையாலேயே 'யார் நீ?' என்கிற மாதிரிப் பார்த்தான். அவன் பார்வையோ சோலையைப் புறந்தள்ளிவிட்டுக் கோட்டை முகப்பைப் பார்த்தது. 'பெரிய கோட்டைதான்' என்றும் மனது சொல்லிக் கொண்டது.

"ஏய்– யார் நீ? எதுக்கா அப்படிப் பாக்கே?"– சோலை கேள்வியால் அவனைத் திருப்பினான்.

"நான் யாராயிருந்தால் உனக்கென்ன? நீ யார்? அதைச் சொல்..."– அவன் பேச்சில் சற்று காரம் தொனித்தது.

"நா யாரா–? சேதுப் பட்டணத்துல அதுலயும் இந்த இராம நாதபுரச் சீமைல என்னைப் பாத்து இப்படி ஒரு கேள்வியா கேக்கே? பாத்தா தெரியல–?"– அவன் மணிக்கட்டில் தெரிந்த லிங்கச் சின்னப் பட்டயம் கேள்வி கேட்டவன் முகத்தில் உடனேயே பலத்த மாற்றத்தை வரவழைத்தது.

"ஓ– நீ அரண்மனை ஊழியனோ?"

"ஆமா–"

"நான் அவசரமாக உங்கள் பாளையாதிபதியைப் பார்க்க வேண்டும்."

"நீ யார் அதைச் சொல்லு_"— சோலையின் கேள்வியைத் தொடர்ந்து இடையில் இருந்து ஒரு சிறு ஓலையை எடுத்தவன், "நான் மதுரை சொக்கநாத நாயக்கர் அரண்மனை ஊழியன். என் பெயர் நல்லமன். தளவாய் கோவிந்தப்பைய்யாவின் பிரதான சீடன்_" என்றபடியே சோலையை ஊடுருவினான்.

"அதென்ன ஓலை_?"

"இது ராஜ விஷயம். உன்னோடு நான் பேச முடியாது. உங்கள் பாளையாதிபதி எங்கிருப்பார். அதைச் சொல்."

"பாளையாதிபதியா? பல்லு கொட்டிப் போகும். அவர் ராஜா— சக்கரவர்த்தி— ஞாபகம் வெச்சுக்கோ_"

—சோலையின் கோபம் நல்லமன் எனும் அந்த வீரனைப் பயமுறுத்தாமல் ரசிக்க வைத்தது.

"பரவாயில்லை. இந்த உணர்வுதான் உங்கள் நாட்டுக்கே பலம். அதனால்தான் பாளையம் தனி நாடாகி விட்டது. இது எங்களிடம் குறைந்து போனதால்தான் ஒரு குதிரைக்காரன் எங்களையும் குதிரை போல் எண்ணி மேய்த்துக் கொண்டிருக்கிறான். மாமதுரையும் பாளையம் போல் குறுகி வருகிறது."

"என்ன சொல்றே நீ?"

"அப்பனே, விரிவாக நின்று பேச அவகாசமில்லை. நான் நிறைய நம்பிக்கையோடும் அரண்மனைச் செய்தியோடும் கிழவரைப் பார்க்க வந்திருக்கிறேன். அந்த ராமநாதசாமி மேல் சத்யம். நீ இதற்கு மேல் என்னை எதுவும் கேட்கக் கூடாது. தயவு செய்து என்னை உன் ராஜா— அதாவது சக்கரவர்த்தி முன் அழைத்துச் செல்ல வழி செய். உனக்குப் புண்ணியமாகப் போகும்."

நல்லமன் பேசும் விதம், அவனது கெஞ்சல் எல்லாமே சோலையைச் சற்றுப் பிசைந்தது. இதில் அவன் ராமநாதசாமி மேல் செய்த சத்தியம் மதுரையில் ஏதோ பெரிய பிரச்சினை என்றும் அவனுக்குப் புரிய வைத்தது.



"கொஞ்சம் பொறு_ அப்படி சாவடி நிழலில் நில்_" என்ற சோலை, தன் புரவி மேல் ஏறிக் கோட்டைக்குள் நுழையலானான்.

கோட்டை வீரர்கள் அவனைப் புன்முறுவலுடன் பார்த்து ஸ்நேகத்துடன் வழிவிட அவன் புரவி உள்ளே மைதானம் கடந்து கிழவரின் அரண்மனை முகப்பை எட்டி நின்றது.

அருகில் பச்சைக் கொடி பறக்கும் வள்ளல் சீதக்காதியின் சாரட்டும் நின்று கொண்டிருந்தது!

## 3

'வரலாற்றுப் பேராசிரியர் சத்தியநாதய்யர் கூடக் கிழவன் சேதுபதி என்றால் முதிய சேதபதி (old or aged Setupati) என்றே பொருள் காண்கிறார். ஆனால் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் கிழவன் எனும் சொல் எந்தப் பொருளில் பயன்படுத்தப்பட்டு வந்தது என்று கருதிப் பார்ப்பாரேயானால் கிழவன் என்பதற்கு முதியவன் என்று பொருள் கொண்டிருக்க மாட்டார்.

பண்டைத் தமிழ் இலக்கியங்களில் மருத நிலத்து மக்களைக் கிழவன், ஊரன், மகிழ்நன் என்று குறிப்பிட்டுள்ளனர்.

கிழவன் என்பதற்குப் பொருள் 'உரிமை' என்பதனால் கிழவன் என்பதற்கு உரிமை உடையவன் எனும் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.'

— நன்றி: பீ. மனோகரன் எழுதிய
'கிழவன் சேதுபதி' நூலிலிருந்து

அந்தப் பச்சை வண்ணச் சாரட்டை ஒட்டி ஒரு சுறுட்டு நிறப் புரவி ஒன்றும் கட்டப்பட்டிருந்தது. அது வாலைக் குழைக்கும் விதமும், பிடரியை அடாது உசுப்பிவிட்டுக் கொள்ளும் தன்மையும் பார்ப்பவர்களை ஈர்க்கும். அத்துடன் அது போல் ஒரு புரவியை இராமநாதபுரம் சீமையிலேயே யாரும் பார்த்ததில்லை என்று கருதுமளவு அது நல்ல ஆகிருதியோடு, "நான் தளவாய் இளந்தாரி அம்பலக்காரனின் செல்லக் குதிரையாக்கும்" என்று சொல்லாமல் சொன்னது.

இளந்தாரி அம்பலக்காரன்! கிழவனின் வலதுகரம் இவன் என்றால் இடது கரம் யார் என்கிற கேள்வி எழும்பும். இரண்டு கரமும் நானே என்று சொல்லிக் கொள்வதில் தளவாய் அம்பலக்காரனுக்கும் மாளமுடியாத சந்தோஷம்.

சோளகை சேர்வைக்காரன் சாரட்டையும் குதிரையையும் பார்த்த மாத்திரத்தில் அரண்மனை தர்பார் வளாகத்தில் கிழவருக்கான அமைச்சரைப் போன்ற வள்ளல் சீதக்காதியும், அம்பலககாரனும் இருப்பதை ஊகித்துவிட்டான்.

இவர்கள் இருந்தால் நிச்சயம் கிழவனாரும் இருந்தே தீர வேண்டுமே? கிழவர் சேதுபதி இராமேஸ்வரத்தில் இருக்கக் கூடும் என்று எண்ணியது தவறோ?— என்கிற கேள்வியோடும் நம்பிக்கையோடும் உள் நுழைந்தான்.

அங்கங்கே அரண்மனைக் காவலர்கள் சோளகையைப் பார்த்து இணக்கமாகச் சிரித்து வழி விட்டார்கள்.

முதல் வாயில் தாண்டும் போதே ஒருவன் பித்தளை வட்டத்தட்டில் சப்தம் மூட்டி, 'எங்களால் தடுக்கப்பட முடியாத அளவு உரிமையுள்ள ஒரு மறவன், அரசே உங்களைக் காண வந்து கொண்டிருக்கிறான்' என்ற பொருளுடைய ஒரு அறிவிப்பை உள்ளே செலுத்தினான்.

சோளகை அந்தச் சப்தம் கேட்டுச் சிரித்துக் கொண்டான். எல்லாம் புதிய அரண்மனைக்குக் கிழவன் வந்த பிறகு செய்து கொண்டிருக்கும் ஏற்பாடுகள்.



இது மட்டுமா?

எவ்வளவோ புதிய முறைகளைக் கிழவன் சேதுபதி வகுத்துக் கொண்டு விட்டிருக்கிறார். எல்லாமே பேரரசர்களுக்கு இணையானவை.

சாதாரணமாகப் பாளையக்காரர்கள் நாணயங்களை அச்சிட்டுக் கொள்ளமாட்டார்கள். பெரும்பாலும் பண்டமாற்று தான்! அதேபோலத்தான் ஓலைபோக்குவது, மானயம் வழங்குவது, கட்டியம் கூறிக் கொள்வது என்று எல்லா விஷயங்களிலும் அவர்களுக்குக் கட்டுப்பாடுகளும் உண்டு.

அனைத்தையும் உடைத்தெறிந்து ராஜாதி ராஜனாக ராஜ மார்த்தாண்டனாகத் தன்னைத் தானும் கருதி, பிறரும் கருதும் படியாக்கி அரண்மனை விலாசங்களிலும் அதை நடைமுறைக்குக் கொண்டுவந்து அதற்கேற்பவே அனைவரும் நடந்தாக வேண்டும் என்கிற நிர்பந்தத்தை உருவாக்கிக் கிழவன் புரிந்திருக்கும் மாற்றங்களை முதலில் சிலர் அச்சத்துடன் எதிர் கொண்டார்கள். ஆனால் போகப் போக ஒப்புக் கொண்டு கொண்டாடத் தொடங்கிவிட்டார்கள்.

சோளகையும் இதை அறியாதவனா என்ன?

ஊர்க்காவலனாக இருந்து கொண்டு, கள்ளர் கூட்டத்தையும் அடக்கி கிழவனிடம் ஒரு ஊரையே தன் தீரத்துக்காகப் பரிசாக வாங்கியவனாயிற்றே—? அதற்கு முன்வரை களவை செய்யும் தொழிலில் யாரென்றே தெரியாமல் இருந்தவன்— இன்று ஒரு ஊருக்குத் தலைவன்; கிழவனுக்கும் அணுக்கமான தொண்டன்.

இராமலிங்க விலாச அரண்மனையின் நுழை முகம் முதல் கொடிமாடம் வரை ஊடாடித் திரியும் உரிமைமிக்க கொண்டவனுமாயிற்றே—?

தர்பார் வளாகத்தில் பிரவேசிக்கும் அவனை முதலில் எதிர்கொள்பவன் தளவாய் அம்பலக்காரன். பின் பார்த்துப்

புன்னகைப்பவர் சீதக்காதி. ஒரு காலைத் தூக்கிப் படி ஒன்றின் மேலும் மறு காலைத் தரை மேலும் வைத்துக் கொண்டு பக்கவாட்டில் தொங்கும் கிளிக்கூண்டினைப் பார்த்தபடிக் காட்சி தரும் கிழவன் மட்டும் அத்தனைச் சுலபத்தில் வந்திருக்கும் சோளகையைக் காணத் திரும்பாமல் முதுகைக் காட்டியபடியே நிற்க, சோளகை புரிந்து கொண்டு கட்டியம் பாடத் தொடங்கினான்.

"இராசாதி ராசருக்கும் இராச மார்த்தாண்டருக்கும், ராஜ சிங்கமாகிய அசுபதி, நரபதி, கசபதி தளவதியாகிய எங்க சேதுபதி ராசாவுக்குப் பரமகோடி நமஸ்காரம்... பரமகோடி நமஸ்காரம்."— அவனது கட்டியம் கிழவனையும் மெல்லத் திருப்புகிறது.

மஞ்சள் பூசிய கருந்தேக்கில் கடைந்த மாதிரித் தெரியும் புஜமும் அந்த புஜத்திலும் தோளிலும் புரளும் தலைமுடியும், திருநீறு துலங்கும் நெற்றியும் பார்க்கும் பார்வையில் ஒரு க்ஷணம் வீர லட்சணம் எழுத, பட்டு வஸ்திரம் மூடிய மார்பைத் திறந்து காட்டியபடிக் கிழவன் சேதுபதியும் இதழ் பிரிக்கிறார்.

"வா சோளகை... என்ன சங்கதி?"

"முக்கியமான சங்கதிதான் ராசா. மதுரையில் இருந்து ஒரு ரகசியச் சேதியோடு நாயக்கரின் தூதுவன் ஒருவன் அரக்கப் பரக்க வந்திருக்கிறான்...

இளமனேரியிலேயே அவனைப் பார்த்து விட்டேன். யாரோ எவரோவென்று விசாரிக்கப் பின் தொடர்ந்தேன். விசாரித்ததில் சேதியுள்ள வீரன் என்று தெரிவாயிற்று..."

சேர்வை அப்படிச் சொன்ன அடுத்த நொடி அம்பலக்காரன் பார்வையில் அதிர்ச்சியின் பரவல். அதே அளவு அதிர்ச்சியோடு கிழவரும் அம்பலக்காரனைப் பார்க்க,

"அவன் இப்போது எங்கே?"

"நான்தான் வெளியில் நிறுத்திவிட்டு வந்திருக்கிறேன்..."



"உடனே அழைத்து வா. அவசரச் சேதியோடு வருபவர் களை எல்லாம் தடுத்து நிறுத்தாதே சோளகை. அத்தோடு அது அரண்மனை பாடு. நீ தலையிடாதே."

— அம்பலக்காரன் பதில் சேர்வையைச் சற்று கனைக்கிற்று. சேர்வை அதன் நிமித்தம் சற்று சலனப்பட்டு விட்டு அந்தத் தூதுவனை அழைத்து வரத் திரும்பினான்.

கிழவனின் பார்வை இப்போது அம்பலக்காரனைச் சற்று துளையிட்டது.

'சேர்வை என் அன்பிற்கினிய தொண்டன். அவனை ஏதோ ஒரு வகையில் நீ போட்டியாக நினைக்கிறாய் அம்பலம்... அதனால்தான் அவனது எச்சரிக்கையான செயல்பாட்டைப் புரிந்து பாராட்டாமல் ஒரு குட்டுக் குட்டி அனுப்புகிறாய்' என்று சொல்லாமல் அது சொன்னது.

அதை இளந்தாரி அம்பலக்காரன் புரிந்து கொண்டானோ இல்லையோ, வள்ளல் சீதக்காதி புரிந்து கொண்டார்.

"இளந்தாரி... சேதுபதியின் பார்வைக்குப் பொருள் புரிகிறதா?" என்று கேட்டார்.

இளந்தாரியிடம் அடப்பமான மௌனம் எல்லாம் சில நொடிகள்தாம். இருந்தும் சமாளிக்கப் பார்த்தான்.

"புரிகிறது வள்ளலே... அவருக்குச் சேர்வை மேல் பேரன்பு. அவரது அன்பிற்குரியவர்களைத்தான் யாரும் எதுவும் சொல்லிவிடக் கூடாதே...?"

— அம்பலக்காரன் குரலில் ஆதங்கமும் உரிமையும் கலந்திருந்தது. சேதுபதியும் அதை ரசித்தபடித் தன் திருவாயைத் திறந்தருளத் தொடங்கினார்.

"இளந்தாரி... உனக்குள் கேள்வியும் இருக்கிறது பதிலும் இருக்கிறது. அதை விடு. சேதி என்னவாக இருக்கும்? ஊகிக்க முடிகிறதா உன்னால்?"

அந்தக் கேள்வி இளந்தாரி அம்பலக்காரனைச் சற்றும் யோசிக்க விடவில்லை. சட்டென்று பதில் வந்தது.

"மதுரையும் திருச்சியும் இப்பொழுது நாயக்கரின் பிடியிலேயே இல்லை அரசே– எனவே நிச்சயமாக உதவி கேட்டுத்தான் தூது அனுப்பியிருப்பார்கள்."

"பலே– சுற்றி என்ன நடக்கிறது என்கிற பார்வையும் உன்னிடம் பலமாகவே இருக்கிறது இளந்தாரி. மிச்சத்தை நான் கூறுகிறேன்.

எனக்கு வாய்த்த வள்ளல் மரைக்காயருக்கு அள்ளிக் கொடுக்க மட்டும்தான் தெரியும். ஆனால் சொக்கநாத நாயக்கருக்கு வாய்த்தவனோ அள்ளி எடுத்துக் கொள்ள ஆசைப்படுகிறான். அதுதான் இப்பொழுது விவகாரம்..."

— அந்தப் பதில் வள்ளல் சீதக்காதியைச் சற்றுப் புருவம் சுணங்க வைத்தது.

"கிழவர் பேசுவது எனக்குப் புரியவில்லை" என்றார். "பொறுத்திருந்து பாருங்கள் புரியும்" என்று சேதுபதிக் கிழவர் சொல்வதில் பல உள்ளர்த்தங்கள்.

இந்தப் பேச்சு முடியும் முன்பே அங்கே சேர்வையோடு தூதுவனின் பிரவேசம் நிகழ்ந்தது. வந்த தூதுவன் சில நொடி கட்டியப்பாடு இல்லாமலும் எப்படித் தொடங்குவது என்கிற சஞ்சலத்திலும் ஊசலாடிவிட்டுப் பின் வாய் திறந்தான்.

"இராசாதி இராசருக்குப் பரம நமஸ்காரம். அடியேன் நாயக்கர் அவையின் பரவிஜயன். பரம சிரேஷ்டரான கோவிந்தப்பய்யாவின் அத்யந்த தூதன். அதிமுக்கிய சேதி கொண்டு வந்துள்ளேன்."

அவன் அப்படிக் கூறவும் சேதுபதிக் கிழவரின் பார்வை அவனை ஊடுருவியது.



அவன் கைவசம் முழு நீளத்துக்கான ஒரு பனை ஓலை. அதை ஒரு மெல்லிய மஞ்சள் பட்டு வஸ்திரத்தால் மூடியபடிப் பிடித்திருந்தான்.

ஊடே குறுக்கிட்டது தளவாய் அம்பலக்காரனின் குரல்.

"என்ன தூதுவனே... சஞ்சத்தனமாய் இராசாதி இராசர் என்று மட்டும் கூறத் தெரியும். காலில் விழுந்து எங்க ராசாவுக்குத் தெண்டன் கூடத் தெரியாதோ...?"

— அடுத்த நொடியே நல்லமன் எனும் அந்தத் தூதுவன் சற்றுத் தடுமாறிவிட்டு சேதுபதிக் கிழவனை நெருங்கி இடக் காலை மடக்கி வலக்காலை வளைத்து முன்நிறுத்தி கிழவரை நோக்கி அரை மனதாக ஓலையை நீட்டினான்.

கிழவர் அவனைக் கண்களால் அளந்தபடி ஓலையை வாங்கிக் கொண்டார்.

சாதாரணமாக நாயக்கர் தூதர்கள் சேதி ஏதும் கொண்டு வந்தால் அதை மிடுக்குக் குறையாமல்தான் தருவார்கள்.

அதிலும் பாளையக்காரர்களுக்குச் சேதி கொண்டு வரும் போது சேதி கொண்டு வருபவனையே அரசர்போல நினைந்து எதிர்கொள்ள வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்ப்பது உண்டு.

நாயக்கரின் தூதுவர்களும் தர்பார் பிரதானிகள் போலத் தான் பார்ப்பார்கள், பேசுவார்கள். இப்படி ஒரு முறை ஒருவன் நடந்து கொண்டு கிழவரிடம் பட்டபாடு பெரும்பாடாகி விட்டது.

'எங்கள் அரசர் பாளையக்காரரில்லை. எங்கிருந்தோ வந்த தெலுங்கர்களே– நீங்கள்தான் எங்கள் வரையில் பாளையக்காரர்கள்– எங்களுக்குக் கப்பமும் கட்ட வேண்டியவர்கள்–

இந்தச் சேது நாடும் மறவர் கூட்டமும் மட்டும் இல்லா விட்டால் உங்கள் மதுரையும் திருச்சியும் தஞ்சையும்

என்றைக்கோ அன்னியன் கைக்குள் போய்விட்டிருக்கும், எச்சரிக்கை.

எங்கள் கிழவர் ரகுநாத சேதுபதி பேரரசர்! போய் உங்கள் நாயக்கரிடம் சொல். பேரரசருக்கு ஓலை போக்கும் போது அதற்குண்டான மௌரீகங்களைக் கடைப்பிடிக்கச் சொல்.

இல்லாவிட்டால் இந்தப் பக்கமே தலைவைத்துப் படுக்கக் கூடாது. ஓடு—'

— என்று சேதி கொண்டு வந்து சித்தாப்பாகப் பார்த்த வீரன் ஒருவன் கைகளையும் வாயையும் கட்டி அவனை ஒரு மட்டக் குதிரையின் மேலும் ஏற்றித் திருப்பி அனுப்பி வைத்து விட்டனர்.

அதை நாயக்கரின் தளவாய் கோவிந்தப்பைய்யா மறக்க வில்லை என்பதும், அதே சமயம் அரை மனதாகக் கிழவரை ஒப்புக் கொண்டுவிட்டதும் தற்போது வந்த தூதன், 'இராசாதி ராசருக்கு என் பரம நமஸ்காரம்' என்று அவன் கூறியதில் இருந்து புலனாயிற்று.

ஓலையைப் பிரித்து வாசிக்கும் போது அது ஊர்ஜித மாயிற்று—

'ராஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மகாவீர தீர சூர பராக்ரம ரகுநாத சேதுபதி காத்த தேவர் எனும் கிழவருக்குப் பாண்டி மண்டல தாபனாச்சாரியர் மகாஸ்ரீ ஸ்ரீ சொக்கநாத நாயக்கரவர்களின் பெருநாட்டுத் தளவாய் கோவிந்தப்பய்யாவின் திவ்ய வந்தனமும் க்ஷேம உத்தேசங்களும்...

இப்பவும் எம் பரிபாலனத்தில் தீட்டுப் போலப் பல நிகழ்வுகள் அமைந்து எம் படையில் குதிரைப் படைத் தலைவ னாயிருந்த முகமதியனொருவன் வசம் ராஜ்யபீடம் சென்று விட்ட நிலையில், மன்னர்பிரானாகிய மகா நாயக்கரவர்களும் சதா போதையிலும் மற்றுமாகிய தளர்விலும் இருப்பதாலும் மாமதுரையே மதிப்பிழந்து மாண்பிழந்துபோய்ப் பெரும்



நலிவுற்று மக்களும் சங்கடமும் சோர்வுமாக உள்ள இத் தருணத்தில் சுத்த ரத்த வீரனான தாங்கள் மனது வைத்தால் மாமதுரைப் பிணியைப் போக்கி அந்தக் குதிரைப் படையானை யும் அடக்கி நாயக்க ராஜ்யத்துக்கே ஒரு புனருத்தாரணம் புரிய தங்களால் மட்டுமே இயலும் எனக் கருதி இவ்வோலை போக்கி யுள்ளோம்!

பாளையாதிபதியாகத் தங்களைப் பாவித்து எம் மன்னரும், அவர்தம் மூதாதையரும் நிகழ்த்திய துர்ஆசாரங் களை மனதில் கொள்ளாமல், உம் தந்தையார் வீர சூரியத் தேவருக்கு நேர்ந்த துர்மரணக் கொலையை எண்ணிப் பழி உணர்வும் இல்லாமல், பரந்த மனம் கொண்டு அண்டை நாட்டோடு நல்லுறவு என்கிற மகாபுத்தியோடு தாங்கள் அடியேன் கோரிக்கை ஏற்று இக்கட்டான இத்தருணத்தில் பேருதவி செய்ய எம்பெருமாட்டி மீனாட்சியையும், உம் பெருமாள் இராமநாதனையும் பிரார்த்திக்கிறோம்.

என்றும் நட்பும் நலமும் மட்டுமே நாடும் தளவாய் கோவிந்தப்பய்யா.'

— நீண்ட அந்த ஓலை வாசகங்களை வாசித்து முடித்த நிலையில் நிமிர்ந்த கிழவரின் முகத்தில் அதன் எதிரொலிகள்.

வள்ளல் அது குறித்துக் கேட்டார்.

"என்ன சேதுபதி.. ஏதாகிலும் அபாயச் செய்தியா?"

"ஆமாம் தம்பி.. குதிரையை அடக்கி ஆள வேண்டிய ஒருவன் மதுரையையே அடக்கி ஆள முடிவு செய்திருக் கிறான்.."— என்ற கிழவர் தூதுவனைப் பார்த்து,

"நீ போய் உன் தளவாயையே நான் சந்தித்து விரிவாகப் பேச விரும்புவதாகக் கூறு. சந்திப்பு இன்னமும் சிலநாளில் வரும் எம் பங்குனி உத்திரத் திருநாளன்று இருக்கட்டும். உதவி என்று கேட்டு ஒருவர் இந்த ராமலிங்க விலாசக் கதவைத் தட்டிவிட்டால் அவருக்கு உதவிவிட்டுத்தான் மறு வேலை

பார்ப்பான் இந்தக் கிழவன் என்றும் போய்ச் சொல். போ..." என்ற கிழவர், வள்ளல்பிரான் பக்கமாகத் திரும்பி,

"தம்பி நீயே உமது கைப்பட இச்சேதியை எழுதி இவனிடம் கொடுத்தனுப்பி விடு" என்று கூற ராவுத்தரும் அதன் பொருள் புரிந்து ஒரு மெல்லிய புன்முறுவலுடன் ஏடு தாங்கியையும் மைக்கூட்டையும் தேடியபடி விலக, அந்தத் தர்பார் வளாகத்தில் ஆங்காங்கே விறைப்பாக நிற்கும் காவல் வீரர்களில் ஒருவன் காது மட்டும் இதன் நிமித்தம் விடைத்து விட்டிருந்தது!

## 4

'ஓர்தட்டிலே பொன்னும் ஓர்தட்டிலே நெல்லும் ஒக்கவிற்கும்
கார்தட்டிய பஞ்ச காலத்திலே தங்கள் காரியப்போர்
ஆர்தட்டினுந்த தட்டு வாராம லேஅன்ன தானத்துக்கு
மார்தட்டிய துரைமால் சீதக்காதி வரோதயனே.'

— படிக்காசுப் புலவர்

அந்த வீரனின் காது விடைத்ததையோ, இல்லை அவன் திருதிருவென விழித்தபடி காதில் விழுந்த செய்தியால் பதைத்ததையோ யாரும் கண்டதுபோல் தெரியவில்லை.

இருப்பினும் காணாது போல் காணும் வல்லவரான கிழவர் தர்பார் வளாகம் நீங்குகையில் அவனை மர்மப் புன்னகையுடன் ஒரு தினுசாகப் பார்த்தபடியே நீங்கினார். அம்பலக்காரனும் அவரை உடன் தொடர்ந்திட, சோளகை



சேர்வைக்காரன், தூதுவன் நல்லமனுடன் வள்ளல் சீதக்காதியாரைத் தொடர்ந்து போயிருந்தான்.

சீதக்காதியார் அரண்மனையின் கணக்காயர் அறைக்குள் நுழைந்து அங்கிருக்கும் சாய்நிலை மேசைகளில் ஒன்றின் முன் சற்றே ஒட்டி அமர்ந்து பனை ஏடு எடுத்து அதில் சாயப்புரி கொண்டு ஒரு தினுசாக கிழவரின் சேதியை எழுத ஆரம்பித்திருந்தார். பின் அதில் முத்திரையும் பதித்துவிட்டு நிமிர்ந்தார். நல்லமனும் சேர்வைக்காரனும் கைகட்டியபடிப் பணிவாகப் பார்த்தனர்.

ஏதும் பேசாதபடி ஏட்டினை நல்லமனிடம் நீட்டினார். ஏதும் பேசவோ, இல்லை உபசாரமாக ஒரு சிரிப்போகூடச் சிரிக்காதபடிக்குச் சீதக்காதியார் நடந்து கொள்வது சேர்வைக்காரனைச் சற்று நெருடியதோ என்னவோ, நல்லமன் கும்பிட்டு நகரவும் வாய் திறந்தான்.

"வள்ளல் பிரபு... ராசா சொல்லுக்கு மறுபேச்சு பேசறதில்ல. எத்த சொன்னாலும் கேக்கறீங்க. உங்கள என்னால புரிஞ்சிக்க முடியலையே..." என்றான்.

சீதக்காதியின் வதனத்தில் புன்னகை சன்னமாக நெருக்கிற்று. அத்துடன் வந்த தூதுவன் போய்விட்டானா என்று ஒரு பார்வை பார்த்தார். அது புரிந்ததுபோலச் சோளகை பதில் சொன்னான்.

"அந்த மருதக்காரன் இந்த நொடி இந்த அரண்மனை தாண்டியிருப்பான்..."

"அடடா... அவனுக்கு விருந்து கொடுக்கத் தவறி விட்டேனே..."— சீதக்காதி முதல் தடவையாக ஒன்றைக் கொடுக்கத் தவறிய தர்ம சிந்தனையோடுதான் வாய் திறந்தார்!

"அட ஆமல்ல... ராசாவுக்குத் தெரிஞ்சா பார்வையாலேயே என்னைக் கிழிச்சுத் தெச்சுடுவார். அந்த வீரனும் வாடி வதங்கித்தான் இருந்தான்."

"பார்த்தாயா— முதலில் உபசாரம்; அப்புறம்தான் விஷயம். இதை இனி எந்தக் காலத்திலும் நீ மறந்துவிடக் கூடாது" என்றவர், பக்கமாய்த் தொங்கிக் கொண்டிருந்த வெண்கலச் சிகண்டியை மர மத்தால் ஒரு தட்டுத் தட்டினார். இரண்டு வீரர்கள் அடுத்த நொடிப் பொழுதில் இருவர் எதிரிலும் வந்து நின்றனர்.

"வீரர்களே— மதுரைத் தூதுவர் ஒருவர் நமது செய்தியோடு போய்க் கொண்டிருக்கிறார். அவரை வழிமறித்து விருந்துபசாரம் செய்து பின் அவரை அனுப்புங்கள். அவர் மறுத்தாலும் விடக் கூடாது. இது என் அன்பான உத்தரவு..."

— அவர்கள் தலை வணங்கி அதைக் கேட்டுக் கொண்டு விட்டுத் திரும்பினார்கள். சீதக்காதி நிம்மதிப் பெருமூச்சுடன் சோளகை பக்கம் திரும்பினார். தனது கறுத்த இளம் தாடியை நீவிவிட்டுக் கொண்டார். அதில் ஒன்றிரண்டு நரை.

நெற்றிப் பாகத்தில் மிகமிக மெலிதான தழும்பு ஒன்று இருப்பது போன்ற தோற்றம்... ஐந்து வேளைத் தொழுகையைத் துளியும் தவறாமல் புரியும் இஸ்லாமியர்கள் நெற்றியில் அப்படி ஒரு தழும்பினை உற்றுப்பார்த்தால் தரிசிக்கலாம்.

நெற்றி தரை தட்டுவதால் நேரும் ஒரு சிறு அடையாளம் அது— அதிலும் இஸ்லாமியத்தின் கொடைக்குணத்திற்கு ஒரு உரையே எழுதும் அளவு தகுதி பெற்ற சையீத் அப்துல் காதிரு எனும் திரு நாமமுடைய சீதக்காதியின் நெற்றியில் அது பளிச்சிட்டதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை.

பேச்சுவழக்கில் அவரது நீண்ட அந்தப் பெயர் ஒலியளவைகளால் சுருங்கிச் சையது காதராகி, அதுவும் சுருங்கி சீதக்காதியாகி விட்டது. ஒருவகையில் இப்படி அவர் விளிக்கப்பட கந்தசாமிப் புலவரும், படிக்காசுப் புலவரும் கூட ஒரு காரணம்.

சேதுபதிக் கிழவருக்குத் தமிழ்ப் பற்று அதிகம். இது இருந்தால் போதுமே... இது தானாகப் புலவர்கள்பால் நாட்டமும் நட்டையும் உருவாக்குமே?



சங்கம் வைத்துத் தமிழை வளர்க்கப் பாண்டியாதிபதிகளால் தான் முடியுமா என்ன? அவர்களுக்குத்தான் அதற்குரிய தகுதி இருப்பதாக யார் சொன்னது..? தனக்குமது உண்டு என்று கிழவன் நினைத்தார்.

எதையும் குறுகலாகச் சிந்திப்பதும் கிழவனுக்குப் பிடிக்காத ஒன்று. இதனால் இராமநாதபுரத்து அரண்மனைக்குள் சோளகை போன்ற வீரர்களுக்கு மட்டுமல்ல, புலவர் பெருமக்களுக்கும் மிகுந்த செல்வாக்கும் மரியாதையும் இருக்கவே செய்தது.

அவர்களும் அழகுபடச் செழுந்தமிழில் பாடிக் கிழவனை மகிழ்விக்கத் தவறியதில்லை. அந்தத் தமிழ் தன் சந்தச் சிறப்பிற்காக சையது காதரைச் செல்லமாகச் சீதக்காதியாக மாற்றிச் சிறப்புச் செய்ததோ என்னவோ?

சேதுபதி ரகுநாத காத்தத் தேவனையே அது 'கிழவன்' என்கிற காரணப் பெயருக்குள் இழுத்துக்கொண்ட நிலையில் சையது காதர், சீதக்காதியானதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது?

சீதக்காதியும் அதை ரசித்து அங்கீகரித்தது அவர் ஒரு மழைத்துளி போன்ற மனிதர் என்பதற்குச் சான்று.

மழைத்துளியானது வீழும் நிலத்து இயல்புக்கு ஏற்ப மாறி அந்த மண்ணின் தன்மைகளையும் தன்னகத்தே ஏற்றுக் கொண்டு சிறப்புச் செய்கிற மாதிரிதான் சீதக்காதியும்...

கடல் வணிகத்தில் தலைசிறந்த குடும்பத்தில் இருந்து வந்த சீதக்காதியின் பேச்சிலும் அது எதிரொலிக்கத்தான் செய்தது.

"என்ன கேட்டாய் சோளகை..." என்று தன்னைப் பார்க்கும் சோளகையை ஊன்றிப் பார்த்தவர், அவரது மேற்பார்வையாலும் உருவான இராமலிங்க விலாச அரண்மனையின் சித்திரக் கூடம் நோக்கி நடந்தபடியே சோளகைக்குப் பதில் சொல்ல ஆரம்பித்தார்.

"கிழவர் ஒரு அபூர்வ மனிதர் சோளகை. ஒரு வியாபாரியான எனக்கு அவர் அளித்திருக்கும் இடம் உன்னதமானது. மதபேதமில்லாத உன்னதமான புத்தி. இந்த இராமநாதபுரத்தைத் தென்னாட்டுக்கே எடுத்துக்காட்டாக மாற்றத் துடிக்கும் அவரது துடிப்பு, யாரிடம் எந்தப் பொறுப்பை எப்பொழுது எப்படி ஒப்படைக்க வேண்டும் என்கிற அவரது நிர்வாகத் திறமையைப் பற்றி எல்லாம் இன்று முழுக்கப் பேசலாம்.

நான்கூட கேட்டால் கொடுக்கின்றவன். ஆனால் நான் கேட்காமலே எனக்குக் கிழவர் ஒன்றைக் கொடுத்திருக்கிறார். அது என்னவென்று உனக்குத் தெரியுமா?"

— சீதக்காதி இடைவெளிவிட்டுச் சோளகையைப் பார்த்தார். அவனும் புரியாமல் அவரைப் பார்த்தான்.

"நான் அவரது சகோதரன் சோளகை..."— மெல்லிய குரலில், ஆனால் உணர்ச்சிபூர்வமாகக் கூறினார் சீதக்காதி. சோளகை சிலிர்த்துப் போனான்.

"நான் இன்று அரண்மனைக்கு வருவதற்குச் சற்று கால தாமதமாகிவிட்டது. 'எங்கே என் தம்பி இன்னும் வரவில்லையா' என்று இளந்தாரி அம்பலக்காரனிடம் கேட்டிருக்கிறார். அம்பலக்காரன்கூட இதை என்னிடம் ஒருவிதப் பொறாமையுடன்தான் கூறினார். அந்த நொடி எனக்கேற்பட்ட சிலிர்ப்பிற்கு எல்லையே இல்லை.

இப்படி ஒரு ஸ்தானத்தைக் கொடுத்த கிழவரிடம் நான் பேச என்ன இருக்கிறது? அன்பாலும் பாசத்தாலும் கட்டிப் போட்டு விட்டாரே..."— சீதக்காதியின் ஸ்லாகிப்பில் உச்சி முதல் பாதம் வரையில் பரவச ஓட்டம் இருந்தது.

"உண்மைதாங்க... சாதாரண உழவாளி நான். எனக்கே ஒரு ஊரையும் அந்த ஊருக்கு என்னை நாட்டாண்மையாகவும் ஆக்கித் திக்குமுக்காட வெச்சுட்டாரு. 'உங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்'னு கேட்டப்போ, 'எனக்குச் செய்யாதே—



இந்தச் சேது நாட்டுக்கு செய்'னு சொல்லிட்டாரு. இப்படி ஒரு ராசா நமக்கு வாய்க்க நாம கொடுத்து வெச்சிருக்கணும். இவரு காலகாலத்துக்கும் நல்லா இருக்கணும். ஆனா..."— சோளகை இழுத்தான்.

"என்ன ஆனால்?"

"மதுரை விவகாரத்துல நாம மூக்கு நுழைக்கறது..."

"நாம் எங்கே நுழைத்தோம்? நாயக்கர் அல்லவா உதவி கேட்கிறார்?"

"அவுக அடிபடும் போது உதவி கேக்கறவங்க, நிமிர்ந்த பிற்பாடு வாலாட்டறவங்க ஆகையால..."

"மென்று விழுங்காமல் முழுவதையும் சொல்."

"இதை அப்படியே கண்டும் காணாமல் விட்டுட்டா உள்நாட்டுக் கலகத்துலையே மதுரை ஒரு முடிவுக்கு வந்துடும். அங்க உள்ள இருக்கற நாயக்கரும் சரி அவரோட மல்லுக்கு நின்னு ஆட்சியைப் புடுங்கிட்ட அந்த ருஸ்தம்கானும் சரி ஒருத்தரை ஒருத்தர் அடிச்சிகிட்டுச் செத்தொழிஞ்சா நமக்குத் தானே அது ஆதாயம்?"

சற்றே அரசியலும் பேசிய சோளகையைச் சீதக்காதி வளைந்த புருவத்துடன் கூர்ந்து பார்த்தார். பின் சிரித்தார்.

"என்ன சிரிக்கிறீங்க? நான் ஏதாவது தப்பா சொல்லிட்டேனா?"

"நிச்சயமா... இதை மட்டும் கிழவர் கேட்டால் உன்னை நிச்சயம் சும்மா விடமாட்டார்."

"நான் சொல்றதுல என்ன தப்பு இருக்கு?"

"நீ நினைப்பது போல நாயக்கர் அரசு மேல் கிழவருக்குத் தீராப்பகை எல்லாம் எதுவும் இல்லை சோளகை. வீரமும் அறிவும் ஒரு சேர அவர்களிடம் இல்லை என்பதுதான் கிழவரின் எண்ணம். அவர்களை எளிதில் எதிரிகள் கைக்குள்

எடுத்துக் கொண்டு விடுகின்றார்கள் என்கிற கவலையும் மிக உண்டு.

எல்லாவற்றுக்கும் மேலாகச் சங்கம் வளர்த்த நகரம் அது. அங்குள்ள ஒரு பொற்றாமரைக் குளத்திற்கு இந்த ராமநாத புரத்தின் லட்சம் ஊருணிகள் ஈடாகாது என்று அடிக்கடி என்னிடம் கூறுவார்.

மொத்தத்தில் அருமை பெருமை நிறைந்த மாநகர் அது. இந்தச் சேது நாட்டுக்கு ஒரு முன்னுதாரணமாகத் திகழ்கின்ற மாதிரிப்பட்டினம். அதிலிருந்து ஒரு அபயக்குரல் கேட்கும் போது நாம் காதை அடைத்துக் கொள்வது பண்பில்லை என்று கருதுபவர்.

இதற்கும் மேல் அரசியல் காரணங்கள் பல உண்டு. அதை நிச்சயமாக உன்னாலோ என்னாலோ புரிந்து கொள்ளவே முடியாது. எனவே பொறுத்திருந்து நடப்பதைக் கவனிப்போம். அதுதான் நமக்கு நல்லது."

— சீதக்காதியின் கருத்தைச் சோளகை சேர்வைக்காரன் அதற்கு மேல் எதுவும் பேசாமல் கேட்டுக் கொண்டான். அதே சமயம்—

அந்த அரண்மனையின் பரமபதக் கொட்டாரத்தில் தாய உருட்டலும் சோழிப் பிரட்டலுமான இடத்தில் சேதுபதிக் கிழவனின் பட்டக் கிழத்தியும் செம்பி நாட்டுக்காரி என்றும் செல்வப் பெருமாட்டி என்றும் விளிக்கப்படும் செவத்த நாச்சியும் அவளது நாத்தியும் கிழவனின் அருமைத் தமக்கையுமான உடையக்கா நாச்சியும் அதிதீவிரமான பரமபத விளையாட்டில் ஊன்றியிருக்கையில், அங்கே கிழவனின் பிரவேசம் நிகழ்கிறது.

அதுகாறும் வெற்றி வெற்றி என்று கட்டங்களில் முன்னேறிய செவத்த நாச்சி கிழவர் வந்து நின்ற தருணத்தில் கார்கோடன் கடிபட்டு ஆரம்ப நிலைப்பாட்டுக்குக் கீழிறங்க உடையக்கா நாச்சி கைதட்டி உடனே மகிழ்ந்தாள்.



"எந்தச் சர்பக் கடியும் இல்லாமல் ஏணி ஏணியா ஏறிப் போறியேன்னு நினைச்சேன். இப்படி ஒரேயடியா கடிபட்டுக் கீழ வந்திட்டியே?" என்றாள். அடுத்த நொடி செவத்த நாச்சி அந்தப் பரமபதம் விட்டு நீங்கியபடி எழுந்து நின்றாள். வந்து நிற்கும் கிழவனைப் பார்த்தாள்.

"என்னடி கடிபட்ட கோவமா? இல்லை என் தம்பி வந்துட்ட தாக்கமா? உக்காரு— காத்தா நீயும் வா உக்காரு ஆடுவோம்" என்றாள் உடையக்கா நாச்சி.

கிழவன் அதை ரசித்தபடியே செவத்த நாச்சியைப் பார்க்க அவள் கிழவனைச் சற்று கலக்கமுடன் பார்த்தாள்.

"என்ன செவத்தா? தோல்வி குத்துகின்றதா?"

"ஆமாம்.. குத்துகின்றது. அதுவும் நீங்கள் வரும்போது ஏற்பட்ட தோல்வி பெரிதாகவே குத்துகிறது."

"விளையாட்டுத்தானே— விடு—"

"இது விளையாட்டுத்தான். அதே சமயம் விளையாடுபவர் விதிப்பாட்டையும் சொல்லுகின்ற நிமித்திகம் இது—"

"சரி.. அந்த நிமித்திகம் என்ன சொல்கிறது?"

"நான் இதுவரையில் கார்கோடகக் கடிபட்டதே இல்லை. இப்படி ஆகியிருப்பது எனக்கு அச்சம் தருகிறது—"

"அப்படியானால் ஏதாவது உனக்கு ஆகிவிடும் என்று பயப்படுகிறாயா?"

"எனக்கானா என்ன— உங்களுக்கானா என்ன?"

"அப்படியானால்...?"

"சில நாளைக்கு ராஜ்ய முடிவுகள் எதையும் எடுக்கா தீர்கள். வெளியே உலாப்பாடும் வேண்டாம். தளவாடச்சாலைப் பக்கம் போவது, மைதானத்தில் பயிற்சி என்று எதுவும் வேண்டாம்."

"அப்படியானால் மதுவருந்திவிட்டுப் படுத்துக்கிட என்கிறாயா?"

"ஆமாம்- டச்சுக்காரர்கள் பருகும் விலையுயர்ந்த மதுரசம ஒன்று நமது கடற்கரைப் பட்டினம் வர அதன் முதல் நாழியை அந்த வியாபாரி அரண்மனைக்கு என்று தந்து விட்டிருக்கிறார். உங்களுக்குத் தெரிந்திருக்குமே..?"

"நான் குடிப்பதே பிடிக்காத நீயா செவத்தா இப்படிப் பேசுகிறாய்?"

"அதானே- அடியேய் என்னாச்சு உனக்கு? என் தம்பியே சும்மா இருக்க நீ போட்டுப் பிரட்டி எடுக்கிறாயே..."

— உடையக்கா நாச்சியும் சிலிர்த்தபடி எழ, கிழவன் சிரித்தபடிச் சொல்லலானார்.

"ஒன்றுமில்லையக்கா. அம்மணிக்கும் இந்த அரண் மனைக்குள் ஒற்றர்கள் இருக்கிறார்களல்லவா? அதிலும் தர்பாரிலே ஒரு பாம்புக்காதன் இருக்கிறானே... அவன் நான் மதுரை அரசோடு மோதப்போவது பற்றி இவளிடம் ஒற்று சொல்லியிருப்பான். அதைக் கேட்ட நொடி முதல் அம் மணிக்குள் அலட்டல் மிகுந்துவிட்டது. வேறு ஒன்றுமில்லை."

"ஆமாம்... அப்படித்தான். அதேசமயம் நான் அது குறித்த கவலையோடு இருக்கும்போது இப்படித் தோற்றது ஒரு நல்ல சகுனமல்ல. இந்த மோதல் வேண்டாம். அதுதான் அவர்கள் இப்பொழுது நம் வழிக்கு வருவதில்லையே. எதற்கு இந்த மோதல்?"

"மோதப் போவது நாயக்கரோடு இல்லை செவத்தா..."

"தெரியும்... அங்கே ஒரு முகமதியன் தர்பார் செய்யத் தொடங்கி விட்டான். அவனோடு என்பீர்கள்— சரிதானே?"

"பரவாயில்லையே- பாம்புக்காதன் எல்லா விவரத்தையும் கூறியிருக்கிறானே?"



"என்னை மன்னித்து விடுங்கள். தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்கள். இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது.

உங்கள் வாழ்க்கையே போராட்டமாக இருக்கிறது.

அரியணையைப் பிடிக்கத் தடியத்தேவனோடு மோதிய வேதனைகளே பலகாலமாகியும் இன்னும் நீங்கவில்லை.

இருக்கும் பணத்தை எல்லாம் போட்டுக் கோட்டையையும் கொத்தளத்தையும் வேறு எழுப்பிவிட்டீர்கள்.

மூன்று பௌர்ணமிகளாகக் கடல் வாணிபத்திலும் இயற்கை உபாதை. பல வரிகள் அதனால் வராத நிலை.

நாம் நம்மைச் செப்பனிட்டுக் கொள்ளவே காலமும் நேரமும் போதாத நிலையில் இது எதற்கு? அந்தக் கோவிந்தப்பய்யா வந்தால் முடியாது என்று கூறிவிடுங்கள்..."

செவத்த நாச்சி விடுவிடுவென்று பேசி நிறுத்திய மறு நொடி அவள் கன்னத்தில் ஓர் அறை விழுந்தது!

## 5

'இராமலிங்க விலாச அரண்மனை, கிழவன் சேதுபதியும் அவரது அன்புக்குரிய அமைச்சர் வள்ளல் சீதக்காதியும் இணைந்து திட்டமிட்டு அமைத்த கலைப் பேழையாகும். அதன் மணி வாயிலில், அகத்திய முனிக்கும் அதிகம் கற்ற பேர்கள் ஆயிரம் கவிவாணர் இருந்தனர். சங்கையும் முத்தையும் நத்தி வந்த போர்த்துக்கீசியரும், டச்சுக்காரரும், பொன்னையும் மணியையும் நிறைந்த பரிசில்களையும் தாங்கி சேதுபதி தரிசனத்திற்குக் காத்திருந்ததும் அங்குதான்...

*இங்கே இருந்து வடக்கில் திரும்பினால் வருவதுதான் பரமபத மண்டபம்!*

*— நன்றி: டாக்டர் எஸ்.எம். கமால் எழுதிய 'விடுதலைப் போரில் சேதுபதி மன்னர்' என்ற நூலிலிருந்து*

கன்னத்தில் விழுந்த அறையால் ஒரு கணம் கலங்கிப் போனாள் செவத்த நாச்சி! அறைந்தவள் உடையக்கா நாச்சி.. அறைந்த மட்டோடு நிற்காமல் கோபம் கொப்பளிக்க, "எப்பொழுதிருந்து புருஷனுக்கே உபதேசிக்கக் கிளம்பினே..? இதான் செம்பிக்குடியார் பம்பாடா? அவளென்ன யோசனை இல்லாத வீண் பயலா..?" என்று அடுக்கடுக்காகக் கேள்விகளை எழுப்ப ஆடிப்போனாள் அவள். இதைச் சற்றும் எதிர்பார்க்காத கிழவன் இடையிட்டுச் சமாதானம் செய்ய முயன்றார்.

"அக்கா, செவத்தா என்ன தப்பா கூறிவிட்டாள்? என்பாலுள்ள அக்கறை அவளை இப்படிப் பேச வைக்கிறது. இதற்காகப் போய் அறைவாயா.. கன்னத்தைப் பார்.." என்றபடி கும்மென்று செந்தூரம் மண்டினாற்போல் சிவந்த செவத்த நாச்சியின் கன்னத்தைக் கெச்சலான பரிதாபத்தோடு வருடிக் கொடுத்து, "செவத்தா, இதைப் பெரிது படுத்தாதே. அதே சமயம் மனதில் பட்டதை இனியும் பேசாமல் இருந்துவிடாதே. நீ சேது நாட்டின் பட்டத்தரசி. உன் கண்ணில் நீர் துளிர்த்துவிடக் கூடாது. அரசி அழுதால் அரசாங்கமே அழுமாம்!"— என்றபடி அவளை இழுத்துச் செல்லமாகப் பக்கவாட்டில் அணைத்துக் கொண்டார். இருப்பினும் செவத்த நாச்சியால் அந்த அடியைத் தாள முடியவில்லை. கண்ணிரண்டில் நீர்க் கட்டிகள் பிரண்டு விழ அப்படியே கிழவன் மார்பில் புதைந்தாள்.

உடையக்காளும் தவறு செய்துவிட்ட பாவனையோடு சற்றுக் கலங்கிப் போனாள். சில நொடிகள் அங்கே



இறுக்கம் நிலவியது. உடையக்காவே அதைத் தளர்த்தவும் முயன்றாள்.

"ஆமாம் காத்தா.. நான் சற்று அவசரப்பட்டு விட்டேன். உன் முன்னால் யாராவது துளி தன்னிச்சையாகப் பேசினாலும் எனக்கு எதனாலோ கோபம் பொத்துக்கொண்டு வந்துவிடுகிறது. என்னை மன்னித்துவிடு செவத்தா.." என்றபடியே கிழவரின் மார்பில் தஞ்சம் புகுந்தவளைத் தொட்டுத் தன்னை நோக்கித் திருப்ப முயன்றாள் உடையக்கா.

கிழவரின் இதழ்க்கடையில் அதன் நிமித்தும் அர்த்தம் மிகுந்த சிரிப்பொன்று சிலபல விநாடிகள் வந்து தேங்கியது.

"சரி, சரி.. அக்கா நீயும் அமரு. செவத்தாளை எப்படிச் சமாதானம் செய்கிறேன் பார்.." என்றபடியே அவளைப் பரமபதத்தின் அருகே அமர்த்திய கிழவன் தானும் அமர்ந்தார்.

"என்ன காத்தா... நீ விளையாடப் போகிறாயா?"— உடையக்கா கேட்டாள்.

"ஆமாம்.. செவத்தாளைத் தீண்டிய அந்தக் கார்கோடக நாகத்தை நான் வென்று காட்ட வேண்டாமா.. அப்போது தானே அவளுக்கு நிஜத்தில் மனதுக்குச் சமாதானம் ஆகும்" என்றவர் ஒரு சாய்வுப் பார்வை பார்த்தார். செவத்தாவும் அவரை ஊடுருவினாள்.

"உம்.. என்ன பார்க்கிறாய்.. பகடையை எடு" என்றார். அவளும் கண்ணீரைத் துடைத்துவிட்டுக் கொண்டாள். மெல்ல ஒன்றோடு ஒன்றாக இணைந்து கிடந்த தங்கப் பகடைகளை அந்த அரசியின் கரங்கள் எடுத்து இரு கரங்கள் இடையே வைத்து பிரட்டோ பிரட்டு என்று பிரட்டிவிட்டுத் தரை மீது ஓட விட்டன.

இராமலிங்க விலாச அரண்மனைப் பாகங்களில் நெடுந் தூரத்திற்கு அதன் சப்தம் கேட்கத் தொடங்கியது. கிழவரின் ஒரு கரம் அவளது இடக்கரத்தைப் பற்றியபடி இருந்தது. அவள்

உருட்டிய பகடைகள் முதல் வீச்சிலேயே பன்னிரண்டைப் போட்டன!

அவள் பார்வை உடனேயே கிழவரை உற்சாகத்தோடும் உத்வேகத்துடனும் பார்த்தது.

"உம்... திரும்பவும் உன் முறைதான்!" என்றவர் பரமபதத்தின் மேல் அவள் பொருட்டுத் தானே காயை நகர்த்தினார். அவள் திரும்பவும் பகடை உருட்டினாள். மீண்டும் பன்னிரண்டு!

"அட... திரும்பவும் உன் முறைதான்..."- ஊக்கியது கிழவன் உதடு.

"ஏதேது... அசுரப் பாய்ச்சலாக இருக்கிறதே" என்றாள் உடையக்கா.

"அவளோடு நான் ஆடுகிறேன் அல்லவா..."- கிழவன் மீண்டும் மீசையை நீவிக் கொண்டார்.

மூன்றாவது உருட்டலைத் தொடர்ந்து பகடை கிழவன் கைக்கு மாறியது. கிழவன் கைகளை விபூதிப் பந்தலிட்ட நெற்றிப் பாகத்திற்குக் கொண்டு சென்று கண்கள் இடுங்கப் பிரார்த்தனை செய்து கொண்டார்.

'அடாடா... இப்படிப் பிரார்த்தனை செய்து கொள்ளத் தங்களுக்குத் தோன்றவில்லையே' என்ற ஒரு கேள்வி உடனேயே செவத்தாளின் உள்ளத்தில் எழும்பியது.

பகடையும் தரைமேல் உருண்டது.

அதன் பின் அது கார்கோடக நாகத்தை ஒரே தாவாகத் தாவி வைகுண்டம் நுழையும் வரை ஓயவேயில்லை. இடையில் ஏணிகளெல்லாம் காத்திருந்து காத்திருந்து கிழவனை ஏற்றிக் கொண்டாற்போல் தோன்றியது.

இரு மறச்சிகளும் விக்கித்துப் போய் விட்டார்கள்.

செவத்தாளும் கிழவனைத் தொடர்ந்து வைகுண்ட கட்டம் புகுந்தாள். அடுத்த நொடியே கண்ணிரண்டில் பாஷ்பம்



பெருக அருகில் உடையக்கா நாச்சி எனும் தன் நாத்தனார் இருப்பதையும் பொருட்படுத்தாமல் கிழவனைக் கட்டிக் கொண்டாள்.

"பார்த்தாயா... இப்பொழுது உன்னை எந்த நாகமும் எதுவும் செய்யவில்லை..."- கிழவன் கேள்வி கேட்டுச் சிரித்தார்.

"எப்படி காத்தா... எப்படி?"- உடையக்கா ஆச்சரிய உச்சத்தோடு கேட்டாள்.

"அச்சம் மனத்தில் இருந்தால் கைகளில் அது பரவும் அக்கா. தாயமும் அதை அப்படியே காட்டும். எனக்குத்தான் அச்சம் என்றால் என்னவென்றே தெரியாதே. அத்துடன் நான் அந்தத் திருப்புல்லாணிப் பெருமாளின் திருவடித் தொண்டனாயிற்றே? என்னை எப்படிப் பெருமாள் கைவிடுவார்...?

கிழவன் பேச்சு மொத்த மனிதக் கூட்டத்துக்குமே உளவியலை உத்தேசித்த ஒரு சேதியைக் கூறுவதாகத் தோன்றியது. அங்கே சற்று முன் வரை நிலவிய இறுக்கமும் பதற்றமும் கூட விலகிப் புதிதாக ஒரு தெம்பும் திடமும் பரவியிருந்தது!

வெளியே நல்ல ஒரு பொன்மாலைப் பொழுதினை வானம் உருவாக்கியிருந்தது...

இதே மாலை மதுரையம்பதியில் மட்டும் மப்பும் மந்தாரமுமான வானமாகத்தான் இருந்தது.

மீனாட்சியம்மன் ஆலய வளாகம் கூட அடப்பமான இருளோடு ஆங்காங்கே கசடு தட்டி எரியும் தீப்பந்தப் பிரகாசத்தில் பெயருக்கு ஒளி சிந்திக் கொண்டிருந்தது.

ஆலயக் கிழக்கு வாசல் முகப்பில் ஒரு பல்லக்கு வந்து தேங்கி நிற்கத் தொடங்க அதைச் சுற்றிலும் நாயக்க வீரர்களின் புரவிகளும் ஒரு சேரத் தேங்கி நிற்க உள்ளிருந்து இறங்கினாள் ஒரு சுமங்கலிப் பெண். கூடவே இரண்டு சேடிப் பெண்கள்

வந்து அவளை ஒட்டி நின்று கொள்ள ஒருவன் துந்துபியை எடுத்துப் பெரிதாக முழக்கினான்.

சப்தம் பிளிறலாய் நாற்புறமும் பரவிற்று. அந்த முழக்கத்தைத் தொடர்ந்து அந்தப் பெண் ஆலயத்தை நோக்கி நடையிடத் தொடங்கினாள். சேடிப் பெண்கள் உடன் தொடர்ந்தனர்.

அவள் நடையில் இடப்புறமாகப் பொற்றாமரைக் குளம் ஒரு பச்சை நீராழியாக அவள் பார்வையைக் கவ்விற்று. சீராகச் செதுக்கப்பட்ட கற்படிகளில் ஒருவர் கூட இல்லை. அவ்வப் போது மெல்லிதான மணிச் சப்தம் மட்டும் காதில் விழுந்தபடி இருந்தது.

அந்தப் பெண் நின்று குளத்தை ஒரு பார்வை பார்த்தாள். ஈசான்ய பாகத்தில் ஏதோ ஒன்று மிதப்பது போலத் தோன்றியது. சன்னிதி நோக்கி நடையிடப் பார்த்தவள் நீராழியில் ஏதோ ஒன்று மிதப்பதைப் பார்த்துப் படிகளில் வேகமாக இறங்கி அந்த நீர்ப் பரப்பைச் சமீபித்தாள்.

ஒட்டி வந்த வீரர்கள் சிலர் சற்றுக் கலவரப்பட்டுப்போக சேடிப் பெண்கள் பரபரப்படைய.. "ஒத்து ராணி ஒத்து.. அக்கட..."— என்று தெலுங்கில் எதையோ கூற வந்த ஒருவனைப் பார்த்து அவள் படிகளில் நின்று முறைக்கத் தொடங்கினாள்.

பின் ஜலப் பரப்பை எட்டி நீரில் கால்பதித்தவள் குனிந்து பார்த்தாள். புறா ஒன்று செத்து மிதந்து கொண்டிருந்தது! துர்நாற்றமும் வீசியது.

அவள் அடுத்த நொடியே வீரர்களைப் பார்த்தாள். அவர்களில் ஒருவன் தன் வேல் கம்பால் அதைத் தன் பக்கம் தள்ளி நீரினின்றும் எடுத்து வெளியேற்றத் தொடங்கினான். அவள் முகம் கசங்கிப்போனது. ஊடே அனைவரையும் தள்ளிக் கொண்டு நுழைந்தபடி இருந்தார் கோயில் ஊழியார்த்தசரான பரமேஸ்வர பட்டர்.



"மகாராணி வரணும்.. நாய்க்க தேவி வரணும்.. என்ன இது வந்ததும் வராததுமா திருக்குளப் பிரவேசம்? ஊஞ்சல் மண்டபத்திலயே நீர்த்தாழி இருக்கே..?" என்றபடி மிகப் பணிவாகக் கைகளைக் கட்டிக் கொண்டார்.

"அது சரி.. இப்படியா குளத்துல பட்சி கிடக்கிறதுகூடத் தெரியாம இருப்பேள்..? இது எப்பேர்ப்பட்ட குளம்.. எப்படி இதுல ஒரு புறா விழுந்து மரிக்கலாம்?"

— அந்த ராஜ பெண்மணி எழுப்பிய கேள்வி முன் கைபிசையத் தொடங்கினார் பட்டர்.

"என்ன பட்டரே.. மௌனமா இருந்தா எப்படி? செப்பு"

— அவளது தெலுங்கு கலந்த தமிழ் அவரைத் தர்மசங்கடப் படுத்தியது. இருந்தும் வாய் திறந்தார்.

"உச்சி வேளையின்போது உம்ம மச்சினர் அந்தக் கதிரைப் படைத் தளபதியோடு கோயில் பக்கமாக வந்திருந்தார். கையில் கவண் வில்லும் களி உருண்டைகளும் இருந்தன. அவர்தான் கோவில் புறாக்களை அந்த வில்லால் வேட்டையாடிண்டிருந் தார்..!"

— அவர் பதில் அந்தப் பெண்ணின் முகத்தில் ஏராள அதிர்ச்சிகளை ஏற்படுத்தியது. மணியாரக் கழுத்தும் கச்சணிந்த மார்பும் மேலெழும்பித் தணியப் பெருமூச்சு விட்டாள்.

"அப்பதான் அந்தப் பட்சிகள்ள ஒண்ணு அடிபட்டு குளத்துலையும் விழுந்து மரிச்சிருக்கணும். நான் கவனிக்கலை. கவனிச்சிருந்தா அப்புறப்படுத்தியிருப்பேன். அடியேனை மன்னிக்கணும்."

— அவரது பதிலைத் தொடர்ந்து அவள் முகத்தில் அருளை. கண்களிரண்டும் கலங்கிவிட்டன.

"முத்துலிங்கம், கோயிலிலேயே வேட்டையாடத் தொடங்கி விட்டானா?"— உதட்டிலிருந்து கேள்வி பெருமூச்சுடன் வெளிப்பட்டது.

"சேர்க்கை அப்படி— என்ன பண்றது?" என்று சட்டென்று சொல்லிவிட்டுப் பின் அவசரப்பட்டுவிட்டோமோ என்பது போல வாயைப் பொத்திக்கொண்டார் பட்டர். அந்த ராஜப் பெண்மணி கலக்கம் குறையாமல் திருக்குளத்தைப் பார்த்தாள்.

தாயைப் புணர்ந்த தருக்கனுக்கும் மோட்சம் அளித்த நேயப் பெருங்குளம்—

சங்கப் பலகையைத் தன்னகத்தே கொண்டு பொங்கிப் பிரவகித்த குற்றமில்லாத பாடல்களுக்கெல்லாம் தெய்வீகச் சிறப்பளித்த பரமனின் திவ்ய நீராழி...

நித்தம் ஒரு பொன் தாமரையை இதழ் விரித்து மலர்த்தி, பார்ப்பவர் சித்தம் குளிர்வித்த கைலாயத்துப் புண்ய தீர்த்தம்— அடேயப்பா— எத்தனை கீர்த்தி பெற்றது இத்திருக்குளம். இதிலா இன்று ஒரு பட்சியின் சடலம்...?

கேள்வி நெஞ்சை அழுத்த அவள் அங்கிருந்து நகர்ந்து அன்னை மீனாட்சியின் சன்னிதி நோக்கி நகர்ந்தாள். முன் பெல்லாம் அவள் ஆலயம் வரும் சமயம் அவளைக் கண்டு குசாவ ஒரு பெரும் கூட்டமே ஆலயத்தில் காத்திருக்கும்.

சௌராஷ்டிரப் பெண்கள் தாங்கள் நெய்த பட்டு வஸ்திரமுடன் ஒரு பாகமாயும், குலாலர்கள் வண்ணக் கலயங்களுடன் இன்னொரு பாகமாயும், யாதவப் பெண்கள் சுண்டிய பாலால் கிண்டிய திரட்டுப் பாலுடனும், குறத்தியர்கள் பல வண்ணச் சங்குமணி மாலைகளுடனும் ஆங்காங்கே நின்று மார்பு மடங்க வணங்கி, "தேவி மங்கம்மாளுக்கு எங்கள் திவ்ய நமஸ்காரங்கள்" என்று அன்பு காட்டுவார்கள். ஆளுக்குத் தகுந்தாற்போல, வேளைக்குத் தகுந்தாற்போல அவர்களோடு பேசிவிட்டுப் பின்தான் அன்னை மீனாட்சியைத் தரிசிக்கவே செல்லுவாள்.

அந்தச் சந்திப்பில் நாயக்கரின் பெரு ராஜ்ஜியத்தில் பெண்கள் பெரும் மகிழ்ச்சியோடும் நலங்களோடும் திகழ்வது



ருசுப்படும். மனங் கொள்ளாத மகிழ்ச்சியோடு ராஜ மாதங்கி யாகிய அந்த மீனாட்சியையும் திவ்ய தரிசனம் புரிவாள் அவள்.

நெய்ப் பொங்கலும் பாலன்னமும் அவள் நாமம் சொல்லி விநியோகிக்கப்பட தையல் இலையில் சுடச்சுட அதைப் பக்தர் கூட்டமும் பெற்றுச் செல்லும்—

இன்று எவரையுமே காணோம்?

என்னாயிற்று?

பின்னாளில் பெருஞ்சிறப்பைப் பெறப்போகிற அந்தப் பெண்மணியின் பார்வை சுற்றிச் சுழல்வதைக் கச்சிதமாக யூகித்து பட்டரே பதில் தருகிறார்.

"ராணியோட பார்வைக்கு எனக்கு அர்த்தம் புரியறது. என்ன அவ்வளவாக் கூட்டத்தைக் காணோம்னுதானே பாக்கறேள்...?

உற்சாகமாகவும் தைரியமாகவும் கோவிலுக்கு வர யாரும் தயாரில்லை. அதோடு கோவிலுக்கு வந்துட்டுப் போற பொம்மனாட்டிகளண்ட நம்ம அரண்மனை வீரர்களே சில பேர் ஏகடியம் பேசிக் கீழ்த்தரமா நடந்துக்கறதாலையும் எதுக்கு வம்புன்னு நினைக்கறா"

"என்னது— வீரர்கள் ஏகடியம் பேசறாளா?"

"ஆமாம் ராணி... இங்க பரவால்ல. அழகர் கோவி லாண்டை ஒரு பொண்ணை..."— பட்டர் சொல்ல வந்து நாக்குக் கூசியதால் கூறாமல் விட்டாலும் அது மங்கம்மா ளாகிய அந்த ராஜப் பெண்மணிக்கு நன்றாகவே புரிந்தது.

"ராணி— அவர்கள் நிச்சயம் நமது வீரர்களல்ல— வடக் கிலிருந்து புதிதாக வந்திருக்கும் ருஸ்தம்கானின் ஆட்கள் அவர்கள்—" என்கின்ற பதிலை வீரன் ஒருவன் ஆதங்கத்தோடு முன்னால் வந்து சொன்னான். மங்கம்மாளின் முகத்தில் தொடர்ந்து அருவையின் அசுரப் பரவல்.

"ராணி வருத்தப்படக் கூடாது– இந்த நாயக்க சாம்ராஜ்யம் மொத்தத்தையும் ஆற்காட்டார் மூலமா டெல்லி எடுத்துக்கப் போறதாகவும் நம்ம நாயக்கரும் அதுக்குச் சம்மதிச்சுட்டதாகவும் எல்லாரும் பேசிக்கறாளே– அது எந்த அளவு–?"

பரமேஸ்வர பட்டர் முழுவதுமாகக் கூட முடிக்கவில்லை. மங்கம்மாள் சினத்தோடு அவரைப் பார்த்தாள்.

"வாயை மூடுங்கள். நான் மன நிம்மதிக்காக ஆலயத்துக்கு வந்திருக்கிறேன். இப்படிக் கண்டதையும் சொல்லி என்னைக் கலங்கடிக்காதீர்கள்" என்ற மங்கம்மாள் நேராக அந்த அங்கையற்கண்ணியின் திருச்சன்னிதி முன் போய் நின்றாள்.

கண்ணீரை வெளிக்காட்டாதபடி சமாளித்துக் கொண்டு கைகளைக் கூப்பி நின்றாள். பட்டரும் தீபாராதனை காட்ட உட்புகுந்தார்.

அமைதிமயமான நிலை. ஆனால் மனது மட்டும் சமுத்திரம் போலப் பேரிரைச்சலோடு அலைபாய்ந்து கொண்டிருந்தது.

'தேவி– இது உன் திரு நகரம்! கைவிட்டுப் போய் விடுமோ என்று அச்சமாக உள்ளது– உலகுக்கு இரவு பகல் என்று இரு பொழுதுகள் இருக்கின்றாற் போல் மதுரைக்கும் அன்னியம், சுயம் என்கிற இரு தன்மைகள் எப்போதும் இருந்து கொண்டிருக்கிறதே–? எதனால்–? உன் பரிபூரணக் கருணை இந்த மதுரை மேல் விழாதா? யுத்தமும் குற்றமும் இல்லாத உன்னதமான நாட்களை இந்த மதுரை எப்பொழுதுமே பார்க்காதா? உனக்கான பூஜைகளில் எதைக் குறை வைத்தோம்? ஒரு பொற்றாமரைக் குளத்தைக் கொடுத்தாயே– அது போல நலத்தைக் கொடுத்தாயா?'

– மங்கம்மாளுக்குள் கேள்விகளின் அணி வகுப்பு நீண்டு கொண்டே போகும்போது திபுதிபுவென சில வீரர்கள் ஓடி வரும் சப்தமும் குதிரைக் கனைப்புச் சப்தமும் காதில் விழுந்தது.



கண்மூடிப் பிரார்த்தனையிலும் கேள்வியிலும் இருந்த மங்கம்மாள் சப்தத்தால் கண் மலர்ந்தபோது அந்த ஆலயப் பிராகாரத்துக்குள் நுழைந்திருந்த சில தாடி முளைத்த வீரர்களை ராணியோடு வந்த காவல் வீரர்கள் சிலரைக் கண்களால் துழாவி முடித்து ஒருவனை மட்டும் பார்த்து, "இவன்தான்– இவனேதான்–!" என்கிற தீர்மானத்துடன் அவனைப் பிடித்து இழுத்துச் செல்லத் தொடங்கினார்கள்.

"ராணி என்னைக் காப்பாற்றுங்கள். என்னைக் காப்பாற் றுங்கள்– இவர்கள் என்னைக் கொன்று விடுவார்கள் ராணி–" அவன் அலறத் தொடங்கினான்.

## 6

'பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டில் தென்னகத்தில் செலாவணியில் இருந்த நாணய வகைகளில் ஒன்று பக்கோடா என்ற தங்க நாணயம். இதை முதலில் தயாரித்து வெளியிட்டவர் ராஜா காந்தீவாத் (கி.பி.1638-58) என்ற மைசூர் மன்னர். இஷ்ட தெய்வமான விஷ்ணுவின் தசாவதாரங்களில் ஒன்றான பன்றியின் உருவத்தைக் கொண்டிருந்தது இது. இந்த வராக முத்திரை காரணமாகவே பின்னர் இது வராகன் ஆனது!

– டாக்டர் எஸ்.எம். கமால்

அந்த வீரனின் கூக்குரல் நாலாபுறமும் எதிரொலித்தது. மங்கம்மாள் அதைக் கேட்டுக் கோபத்தின் உச்சிக்குப் போய், "நிறுத்துங்கள்" என்று பதிலுக்குக் கத்தினாள்.

அவர்கள் நின்று அலட்சியமாக ராணி மங்கம்மாளைப் பார்த்தார்கள். பார்த்தார்களேயன்றி பிடித்த வீரனை விட்டு விடவில்லை. அவனும் கூடச் சிறுத்தை வசம் அகப்பட்ட மானைப் போல முழி வெறிப்போடு மங்கம்மாவைப் பார்த்தான்.

"என்ன இது பார்வை...? எவ்வளவு தைரியம் உங்களுக்கு? என் காவல் வீரனையே பிடித்து இழுத்துச் செல்லும் அளவு போய் விட்டதா நிலைமை... யார் நீங்கள்?"

அவர்களில் ஒருவன் மங்கம்மாவை நெருங்கி வந்தான். வேண்டா வெறுப்பாக வணங்கிவிட்டு வாய் திறந்தான்.

"ராணி... நாங்கள் மதுரையம்பதியின் காவலர் மாவீரர் ருஸ்தம்கானின் அந்தரங்கக் காவலர்கள். இவன் எங்கள் தலைவருக்கெதிராகச் சதித் திட்டம் தீட்டுவதாக அறிகிறோம். அதனால்தான் விசாரிக்க அழைத்துச் செல்கிறோம்."

"என்னது? அந்தக் குதிரைக்காரன் மாவீரனா? அவன் உங்கள் தலைவனா?"

"இப்படி யார் பேசினாலும் கேள்விப்பட்டாலும் அவர்கள் நாக்கை அறுத்து நல்ல வெள்ளித்தட்டில் வைத்து ஊர்வலம் வரும்படி உத்தரவு. நீங்கள் நடப்பு அரசரின் துணைவியார் என்பதால் உங்களை மன்னித்து விடுகிறேன்."

"நடப்பு அரசரா... என் கணவர் நடப்பு அரசரா?"

"ஆம்... இதற்கு மேல் உங்களிடம் அரசியல் பேச நான் தயாரில்லை. வருகிறேன்."

அவன் அந்தக் காவல் வீரனைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துக் கொண்டு மறைந்தும் போனான். மங்கம்மாள் சிலையாகி விட்டிருந்தாள். எல்லோரும் அவளைப் பரிதாபமாகப் பார்த்தார்கள்.

"மகாராணி..." என்று நாத்தழுதழுக்கக் குரலெடுத்தார் பரமேஸ்வர பட்டர். அவளும் பதிலுக்குப் பார்த்தாள்.



"இது என்ன கொடுமை மகாராணி? ஏன் நாயக்கப் பேரரசுக்கு மட்டும் இப்படி எல்லாம் இழிநிலை ஏற்படுகிறது?"

— மங்கம்மாள் பதில் தெரிந்தும் கூற முடியாமல் அவரைப் பார்த்தாள்.

அந்தக் குதிரைக்காரன் கொட்டத்தைத் தாங்க முடிய வில்லை. வழக்கமாய் எனக்கு வரும் மான்யம்கூட இந்த மாதத்தில் பாதியாகக் குறைக்கப்பட்டுவிட்டது. இம்மையில் நன்மை தரும் ஆலயத்தின் நான்கு வாயில்களில் மூன்றை அடைத்து அங்கெல்லாம் குதிரை லாயங்களை உருவாக்கச் சொல்லி உத்தரவாம்..."

— பட்டர் சொல்லி முடித்த மறுநொடி தயங்கித் தயங்கி உள்ளே நுழைந்திருந்த ஒருவர், "ஆமாம் ராணி... ஆற்றங் கரையிலும் கூட அநீதியான போக்கு நடக்கிறது. வண்ணான் துறையில் ஆடை வெளுக்க வரி கட்ட வேண்டுமாம். ஊருக்குள் கள் விற்க வருபவர்களிடமும் வரி வசூலிக்கப் படுகிறது. எங்கு பார்த்தாலும் அந்தக் குதிரைக்காரனின் ஆட்கள் குதிரைகளில் திரிந்தபடி இருக்கிறார்கள். இந்த நாயக்க ராஜ்யத்தை மொகலாய அரசர் ஔரங்கசீப் வசம் ஐம்பது லட்சம் பொன்னுக்கு விற்றுவிடப் போவதாகவும் கூட ஒரு பேச்சு காதில் விழுகிறது."

— அந்த மனிதர் சொல்லச் சொல்ல மங்கம்மாளுக்குத் தலையைச் சுற்றியது. பெருமூச்சுடன், "எல்லாம் பொய். பச்சைப் பொய். எதையும் நம்பாதீர்கள்" என்றாள்.

"இதைத் தாங்கள் கூறுவதைவிட நமது அரசர் ஊரறியக் கூறிவிடுவது நல்லதல்லவா?"

"என்ன செய்யச் சொல்கிறீர்கள்?"

"முன்பெல்லாம் அவர் மக்களுக்குச் செய்தி சொல்ல ஆயிரம் கால் மண்டபத்திற்கு வருவது வழக்கமாக இருந்தது. இல்லாவிட்டால் வண்டியூர் வருவார். தெப்பக்குளக் கரையில்

தேரடி மண்டபத்தில் ஏறியும் காட்சி தருவார். பேசுவார். அப்படி இப்பொழுதும்..."

"இப்பொழுதும் அவர் அப்படிப் பேச ஆவன செய்கிறேன், கவலைப்படாதீர்கள்" என்றவள் மிக வேகமாக அங்கிருந்து புறப்பட்டாள்.

அவளது வேக நடையைப் பின் தொடர்வது வீரர்களுக்கே சவாலாக இருந்தது. களேபரத்தில் மீனாட்சிக் குங்குமத்தையும் பிரசாதத்தையும்கூடப் பெற்றுக் கொள்ள மறந்துவிட்டாள்.

நாயக்க அரண்மனை கட்டடக்கலைக்கு இலக்கணம் எழுதியிருந்தது என்றால் மிகையில்லை. அதிலும் திருமலை நாயக்கரின் ரசனை பார்க்குமிடமெங்கும் தெரிந்தது. இந்த ரசனை ஒரு விதத்தில் தஞ்சை போய் வந்த சமயம் அவர் ரத்தத்தில் தொற்றிக் கொண்டது என்றால் மிகையில்லை.

தஞ்சை நாயக்கரின் விருந்துபசாரத்தில் பங்கு கொண்டு விட்டு அப்படியே பிரகதீஸ்வரர் ஆலயத்துக்கும் போய்வந்த போது மிரட்சிதான் ஏற்பட்டது அவருக்கு—

"இப்படிக்கூட ஒரு ஆலயம் இருக்க முடியுமா? அடேயப்பா என்ன ஒரு கம்பீரம்... உண்மையில் சோழப் பேரரசர் மாமனிதர்தான். அடேயப்பா என்ன ஒரு ரசனை... என்ன ஒரு ரசனை..." என்று அவர் வியந்ததாகவும் அதைத் தஞ்சை நாயக்கரும் பார்த்து, "வேண்டாம் திருமலை. இப்படி வியந்து நீங்களும் மதுரையில் எதையாவது செய்து திருமலை நாயக்கனும் ஒன்றும் சளைத்தவனில்லை என்று உங்கள் வருங்காலம் வியக்கும்படி எதையும் செய்துவிடாதீர்கள்" என்று கூறினாராம்.

ஏன் அவர் அப்படிக் கூறினார் என்கிற கேள்வியின் பின் புதிரான விஷயங்கள் நிறைய இருந்தன! ஆச்சரியத்துடனும் அதிர்ச்சியுடனும் பார்த்த திருமலையிடம் தஞ்சை நாயக்கரின் பதில் பெரிய வியப்பையே உருவாக்கியதாம்.



"திருமலையாரே... இந்தப் பிரகதீஸ்வரரைப் பார்க்கும் போது அந்தக் கயிலாயச் சிவன் நினைவே எவருக்கும் வர மாட்டேன் என்கிறது. ராஜராஜ சோழர் நினைவுதான் தோன்றுகிறது. இறைவன் புகழ் விளங்க அமைத்த ஆலயமாக இது இல்லை. ராஜராஜர் தன் புகழ் விளங்க அமைத்த ஆலயமாக இது இருப்பதாகவே தோன்றுகிறது. எனவே சந்நிதியில் நினைவுகள் திரிந்துவிடுகின்றன. இது ஆலய வாஸ்துவைப் பாதிக்கிறதாம். இதனால் அஷ்டதிக்குப் பாலகர்கள் முதல் ஆலயத்து தேவதாதேவியர்கள் கோபத்துக்கு அனைவரும் உள்ளாகிறோமாம்.

இறையகத்தைக் கலையகமாக மாற்றிப் பார்ப்பதால் உணர்வுகளும் மாறிவிடுகின்றன. இதன் காரணமாக ராஜராஜர் பரம்பரை பெரிதாக விளங்கவில்லை என்றும் கூறுகின்றனர். எனவே ரசிப்பதோடு நிறுத்திக் கொள்ளுங்கள். பாதிப்புகளோடு எதையும் செய்து விடாதீர்கள்" என்கிற அவரது நீண்ட கருத்து திருமலை நாயக்கரைப் பின்னர் வேறுவிதமாகப் பாதித்ததாகவும் அதன் எதிரொலியாகத்தான் அவர் மீனாட்சியம்மை ஆலயத்தினை அசுர பரிமாணத்தோடு வடிவமைத்துச் சிறப்பு செய்ய நினைத்ததை ஒத்திப்போட்டுப் பதிலுக்குத் தன் குடியிருப்புக்கு ஒரு மகாலை உருவாக்கிக் கொண்டார் என்பர்.

அதைக்கூட மைசூர் சோமராஜ உடையாரின் லலித மகாலுக்கும் மேல் உருவாக்கிக் கொள்ளும் எண்ணம் இருந்ததாம்.

இருந்தும் திருமலை நாயக்கரின் நேயத்துக்குரிய ஸ்தபதி அவ்வாறு அரண்மனைகளை அரசர்கள் உருவாக்கிக் கொள்வது திருஷ்டியில் கொண்டுவிட்டுவிடும் என்றாராம். பின், "அரண்மனைகள் மட்டும் இருக்கும் ஆட்சியர்கள் இருக்கமாட்டார்கள். அரண்மனை அருள்மனையாக இருக்க வேண்டும். அவர் உறங்கும் இடம், உண்ணும் இடம் கூட எப்படி இருக்க வேண்டும் என்பதற்குச் சாஸ்திரம் வழி

காட்டுகிறது" என்று கூறித்தான் இந்த மகாலையே வடிவமைத்துக் காட்டினார் என்பதும் வரலாற்றில் எப்படியோ சரியாக இடம் பெறாமல் போய்விட்ட விஷயங்கள்.

அப்படி ஓர் அரண்மனைக்குள் மங்கம்மாளின் பிரவேசம் அசுர வேகத்தோடு நிகழ்கிறது. 'எங்கே அரசர் சொக்கநாதர்?' என்று தேடிக் கொண்டு வைருகடாகம் நோக்கிச் செல்கிறாள். அங்குதான் பஞ்சணையோடு உப்பரிகையும் இருக்கிறது. வழி நெடுகிலும் காவல் வீரர்களும் அவளைப் பார்த்து வணங்கி நிற்கின்றனர். அருகே செல்லச் செல்ல அவளைப் பார்க்கும் வீரர்கள் அவளுக்குப் புதியவர்களாகத் தெரிய அவர்கள் உடுப்பும் பாஷையும் கூட வித்தியாசமாக இருந்தது.

சொக்கநாதரின் சயன அறைக்குள் பிரவேசிக்கப் பார்த்தவளை ஒருவன் தடுத்தான்.

"நாயக்கர் ஆனந்த உறக்கத்தில் இருக்கிறார். அவரை யாரும் எதற்காகவும் சந்தித்துப் பேசக் கூடாது என்பது உத்தரவு..." என்றான். அரசர் என்று விளிக்காமல் நாயக்கர் என்று அவன் கூறுவதெல்லாம் சமீப மாற்றங்கள்.

"எனக்கே உத்தரவா...? போடுவதாக இருந்தால் நான்தான் போட வேண்டும். என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய் நீ?" என்று கண்கள் சிவக்க எகிறினாள் மங்கம்மாளும் உடனே.

"ஒதினா..." என்றொரு குரல் சற்றுத் தொலைவிலிருந்து வெளிபட்டு அவளைத் திருப்பியது. மைத்துனன் முத்து லிங்கம் நின்று கொண்டிருந்தான்.

"அண்ணனைத் தொந்தரவு செய்யாதீர்கள். உங்களுக்கு என்ன வேண்டும்? என்னிடம் கேளுங்கள். வாருங்கள் என்னோடு" என்று அவளைத் தெலுங்கில் அழைத்து விட்டு அவள் வருவாளா என்றுகூடப் பாராதபடித் தனது இருப்பிடமான அறை ஒன்றை நோக்கிச் சென்றான்.

மங்கம்மாள் தயங்கித் தயங்கித் தேங்கி நின்றவள் ஆவேசம் குறையாதபடி அவனை நோக்கி நடந்தாள்.



அவனது அறைக்குள் நுழைந்த மாத்திரத்தில் சற்று அதிர்ந்தும் போனாள். உள்ளே வித்தியாசமான உடையலங்காரத்துடன் பல பெண்கள்! நாசியை உபத்ரவமாக்கும் பழைய திராட்சை ரசம் மற்றும் பலவகை மதுபானங்கள்.

அவைகளை அதிகப்படியான இணக்கத்தோடு அந்தப் பெண்கள் ஊற்றிக் கொடுக்க, குடித்தபடி இருந்தான் எல்லோராலும் குதிரைக்காரன், குதிரைக்காரன் என்று வருணிக்கப்பட்ட ருஸ்தம்கான்.

மங்கம்மாளைப் பார்க்கவும் மதுக் கிண்ணத்தை ஒரு ஓரமாக வைத்துவிட்டு, "மகாராணிக்கு என் திவ்ய வந்தனங்கள்" என்று கைகளை உயர்த்தி வந்தனம் கூறினான். குரலில் துளி கெக்கலிப்பு இருந்தது.

மங்கம்மாள் முறைத்தாள்.

"இங்கென்ன செய்கிறாய்?" என்றும் கேட்டாள்.

"என்னைக் கேளுங்கள் ஒதினா. ருஸ்தம் என் உயிர் நண்பன். அவன் என்னோடுதான் இருப்பான்."

"சரி... உங்கள் கூத்தாட்டத்தை வெளியே எங்காவது வைத்துக் கொள்ளுங்கள். அதற்கு இந்த அரண்மனைதான் கிடைத்ததா?"— மங்கம்மாள் பெருமூச்செறிந்தாள்.

"நாக்கை அடக்கிப் பேசுங்கள் ஒதினா. ராஜ லட்சணங்கள் உங்களுக்குக் கூத்தாட்டமாகத் தெரிகிறதா?"

"எதடா ராஜ லட்சணம்? குடிகாரா... உனக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது?"

"என்னது அடாவா... முத்துலிங்கர் இந்த நாயக்க ராஜ்யத்தையே ஆளப்போகிறவர்... மரியாதையாகப் பேசுங்கள்."— ருஸ்தம்கான் குறுக்கிட்டான்.

"அதெல்லாம் உங்கள் கனவில். அவரை மதுவுக்கு அடிமையாக்கி மயக்கத்திலேயே வைத்திருந்து அவரைக் லாயக்கில்லாதவராக்கிவிட்டுப் பட்டத்துக்கு வரலாம் என்று நினைத்

தால் அது நடக்காது. உங்கள் சதித் திட்டத்தை நான் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன்."

"அவரை நாங்கள் மயக்கத்தில் வைக்கவில்லை. அவர் தான் அதிலேயே இருக்கப் பிரயாசைப்படுகிறார். இந்நிலையில் இந்த மதுரையை வழி நடத்தும் எல்லாத் தகுதியும் முத்துலிங்க நாயக்கருக்குத்தான் இருக்கிறது. இந்த க்ஷணம் ராஜ்ய பாரம் முத்துலிங்கர் தோளில். அவருக்கு எல்லா வகையிலும் உறு துணை நான். அதை எல்லாம் மறந்து உளற வேண்டாம்."

"ராஜ்ய பாரத்தைச் சுமக்கின்ற முகரையைப் பார். நரிக்கு நாட்டாமை கொடுத்தால் கிடைக்கு மூன்று ஆடு கேட்குமாம். முத்துலிங்கம் உனக்கென்ன ஆயிற்று? மதுரையையே நீ இருட்டுக்குள் இழுத்துக் கொண்டிருக்கிறாய்... எங்கு பார்த்தாலும் இந்தக் குதிரைக்காரன் ஆட்கள். இவனுக்குக் குதிரையேற்றம் தவிர வேறு என்ன தெரியும்? யாரோடு பழகுவது, எப்படிப் பழகுவது என்பதிலெல்லாம் ஒரு நிதானம் வேண்டாமா?"— மங்கம்மாள் வெடித்தாள்.

"ஓதினா... இனி ஒரு வார்த்தை பேசக்கூடாது. உங்களையும் சரி, அண்ணனையும் சரி, நான் நன்றாக அறிவேன். ருஸ்தம்... இந்த நொடி இவளையும் பிடித்துத் தனிமைச் சிறையில் வை. எப்படி அண்ணனை யாரும் பார்க்கக் கூடாதோ அதேபோல் இவளையும் யாரும் பார்க்கவோ, பேசவோ கூடாது."

முத்துலிங்கத்தின் கட்டளை அசுரகதியில் ஈடேறத் தொடங்கியது. அதே சமயம் மீனாட்சி ஆலயத்தில் கைது செய்யப்பட்ட வீரனும் இருவர் எதிரில் அங்கு இழுத்து வந்து நிறுத்தப்பட்டான்.

"அரசே, இவன் பெயர் நல்ல பிள்ளை. அமைச்சர் குமார பிள்ளை, கோவிந்தப்பையாவோடு மிகுந்த நெருக்கம் உடையவன். இவன்தான் சேது நாட்டுக்குச் சேதி எடுத்துச் சென்றவன்!"



"ஓஹோ... இந்த இளைஞர்களுக்கு எதிராக அந்தக் கிழவனின் உதவியைக் கேட்டு இங்கு இருக்கும் கிழவர்கள் உன்னை அனுப்பினார்களா?"

— முத்துலிங்கம் கேட்டுக் கொண்டே ருஸ்தம்கானைப் பார்த்தான்.

நல்லபிள்ளை என்னும் அந்த வீரன் உடனே அலறினான்.

"அது நானில்லை. நான் நல்லபிள்ளை. சேதுநாட்டுக்குச் சென்றவன் நல்லமன். பெயரில்தான் பொருத்தம் இருக்கிறது. செயலில் இல்லை. என்னை நம்புங்கள்..."

"இல்லை அரசே... இவன்தான் மாறுவேடத்தில் நல்லமனாகவும் போய் வந்தவன். அர்த்தஜாமத்தில் இவன் இராமநாதபுரம் கிளம்பிச் சென்றதைப் பார்த்தவர்களில் நானும் ஒருவன். திருப்பாச்சேத்தி வரை மாட்டு வண்டியிலும், பின் அங்கிருந்து அஷ்டமங்கலப் புரவி ஒன்றின் மேலும் ஏறி இவன் சென்றதை நானும் பார்த்தேன்.

சென்ற வேகத்தில் திரும்பியும் வந்து விட்டான்..."

— அவனைப் பிடித்து வந்த வீரன் ஆணியடித்தது போல் அழுத்தமாகக் கூறவும் நல்லபிள்ளை சற்று நொறுங்கினது போலத் தலையைத் தாழ்த்தியபடி நிற்கலானான்.

"சரி... ராமநாதபுரம் ஓடிய இவன் கால்களை வாங்கி விடுங்கள். எக்காரணம் கொண்டும் இவன் சாகக் கூடாது. முடமாக இவன் இருந்து மற்றவர்களுக்கும் எச்சரிக்கையாகத் திகழ வேண்டும். என்ன?"

— ருஸ்தம்கானே கட்டளையாகச் சொல்லி முடித்துவிட்டு முத்துலிங்கத்தை, சரிதானே என்கிற மாதிரி ஒரு பார்வை பார்த்தான். முத்துலிங்கத்திடம் துளியும் மறுப்பில்லை. ஆனால் முகத்தில் பலத்த சிந்தனை தேங்கியிருந்தது.

"என்ன சிந்தனை முத்துலிங்கம்?" என்றான் மிக ஸ்நேகமாக.

"இல்லை. கிழவன் சேதுபதியை நினைத்தேன். அதுதான் சற்று கலக்கமாக இருக்கிறது."

"நம்மை எதிர்க்க அவன் துணிவான் என்று நம்புகிறீர்களா?"

"ஒருவேளை துணிந்து விட்டால்.."

"எனக்கு நம்பிக்கை இல்லை. அப்படியே துணிந்தாலும் துளியும் கவலை இல்லை. அந்தத் துணிவு வெகு சீக்கிரம் காணாமல் போய்விடும்."

"எப்படி?"

"அங்குதான் இருக்கிறது இந்த ருஸ்தம்கானின் சாதுர்யம்."

"அதுதான் எப்படி?"

"இந்த க்ஷணம் நமக்கு டெல்லிப் பட்டணத்துப் பேரரசின் ஆசீர்வாதம் பலமாக இருக்கிறது. அவரது அன்பையும் நெருக்கத்தையும் பெற்றவர்தான் கிழவனின் அமைச்சராகத் திகழும் சீதக்காதி. டெல்லிப் பட்டணத்தில் பேரரசர் அவையிலே இருக்கக் கிடைத்த வாய்ப்பைக் கூட உதறிவிட்டுக் கிழவனோடும் ராமநாதபுரத்துடனும் ஐக்கியமாகிவிட்டவர். அவர் மூலமாகக் கிழவர் கட்டுப்படுத்தப்படுவார்.."

"உண்மையாகவா?"

"சத்தியமாக.. இப்பொழுது கூட டெல்லிப் பேரரசரிடம் இருந்து எனக்கொரு சேதி வந்துள்ளது. உங்கள் நலனைப் பெரிதும் விசாரித்துள்ளார்."— என்றபடி ருஸ்தம்கான் ஒரு ஓலையை இடுப்பில் இருந்து உருவியபடி அதை விரிக்கலானான்.

அதை அங்கு காவலுக்கு நிற்கும் வீரர்கள் பலரில் ஒருவன் மட்டும் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினான்.

# 7

'பதினான்காவது நூற்றாண்டு முதல் தமிழ் மண்ணில் தொடர்ந்து அன்னியர் ஆட்சியினால் நமது தாய் மொழியாகிய தமிழ் மொழிக்குப் பல இடையூறுகள் ஏற்பட்டுத் தமிழ் மொழியின் பெருமையும், வளர்ச்சியும் குன்றியிருந்த பொழுது தமிழைப் போற்றிப் புரந்த தமிழ் மன்னர்கள் சேதுபதிகள்.

அவர்களது ஆவணங்களான செப்பேடுகளில் குறிப்பாகத் திருமலை சேதுபதி, கிழவன் சேதுபதி, முத்துராமலிங்க சேதுபதி ஆகியோர் தங்கள் பெயரைத் தெலுங்கு மொழியில் எழுதிக் கைச் சாத்திட்டிருப்பது ஆச்சரியப்படத்தக்க ஒன்று. இது மதுரை நாயக்கர்களுக்கும் சேது நாட்டுக்கும் உள்ள மிக நெருக்கமான தொடர்புக்கும் ஏனைய பரிவர்த்தனைகளுக்கும் சான்றாக விளங்குகிறது.'

— நன்றி: 'சேது மன்னர்கள் செப்பேடுகள்' நூலில்
டாக்டர் எஸ்.எம். கமால்

காவல் வீரனின் காதுகள் விடைத்துக் கொண்ட நிலையில் ருஸ்தம்கானும் அதை உணராது விரித்த ஓலையை வாசிக்கத் தொடங்கினான்.

'இன்ஷா அல்லாவின் திருநாமத்தின் பேராலே ஆயிரமாயிரம் நமாஸ்களோடும், பேரரசர் ஔரங்கசீப்பின் ஒப்புதலுடன் விடுக்கப்படுகின்ற ஓலை. இதன்படி இந்தப் பாரத ராஜ்ஜியமெனும் இந்து மாகாணங்களில் தலையாயதும் அதி சிறந்ததுமான பாண்டி நாடான மதுரை குறித்த தகவல்களையும் அரசியல் சிக்கல்களையும் அறிந்தோம்.

அம்மட்டில் சிக்கல் தீர எல்லா உதவிகளையும் செய்து தற்போது அதன் உரிமைக்குப் பாடுபடும் முத்துலிங்க நாயக்கருக்கே மதுரையை சாஸனம் செய்து தருவதில் பேரரசருக்கு யாதொரு உத்பாதமும் இல்லை. இம்மட்டில் இதற்கு எதிராக எவர் வரினும் அவரையும் அடக்கி வழிப்படுத்த பாதுஷா வழிகளறிவார்.

சகாயங்கள் இதன் நிமித்தம் சத்யமாய்ப் பாடுபடும் ருஸ்தும் கான் ஸனார்கானுக்குப் பாதுஷாவின் விசேஷப் பாராட்டுதல்கள்.'

— படித்த ஜோரோடு மீண்டும் ஓலையைச் சுருட்டி இடுப்பில் செருகிக் கொண்ட ருஸ்தும்கானை முத்துலிங்க நாயக்கன் அதிசயமாகத்தான் பார்த்தான்.

"எங்கே எங்கே அதைக் கொண்டா ருஸ்தும் நான் பார்க்கிறேன்" என்றும் பரபரத்தான்.

"உருது மொழியிலான ஓலை அது– உங்களுக்குப் படிக்கத் தெரியாதே?"– என்ற ருஸ்தும் தன் தாடியை வருடியபடியே, "பார்த்தீர்களா– உங்கள் பெயர் பாதுஷா வரைக்கும் போய் விட்டதை" என்றான்.

"எல்லாம் உன் வேலையா?"

"ஆமாம். என் அருமை நண்பர் உங்களுக்காக நான் இதைக் கூடச் செய்யாவிட்டால் எப்படி?"

"அது சரி– எப்படி உனக்கு டெல்லி பாதுஷா வரை பரிச்சயம் ஏற்பட்டது?"

— முத்துலிங்கம் இப்படிக் கேட்ட நொடி ருஸ்துமின் முகம் ஒரு தினுசாக மாறியது.

"என்ன முத்துலிங்க நாயக்கரே– எதற்கு இந்தக் கேள்வி–?" என்றான் சற்றுத் தினவாக.

"இல்லை– நீயோ இங்கே ஒரு சாதாரணக் குதிரைப்படை வீரன். அப்படியிருக்க எப்படி டெல்லி வரை–"



"அங்கேதான் இந்த ருஸ்தும்கானை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நான் பதவி ஆசை இல்லாதவன். அதனால்தான் குதிரைப்படைப் பிரிவுக்குத் தலைவனாக இருப்பதையே பெரிய பாரமாகக் கருதுகிறேன். நான் மனது வைத்தால் இந்தத் தென்பாண்டி மண்டலத்திற்கோ இல்லை சோழ தேசத்திற்கோ, அதுவுமில்லை மகாராஷ்டிரத்தில் எதாவது ஒரு பட்டணத்திற்கோ நான் ஒரு அரசனாக ஆகியிருக்க முடியும். பாதுஷாவிற்கு என்மேல் அத்தனை அன்பு உண்டு.

பாதுஷாவும் பெரிய உள்ளம் கொண்டவர். உங்கள் சகோதரரைப் போலப் பதவி ஆசையும் சகோதரனையே எதிரியாக நடத்தும் குணமுமில்லாதவர்.

எத்தனை புரவிச் சந்தைகளுக்குப் போயிருப்பேன்? ஒரு முறை அவருக்கு வாங்கப்பட்ட புரவி ஒன்றை நான் பார்க்க நேரிட்டது. அது ரத்தக்குலை நோய் தாக்கிய குதிரை. அதில் யார் பயணம் செய்தாலும் அவர்களையும் அது தொற்றிக் கொள்ளும். இது தெரியாமல் உருவத்தைப் பார்த்து மயங்கி பாதுஷாவின் சேவகர்கள் அதை வாங்கிவிட்டனர். நான், அதை வாங்காதீர்கள், இதில் பயணம் செய்பவன் நிச்சயம் இறந்து போவான். இந்தக் குதிரையும் மூன்று மாதங்களுக்கு மேல் உயிர் வாழாது என்றேன். பாதுஷாவும் இதைப் பரிசோதித்துப் பார்த்தாராம்.

இறுதியில் என் கருத்துப்படிதான் நடந்தது. பின்னர் பாதுஷா என்னை அழைத்து வரச் சொல்லி என் புத்திக் கூர்மையை மிகப் பாராட்டினார். நான் அவரோடு உருது மொழியில் சரளமாகப் பேசியதால் மிக மகிழ்ந்து போனார். தென்னாட்டைச் சேர்ந்தவன் என்பதை அறிந்து மேலும் மிக மகிழ்ந்தார். இங்கே டெல்லியிலேயே தங்கிவிட்டேன் என்றெல்லாமும் சொல்லிப் பார்த்தார். நான் மறுத்து விட்டேன்.

எப்பொழுதும் பாதுஷா போன்ற பெரிய தலைகளுக்குத் தொலைவிலேயே இருந்துவிட வேண்டும். நாளைக்கே நீங்கள் இந்த மதுரைக்கு அரசரானால் நான் உங்களையும் விட்டு ஒதுங்கி விடுவேன்."

— ருஸ்தும்கான் நீண்ட விளக்கம் தந்து அதில் முத்துலிங்க நாயக்கருக்கு அரசராகும் அந்த ஆசையையும் அடிக்கோடிட்டுக் காட்டிவிட்டுக் கூர்ந்து பார்த்தான்.

முத்துலிங்கமும் அவனது அளப்பில் அப்படியே வாய் பிளந்திருந்தான். இப்படித்தான் சாதாரணமாக ஒரு கேள்வி கேட்டாலும் போதும், அதற்கு மிகப் பெரிய விடை— அந்த விடையில் எண்ணிப் பார்க்க முடியாத சம்பவங்கள்—

முத்துலிங்கத்துக்கு மலைப்புத் தட்டிற்று.

"அப்படியானால் நான் அரசனாவதில் எந்தவித இடர்ப் பாடும் இருக்காது— அப்படித்தானே?" என்று கேட்க,

"ஒருவித இடர்ப்பாடும் இல்லை. நீங்கள் என் பேச்சைக் கேளுங்கள். பிறகு பாருங்களேன்."

"இப்பொழுதும் அப்படித்தானே இருக்கிறேன்."

"எங்கே— அவ்வப்போது சந்தேகம் வந்து ஆராயப் போய் விடுகிறதே புத்தி—"

"ஐயோ— அப்படி எல்லாம் ஒன்றுமில்லை. நீ எனக்கு நண்பனாகக் கிடைத்த பிறகுதான் எனக்கு உலகமே புரியத் தொடங்கியுள்ளது, ருஸ்தும்."

"இப்படிச் சொன்னால் போதாது. இன்னும் தீவிரமாகப் பல காரியங்களைச் செய்தாக வேண்டும்."

"என்ன செய்ய வேண்டும் சொல்."

"உங்கள் சகோதரரையும் அவர் மனைவியும் உங்கள் அண்ணியுமான மங்கம்மாளையும் இந்த மதுரையை விட்டே வெளியே கொண்டு போய்விட வேண்டும்.



திண்டுக்கல் கோட்டையிலோ, இல்லை இப்பொழுது நீங்கள் அவ்வளவாகப் பயன்படுத்தாத திருச்சியிலோ இவர்களை அடைத்து வைத்து விடுவோம்.

மனநலம் சரியில்லாததால் மருத்துவச் சிகிச்சையில் இருப்பதாக அரண்மனை வைத்தியரைக் கொண்டே சொல்லச் சொல்லி விடலாம்.

அவர் குணமாகும் வரை நீங்கள்தான் அரசர் என்று நான் உரக்கச் சொல்கிறேன். உள்ளூரிலே ஒரு நாய்க்குக் கூட என்னை எதிர்த்துப் பேசத் திராணி கிடையாது.

வெளியூர் நாய்கள் எதாவது குலைத்தால் இருக்கவே இருக்கிறது டெல்லி பாதுஷாவின் உதவி எப்படி?"

"அதற்கென்ன அப்படியே செய்துவிடு. ஆமாம் எதற்காக டெல்லி பாதுஷா என்மேல் இத்தனை அன்பு பாராட்டு கிறார்?"

"ஓ— திரும்ப சந்தேகமா—?"— ருஸ்தும்கான் முத்துலிங்க நாயக்கன் எதிரில் நெற்றியைத் தேய்த்துக் கொள்ள,

"ருஸ்தும் ருஸ்தும்— இது சந்தேகமில்லை. காரணம் தெரிந்து கொண்டால் நானும் நன்றி பாராட்டலாமல்லவா. அதற்குத் தான்—" என்று பதறிப்போய்க் கசிந்தான் முத்துலிங்கம்.

"ஒரு காரணமுமில்லை. நான்தான் உங்கள் நல்ல உள்ளம் பற்றி அவரிடம் எடுத்துக் கூறினேன் அவ்வளவுதான்."

"அப்படியா— மிகமிக மகிழ்ச்சி ருஸ்தும்."

"சரிசரி. அதிகம் உணர்ச்சி வசப்படாதீர்கள். நானும் அதிகம் அரசியல் பேசி உங்களைச் சற்று சலனப்படுத்தி விட்டேன்."

— ருஸ்தும்கான் பேச்சோடு பேச்சாக மதுக்கோப்பை ஒன்றைத் தேடி எடுத்து வந்து அதில் போதை மிகுந்த மதுக் கஷாயத்தையும் வார்த்து எதிரில் நீட்ட, பரவசத்தோடு வாங்கிப் பருகத் தொடங்கினான் முத்துலிங்க நாயக்கனும்.

ஒட்டுக் கேட்டபடி இருந்த காவல் வீரனுக்கு நாடி நரம்பெல்லாம் புடைத்தெழுந்து இப்படிக்கூட ஒரு சுயசிந்தனை இல்லாத ஒருவன் இந்த உலகத்தில் இருக்க முடியுமா என்று தோன்றிற்று.

நடுவில் சுதாரித்துக் கொண்டு அந்த அரண்மனையின் வேறொரு பாகத்திற்குச் சென்ற ருஸ்தும்கானை மெல்ல அந்தக் காவல் வீரனும் பின் தொடரத் தொடங்கினான். இதேபோல் உளவு வேலை பார்க்கப் போய்தான் நல்லபிள்ளைக்குக் கால்கள் போகப் போகின்றன, தனக்கும் ஏதாவது ஆகிவிடப் போகிறதே என்கிற எச்சரிக்கை அவனுக்குள் மிகுதியாக இருந்ததால், அரண்மனை விளக்குச் சிம்னிகளில் கரி படிந்திருப்பதைப் பார்த்து அதைச் சுத்தம் செய்ய முனைவது போல அதற்கான ஆயத்தங்களோடு ருஸ்தும்கானின் அறைக்குள் நுழைந்தான்.

ருஸ்தும் அவனது அந்தரங்கமான மெய்க்காப்பாளனைப் போன்ற சைய்யூம் என்பவனிடம் ரகசியக் குரலில் பேசியபடி இருந்தான். சைய்யூம் நாயக்கரின் குதிரைப்படையில் குதிரைகளுக்கு வைத்தியம் பார்க்க வந்தவன். இன்று அரசியல் பண்ணும் ஒரு முக்கியஸ்தன்.

காவல் வீரன் உள்ளே நுழையவும் அவனைப் பார்த்து சைய்யூம் எச்சரிக்கையோடு அலறினான்.

"அறிவிருக்கிறதா உனக்கு...? ஆலோசனை நடக்கும் இடத்தில் என்னடா வேலை உனக்கு?"

— அந்தக் காவல் வீரனும் பதிலுக்குக் கைகளில் உள்ள கரி பூசிய வஸ்திரத்தைக் காட்டி அறை சிம்னியைச் சுட்டிக் காட்ட, புரிந்து கொண்டான்.

"சரிசரி– எல்லாம் பிறகு வந்து பார்த்துக் கொள்" என்று அவனை எச்சரித்து அனுப்பிவிட்டு ருஸ்தும் பக்கம் திரும்பினான்.



ருஸ்தும் முகத்தில் புளகாங்கிதமான ஒரு தோற்றம்.

"எப்படியோ... அந்த இளைய நாயக்கனை அதையும் இதையும் சொல்லி உங்கள் இரும்புப் பிடிக்குள் ஒரே பிடியாகக் கொண்டுவந்து விட்டீர்கள் என்று சொல்லுங்கள்."

— சைய்யூமிடம் எகத்தாளமாகக் கேள்வி.

"இருந்தாலும் முத்துலிங்கம் அவ்வப்போது சந்தேகப்படுகிறான். அத்துடன் தளவாய்களும் அமைச்சர்களும் முழு ஒத்துழைப்புத் தராத நிலை. எனவே சற்று எச்சரிக்கையாகவே எதையும் செய்ய வேண்டியுள்ளது."

"நிஜமாலுமே டெல்லியின் பலம் நமக்கிருந்தால் இப்படிக் கவலைப்படத் தேவையில்லை என்று கூறுங்கள்."

"சைய்யூம்– அதற்காகத்தான் இப்போது உன்னிடம் பேசிக் கொண்டிருக்கிறேன். நீ இன்றே டெல்லி புறப்பட்டு பாதுஷாவைச் சந்தித்துத் தென் மதுரையில் ஒருவன் உங்கள் கைகளில் ஆட்சியைப் பறித்துச் சேர்க்கத் தயாராக இருக்கிறான் என்று கூறிப் பாரேன். அவரது பிரதிநிதியாகச் செஞ்சியை ஆளும் தாவூத்கான் போல நான் இருந்தால்கூடப் போதும்."

"எனக்கு யாரைத் தெரியும் டெல்லியில்...? அத்துடன் நம் போன்றவர்கள் எல்லாம் பாதுஷாவைப் பார்த்து அரசியல் பேச முடியாதாம். எதிரியோ, நண்பனோ மரபுகளை மதிப்பவராம் பாதுஷா. அவரை நானோ, இல்லை நீங்களோ சந்தித்தால் துரோகி என்று அவரேகூட நம்மை எட்டி உதைக்கக்கூடும்."

"அரசியலில் துரோகம்தான் முன்னேற்றத்திற்கான முதல் ஏணி சைய்யூம். அதில் ஏறி நான் முத்துலிங்கத்தையும் உதறிய பின் நிச்சயம் டெல்லி எனக்கு உதவும். நீ வேண்டுமானால் பார்."

"அது பிறகு– இப்பொழுது நீங்கள் ஒரு சாதாரணக் குதிரைக்காரர் மட்டுமே. அது ஞாபகத்தில் இருக்கட்டும்."

"அதைத் தயவு செய்து ஞாபகப்படுத்தாதே. ஆமாம் கோவிந்தப்பையாவையும், அந்தக் குமாரபிள்ளையையும் கவனிக்கச் சொல்லியிருந்தேனே. என்ன சொல்கிறார்கள் அந்தச் சூரப்புலிகள்?"

"அவர்கள் அனுப்பிய ஒற்றனைப் பிடித்துக் காவலில் வாங்கச் சொல்லவும் ஆடிப்போய்க் கிடக்கிறார்கள். குதிரைக் காரன் குதிரைக்காரன் என்றே உங்களைக் குறிப்பிட்டு வந்தவர்கள் இப்பொழுதுதான் வழிக்கு வந்து வீரத்தளபதி ருஸ்தம்கான்சாகிப் என்று மரியாதையாகப் பேசுகிறார்கள்."

"நிஜமாகவா?"

"அதிலென்ன சந்தேகம். நாளைக்கே அவர்களை உங்களை வந்து பார்க்கச் சொல்கிறேன். அப்பொழுது அவர்கள் உங்களிடம் பணிவாக நடந்து கொள்வதில் எல்லாம் தெரிந்து விட்டுப் போகிறது."

"சரி, சேது நாட்டு விஷயம் எதுவரையில் இருக்கிறது?"

"அதுதான் தற்சமயம் பெரிய புதிர். வேண்டுமானால் நீங்கள் கற்பனையில் சொன்னதுபோல அந்த வள்ளல் சீதக்காதியை விட்டுக் கிழவனைக் கட்டிப் போட வழி இருக்கிறதா என்று பார்க்கலாம்..."

"அது உன்னால் முடியுமா?"

"சீதக்காதி அரசியலில் மிக நேர்மையானவர். போது மென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்று வாழ்ந்து வருபவர். உங்கள் விருப்பத்திற்கு இசைந்து கொடுப்பாரா என்பது சந்தேகம்தான்."

"சைய்யும்... இங்கேயே இருந்து கொண்டு முடிவு கட்டாதே. டெல்லியின் ஆசிகள் எனக்கிருப்பதாகக் கூறிப் பார். வள்ளல் சீதக்காதி அதற்குச் சற்று மரியாதை தரக்கூடும்."

"முயற்சி செய்து பார்க்கிறேன். ஆனால் வெற்றியில் எனக்கு நம்பிக்கை இல்லை."



"சரி... கிழவனையே சந்தித்து ஒரு உடன்படிக்கை போட்டுக் கொண்டால்...?"

"அதற்குக் கிழவன் ஒத்துக்கொள்ள வேண்டுமே?"

"ஏன் ஒத்துக் கொள்ளாமல்... இந்த மதுரை எவ்வா விதத்திலும் கிழவனுக்கு எதிரி நாடு. எனவே கிழவனுக்கு ஒரு சந்தர்ப்பம்..."

"ஆமாம்... உங்களையும் தூக்கி எறிந்துவிட்டு மொத்த மதுரையையும் கிழவனே எடுத்துக் கொள்ள இது ஒரு சந்தர்ப்பம்தான்."

"சைய்யும்... ஏன் இப்படி எதிர்மறையாகவே பேசுகிறாய்?"

"என்ன செய்வது? நானும் சரி... நீங்களும் சரி... இந்த மதுரை அரியணைக்குக் குந்துமணிப் பொன்னுக்கு உரிமை கொண்டாட உரிமை இல்லாதவர்கள். அந்தஸ்திலும் கடை மட்டத்தில் இருப்பவர்கள்.

புத்தியும் வீரமும் மட்டும்தான் நம் பலம். எனவே அதைக் கொண்டு பேசும்போது மயக்கங்களுக்கு இடமின்றிச் சிந்தித்துப் பேசினால்தானே சரியான வழி புலப்படும்."

"முடிவாக என்ன சொல்கிறாய்?"

"யார் செய்த புண்ணியமோ உங்களுக்கு இப்பொழுது இளையவர் முத்துலிங்க நாயக்கர் கிடைத்திருக்கிறார். அவருக்குப் பின்னால் நின்றுகொண்டு செயல்படுவதுதான் ஒரே வழி. இதற்கு எதிராக யாராவது வந்தால் போராடித்தான் தீரவேண்டும்."

— ருஸ்தம்கானைச் சைய்யும் தெளிவுபடுத்தப் பார்த்த அதேசமயத்தில் மதுரையம்பதியை விட்டு இரண்டு புரவிகள் ராமநாதபுரம் நோக்கிச் சீறிக்கொண்டு கிளம்பியிருந்தன. அதன் மேல் தளவாய் கோவிந்தப்பையாவும், குமாரபிள்ளையும் இருந்தனர். அவர்களை வழியனுப்பி வைத்தவராகத் திரும்பிக் கொண்டிருந்தார் தளவாய் வெங்கடகிருஷ்ணப்பன்.

அவர்கள்மேல் கண்ணாய் இருக்கும் சைய்யூபின் ஒற்றல் ஒருவன் இருவரின் புறப்பாட்டையும், தளவாயின் வழி யனுப்புதலையும் முதற் காரியமாகக் கூறும்பொருட்டு அரண் மனை நோக்கி விரைய ஆரம்பித்தான்.

## 8

‘வீரம் மிக்க மறவர்கள் தங்கள் குலச் சின்னமாகவும் குலத்தின் சிறப்புக் கருவியாகவும் ‘வளரி’ எனப்படும் வளை தடியைக் கொண்டிருந்தனர். இவ்வளரி ‘குணில்’ என்றும், ‘வளை குணில்’ என்றும், ‘வளை தடி’ என்றும் குறிக்கப் பெறும்.

இக்கருவி பிறைச்சந்திரன் போன்ற வடிவினை உடையது. தாக்கியபின் எய்தவரிடமே திரும்ப வரக்கூடிய அதிசயத் தன்மையை உடையது.

இச் சிறப்பு மிக்க ஆயுதம் இராமன் கையில் இருந்த சக்கரத்தில் பாதிப் பகுதி என்றும், இராம பெருமானால் சேதுபதிகட்கு அளிக்கப்பட்டது என்றும் கர்ணபரம்பரைக் கதை கூறுகிறது.

இதைப் போரிடவும், வேட்டைக்குக் கூட சேதுபதியரசர்கள் பயன்படுத்தினர். இதில் பல மாதிரிகள் இராமநாதபுரம் தொல் பொருள் காட்சியகத்தில் உள்ளன.

மூவேந்தர்கள் சின்னம் புலி, வில், மீன் என்றால் சேதுபதிகள் வளரியைத் தங்கள் சின்னமாக மேருவில் பொறித்தனர் என்கிறது செப்பேடுகள்!

— ‘சேதுபதிகள் செப்பேடுகள்’ நூலில்
புலவர் செ. இராசு



அரண்மனை நோக்கிச் செல்லும் அவனுக்குப் போதாத காலம் போலும். அவன் ஏறி அமர்ந்து விரட்டிய புரவி சண்டித் தனம் செய்து அவனது விரட்டலுக்குப் பணிய மறுத்துக் கனைத்தது.

சப்தம் வெங்கடகிருஷ்ணப்பர் காது வரைக்கும் கேட்டது. அவன் புரவியோடு மல்லுக் கட்டிக் கொண்டிருந்தான். மிதியடி தரித்த குதிங்கால் பாகம் பின் தொடையின் மென்மை யான இடத்தில் அதிகபட்சம் உதைத்து அந்தப் புரவிக்கு வேகத்தை உண்டாக்கப் பார்த்தது.

வெங்கடகிருஷ்ணப்பர் அவனைப் பார்த்துவிட்டு விக்கித்துப் போனார். அவனது தாடியும், பாகையும், மேலாடை யும் எல்லாமே அவன் ருஸ்தும்கானின் கூட்டத்தவன் என்பதை க்ஷணத்துக்கும் குறைவான காலகட்டத்தில் சொல்லிவிட்டது.

அவனும் வெங்கடகிருஷ்ணப்பர் தன்னை உற்று நோக்கு வதைப் பார்த்துவிட்டுப் பதறப்படத் தொடங்கினான். இனிக் குதிரை மேல் ஏறிப் பயணம் செய்ய முடியாது. அவசரத்தில் லாயத்தில் இருந்த குதிரை ஒன்றில் ஏறி வந்தது மகா தவறு என்பது போல் உணர்ந்தவன் குதிரையினின்றும் இறங்கித் துளியும் ஆளரவமில்லாத அந்த இடத்தை விட்டு ஓடத் தொடங்கினான்.

வெங்கடகிருஷ்ணப்பர் புரிந்து கொண்டார். தான் ஏறி வந்த புரவியை அவனை நோக்கிச் செலுத்தினார். நூறு தப்படிக்குள் அது அவன் முன் இருகால்களைத் தூக்கியபடி நின்று அவனை அரட்டியது.

வெங்கடகிருஷ்ணப்பர் கீழிறங்கினார். அவன் உடனே கட்டாரியை இடையில் இருந்து உருவி மோதலுக்குத் தயாரானான்.

“வேண்டாம் அப்பனே இந்த விளையாட்டு. நான் வாளை எடுத்தால் ஒரு உயிரைக் குடிக்காமல் அதை உறையில் போடுவ தில்லை” என்று கூறிய வெங்கடகிருஷ்ணப்பர் அவனைக்

கையும் களவுமாகப் பிடிக்கத் தயாரானார். பக்கமாய் சட்டித் திரி விளக்கொன்று வேப்பெண்ணெய் வாசத்தோடு அடக்கமாய் ஒளி சிந்திக் கொண்டிருந்தது. அவன் நெடுநேரம் அப்படியும் இப்படியுமாகப் போக்குக் காட்டிவிட்டு ஒரே குத்தாகக் குத்த வெங்கடகிருஷ்ணப்பர் மேல் பாய்ந்தான். மதயானையையே தொட்டியில் இழுத்துக் கட்டிய வீரரான வெங்கடகிருஷ்ணப்பர் ஒரு பூச்சியைப் போல அவனைப் பிடித்துத் தூக்கிப் போட்டார். அவன் கட்டாரியையும் கையை வளைத்துப் பறித்தவர், துளி கூட யோசிக்காமல் அதை அப்படியே வளைத்துத் திருப்பி அவன் மார்பில் பாய்ச்சினார். அவன் அப்படியே சுருண்டு விழுந்தான். உயிர் போவேனா என்று அடம் பிடித்தது.

"ஒற்று வேலையா பார்க்கிறாய்...?" என்று கறுவிய வெங்கடகிருஷ்ணப்பர் அவனை அப்படியே விட்டுவிட்டுப் போனால் அடிபட்ட பாம்புபோலப் பிழைத்தாலும் பிழைத்துக் கொள்வான் என்று எண்ணிச் சுற்றும் முற்றும் பார்க்க வைக்கோல் படப்பு ஒன்று சற்றுத் தொலைவில் தெரிந்தது. அதை நெருங்கிப் பத்துப் பதினைந்து முறுக்குக் கட்டுகளைக் கொண்டுவந்து அவன் மேலே போட்டுச் சட்டித் திரி விளக்கையும் தூக்கி அதன் மேல் எரியும் திரியோடு போட்டார். அது ஆவேசத்தோடு பற்றிக் கொண்டது.

**அ**டக்கமாக எரிந்து கொண்டிருந்தது அந்தக் கண்ணாடி லாந்தல் விளக்கு. லாந்தல் கண்ணாடி மேல் ஓவியம் தீட்டியிருந்ததில் அந்த ஓவியம் ஒளிப் புனலுக்கு நடுவே பளிச்சென்று தெரிய அதையே பார்த்தபடி முட்டிக்கால் தூக்கி அமர்ந்திருந்தாள் காதலி நாச்சி. கிழவனின் இரண்டாவது தர்மபத்தினி!

நாற்பது வயதாகப் போகிறது என்றால் யாரும் நம்ப மாட்டார்கள். அத்தனை கட்டான உடல்வாகு! அந்த ராமேஸ்வரத்து ஈசனின் பத்தினியான பர்வதவர்த்தினித் தாயே செந்



தமிழ்ப் பெயரில் மலை வளர் காதலியாகிட அந்தப் பெயரில் மயங்கி அதையே நாமகரணமாகக் கொண்டிருந்த காதலி நாச்சியை, ஆயி என்றுதான் செல்லமாக விளிக்கும் மறவர் குலப் பெண்களின் நாக்கு! 'காதலி ஆயி' என்று கூறச் சிரமப் பட்டுச் சிரமப்பட்டே அதை நாளடைவில் காத்தாயி என்று ஆக்கிவிட்டது. ஆகக் கூடி அந்தச் செப்புச் சிற்பத்திற்கு இரட்டைப் பெயர்கள். ஒன்று காதலி– இன்னொன்று காத்தாயி! கிழவன் மட்டும் எப்பொழுதும் காதலி என்றுதான் கூப்பிடுவார்.

கூப்பிடும் விதமே ஒருவித ராகத்தோடு வேறு இருக்கும்.

"காதலி– காதலி–" என்று அந்தக் காதலியின் வீடு தேடி வந்துவிட்டால் விடிய விடிய ஸ்ருங்கார முனகல்தான்–

கிழவன் வரும்முன்வரை, 'வந்தால் உடன்படக் கூடாது' என்று ஒருவித வீம்பு அவளுக்குள் இருக்கும். ஆனால் வந்து விட்டாலோ நெருப்பு நெருங்கிய மெழுகுதான் அவள். உருகிப் பெருகி ஒழுகித் தீருமே அது? ஆனாலும் மீண்டும் மீண்டும் அந்த வைராக்கியம் தலை தூக்கி விடுகிறது.

எதனால்?

கிழவனுக்குத் தான் மட்டுமே பத்தினியில்லை, ராமநாத புரத்துக்குள் வீதிக்கு ஒருத்தி இருக்கிறாள் என்பதாலா? சோழ மண்டலத்துக் கள்ளர் தலைவர் இராயத் தொண்டைமானுக்கே மகளாக இருந்தும் முதலிடம் பெற முடியாமல் இரண்டாவது இடம் கிடைத்திருக்கிறதே அதற்காகவா?

இல்லை, அரசியல் முடிவுகளைப் பேசி ஆலோசியாமல் காமப் பங்கீட்டுக்காக மட்டுமே தன்னை நோக்கி வருகிறார் மன்னர் என்பதாலா? உளைந்து சளைந்து களைத்துப் போய் இருக்கிறது அவள் மனது.

'வரட்டும் இன்று– தொடவே விடப் போவதில்லை கடவுளே. அவரைப் பார்க்கும் போது கோபப்படும் வல்லமையைத் தா– அவர் தீண்டினாலும் உருகாத உத்வேகம் தா–

அந்த நேரத்து மகிழ்ச்சிக்காக நான் என் விலாசத்தையே அவரிடம் தொலைத்து விடுகிறேன். அவருக்கு நான் உடல் சுகத்தைத் தாண்டியும் உதவ வேண்டும்.

இப்பொழுது கூட அவர் மதுரைக்கு உதவப் போவதாகக் கேள்விப்பட்டேன். கூடாது- இந்த மதுரை நாயக்கர்களுக்கு வேறு வேலையில்லை. இவர்களுக்குக் கஷ்டம் வரும்போதெல்லாம் நாங்கள் போய் உதவ வேண்டும். அதன் பிறகு 'போன வருடக் கப்பத்தை ஒழுங்காகக் கட்டினாயா? ஏன் கட்டவில்லை?' என்று சித்தாப்பாகக் கேட்பார்கள். இவர்களுக்கு மட்டும் உதவவே கூடாது. வேண்டுமானால் 'இதுதான் சாக்கு' என்று மதுரையை வசப்படுத்திக் கொள்ளச் சொல்ல வேண்டும்.

சேது நாடு என்று தனியே ஒன்று இல்லை. அது பாண்டி நாட்டோடு சேர்ந்த ஒன்றே என்று கூறி நம் வளரிக் கொடியைக் கிழித்துப்போட முயன்றவர்கள்தானே இந்த நாயக்கர்கள். நீங்கள் சொன்னபடி சேது நாடும் மதுரையும் ஒன்றாகி விட்டது என்று கூறி அதை வசப்படுத்திக் கொள்ளச் சொல்ல வேண்டும். அப்பொழுது கூட அதைப் பாண்டிய நாடு என்று கூறக் கூடாது- சேது நாடு என்றுதான் கூற வேண்டும்.

அந்த மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் பறக்கும் மீன் கொடியோடு வளரிக் கொடியையும் ஏற்ற வேண்டும்.

வரட்டும் இன்று அவர்-

இதையெல்லாம் கூறி அதன்படியே அவரைச் செயல்படுத்தவும் வைக்கிறேன். மூத்தவள் செவத்தா 'யுத்தத்துக்குப் போகாதே' என்று மூக்கைச் சிந்துவாள். மூன்றாமவள் அழகம்மையோ 'நானும் உடன் வரவா' என்று கேட்பாள். அதன் பிறகுள்ள மற்றவர்கள் எல்லாம் இவரைக் கண்டாலே 'மண்டி போட்டு ஸ்தோத்திரம் சொல்லுகின்றவர்கள்தானே? தங்களுக்குத் தாங்களே தாலியைக் கட்டிக் கொண்டு இவரைப் புருஷனாக வரித்துக் கொண்டவர்கள்தானே?'



— காத்தாயியாகிய காதலி முட்டிக் காலிட்டு அமர்ந்த நிலையில் ஏக சிந்தனையிலும் கேள்வியிலும் இருந்தாள்.

'இந்த உலகத்திலேயே மிக அதிக சக்களத்திகளை உடைய ஒரே பெண்ணாக நான் மட்டும்தான் இருப்பேன். என் பெயர் எதற்காக இல்லாவிட்டாலும் இதற்காக வரலாற்றில் இடம் பெற்றே தீரும்' என்று எண்ணியவள் அதற்குக் காரணமான அந்தச் சம்பவத்தையும் எண்ணிப் பார்க்கிறாள்.

இந்த நிமிடம் கிழவனின் தர்மபத்தினிகள் என்று சொல்லிக் கொள்வோர் எண்ணிக்கை நாற்பதைத் தாண்டி விட்டது. இதில் பலர் ஒரு மாந்திரீக உபாசகனால் கடத்தப்பட்டுக் கிழவன் அவர்களை மீட்க நேர்ந்ததால் தங்களை மீட்ட கிழவனையே மணாளனாக வரித்துக் கொண்டவர்கள். சிலரோ பிடிக்காத மாப்பிள்ளையிடமிருந்து தப்பிக்க ஆலயத்துக்குச் சென்று அரசும் ஆண்டவனும் ஒன்று என்ற நிலைப்பாட்டிற்கு ஏற்பத் தங்களுக்குத் தாங்களே தாலி கட்டிக் கொண்டு, 'இந்த வினாடி நாங்கள் இந்த நாட்டு அரசனின் தர்மபத்தினிகள்; எங்களை மணக்க முயற்சித்தால் தீப் புகுவோம்' என்று மிரட்டியவர்கள். அப்படி அவர்கள் தீப புகுந்தால் அந்தப் பாவம் அரசனைத்தானே சேரும்?

எனவே கிழவனும் அவர்களுக்குத் தனது மனைவியர் அந்தஸ்தைத் தந்து காத்து ரட்சித்தார்-

ஆனாலும் பட்டத்து ராணி என்றால் அது செம்பி நாட்டுக்காரி செவத்தாதான்... அதன் பின் ஆசையாலே வந்து இணைந்தவள்தான் காத்தாயி! அதற்கும் பின் அறிவாலே கவர்ந்து தன் மனத்தில் அள்ளிக் கொண்டவள் அழகம்மை.

(தசரதனுக்கு ஆயிரம் மனைவியர் என்று இதிகாசம் கூறுகிறது. அதன் பிறகு கிழவனுக்குத்தான் எண்ணிக்கையிலடங்காத மனைவியரை வரலாறு காட்டியுள்ளது. இத்தனை மனைவியரை நாள் பார்த்து நேரம் காலம் பார்த்து அவர்

அழைத்து விருந்து வைத்து நிச்சயம் திருமணம் செய்து கொண்டிருக்க வாய்ப்பில்லை.

அதிலும் ராஜ கல்யாணங்கள் லேசுப்பட்டவை அல்ல. அப்படியிருக்க எண்ண இயலா மனைவியர்களே இருந்தார்கள் என்று வரலாறு குறிப்பிடும்போது அந்த உறவுகள் இப்படித் தான் கிளைத்திருக்க முடியும் என்பது என் எண்ணம்.

கிழவன் வரையில் நாற்பதுக்கும் மேலான ஆசைநாயகியர்கள் என்று கூறாமல் மனைவியர் என்றே கூறுவதோடு அவர்கள் பின்னாளில் கிழவனின் சுடலை நெருப்பில் விழுந்து தங்களையும் மாய்த்துக் கொண்ட பத்தினித்தனம் அந்த நெருப்பை விடச் சூடானது மட்டுமல்ல— களங்கம் காண இயலாததும் கூட)

காத்தாயி காத்திருக்கும்போதெல்லாம் இப்படித்தான் கேள்விகளாகக் கேட்டுக் கொண்டு விடை தேடுபவள்.

அமர்ந்தது போதும் என்று எழுந்து சாளரம் அருகில் போய் நின்று வெளியே பார்க்கத் தொடங்கினாள். வெளி வீதி அந்த இராப் போதிலும் வாகனப் போக்குவரத்து மிகுந்து தெரிந்தது.

சில இஸ்லாமியர்கள் தங்கள் வணிகச் சரக்கை வண்டியில் வைத்து எடுத்துச் சென்றபடி இருந்தனர். இராமநாதபுரத்தில் பட்டும் கண்ணாடியும் சணலும் இரும்பும் சரளமாகக் கிடைக்கப் பெரிய காரணகர்த்தர்கள்!

கடல் வாணிபத்திலும் கரை கண்டவர்கள். மதுரைக்கே ஜவ்வாது, அத்தர் என்கிற வாசனைத் திரவியங்களில் இருந்து மிளகு, தேக்கு எனப் பல விஷயங்களை இங்கிருந்துதானே அனுப்புகிறார்கள். எல்லாம் கிழவன் காட்டும் இணக்கத்தால் வந்தது என்றால் ஏது மிகை?

கிழவன் இந்த மண்ணில் குடியேறும் முன்வரை வெறும் பனைக்காடாகக் கிடந்த ஊர்தானே இதுவும்? இன்று



சாம்ராஜ்யத்தின் எல்லா லட்சணங்களோடும் திகழ்ந்தபடி இருக்கிறது.

காத்தாயிடம் ஒரே கர்வப் பெருக்கு.

அப்போது அவள் பார்த்துக் கொண்டிருந்த வீதியில் ஒரு பிச்சைக்காரனின் பிரவேசம். 'தாயே_ பிச்சை போடுங்கள்_' என்கிற ஈனக் குரல் வேறு—

'அடக் கடவுளே! இப்பொழுதுதானே கர்வக் கிணற்றில் மூழ்கினோம். அதற்குள் ஒரு பிச்சைக்காரன் தோன்றிக் காலைப் பிடித்து இழுக்கிறானே_?

இந்த மண்ணில் சத்திரம் சாவடிகளுக்கா பஞ்சம். அன்னமாபட்டினம் என்று கந்தசாமிப் புலவர் பெரிதாகப் பாராட்டும் இந்தப் பட்டினத்திலா ஒருவன் பிச்சையெடுப்பது?'

காதலி களை இழந்தாள். சொல் பிழன்றாள். கேள்விகளை எல்லாம் உதறிவிட்டுத் தன் ஏகாந்த இல்லத்தின் வாசலுக்கே சென்று அவனையே கேட்டுவிடுவது என்று சேடியர்கள் பார்த்து வியக்க வாயிலுக்கு ஓடினாள்.

அவன் அவளுக்காகவே காத்திருப்பது போல, "அம்மா தாயே_" என்றான். இதற்குள் சில வாயிலர்கள் ஓடி வந்து அவனைத் துரத்த முயன்றனர். காத்தாயி அவர்களை முறைத்தாள். பின் அந்தப் பிச்சைக்காரனை உள்ளேயே அழைத்தாள். அவனும், "ஐயோ பசி காதை அடைக்கிறதே_" என்று சுருதி கூட்டினான்.

"கொஞ்சம் பொறுத்துக் கொள்" என்று வாழை இலையைப் போட்டே சோறிட ஏற்பாடு செய்தாள். இதையெல்லாம் செய்திட ஒரு கூட்டமே இருந்தபோதிலும் அவளே அதைச் செய்ததுதான் ஆச்சரியம்.

அந்தப் பிச்சைக்காரனும் அள்ளி அள்ளி விழுங்கத் தொடங்கினான்.

"அடேயப்பா— என்ன பசி— என்ன பசி—! ஆமா— இந்த இராமநாதபுரப் பட்டணத்துல இல்லாத சத்திரமா சாவடியா? ஏன் சாமி இப்படிப் பிச்சை எடுக்கறீங்க?" என்று விசிறிய படியே கரிசனமாகக் கேட்டாள்.

அவனிடமிருந்து விசித்திரமான பதில்.

"எத்தனை பேருக்கு இதுபோல பிச்சைக்காரனை வீட்டுக்கே அழைத்துச் சோறு போடும் பெரிய மனதிருக்கிறது என்று பார்க்கத்தான்—"

அந்தக் குரல்— அந்தக் குரல்—!

அவள் அலமலப்போடு பார்க்க அந்தப் பிச்சைக்காரனும் புன்னகையோடு வேடம் கலைத்தான்.

— அட! கிழவன்!

"நீங்களா...?"

"நானேதான்."

"என்ன கூத்து இது?"

"கூத்துதான்..."— கிழவனின் உதடு சுழித்துச் சிரிக்க காத்தாயியின் கோபம் செந்தூரக் குழம்பில் தூக்கிப் போட்டது போல அவள் முகத்தைச் சிவக்க விட்டது.

அது பள்ளியறையில் முறைப்போடு தாம்பூலம் மடித்துக் கொடுக்கும் வரைக்கும் கூடக் குறையவில்லை.

"காதலி— கோபமா—?"

"பின்ன... இராஜ மகாராஜா நீங்க... இப்படியா பிச்சைக் காரன் வேஷமெல்லாம் போட்றது?"

"அது ராஜலட்சணங்களில் ஒன்று."

"சரி என்ன பலன்?"

"அதை உனக்கு எப்படிப் புரியவைப்பது... ஊரின் தர்மத்தின் அளவு தெரிந்தது. என் ஊரில் பிச்சைக்காரனா



என்று எத்தனை பேர் கேள்வி கேட்பார்கள் என்றும் பார்த்தேன்?"

"கேட்டார்களா?"

"நிறைய— அனைத்திலும் உன் செயல்தான் எனக்குப் பரம திருப்தியைத் தந்தது. ராஜபத்தினி என்கிற செருக்கே இல்லாமல் ஒரு பிச்சைக்காரனுக்குச் சோறு போட்டாயே— அதுவும் உன் கையால்..."

— கிழவன் அவளது மருதாணிக் கரத்தைப் பற்றி அப்படியே முழங்கை வரை வருடவும் அவள் சிலிர்த்துப் போனாள்.

"போதும் தொடாதீங்க... ஆமா ஏதேதோ கேள்விப் பட்டேனே...?"— குழையத் தொடங்கினாள்.

"என்னவென்று?"

"மதுரை நாயக்கர்கள் உதவி கேட்டிருக்காங்களாமே?"

"போச்சுடா— செவந்தானைத் தொடர்ந்து இப்போது நீயா? சரி— என்ன சொல்ல விரும்புகிறாய்?"

"ஆமா... என் விருப்பப்படிதான் எல்லாம் நடக்கு தாக்கும்?"

"நியாயமான எல்லோரின் விருப்பப்படியும் நான் நடப்பவன்."

"சரி... அப்படியானால் அந்த மதுரையை நீங்கள் கைப் பற்ற இதுதான் தருணம்."

"சரி... கைப்பற்றிய பிறகு—"

"நீங்கதான் அதன் பேரரசர்—"

"இந்த இராமநாதபுரத்துக்கு—"

"இதற்கும்தான். வேண்டுமானால் இதற்கு என் சகோதரனை—"

"அவசரப்படாதே! நீ எங்கே வருகிறாய் என்று எனக்குத் தெரிகிறது. மதுரையில் நடந்து கொண்டிருப்பது ஒரு துரோகம். பச்சைத் துரோகம். அதற்குப் பரிகாரம் தேடத்தான் நாயக்கர்கள் என் உதவி கேட்டுள்ளனர். அதுவும் கூட நேரடியாக அல்ல... அவர்களின் தளவாய்கள் விருப்பம் இது.

என் பேரில் உள்ள ஒருவித சத்யமான நம்பிக்கைதான் இதற்குக் காரணம். ஒரு துரோகத்தை நான் அழிப்பேன் என்று நம்புகின்றவர்களுக்கு நான் துரோகம் செய்யலாமா? நீயே சொல்..."

— கிழவனின் மடக்கலில் அந்த மயில் வழக்கம்போல் வாயை மூடிக் கொண்டது.

"என்றைக்கு நான் உங்களை ஜெயித்திருக்கிறேன், இன்று ஜெயிக்க..." என்று கேட்டு மார்பில் முகம் புதைத்தாள். ரகசியக் குரலில் பேசத் தொடங்கினாள்.

"சரி... எப்பொழுது யுத்தம்?"

"அதைப்பற்றித் திட்டமிடத்தான் தளவாய் கோவிந்தப்பய்யாவும், குமாரபிள்ளை என்பவரும் நாளை என்னைத் திருப்புல்லாணியில் சந்திக்க உள்ளார்கள்..."

"ஓ... நாளை பங்குனி உத்திரத் தேர்த்திருவிழாவோ?"

"ஆமாம்... நான் வடம் பிடிக்கும் போது நீயும் உடன் இருக்க வேண்டும்."

"இத்தனைப் பணிக்கு நடுவிலும் அங்கு வந்து வடம் பிடிச்சு நீங்க தேர் இழுக்கத்தான் வேண்டுமா?"

"கோயிலில் குந்தியிருக்கும் பெருமாளே வீதிக்கு வந்து அருள்பாலிக்கும் போது, அரசன் நான் கண்டைக்காய்... அது மட்டுமல்ல. என்னைப் போன்ற அரசர்கள் பொது நிகழ்ச்சிகளுக்குக் கட்டாயம் செல்ல வேண்டும். ஜனக்கட்டின் திரட்சி, ஒற்றுமை, அனைத்தையும் எடையிட அது ஒரு அற்புதமான சந்தர்ப்பம்...



அத்துடன் திருப்புல்லாணிப் பெருமாளையும் நீ சாதாரணமாகக் கருதி விடாதே. மகாபாரதத்தில் கண்ணனாய் வந்து அவர் போதித்ததும், சாதித்ததும் என் நெஞ்சில் நிலைத்து நின்றபடி உள்ளது.

இந்த மட்டில் நான் ராமனை விடக் கண்ணனைத்தான் அதிகம் நேசிக்கிறேன்..."

"ஆமாமாம்... அவனைப் போலவே ராசலீலையிலும், பொட்டச்சி கொஞ்சலையும்னு சேர்த்துக்குங்க..."

— காத்தாயி வெட்கத்தோடு இழைந்து கொடுக்க அவளை இழுத்து அணைத்தன கிழவனின் உருக்குக் கரங்கள். வழக்கம் போல அவளும் நினைத்து வைத்திருந்ததெல்லாம் நேர் மாறாக உருகிடத் தொடங்கினாள்.

## 9

*'சீத சாயுத்திய வித்தியா விநோதன் அஷ்டதிக்கு மனோ பயங்கரன் மதுரையார் மானங்காத்தான் தொண்டியந்துறை காவலன் துரக ரேவந்தன் வைகை வளநாடன் வன்னியாட்டந் தவிழ்த்தான் அந்தம்பரகண்டன் சாவிக்காறர்கள் மிண்டன் ஸ்வாமித்துரோகியன் கண்டன் பஞ்சவன்ன ராய ராவுத்தன் பனுக்கு தளங்கண்டு தத்தளிப்பார் மிண்டன்...'*

*— 'சேதுபதி மன்னர் செப்பேடுகள்' - நூலிலிருந்து*

**'காதலி நாச்சி'** என்னும் காத்தாயி, இராமன், கண்ணன் என்று புராண உதாரணங்களைக் காட்டிக் கிழவனோடு இணங்கிக் கிறங்கும் சமயம் சாளரம் வழியே பலமாகக் காற்று வீசத் தொடங்கிற்று.

திரைச்சீலைகள் ஆவி உடல்போல ஆட்டம் காணத் தொடங்கின. சிலுசிலுவென்ற காற்று வேறு. காற்றின் குளுகுளுப்பை ரசித்தபடி, சயனக்கட்டிலில் காலை நீட்டிய படி, பரந்த மார்பையும் விரித்து 'ஆஹா' என்று சிலாகித்தார் கிழவன். காத்தாயி எழுந்து சென்று போராட்டம் போடும் அந்தத் திரைச்சீலைகளைக் கட்டிப் போட முயன்றாள். அப்படிச் செய்யும் சமயத்தில் அவளது கைவளையல்களின் அசைவில் இதமான ஒரு இசைச் சப்தம்.

ஒரு பக்கம் தென்றல்— மறுபக்கம் காதலியின் கை வளையல் சப்தம்— இரவுப் பொழுதின் ஏகாந்தத்துக்கு இவை போதாதா?

ஆனால் அவை அத்தனையும் தவிடு பொடியாகி விட்டதைப் போல ஒரு க்ஷணம் விடைத்து நின்றாள் காத்தாயி. சாளரத்துக்கு வெளியே தொலைவில் தெரிந்த இராமநாத புரத்து வீதிச் சாலை மேல் ஒருவன் இரு கைகளை அகல விரித்து வானம் பார்த்தபடிக் கத்திக் கொண்டிருந்தான்.

"அருமை இயேசுவே, என்னை மன்னியுங்கள். எங்களுக் காகச் சிலுவை சுமந்த கருணாமூர்த்தியே... உங்களை நான் சரண் புகுந்து விட்டேன். உங்கள் நாமத்தை ஜெபிக்கத் தொடங்கிவிட்டேன். என்னைப் பிடித்திருக்கும் சாத்தான்கள் ஓடக்கடவதாக. உங்கள் திருநாமத்தாலே நான் சுத்திகரிக்கப் படுகிறேன். நீங்கள் சிந்திய ரத்தம் என் பாவங்களைப் போக்கட்டும்..."

— கிழவன் காதிலும் அது விழுந்ததோ என்னவோ எழுந்து வந்து சாளரம் வழியே பார்க்கத் தொடங்கினார். காத்தாயியின் பார்வை அவரைக் கேள்வியுடன் ஊடுருவியது.

"என்ன காத்தாயி?"

"ஒன்றுமில்லை..."

"அப்படியானால் நிறைய இருக்கிறது— உம் மனம் விடு."



"பார்த்தீர்களா? வெளியே கத்திக் கொண்டு சென்ற வனை—"

"அது அவன் உரிமை. அதற்கென்ன?"

"கடல் வழியாகப் புகுந்த மிலேச்சர்கள் நம்மைப் பாதிக்கத் தொடங்கிவிட்டது நல்லா தெரியுது."

"எதைப் பாதிப்பு என்கிறாய்?"

"இங்கே என்ன தெய்வங்களுக்கா பஞ்சம்? ஒரு புது கடவுள், அதற்கு வழிபாடு, இதெல்லாம் எதற்கு?"

"மனித சமூகத்திற்குத் துணை புரிவதற்காக ஒரு கடவுளுக்கு இருகடவுள் வருவதில் தவறில்லை காதலி. சாத்தான்களுக்குத்தான் இடம் தந்துவிடக் கூடாது."

"பார்த்து— பிறகு மனிதர்களைவிடக் கடவுளர்கள்தான் அதிகம் இருப்பாங்க."

"ஆஹா... அப்படி ஒரு உலகம் உருவாக வேண்டும் என்பதுதானே சமுதாயத் தலைவர்களின் ஆசை."

"உங்களோடு பேசி ஜெயிக்க முடியாது. எதற்கும் ஒரு விடை தயாராக இருக்கிறது உங்களிடம்..."

"இல்லை காதலி. விடையில்லாத கேள்விகளைக் கேட்க உனக்குத் தெரியவில்லை என்று சொல்."

"இதற்கும் ஒரு பதிலா?"

"சரி நான் மௌனமாக இருந்து விடுகிறேன்."

"இப்படிச் செயற்கையாக உங்களை மௌனத்தில் இருக்க விட மாட்டேன் நான். பதில் சொல்ல முடியாத கேள்விகள் கேட்க என்னாலும் முடியும்."

"சரி... ஒரே ஒரு கேள்வி கேள் பார்க்கலாம்?"

"என்ன இல்லை என்று உங்கள் உறவினர்களில் ஒருவர் இந்த யேசு சாமிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக் கிறார்?"

– சாத்தாயி அப்படிக் கேட்ட நொடி, கிழவன் முகம் குத்துப்பட்டது போல மாறிப் போனது.

"யார் அது?" என்று கேட்கவும் தயக்கமாக இருந்தது. எது எதற்கெல்லாமோ உளவு பார்க்கத் தெரிந்த தனக்கு இது எப்படித் தெரியாமல் போனது என்று பதிலுக்கு மடக்குவாள் சாத்தாயி.

எனவே மௌனமாக இருந்துவிடுவதே சிறந்தது என்று அவள் எதிர்பார்த்த பதில் கூற முடியாத அந்த மௌனத்தில் கரையத் தொடங்கினார் கிழவன்.

– சாத்தாயி அதை மிகவும் ரசித்தாள்.

"தெரியும். எனக்கு நன்றாகத் தெரியும், உங்களால் இந்த ஒரு கேள்விக்கு மட்டும் விடை கூற முடியாதென்று"– என்று கைவளை குலுங்கச் சிரித்தாள்.

அது 'கிழவா– உனக்குத் தெரியாத ரகசியங்களும் இந்த மண்ணில் உண்டு' என்று கெக்கெலிப்பதுபோல ஒலிப்பதாகவே தோன்றியது!

அடேயப்பா–

என்ன கூட்டம்.. என்ன கூட்டம்!

சேது நாட்டின் ஒரு குக்கிராமவாசிகூட மிச்சமின்றித் திருப்புல்லாணிக்கு ஏகிவிட்டனரா?

பெருமாளும் ஓங்கி உயர்ந்த தேரில் பட்டுசுதூமாய் வட்டச் சுற்றோடு திரைச்சீலை ஓவியத் திருக்காட்சிப் படுதாக்களோடு, வாழை, செந்நெல், கமுகு, பாளை, தாழம் என்கிற மங்கலக் கட்டோடு திமுதிமுவென்று திருவீதி உலாவரத் தொடங்கி விட்டார்.

கோவிந்த நாமம் முடிந்த மட்டும் விண்ணில் உயரப் போகிறது. அதன் எதிரொலியாக வளைத்துக் கட்டி வட்டமிடும் பருந்துகள் திசைக்கு ஒன்றாகச் சிதறிப் பிரிகின்றன.



கூடச் சேர்ந்து ஒலிக்கிறது வடபாளத்தாரின் மத்தள முரசம். "தொம்.. தொம்.. தொம்.. தொம்.." கூட்டத்தில் திருமண் ஸ்ரீசூரணம் தரித்த வைணவர்கள் மிகுதியாகத் தெரிகின்றார்கள். இவர்கள் ராமேஸ்வரம் போய்க் கடலில் மூழ்காதவர்கள். எங்களுக்கு ராமேஸ்வரம் இந்தத் திருப்புல்லாணி தான்– இங்கிருக்கும் தர்ப சயனப் பெருமாள்தான் என்று தனி வழி பார்த்துக் கொண்டு விட்டவர்கள்.

'மனிதனுக்கு மதமே ஒரு தனி வழி– அதிலும் பல தனித் தனி வழிகள்– கிளை வழிகளாக! அதற்குச் சைவம், வைணவம், சமணம், இசுலாமியம், கிறிஸ்தவம் என்று அடையாளப் பெயர்கள்.

ஏன் ஒரு வழியாகப் போகப் பிடிக்க மாட்டேன் என்கிறது? ஏன் ஒன்றை மட்டும் ஒப்புக் கொள்ள மறுக்கிறது இந்த மனம்? ஏன் தான் சார்ந்த விஷயம்தான் உன்னதமானது என்று எண்ணுகிறது?

இதுதான் மனத்தின் இயல்பா?

'த்வைதம்'– என்று உச்சிக்குப் போனார் ஒருவர். அதைப் பின்னாளில் ஒருவர் மறுதலித்து 'அத்வைதம்' என்று அவரும் இன்னொரு உச்சிக்குப் போனார். 'விசிஷ்டாத்வைதம்' என்று பின்னர் அதிலும் மேலுமொரு கிளை– எது சரி? எல்லாமே சரியா–? எல்லாம் புத்தியின் பீத்தல்களோ?'

கல் மண்டபம் ஒன்றில் திருத்தேர் வடம் பிடித்து அதனை ஊர் உலாவிற்கு அனுப்பி விட்டு வந்து அமர்ந்திருக்கும் கிழவனின் மனத்தில்தான் இப்படி எல்லாம் கேள்விகள்.

எத்தனைக் கேள்விகள் மனத்துக்குள் எழும்பினாலும் அது அன்றாட ஆசாரங்களைப் பாதிக்காதபடிப் பார்த்துக் கொள்வது கிழவனின் பலங்களில் ஒன்றோ?

– ஒட்டி நின்று கொண்டிருக்கிறான் சோளகை சேருவைக் காரன்.

பொது இடங்களுக்குக் கிழவன் வந்துவிட்டால் தன்னையே ஒரு கவசமாகக் கிழவனுக்கு அணிவித்துக் கூடவே காத்துக் கிடப்பவன்.

அம்பலக்காரன் அப்படி இல்லை.

வீரர்களோடு கூட்டத்தில் கலந்து அவர்களை இயக்கிக் கொண்டிருக்கிறான். ஒரு ஆச்சரியம்— சீதக்காதி கூட இந்த நிகழ்ச்சிக்கு வந்திருப்பதுதான்!

கிழவன் அழைத்ததால் வந்தாரா, இல்லை பொதுமைக் குணத்தோடு ஒரு அமைச்சராக ஜன சமுத்ரம் கண்டு அதன் க்ஷேம லாபங்களுக்காக வந்தாரா என்பது தெரியவில்லை.

இப்படித்தான் கிழவனுக்கு முன்பு அரியணையில் இருந்த திருமலை ரகுநாத சேதுபதியும் தேரோட்டத்துக்குத் தவறாமல் வந்துவிடுவார்.

தேரின் ஓட்டம் ஒரு பாடமே அவருக்கு நிகழ்த்துவதாகத் தோன்றும்.

'எத்தனை பெரியது இந்தத் தேர்! ஆனால் ஜனக்கூட்டத்தின் சக்தியின் வசப்பட்டு என்னமாய் ஓடி வருகிறது...?

பெரிதென்று எதையும் எண்ணிவிடாதே.

ஒன்றுபட்டால் அது சிறிதாகி ஓடிவந்துவிடும்.

ஒன்றுபடுவது என்பதும் லேசுப்பட்ட விஷயமில்லை. அதற்கு இப்படிப் பெரிதாக ஒரு காரணம் வேண்டும்.

காரணம் பெரிதாக இருந்து காரியமும் பெரிதாக இருந்து விட்டால் தெய்வம் கூடத் தேடிவரும்...

ஊருக்குள் கோயில் இருப்பது எல்லா நாளிலும் என்றால், ஊரே கோவிலுக்குள் இருப்பது தேரோடும் நாளில்தான்.

— திருமலை ரகுநாத சேதுபதி ஓடிவரும் தேரின் நிமித்தம் சிந்தித்துப் பார்த்தவைதான் இவை எல்லாம்.



அந்தச் சிந்தனைகளோடு சிந்தனையாகத் தேரினைப் பார்த்தபடியே அவர் ஆவி பிரிந்ததும் ஒரு தேர்த்திருவிழா நாளில்தான்...

சேதுபதிகளுக்குத் தேர்த்திருவிழா என்பதுதான் ஆத்ம பலம் பெருகும் நாளோ?

அதனால்தான் கிழவன் இந்த நாளில் மதுரை மீதான போருக்கு நாள் குறிக்கத் தளவாய் கோவிந்தப்பையாவையும், குமாரபிள்ளையையும் அழைத்திருக்கிறாரோ?

ஆம் என்பது போல் இருந்தது அந்தச் சந்திப்பு. உடன், கூர்த்த பார்வையோடு வள்ளல் சீதக்காதி!

கோவிந்தப்பையா கிழவரை மார்போடு கட்டிக் கொண்டு பெருமூச்செறிந்துவிட்டுத்தான் பேசவே தொடங்கினார். குமாரபிள்ளை சற்று ஒதுங்கியே நிற்கலானார். அதுவே அவர் சேது நாட்டு அரசியல் தொடர்புக்குப் புதியவர் என்று சொல்லாமல் சொன்னது.

"கிழவரே நலம்தானே?"

"மிக்க நலம். ஆமாம் என்னாயிற்று சொக்கநாத நாயக்கருக்கு...?"

"போதாத வேளை— அவரது சகோதரர் ரூபத்தில் மதுரைக்கே சோதனையாக வந்துவிட்டது கிழவரே..."

"சகோதரனா எதிரி?"

"இல்லை... அவன் ஒரு சிற்றின்பப் பிரியன். அதை வைத்து அவனைத் தன்வசப்படுத்தி வைத்திருக்கும் ருஸ்தம் கான்தான் எங்கள் முதல் எதிரி..."

"சொக்கநாதர் அரசியலின் ஆழ அகலம் அறிந்தவராயிற்றே...அவரா குதிரைக்காரனிடம் அகப்பட்டுக் கிடக்கிறார்..?"

"கிழவரே... போதாத வேளை என்று ஒன்று வந்துவிட்டால் அது ஒரு மனிதனை எப்படிச் சாய்க்கும் என்றே கூற முடியாது."

"அது சரி.. உங்கள் வரையில் போதாத வேளை எல்லாம் எப்பொழுதும் உங்களுக்குக் கப்பம் கட்டும் பாளையக்காரர்களுக்குத்தானே.. நீங்கள்தான் பேரரசாயிற்றே..?"

"கிழவரே.. இது தாங்கள் எங்களை இடித்துரைக்க வேண்டிய வேளை இல்லை. எங்களைப் பிடித்து நிறுத்த வேண்டிய வேளை.."

"அது சரி.. ஏன் வேறு யாரையும் போய்ப் பார்க்கத் தோன்றவில்லை?"

"யார் இருக்கிறார்கள்? அப்படியே இருந்தாலும் அவர்களால் அந்தக் குதிரைக்காரனை அடக்க முடியுமா என்பது பெரிய கேள்வி. அவன் மிகத் திட்டமிட்டுத் தன் ஆட்களை, எல்லா அதிகாரம் மிக்க இடத்திலும் நிறுத்தியிருக்கிறான்.

இப்பொழுது இங்கே நாங்கள் உங்களோடு பேச வந்திருப்பதைக்கூட இந்த நொடி மோப்பம் பிடித்திருப்பான்."

"ஒன்று நன்றாகத் தெரிகிறது. மதுரையைப் பொறுத்த மட்டில் அரச லட்சணம் என்பது அந்தப் பீடத்தில் அமருவதால் மட்டும் வந்துவிடுவதில்லை. அது நரித்தனத்தாலேயே தீர்மானமாகிறது."

— கிழவனின் பதில் கோவிந்தப்பையாவைக் கட்டிப் போட்டது. குமாரபிள்ளையோ அதற்குப் பதில் சொல்ல வேண்டும் என்று பிரியப்படுகிறாற போலச் செருமினார்.

"உம்.. சொல்லுங்கள். நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?"— கிழவன் புரிந்துகொண்டதுபோல அவர் பக்கம் திரும்பிக் கேட்டார்.

"இந்தச் சிக்கலில் அந்த ருஸ்தம்கானை வீழ்த்துவது எங்களுக்கு ஒன்றும் பெரிய காரியம் இல்லை. ஆனால் இதனால் டெல்லிவரை பேர் கெட்டுவிடுமோ என்று அஞ்சுகிறோம். அவனுக்கு அந்த அளவு தொடர்பு இருக்கிறது. உங்களுக்குத் தெரியாதது இல்லை. சொக்கநாதர், மக்களிடம்



மதிப்பிழந்து கிடக்கிறார். அதே போல அரண்மனை சகாக்களிடமும் அவருக்கு மதிப்பில்லை. தஞ்சை நாயக்கரின் மகள் மேல் காதல் கொண்டு அவளை மணக்க பல வன்முறைகளையும் கையாண்டதில் நாயக்கர் மகள் வெடிகுண்டு அறைக்குள் புகுந்து கொண்டு அதை வெடிக்கச் செய்து தற்கொலை செய்து கொண்டதை அறியாதார் இல்லை.

இவரது செயலால் வெதும்பி அமைச்சர்களும் இராயசமும், தளவாய்களும், பல தருணங்களில் ஒன்றுபட்டு அவரை வீழ்த்த முனைந்ததையும் அறியாதார் இல்லை. மைசூர்ப் படையெடுப்பிலும் தேவராஜ உடையாரிடம் மதுரை வசம் இருந்த சேலம், கோவையை இழந்தாகிவிட்டது.

எப்படிக் கூட்டிப் பார்த்தாலும் சொக்கநாதர் தேறவில்லை. இதெல்லாம்தான் ருஸ்தம்கானுக்குக் கொம்பு சீவிவிட்டவை. யாருடைய ஆதரவும் கிடைக்கப்போவதில்லை என்கிற தைரியம் தந்தவை. நீங்களும் கூட மதுரைக்கு எதிரி. எனவே உதவ முன் வர மாட்டீர்கள். எனவே அச்சமின்றிச் செயல்பட்டால் போதும்.. அரியணையை வசப்படுத்திக் கொண்டுவிடலாம் என்று திட்டமிட்டுச் செயல்படுத்தி வருகிறான். அதற்கு ஏற்றாற்போல் இருக்கிறது முத்துலிங்க நாயக்கரின் போக்கும்.."

— நீண்ட நெடிய விளக்கமளித்த குமாரபிள்ளையைக் கிழவன், மீசையை நீவியபடிப் பார்த்தார்.

"அதனால்தான் அவனுக்கு இணக்கமாக நடந்து கொண்டால் பெரிய பதவிகளை அடையலாம் என்று உங்கள் கூட்டத்தவர்களும் நினைக்கின்றீர்களோ?"

— அந்தக் கேள்வி குமாரபிள்ளையைக் கொத்தியது.

"சரி.. நான் உதவ முடியாது என்று கூறிவிட்டால்..?"

— கிழவனின் அடுத்த கேள்வி கொத்திய இடத்தில் வலியை உருவாக்கியது.

"சரி உதவுகிறேன் என்றே வைத்துக் கொள்ளுங்கள். ஏற்கெனவே என் வரையில் நீங்கள் துரோகிகள். எனவே உங்கள் நாட்டை நான் எனதாக்கிக் கொண்டுவிட்டால்...?"

— கிழவனின் ஒவ்வொரு கேள்வியும் கோவிந்தப்பையாவையும், குமாரபிள்ளையையும் அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி என்றாக்கி வெறிக்க விட்டது.

"என்ன பார்க்கிறீர்கள்? என் கேள்விக்கான பதிலில்தான் நான் உங்களுக்குச் சம்மதம் தரப் போவது இருக்கிறது..."

— கிழவன் எதற்காக அப்படிக் கேட்டாரோ ஆனால் சீதக்காதி அதுவரை மௌனமாக இருந்தது போதும் என்று வாய் திறந்தார்.

"மன்னிக்க வேண்டும் சேதுபதி- இப்படி நீங்கள் அவர்களை ஆழம் பார்ப்பது துளியும் சரியில்லை. அரசியல் சதுரங்கத்தில் ருஸ்தம்கான் போன்ற மனிதர்கள் மதுரையில் மட்டுமில்லை எங்கேயும் ஜெயித்துவிடக் கூடாது. இவர்கள் மற்ற எவரிடமும் காணாத நிறை நேரான விஷயங்கள் பலவற்றை உங்களிடம் பார்க்கின்றார்கள்- அதனால்தான் பல பாளையக்காரர்கள் சுற்றி இருக்கும் போதிலும், ஏன் அவர்களது சகாக்களும் உறவினர்களுமே தஞ்சையில் இருந்தும் உங்களிடம் உதவி கேட்டு வந்திருக்கின்றனர்.

ருஸ்தம்கானின் சூழ்ச்சியை எல்லாவிதங்களிலும் முறியடிக்க உங்களால் மட்டும்தான் முடியும் என்று நம்பி வந்துள்ளனர். உதவுவது என்று மனதார முடிவெடுத்து விட்ட நிலையில் இவர்களிடம் இப்படிக் கேள்விகள் கேட்பது எதனால் என்று எனக்குப் புரியவில்லை."— சீதக்காதி, கோவிந்தப்பையாவின் மனத்தில் இருப்பதை அப்படியே படிப்பது போலப் பேசியது கேட்டு கோவிந்தப்பையாவே திகைத்துப் போக அதைவிடத் திகைப்பு குமாரபிள்ளைக்கு— "நன்றி வள்ளலே— உங்களைப் போல ஒரு அமைச்சர் கிழவனிடம் இருப்பதை எண்ணி மகிழ்கிறேன். நீங்கள் சொல்லியது அவ்வளவும் நாங்கள்



சொல்ல நினைத்தவை. உங்களுக்கு எப்படி நன்றி கூறுவேன்?"

— குமாரபிள்ளை கைகூப்பித் தொழுத சமயம் தேர்நிலையில் வாண வேடிக்கை நிகழ்வதற்கான அறிகுறிகள் வேட்டுச் சப்தமாய்க் காதில் வந்து விழத் தொடங்கியது.

கிழவன் இனியும் அவர்களைக் கேள்விகளால் குடைய விரும்பாதவராக, "கவலைப்படாதீர்கள். அந்த ருஸ்தம்கானைக் கன்னிவாடி பாளையக்காரரின் புதிய படையைக் கொண்டும் எனது தளபதிகள் சிலரைக் கொண்டும் மட்டுமே விரட்டியடிப்பேன். ஒரு குதிரைக்காரனுக்கு எதிராகச் சேது நாட்டுப் படை திரண்டு போனது என்று நாளைய வரலாறு கூறிவிடக் கூடாது. அந்த சமயம் இது அசந்தை. அதனால் குதிரைக்காரனிடம் தோற்றோம் என்றும் ஆகிவிடாதபடி வெற்றியைப் பறிக்க அந்த இராமநாத சுவாமியும் தர்ப்ப சயனப் பெருமாளும் அருள்வாராக..."

— என்று கிழவன் கூறிய மறுநொடி பெருமாள் கோயில் மணி ஆமோதிக்கிற மாதிரி ஒலித்து அடங்கியது.

## 10

**'யாதாமொரு இஸ்லாமானவர்களில் பரிபாலனம் பண்ணிவிச்சவர்கள், கோடி அடிமை கொண்டு உருமை விட்ட பலனும், கோடி கச்சத் செய்த பலனும் அடைவாரகவும், இந்த தன்மத்துக்கு விகாதம் பண்ணினவர்கள் மாதா, பிதா, ஒஸ்தாதை வதை பண்ணிவிச்ச, மக்கத்துப் பள்ளியை இடித்த பாவத்தில் போவாராகவும்...'**

**— 1734ஆம் ஆண்டைச் சேர்ந்த செப்பேட்டிலிருந்து**

தர்ப்ப சயனப் பெருமாள் கோயிலின் அந்த மணி ஓசை கிழவனை நிமிர்த்தி உட்கார்த்திட கோவிந்தப்பையாவும், குமாரபிள்ளையும் கூட அந்த நல்ல சகுன நிமித்தம் மலர்ச்சி கொண்டனர்.

சீதக்காதியும், "தெய்வமும் துணைக்கு வரப் போகிறது– இது நிமித்திகச் சப்தம்" என்றார். கோவிந்தப்பையாவும், குமாரபிள்ளையும் ஆச்சரியப்பட்டனர். "என்ன கோவிந்தரே– சீதக்காதியின் விளக்கம் உங்களுக்கு ஆச்சரியம் தருகிறதா?"

"ஆம்– ஒரு முகம்மதியா நம் நம்பிக்கைகளிலும் நம்பிக்கை கொண்டிருப்பது ஆச்சரியம் தருகிறது–"

"அதுதான் சீதக்காதி. அனைத்திலும் விசால நோக்கு, தாமசிந்தை– என்வரையில் அந்தக் கர்ணன்தான் இப்பிறப்பில் சீதக்காதியாகப் பிறந்து வந்திருக்கிறான்–"

கிழவனின் பாராட்டு சீதக்காதியை நெகிழ்த்தியது போலும்.

"சேதுபதி– உங்கள் பாராட்டு எனக்கில்லை. அவ்வளவும் எங்கள் நபிக்கும், மறை வேதத்துக்கும்தான். அது சொன்னபடி நடப்பவன் நான்" என்று கைகளைக் கூப்பினார் சீதக்காதி.

கோவிந்தப்பையாவை அந்தக் காட்சியே என்னவோ செய்தது. மதுரையில் ஒரு முகமதியன் களவாணியாக இருக்கிறான். இங்கோ கலைவாணனாகக் கைகூப்பித் தொழ வைக்கிறான். ஹூம்– மனிதர்களில்தான் எத்தனை விதம்?

"என்ன கோவிந்தரே உங்கள் ஊர் ஞாபகம் வந்து பெருமூச்செறிய வைக்கிறதோ?"

"ஆமாம்– இவர் அங்கேயும் அந்த ருஸ்தும்கான் இங்கேயும் இருந்தால் நன்றாயிருந்திருக்கும்."

"ஏன் நான் மதுரைக்கரசனாகவும் உங்கள் நாயக்கர் பாளையக்காரராகவும் இருந்தால் எப்படி இருக்கும் என்றும் நினைக்கலாமே–"



– மடக்கின கிழவனைக் கோவிந்தப்பையா சற்று மிடறு விழுங்கப் பார்த்துச் சமறினார்.

"எண்ணம்தான் செயலாகிறது. செயலே வாழ்வாகிறது. எதிரிகள் யாரும் பிறக்கும்போதே எதிரிகளாகப் பிறந்து வந்து விடுவதில்லை. நாமதான் நம் எண்ணங்களால் எதிரினை உருவாக்குகிறோம்.

என் எண்ணத்திற்கு எதிரிகூட இங்கே நண்பனாகி விடுகிறான். உங்களுக்கோ நண்பன் கூடப் பகைவனாகி விடுகிறான். புரிந்து கொள்ளுங்கள் கோவிந்தரே–"

– கிழவனின் தத்துவார்த்தமான பேச்சு கோவிந்தப்பையாவிற்குக் கசப்பாகத்தான் இருந்தது. இருந்தாலும் ஜீரணித்துக் கொண்டு, "சரி நாங்கள் புறப்படுகிறோம்" என்று எழுந்தார்.

"விருந்துண்ணாமலா?"

"உங்கள் பேச்சே விருந்து–"

"மருந்தென்றும் எடுத்துக் கொள்ளுங்கள்."

"கிழவரே– நாங்கள் பழையதை மறக்க நினைத்தாலும் நீங்கள் அதை ஞாபகப்படுத்துவது வேதனை தருகிறது–"

"என்ன செய்ய–? நான் எப்பொழுதுமே பழையதை மறவாதவன்."

– கிளம்பிவிட்ட நிலையில் சங்கிலியால் பூட்டிக் கொண்டதுபோல் திரும்பவும் பேச்சு வளரவும் குமாரபிள்ளை அதைத் தவிர்க்க நினைப்பது போல, "பழையதை மறவாதவர்களே என்றும் பாராட்டப்படுவார்கள். தளவாய்– நாம் புறப்படுவோம். இப்பொழுதே கிளம்பினால்தான் நாளை காலைக்குள் மதுரையை அடைய முடியும்."

கிழவன் குமாரபிள்ளையை ஓரப்பார்வை பார்த்தார். வந்ததில் இருந்தே அவ்வளவாகப் பேசாமல் செயலே குறியாக இருப்பது கவர்ந்ததோ என்னவோ, "குமாரபிள்ளை நீங்கள் கெட்டிக்காரர்" என்றார்.

"உங்கள் அருகில் இருப்பதால் அந்தக் காற்றுப் பட்டு கெட்டிக்காரனாகியுள்ளேன். மற்றபடி நான் ஒரு சாதாரண ராஜவிசுவாசி சேதுபதி–" என்றார் குமாரபிள்ளை. ரசித்தார் கிழவன்.

"சரி– இந்தச் சந்திப்பின் விளைவுகள் இனி எப்படி இருக்கும்?"– இது கோவிந்தப்பையா.

"ஒரு வாரம் அவகாசம் தாருங்கள். கன்னிவாடி பாளையாதிபதியோடு பேசிவிட்டுத் தகவல் தருகிறேன். நடுவில் எனது சேதுநாட்டு வீர மறவர்கள் ஒரு நூறுக்கும் மேலானவர்கள் அரண்மனைக்குள் ஊடுருவ வழி செய்து கொடுத்து விடுங்கள்.

அந்தக் குதிரைக்காரனின் நதி மூலத்தையும் ரிஷி மூலத்தையும் இவர்கள் கண்டறிந்து அதற்கேற்பத் தயாராகி விடுவார்கள்.

ஒரு சூரிய உதயத்தின்போது சிறு கலவரம்போல உருவாகி காட்டுத்தீ போலப் பரவி மாலைக்குள் மதுரையைப் பற்றிய அந்தப் பேயை விரட்டிவிடும் மறவர் படை. கவலைப் படாதீர்கள்."

— கிழவன் பேச்சில் ஒரு பெரிய யுத்தத்திற்கான முகாந்திரங்களே இல்லை. ஏதோ ஒரு காட்டுப் புலியைப் பிடிக்கத் திட்டமிடுகின்ற மாதிரியான பாவனைதான் தெரிந்தது.

முதுகு வளையக் குனிந்தது. வணக்கம் கூறிவிட்டு கோவிந்தப்பையாவும் குமாரபிள்ளையும் புறப்பட்டார்கள்.

வாசல்வரை வந்து ராஜரீகத்தோடு வழியனுப்பி வைத்தார் கிழவனும்–

அந்தச் சந்தைப் பகுதி நல்ல ஜனக்கூட்டத்தோடும் பரபரப்போடும்தான் இருந்தது. கோவேறுக் கழுதைகளோடும், மட்டக் குதிரைகளோடும் வந்திருந்த பலரும் தீர்வைக்குரிய சந்தைப் பொருள்களைத் தேடிப்பிடித்து வாங்கித் தங்கள் ஊருக்குக் கொண்டு போகும் அவசரத்தில் இருந்தார்கள்.



நவசமும் நெல்லும் ஒரு பக்கத்திலும் பாக்கு, மிளகு, பல சரக்கு மறுபக்கத்திலும், செம்பு, துத்தநாகம், ஈயம் என்கிற உலோக வகையறா இன்னொரு புறத்திலும் குவிந்து கிடக்க, பட்டுப் புடவையும் பருத்தியும் மட்டும் தரைமீது கிடக்காமல் மரத்தாங்கிகளில் தொங்கியபடிப் பார்வையாகத் தெரிந்து கொண்டிருந்தன.

ஏலம், கிராம்பு, சாதிக்காயைச் சிலர் இடுப்பளவு மலையாகக் குவித்து வைத்து மரக்காலில் அளந்து விற்கச் சித்தமாயிருக்க அந்த மொத்தச் சந்தையே பரபரப்பாகும்படியாக ஒருவன் புரவி மீதமர்ந்து உள் நுழைந்திருந்தான்.

வியாபாரிகளைத் தன் பெரிய கண்களால் குத்திவிடுவது போலவும் பார்த்தவன் கருப்புக்கட்டிக் கொட்டான் விற்கும் ஒருவனைச் சமீபித்து, "இதில் நூறு கொட்டானை நீ தேவர் வீட்டுக்கு அனுப்பி விடு" என்று சத்தமாக இரைந்து கத்தி விட்டு அங்கிருந்து புறப்பட்டும் போனான்.

அவன் போனபிறகே அங்கே தளவாய் அம்பலக்காரனின் பிரவேசம் நிகழத் தொடங்கியது.

கூடவே சில காவல் வீரர்களும்–!

அம்பலக்காரனைப் பார்த்த மாத்திரத்தில் ஓடி வந்தான் அந்தக் கருப்புக்கட்டிக் கொட்டான் வியாபாரி.

"ஆண்டே– ஆண்டே–"

"என்ன?"

"நூறு கொட்டானைத் தேவர் வீட்டிற்கு அனுப்புன்னுட்டுப் போறான் அவரோட அடியாள். ஒரு சல்லி வராகன் பேற மாட்டேங்குது– நான் நலிஞ்ச வியாபாரி. நீங்கதான் ராசாகிட்ட சொல்லி–" அவன் கெஞ்சுவது போல் பேச அதைக் கேட்டுக் கொண்ட அம்பலக்காரன் முகமும் ஒரு மாதிரி மாறிப் போனது.

எல்லோரும் அம்பலக்காரன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அம்பலக்காரன் எதும் சொல்லாமல் புரவியைச் செலுத்தலானான். அது இராமநாதபுரத்து வீதிகளில் நல்ல வேகம் காட்டிற்று. பின் ஒரு மாளிகை போன்ற இல்லத்தின் முன் நின்றது. புரவி நீக்கம் செய்து உள்ளே நுழைந்த அம்பலக்காரனை அவனோடு வந்த வீரர்கள் பின் தொடர அம்பலக்காரன் வருகையை எதிர்பார்த்திராத ஒருவர் ஆச்சரியத்தோடு நிமிர்ந்தார்.

நல்ல ஆகிருதியான தோற்றம். தோளில் புரளும் கூந்தல், காதிலும் பாம்பட வளவி, பார்வையே அம்பலக்காரனைப் பார்த்து 'என்ன விஷயம்?' என்று கேட்டது.

"வந்தனம் தாதியத்தேவரே..." என்றான் தளவாய் அம்பலக்காரனும்.

"என்ன விஷயம்?"— அவன் குரலில் எடுப்பிலேயே கடுமை.

"உங்களுக்கு எது வேண்டுமானாலும் வழங்க அரண்மனை ஆட்கள் சித்தமாக இருக்கிறார்கள். அப்படி இருக்க உங்கள் அடியாட்கள் சந்தைக்குச் சென்று அங்குள்ளவர்களிடம் அதிகாரம் செய்து வேண்டியதை மிரட்டிப் பெற்று வருவது அழகில்லை..."

"எந்தப் பேடி அப்படிச் செய்தவன்?"

"யாருக்குத் தெரியும்? நீங்கதான் விசாரிக்கணும்."

"சரி.. விசாரிக்கிறேன் போ..." தாதியத்தேவர் எனும் அந்த மனிதரிடம் அலட்சியமான பதில்.

"இவ்வாறு அடிக்கடி நேரிடுகிறது. இதைக் கிழவர் வரை கொண்டு செல்ல நான் விரும்பவில்லை. பார்த்து நடந்து கொள்ளுங்கள்."



— அம்பலக்காரனின் பேச்சில் ஒருவித எச்சரிக்கை தொனித்தது. இருவரின் பேச்சையும் கேட்டபடி ஒரு இளம் பெண் அங்கே கலங்கிய முகத்தோடு பிரசன்னமானாள். அம்பலக்காரன் அவளையும் பார்த்தான். அவள் கண்களில் அதீத சோகம். அவளைப் பார்த்த அம்பலக்காரனும் அவளது சோகத்தை உணர்ந்தது போலவும், இனி அங்கிருப்பது அழகில்லை என்பது போலவும் வெளியேறத் தொடங்கினான்.

தாதியத் தேவர் என்கிற அந்த மனிதர் கைகளைப் பிசைந்து கொண்டார்.

அவள் அவரைக் கலக்கம் குறையாதபடி ஏறிட்டாள்.

"மாமாவிற்குத் தெரிந்தால் மிகவும் வருத்தப்படுவார்..." என்று மெலிந்த குரலில் முனகினாள்.

"என்ன...? அவனைத் தொடர்ந்து இனி உன் பிலாக்கணமா?"— தேவரிடம் கடுமை.

"நீங்களே யோசிச்சுப் பாருங்க. நமக்கு என்ன குறை?"

"என்ன குறையா? இதை என்னைப் பார்த்து நீ கேக்கறியா பொன்னாத்தா?"

"ஆமா.. மாமா நமக்கு ஒரு குறையும் வைக்கலியே."

"தின்னச் சோறும் ஒடுங்க வீடும் இருந்துட்டா போதாது பொன்னா.. நான் ஆண்ட பரம்பரைல வந்தவன்..."

— அவள் அதற்குமேல் அவரிடம் எதையும் பேச விரும்பவில்லை. திரும்பித் தன் மாளிகைத் தோட்டத்தின் மலர்ச் செடி ஒன்றின் அருகே போய் நின்று கொண்டாள்.

தாதியத் தேவரின் மனது இப்படித்தான் அணையாத நெருப்புடன் அடிக்கடி அழிச்சாட்டிய வேலைகள் பல செய்து விடுகிறது.

அவரைத் திருப்திப்படுத்துவதாக நினைத்துக் கொண்டு சில காலிகள் தவறாகவும் நடந்து கொண்டு விடுகின்றனர். எல்லாம் ராமநாதபுர அரியணைக்கு நடந்த போட்டியிலிருந்து

தான் ஆரம்பித்தது. திருமலை ரகுநாத சேதுபதிக்குப் பிறகு அரியணைக்கு யார் வருவது என்பதில் ஓர் அதிரடிப் போட்டி

திருமலை சேதுபதிக்கு ஓர் ஆண் வாரிசு கூட இல்லை. அவரது மருமகன் சூரியத்தேவர்தான் அடுத்து அரியணையில் அமர வேண்டியதாயிற்று.

சூரியத்தேவரின் ஐந்தாவது மனைவியின் புத்திரன்தான் ரகுநாத சேதுபதி எனும் கிழவன் சேதுபதி. இவரோடு சரிக்குச் சரி மல்லுக்கட்டியவர்தான் தாதியத்தேவர். ஐய்யோ– அந்தப் போட்டியும் அதில் கிழவன் முந்திக் கொண்டதும் இன்றைக்கும் பொன்னாத்தாளின் வயிற்றில் புளியைக் கரைக்கும் சம்பவங்கள்.

அதை நினைக்கப் பிடிக்காமல் நின்று கொண்டிருந்த வளைத் திடுதிடுவென்று வந்திறங்கிய ஒரு புரவிக் கூட்டம் கலைத்து அழைத்தது. எட்டிப் பார்த்தாள்.

தாதியத் தேவர் முன் அவரது சகாக்கள் கிழவனைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"தேவரே– கிழவர் வேஷம் போடுகிறார். மதுரை நாயக்கர்கள் நமக்கு எதிரிகள். அதிலும் கிழவரின் தந்தையான சூரியத் தேவரையே கொன்று ஒழித்தவர்கள். அவர்களுக்கு உதவப் போகிறாராம்..."

"நீங்கள் மட்டும் இப்போது அரியணையில் இருந்தால் மதுரையை இந்த நொடி வசப்படுத்தி சேதுநாட்டு வளரிக் கொடியை ஏற்றி முடித்திருப்பீர்கள்..."

"கிழவர் போக்கைப் புரிந்து கொள்ள முடியவில்லை. உங்களுக்கு அரியணைதான் இல்லை என்றார்கள். அரசியல் ஆலோசனைகளில் கூடவா இடமில்லாமல் போய்விட்டது?"

நல்ல நாளிலேயே தாதியத் தேவர் ஒரு தணல் நெருப்பு. இதில் சிலர் ஊத வேறு தொடங்கினால்? பொன்னாத்தா பதறத் தொடங்கினாள்.

# 11

'சேது நாட்டுக்கு அரசனாகும் உரிமை சேதுபதி சார்ந்த செம்பி நாட்டு மறவர் குலப் பிரிவில் வரும் மனைவிக்குப் பிறக்கும் மூத்த ஆண் மகவுக்கே உண்டு.

ஒருக்கால் ஆண் மகவு இல்லையேல் அந்த உரிமை பெண் மகவைச் சேரும். அதுவுமில்லாவிடில் அரசனின் தம்பிக்குச் சேரும். தம்பியும் இல்லாவிடில் அரசனின் ஆண் வழியில் நெருங்கிய உறவினர்க்கு அந்த உரிமை போய்ச் சேரும்.

சேதுபதிகள் மறவர்குல உட்பிரிவுகளில் திருமணம் செய்துகொள்ளத் தடை இல்லை. ஆனால் அரசுக் கட்டில் ஏற இவர்களில் செம்பி மறவர் பிரிவினர்க்கே உரிமை உண்டு. மற்ற ஒருவர்க்கும் உரிமை இல்லை.'

— 'மறம்பாடல் சுவடி' விளக்கப்படி

இந்த உலகம் எவ்வளவோ சண்டைகளைப் பார்த்திருக்கிறது. ஆனால் அரியணைச் சண்டை போல ஒரு மோசமான சண்டை எங்குமே இருக்க முடியாது.

போர்க்களத்தில் நடக்கும் சண்டையில் யுத்த தந்திரங்கள் மிகுதியும் இருக்கும். மிக நேரிடையான ஒரு மோதலாகவும் அது இருக்கும். வாழ்வும் சாவும் திட்டமாய்த் தெரிந்துவிடும். இறந்துவிட்டால் அதுகூட வீரமரணம் என்று கௌரவிக்கப் படும். வெற்றி பெற்றாலோ கேட்கவே வேண்டாம். அது வீரத்துக்குக் கிடைத்த சன்மானம் ஆகிவிடும்.

ஆனால் அரியணைச் சண்டை எனும் உறவுகளே ஒருவருக்கொருவர் மோதிக்கொள்ளும் சண்டை இருக்கிறதே

இது மிகக் கொடிதான ஒன்று. தன் வாலை உணவாகக் கருதித் தானே விழுங்கி அழியப் பார்க்கும் பாம்பிற்கும் இதற்கும் பெரிய வேற்றுமை இல்லை.

கடவுளர்களும் இந்தச் சண்டைக்கு விதிவிலக்கில்லை என்பதைக் காட்டத்தான் இராமாயணமோ?

சேது மண்ணிலும் இப்படி ஒரு சண்டை அரங்கேறியது. அதில் தாதியத் தேவனும், கிழவனும் மோதிக்கொண்டதைப் பொன்னாத்தாள் நினைத்துப் பார்க்கிறாள்.

அந்தப் போட்டியில் தாதியத் தேவன் தோற்றதால்தானே தேவன் அதைத் தாளாமல் குமுறிக் கொண்டேயிருக்கிறான்?

இத்தனைக்கும் சேது நாட்டு அரண்மனை வம்சாவளி யாரெல்லாம் அரியணை ஏறலாம் என்பதைத் துல்லியமாக அறுதியிட்டுக் கூறியிருக்கிறது.

அதன்படி அரசரின் ஆண்வழியில் செம்பி நாட்டு மறவர் குலப் பெண்களுக்குப் பிறந்தவர்களுக்குத்தான் உரிமை.

அது அச்சு அசலாகத் தாதியத் தேவனுக்கு அப்படியே பொருந்தியது. ஆனால் போட்டிக்கு நின்ற கிழவன் எனும் ரகுநாத சேதுபதிக்கோ அது துளியும் பொருந்தவில்லை. கிழவன் ரகுநாதனின் தாய் ஒரு கொண்டயங்கோட்டை மறத்தி. மறைந்து விட்ட இராஜசூரியத் தேவரின் ஐந்தாவது மனைவி-

மனைவி ஸ்தானத்தில் ஐந்தாவதாக இருந்தபோதிலும் ஆசாபாசங்களைக் காட்டுவதில் முதலாவதாக இருந்தாள். அதனால்தானோ என்னவோ சூரியத்தேவரும் அவள் மனையே கதியாக அவள் மடியே தலையணையாகக் கொண்டு அவளோடு இரண்டறக் கலந்து விட்டிருந்தார்.

அந்தக் கலப்பில் துளிர்த்தவன்தான் காத்தான். யாருக்கும் ஆண் வாரிசு இல்லாத நிலையில் தன் வம்சத்து வழிப்பாதையைக் காத்திட வந்தவன் என்று இராஜசூர்யத் தேவன் நினைத்ததால்தானோ என்னவோ பெயரைக் காத்தான் என்று வைத்து



விட்டார். பின் சேதுநாட்டு அரசர் குலத்திற்கே உரிய ஸ்ரீராம பிரானின் அணுக்கமான தொண்டர்கள் என்பதைக் குறிக்கும் இரகுநாதன் எனும் வம்சாவளிப் பெயரும் சேர்ந்து இரகுநாத காத்த தேவனாய்ப் பின்னாளில் அது மாறியது.

வம்சாவளியைக் காக்க ஒரே ஆண்வாரிசாய்த் தோன்றிப் பெயரிலும் அதன் சிறப்புகளைக் கொண்டு விட்டால் போதுமா என்ன?

அரியணைக்கும் அரசனுக்கும் பெருமை சேர்க்கும் செயல்களையும் அதைக் காப்பாற்றும் சாதுர்யங்களையும் காட்டினால் தானே பெயர் விளங்கும்.

காத்த தேவனும் இராஜசூர்யத் தேவரிடத்தில் அதைக் காட்டத் தவறவில்லை. எப்படி?

தஞ்சை நாயக்கரான அழகிரிக்கும் இராஜ சூரியத் தேவருக்கும் நல்ல நட்பு இருந்தது. அழகிரிக்கு அவன் தளவாய் வெங்கண்ணா என்பவனே பகையாளியாக மாறி அழகிரியை ஒழித்துக் கட்டத் திட்டமிட்டிருந்தான்.

இதற்காகத் தஞ்சையின் உண்மையான வாரிசு என்று அறியப்பட்ட செங்கமலதாஸை அரியணை ஏற்றுவது என்பது அவன் திட்டம். அதற்காக பீஜப்பூர் சுல்தானின் உதவியைக் கேட்கக்கூடத் தயங்கவில்லை.

சுல்தானும் தனது படைத்தலைவனான வெங்கோஜியின் தலைமையில் ஒரு பெரிய படையை அனுப்பி அழகிரியை ஒழித்துக் கட்ட வெங்கண்ணாவுக்குத் துணை நின்றான்.

இந்த நிலையில் அழகிரி காலில் விழுந்தது இராஜ சூர்யத் தேவரிடம்தான்.

"தேவரே ஓடி வாருங்கள்- உதவுங்கள். மதுரை சொக்கநாதர் அண்ணனாக இருந்தும் உதவ மறுக்கிறார். எனது தளபதியே எனக்கு எதிராக மாறக் காரணமும் அவர்தான். அவருக்கு, அதாவது மதுரைக்கு நான் கப்பம் கட்டவில்லையாம். அண்ணனுக்குத் தம்பி எங்காவது கப்பம் கட்டுவானா?

வளர்ப்புத் தாயின் மகன் என்பதால் உறவில்லை என்றாகி விடுமா?

மதுரையில் ஒரு நாயக்கராட்சி என்றால் தஞ்சையில் தமையனின் ஆட்சி என்று மகிழாமல் தஞ்சை மதுரைக்கு அடிமை, அதனால் கப்பம் கட்டு என்றால் எப்படி? மறுத்தேன்... அதன் எதிரொலிகளை இப்பொழுது யுத்த வடிவில் சந்திக்கப் போகிறேன்.

அண்ணனே எதிரியாகிவிட்ட நிலையில் மற்றவர்களுக்குக் கேட்கவா வேண்டும்?

எனக்கு நீங்கள்தானே உதவ வேண்டும். அதை நான் காலத்தால் மறக்கமாட்டேன்'' என்று அழகிரி இராஜ சூர்ய சேதுபதி காலில் விழுந்தபோது சேதுபதி அரியணை ஏறி ஆறுமாதம் கூட ஆகியிராத நிலை.

சரி என்று முதல் போரைச் சந்திக்கக் காலெடுத்த இராஜ சூர்யத் தேவரை யாராலும் தடுக்க முடியவில்லை. இராமலிங்க விலாசத்திற்கென்று ஒரு கூட்டமே உண்டு. அவர்களிலும் ஒருவரால் கூடத் தேவரைத் தடுக்க முடியவில்லை. ஆனால் ஒரு கை நீண்டு தடுத்தது. அது காத்தான் எனும் கிழவனின் கை.

''அப்பா வேண்டாம்... தஞ்சை அழகிரி உங்களுக்கு நண்பராக இருக்கலாம். ஆனால் மனிதகுலத்துக்கே பகைவன். சரியான சந்தர்ப்பவாதி. அவனை அழிக்க வெங்கண்ணா முயல்வது அந்த அரியணையைக் காப்பாற்றச் செய்யும் முயற்சி. அதோடு வெங்கோஜியின் படை பெரிதென்று கேள்விப்பட்டேன். வேண்டாம். அழகிரிக்கு உதவாதீர்கள். உங்களுக்கு அது பேராபத்தைத் தரும்...''

— கிழவனின் குரலை இராஜ சூர்யத் தேவர் பொருட் படுத்தவேயில்லை.

''இளைஞன் நீ... அரசியல் பற்றி உனக்கு என்ன தெரியும்?'' என்று மனத்தில் நெருப்பை வேறு மூட்டிவிட்டுப்



போய்விட்டார். ஆனால் காத்தான் சொன்னதுதான் சரி என்றானது.

ஒரு பெரும் படையுடன் போன இராஜ சூர்யத் தேவரால் வெங்கோஜியின் படையை எதிர்கொள்ள முடியவில்லை. சரியான சமயத்தில் துணை நிற்க வேண்டிய அழகிரியும் போர்க்களத்தைவிட்டு நழுவ இராஜ சூர்யத் தேவரைச் சுற்றி வளைத்தது படை. கைது செய்த அவரை மதுரை சொக்கநாத நாயக்கரிடம் ஒப்படைக்க முடிவு செய்தான் வெங்கண்ணா. அதன்படி சொக்கநாத நாயக்கரின் தலைமைத் தளவாய் வெங்கடகிருஷ்ணப்பர் பொறுப்பில் இராஜ சூர்யத் தேவரை ஒப்படைத்தான்.

வெங்கடகிருஷ்ணப்பரும் இராஜ சூர்யத் தேவரைச் சொக்கநாத நாயக்கர் முன் நிறுத்த இழுத்துச் சென்றார். வழியில் திருச்சியில் தங்க நேர்ந்தது. அப்பொழுது இராஜ சூர்யத் தேவர் தப்பி ஓட முயற்சிக்க வெங்கடகிருஷ்ணப்பரும் வேறு வழியின்றிக் கட்டாரியை எறிந்து கொல்ல நேரிட்டது.

மொத்தத்தில் மணம் கமழச் சென்ற இராஜ சூர்யத் தேவர் பிணமாகத்தான் சேது நாட்டுக்குத் திரும்பினார்.

அந்த க்ஷணம் மொத்த சேது மண்ணும் திரும்பிப் பார்த்தது காத்தான் சேதுபதி எனும் கிழவனைத்தான்.

''காத்தா நீ சொன்னே அதே மாதிரி ஆயிடிச்சே ராசா...''— அம்மா கட்டிக் கொண்டு அழுதாள்.

''நாயக்கருங்களுக்கு உதவவே கூடாது. அவங்களுக்கு இரக்கப்பட்டா இதுதான் கதி...''— கருத்துகள் சிதறத் தொடங்கின.

''ஹூம்! என்ன சாபமோ? வைகாசி தேரோட்டத்துல பெரிய சேதுபதி போய்ச் சேர்ந்ததுல இருந்தே இந்தச் சேது நாட்டைச் சனி பிடிச்சிடுச்சு. அடுத்தடுத்து எல்லாரும் இப்படி அநியாயமா செத்தா இந்த நாட்டை யார்தான் காப்பாத்தறதோ

தெரியலையே?"— எனும் போதே காத்தான் மனத்தளவில் நயாராகிவிட்டான்.

"இப்படிப் புலம்புவதால் பயனில்லை. சடுமையான சட்ட திட்டங்கள், வலிமையான படை, நல்ல கண்காணிப்பு இது இருந்தால் போதும். இந்தச் சேது மண்ணை மதுரை, தஞ்சை, மைசூர், செஞ்சி என்கிற நகரங்களுக்கு மேலாக ஆக்கிக் காட்டலாம்..." என்று பலமாக முணுமுணுக்க அதை ஒரு கூட்டமே கேட்டது. இருந்தாலும் இராஜ சூர்யத் தேவருக்குப் பிறகு காத்தானால் அரியணையைப் பிடிக்க முடியவில்லை.

வம்சாவளிப்படி அவன் செம்பி நாட்டானல்லவே? கொண்டையங்கோட்டை மறச்சி வழியாயிற்றே— ஆகவே சேது நாட்டு வம்சாவளி விதிமுறைப்படி இராஜ சூர்யத் தேவருக்கு அடுத்து அவர் சகோதரர் அந்தணத் தேவர் மன்னரானார்.

மறவர் குலத்தில் பிறந்துவிட்டபோதிலும் பக்தியில் நாட்டம் மிகுந்தவர் இந்த அரசர். பார்க்கவும் வேதம் ஓதும் அந்தணராட்டம் இருக்கப்போய் அதே பெயரே நிலைத்து விட்டது. இவரை அங்கணத் தேவர் என்பாரும் உண்டு. ஆனால் இவரது ஆட்சி நிலைக்கவேயில்லை.

மூன்று மாதம்தான்!

திரும்பவும் அரியணையில் ஆட்டம். போட்டி இந்தப் போட்டியின்போது முந்தைய முறையைப் போலவே செம்பி நாட்டு வம்சாவளியில் முடிசூட்டிக் கொள்ளத் தகுதியுடன் காத்திருந்தவன்தான் தாதியத் தேவன், ஆனாலும் எல்லோர் பார்வையும் காத்தான் மேல்தான் இருந்தது. மதியூகம், தைரியம், தீர்க்க தரிசனம் என்று எல்லாம் ஒரு கட்டாக அடங்கப் பெற்றவனாகக் காத்தான் கண்ணுக்குத் தெரிய— வெறும் வம்சாவளி விதிமுறையைப் பற்றிக்கொண்டு மன்னராவது என்பது பெரிய சிக்கலாகிவிட்டது.

அத்தோடு செம்பிநாட்டாருக்கு அரியணை ராசியே இல்லை என்கிற அவப்பெயரும் உருவாயிற்று. காத்தான்தான் தகுதியான நபர்... ஆட்சி நிலைக்க வேண்டும் என்றால் விதிகளை மீறுவதில் தவறு இல்லை என்று இராமலிங்க விலாசத்தில் சிலரைப் பேசும்படிச் செய்தான் காத்தான்.

அவர்களில் சிலர் மறுத்தபோது துளியும் யோசிக்காமல் அவர்கள் வயிற்றில் கட்டாரியைப் பாய்ச்சத் தவறவில்லை. பின் அவர்கள் ஒருவருக்கொருவர் தாக்கிக்கொண்டு உயிர் விட்டார்கள் என்று சொல்லவும் கூச்சப்படவில்லை.

"காத்தா என்ன இது? உனக்கு அத்தனை மண்ணாசையா?"— என்று ஒருவர் கேட்கப்போய் கொன்று விட்டான் காத்தான்.

"எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். இனியும் இந்த அரியணையில் ஒரு தகுதியான நபர் அமராமல் போனால் நாயக்கர்கள் விழுங்கி வெல்லமும் தந்து விடுவார்கள்..." என்று உறுதிபடக் கூற, அதற்கேற்ப அங்கு நடப்பதை எல்லாம் அறிய புகழூர் அரண்மனைக்குள் தஞ்சை, மதுரை நாயக்கர்களின் உளவாளிகள் பலரும் ஊடுருவியிருந்தனர்.

அவர்களைத் துல்லியமாக அடையாளம் கண்டு அத்தனை பேரும் உளவாளிகள் என்று நிரூபித்து அவர்கள் நாவையும் அறுத்து, கடல் வாணிபத்தில் உள்ள கப்பலுக்குச் சுக்கான் வலிப்பவர்களாகவும் அவர்களை ஆக்கிய காத்தானை அதன் பின் யாராலும் மறுதலிக்க முடியவில்லை.

தாதியத் தேவன் மட்டும் தனியே வம்சாவளிப் பெருமை பேசிக் கொண்டு காத்திருந்து என்ன பயன்?

மொத்த மறவர் கூட்டமும் காத்தான் பக்கம் சாய்ந்து விட்டது. காத்தானும் சேதுபதியாகப் பதவி எற்று அடுத்த நொடியே தான் இனி சேதுபதி ரகுநாத காத்த தேவன் எனும் கிழவன் என்று, அதாவது அரியணைக்கு எல்லாவிதத்திலும் உரிமை படைத்த ஒருவன்—அதை நிரூபித்தவன்— என்று பிரகடனமும் செய்து கொண்டான்.

தாதியத் தேவனால் குமுறத்தான் முடிந்தது.

'சரி அது அடிபட்ட பாம்பு'— அதைக் கண் பார்வையிலேயே வைத்துக் கொள்வோம் என்று தன் சகோதரி உடையக்காளின் மகளையே தாதியத் தேவனுக்குக் கொடுத்து அரண்மனை உபசாரங்களையும் கொடுத்துக் கட்டிப்போட்டுத் தான் வைத்திருந்தான். இருந்தும் தாதியத் தேவன் அடங்காமல் மீறுவதை என்னவென்று சொல்வது...?

**பொ**ன்னாத்தாள் கண்ணீர் மல்கப் பழைய வரலாற்றை நினைத்துவிட்டு மீள்கிறாள். தாதியத் தேவனிடம் அவன் சகாக்களும் ஆலோசனையை முடித்துவிட்டுக் கிளம்பிவிட்டிருந்தனர். தாதியத் தேவன் ஏதோ ஒரு புது முடிவினுக்கு வந்தது போல் தோன்றியது. அதைச் செயல்படுத்தும் உத்வேகத்தோடு வெளியே புறப்பட்ட அந்தக் காயம் பட்ட புலியின் எதிரில் ஒரு கிறிஸ்தவத் துறவி.

"கர்த்தருக்குத் தோத்திரம்..."

"வாருங்கள்... வாருங்கள்."

"அழைத்ததாகக் கேள்விப்பட்டேன். அதுதான் வந்தேன். இந்த மண்ணில் எங்களையும் நேசிக்க ஒரு அரண்மனை உயிர் இருப்பதை எண்ணிப் புளகாங்கிதமடைகிறேன்."— அந்தத் துறவியின் பேச்சில் சொல்ல முடியாத ஒரு இதம்.

"நான் இப்பொழுது ஒரு அவசர வேலையாக அரண்மனைக்குச் சென்று கொண்டிருக்கிறேன். உங்களைப் பிறகு சந்திக்கிறேனே..."— தாதியத் தேவன் அவரிடமும் அவசரம் காட்ட அவர் சற்று தயக்கம் காட்டித் தேக்கமும் கொள்ள...

"என்ன எதாவது அவசரமான விஷயமா?"

"இல்லை... சிறு விண்ணப்பம்தான்."

"என்ன?"

"புதிதாக ஒரு தேவாலயம் எழுப்பத் தீர்மானித்துள்ளோம். கர்த்தரால் கவரப்பட்ட பலரும் ஒத்தாசை செய்ய முன்



வந்துள்ளார்கள். தாங்கள் சேதுபதி மன்னரிடம் கூறி எதாவது நிலத்தைப் பெற்றுத் தந்தால் அந்தப் பரமாத்மாவின் பெருங் கருணை என்றும் உங்களுக்கு நிலைத்திருக்கும்..."

"மன்னிக்க வேண்டும் துறவியாரே. நான் அந்தக் கிழவனிடம் கேட்க மாட்டேன். தற்போது அரசியல் சதுரங்கத்தில் சில மாற்றங்கள் ஏற்படும் நிலை. நானே கூட அதன் காரணமாகச் சேதுபதியாகலாம். அதற்காக உங்கள் தேவனிடம் பிரார்த்தனை செய்யுங்கள். பிரார்த்தனை பலிக்கட்டும்... பிறகு பாருங்கள். இப்பொழுது என்னாலாவது ஒன்றுமில்லை."

"நல்லது... பிரசங்கம் கேட்கவாவது தாங்கள் வரலாமே?"

"இல்லை. மனது அரசியல் சகதியில் சிக்கிக் கொண்டிருக்கிறது. உங்கள் பிரசங்கம் தலையிலேயே ஏறாது. இதற்கு மேலும் பேச்சு வேண்டாம். நீங்கள் போய் வாருங்கள்..."

தேவனின் துண்டிப்பான பேச்சைத் தொடர்ந்து அவர் அதறல் பதறலின்றி விலகத் தொடங்கினார். அந்தப் பதறத்திலும் அதை ரசித்தது தாதியத் தேவனின் மனம்.

பின் புரவி ஏறி இராமலிங்க விலாசம் நோக்கிப் பயணிக்கத் தொடங்கியது தேவனின் ஆகிருதியான தேகம்.

**தா**ர்பார் மண்டபத்தில் ஆலோசனைக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. சிவகங்கை நாலுகோட்டைப் பாளைய பெரிய உடையத்தேவர் கூட ஆலோசனைக்கு அழைக்கப் பட்டிருந்தார். சீதக்காதியும் அம்பலக்காரனும் சோளையும் கூட அங்கு இருந்தனர்.

வெளியே தாதியத் தேவன் ஆவேசமாக வந்து இறங்கும் போது கன்னிவாடி பாளையாதிபதி சின்னகாத்ரியின் கோச்சு வண்டியும் அங்கு வந்து தேங்கி நின்றது.

கோச்சைவிட்டு இறங்கும்போது இருவரின் பார்வையும் மோதிக் கொண்டன!

# 12

'தொண்ட மண்டலச் சண்டப் பிரசண்டன் ஈழமும் கொங்கும் யாழ்ப்பாணப்பட்டணமும் கெச வேட்டை கண்டருளிய ராசாதிராசன்– ராசபரமேசுரன், ராசமார்த்தாண்டன், ராச கெம்பீரன், ராச குலதிலகன், ராசசமேளன், மன்னரில் மன்னன் மருவலர் கேசரி, துட்டரில் துட்டன் சிட்ட பரிபாலனம், ஒட்டியர் மோசந்தவுள்த்தான் துலுக்கர் தளவிபாடன், கட்டாரிச் சாளுவன் மலைகலங்கினு மனங் கலங்காதான்...'

— 'சேதுபதி மன்னர் செப்பேடு'களிலிருந்து

கன்னிவாடி பாளையாதிபதியைப் பார்த்த நொடி தாதியத் தேவன் முகத்தில் ஏகத்திற்கு வியப்பு. கன்னிவாடி பாளையாதிபதி சின்னகாத்ரியோ மிக இணக்கமாகத் தாதியத் தேவனை அடையாளம் கண்டு கொண்டு, "வந்தனம் தாதியத் தேவரே... நலம்தானே?" என்று கேட்க, பதில் கூறாதபடி ஒருவித முறைப்போடு தாதியத் தேவனும் உள் புகத் தொடங்கினான்...

சின்னகாத்ரிக்குச் சற்று வலித்தாலும் தாதியத் தேவனைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருந்ததால் சுதாரித்துக் கொண்டு உள் நுழைந்தார். தர்பார் மண்டபத்துக்குள் சின்னகாத்ரிக்கும் முன் நுழைந்த தாதியத் தேவனைக் கிழவனின் நயனங்கள் ஏறெடுக்கின்றன. ஒரு நொடிதான்... ஒரே ஒரு நொடிதான்... அழைப்பில்லாவிட்டாலும் வந்து நிற்கிறான் என்றால் ஏதோ கோளாறு என்று க்ஷணத்தில் புரிந்து கொண்ட கிழவன், "வா தாதியா... வா... என்ன இது திடீர்ப் பிரவேசம்?" என்று கேட்க தாதியத் தேவன் பதில் கூறாமல் அங்கு இலைவந்திண்டுகளைப்



பற்றியபடி அமர்ந்திருக்கும் சீதக்காதியை, பெரிய உடையத் தேவனை, அம்பலக்காரனை ஒரு பார்வை பார்த்து முடித்தான்.

அப்படிப் பார்க்கும்போதே அவனது வருகையின் காரண நிமித்தமும் புரியும்போது சின்னகாத்ரியின் வருகை நிகழ்கிறது.

அரண்மனைச் சம்பிரதாயப்படி கட்டியங்காரன் ஒருவன் வந்து கைகட்டி சற்றே தலை தாழ்த்தி, "ராசாதி ராச ராச பரமேஸ்வர ராசகம்பீர ராசகுலதிலக சேது நாட்டார் திவ்யமனா சமூகம் நாடி வீராதி வீரர் வீரகுலத் திலகா இஷ்டர், சிஷ்டர் இலரந்தனில் சேது நாட்டார் திருவடி போற்றும் சிரேஷ்டர் கன்னிவாடி பாளையத்தார் பராக்..." என்றான்.

— அவனது கட்டியத்தில் தொனித்த புகழ்ச்சி தாதியத் தேவனை முகம் கோண வைத்தது. அவ்வளவும் தன்னை நோக்கித் தனக்காகச் சொல்லப்பட வேண்டியவை... எல்லாவற்றையும் காலம் மாற்றிப் போட்டு இப்படிக் கிழவனைத் துதிபாடச் செய்துவிட்டதே என்று புழுங்க சின்னகாத்ரியும் உள் நுழைகிறார்.

கிழவன் நின்ற இடத்திலிருந்தபடி மீசை நீவலோடு "காத்ரீ..." என்று உறுமலாக அழைக்க, காத்ரியும் இருகரம் நீட்டியபடி வந்து முதற்காரியமாக மண்டியிட்டுவிட்டுப் பின் எழுந்து பணிவோடு நிற்க கிழவன் நெருங்கி வந்து அணைத்துக் கொண்டார்.

"என்ன வேகம்... என்ன வேகம்... புறாக்காலில் நான் அனுப்பிய சேதிக்கான பதிலோடு அந்தப் புறா வருமுன் கன்னிவாடி பாளையாதிபதி எதிர்வந்து விட்டானே... அதுவும் நான் கூட்டாக ஆலோசனை நிகழ்த்தும்போது... பலே!"

"தங்களிடமிருந்து அழைப்பு இல்லாவிட்டாலும் நான் வருவதாகத்தான் இருந்தேன் சேதுபதி... நல்லவேளை நீங்களாக அழைத்துவிட்டீர்கள்..." என்றபடியே சின்னகாத்ரி

அந்த வட்ட விதான மண்டபத்தில் பெரிய உடையத் தேவரை ஒட்டி அமர, தாதியத் தேவன் மட்டும் நின்று கொண்டே இருந்தான்.

"தாதியா— நீயும் அமரு."— இது கிழவன்.

"நான் அமரவோ, ஆலோசனை புரியவோ, இல்லை சதித் திட்டங்களுக்குத் துணை புரியவோ வரவில்லை காத்தா—"

— தாதியத் தேவனின் குரலில் உஷ்ண அலை. கூடவே எல்லோரையும் போல சேதுபதி என்றோ, அரசன் என்றோ, இல்லை உரிமையுடனும் உள்ளன்புடனும் அனைவரும் விளிக்கும்படியாகக் கிழவன் என்றோ கூப்பிடாமல் 'காத்தான்' என்கிற கிழவனின் இயற்பெயரைச் சொல்லிக் கூப்பிடவே அந்தச் சபையே தாதியத் தேவனைச் சற்று சங்கடத்தோடு பார்த்தது.

சோளகை சேர்வைக்காரன் மிகுந்த பணிவோடு ஒரு தூணை ஒட்டி நின்றபடி இருந்தான். தாதியத் தேவன் காட்டிய அலட்சிய பாவம் அவனைச் சற்று சீறியது. வாளைப் பிடித்த படிச் சற்று முன்னால் வந்தான். தளபதி அம்பலக்காரனும் அமர்ந்த நிலையில் முதுகின் சரிவை நிமிர்த்தியவனாக தாதியத் தேவனைப் பார்த்தான்.

"சரி— வந்த விஷயத்தைச் சொல்..."— கிழவன் அவனை எந்தவிதப் பதற்றமுமின்றி எதிர்கொண்டார்.

"மதுரைக்கு உதவப் போவதாகக் கேள்விப்பட்டேன். வேண்டாம் விட்டுவிடு. அது அவர்கள் பிரச்சினை. மீறி உதவித்தான் தீருவேன் என்றால் வெற்றி பெற்ற கையோடு மதுரை வசம் இருக்கும் மொத்த பாளையங்களில் மூன்றில் ஒரு பங்கை இந்தச் சேதுநாட்டிற்கென கிரயமாக்கிக் கொள்ள வேண்டும்...

மாறாக தஞ்சை அழகிரிக்கு உதவிடப் போய் அழிந்து சவமாகிப் போனாரே உன் தந்தை அதுபோல் ஆகிவிடாதே.



ஏன் என்றால் இந்தச் சந்தர்ப்பத்தில் உன்னையும் அது போலக் கொல்ல ஒரு திட்டம் இருப்பதாக ஒரு தகவல் எனக்குக் கிட்டியது. எச்சரிக்கை!"

— தாதியத் தேவன் பெரும் ராஜ்ய ரகசியமொன்றைத் தரிசனத்தோடு கூறுவது போலக் கூறிவிட்டு வந்த வேகத்தோடு திரும்ப, மொத்தப் பேரும் கிழவனைப் பார்த்தனர்.

"சரி— நாம் இனி நமது காரியத்தைப் பார்க்கலாமா?"— இது கிழவன்.

"என்ன சேதுபதி இது— உங்கள் பங்காளி அவர்தான் அரசர் போலவும், உங்களுக்கு எதுவும் தெரியாது என்கிற மாதிரியும் ஏதேதோ கூறிவிட்டுக் கட்டளையிட்டுவிட்டும் போகிறாரே— அது பற்றி?"— சின்னகாத்ரி கேட்கிறார்.

"பாவம் தாதியன்— இப்படி அவ்வப்போது வந்து அதட்டலாகப் பேசிவிட்டுப் போவதில் அவனுக்கு எப்பொழுதுமே பிரியம் அதிகம். அதை விடுங்கள். நாம் நமது விஷயத்திற்கு வருவோம்" என்று பேச்சை வேறு திசைக்குத் திருப்ப முனையும்போது கள்ளர் குலத் தலைவனும் அருமைக் காதலி நாச்சியின் சக உதிரனுமான இரகுநாதத் தொண்டைமான் அங்கு ஒரு புலியைப் போலப் பிரவேசிக்கிறான். யுத்தகளங்களில் எல்லாம் கிழவனுக்கு உறுதுணையாகத் திகழ்ந்த மகா வீரன். பிரவேசித்தவன் கிழவனை மண்டியிட்டு வணங்கி விட்டு, "மாமா தாதியன் வந்தானா?" என்று கேட்க, கிழவரும் ஆமோதிப்பாகத் தலையை அசைக்க, "நான் ஒரு சதிச் செய்தியைக் கேள்விப்பட்டேன்—" என்று தயக்கத்தோடு கூறத் தொடங்க—

"தெரியும் இரகுநாதா—" என்ற கிழவன் அவனையே சற்று ஆச்சரியத்தில் ஆழ்த்தினார்.

"தாதியன் தனது ஆட்களை அனுப்பி மதுரை யுத்தத்தில் என்னைக் கொல்ல முடிவு செய்திருக்கிறான். நான் இங்கிருந்து படை அனுப்பும்போது அவர்கள் நமது வீரர்களைப் போலவே

உடன் வரப் போகிறார்கள்– சொல்லப் போனால் எனக்கான கவசக் கூட்டமாகவே இருக்கப் போகிறார்கள். அந்தக் கவசக் கூட்டமே யுத்தத்தின்போது என்னைத் திருப்பித் தாக்கும். இதுதானே சேதி?" என்று நிறுத்தி நிதானமாகக் கேட்க தர்பார் மண்டபமே பிளந்த வாயை மூடாதபடிக் கிழவனைப் பார்த்தது.

சின்னகாத்ரி அதிர்ச்சியின் உச்சாணிக் கொம்பில் ஏறிய வராகத் தெரிந்தார்.

ஆனால் சீதக்காதி முகத்தில் மட்டும் சிறியதாய் ஒரு குறுநகை.

"என்ன வள்ளலே.. பங்காளி சதி செய்யப் போகிறான் என்கிறார் தொண்டைமான். தெரியும் என்று அதன் பரிமாணத்தை விளக்குகிறார் சேதுபதி. நான் அதிர்ந்து போய்க் கிடக்கிறேன். நீங்கள் சிரிக்கிறீர்கள்...?"

"பாவம் அந்தப் பங்காளி– ஒரு சதியைக் கூடப் பிறர் அறியாதபடி செய்யத் தெரியவில்லை. அங்கே திட்டம் போடும் முன் இங்கே கசிந்துவிடுகிறது. எத்தனை முறைதான் இப்படித் தாதியத் தேவனும் திட்டமிட்டுத் திட்டமிட்டுத் தன் உள்மனப் புழுக்கத்திற்கு வடிகால் தேடுவாரோ...? அதை நினைத்தேன் சிரிப்பு வந்துவிட்டது. வேறு ஒன்றுமில்லை" என்றார் சீதக்காதி.

"சரி– இதை எப்படிச் சமாளிக்கப் போகிறீர்கள்...? ஒரு பக்கம் சதி வேலை; மறுபக்கம் காப்பாற்றுவது போல ஆலோசனை. அந்த மனிதனுக்கு இங்கே மரியாதையான வரவேற்பு வேறு–

சேதுபதி– உங்கள் பங்காளி அந்த மதுரைப் பகைவனை விட மோசமானவராக இருக்கிறாரே... இதை இப்படியே தாங்கள் விட்டு வைத்திருப்பதுதான் புரியவில்லை."

– சின்னகாத்ரி பொன்னாத்தாளை மறந்து பேசுவதை என்னென்பது...?



கிழவன் அதற்கொரு பதிலைக் கூறாமல் மதுரை பற்றியும் ருஸ்தம்கான் பற்றியும் பேச ஆரம்பித்தார்.

"காத்ரி– போதும் அந்தப் பேச்சை விடு. தாதியத் தேவன் ஒரு அற்பப் பகையாளி. அவனைச் சமாளிப்பது எனக்கொன்றும் புதிய விஷயமில்லை. மதுரை விஷயம் பேசு. அந்த ருஸ்தும்கானை நீ பார்த்திருக்கிறாயா? அவனது பராக்ரமம் எப்படிப் பட்டது– எதுவெல்லாம் அவன் பலம்...? பட்டியலிட முடியுமா உன்னால்...?"

"முடியுமாவா– கன்னிவாடி புரவிச் சந்தைக்கு வந்திருக்கும் அவனை எத்தனையோ முறை சந்தித்திருக்கிறேனே– குதிரைக்காரனாக இருந்தாலும் பயங்கர மூளைக்காரன். இல்லாவிட்டால் சொக்கநாத நாயக்கருக்கு நண்பனாகி அவரைக் காப்பாற்றுவது போல நடித்துத் திருச்சியைப் பிடித்து, பின் மதுரையையும் வளைத்து அதில் அவரை மண்பொம்மை போலக் கொலுவிருக்கச் செய்துவிட்டு, அடுத்த வாரிசாக இருந்து கொண்டு கேள்வி கேட்ட அவரது தம்பி முத்துலிங்கத்தையும் தன் பிடிக்குள் கொண்டு வந்திருப்பானா?"

"அப்படிப்பட்டவனுக்கு எப்படி நாயக்க வீரர்கள் கட்டுப் படுகின்றனர்? அதிலும் கோவிந்தப்பையா, வெங்கட கிருஷ்ணப்பர் போன்றோர் இருக்கையில்– படைக் கிளர்ச்சி ஏற்பட்டால் கூடப் போதுமே? அந்தக் குதிரைக்காரன் சின்னா பின்னமாகி விடுவானே?"

"அங்குதான் இருக்கிறது அவனது சாதுர்யம். மொகலாயர்களுக்கே பெரும் பலம் அவர்களது படையில் அவர்கள் வைத்திருக்கும் கந்தகக் குண்டுகளும் குழாய் வெடியும்தான்–"

"குழாய் வெடியா...?"

"ஆமாம்– உலக்கையைவிடப் பருமனான இரும்புக் குழாய்கள் எரிகங்குகளைப் போலக் குண்டுகளைப் பொழிகின்றன. ஒரே சமயத்தில் கல் கோட்டையே மண்மேடாகிப் போகிறது."

"இதைப்பற்றிக் கோவிந்தப்பையா எதையுமே என்னிடம் கூறவில்லையே..."

"இதைப்பற்றி எல்லாம் தெரியவந்தால் உதவுவதற்கு நீங்கள் யோசிக்கக்கூடும் என்பதால் இருக்கலாம். இருபதாயிரம் குண்டுகளை வைத்திருக்கிறானே— இல்லாவிட்டால் உங்கள் உதவிக்கும் என் உதவிக்கும் எதற்கு வரப்போகிறார் அவர்?"

"நிறுத்துங்கள்— என்ன பெரிய குழாய்க் குண்டுகள்? நாங்கள் அதைப் பார்த்திராதவர்கள் அல்ல கன்னிவாடி பாளையாதிபதி—

பறங்கியர்கள் கடல் வழியாகக் கொண்டு வந்ததைத்தான் முகலாயர்கள் தங்களுடையதாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தொண்டித் துறைமுகம் பார்த்திராத விஷயமில்லை அது—

நாளையே எங்கள் வள்ளல் சீதக்காதி மரைக்காயர் மனது வைத்தால் அவரது வர்த்தகப்படை அயல்நாடுகளிலிருந்து கப்பல் கப்பலாக அள்ளிக் கொண்டு வந்துவிடும் அதை— என்ன வள்ளலே— என்ன சொல்கிறீர்கள்?"

அம்பலக்காரன் கித்தாப்பாய்க் கேட்க, சீதக்காதியும் ஆமோதிப்பாகச் சிரிக்க கிழவன் அப்போதே தாடையை வருடியபடி அந்தக் குண்டு மழையைச் சமாளிக்கும் வழிவகை பற்றி யோசிக்கத் தொடங்கிவிட்டார்.

இங்கே ஆலோசனைக் கூட்டத்தில் இப்படி ஒருவிதமாய்ச் சூடு பறக்கும் அதே தருணம் மதுரையில்...

அரியணை மண்டபத்தில் பிரதானமாக இருந்தது மதுரைப் பேரரசரின் சிம்மாசனம். அதற்கு ஒரு படிக்குக் கீழே இரண்டு பக்கங்களிலும் சரியாசனங்களாக இரு ஆசனங்கள். அதற்கும் ஒருபடி கீழே அடுத்த வரிசை. புலவர் பெருமக்கள், சோதிடர்கள், ராஜ்ய விருந்தினர்களுக்கெல்லாம் தனித்தனியே ஆசனங்கள்.



அந்த ஆசனாதிபதிகளுக்கேற்பக் கட்டியங்காரர்கள்! எல்லோருமே குழுமியிருக்கிறார்கள். சாதாரணமாய் அவைப் பிரதானிகளின் திரட்சிக்குப் பின் அவைதானி ஒருத்தன் நாயக்கரின் இருப்பிடத்திற்குச் சென்று அவை தயாராகிவிட்டதைக் கூறுவான். பிறகுதான் நாயக்கரும் புறப்பட்டு வருவார்.

துந்துபி எக்காளமிடும். கட்டியம் வழிமொழியும். இதுதான் அன்றாட நடப்பு. எல்லோரும் எழுந்து நிற்க நாயக்கர் வந்து அமர்ந்தபின், அவர் அமரச் சொன்னபின்தான் எல்லோருமே அமருவார்கள். இதில் சின்ன மாற்றத்திற்கும் இடம் கிடையாது.

இன்று அதில் ஒரு பெரிய மாற்றம் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. கை பிசைந்தபடி அதைப் பார்த்துக் கொண்டிருந்தனர் அவையினர்.

குறிப்பாக கோவிந்தப்பையா, வெங்கடகிருஷ்ணப்பர், குமாரபிள்ளை போன்றவர்கள்—

அந்தப் பேரவையில் திருமலை நாயக்கரும் அவருக்குப் பின் சொக்கநாத நாயக்கரும் அமர்ந்திருந்த சிம்மாசனத்திற்குப் பக்கத்தில் இன்னோர் ஆசனம்! அதுவும் சரிக்குச் சமமாக—

யாருக்காக?

## 13

**யுத்த முகாந்திரத்தில் எதிரியின் வியூகங்களுக்கு ஏற்பத் திட்டமிடுவதும், பதில் வியூகம் அமைப்பதும்தான் வெற்றிக்கு முதல் படி. படையின் எண்ணிக்கை எத்தனைப் பெரிதாக இருப்பினும் அவர்கள் மனம் நடுங்கும் உபாயங்களைக் கையிலெடுத்தால் அந்தப் படை கலகலத்துவிடும்.**

*உடல் வலிமையைப் பெரிதாகக் காட்டிக் களைத்துப் போவதை விட, உள்ள வலிமையைக் காட்டி ஒரு நொடியிலும், ஒரு அடியிலும் வீழ்த்தும் விதங்கள் பல உண்டு.*

*— யுத்த தந்திரம்*

தர்பார் மண்டபத்தில் அரசனின் அரியாசனத்துக்குச் சமமாக ஒரு சரியாசனம். அதுவும் அதே நீள, அகல சிம்ம பீடத்தோடு போடப்பட்டிருக்க மொத்த அவையே அதைப் பார்த்துக் கலகலத்துப் போகிறது.

மேலும் காட்சிகள் அரங்கேற ஆரம்பிக்கின்றன. வெங்கட கிருஷ்ணப்பரும், கோவிந்தப்பய்யாவும் பார்வையால் மோதிக் கொள்கின்றனர். புருவத்தில் கேள்வி வளைக்கின்றனர்.

பொதுவில் அரச பரிபாலனத்தில் அரியாசன மேடை என்பது தெய்வக் குடியிருப்புக்கான கருவறைக்குச் சமமான இடம்.

அங்கே பிறர் கால் படுவது கூட ஒரு பெருங் குற்றம். அப்படி ஓர் இடத்தில் அதற்குச் சமமாக ஒரு ஆசனம் போடப் பட்டிருப்பதைப் பார்த்து விக்கித்துக் கிடக்கும்போது, ருஸ்தும் கானின் வலது கையைப் போன்ற கையும் அங்கே வீராவேசப் பிரவேசம் செய்து அந்த ஆசனங்களுக்குச் சமீபத்தில் கிடக்கும் ஓர் ஆசனத்தை எட்டி அதில் அமராதபடி நின்று பேரவையை நோக்கித் தொடங்கினான்.

எல்லோரும் வந்து விட்டார்களா என்பதுபோல ஒரு பார்வை வேறு பார்த்தான்.

வெங்கடகிருஷ்ணப்பர் அவனைப் பார்த்து கோபத்தோடு ஏதோ சொல்ல வாயெடுத்தார். அதற்குள் கட்டியப் பேரொலி காதில் மோதத் தொடங்கியது. அதில் சுந்தரத் தெலுங்கின் தேர்ந்த வார்த்தைக் கட்டுகள்.



"இராஜாதி இராஜ– இராஜ குலதிலக வீரபராக்ரம, வீரதீரம் சேசின, நாயக சிம்மலு சொக்கநாத நாயகலு பராக்– பராக்–"

கட்டியத்தைத் தொடர்ந்து எல்லோருடைய பார்வையும் தர்பார் மண்டப முகப்பினைப் பார்க்கிறது. ஏகநாட்களுக்குப் பிறகு சொக்கநாத நாயக்கர் அவைப் பிரவேசம் செய்கிறாரா என்ன? ஆனால் ஒரு வெள்ளித் தட்டில் சொக்கநாத நாயக்கரின் தலைக் கிரீடத்தை ஏந்தியபடி ஒருவன் நடந்து வர அவனோடு இணைந்து நெஞ்சு நிமிர்த்தியபடி உடன் வந்து கொண்டிருந்தான் ருஸ்தும்கான்.

கிரீடத்தை ஏந்தியவன் அரியாசனம் முன் நின்றுவிட ருஸ்தும்கான் அந்தக் கிரீடத்தைத் தன் கரங்களால் தொட்டுத் தூக்கி நாயக்கர் அமரும் அரியாசனத்தில் கொண்டு போய் வைத்துவிட்டுப் பக்கத்தில் போடப்பட்டிருக்கும் புதிய ஆசனத்தை ஒட்டி நின்று கொண்டான், எல்லோரும் பார்க்கும் படியாக அந்தச் சிம்மாசனத்தைப் பார்த்து ஒரு வணக்கமும் செய்தான்.

அடுத்த நொடி சொல்லி வைத்த மாதிரி "வீராதி வீர வீர பராக்கிரமர் சண்டமாருதப் பிரசண்டர் ஜயவீரதிலகர் நாயக்க ராஜ்ய காவலர் யுவ நாயகர் ஆலம்பனா ருஸ்தும் கான்–" என்று கையும் கத்திச் சொல்ல, பதிலுக்கு 'வாழ்க' சப்தம் அவையில் ஊடுருவி நின்ற ருஸ்தும்கானின் காவல் வீரர்களிடமிருந்து எதிரொலித்தது.

கோவிந்தப்பையாவும், வெங்கடகிருஷ்ணப்பரும், குமார பிள்ளையும் அதைக் கேட்டு முகத்தில் மூர்க்க உணர்வினைப் பரத்தி விட்டுக் கொள்ள இராயஸம் உள்ளிட்ட மற்றுமுள்ள அவைப் பிரதானிகளும் இதென்ன புது மாதிரியான பழக்கம் என்பது போலப் பார்க்க கையும் பதிலுக்குக் கத்தினான்.

"இந்த மண்ணின் மாவீரரைப் போற்றி நான் கோஷ மிடும் போது இங்கே சிலர் வாழ்த்த மனமின்றி நிற்பதைப்

பார்க்கிறேன். அவர்கள் உடனடியாகத் தங்கள் வாழ்த்தினை இங்கே பதிவு செய்யத் தவறினால் அவர்கள் இந்த அவையை அவமதித்தவர்களாகக் கருதப்பட்டுக் கசையடிக்கும், கடுந் தண்டனைக்கும் உள்ளாக்கப்படுவார்கள். கபர்தார்..."

அவனது எச்சரிக்கையைத் தொடர்ந்து 'வாழ்க... வாழ்க' என்கிற வாழ்த்தொலிகள் சுருதியில்லாத குரலில் அங்கும் இங்குமாகப் பரவலாக ஒலித்து அடங்கின. ருஸ்தம்கான் அதைக் கேட்டபடியே புதிய ஆசனத்தில் அமரத் தொடங்கினான்.

அப்பொழுதும் கூடக் கோவிந்தப்பையாவும், வெங்கடகிருஷ்ணப்பரும் வாழ்த்த விரும்பாமல் இறுக்கமாக சையூமையும், ருஸ்தம்கானையும் வெறித்தார்கள்.

குமாரபிள்ளை இரு கைகளைக் கட்டிக் கொண்டு மிகுந்த உணர்ச்சிப் பாட்டோடு அவர்களை ஒட்டி அமர்ந்திருக்கப் பொறுமை இழந்துவிட்ட நிலையில் கோவிந்தப்பையா எழுந்து ருஸ்தம்கானைப் பார்த்துப் பேச ஆரம்பித்தார்.

"ருஸ்தம்கான். என்ன இது? இங்கு நடப்பவை எல்லாம் எனக்குப் புதியதாகவும் புதிராகவும் இருக்கிறது. மன்னருக்குப் பதிலாக அவரது கிரீடம் அரியணைக்கு வந்திருக்கிறது. பக்கத்திலேயே சரியாசனமாக ஒரு அரியாசனம் போடப்பட்டிருக்க அதில் நீ அமர்ந்திருக்கிறாய். என்ன இதெல்லாம்?"

"தளவாய்க்கு ஒரு எச்சரிக்கை. மாவீரர் ருஸ்தமை முதலில் நீங்கள் அரச பாவனைகளோடு அணுகக் கற்றுக் கொள்ள வேண்டும். பெயர் சொல்லி அழைப்பதும், நீ வா, போ என்கிற ஒருமைகளும் அவர் கீர்த்திக்குப் பங்கம் உண்டாக்கக் கூடியவை. எனவே முதலும் கடைசியுமாக எச்சரிக்கிறேன்." இடையிட்டது சையூமின் அதிகாரக் குரல்.

"வாயை மூடு. கேட்ட கேள்விக்குப் பதிலேதும் சொல்லாமல் எங்கள் தளவாய்க்குக் கட்டளையிட நீ யார்? முதலில் அந்த ஆசனத்தை விட்டு எழுந்திரு. கீழிறங்கு."



கோவிந்தப்பையாவுக்கு வக்காலத்தாக இடையிட்டுக் கத்தினார் குமாரபிள்ளை.

அடுத்த க்ஷணம் ருஸ்தம்கான் முகம் கோவைப் பழம் போலச் சிவக்கத் தொடங்கியது.

"குமாரபிள்ளை... என்ன இது? சையூம் என் அந்தரங்க மெய்க்காப்பாளன். இந்த நொடி நான் இந்த மதுரை நாயக்கப் பேரரசின் காவலன். அதைப் புரிந்து கொண்டு அதற்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் இந்த ராஜ்யத்து மட்டக் குதிரைகளுக்கு நீ லாடம் அடிக்க நேரும். ஜாக்கிரதை..."

சிவந்த அவன் முகத்திலிருந்து உதிர்ந்த சொற்கள் அவையையே மிரட்டியது. எல்லோரும் தொண்டையில் முள் ஏறியது போல விக்கித்துப் போக, "அரசனா... யார் கொடுத்தது உனக்கு அந்தப் பொறுப்பை?" என்று வெங்கடகிருஷ்ணப்பர் மட்டும் இடையிட்டு எகிறினார்.

"சையூம், அந்த ஓலையை வாசித்துக்காட்டு முதலில்." ருஸ்தம்கான் சையூமைப் பார்த்துக் கட்டளையிட அவன் இடையில் இருந்து சுருட்டி அடக்கப்பட்டிருந்த ஓர் ஓலையை எடுத்து விரித்து வாசிக்கத் தொடங்கினான்.

"அவை பிரதானிகளுக்கு என் ஆசிகள். பெரும் உடல்நலக் குறைபாடு எனக்கு ஏற்பட்டிருப்பதாலும், மனநலமும் இல்லாததாலும் தற்காலிகமாக இந்த நாயக்க ராஜ்யத்தைப் பேணிப் பரிபாலிக்கும் முழுப் பொறுப்பினை, நான் மிகுந்த நம்பிக்கையோடும் எனக்கு உற்ற துணையாகவும் இருந்து செயல்பட்டுவரும் ருஸ்தம்கான் வசம் ஒப்படைக்கச் சித்தம் கொண்டுள்ளேன். என் மனையாளோ, சகோதரனோ கூட இவ்வேளையில் இந்த ராஜ்யத்தை நிர்வகிப்பது என்பது இயலாது என்று நான் கருதுவதால் முன்னாளைய புரவிப் படைப் பிரிவின் தளபதியும், இந்நாளில் எனது மெய்க் காவலனுமாய் விளங்கும் ருஸ்தம்கானுக்குப் பிரதானிகள் சகல ஒத்துழைப்பும் தரக் கட்டளையிடுகிறேன்.

நாயக்க ராஜ்யத்துக்கு நெருக்கடி நேரிட்ட கட்டங்களில் எல்லாம் உறுதுணையாக இருந்து உற்றதுணை செய்த ருஸ்தும்கானுக்கு எதிராக எவரேனும் ஒரு சொல் உரைத்தாலும் அது எனக்கெதிராகக் கூறப்பட்டதாகக் கொள்ளப்பட்டு அவருக்குச் சிரச்சேதம்வரை தண்டனை தர ருஸ்தும்கானுக்கு அதிகாரமுண்டு என்பதையும் இங்கே கூறி இந்த நாயக்க ராஜ்ய அரசனாகிய சொக்கநாத நாயக்கன் கீறலிடுகிறேன். வாழ்க ருஸ்தும்கான் கொற்றம்.

வளர்க நாயக்கப் பேரரசின் ஏற்றம்."

முழுதும் ஓலையை வாசித்து முடித்துவிட்டு நிமிர, பிரதானிகள் விக்கித்துப் போய் இருந்தனர். அதுவரை எதுவுமே பேசாத இராயஸமாகிய சொர்ணபந்துவும், பிரதானிகளில் ஒருவரான தீட்சிதரும் கூட உறை கட்டிக் கொண்டது போல ஓர் இறுக்கம் கொள்ள, சில நொடிகள் கரைய, அதை உலுக்கி எடுப்பது போலப் பதிலுரைக்கத் தொடங்கினார் வெங்கடகிருஷ்ணப்பர்.

"இப்படி நீங்களே எழுதித் தயாரித்த ஓலையைக் கேட்டெல்லாம் யாரும் இங்கே ஏமாந்து விட மாட்டோம். அரசரே நேரில் வந்து கூறினால்கூட இதை இந்த அவை ஏற்றுக் கொள்ளாது. எங்கே யார் இருப்பது என்று ஒரு வகைதொகை கிடையாதா? அரசரை உன் கைப்பாவையாக வைத்துக் கொண்டு அத்துமீறி நீ நடந்து கொண்டிருப்பது மன்னிக்க முடியாத குற்றம் ருஸ்தும். நீ யார்? எப்படிப்பட்டவன் என்பதை எல்லோருமே அறிவோம். ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்துப் பின் மனிதரையே கடிக்கத் தொடங்கி விட்ட ஓநாயும் நீயும் ஒன்றாகிவிட்டாய் ருஸ்தும். இதை எல்லாம் பார்த்துக் கொண்டு நிற்க நாங்கள் ஒன்றும் பேடிகள் அல்ல. நான் இந்த நாயக்க ராஜ்யத்தின் தலைமைக் காப்பாளன். யாரங்கே? இந்தச் சண்டாளனைப் பிடித்து முதலில் விலங்கிடுங்கள்."



வெங்கடகிருஷ்ணப்பர் பொங்கிப் பிரவாகித்தார். ஆனால் எதிரொலிதான் புதுமையாக இருந்தது. வேறு விதமாகவும் ஆனது.

வழக்கமாக ஓடிவரும் நாயக்க வீரர்களுக்குப் பதிலாக ருஸ்தும்மின் அடிவருடிக் கூட்டம் ஒன்று அவைக்குள் ஆவேசமாக நுழைந்து அப்படியே வெங்கடகிருஷ்ணப்பரைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துச் செல்லத் தொடங்கியது.

அதைத் தடுக்கப் பார்த்த கோவிந்தப்பையாவையும், குமாரபிள்ளையையும் கூட குண்டுக்கட்டாகத் தூக்கிச் செல்லத் தொடங்கினார்கள்.

ராயஸமும் அவரை ஒட்டி அமர்ந்திருக்கும் தீட்சிதரும் தங்களுக்குள் ரகசியமாகப் பேசிக் கொள்ளத் தொடங்கினர்.

"எல்லாம் தெரிந்திருந்தும் வெங்கடகிருஷ்ணப்பர் அவசரப்பட்டு உணர்ச்சிவசப்பட்டுவிட்டாரே"

" ஹூம் விதி– நாயக்கரே பொம்மையாக இருக்கும்போது நாம் எம்மாத்திரம் என்று யோசிக்க வேண்டாமா?"

"திரும்பின பக்கமெல்லாம் அவனது ஆட்கள். எங்கிருந்து தான் வந்தார்களோ? எப்படித்தான் நுழைந்தார்களோ? இதில் நாம் செய்ய என்ன இருக்கிறது?"

"நான் கூட அந்தப் புதிய அரியணையில் முத்துலிங்கம் தான் வந்து அமரப் போகிறான் என்று நினைத்தேன். இறுதியில் பார்த்தால் இவனே வந்து உட்கார்ந்து விட்டானே. முத்துலிங்கம் எப்படி விட்டான்?"

"இரவு பகல் லாகிரி மயக்கங்களிலேயே இருந்தால் அரியணையில் மட்டும் அல்ல அவன் தலை மேலேயே கூட இந்தக் குதிரைக்காரன் ஏறி அமர்ந்து விடுவான்."

ராயஸமும் தீட்சதரும் பேசுவதைக் கவனித்த ருஸ்தும்கான் சந்தடி அடங்கின அந்த அமைதியில் அவர்கள் குசுகுசுப்பைக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினான்.

அவர்களும் அதை உணர்ந்தது போல அவனைப் பார்த்து சற்று வழிசலாகச் சிரித்தார்கள்.

"என்ன இராயஸம்- தீட்சதரோடு என்ன குசுகுசுப்பு?"

"அது- அது- ஒன்றுமில்லை ருஸ்தம்கான். மன்னிக்க வேண்டும். ஒன்றுமில்லை."

"உம், சொல்லுங்கள்."

"இல்லை. நிஜமாக ஒன்றுமில்லை என்று சொல்ல வந்தேன். நாயக்கரே அவைக்கு ஓலைபோக்கிவிட்ட பிறகு எதிர்ப்பது அழகா என்ன?"

"பரவாயில்லையே. சையும்- இராயஸம் வழிக்கு வந்து விட்டார். என்ன தீட்சதரே நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்?"

ருஸ்தம்கானின் அந்தக் கேள்வி தீட்சதரை ஒரு கணம் மிரட்டி உலுக்கிற்று.

"நான் எதுவும் சொல்லவில்லையே" என்று கைகள் நடுங்கப் பேசினார்.

ருஸ்தம் மொத்த அவையை அப்படியே ஊடுருவத் தொடங்கினான்.

கொம்பேறிமூர்க்கப் பாம்பு போல் இடுங்கல் பார்வை பார்த்தவன்.

"சையும் இனி நீதான் தளவாய்- உனக்குத் தேவையான அத்தனைச் சகாக்களையும் நீயே முடிவு செய்து அவர்களுக்குப் பொறுப்பினைக் கொடுத்து விடு. எங்கும் யாரும் எனக்கெதிராகவோ, இந்த நாயக்கராட்சிக்கு எதிராகவோ ஒரு துரும்பைக் கூட அசைக்கக் கூடாது. அரசருக்கு மனநலமும் உடல் நலமுமில்லாத நிலையில் அப்படி செய்ய முற்பட்டால் என்னிடம் நீ எதையும் கேட்க வேண்டிய அவசியமில்லை. அவர்களை நீ எது வேண்டுமானால் செய்து கொள்ளலாம். திண்டுக்கல்,



திருச்சி, தஞ்சை வரை எல்லா இடங்களிலும் உன் பார்வை இருக்க வேண்டும். கவனத்தில் கொள். அடுத்தும் ஒரு முக்கிய சேதி. தூத்துக்குடித் துறைமுகத்துக்குப் பன்னிரண்டு கப்பல்களில் நமக்காக நவீன ஆயுதங்களை டெல்லி பாதுஷா அனுப்பி வைத்துள்ளார். அவைகளில் ஐந்நூறு பேர் கொண்ட வல்லுநர் படை ஒன்றும் அடக்கம். அவர்கள் பத்திரமாக மதுரை வந்து சேர வேண்டும். அவர்களைத் திருச்சிக்கும் மதுரைக்கும் நடுவிலான திண்டுக்கல் மலைக்கோட்டையில் தங்கச் செய்து விடு. நான் அவர்களை அங்கே சந்தித்துப் பேசிக் கொள்கிறேன்" என்றபடி அரியணையை விட்டு எழுந்து தர்பார் மண்டபம் நீங்கத் தொடங்கினான்.

எல்லோரும் மரியாதையாக எழுந்து நிற்கத் தொடங்கினார்கள்.

அதைக் காணாததைக் கண்டவன் போல் கண்டு பெரிதும் ரசித்தபடியே தன் துண்டுத் தாடியை நீவி விட்டுக் கொண்டே நடந்தான்.

சையும் மனத்திற்குள் அதை ரசித்தபடி, "அவை கலையலாம்" என்று மிடுக்காகக் கூறிவிட்டு ருஸ்தமைப் பின் தொடரத் தொடங்கினான்.

## 14

'முகவை எனும் பெயரே முத்தமிழின் சொத்தாக இலங்கும் தமிழ்க் கோடி எழிற் சேது மண்டலத்தில் வீரம் நிலமாக, வெற்றியதன் பயிராக ஆக்கிப் படைத்தான் அருந் தலைவன் சேதுபதி. பல்லாயிரம் காலம் பாண்டியரின் பொன்னாட்டைக் காத்துப் புகழ் படைத்த காளையரின்

*திருநாடே முகவை வளநாடாம்! மெய்குழலார் தன்னாடாம் தன்னேரிலாத் தமிழ்க் கிறைவன் சேதுபதி.'*

*— கவியரசு கண்ணதாசன்*

**வ**ழக்கமாய் சொக்கநாதர் அரண்மனையின் நைருத பாகத்தில் உள்ள சயன அறையில்தான் தங்குவார். அங்கே கிழக்கு மேற்காகப் போடப்பட்ட பர்மியத் தேக்குக் கட்டிலில் சீனப்பட்டு மெத்தையும், மிருதங்கத்தை ஞாபகப்படுத்தும் திண்டுகளும் ஏகத்துக்கும் போடப்பட்டிருப்பதுண்டு.

சயனக் கட்டிலை ஒட்டி முக்காலியும் அதன்மேல செம்பாலான தாம்பூல உமிழ் வாங்கி ஒன்றும் இருக்கும்.

அருகாமைச் சாளரத்தில் வெட்டி வேர்த் தட்டி ஒன்று ஈரக்கசிவோடு குடியிருக்கும். வாசக்காற்று ஈரக்காற்றாகி மேனி வருடும்.

இன்று எல்லாமே மாற்றப்பட்டு அங்கே ஹூக்கா கும்பட்டி ஒன்றும், பாரசீகத்துப் பளிங்குப் பெண் சிற்பம் ஒன்றும் அரங்கேறியிருந்தன.

எல்லாம் ருஸ்தம்கான் தனக்கெனச் செய்துகொண்ட மாற்றங்கள்.

தர்பார் மண்டபத்தை விட்டு வெளியே வந்த ஜோரில் அங்கு நுழைந்தவன் உற்சாகமாக ஹூக்கா குழலை உதடுகளின் இடுக்கில் செருகி ஆவியை உள்வாங்கி நெஞ்சினை நிமிர்த்தத் தொடங்கினான்.

பின்னாலேயே வந்த சையூம், "நல்லவேளை— பெரிதாக எதுவும் ரசாபாசமாகிவிடவில்லை. எங்கே ஒட்டு மொத்தமாக எல்லோரும் எதிர்த்துக் கூச்சல் போடுவார்களோ என்று பயந்துவிட்டேன். கப்பல் வந்திருக்கிறது. தனிப்படை வந்திருக்கிறது என்கிற பொய்யும் நன்றாகவே வேலை செய்யும்"— என்றபடி எதிரில் வந்து நின்றான்.



"இன்றைய பொய் நாளையே உண்மையாகும் பார்— போகட்டும் அந்த மூன்று விசுவாசிகளையும் என்ன செய்தாய்?"

"சிறையில்தான் அடைத்திருக்கிறேன்—"

"முதல் காரியமாக அந்த நாய்களைத் தூக்கிலே போடு. அவர்கள் வழிக்கு வரமாட்டார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும் சையூம்."

"அவசரப்பட வேண்டாம். அவர்கள் மேல் மக்களுக்கு மிகுந்த மதிப்பும் மரியாதையும் இருக்கிறது. அவர்களைச் சமாதானப்படுத்தி பக்கமாக வைத்துக்கொண்டு ராஜ்யத்தை நடத்திப் பார்ப்பதுதான் விவேகம். அத்துடன் இந்த நாயக்க ராட்சியில் இந்த அரண்மனைக்குள்ளும், படைப்பிரிவிலும் வேண்டுமானால் நம்மவர்கள் நிறைய பேர் இருக்கலாம். ஆனால் மக்களைப் பொறுத்த மட்டில் அவ்வளவு பேரும் நாயக்க ராஜ்யத்தின் விசுவாசிகள். நீங்களும் நானும் நிஜமாலுமே இங்கே நல்லாட்சி தர விரும்பினாலும் அதை நம்ப ஒருவர்கூடத் தயாரில்லை. நம்மை டெல்லியின் பிரதிநிதிகளாகவும். இஸ்லாமிய ஆட்சியாளர்களாகவும் மட்டுமே பார்ப்பார்கள். எனவே இன்று நீங்கள் செய்ததுபோல தலைக் கிரீடத்தை வைத்துக்கொண்டு சிறிது காலத்தைக் கடத்துவதுதான் உசிதம்.

அதற்குள் எப்பாடுபட்டாவது டெல்லியோடு நிஜமாலுமே ஒரு நல்ல தொடர்பை உருவாக்கிக் கொள்ளுங்கள். பீஜப்பூர் சுல்தான்களோடும் நல்லுறவை வளர்த்துக் கொள்வோம். இப்படி எல்லாம் போனால் தாக்குப் பிடிக்கலாம். இல்லாவிட்டால் எந்த நேரமும் எதுவும் நடக்கலாம்—"

"என்ன சையூம்— எப்பொழுதும் ஆலோசனை என்கிற பேரில் பயத்தையே மூட்டுகிறாய் நீ—"

"நான் என்ன செய்யட்டும்? உங்களை இந்த அளவு அவை பிரதானிகள் ஏற்றுக் கொண்டிருப்பதே எனக்கு மிகப் பெரிய

அதிர்ஷ்டமான ஒன்றாகத்தான் தோன்றுகிறது. ஒருவேளை நீங்கள் எதுவரை போகிறீர்கள் பார்க்கலாம் என்று விட்டு வைத்திருக்கிறார்களோ என்றுகூடச் சந்தேகப்படத் தோன்று கிறது.

"வாயை மூடு– என்னை எதிர்க்க நினைத்தவனுக்கெல் லாம் பதவி– மான்யம் என்று தந்து கட்டி வைத்திருப்பதை மறந்து விட்டாயா? சொக்கநாதராக இருந்தால் சல்லிக்காசு அவர்களுக்குத் தர மாட்டார். ஒருவிதத்தில் நான் வள்ளல் இங்கே"

"உங்களுக்கு எதைச் சொல்லிப் புரிய வைப்பேன்–?"– சையூம் நிஜமாலுமே கைகளைப் பிசைந்து கொண்டான்.

"எதையும் சொல்லாதே சையூம். நான் அனைத்தையும் அறிவேன். அடுத்த கட்டமாக அவைபிரதானிகளாக நமக்கு மிக விசுவாசமானவர்களை ஆக்க வேண்டும். அதற்கு வழி சொல்"

"மிக அவசரப்படுகிறீர்கள்– முத்துலிங்கம் என்கிற ஒரு வாரிசைப் பற்றியோ, மங்கம்மாள் என்கிற ஒரு புத்திசாலிப் பெண்ணைப் பற்றியோ துளிகூடக் கவலைப்படாமல் பேசுகிறீர்கள்–"

"அவர்களைப் பற்றிக் கவலைப்பட என்ன இருக்கிறது? மங்கம்மாளை அந்தகாரக் கொட்டாரத்தில் தூக்கிப் போடு. கதறிக் கொண்டு வழிக்கு வருவாள். முத்துலிங்கம் நான் சொல்வதை எல்லாம் கேட்பவன். அவனுக்குப் பெண்ணும் போதையும் போதுமானது. அதைப் புரிந்து கொள்."

"எத்தனை நாளைக்கு...? திரும்பவும் சொல்கிறேன். அண்டை அயலில் உள்ளவர்கள் உங்களைக் கவனித்துக் கொண்டே இருக்கிறார்கள். அரச வம்சாவளியில் வந்தவர்கள் அவர்களுக்குள் எத்தனை அடித்துக் கொண்டாலும் அது பெரிதாகத் தெரியாது. நீங்கள் அப்படி இல்லை. இங்கே உங்கள் ஸ்தானமாகட்டும், இனமாகட்டும், குணமாகட்டும்



எல்லாமே மிகப் பலவீனமானவை. அப்படிப்பட்ட உங்களா லேயே இந்த நாயக்க அவையில் அரியணைக்குப் பக்கத்தில் சரிசமமாக அமர முடிகிறது என்றால் எங்களால் முடியாதாக் கும் என்று மைசூர் மன்னரோ, தஞ்சை நாயக்கரோ, இல்லை அனைவரையும் இன்று அதிர வைத்து நிஜமாலுமே கட்டுக் கோப்புடன் சேது நாட்டை நிமிர்த்தியிருக்கும் கிழவனோ நினைத்துவிட்டால் நீங்கள், நான், நம் கூட்டம் எல்லாமே மிக அதிகபட்சம் ஒரு பகல் பொழுதுக்குத் தாங்கமாட்டோம்."

– சையூம் துணிச்சலுடன் தனக்குத் தோன்றியதைப் பட்டியலிட, ருஸ்தமும் அதைக் கேட்டு ஹூக்கா குழலில் மார்புக்காற்றை உமிழ்ந்தும், உள்ளிழுத்தும் பதற்றப்பட, சிறைக் கொட்டாரத்தின் தலைமைக் காவலன் திம்மையா என்பவன் அறை வாசலில் வந்து நிற்கத் தொடங்கினான்.

சையூம் அவனைப் பார்த்துவிட்டு உள்ளே அழைக்க, வந்தவன் வணங்கிவிட்டுத் தலைப்பாகையை மரியாதையாகக் கைகளில் எடுத்து வைத்துக் கொண்டு ருஸ்தமை ஒரு மாதிரி யாகப் பார்த்தான்.

"என்ன திம்மையா– என்ன சேதி–?"

"ஒரு முக்கியச் சேதி ருஸ்தம்– அதைக் கூறத்தான் வந்தேன்–"

– திம்மையா பெயர் சொல்லி அழைத்தது சற்று சங்கடப் படுத்தினாலும் குதிரைப் படையில் இருக்கும்பொழுதில் இருந்தே நிலவிய பழக்கத்தால் வந்த நட்பு என்பதால் அதைச் சகித்துக் கொண்டவன், "உம்– சொல்– என்ன?" என்று கேட்க திம்மையா ஒரு ரகசியம்போல அதைக் கூறத் தொடங்கினான்.

"ருஸ்தம்– சிறைக்குள் கோவிந்தப்பையாவுக்கும் அந்தக் குமாரபிள்ளைக்கும் ஒரே அடிதடிச் சண்டை.

தங்களுக்குப் பணிந்துபோய்ப் பதவியில் நீடிப்பதுதான் புத்திசாலித்தனம் என்று குமாரபிள்ளையும், அதற்குப் பதிலாக உயிரை விட்டுவிடலாம் என்று கோவிந்தப்பையாவும் கூற

உள்ளே ஒரே ரணகளம். நான் அவர்களைப் பிரித்துத் தனித் தனியே அடைத்தேன். அப்பொழுது குமாரபிள்ளை என் காலில் விழுந்து, 'ருஸ்தம்கானை நான் பார்க்க வேண்டும். மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று சொல் திம்மையா– உனக்குக் கோடிப் புண்ணியம்' என்று கேவி அழவே தொடங்கிவிட்டார். எனக்கே என்னவோ போலாகிவிட்டது. அதைச் சொல்லத்தான் வந்தேன்–"

– திம்மையா சொன்னதைக் கேட்ட ருஸ்தம்கான் முகத்தில் புதிதாக ஒரு பிரகாசம். கையும் உடனே, "சபாஷ்–" என்று கைகளைத் தட்டியபடி, "இதுதான் சாக்கு என்று குமார பிள்ளையை உடனே மன்னித்து ஏற்றுக் கொள்வோம். பிள்ளை உடன் இருந்துவிட்டால் போதும். வரி வசூலில் எல்லாம் தேக்கமோ, திரையோ இருக்காது. அண்டை அயலுக்கும் நம் தூதராக அவரைப் பயன்படுத்திக் கொள்ளலாம்."

– என்று கடகடவென்று பேச, ருஸ்தமும் அதற்கு ஆமோதிப்பாகத் தலையை அசைத்த அந்த நொடிப்போதில் சேது மண்ணில் ராமநாதபுரத்தை விட்டு ஒரு தேர்ந்த கூட்டம் அரண்மனைக்குள் ஊடுருவப் புறப்பட்டுவிட்டிருந்தது.

# 15

'வேண்டாமடா ராமா வீரியங்கள் பேசாதே...
பண்டு முன்னாள் நம்சேனை பாருலகுதானறிய
குழல்வாய்த் திரையாக கொள்ளை கொடுத்தோமே
யின்றி பகைத்தால் எதிர்த்த மன்னர் தானசைப்பார்
சேதுக் கரைதனிலே சென்றவர்கள் மீண்டதில்லை.



வாளுக்கிரையிட மறவன் வளுக்காரன்
துப்பாக்கி மெத்த உண்டாந்தோமா மறவனுக்குத்
தன்னரசு நாடு தனிக்கோட்டையாளுவானாம்
மதுரைப் படையென்றால் மதியான் மறவனுந்தான்.'

– 'இராமப்பய்யன் அம்மானை'

இராமநாதபுரத்தை விட்டுப் புறப்பட்ட அந்தப் படை ஒருசேர அடப்பமாக ஒரு பெரும் யுத்த முகாந்திரத்தோடு செல்லாமல் வழியிலேயே அங்கங்கே ஐந்து பேர் கொண்ட குழுவாகவும் பதினோரு பேர் கொண்ட குழுவாகவும் பிரிந்து இராமநாதபுரத்து வீதிகளில் தன் முழுவேகத்தைக் காட்டலாயிற்று.

எக்காரணத்தைக் கொண்டும் ஒரு பெரும்படை இராம நாதபுரம் விட்டுப் புறப்பட்டு மதுரையையும், திருச்சியையும் நோக்கிச் செல்வதாக ஊரோ, உலகமோ அறியக் கூடாது என்பது கிழவனின் கட்டளை. யாரும் கேட்டால், போர்ப் பயிற்சி என்று கூறுங்கள் என்றும் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதற்கேற்ப சோளகை சேர்வைக்காரனும் தளவாய் அம்பலக் காரனும் படைக்குக் கட்டளை பிறப்பித்திருந்தார்கள். இரகு நாதத் தொண்டமானும், பெரிய உடையத்தேவரும் தங்கள் சகாக்களோடு நாலுகோட்டைப் பாளையத்திலிருந்தும் திருமயத் திலிருந்தும் மதுரை வந்து விடுவதாகக் கூறியிருந்ததை அடுத்துத்தான் இந்தப் புறப்பாடு.

சின்னகாத்ரி தன் பங்குக்கு ஐந்தாயிரம் பேருடன் கன்னி வாடியிலிருந்து அப்படியே வாடிப்பட்டி வழியாக வந்து விடுவதாகக் கூறிவிட்டார். நாள், கிழமை, கால நேர வர்த்தமானங் களைக் கூடத் துல்லியமாகக் கணக்கிட்டாயிற்று.

ஆகக்கூடி, கிட்டத்தட்ட நான்கு புறமிருந்தும் நான்கு விதமான மறவர் கூட்டம் மதுரை அரண்மனையை இலக்காகக் கொண்டு புறப்படத் தொடங்கிவிட்டது. அதற்குமுன் அந்தப்

புறப்பாடு பற்றியும், வீரர்களின் லட்சணங்கள் பற்றியும் எல்லாம் ஒரு ரகசிய ஓலை கோவிந்தப்பிள்ளையாருக்கும் போயாகி விட்டது.

ஊருக்குள் ஒருவித விஷயம் கசிந்தாலும் கிழவன் மட்டும் அரண்மனையில் தனது இயல்பு நிலைப்பாட்டில் துளியும் மாறுதல் காட்டாதிருந்தார்.

காலை வேளையில் இராமநாதவிலாச அரண்மனையில் அமைந்திருக்கும் ராஜராஜேஸ்வரி ஆலயத்திற்குச் சென்று தரிசனம் புரிவதிலாகட்டும், சுற்றுப்பட்டுக் கோயில் பிரசாதங்களுடன் வந்து நிற்கும் பட்டர்களிடம் அதைக் கேட்டுப் பெறுவதிலாகட்டும், ராஜ்யாதிபதிகளின் சாங்கியப்படி விடியலில் கண்ணாடி பார்த்துத் தலை திருத்திக்கொண்டு திட்டி வாசலுக்கு வந்துவிட அங்கு யானை, பட்டக்குதிரை, ஒட்டகங்களோடு வந்து நின்று அன்றாட வரவேற்பு உபசாரம் செய்யும் பாகன்மார்களுக்குப் பரிசுகள் வழங்குவதிலாகட்டும் குறையே வைக்கவில்லை.

வழக்கமாகக் காலை வேளையில் கார்மேகப் பண்டிதர் என்று ஒருவர் வருவார். கிழவனுக்கு அவரிடம் உரையாடுவது என்றால் கொள்ளைப் பிரியம்.

இவர்தான் தமிழ் இலக்கியங்களையும், பாடல்களையும் பற்றிக் கிழவனிடம் போதும் போதுமென்று எடுத்துரைப்பவர். பின்னாலேயே வரும் கந்தசாமிப் புலவர் சற்று இறுக்கமானவர். கார்மேகப் பண்டிதரை ஒரு புனைகதை மன்னன் என்பவர். அதற்கு ஒத்து ஊதுபவர் படிக்காசுப் புலவர். இவர்களைத் தனித்தனியாகச் சந்திப்பது ஒருவிதத்தில் இன்பம் என்றால் கூட்டாகச் சந்திப்பது அதைவிட இன்பமானது... சற்று ரசமானதும்கூட.

நல்ல ரசனை உள்ள அரசர்களுக்கு இவர்களெல்லாம் வரப்பிரசாதங்கள். சதா ராஜ்ய பாரமும், எதிரிகள் பற்றிய சிந்தனையுமாயுள்ள அவர்கள் புத்திக்குள் இப்படிப்



பட்ட புலவர்கள்தான் தேன் பூசுபவர்கள், தித்திப்பு பரப்பு பவர்கள்.

வெளியே ருஸ்தம்கானை இலக்காகக் கொண்டு ஒரு வீரர் கூட்டம் கிழவனின் கட்டளைக்கும், செயல்கோடுகளுக்கும் ஏற்பப் புறப்பட்டுவிட்ட நிலையில் ஒரு அரசனால் தமிழமுதம் பருக முடியுமா?

ஆனாலும் கிழவன் அன்றைய தினத்தில் இந்தப் புலவர் பெருமக்களைச் சந்தித்து அவர்களது ஏடெழுத்துப் பற்றிக் கேட்டு அதில் மூழ்கத் தவறவில்லை.

வள்ளல் சீதக்காதிக்கு மட்டும் அதற்கான காரணம் நன்றாகத் தெரிந்தது.

ஒரு ரகசியச் செயல்திட்டம், ஒரு குள்ளநரியை வளைத்துப் பிடிக்கும் செயல்திட்டம், பரபரப்பினாலும் பதற்றத்தினாலும் வெளியே தெரிந்துவிடக் கூடாது என்று கிழவன் நினைத்து அதற்கேற்பச் செயல்படும்போது அதற்கு இசைவாக நடந்து கொள்ள வேண்டும் என்று அவரும் வழக்கமாகத் தான் செல்லும் பள்ளிவாசல் தொழுகைக்கும், அந்தப் பள்ளி வாசலில் காலை வேளையில் வழக்கமாக வழங்கப்படும் அன்னதான நிகழ்ச்சிக்கும் சென்றுவிட்டார்.

அரண்மனைக்குள் அடைப்பக்காரர்களும், கவுரி வீசிகளும், பணிக்கம் தாங்கும் பணியாளர்களும், நேரம் காட்டும் நகராத் தட்டிகளும், கிழவனின் அன்றாடத்தைப் பதிவு செய்யும் எழுத்தர்களும், ஏதும் அஞ்சலுண்டா என்று காத்திருக்கும் அஞ்சல்காரர்களும், பட்டோலை எழுதுபவர்களும், வங்கியம் (நாகஸ்வரம்) வாசிப்பவர்களும், மற்றுமுள்ள சோக்தார்கள், தீவட்டிகள், தானாபதிகள், மொலகுச்செட்டி மல்லர்கள், சிலம்பக்காரர்கள், நட்டுவர்கள், தட்டுவண்டிச் சாரதிகள், பல்லக்குத் தூக்கிகள், பாராக்காரர்கள் என்று அரண்மனை அங்கமாகக் கிடக்கும் அத்தனைபேரும்கூட அவரவர் செயல்பாடுகளில் குறைவைக்கவில்லை.

தாதியத் தேவனுக்கும் செய்தி போகிறது. தேவனுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து வந்து குடியேறியிருக்கும் மன்னார் என்பவன்தான் சேதி கசிவிப்பவன்.

"தேவரே— ஒரு படை போனாற்போலவும் தெரிகிறது. போகாதது போலவும் தெரிகிறது. கிழவன் வழக்கம்போல அரண்மனை நடவடிக்கைகளில்தான் கிடக்கிறார்.

காளாஞ்சி நின்றபடி அங்கும் இங்கும் சுற்றி வருகிறார். சுந்தசாமிப் புலவர் எப்போதும்போல அவர் நடை உடை பாவனைகளைச் சிங்கம், புலி, சிறுத்தையுடன் ஒப்பிட்டு அவரைச் சிறக்கப் பார்க்க அவரும் தலையாட்ட என்ன நடக்கிறது என்றே தெரியவில்லை.

ஆனால் ஒன்று— தளவாய்களை மட்டும் கண்ணில் காண முடியவில்லை. தானாதிபதி மட்டும்தான் கண்ணில் பட்டார். தளவாய்கள் படைப்பயிற்சி என்று சொல்லிக்கொண்டு ஏதோ கூத்தடிக்கிறார்களோ என்று சந்தேகமாக இருக்கிறது" என்னும் போதே தாதியத் தேவன் மாளிகைக்கு வெளியிலான சாலை மேல் திபுதிபுவென்று ஒரு புரவிக் கூட்டம் ஓடி மறைந்தும் போனது.

"இன்னொரு சேதி— நாம் கிழவனை மதுரை யுத்தத்தின் போது தீர்த்துக்கட்டச் செய்துவிட்ட சதி கிழவனுக்கு வழக்கம் போலத் தெரிந்துவிட்டதோ என்னவோ, நமது விசுவாசிகள் அத்தனை பேரையும் சுற்றி அரண்மனை உளவாளிகள் பார்வை மிகப் பலமாக இருக்கிறது. இங்கே நான் மாளிகை வாசலில் வந்திறங்கும்போது ஒருவன் எதுவும் பேசாமல் என்னைப் பார்த்துச் சிரித்துவிட்டுப் போனான்..."

மன்னார் விவரிக்க, விவரிக்கத் தாதியத் தேவனுக்குள் நரம்புகளில் முடிச்சு விழுமளவு கோபம் ஏற்படுகிறது.

"இன்னுமொரு சேதி..." மன்னார் தாதியத் தேவனை எரிமலையாக்கியே தீருவது என்பது போல அடுத்தடுத்துச்



சேதி சொல்ல ஆயத்தமாக, "போதும். எதையும் கூறாதே. எனக்கு எல்லாம் புரிந்துவிட்டது. கிழவன் எனக்கு மனைவி என்கிற பெயரில் ஒரு உளவாளியைக் கொடுத்திருக்கிறான். பொன்னாத்தாள்தான் இங்கு நடப்பதை அறிந்து கிழவனுக்குச் சேதி தந்திருக்க வேண்டும்.

அவளுக்கு எப்படிப் பாடம் கற்பிப்பது என்பது எனக்குத் தெரியும். நீ போய் உன் வேலையைப் பார்" என்று புழுக்கத்துடன் கூற, மன்னார் அதற்குப் பணிந்து விலகிவிடாமல், "அவசரம் வேண்டாம் தாதியரே— நாச்சியார் அப்படிப்பட்டவ ராக எனக்குத் தெரியவில்லை. வேறு யாராவது நம்மைச் சுற்றி இருக்கக்கூடும்" என்று நன்றாகவே விசுவாசம் காட்டு கிறான்.

வெளியே உச்சிக்கு வரப் பார்க்கும் ஆதித்தனின் அம்பு போன்ற கதிர்க்கம்புகள்—

மதுரை வானம் மட்டும் ருஸ்தம்கானின் மனத்திற்கு இணக்கம் கொண்டது போல மப்பும் மந்தாரமுமாகக் காட்சி யளித்துக் கொண்டிருந்தது. குமாரபிள்ளையைச் சிறையி லிருந்து விடுவித்து அவன் எதிரில் கொண்டு வந்து நிறுத்தி யிருந்தான் திம்மையா. உடன் சையும் அவன் மெய்க்காவலர்கள் என்று ஒரு நான்கு பேரோடும் நின்று கொண்டிருந்தான் ருஸ்தம்.

குமாரபிள்ளை கைகட்டி தலைப்பாகையை அவிழ்த்து இடுப்பிலே கட்டிக் கொண்டு ஒரு பேரரசன் முன் நிற்கும் அடிமை போலத் தன்னைக் காட்டிக் கொண்டிருந்தார்.

"குமாரபிள்ளை— உன் மன மாற்றத்தை மிகப் பாராட்டு கிறேன். அதேசமயம் அது நடிப்பாக இருந்து விடக்கூடாது என்றும் நினைக்கிறேன்" என்று ருஸ்தம்கான் வாயைத் திறக்கவும் அதைக் கேட்டுக் காதுகளைப் பொத்திக்கொண்டார் குமாரபிள்ளை. பின்னர்,

"இப்படிச் சந்தேகிப்பதை விட என்னைச் சிறையிலேயே தாங்கள் வைத்துவிடுவது நல்லது அரசே_" என்றபோது அந்தக் குரலில் நிஜமாலும் ஒருவித ஆதங்கம் தொனித்தது.

"அது எப்படி இத்தனை சீக்கிரமாக ஒரு மனம் மாற முடியும். அதுதான் எனக்குப் புரியவில்லை. சையும் நீ என்ன நினைக்கிறாய்?"— ருஸ்தம் விடுவதாக இல்லை.

"குமாரபிள்ளை இதற்குச் சரியான பதில் நீதான் கூற வேண்டும்" என்று சையும் அவரைப் பார்த்தான். அப்படியே திரும்பி, "திம்மையா நீ செல்லலாம். எச்சரிக்கையாக இரு" என்று திம்மையாவுக்கும் ஒரு கட்டளைபோட, திம்மையா வணக்கத்தோடு விடைபெற்றுக் கொண்டான்.

சற்றுத் தொலைவுதான் போயிருப்பான் திம்மையா.

"திம்மையா நில்_" என்றது ருஸ்தமின் குரல். பதற்றத்தோடு நின்று திரும்பிய திம்மையாவைப் பார்த்த ருஸ்தம், "கஜானா காப்பாளன் மைதீனைப் பார்த்து நான் கூறியதாகக் கூறி ஒரு ஆயிரம் வராகனைப் பரிசாகப் பெற்றுக் கொள். இந்தா அதற்கான முத்திரைத் தாள்_" என்று தன் இடுப்புப் பட்டை மடிப்பிலிருந்து ஒருசாண் நீள ஓலை ஒன்றை எடுத்து நீட்ட திம்மையா பரவசப்பட்டுப் போனான்.

சையூமுக்கே ஆச்சரியமாக இருந்தது. "ஏதேது திம்மையாவுக்குப் பரிசு தர ஏற்கெனவே தீர்மானித்து கஜானா மைதீனுக்கும் ஒரு ஓலையை அப்பொழுதே எழுதி எடுத்து வந்துவிட்டதைப் போலத் தோன்றுகிறதே?" என்று கேட்க, "என் விசுவாசிகளை நான் தங்கத் தொட்டிலில் கூட உறங்கப் போட்டுத் தாலாட்டுவேன் சையூம். உனக்குத் தெரியாதா?" என்று பதில் கேள்வி கேட்க சட்டென்று பேசத் தொடங்கினார் குமாரபிள்ளை.

"இந்தக் குணம்தான்_ இதே குணம்தான் ருஸ்தம்கான். மன்னிக்க வேண்டும்_ மன்னிக்க வேண்டும். நீங்கள் இனி எந்த நாளும் இந்த மண்ணை ஆளப்போகும் அரசர்_ இந்தக் குணம்தான் அரசே என்னை யோசிக்க வைத்தது" என்றார் இயல்பான தடுமாற்றங்கள் கொண்ட குரலோடு.



"அப்படியா?"— இது சையூம்.

"நிஜமாகவா?"— இது ருஸ்தம்கான்.

"சந்தேகம் என்ன? திம்மையா இந்த நாயக்கர் படைப் பிரிவில் ஒரு சாதாரணக் காவலாளியாக இருந்தவன். அவன் இன்று சிறைக்கே தலைமைக் காவலாளி. சொக்கநாதர் இப்படி ஒரு சாதாரணக் காவலாளியைத் தலைமைக் காவலாளியாக்கு வாரா? திருச்சிக்காரனை இங்கேயும், இங்கிருப்பவனைத் திண்டுக்கல்லிலும், அங்கிருப்பவனை இங்குமாக மாற்றிக் கொண்டே அல்லவா இருப்பார்?

மாத ஊதியத்தையே அவரால் ஒழுங்காக மாதத்தின் முதல் ஞாயிறில் தர முடியவில்லையே. கஜானாவைக்கூடப் போர், போர் என்று கரைத்து விட்டாரே_"

குமாரபிள்ளை ருஸ்தமை உயர்த்த வேண்டி சொக்கநாத நாயக்கரைத் தாழ்த்தும்போது ருஸ்தம் அதைக் கேட்டுப் பூரித்துப் போனான். இருந்தாலும் சையூமைப் பார்த்து, "சையூம்_ பிள்ளை என்னைப் புகழ்ந்தே மயக்கப் பார்க்கிறான்" என்று மறுகணம் மாறவும் குமாரபிள்ளைக்குக் கன்னத்தில் அறை விழுந்தது போலானது.

"சரி_ என்னை நம்பாதீர்கள். இனி நானும் உங்களுடன் பேசுவதாக இல்லை. பல உண்மைகளை உங்களிடம் கூறி எச்சரிக்கை செய்து ஒரு அமைச்சனாகவோ, இல்லை குறைந்த பட்சம் ஒரு தானாதிபதியாகவோ ஒரு மூலையில இருந்து விட்டுப் போய் விடலாம் என்று நான் நினைத்தது என் தவறு தான்_" என்று குமாரபிள்ளை வருத்தப்படவும்,

"என்ன அந்த உண்மை?" என்று இறுக்கமான முகத்தோடு குமாரபிள்ளையை வெறித்தான் ருஸ்தம்.

"என் விசுவாசத்தையே சந்தேகிக்கும் நீங்கள் நான் கூறுவதை மட்டும் எப்படி உண்மை என்று எடுத்துக் கொள்வீர்கள். விட்டு விடுங்கள்."

"பிள்ளை... என்னிடம் இப்படிக் காட்டி மறைக்கும் வேலை வேண்டாம். என் சந்தேகங்கள் மிக நியாயமானவை. அந்தக் கோவிந்தப்பையாவும், வெங்கடகிருஷ்ணப்பரும் சொன்னால் கிணற்றிலே விழக்கூடத் தயாராக இருந்தவன் நீ–

எப்பேர்ப்பட்ட நாயக்க விசுவாசி நீ என்பதை நான் சாதாரணப் படைக்காரனாக இருந்த நாளில் இருந்தே பார்த்து வருகிறேன்.

என் பிடிக்குள் சொக்கநாதர் வந்த பிறகும் அவரைப் பலமுறை சந்தித்துப் போனதையக் கலைக்க முயன்றவன் நீ...

எனது ஆதரவாளர்களை எல்லாம் பார்த்து, 'நீங்கள் உப்புப்போட்டுத்தான் சாப்பிடுகிறீர்களா?' என்றும் கேட்டு அவர்களை உசுப்பி விட்டவன். எல்லாவற்றுக்கும் மேலாகச் சில தினங்கள் தலைமறைவாகவே நீங்கள் மூவரும் காணாது போய்விட்டீர்கள்–

உனக்கு முகத்தில் இரண்டு கண்கள்தான். ஆனால் எனக்கு ஆயிரம் கண்கள். இந்த மண்ணில் திருமலை நாயக்கர் பெரிதாகக் குளம் வெட்டிக் கோயில் எழுப்பினாரே ஒரு மாரியம்மனுக்கு– அந்த மாரிக்குக்கூட ஆயிரம் கண்ணுடையாள் என்பீர்களே– அப்படி நானும் ஆயிரம் கண்ணுடையவன். ஞாபகம் இருக்கட்டும்."

— ருஸ்தம்கான் வரலாறு தெரிந்தும் புரிந்தும் பேசியதோடு, என்னை ஏமாற்ற எந்தக் கொம்பனாலும் முடியாது என்பது போல விசுவரூபம் எடுத்தான்.

குமாரபிள்ளைக்கு அதை எல்லாம் கேட்க நிஜமாலுமே மலைப்பாக இருந்தது. இருந்தும் சமாளிப்பாகத் தொடர்ந்தார்.



"அரசே– நீங்கள் சொன்ன அவ்வளவும் உண்மை. பேருண்மை.

நான் எத்தனை விசுவாசியாக இருந்து என்ன பயன்? நாயக்கர் உங்களைப் போல ஆயிரம் கண்ணுடையவராகத் தன்னைச் சுற்றி நடப்பதை எல்லாம் விரல் நுனியில் வைத்திருப்பவராக இல்லையே?

எளியதை வலியது கொள்ளும் என்பார்கள். அந்த வலியதை மதியது சார்ந்து செல்லும் என்றும் கூறுவார்கள். சொக்கநாதர் வலிய உங்கள் முன் எளியவராகிவிட்டார். அப்படிப்பட்ட வலியவரான உங்களை மதிகொண்ட நான் சார்ந்து வாழ ஆசைப்படுகிறேன். வறட்டு நியாயங்களையும் கண்டதையும் பேசிக் கோவிந்தப்பையாவும், வெங்கடகிருஷ்ணப்பரும் அழிய நினைக்கிறார்கள்.

நான் வாழ நினைக்கிறேன். அவர்கள் தளவாயாக, அமைச்சராக ராஜ சுகங்களை அனுபவித்து விட்டார்கள். நான் அவர்களுக்கு உதவியே ஓய்ந்துவிட்டேன். உங்களைச் சார்ந்தாலாவது உயரலாம் என்று தோன்றியது. இதுதான் உண்மை. என் மனத்தில் உள்ளதைக் கொட்டி விட்டேன். இனி நம்புவதும், நம்பாததும் உங்கள் பாடு..."

—குமாரபிள்ளை திடமாகவும் உணர்ச்சி ததும்பவும் பேசி முடிக்க அங்கே பலப்பல நொடிப் பொழுதுகள் ஒருவித இறுக்கம் தோன்றியது.

சையும் சமறலுடன் அதைப் பிளந்தான்.

"ருஸ்தம்– போதும். இதற்கு மேலும் குமாரபிள்ளையை ஆழம் பார்ப்பது அர்த்தமற்றது. அதிலும் நாம் இப்போது இருக்கும் நிலையில் பிள்ளை நம் அணியில் இருப்பது பெரிய பலம்."

"சரி– நான் குமாரபிள்ளையை நம்புகிறேன். பிள்ளை– ஏதோ உண்மைகளைக் கூற விரும்புவதாகக் கூறினீர்களே– என்ன அது?"

பருந்துக்குக் குறி இரையின் மேலேயே என்கிறாற்போல ருஸ்தம்கான் கச்சிதமாகக் குமாரபிள்ளைப் பேச்சில் தனக்குத் தேவையானதைத் தொடர்ந்து கேட்க, குமாரபிள்ளையும் பீடிகை போடாமல் அதைச் சொல்ல ஆரம்பித்தார்.

"நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்கள். மூன்று நாட்கள் எங்களைக் காணவில்லை என்றீர்களே– நாங்கள் வேறெங்கும் சென்று விடவில்லை. சேது நாட்டுக்குச் சென்று கிழவனைத் தான் சந்தித்துவிட்டு வந்தோம். உங்களை அழிக்க அவரிடம் உதவி கேட்டோம். கிழவனும் உதவுவதாகக் கூறியுள்ளார். அவரது சகாக்களை முதலில் மதுரை அனுப்பி அரண்மனைக்குள் ஊடுருவச் செய்யத் திட்டமும் தயாராகி விட்டது– அதன்படி இரண்டு நாளில் அவர்கள் இங்கே ஊடுருவ முயற்சி செய்வார்கள். முளையிலேயே அவர்களை அழித்துவிட்டால் கிழவன் அரண்டு போவான். இதைத்தான் நான் சொல்ல விரும்பினேன். சொல்லியும் விட்டேன். இதில் பொய் இருப்பதாகத் தாங்கள் இப்பொழுதோ, இல்லை நாளையோ உணர்ந்தால் என்னை முதலைச் சவுக்காலேயே அடித்துக் கொல்லலாம்."

– குமாரபிள்ளை அந்தத் தேவ ரகசியத்தைப் போட்டு உடைக்க, ருஸ்தம்கானின் முகத்தில் கோபாக்னி கொழுந்து விடத் தொடங்கியது.

சையும்கூடத் தலையில் கை வைத்துக் கொண்டு, 'நான் அப்போதே சொன்னேன், இல்லையா?' என்பது போலப் பார்த்தான்.

"கவலை வேண்டாம். அவர்களை எனக்கு அடையாளம் தெரியும். அவர்களை உள்ளே புகவிட்டு அடையாளம் கண்டு அழித்து விடலாம். சையும் மட்டும் எனக்கு ஒத்துழைத்தால் போதும்" என்று குமாரபிள்ளை அடுத்து சொல்ல, "அதுதான் இப்போது இருக்கும் ஒரே வழி" என்று சையூமும் உரக்கச் சத்தினான்.



இதெல்லாம் எதுவும் தெரியாத சோளகை சோலைக் காரனின் குதிரைப்படை ஒன்று மதுரைக்கு வெளியே திருப்பாச்சேத்தியை எட்டி விட்டிருந்தது! அதில் சரியாகப் பதினோரு பேர் இருந்தார்கள்–

# 16

அந்தப் படை வீரர்கள் திருப்பாச்சேத்தியை ஒட்டி ஓடும் வைகையாற்றங்கரையில் புரவிகளை ஓரம்கட்டி நிறுத்தினார்கள்–

ஆற்றங்கரையோரம் அமிர்த வயல்போல் இருந்தது. அடப்பமாகத் தென்னை, மா, கொய்யா என்று மரக்கூட்டம். ஆற்றிலும் முழங்கால் உயரத்திற்குப் பழுதில்லாத நீரோட்டம். அதில் வாளை மீன்களின் கும்மாளம்.

ஊடே புரவிகளை ஆற்றிற்கு அழைத்துச் சென்று அவற்றிற்குத் தண்ணீர் காட்டி, பிறகு அவற்றை இழுத்து வந்து ஒரு மரத்தடியில் கட்டிவிட்டுப் பதினொரு பேரும் வட்டமாக அமர்ந்து கொள்ள சோளகை பேசத் தொடங்கினான்.

"சகாக்களே– இனி நாம ஊருக்குள்ள குதிரைல போறது தெளிவு இல்ல. இங்கயே குதிரைகளை யார் பொறுப்பிலாவது விட்டுவிட்டு ஆளாளுக்கு ஒரு வேஷத்துல கிளம்புவோம்.

நாயக்கர் அரண்மனைல நம்ம உள்ள சேர்த்திக்க கோவிந்தப்பையா ஏற்பாடு செய்திருப்பார். நம்ப வளரி முத்திரை மோதிரத்தையோ, இல்ல மார்புப பச்சையையோ காட்டினா உள்ற சுலபமா நுழைஞ்சிடலாம்.

இப்படித்தான் அம்பலக்காரன் கூட்டமும் நுழையப் போகுது. சன்னியாடிக்காரரும் அவர் சகாக்களை இப்படித் தான் உள்ற விடப் போறாரு. சாரம் துடைக்க, விளக்குப் போட, வெள்ளையடிக்க, தோட்டத்துக்குத் தண்ணி பாச்ச, லாடம் கட்ட, சாணை பிடிக்கன்னு விதவிதமா பாதைங்க!

அதுல நம்ம ஆட்கள் நுழைஞ்சிடணும். தலைக்குப் பத்து பேரைக் கொன்னாலும் ஒரே நாள்ல ஆயிரம் பொணத்தை அரண்மனைக்குள்ள விழ வெச்சு அந்தக் குதிரைக்காரனைக் கதி கலங்க வெச்சுடலாம்...

நமக்குக் கோவிந்தப்பய்யா விசுவாசிங்க நாமம் போட்ட வீரமாருங்க பெரிய அளவுல ஒத்தாசிப்பாங்கன்னு கோவிந்தப் பய்யாகிட்ட இருந்து தகவல் வந்துருக்குது.

உடால பெருசா சங்கோ, நாகராவோ சத்தம் போட்டா வெளிய இருந்து படை வந்தாச்சுன்னு அர்த்தம். அப்ப உள்ற இருந்து ஒரு காப்பான் வெளியே போய் யுத்தத்துல நின்னுடக் கூடாது. அதுக்குத் தகுந்த மாதிரி சூதானமா உள்ற இருக்கற காப்பானுங்களையும், காவலாளிகளையும் நாமளே காச்சிப் பிடணும்... ரொம்ப முக்கியம் முதுகுல கத்தி வாங்கிறக் கூடாது. செத்துவிழ நேந்தா எதிராளி சங்கைக் கடிச்சு ரத்தம் குடிக்காம கீழே விழக் கூடாது.

எல்லாம் முடிஞ்சு ஜெயக்கொடி பிடிக்கும்போது மறக்காம நம்ம ராசாவுக்குத் தோத்திரம் படிக்கவும் மறந்துவிடக் கூடாது..."

— சோளகை சொல்லவேண்டிய அத்தனையையும் சொன்னான். அந்த வீரக்கூட்டம் ஆமோதிப்பதாகக் கேட்டுக் கொண்டது.

"குதிரைங்கள இங்க யார நம்பி விட்றதாம்?"— ஒருவன் கேட்டான். சோளகை அதைக் கேட்டு யோசிக்கத் தொடங்கி னான். அப்போது நிறைந்த புகை மண்டிக்கொண்டு வரத்



தொடங்கியது. 'ணொட்', 'ணொட்' என்ற சப்தமும் காதில் கேட்டது.

"என்னா சத்தம்?"

"பெரிய வீரா போய்ப் பார்த்து வா..."

பெரிய வீரன் என்பவன் புத்திசாலித்தனமாக ஒரு மரத்தின் மேலேறி புகை வந்த திக்கைப் பார்த்துவிட்டுக் கீழிறங்கி வந்து சொன்னான்.

"பக்கத்துல காளவாசலும், கருமான் பட்டறையும் இருக்கு. வாள் தட்றாங்க. அதான் சப்தம்."

அடுத்த சில நொடிகளில் சோளகையின் கூட்டம் அந்தப் பட்டறை முன் போய் நின்றது.

உலைதுருத்தி நெருப்பை ஒரு சக்கரக் கோளம் சிவக்கவிட்டுக் கொண்டிருக்க அதில் ஏகமாய் வாள்கள் தட்டப்பட்டுப் பழுப்பேறிக் கொண்டிருந்தன.

பழுப்பேறிய வாளைத் தட்டும் கருமான் வியர்வை மார்புடன் சோளகையையும், கூட்டத்தையும் பார்த்தான். விழிகளில் சற்று பயம் தொற்றியது.

"யாருலே...? அரண்மனைக்காரவுகளா? அதான் ஆயிரம் ஈட்டியை முறையாத் தட்டித் தந்துட்டேனே..."

— அவன் குரலில் பயமும் பணிவும் பலமாகத் தெரிந்தது. சோளகை அதைக் கேட்டுச் சிரித்தபடி—

"நாங்க அரண்மனைக்காரங்க இல்ல கருமாரே... சேது நாட்டாருங்க..." என்ற சோளகை அந்தக் கருமானையே உற்றுப் பார்த்தான்.

"ஆரு... சேது நாட்டாருங்களா! ஐயா வாங்க..."— அந்தக் கருமான் குரலில் மரியாதையும் வரவேற்பும் அடுத்த நொடி அரங்கேறத் தொடங்கியது. அதைக் கண்டு சோளகையைத் தவிர மற்ற வீரர்கள் பெரிய அளவில் ஆச்சரியப்பட்டார்கள்.

"கருமாரே, ஒரு சகாயம் செய்வீங்களா?"— இது சோளகை.

"அய்யா— என்ன கேக்கீக? வெவரமாக் கேளுங்க. அய்யோ இப்படிச் செய்ய நின்னு பேசறது ஆபத்தாச்சே— வாங்க அப்படிக் குடிசை கிட்டப் போய்ப் பேசுவோம்—"

கருமான் படபடப்போடு எழுந்து குடிசை நோக்கிச் செல்லலானான். சோளகையும் மற்ற வீரர்களும் அவனைப் பின் தொடர்ந்தனர்.

அவன் குடிசை முகப்பில் கயிற்றுக் கட்டில்கள் நிறையக் கிடந்தன. அங்கங்கே ஏர்க்கால்கள், சாரட் சக்கர உடைசல்களும் கிடந்து அவனது தொழிலாதிக்கத்துக்கு வண்ணம் சேர்த்தபடி கிடந்தன. குடிசையினுள் ஒரு பெண்மணி இருந்தாள். ஒரு ஓரமாகச் சுருண்டு படுத்திருந்தாள். சோளகையின் கூட்டம் வரவும் எழுந்து அமர்ந்து கொண்டாள். கருமான் மலங்க மலங்கப் பார்க்கும் அவளைச் சோளகைக்கும் அவன் கூட்டத்துக்கும் அறிமுகப்படுத்தத் தொடங்கினான்.

"அய்யா— இவ என் சம்சாரம். பேரு சின்னாயி. மேலுக்கு முடியாம படுத்துக் கிடக்கா. இல்லாட்டி இவளும் நாளைக்கி சக்கரம் கட்டுவா—" என்றான்.

சோளகை அவளைப் பார்த்துப் பெரிதாகக் கும்பிட்டான். அவளும் பதிலுக்கு வணங்கினாள்.

"சின்னா— போயி பானகம் பிடிச்சா. அய்யாமாருங்க உன் ஊர்க்காரங்க. ராமநாதபுரம்" என்றான். அவள் முகத்தில் உடனே வெளிச்சம் பரவியது.

"அதெல்லாம் எதுவும் வேண்டாம் கருமாரே. நாங்க எங்க குதிரைகள இங்க கட்டிட்டு ஊருக்குள்ற போகலாம்னு பாக்கறோம். அதுக்குத் தீனி போட்டு அதைப் பாத்துக்க ஒரு நாளைக்கு ஒரு பொன்னுன்னு கணக்குப் போட்டுத் தந்துட்றேன். என்ன சொல்றீங்க?" என்று கேட்ட சோளகையை அந்தக் கருமான் உற்றுப் பார்த்தபடியே கேட்கலானான்.



"ஐயா நீங்கல்லாம் அரண்மனை ஊழியக்காரவுகளா?"

"ஆமாம். எப்படிக் கண்டுபிடிச்சே?"

"தலப்பா கட்டும், மார்புப் பச்சையும்தான் பளிச்சுன்னு சொல்லுதே. ஐய்யோ— இந்தப் பாண்டிய தேசம் இப்ப பாடாப் பட்டுக்கிட்டிருக்குய்யா. ஆமா— சேது ராசா படை கொண்டு வரப் போறாரா என்ன?"

"அது எப்படி உங்களுக்குத் தெரியும் கருமாரே?"

"என்னய்யா நீங்க— இந்தப் பாண்டியப் பட்டணத்துல இருக்கற அம்புட்டுக் கருமாருங்களும் நாலு நாளா ஈட்டியும் கத்தியும்தான் தட்டிக்கிட்டிருக்கோம். வேற வேலையே பார்க்கக் கூடாதுன்னு அரண்மனைல இருந்து உத்தரவு. என்ன சேதின்னு கேட்டதுக்கு, எந்த நிமிஷமும் கிழவர் சேதுபதி மதுரையைப் புடிக்க வரலாம். அதான் நாயக்கர் படை பதிலுக்குத் தயாராகுதுன்னு சொன்னாங்க. அதான் கேட்டேன்."

— கருமான் ஒரு புதிய பின்புலத்தைச் சோளகைக்குக் காட்ட, சோளகையின் முகத்தில் தீவிரமான சிந்தனை ரேகைகள்!

அதிர்ச்சி பரவிய முகத்தோடு நிற்கும் சோளகை சேர்வைக்காரனை வெறித்துப் பார்க்கிறான் கருமான்.

அவன் சகாக்களும் அதிர்ச்சி கொண்ட முகத்தோடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்கின்றனர்.

"ஐய்யா— என்னாச்சு? எதுக்காக இப்படி வெறிக்கிறீங்க?"

"இல்ல— இப்ப எதுக்கு நாயக்கருக்கு இத்தனை யுத்த முஸ்தீபுன்னுதான்—"

"நீங்க வேற— நாயக்கர் இப்ப எங்க இருக்காரு? எல்லாம் அந்தக் குதிரைக்காரன் வேலை—"

"யாருடைய வேலையாக இருந்தால் என்ன கருமாரே– மொத்தத்தில் நாயக்கர் ராஜ்யத்தில் யுத்தத்துக்கு அறிகுறிகள் தெரியத் தொடங்கிவிட்டது என்பதுதான் என் கருத்து."

"ஆமாங்க– மைசூரோட, தஞ்சாவூரோடன்னு மாறி மாறி மோதுன காயமே இன்னமும் ஆறலை. அதுக்குள்ற அடுத்த யுத்தம் வரப்போகுது. குதிரைக்காரன் பிடில இந்த மதுரை இன்னும் என்ன பாடுபடப் போகுதோ?"

"ஆமாம்... யார் இந்தக் குதிரைக்காரன்?"– சோளகை ஒன்றும் தெரியாத மாதிரி கேட்கவும் கருமான் முகம் சிவக்கத் தொடங்கியது.

"யாருன்னு கேட்டா என்னத்த சொல்ல...? குதிரைப் படைல இருந்த ஒரு சாதாரண ஆள் அவன். இன்னிக்கு ராஜாவையும், ராணியையும் கைப்பாவையா ஆட்டி வைக்கிறான். அரண்மனை அதிகாரிங்களும் நாயக்கருக்கு அவன் எம்புட்டோ மேல்னு நினைச்சு சலாம் போட்றாங்க. பொன்னாலையும், மணியாலையும் அவங்களக் கட்றான். என்னத்த சொல்ல–? டெல்லிவரைல தனக்குச் செல்வாக்கு இருக்கறதா வேற சொல்றான்."

"அப்படியா?"

"எங்க மதுரைக் கதை பெரிய சோகக் கதை. வீர மக்களே– உங்கக் கிழவர் மனசு வெச்சா எங்களுக்கு நல்ல காலம் பொறக்கலாம். ஆனா வெக்கணுமே..."

— கருமானின் கலக்கம் நிறைந்த பேச்சும் ஏககப் பெரு மூச்சும் சோளகைக்குச் சற்று தெம்பைத் தந்தது. இவனிடம் உண்மையைக் கூறிவிடலாமா என்றும் தோன்றியது.

அப்போது கருமானின் அந்தப் பட்டறை முகப்பில் ஒரு புரவி வந்து கனைக்கும் அரவம் கேட்கவே கருமான் மனைவி சின்னாயி எட்டி வெளியே பார்த்தாள்.

"ஐய்யோ– அரண்மன கிட்டங்கிக் காப்பான்–" என்றாள் அவள்.



"ஐயா கொஞ்சம் பொறுங்க வந்துட்றேன்" என்படி வெளியே ஓடினான் கருமான். கிட்டங்கிக் காப்பான் பார்வை அங்கு நிற்கும் சோளகையின் புரவியையும், அவன் சகாக்களின் புரவிகளையும் பார்த்தது. ஓடி வந்து நிற்கும் கருமானையும் பார்த்தது.

"என்னவே– ஆறு குதிரைங்க இதெல்லாம்?"

"இதெல்லாம்... இதல்லாம் நம்ம அரண்மனக் குதிரைங்க தூங்கு வாடம் கட்ட வந்திருக்குதுங்க."– கருமான் வாய்க்குள் எப்படியோ அகப்பட்டுவிட்டது பொய்.

"சரி– சரி... சீக்கிரமாக வேலையை முடித்து அனுப்பி வை. ஈட்டி தட்டச் சொன்னது என்னாச்சு?"

"முடியப் போகுதுங்க..."

"சுருவ முடிச்சு வண்டில போட்டுவிடு–"

"ஆகட்டும் ஆண்டே– அப்படியே தட்டுக்கூலிக்கும் ஒரு வழி பண்ணீங்கன்னா–"

"கூலியா? எடேய் இது ராசாங்க சகாயம். இதுக்குப் போய் கூலி கேக்கறியே...? நவாப்புக்குத் தெரிஞ்சா வைகை ஆத்துங்கரைல வச்சு தலையைத் தட்டிடுவார்– ஆமா–"

கிட்டங்கிக் காப்பான் குதிரையை விட்டு இறங்காமல் கதைப்பாகப் பேசிவிட்டுப் பின் தொடையில் தன் முதலைத் தோல் செருப்பாலே ஒரு உதை கொடுக்க அந்தப் புரவி தன் நாடி நரம்புகளில் மின்சாரம் பாய்ந்ததுபோல் ஓடத் தொடங்கியது.

பெருமூச்சுடன் திரும்பி வந்தான் கருமான். சோளகையும் மற்ற வீரர்களும் கருமான் பேசியதையும் காப்பாளன் பேசியதையும் கேட்ட வண்ணம் இருந்தனர். அதன் எதிரொலியாக அவர்கள் முகத்தில் அனல் காந்தியது.

"கேட்டீங்களா– மூவாயிரம் ஈட்டியைத் தட்டியிருக்கேன். அவ்வளவும் ராசாங்க சகாயமாம். ஏழெட்டு நாளா இதே

சோலியதான் பாத்தேன். முறையா அன்னம் தண்ணி இல்ல. இந்த அநியாயத்தைக் கேட்பாரே இல்லாமப் போயிடுச் சுங்களே..."

கருமான் கண்களில் கண்ணீர் துளிக்கத் தொடங்கியது. சோளகையை அது என்னவோ செய்தது. நெருங்கி வந்து அவனது உருண்டு திரண்ட புஜத்தைப் பற்றினான்.

"கருமாரே.. கலங்காதீங்க! உங்க அத்தனை சிக்கலுக்கும் விடிவுகாலம் வரப்போவுது. உண்மையில் நாங்கள் யார்னு தெரிஞ்சா ரொம்ப சந்தோஷப்படுவீங்க.."

"என்னய்யா சொல்றீங்க?"

"நாங்க சேது நாட்டு மறவங்க மட்டுமில்ல... கிழவர் அனுப்பிதான் வந்துருக்கோம். அந்தக் குதிரைக்காரன்கிட்ட இருந்து நாயக்கரை மீட்கறதுதான் எங்க நோக்கம்..."

"அப்படியா... சத்யமாங்களா?"

"எங்க ராமலிங்கமேல சத்யமாக கருமாரே..."

"அதான் நவாப் யுத்தத்துக்கு முந்திக்கிறானோ?"

"எனக்கும் அதுதான் ஆச்சரியம். இந்த வினாடிவரை ரகசியமாக இருக்கிற ஒரு விஷயம் எப்படி ருஸ்தம்கானுக்குத் தெரியும்?"

"சோளகை... இப்பொழுது கேள்வி அதுவல்ல. நாம் அரண்மனைக்குள் நுழைய வேண்டும். அதற்கு என்ன பண்ணணுமோ அதைப் பண்ணுவோம்."

— இடையிட்டான் சகா ஒருவன்.

"ஆமா.. நீங்கள்ளாம் அரண்மனைக்குள்ள பூந்து கலகம் பண்ணப் போறீங்களா... அதான் உங்கத் திட்டமா?"— கேட்டான் கருமான்.

"திட்டத்தில் அதுவும் ஒன்று கருமாரே. எப்படியோ இங்கே வந்ததில் எங்க குதிரைகளுக்குப் பாதுகாப்பும் ஒரு முக்கிய



சேதியையும் தெரிஞ்சிக்கிட்டோம். ரொம்ப சந்தோஷம். ஆமா இந்த சட்டிகளை எப்படி அனுப்பப் போறீங்க?"

"வண்டில போட்டுத்தான். எருமத்தாழி வண்டி ஒண்ணு இருக்கு. அது வரும். இங்க இருந்து பதினாறு கல் தூரம் போகணுமே. முதல் சாமத்துல வண்டில மாட்டப் பூட்டினா விடியக் கருக்கலும்போது தமுக்கம் போய் நிக்கும்."

"கூட யார் போவீங்க?"

"யார் போவா..? நானும் என் பட்டற ஆட்களும்தான்."

"இந்த முறை நாங்கள் போகவா?"

— அடுத்த நொடி கருமான் சரியாகப் புரிந்து கொண்டு கேட்டான்.

"என்னங்க கேள்வி இது? இதுல்ல சந்தர்ப்பம்."

— அடுத்த நொடி கருமானை அள்ளி அணைத்துக் கொண்டான் சோளகை சேர்வைக்காரன்.

இராமலிங்க விலாசம்.

கோச் வண்டியிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தாள் அழகம்மை. ஆச்சரியப்பட்டுப் போனார்கள் அரண்மனைச் சிப்பந்திகள். கிழவனின் மனைவியரிலேயே துடுக்கு அதிகம் இருப்பது அழகம்மையிடம்தான். மிடுக்கும் மினுமினுப்பும்கூடக் கிழவன் பத்தினியர்களில் அழகம்மையிடம் எட்டுக்கல் விட்டுத் தெறிக்கும்.

சரியான சிவ பக்தை.

நிதமும் இராமலிங்க ஸ்வாமியை நமஸ்கரிக்க வேண்டும் என்று விரும்பித் தன் ஜாகையை ராமேஸ்வரம் திருவடித் தெருவிலும் வைத்துக் கொண்டிருப்பவள்.

அங்கிருந்து இங்கே இன்று.. எதற்காக? அதிலும் இத்தனை வேகமாய்?

"ஏஹேய் சேது ராஜ்யமதில்
நிகரில்லா சக்கரவர்த்தி அவதார குலமூர்த்தி
அண்டதிக்கும் கீர்த்தி காட்டும் எங்கள்
ராசாதி ராசர் ராசமார்த்தாண்டர்
கொண்டையங்கோட்ட மறவர்
மகாராஜ பத்தினி, ரட்சிணி
அழகம்மை நாச்சியார் பராக்... பராக்... பராக்...!"—

அழகம்மைக்குக் கட்டியமும் பாடப்பாட அவள் அரண்மனை அங்கவர்களைப் பார்த்தபடியே கிழவன் இருக்கும் ஆலோசனை மண்டபத்திற்குள் நுழைகிறாள்.

இலவந் திண்டுகள் மேல் சாய்ந்தபடி நெற்றியில் வரிப் பந்தல் போட்டுச் சிந்தித்துக் கொண்டிருந்த கிழவரும், நாலு கோட்டை பாளையத்தேவரும், வள்ளல் சீதக்காதியும் அழகம்மையை அங்கே முற்றிலும் எதிர்பாராத அதிர்ச்சியை முகத்தில் காட்டுகின்றனர்.

வந்தவள் அவைக்கு முதலில் வணக்கம் சொன்னாள். கண்ணாடி வளையல்களும், தங்க வளையல்களும் அப்போது அதிகமாகவே சப்தமிட்டன.

பின் கிழவனை நெருங்கியவள் மண்டியிட்டு அமர்ந்தாள். அப்படியே முன்பக்கம் குனிந்து வணங்கிவிட்டுக் கிழவனைத் தன் வண்டு விழிகளால் பார்த்தாள்.

"என்ன அழகு இது? எதற்கிந்த திடீர் விஜயம்?"

"காரணமாகத்தான்."

"சொல்."

"யுத்த ஆலோசனையோ?"

"உனக்கும் சேதி தெரிந்துவிட்டதா?"

"ஒருவர் வந்து தெரிவிக்கத் தேவையில்லை. நீங்கள் நினைப்பது எனக்குள்ளும் அடுத்த நொடியே நினைக்கப் படுகிறது. நான் என்ன செய்வேன்...?"



"ஏதேது யாழ்ப்பாணத்துச் சித்தர் ஒருவர் மனத்தைப் படிப்பது பற்றிப் பேசியது போலவே பேசுகிறாயே?"

"நான் ஒரு பெண் சித்தர் என்று வைத்துக் கொள்ளுங்களேன்."

"சரி விஷயத்துக்கு வா..."

"ஒன்றுமில்லை. ராமலிங்க ஸ்வாமி ஆலயத்திற்கு ஒரு வடநாட்டுச் சந்நியாசி வந்திருந்தார். அவரிடம் பேசும்போது யுத்தம் வரப்போகிறது. உன் கணவனைச் சூரிய நமஸ்காரம் செய்துவிட்டு, கிழக்கு நோக்கி முதலில் பயணம் செய்துவிட்டுப் பின் எப்படி வேண்டுமானாலும் போகச் சொல். வெற்றி நிச்சயம் என்றார்... அதைச் சொல்லத்தான் ஓடி வந்தேன்."— அழகம்மை மார்பில் ஒருவித விம்மலும் சரிவும் நிகழ கிழவன் அழகம்மையின் நிலா முகத்தைப் பாசத்துடன் தன் வலக் கரத்தால் ஏந்தியபடிப் பிடித்தார்.

"அழகு... இதற்காகவா இத்தனை தூரம் வந்தாய்?"

"ஆமாம்..."

"ஆனால் உன் கண்கள் இல்லை என்கிறதே?"

"அது... அது..."

"உம் சொல். என்ன சேதி?"

"வேண்டாம். இப்பொழுது வேண்டாம்."

"பரவாயில்லை சொல்."

"தயவு செய்து இப்பொழுது வேண்டாம். நீங்கள் வெற்றி வீரராகத் திரும்பி வருவீர்களல்லவா அப்போது சொல்கிறேன். எனக்கு இப்பொழுது உத்தரவு தாருங்கள்."

அவள் மீண்டும் விழுந்து வணங்கினாள். பின் எழுந்து அவையையும் பார்த்து வணங்கிவிட்டு சீதக்காதியைப் பார்த்து,

"என்ன அண்ணா மிக இளைத்து விட்டீர்களே... இரமலான் நோன்புக் காலமா இது?"

"எனக்கு எல்லா மாதங்களும் ரமலான் மாதம்தானே சகோதரி... நீ எப்படி இருக்கிறாய்?"

"எனக்கென்ன குறை அண்ணா? யுத்தத்தை நினைத்தால் தான் கலக்கமாக இருக்கிறது. ஆனாலும் ஒரு புறம் தைரியமாக வும் இருக்கிறது."

"எப்படி?"

"உங்கள் அருளாசிகள் அவருக்குப் பக்க பலமாக இருக்குமே..."

"நான் என்ன மகானா? இல்லை யோகியா? சாதாரண மனிதன் தானே சகோதரி...?"

"யார் சொன்னது அப்படி என்று...? தவறாத தொழுகை யும் அயராத நோன்பும் கொண்ட ஒவ்வொரு துலுக்கப் புருஷரும் நிச்சயம் யோகிகளுக்குச் சமமானவர்கள்தான். அவர்கள் சொல்வது பலிக்கும். கேட்டது கிடைக்குமே..."

"அடேயப்பா... எங்களை நன்றாகவே எடை போட்டு வைத்திருக்கிறாயே நீ..."

"அப்பா நான் ஒன்று கேட்கவா?"

"என்ன சகோதரி?"

"நான் ஒன்றை மனதில் நினைத்துக் கொண்டிருக்கிறேன். அது நடக்க வேண்டும் என்று வாழ்த்துங்களேன்."

"என்ன அது?"

"அதைப் பிறகு சொல்கிறேன். முதலில் வாழ்த்துங் களேன்."

"நீ நல்லதாக எதை நினைத்தாலும் அது நடக்கும். போதுமா?"

"போதுமண்ணா... இது போதும்..."

— அழகம்மை சீதக்காதியின் கரங்களைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். பின் மஸ்லின் திரை சரிந்து



மறைந்த பக்கவாட்டின் வழியாகக் கிழவனை ஊடுருவினாள். ஒரு குறுநகை க்ஷணத்தில் உதட்டில் தோற்றிட எழுந்து விறுவிறுவென்று நடக்க ஆரம்பித்தாள். எதிரில் மணிப்புறா ஒன்றைப் பற்றியபடி 'தாக்கல் வாங்கி' ஒருவன் ஆலோசனை மண்டபம் நோக்கிச் சென்று கொண்டிருந்தான்.

## 17

'வீரர்கள் வாழும் திராவிட நாட்டை
வென்றவர் கிடையாது.
வேலும் வாளும் தாங்கிய மறவர்
வீழ்ந்ததும் கிடையாது.
தன்னிகரில்லா மன்னவர் உலகில்
தமிழே நீதிபதி.
தரணியிலே இதன் பெருமை உரைத்தோன்
கிழவன் சேதுபதி.'

— கவியரசு கண்ணதாசன்

மணிப்புறா ஒன்றோடு தன்னைக் கடந்தும், கடக்கையில் அந்தப் புறாவும் கையுமாய்த் தன்னை வணங்கிவிட்டுச் சென்ற 'தாக்கல் வாங்கி' எனும் அஞ்சல்காரனை உத்தேசித்துச் சில வினாடிகள் நின்று யோசிக்கத் தொடங்கினாள் அழகம்மை.

அஞ்சல்காரன் நிச்சயம் ஏதோ ஒரு முக்கியச் செய்தி யோடு தான் வந்திருக்க வேண்டும் என்று யூகித்தவளுக்குள் அது என்னவாக இருக்கும் என்று அறியும் ஆவலும் ஏற்பட்டது. ஆயினும் திரும்பிச் சென்று அதன் தொடர்ச்சி

யாய் ஆலோசனை மண்டபத்தில் நிகழவிருக்கிற வாதப் பிரதிவாதங்களைக் கேட்க அவளுக்குச் சற்று அச்சமாக இருந்தது.

ராஜ்ய விவகாரங்களில் தன்னைச் சார்ந்த பெண் மக்கள் மூக்கை நுழைப்பதைக் கிழவன் துளியும் விரும்பாதவர் என்பதையும், அதிகப்பிரசங்கித்தனமான செயல்பாடுகளுக்கு ஆசை நாயகியரே ஆனாலும் கடும் தண்டனை உண்டு என்பதையும் ஒரு க்ஷணம் யோசித்த அழகம்மை ஒருவாறு கட்டுப்படுத்திக் கொண்டு வந்த வழியே திரும்பவும் நடக்க ஆரம்பித்தாள். அரண்மனை வாயிலில் அவளை அழைத்துச் செல்லக் காத்திருந்தது கோச்சு வண்டி. மனைக் காப்பாளர்களில் பலரும் அவளையும் அவளது செயல்பாடுகளையும் பார்த்த வண்ணமிருந்தனர்.

தயக்கமுடன் கோச்சு வண்டியில் ஏறி அமர்ந்தாள் அவள். வண்டியில் இரட்டைக் குதிரைகள் பூட்டப்பட்டிருந்தன. அவள் ஏறி அமர்ந்த மறுநொடி கொம்புகள் ஊதப்பட அந்த இரட்டைப் புரவிகளும் ஓடத் தொடங்கின. அரண்மனை வாயிலை எட்டிக் கீழ்த்திசை பெரிய வீதியில் வளைந்து திரும்பிக் கோட்டை வாசல் பிள்ளையார் கோயிலினைக் கடக்கும்போது சமிக்ஞை தந்து கோச்சினை நிறுத்தச் சொன்னாள்.

மண் கவளங்களைக் கெல்லி எறிந்தபடி குதிரைகள் நிற்க கோச்சிலிருந்து திரை விலக்கி எட்டிப் பார்த்தாள். கோயிலுக்குள் பிள்ளையாரும் தும்பிக்கை முகத்தோடு அன்றைய பூசனைகளை அங்கீகரித்தவராய் வெள்ளெருக்கு மாலையுடன் காட்சி தந்தார்.

அவளது கரங்கள் குவிந்து அந்த மூர்த்தியை வணங்கத் தொடங்குகின்றன.

"கணபதி— எல்லா நிலையிலும் என் கணவரின் செயல்களுக்குத் துணையாக நில். உன்னை வணங்காமல் அவர் எதையுமே செய்வதில்லை. யாருடைய சூழ்ச்சிக்கும் அவர் பலியாகிவிடக் கூடாது—"



அவளது பிரார்த்தனைக்கு ஒரு மறுபதில் போல எங்கோ உள்ள மசூதியில் ஒரு முகம்மதியர் குர்-ஆனின் வேத வசனங்களை ஒலித்து நடத்தும் தொழுகைக்குரல் தேய்ந்து வந்து காதை அடைந்தது. மனத்துக்கு அது மிக இதமாக இருந்தது. இந்த நொடிப்போதில் சேதுமண்ணில் எந்தப் பேதமும் இல்லை. எந்தச் சேதமும் இல்லை. எல்லா நலங்களோடும் எல்லா வளங்களோடும் அது திகழ்வதாகவும், அண்டை அயலில் உள்ளவர்களுக்கெல்லாம் சேதுப்பட்டணம் ஒரு வீரப்பட்டறையாகக் காவல் நாயகன் ஒருவன் ஆளும் சாம்ராஜ்யமாகவே அது தெரிவதாகவெல்லாம் தனக்குள் நினைத்துக் கொண்டவள் அந்த நினைப்பின் இறுமாப்போடு, கோச்சைக் கிளப்பச் சொல்லிவிட்டு அதில் ஏறி அமர்ந்தாள். கோச் சிறிது நேரம் கடந்திருக்கும். அழகம்மையின் பார்வை ராமநாதபுரத்தை அளக்க ஆசை கொண்டது போலத் திரைச்சீலையை விலக்கிப் பார்த்தபடியே வந்தது.

பல இடங்களில் வடவர்கள் கூட்டம் கூட்டமாக ராமேஸ்வரம் நோக்கி நடந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். கோவேறுக் கழுதைகள் அன்ன மூட்டைகளைத் தாங்கி நடந்து கொண்டிருக்கின்றன. அவர்களில் ஒரு பெண்ணின் தலையில் கலசம் போல் ஒரு குடமும் அதில் கங்கை நீரும் இருக்கிறது.

அவர்கள் இப்படித்தான்—

கங்கை நீரைக் கொண்டு வந்து இராமேஸ்வரத்தில் சேர்ப்பார்கள். இங்குள்ள நீரை அங்கு கொண்டு சேர்ப்பார்கள். நீராலே ஓர் இணைப்பு! பூமிக்கடியில் இந்த உலகம் நீரால்தான் இணைந்து கிடக்கிறது. அதில் பிரிவே கிடையாது. மேலே மட்டும் எதற்குப் பிரிவு என்று கேட்பது போல இருக்கும் அந்தச் சடங்கு சம்பிரதாயங்கள்.

கோழி தானியமணிகளைத் தேடித் தேடிக் கொத்தி அடைவது போல அழகம்மையும் இப்படிப்பட்ட காட்சிகளால் கருத்துகளைத் தேடி அடைபவள்.

இராமநாத ஸ்வாமி கோயிலில் அடிக்கடி பிரவசனங்கள நடக்கும். அதில் ஹிந்தி, சமஸ்கிருதம், மராத்தி என்று எல்லா மொழிகளும் போட்டி போடும்.

தரிசனத்துக்கு வரும்போது இந்த ராஜ பத்தினியின் காதிலும் அவை சில சமயம் விழும்.

அதில் எப்பொழுதோ, யாரோ ஒருவர் சொன்ன கருத்து அழகம்மை மனத்தில் தேனடை போலக் கட்டிக் கொண்டு விட்டது.

'இராமேஸ்வரம் ஒரு புண்ணிய பூமி. பிறர் பாவங்களை வாங்கிக் கொள்ளத்தான் அக்னி தீர்த்தம் எனும் பெயரில் கடலானது இங்கு விரிந்து கிடக்கிறது. இந்த நீரில் மட்டும்தான் மனித பாவங்கள் கரையும். இந்த மண்ணால் மட்டும்தான் பிறரைத் தாங்கி நிற்க முடியும்.

இங்குள்ள சுவாமிக்குதான் மனிதப் பிறப்புக்கு மேலான மோட்சத்தைத் தரும் சக்தியும் வல்லமையும் மிகுந்து கிடக்கிறது. அதனால்தான் மனிதப் பிறப்பெடுத்த தெய்வமான ஸ்ரீராமன் பரந்த இந்தப் பூமியில் இங்கே வந்து நீராடினான். பூஜைகள் செய்தான்.

இங்கே ஒரு கை மண்ணெடுங்கள். 'ராம ராம சிவ சிவ' என்று சொல்லியபடியே அதைக் கொண்டு செல்லுங்கள். உங்கள் இல்லத்தில், தோட்டத்தில், வயல்காட்டில் அதைத் தூவுங்கள். அடுத்த நொடி அவை அவ்வளவும் புனிதமாகி விடும். அவைகளுக்கும் பிறரைக் காத்து மகிழும் குணமும், தாங்கி அருளும் குணமும் வந்துவிடும்.

மண்ணல்ல இது– பொன்!

பொன்னுமல்ல இது– அதற்கும் மேல்!'



– பிரவசனக் கருத்துகளை நினைத்து நெகிழ்ந்தபடி இருக்கிறாள் அழகம்மை.

பொன்னுக்கும் மேலானதுதான் இந்தப் பூமி. அதனால தான் உலகிற்கு உதாரணமாக எல்லா மனிதர்களையும் எல்லா மதங்களையும் இது தாங்கிக் கொண்டிருக்கிறது.

அவள் தனக்குத்தானே சொல்லிக் கொள்ளும் அந்தத் தருணத்தில் அரண்மனைக்குச் சொந்தமான நந்தவனம் ஒன்றுக்குள் கோச் நுழைகிறது.

அதில் ஏகமாய்ப் பட்சிகள்– பட்சிகளைப் பார்க்கும் போதுதான் அஞ்சல்காரன் கைவசமிருந்த மணிப்புறாவின் ஞாபகமும் அவன் கொண்டு வந்திருந்த சேதி என்னவாக இருக்கும் என்கிற கேள்வியும் அவளுக்குள் திரும்பவும் தலை எடுத்தது.

அது என்னவாக இருக்கும்?

திரும்பவும் அந்த மணிப்புறா இராமநாதபுரத்து வானில் மறு பதிலோடு உயரப் பறக்கத் தொடங்கிவிட்டது. தாக்கல் வாங்கி தன் அலுவலக மனையில் அஞ்சல் புறாக்களின் அடைப்புக் கூண்டுக்கு நடுவில் நின்று கொண்டிருந்தான். ஐம்பதுக்குமேல் சதுர சதுரமாக அடைப்புக் கூண்டுகள். அதிலெல்லாம் சாம்பல் தட்டியும் சாக்கைப் பொன் மினு மினுப்பும், தும்பை வெளுப்பும் கொண்ட பலபலப் புறாக்கள்.

ஒவ்வொன்றும் ஒவ்வொரு திக்குக்குச் சென்று திரும்பும் பயிற்சியைப் பெற்றவை. அவைகளில் மிகச் சிறு குருவியோ என்று நினைக்கும்படி ஒரு கொச்சுப் புறா அபூர்வ ஜாதி! பாலைப் பிரதேசங்களில் மட்டுமே காண முடிந்த பறவை அது. ராமநாதபுரத்து ராமலிங்க விலாசத்தில் இருந்து புறப்பட்டால் டெல்லிப் பட்டணம்வரை ஓய்வே எடுக்காமல் பறந்து விட்டுத் திரும்பி வரும். டெல்லியின் நடப்புகளை மோப்பம் பிடித்து அதன் காலில் சேதிக் குழலைக் கட்டி அனுப்ப அங்கே ஒரு மறவன் தயாராக இருக்கிறான்.

அவன் மூலமாக ஒரு புதிய சேதியோடு அந்தக் கொச்சுப் புறா வந்தபடி இருந்தது. தாக்கல் வாங்கி மற்ற புறாக்களுக்கும் சுத்தமான நீரைக் காட்டி நவதானியங்களையும் இறைக்கும் போது அவன் தோள் மேல் வந்து அமர்ந்தது.

"வாடா வீரியா, வா... வந்துட்டியா?" என்றபடி தாக்கல் வாங்கியும் அதைத் தழுவி வரவேற்றான். அதன் காலில் உள்ளங்கைக் கொள்ளுமளவு கட்டப்பட்டிருந்த விரல் பருமனுள்ள குழலையும் அவிழ்க்கலானான். குழல் மேல் அரக்கு முத்திரை இருந்தது. அப்படியானால் ஏதோ ஒரு முக்கியச் சேதியாகத்தான் அது இருக்க வேண்டும். யூகித்தவன் உடனடியாக அந்த கொச்சுப் புறாவிற்குக் கிண்ணத்தில் தண்ணீர் வைத்தான். அதுவும் பெரும் சிரத்தையோடு உடம்பை உதறி உதறிக் குடித்தது. பின் பாதாம் பருப்பு, அக்ரூட் கொட்டை, ஏலம், மிஸ்திரி, திராட்சை கலந்த ஒருவித தானியப் பாத்திரத்தை அதன் கூண்டுக்குள் வைத்து அதையும் உள் வைத்து அடைத்துவிட்டுத் திரும்பவும் ஆலோசனை மண்டபம் நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

மூன் அவன் கொண்டு வந்திருந்த சேதி ஒரு கைக்குட்டை யளவு மஸ்லின் வஸ்திரத்தில் பொடி எழுத்துகளில் எழுதப் பட்டிருந்தது. அதுவும் ரத்தினச் சுருக்கமான பதப் பிரயோகங் களில்...

> 'கு. காரன்' விழிப்போடு இருக்கிறான். கோவிந்த, கிருஷ்ணப்பர் சிறையில். குமாரப்பிள்ளையே திசை காட்டி. ஆதரிப்பது போல் நடிப்பதால் நம்மவர் ஊடுருவல் ஜெயமாயிற்று. சொக்கர், மங்கம்மாள், மைத்துனன் ரகசிய இடத்தில். படைக்குள் ஒற்றுமை இல்லை. அளவு முப்பதாயிரத்துக்கும் மேல்... சூறாய்க் குண்டுகள் மிகுதி. எச்சரிக்கையோடு வந்தால் ஜெயப்பாடே!
>
> – தருக்கான் என்னும் மதுரை ஒற்று.'



– அந்தச் சேதிகூட ஆலோசனை மண்டபத்துக் கருந்தேக்கு மேசை ஒன்றின் மேல் படிக்கத் தோதாக விரிந்து கிடந்தது. அதை வாசித்து முடித்து அதன் நிமித்தம் ஒரு சுற்றுப் பேச்சு வார்த்தை கூட முடிந்து விட்டிருந்தது. இதனால் குமார பிள்ளையை உத்தேசித்த பெருமிதம் எல்லோர் முகத்திலும்...

"பிள்ளை மகா சாதுர்யக்காரனதான் போலும்..." கிழவன் மீசையை நீவியபடிக் கருத்தினைக் கூற,

"அடுத்து என்ன செய்வதாக உத்தேசம்?"– சீதக்காதி நிதானமாகக் கேட்டார்.

"பொறு காதி... இன்னொரு முக்கியச் சேதிக்காகக் காத்திருக்கிறேன்."

"தெரியும். டெல்லித் தகவல்தானே?"

கிழவனின் முகம் அடுத்த நொடி கூர்மையாகச் சீதக்காதி யைப் பார்த்தது.

"என்ன சேதுபதி? ஏதாவது தவறாகக் கேட்டுவிட்டேனா?"

"இல்லை... இப்பொழுதெல்லாம் என் சகோதரனே நீ என்னை விட வேகமாகச் சிந்திக்கிறாய்" என்றார் கிழவன்.

"ஓ! அல்லாவிற்கு நன்றி..."

"எதற்கு?"

"என்னை அடிக்கடி சகோதரன் என்கிறீர்களே... அதற்கு"

"அழைத்ததற்கே இப்படி மகிழ்கிறாயே. ஒரு பட்டயமும் எழுதித் தந்துவிட்டால்...?"

"தாருங்கள் சேதுபதி, அது பின்னாளில் அழியாதபடி வரலாற்றில் பேசப்பட மிக உதவியாக இருக்கும். மதமாச்சர்யம் கடந்து ஒரு பேரரசனும் ஒரு வாணிபனும் உறவு கொண் டார்கள். உயிரோடு உயிரைக் கலப்பித்துக் கொண்டார்கள். இதனால் வாணிபன் அமைச்சனாகவே ஆக்கப்பட்டான். சேது மண்ணின் விதிப்பாடுகளை இவனும் சேர்ந்து நிர்ணயம்

செய்தான் என்கிற உண்மையெல்லாம் காலத்தால் அறியப்பட அது மிகமிகத் துணை செய்யும்…"

— வள்ளல் சீதக்காதி கண்கள் பனிக்க எடுத்துரைத்த போது தாக்கல்வாங்கி டெல்லிச் சேதியோடு உள் நுழைந்து வணங்கி நின்றான்.

"பிலே… டெல்லியிலிருந்தும் சேதி வந்து விட்டது" என்ற படி அந்தச் சேதியை வாங்கிய கிழவன் அதைச் சீதக்காதியிடம் தந்து வாசிக்கச் சொல்ல, சீதக்காதியும் அரக்கு முத்திரையை உடைத்து உள்ளிருந்து சுருட்டி அடைக்கப்பட்ட வஸ்திரத்தை வெளியே எடுத்து விரித்தார்.

மஞ்சள் வஸ்திரத்தில் கறுப்பு எழுத்துகள்!

'மதுரைச் சிக்கலை ஔரங்கர் அறியார். குதிரைக்காரன் புளுகன், ஔரங்கர் உத்தமர்!'— என்றது அந்தச் செய்தி. அடுத்த நொடி புளகாங்கிதத்தோடு "யாஹல்லா…" என்று ஸ்லாகித்தார் வள்ளல்.

"என்ன காதி… என்ன சொல்கிறது சேதி?"

"அந்த மதுரை மகம்மதியனுக்கும் சக்கரவர்த்தி ஔரங்க சீப்புக்கும் எந்தத் தொடர்பும் கிடையாதாம். அத்துடன் மதுரையின் எந்த ஒரு சிக்கலையும் அவர் அறிந்திருக்கவில்லை. அது நமக்குச் சம்பந்தமில்லாத விஷயம் என்று இருக்கிறாராம். பிறர் ராஜ்யங்களில் அத்துமீறி தலையிடுவதோ, மண்ணை அபகரிக்க ருஸ்தம்கான் போல் ஆசைப் பேய்களை ஆட்டுவிப்பதோ ஔரங்கசீப் அவர்களுக்கு முற்றிலும் பிடிக்காத விஷயம் என்பது என் கணிப்பாக இருந்தது. அதை இந்த ஓலை ஊர்ஜிதம் செய்து விட்டது."

"பிறகென்ன இனி புறப்பாடுதான்…" கிழவன் விறைப்பாக எழுந்து நின்றார்.

"அப்படியானால் முன்னர் திட்டமிட்டபடி நீங்களும் வீரர்களும் மதுரை செல்ல உரிய ஏற்பாடுகளைச் செய்து விடட்டுமா?"



"தாராளமாக… இனி ஒரு கணம் தாமதிக்கக் கூடாது. நமது சேது நாட்டு ஜமீன்களுக்கும் தாக்கல் அனுப்பி விடு. எச்சரிக்கையாக அங்கும் வீரர்கள் தயார் நிலையில் இருக்கட்டும். அவசியப்பட்டால் அழைத்துக் கொள்ளலாம்.

அந்தக் குதிரைக்காரனோடு ஒரு பகல் பொழுது யுத்தம் புரிவது கூட எனக்குத் தேவலாம். சுற்றி வளைத்தால் உள்ளே புகுந்து வெற்றிக் கொடியை ஏற்றிவிட்டுத்தான் வரவேண்டும்.

அதே சமயம் அந்தக் குதிரைக்காரன் தலை அவன் கழுத்தில் இருக்கக் கூடாது…"

— கிழவன் பேசியபடியே அங்கிருந்து நீங்கத் தொடங்கினார். சிறிது தூரம் வரை சென்றவர் எதிர்பாராதபடி பின்னால் வந்தார். பருத்த தூண் ஒன்றை ஒட்டியபடி நின்று கொண்டிருந்த ஒரு காவலன் அவர் வரவும் விறைத்த நிலைப்பாட்டில் லேசாகத் தடுமாறினான்.

கிழவனின் பார்வை அவனைத் துளையிடுவது போல இருந்தது. வள்ளலும் பார்த்துவிட்டு என்னவோ ஏதோ என்று ஓடிவந்தார்.

கிழவன் அவனைப் பார்த்துவிட்டுப் பார்வையை வள்ளலை நோக்கித் திருப்பினார். பின், "காதி… தாதியத் தேவனையும் அவன் சகாக்களையும் கூட என்னோடு யுத்தத்துக்கு வரப் பணித்து விடு. தாதியத்தேவன் தலைமையில் அவன் தொண்டனாக நான் செல்ல விரும்புகிறேன்" என்ற கிழவன், திரும்பவும் அந்தக் காவலனை ஒரு பார்வை பார்க்க, அவன் அதற்கு மேல் தாங்க முடியாது என்பது போலக் கிழவனின் காலில் விழுந்து கதற ஆரம்பித்தான்.

"ராசா என்ன மன்னிச்சிருங்க… தேவர்தான் என்னைக் கட்டாயப்படுத்தி இங்கு நடப்பதைக் கவனிக்கச் சொல்லச் சொல்றார். இல்லாட்டா என்னையும் என் குடும்பத்தையும் அழிச்சுடுவேன்னு சொல்லி மிரட்டுகிறார். நானாக மனசு வந்து

உளவு பார்க்கலை. இது சத்தியம். என்னை மன்னிச்சிடுங்க அரசே... என்னை மன்னிச்சிடுங்க..."

அவன் கதறிப் பொருமினான். கிழவன் எதுவும் பேச வில்லை. ஒரு பார்வையே அவனைச் சலவை செய்துவிட்டது. இனி அவன் தவறு செய்ய மாட்டான் என்பதை அவன் நடுக்கமே சொல்லாமல் சொல்லும்போது மற்ற பேச்சுகள் எதற்கு?

இரவு நேரம்.

மாடத்து லாந்தல்கள், லஸ்தர் திரி விளக்குகள், ஈறுப் பிடிப் பந்தல்களின் விளக்கொளியில் நாயக்கர் அரண்மனை பரபரப்போடு இருக்க, சிறைக் கொட்டாரத்திற்கான அன்ன வண்டி அரண்மனை கொட்டகை மடப்பள்ளிவிட்டு நீங்கி சிறைக் கொட்டாரம் நோக்கிப் புறப்படத் தயாராக இருந்தது.

அன்னப் பாத்திரங்களை அதில் ஏற்றிய பலரில் ஒருவனை மட்டும் எங்கோ பார்த்ததுபோல இருந்தது. என்ன தான் பணியாளன் வேடமிட்டிருந்தாலும் குமாரபிள்ளையைத் தெரியாமல் போகுமா?

# 18

மனோ பயங்கரன், கட்டாரி சாளுவன்,
நவகோடி நாராயணன், துலுக்கர் தளவிபாடன்,
துலுக்கர் மோக தவிள்தான்
ஒட்டியர் தளவிபாடன்...
ஒட்டியர் மோகந் தவிள்த்தான்,
மலை கலங்கினாலும் மனங் கலங்காதான்,



அறிவுக்கு அகஸ்தியன் அழகுக்கு வாலசீவகன்,
சொல்லுக்கு அரிச்சந்திரன் வில்லுக்கு விசையன்,
மல்லுக்கு வீமசேனன்
தாலிக்கு வேலி
அன்ன சத்திர
சோமன் அடியார் வேளைக்காறன்
செம்பிவளநாடன்
பூலோக தெய்வேந்திரன்......

அன்ன வண்டியானது நல்ல பொலி காளைகள் பூட்டப்பட்டு, ராட்சஸ அண்டாக்கள் ஏற்றப்பட்ட நிலையில் சிறைச்சாலை முகப்பு நோக்கி உருளத் தொடங்கியது.

சிறைச்சாலைக்குள், சொக்கநாத நாயக்கர் நேராக ராஜ்ய பரிபாலனம் செய்த வரையில் நூற்றுக்கும் குறைவான கைதிகள்தான் இருந்தார்கள். ஆனால் ருஸ்தம் கைகளுக்கு ஆட்சிக் கடிவாளம் வந்துவிட்ட நிலையில் அவனை எதிர்த்த வர்கள் எல்லோரும் உள்ளேதான் அடைக்கப்பட்டிருந்தனர்.

எனவே சிறைச்சாலை நிரம்பி வழிந்தது. அந்தகாரச் சிறை யிலும் வழிசல். தலைமைக் காவலாளி திம்மையா திணறித்தான் போனான். இனி யாரைக் கைது செய்தாலும் திருச்சிக்கும் திண்டுக்கல்லுக்கும் அனுப்பிவிடச் சொல்லியிருந்தான். சொக்கநாதர் கைதிகளின் மேல்கூடக் கருணையோடு இருந்தார் என்றுதான் சொல்லவேண்டும். கம்பங் கட்டிகளும் சோளக் கஞ்சியும்தான் சிறைச்சாலையின் பிரதான உணவு. துளிபோல தொன்னையில் புளிச்சாச்சும் தரப்படும். இன்று ருஸ்தம் அதில் கைவைத்து பன்றி உணவான கிழங்கு மாவுக் கஞ்சியை அதுவும் உப்புக் காரமின்றிப் போட்டு, உள்ளிருப்போரை நொறுங்கிப் போகச் செய்திருந்தான்.

அண்டாக்கள் கொள்ளாதபடி அவை நாற்றத்தோடு மூக்கைச் சடைத்தன. அன்ன வண்டி ஓட்டிக்குத் தினமும்

அவைகளோடு பயணம் செய்வது பெரும்பாடாக இருந்தது. இன்று அவனை ஓரங்கட்டிவிட்டு அதில் பயணம் செய்யும் குமாரபிள்ளைக்கும் அதே உணர்ச்சி. ரத்தம் கொதித்து மனம் மூர்க்கமாகிவிட்டிருந்தது.

நல்லவேளை எல்லாம் இன்னும் ஒரு சில தினங்கள் மட்டுமே. பிறகுதான் சர்வமும் மாறப்போகிறதே?

கொதிப்பை அடக்கிக் கொண்டு வண்டியைச் செலுத்தினார் குமாரபிள்ளை. ருஸ்தம்கானின் நம்பிக்கைக்குரிய மனிதராகக் கருதப்பட்டாலும் சிறைச்சாலை பக்கம் போக மட்டும் குமாரபிள்ளையால் முடியவே இல்லை. எதற்கும் குமாரபிள்ளை மேல் கண் இருக்கட்டும் என்று அவன் எச்சரிக்கையோடு திம்மையாவிடம் சொல்லியிருந்ததை மோப்பம் பிடித்துவிட்டார் பிள்ளை.

அது மட்டுமல்ல. நாலாபுறமிருந்தும் ஊடுருவியவர்களில் சிலரை மட்டும் அடையாளம் காட்டிப் பலரைக் காணாது விட்டு அவர்களைச் சிறைக் கொட்டாரங்களில் அடைத்தாகி விட்டது.

உள்ளே அந்தகாரத்தில் கிடக்கும் கோவிந்தப்பையாவும் வெங்கடகிருஷ்ணப்பரும் தம்மைப் பற்றிய மலிவான எண்ணங்களில் இருப்பார்கள். அவரையும், தானே காட்டிக் கொடுத்தவர்களையும் முதலில் இன்றிரவே விடுவித்தாக வேண்டும்.

கோவிந்தப்பையாவிடமும் வெங்கடகிருஷ்ணப்பரிடமும் இப்படி வெளியே இருந்து காரியம் சாதிக்கத்தான் குதிரைக்காரனுக்கு விசுவாசியாவதைப் போல நடித்தேன் என்பதையும் எடுத்துக் கூறவேண்டும் என்று நினைத்தபடியே வண்டியைச் செலுத்தியவர், சிறைச்சாலைச் சாவடி முகப்பில் பெரும் கூட்டம் திரண்டிருப்பதைப் பார்த்துச் சற்று மிரண்டுபோனார்.

'அன்னவண்டி' என்றதும் ஒதுங்கி வழிவிட்ட வீரர்கள் கவனமெல்லாம் வேறெங்கோ இருந்தது.



"என்ன இது? எதற்காக இவர்கள் இப்படிப் பரபரப்பாகக் காட்சி தருகிறார்கள்?"

கேட்கலாம் என்றால் கழுத்துக்கும் தலைக்குமாய்ச் சேர்த்துக் கட்டியிருக்கும் பாகைத் துணியை நீக்க வேண்டும். குரல் தன்னைக் காட்டிக் கொடுத்து விடலாம்.

எச்சரிக்கை மிகுதியோடு குமாரபிள்ளை சூழ்நிலையை அளக்கும் போது சிறைச்சாலையின் தூக்குமேடை சமைந்திருக்கும் வடக்கு பாகத்திலிருந்து சிலர் புரவிகளில் சீற்றத்துடன் வெளிப்பட்ட நிலையில் அங்கிருந்து சிரித்தபடியே செல்லத் தொடங்கினர்.

சில விநாடிகளில் 'தொம்..' 'தொம்..' என்று மங்கள வாரித்தியின் சப்தம்.

ஒரே சீராக, சமமான கால அளவு இடைவெளியோடு அது கேட்கத் தொடங்க, ஏராளத் தீப்பந்தங்களின் ஒளிப் புனலுக்கு நடுவே சில வீரர்கள் நடந்து வர, நடுவில் மல்லனைப் போல் எண்ணெய் பூசிய மார்போடு கூடிய ஒருவன் ஒரு வேல் கம்பை ஏந்திப் பிடித்தபடி வந்தான். அந்த வேல் கம்பின் கூர்முனையில் ஒரு மனிதத் தலை. பார்த்த மாத்திரத்தில் குமாரபிள்ளைக்குப் பகீரென்று ஆனது. அது கிழவன் சேதுபதிக்குச் சேதி கொண்டு போன நல்லமன் என்னும் நல்ல பிள்ளையின் தலை!

"ஐயோ.. நல்லமா.. உனக்கா இந்த கதி?" என்று அவரது உதடுகள் பதறிப் பிரிந்தன. நல்ல வேளை..! யாரும் கேட்கவில்லை.

மத்தளச் சப்தமுடன் நல்லமன் சிரம் அன்னவண்டியில் ஓரம் கட்டி நிற்கும் குமாரபிள்ளையைக் கடந்து போனது. அப்படியே ஊர் முழுக்க அது சுற்றி வரும். பார்க்கிறவர்களுக்கு ஓர் எச்சரிக்கையை உருவாக்கும். அங்கங்கே முக்குக்கு முக்கு நின்று ஒருவன் எச்சரிக்கை விதிகம் படிப்பான்.

"இதனாலே சகலமான யாவருக்கும் பிரத்யேகமா சொல்லிக்கறது என்னன்னா, நாயக ராஜ்யத்தின் காவலா மகாமகா வீரர், தூர் ருஸ்தம்கான் அவர்களை ஒடப்பாதாருக்கும் உளவு சொல்வாருக்கும் சிரச் சேதமும், பின்னே இது போலே ஊர்வலம் போகும் துர்பாக்கியமும் நேருமதாலே விசுவாசம் கொண்டும் விவேகமாகவும் நடக்க உத்தா வு வு வு வூ- தொட் தொம்- தொம்-"

— என்று அவன் படிப்பதைக் கேட்டு ஊரே மிரண்டு போகும் சகலத்தையும் ஒரு க்ஷணம் நினைத்து குமாரபிள்ளையின் நெஞ்சம் ஊதுலைபோலக் கொதிக்கத் தொடங்கியது. கண்ணில் நல்லமனை உத்தேசித்துக் கண்ணீரும் பெருக்கெடுத்தது.

"நாயக்க ராஜ்ய விசுவாசியே- உனக்கு என் நெஞ்சார்ந்த அஞ்சலிகள். உன் ஆன்மா சாந்தி அடைவதாக-" என்று மனத்துக்குள் நல்லமன் நிமித்தமாகப் பிரார்த்தித்துக் கொண்ட குமாரபிள்ளை இனியும் நாள் பார்ப்பதும் நேரத்திற்காகக் காத்திருப்பதும் அவிவேகம் என்று கருதியவராய் அன்ன வண்டி பொலிக்காளைகளின் வாலைத் திருகிட அவை அண்டாக்களில் கஞ்சிகள் தளும்ப ஓடத் தொடங்கின.

காத்துக் கொண்டிருந்தனர் காவலர்கள்.

வண்டி வரவும் அண்டாக்களை இறக்க ஆரம்பித்தனர். நல்லகாலம் நல்லமன் சிரம் ஊர்வலம் போய்விட்டதைச் சொல்லவும் அவனுக்கான சிரச்சேதம் அந்திசாயும் வேளையில் எந்தவிதப் பங்கமுமின்றி நடந்து முடிந்ததையும் கூறவும் திம்மையா அரண்மனைக்குப் போயிருந்தான்.

இதுதான் தருணம்— இதை விட்டால் கோவிந்தப்பையாவையும் வெங்கடகிருஷ்ணப்பரையும் சந்திக்க வாய்ப்பே கிடைக்காது.

நூற்றுக்கு நூறு சதம், விடியும் பொழுதில் கிழவனின் படையும் கன்னிவாடியாரின் படையும் அரண்மனையைச் சுற்றி



வளைத்துவிடும். அதற்கான சேதி வந்து சேர்ந்து விட்டது. உள்ளேயும் அனைத்திற்கும் தயாராகக் காத்திருக்கும் விசுவாச வீரர்களின் ஊடுருவலும் முடிந்துவிட்டது.

நாளை இதே நேரம் நல்லமனின் தலை இருந்த அதே வேல் கம்பில் ருஸ்தம்கானின் தலை அமர்ந்திருக்கப் போவது உறுதி.

திடமான எண்ணங்களோடும் முடிவுகளோடும் குமாரபிள்ளை ஒன்றுமறியாதவர் போல ஒரு தண்ணீர்ப் பானையைச் சுமந்து கொண்டு அந்தகாரச் சிறைப்பக்கமாகப் போனார். வளைந்து வளைந்து போன பாதையில் நடந்து சென்றவரைச் சில விசுவாசமான காவலர்கள் அடையாளம் கண்டு கொண்டு "பிள்ளையவர்களே" எனச் சிலிர்க்க அவர்களைப் பார்வையாலே அடக்கிவிட்டு ஒரு தீப்பந்தத்துடன் கோவிந்தப்பையா உள்ள சிறைக்குள் நுழைந்தார். அவர்களும் பயத்துடன் ஒத்தாசித்ததால் பதட்டங்களின்றிக் காரியம் முடிந்து விட்டது.

பளீரென்று வெளிச்சம் பரவவும் கோவிந்தப்பையா கண்கள் கூசிட நிமிரமாட்டாது நிமிர்ந்தார். பல நாட்களாக அந்தகாரத்தில் கிடப்பதால் முகமெங்கும் ரோம விளைச்சல். பார்க்கவே என்னவோ போல் இருந்தது.

"யாரது-?"

"தளவாய் அவர்களே- என்னைத் தெரியவில்லையா-? நான்தான் குமாரபிள்ளை-"

"குமாரபிள்ளையா- துரோகி- இங்கு எங்கு வந்தாய்-? எத்தனை தூரத்திற்கு இளைத்திருக்கிறேன் என்று பார்க்கவா?"

"பதட்டம் வேண்டாம். நல்ல காலம் வந்துவிட்டது. அதைச் சொல்லத்தான் வந்தேன்."

"ச்சீ- போ வெளியே முதலில்!"

"தளவாய் அவர்களே- என்ன இது-? என்னை நீங்கள் புரிந்து கொண்டிருப்பது இவ்வளவுதானா?"

"என்ன பெரிய ராஜதந்திரி தாங்கள்— தங்களால் கூடவா நான் எதற்காக அந்தக் குதிரைக்காரன் பக்கம் சேர்ந்தேன் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை?"

கோவிந்தப்பையா அமைதிப்படத் துவங்கினார். குமார பிள்ளையை உற்றுப் பார்த்தார்.

"நான் அப்படி நாடகமாடியதால்தான் நம் முந்தைய திட்டப்படி வீரர்களை உள்ளே ஊடுருவச் செய்ய முடிந்தது. அது மட்டுமில்லை. அந்தக் குதிரைக்காரனின் மற்ற சக்திகளையும் அறிந்து கொள்ள முடிந்தது."

கோவிந்தப்பையாவின் முகத்தில் திடுமென்று பரவசம் பரவத் தொடங்கியது.

"குமாரபிள்ளை— நாடகமா ஆடினாய் நீ...?"

"ஆமாம்."

"அப்படியானால் நம் திட்டப்படி...?"

"எல்லாம் பிசகின்றி நடக்கப் போகிறது. கிழவர் சேதுபதி இந்த நொடி சேது நாட்டை விட்டு நீங்கி திருபுவனம் வந்திருப்பார். அவர் வருகை எப்படியும் குதிரைக்காரனை எட்டிவிடும். அரண்மனையைச் சுற்றி பலத்த காவல் போட்டு விட்டுக் கிழவனை உள்ளே விடாதபடிச் செய்ய எல்லா ஏற்பாடுகளையும் செய்வான். ஆனாலும் ஒன்றும் அவனுக்கு உதவப் போவதில்லை. மாநகர மக்களாகட்டும்— அரண்மனை வீரர்களாகட்டும் எல்லோரும் மன உளைச்சலோடும் அவனுக்கு எதிராக இருப்பதால் அதிகச் சேதமோ, காலமோ இன்றி நாம் வெற்றியடையப் போவது உறுதி."

"நிஜமாகவா— ஐயோ— இந்த நேரத்தில் நான் உள்ளே இருக்கிறேனே..."

"கவலையே வேண்டாம். கிழவரின் அத்யந்த வீரன் சோளகைச் சேர்வைக்காரனும் அவன் சகாக்களும் சிறைப் பகுதியில்தான் ஊடுருவியுள்ளனர். அவர்கள் உங்களை விடுவிப்பதோடு உங்கள் வசம் வேலும் வாளும் தந்து துணை செய்வார்கள்."



"வெங்கட கிருஷ்ணப்பர்...?"

"உங்களைச் சந்தித்தது போலவே அவரையும் சந்தித்து அனைத்தையும் கூறிவிடுவேன். கவலை வேண்டாம்."

"குமாரபிள்ளை— என்னை மன்னித்து விடு. உன்னைத் தவறாகப் புரிந்து கொண்டு விட்டேன்."

"பெரிய வார்த்தை இது தளவாய் அவர்களே. பேச நேரமில்லை. எதிரி மோப்பம் பிடிக்கும் முன் நான் கிளம்புகிறேன்."

"பிள்ளை— பிள்ளை"

"என்ன தளவாய்?"

"அரசரும் ராணி மங்கம்மாளும் எங்கு எப்படி இருக்கிறார்கள். அவர்கள் இவைகளை அறிவார்களா?"

"எனது அடுத்த இலக்கு அவர்களைச் சந்தித்து நடக்க இருப்பதைக் கூறுவதுதான். அரசர் நம் முயற்சிக்கு இணங்கி வரவேண்டும். இல்லாவிட்டால் எல்லாமே கெட்டுவிடும்."

"வருவார்— நிச்சயம் வருவார்— முதலில் அவரைச் சந்தித்து நிகழ இருப்பதைக் கூறு."

"நிச்சயமாக— நீங்கள் திடமாக இருங்கள்," என்ற குமார பிள்ளை இடுப்பு மடிப்பில் இருந்து அரச இலைக்குள் மடிந்து கிடக்கும் மீனாட்சி குங்குமத்தை வெளியே எடுத்து கோவிந்தப் பையாவின் நெற்றியில் இட்டார். அவர் கண்கள் கலங்கின.

"நான் அன்னையைத்தான் நம்பியிருக்கிறேன். அவளே இனி நமக்கு உற்ற துணை."

கோவிந்தப்பையா கலங்கிய விழிகளுடன் கைகளைக் கூப்பினார். குமாரபிள்ளை அந்தக் கரங்களைப் பிடித்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டுவிட்டு வேகமாகக் கிளம்பவும் அங்கே அந்தகாரம் சூழ்ந்து கொள்ளத் தொடங்கியது.

அந்தப் பனங்காட்டினுள் நள்ளிரவு நேரத்தில் நெடிது உயர்ந்து கிடக்கும் பனை மரம் ஒன்றின் மேல் வேக வேகமாக ஏறத் துவங்கினான் மதுரை வீரன் ஒருவன். அவன் காதில் திமுதிமுவென்ற சப்தம் கேட்டதன் எதிரொலி. மதுரைக்கு வெளியே திருபுவனம் கடந்த வைகை ஆற்றங்கரை ஓரத்தில் இரவுப் பொழுதையே இடித்துத் தாக்கும் மாபெரும் புரவிப் படை ஒன்றையும் அதன் பாய்ச்சலில் பிரண்டெழுந்து வானம் ஏறும் புழுதிக் கவளத்தையும் பார்த்து மிரண்டு போனவன் சரேலென்று கீழே இறங்க ஆரம்பித்தான்.

திபுதிபுவெனும் குளம்படிச் சப்தம் அவன் காதுகளை விடைக்க வைத்து விட்டிருந்தது. 'எல்லையில் விழிப்பாய் இருங்கள்' என்று அரண்மனையிலிருந்து ஓலை வந்தது இதற்காகத்தானா?

அவன் சட்டென்று ஒரு புரவியில் ஏறி தன் கடமையைச் செய்ய வேண்டி மதுரையை நோக்கி விரைய ஆரம்பித்தான்.

அதே வேளையில் அங்கே!

## 19

'ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிய வாகன
சகாத்தம் 1609 இதின் மேல்
செல்லா நின்
றபபற்பவனாம ஸம் வச்சரத்து
உத்தராயணத்து ஹேமந்
தரிதுவில் புஷ்
நாயத்து புஷ்ய நஷத்திரத்து தச



மியும் சோமவாரமும்
பாலவாகரணமும்
சுக்ரமானாம யோகமும் பெற்ற
புண்ய காலத்தில் தேவ
நகராதிபன் சேது
மூலரஷா துரந்தரன் ராமநாத
ஸ்வாமி கார்யதுரந்தரன்
சிவபூஜா
துரந்தரன் பரராஜசேகரன் பரராஜ
கஜசிம்மன் விதுவ
சேகர
ன்ர விவம்மன் சொரிமுத்து வன்
னியன் ஸ்வஸ்திஸ்ரீமன்
மகாமண்டலேசுவரன்
அரியராய தளவிபாடன் பா
ஷைக்குத் தப்புவராய கண்டன்
கண்டன் கண்டநாடு கொண்டு
கொண்டநாடு கொடா
தான் பட்டனமானங் காத்தான்.'

– சேதுபதி செப்பேடுகளிலிருந்து–

நாயக்கர் அரண்மனைப் பாராக் காவல்காரர்களின் குறுக்கும் நெடுக்குமான நடையோடும் அவிந்து அடங்கிக் கொண்டிருக்கும் தீப்பந்த ஒளிப் புனலோடும் விடியலுக்காகக் காத்திருக்கும் வேளை முகப்பு வாயிலில் நின்று கொண்டிருந்த காலம் காட்டி, மணற்கடிகை மறுபுறம் கவிழ்ந்ததை அடுத்து நாகராவைத் தட்டிவிட்டுத் தன் கடப்பாட்டை முடிக்க, கொட்டாவி வந்து அவன் இதழ்க் கடையை முறுக்கத் தொடங்கியது.

வழக்கத்திற்கு விரோதமாகக் குறுக்கும் நெடுக்குமாகப் பல வீரர்கள் அந்த இரவு வேளையிலும் அரண்மனைப்

பாகங்களில் விழிப்போடு சுற்றிச் சுற்றி வந்தது காலம் காட்டிக்கு வியப்பையும் தந்தது.

குறிப்பாக சொக்கநாத நாயக்கரினை அடைத்து வைத்திருந்த நைருக பாகத்து மண்டபத்தில் ஏகத்துக்கும் விழிப்புடன் இருந்தது ஒரு கூட்டம்.

ஒரு கறுப்புத் துப்பட்டியைக் குளிருக்குப் போர்த்திக் கொண்டிருப்பதைப் போலப் போர்த்திக் கொண்டு கையில் ஒரு எண்ணெய்ச் சட்டியோடு தீப்பந்தங்களுக்கும் நாடா விளக்குகளுக்கும் எண்ணெய் போடுகின்ற பணியாளனைப் போல ஒரு மாதிரிக் கெந்தி நடந்தபடி அந்த மண்டபத்தை ஒட்டிப் பிரவேசித்தார் குமாரபிள்ளை.

நெஞ்சகத்தில் அவ்வப்போது கிளர்ந்தெழும் அச்ச உணர்வைத் திட உணர்வாக மாற்றிக் கொண்டு ஒன்றுக்கு மேலான விஷக் கட்டாரிகளைத் தன் இடையைச் சுற்றிச் செருகியிருந்தார் அவர்.

நைருக பாகத்து மண்டபத்தினை நெருங்கவும் அங்கே வெளிப்புறத்தில் தூண்களில் தாங்கிகளில் எரிந்தபடிக் கிடக்கும் பந்தங்களை எடுத்து அணைத்துத் திரும்பவும் எண்ணெய்ச் சட்டியில் நனைத்துப் பின் சுடரினைப் பிடித்துப் பொருத்தியவர் அறை வாயிலைப் பார்த்தார்.

பருத்த இரு மல்லர்களைப் போன்றவர்கள் பதிலுக்கு அவரைப் பார்த்தனர். கிட்ட நெருங்கவும் சிறிய அளவில் இருமியதைத் தொடர்ந்து "குமார பிள்ளை" என்று அவர்களில் ஒருவன் மெல்லியதாகக் கேட்டான்.

"யாரது– சோளகையா?"

"நானேதான்– என்ன இத்தனை தாமதம்?"

"என்ன செய்வது? அனைவரையும் தாண்டி வர வேண்டாமா? போகட்டும். இங்கிருந்த மல்லர்களை என்ன செய்தீர்கள்?"



"அவர்களைப் பற்றி இப்போது எதற்குக் கேள்வி? நீங்கள் முதலில் உள்ளே செல்லுங்கள்."

"எச்சரிக்கை. இன்னும் சொல்ப நாழிகைப் பொழுதுகளில் விடிந்துவிடும். உங்கள் நாட்டுப் படையும் அரண்மனையைச் சுற்றி வளைத்து விடும் என்று நம்புகிறேன்."

"நல்லது. முதலில் உள்ளே சென்று நாயக்கரைச் சந்தியுங்கள்..."

குமாரபிள்ளை வேகமாக உள்ளே புகலானார். அறையில் சிறிதாக ஒரு லாந்தல் விளக்கு... மிக மெல்லிதான மஞ்சள் வெளிச்சத்தின் படர்ச்சி. அறையின் உள்ளே லேசாகக் கசட்டு வாசம் வேறு– ஒரு மூலையில் கட்டில் ஒன்று கிடந்தது. அதன் மேல் மாமதுரையின் பேரரசர் என்றும் அசகாய சூரர் என்றும் கடந்த கால நாட்களில் பெரிதும் போற்றப்பட்ட சொக்கநாத நாயக்கரின் திருமேனி ஒரு நோயாளியைப் போல் கிடந்தது.

ஒரு க்ஷணம் குமாரபிள்ளைக்கு நெஞ்சை அடைத்தது.

வேகமாக நாயக்கப் பேரரசரை நெருங்கிப் பார்த்தார் குமாரபிள்ளை. பதிலுக்கு நாயக்கரும் வேகமாக நிமிர்ந்தெழுந்து "யாரது"– என்று கேட்டதைத் தொடர்ந்து அப்படியே நின்றார். துப்பட்டியையும் நழுவ விட்டார். அரை இருட்டில் அவர் நின்ற கோலம் நாயக்கரிடம் பீதியைக் கிளப்பியது.

"யாரது...? என்னைக் கொலை செய்யத்தானே வந்திருக்கிறாய் நீ? போ... போய்விடு– என்னை ஒன்றும் செய்யாதே. போ.. போய்விடு–"

– நாயக்கரிடம் பயம் பெருகியது. கூடவே சங்கிலிப் பிணைப்புகளின் சப்தமும் சேர்ந்து கேட்டது.

"அரசர் பிரானே– அச்சம் வேண்டாம். அடியேன் தங்கள் தாஸன் குமாரபிள்ளை..."

பிள்ளை குரல் கொடுக்கவும்தான் நாயக்கரிடம் பயமும் பதற்றமும் அடங்கத் தொடங்கியது.

"பிள்ளையா– குமார பிள்ளையா–?"

"ஆமாம்– குமாரபிள்ளையேதான்."

பிள்ளை நாயக்கரைச் சமீபித்துத் தன் முகத்தைக் காட்டினார். அடுத்த க்ஷணம் நாயக்கரிடம் அதுவரை நிலவிய பயம் நீங்கி ஒருவகை ஆவேசம் பெருக்கெடுத்தது.

"பிள்ளை– இப்படியா என்னைத் தனிமையில் தத்தளிக்க விடுவீர்கள்– எத்தனை நாட்களாய்– இல்லையில்லை– மாதங்களாய் நான் இப்படிக் கிடக்கிறேன். இன்றுதான் என்னைப் பார்க்கும் எண்ணம் வந்ததா?"

"நாயக்கப் பெருமானே– பதட்டம் வேண்டாம். பார்க்கக் கூடிய நிலையிலா உங்களை அந்தக் குதிரைக்காரன் வைத்திருக்கிறான்? இப்பொழுது கூடப் படாதபாடு பட்டுத்தான் உள்ளே வந்திருக்கிறேன்"– என்ற பிள்ளை அப்படியே மண்டியிட்டு நாயக்கரின் காலடி முன் அமர்ந்தார்.

நாயக்கர் ஒரு க்ஷணம் ஏதும் பேசாமல் குமாரபிள்ளையையே வெறித்தார். அந்த வெறிப்பு அப்படியே மாறிக் கண்கள் பனிக்கத் தொடங்குகின்றன.

முகத்திலும் பல மாதங்களாய்ச் சிரைக்கப்படாத ரோம தாவரம்.

"நாயக்கர் பெருமானே– இப்படி ஒரு நிலையில் உங்களைப் பார்க்க நேரும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை..." எனும பிள்ளையின் கண்களும் பனித்துப் போகின்றன.

"எல்லாம் என் தலையெழுத்து. ஒரு துரோகியை மாவீரன் என்று தவறாகக் கணித்து விட்டதால் வந்த பலன். கொஞ்சம் கொஞ்சமாக என்னை ஒரு கைதியாகவே ஆக்கி விட்டான்"– நாயக்கர் உதடுகள் கேவலோடு பேசுகின்றன.

"கவலைப்படாதீர்கள்... இந்த அறைச் சிறைவாசம் இன்றோடு உங்களுக்கு முடியப் போகிறது. விடியப் போகும் பொழுது, இந்த மதுரைக்கே விடியலைத் தரப் போகின்றது."



"என்ன சொல்கிறாய் நீ...?"

"ஆமாம்– அந்தக் குதிரைக்காரன் பிடியில் இருந்து இந்த மதுரையை மீட்க எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டோம். சேது நாட்டு வேங்கையான கிழவன் ரகுநாத சேதுபதி அவர்கள் நமக்கு உதவிடத் திருவுள்ளம் கொண்டு பெரும் படையோடு வந்து கொண்டிருக்கிறார்.

உங்கள் நிலையும் அரசியார் மங்கம்மாள் தேவியாரின் நிலையும்தான் எங்களுக்குப் பிடிபடாமல் இருந்தது. இப்பொழுது உங்களைப் பார்க்கவும்தான் எனக்குத் திடமாக இருக்கிறது. என் சகாக்கள் தேவியாரையும் தங்கள் உடன்பிறப்பையும் இந்த விநாடி சந்தித்திருப்பார்கள்."

"பிள்ளை– நீ சொல்வது உண்மையா?"

"அந்த மீனாட்சி மேல் சத்தியம் நாயக்கர் பெருமானே– அந்த மீனாட்சி பேரில் சத்தியம்."

"இதை அந்தக் கயவன் ருஸ்தம்கான் அறிவானா?"

"அறிந்தும் அறியாமல் இருக்கிறான். இருந்தாலும் அந்தக் குள்ள நரியை நம்புவதற்கில்லை. பதிலுக்கு நிச்சயம் வீரம் காட்டுவான். ஆனால் அதனால் ஒன்றும் ஆகிவிடப் போகிறதில்லை.

கன்னிவாடி பாளையக்காரர், நாலுகோட்டை பாளையக்காரர், சேது நாட்டு வீரப்படை என்று ஒரு பெரிய கூட்டமே அரண்மனையைச் சுற்றி வளைத்து அவனை ஓட ஓட விரட்டப் போகிறது.

அந்தச் சமயத்தில் அவன் வீழப் போவது உறுதி. இப்பொழுதே இந்த அரண்மனையில் எல்லா முனைகளிலும் சேது நாட்டு வீரர்கள் ஊடுருவி அங்கங்கே அரண்மனை வீரர்கள் போல் உள்ளடங்கிக் கிடக்கிறார்கள்.

பொதுமக்களுக்குச் சேதம் விளைவிக்காதபடி யுத்தத்தை முடித்துவிட வேண்டும் என்பதுதான் கிழவனாரின் விருப்பம்."

"கிழவன் இதற்கு எப்படிச் சம்மதித்தான்? அவனுக்கு நான் பகைவனாயிற்றே...!"

"அதைப் பற்றியெல்லாம் விரிவாகப் பேச அவகாசம் இல்லை. நீங்கள் இப்பொழுதே என்னுடன் கிளம்புங்கள்."

குமாரபிள்ளை பேச்சோடு செயல்வீரமும் காட்டத் தொடங்கினார். கட்டிலோடு கட்டப்பட்டிருந்த நாயக்கரின் கால்களைச் சேர்த்துக் கட்டப்பட்டிருந்த சங்கிலியை அறுத்தெறியும் ஆவேசம் க்ஷணத்தில் அவரைத் தொற்றியது. பெரியதடைப் பூட்டு ஒன்று போடப்பட்டிருந்தது. அதை உடைப்பது பெரும்பாடாக இருந்தது. மிருகபலம் தேவைப் பட்டது. அப்போது ஒருவித பாய்ச்சலோடு உள்ளே நுழைந்தான் சோளகைச் சேர்வைக்காரன்.

"பிள்ளையவர்களே... அரண்மனைக்குள் அந்த பரபரப்பும் கொம்பு முழக்கங்களும் கேட்கத் தொடங்கி விட்டன. எங்கள் சிங்கத் தலைவர் அரண்மனைக்கு வெளியே சுற்றி வளைத்து விட்டார் என்று கருதுகிறேன்..."

"அப்படியா... சோளகை! அரசரை எப்படியாவது இங்கிருந்து விடுவித்து பக்கமாய் உள்ள கஜானா வாயில் அருகே உள்ள மறைவிடத்திற்குக் கொண்டு செல். நான் உரிய சமிக்ஞையை கொடுத்தபடி மற்ற நடவடிக்கைகளில் இறங்குகிறேன்"– என்ற குமாரபிள்ளை அங்கிருந்து மீண்டும் கறுப்புத் துப்பட்டியை மேனிமேல் வேய்ந்து கொண்டு வெளியேற ஆரம்பித்தார்.

**தி**குதிகுவென்று உற்சாகமாகச் சூரியப்பந்து கிழக்கு வானில் உருளத் தொடங்கி விட்ட காலை வேளை... மதுரையின் நாலாப்புறத்திலிருந்தும் ஒரு பெரும் மறவர் படைக் கூட்டம் புழுதி பறக்க அரண்மனையைச் சுற்றி வளைக்கும்



வெறியோடு ஊருக்குள் ஓடுவருவ. அதை மாநகரத்து மக்களும் பார்த்து தங்கள் மனைகளுக்குள் வளை எலிகள் போல உள்ளடங்கத் தொடங்குகின்றனர்.

அரண்மனைக்குள் ஒரு வலைப்புலியைப் போல குறுக்கிலும் நெடுக்கிலும் நடந்தவாறு இருந்தான் ருஸ்தம்கான் அருகே கையைப் பிசைந்து கொண்டிருந்தான் சையூம்.

வெளியே அவனுக்கான பாதுகாப்பு வளையம்.

"கான்ஜி... இப்படியே நடந்து கொண்டிருந்தால் எப்படி...? சுற்றி வளைத்து நிற்கிறது ஒரு பெரும் கூட்டம். வேகமாக முடிவெடுங்கள்." சையூம் ருஸ்தம்கானின் மனத்தைத் துருவத் தொடங்க, பதிலுக்குக் கொக்கரிக்கத் தொடங்கினான் ருஸ்தம் கான்.

"என்ன முடிவெடுப்பது... எங்கே தவறு செய்தீர்கள்? நீங்கள் முதலில் அதைச் சொல்லுங்கள். எப்படி இப்படிக் கிழவனின் வருகையை முன்னே மோப்பம் பிடிக்காமல் விட்டீர்கள்?"

"தவறு தவறு. நாம் மோப்பம் விட வேகமாகச் செயல் பாட்டில் திட்டமிட்டு இறங்கி விட்டார் சேது நாட்டார்..."

"அந்தக் கிழவனுக்கென்ன மரியாதை... ஆமாம் குமார பிள்ளை எங்கே?"

"உடல் நலமில்லை என்று சொல்லிவிட்டு நேற்று மாலை வெளியேறியவர்தான்..."

"இத்தனைக் கலவரங்களைப் பார்த்தும் அந்த விசுவாசிக்கு இங்கு ஓடி வரத் தெரியவில்லையா?"

"விசுவாசியாக இருந்திருந்தால் ஓடி வந்திருப்பார். விசுவாசி போல நடித்திருந்தால்...?"

"அப்படித்தான் இருக்க வேண்டும். நானே ஒரு பருந்து. என் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டான் அந்தச் சண்டாளன்?"

"பேச நேரமில்லை. புறத்தில் நம் வீரர்கள் கோட்டைக் கதவுகளைத் தாழிட்டு விட்டு உயிரைக் கையில் பிடித்தபடி நின்று கொண்டிருக்கிறார்கள். வெளியே இருந்து ஒரு தகவலும் வந்துள்ளது–"

"என்ன சொல்கிறாள்?"

"ஆமாம்– நீங்கள் சரணடைந்துவிட்டால் யுத்தம் இல்லையாம். உயிர்ச் சேதம் இல்லையாம். உங்களுக்கும் மன்னிப்பாம். இல்லாவிட்டால் உங்கள் தலை உங்கள் கழுத்தில் இருக்காதாம்."

– சையூம் தயங்கித் தயங்கிச் சொல்லவும் ருஸ்தும் முதுகில் கட்டாரி எறிவது போலக் சையூமைப் பார்த்தான்.

"இப்படிப் பார்க்காதீர்கள். நான் சொல்வதைக் கேளுங்கள்."

"என்ன சொல்லப் போகிறாய்?"

"வந்திருப்பது பெரும்படை உள்ளேயும் பாதிக்குப் பாதி நமக்கு எதிரான மன நிலையில் உள்ள வீரர்கள். ராஜ்யப் பிரதானிகளும் இதுதான் சாக்கு என்று வெளியேறிக் கிழவனிடம் சேர்ந்துவிட்டார்கள். நமக்கு இருக்கும் ஒரே பலம் சூறாய் வெடிகுண்டுகள்தான். இதனால் ஒரு வெற்றியோ இல்லை குறைந்தபட்சம் நாம் உயிர் பிழைப்பது என்பதோ கூட நிகழ வாய்ப்பில்லை என்றே கருதுகிறேன்."

"இவ்வளவுதானா– இல்லை இன்னும் இருக்கிறதா?"

"ருஸ்தம்ஜி– என் பேச்சைக் கேளுங்கள். வேண்டாம் பிடிவாதம். எல்லாம் கை மீறிவிட்டது."

"இல்லை. முடியவே முடியாது" என்றபடி ஆவேசமாக அங்கிருந்து வெளியேறினான் ருஸ்தம்கான். பின் தொடர்ந்தான் சையூம். கோட்டை மதில் தளத்துக்குச் செல்லும் மச்சுப் படிகளில் ஏறினான். அங்கிருந்து வெளியே பார்த்தான். அதற்கு ஏற்ப அங்கிருந்த சாவடிக் கூண்டும் ஒத்தாசித்தது.



கூண்டுத் துவாரம் வாயிலாகக் கிழக்கு துவார முகப்பில் பெரும் குதிரைப் படையும் நடுவே கம்பீரமாகக் கிழவனும் தெரிந்தனர்.

ஒரு க்ஷணம் அந்தக் காட்சி அவனுக்குள் மிரட்சியைக் கூட உருவாக்கியது. சையூமின் முகத்தில் பதில் மிரட்சி.

"சையூம்– இனி க்ஷணம் தாமதிக்கக் கூடாது. சூறாய்க் குண்டுகளைப் போடச் சொல். பதில் யுத்தம்தான் ஒரே வழி. நான் சரணடையவோ, இல்லை ஓடி ஒளியவோ தயாரில்லை. அரை அரசனாக உள்ள நான் இன்று ஆனால் முழு அரசனாவேன். இல்லாவிட்டால் பிணமாகிவிட்டுப் போகிறேன். இந்தத் தருணத்தில் நீயும் என்னைக் கைவிட்டு ஓடிவிடாதே–"

– ருஸ்தம்கானிடம் பதற்றம் கொப்பளித்தது. சையூமின் கண்கள் பதிலுக்குக் கலங்கிவிட்டன.

"ருஸ்தம்ஜீ– தலையில் அடித்துக் கொண்டபோது கேட்கவில்லை. இப்போது என்னைப் பார்த்து இப்படிக் கெஞ்ச வேண்டிய அளவுக்கு வந்துவிட்டது நிலை. இதில் என்னைப் பார்த்து ஓடிவிடாதே என்றால் நானும் ஓடிவிடுவேன் என்பது தான் உங்கள் எண்ணமா? என் பழக்கத்துக்குத் தாங்கள் தரும் மதிப்பு இவ்வளவுதானா?"

"சையூம்– இது என்ன விவாதிக்கும் நேரமா– போ– போய்க் கட்டளை இடு. யுத்தம் தொடங்கட்டும். நான் சொக்கநாத நாயக்கரைப் பார்த்து அவரையும் அழைத்து வருகிறேன். அவர் நம் அருகில் இருந்தால் படை நம்மை நெருங்க அஞ்சும். நீ கூட மங்கம்மாளைப் பிடித்துக் கொள்"– கத்தியபடியே அங்கிருந்து ருஸ்தம்கான் விலகி ஓட கிழவனின் சமாதான முயற்சிக்கு இடம் இல்லை என்கிறார் போலக் சூறாய்க் குண்டுகள் முழங்கும் சப்தம் கேட்கத் துவங்கியது. வெளியே அடங்கிக் கிடந்த படையும் சீறிப் பாய ஆரம்பித்தது.

# 20

*'கேதனன் கருட சேதனன் வன்னியராட்டந்தவிர்த்தான்*
*கந்தனமாதன வெற்பினன் அர*
*சராவண ராமன் பராரச கேசரி பராரசசிங்கம்*
*பராரச சற்ப கருடன், ரவிவர்மன், ரவி*
*குலதிலகன், துலுக்கதள விபாடன், துலக்கமோகந்*
*தவிர்த்தான், ஒட்டிய தள விபாடன்*
*ஒட்டிய மோகந் தவிர்த்தான், ஆரிய மானங்காத்தான்*
*மதுரை மானங்காத்தான்...'*

*— சேதுபதி மன்னர் செப்பேட்டி விருது*

அரண்மனைக்குள்ளிருந்து ஆவேசித்து உமிழ்ந்தெறியப் பட்ட குண்டுகள் பெரும் சப்தத்துக்கு இலக்கணம் எழுத லாயிற்று–

மாமதுரையின் நாற்புறமும் அதன் ஓசை முடிந்த எல்லை வரை கேட்கலாயிற்று. தெற்கில் பசுமலை வரைக்கும், மேற்கில் நாகமலை வரைக்கும், கிழக்கில் ஆனைமலை வரைக்கும், வடக்கில் அழகர்மலை வரைக்கும் என்று நான்கு எல்லை களையும் நடுக்கிற்று அதன் சப்தம்.

சபததில் உச்சபட்சமாகத் தேர்த் திருவிழாவில் ராட்சஸ நாகரா சப்தமும், சில வகை வேட்டுகளின் சப்தங்களையும் மட்டுமே கண்டும் கேட்டுமிருந்த ஜனக்கூட்டத்திற்கு இந்தக் குழாய்க் குண்டுகளின் தொடர் சப்தம் மிகுந்த அச்சத்தையும் அதுவையும் உண்டு பண்ணியது என்றால் மிகையில்லை.

மதுரை நகரில் வீடுகளில் மல்லிகைக் கொடிகள் மிகுதி. அதனினும் கூடுதலாய் முருங்கையும் வாழையும் இல்லாத



வீடுகளே இல்லை எனலாம். அவைகளில் உள்ள பூக்கள் எல்லாம் உதிர்ந்து விடுமோ என்று அஞ்சுமளவு தொடர்ந்து பெய்த அந்தக் குண்டு மழை ருஸ்தம்கானின் கோரதத்திற்கும் ஓர் இலக்கணம் எழுதிற்று.

படை பிரிந்து சிதறியது. புரவிகள் ருத்ர கோசம் பிடித்தாற் போலச் சேணம் பிடித்து இயக்கும் மறவர்களுக்கு ஆட்படாத படிக் கனைத்து, மிரண்டு கட்டுப்பாடு இழந்தன.

ஊருக்குள்ளே வைகையின் ஒரு பிரிவாய் ஓடும் கிரி திருமால் நதியில் தோணிகளும், சப்பரங்களும் மிகுதி. அதில் பண்டங்களை ஏற்றிச் செல்வோர் அங்கங்கே படித்துறை களில் ஒதுங்கிக் காதுகளைப் பொத்திக் கொண்டு அச்சம் பிடித்தார்கள்.

கிழவன் இரகுநாத காத்த சேதுபதி முன்பே கட்டளை யிட்டபடி. தாதியத் தேவனுடன் இணை பிரியாது மோதிக் கொண்டிருந்தார்.

நாற்புறமும் சிதறிவிட்ட படையைப் பார்த்து உள்ளூர சற்றே பீதி வசப்பட்டாலும் குண்டுகளைக் குழாய்கள் மூலம் இயக்கும் கோட்டை மதில் கூட்டத்தவரை வீழ்த்தாதவரை சிதறலைக் கட்டுப்படுத்தவோ, ஒருங்கிணைந்து மோதுவதோ சாத்தியமில்லை என்று உணர்ந்தவராக அந்த இக்கட்டிலும் துணிந்து புரவி விட்டு நீங்கி, கவச உடையோடு கோட்டை மதில் ஏறத் துணிந்தார்.

இதை அந்த ரணகளத்திலும் எங்கிருந்தோ பார்த்துவிட்ட சின்னகாத்ரி ஓடிவந்து, "சேதுபதி– வேண்டாம். விபரீதமாகி விடப் போகிறது" என்று எச்சரித்துப் பார்த்தார்.

"இப்போது என்ன தென்றலா வீசிக் கொண்டிருக்கிறது–? விடுங்கள்" என்று துணிந்து வாளோடு கோட்டை மதில் மேல் ஒரு கயிற்றை நங்கூரக் கவ்விகளுடன் வீசி மேலேற முயன்றார்.

தாதியத்தேவன் அதைப் பார்த்து அரண்டு போனான்.

இப்படித் தனக்கு ஓர் எண்ணம் தோன்றாத வெட்கத்துடன் குமைந்தவன், பதிலுக்குத் தானும் சளைத்தவன் அல்ல என்று காட்ட அதேபோல் மதில் சுவர் ஏறிடப் பார்த்தான்.

சேது நாட்டின் நிகரில்லாத வாரிசுகளே உயிரைப் பணயம் வைத்து மதில் ஏறும்போது நாம் அச்சம் கொள்ளல் ஆகாது என்று கருதிய பல்வேறு வீரர்களின் கூட்டமும் அதேபோல பலமுனைகளில் மேலேற முனைய, யுத்தத்தின் ஒரு திருப்புமுனையாக அந்தக் காட்சி மாறத் தொடங்கியது.

அரண்மனைக்குள் சொக்கநாத நாயக்கரைத் தேடி ஓடிவிருந்த ருஸ்தம்கானுக்கும் அவன் சகாக்களுக்கும் சொக்கநாதர் அங்கும் இல்லாதது பெருத்த ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் தர, உள்ளிருந்தே பல முனைகளிலிருந்தும் சீறி வந்த கட்டாரிகள், இது அதிர்ச்சியின் உச்சம் என்றன.

இராணி மங்கம்மாளையும் அவள் மைத்துனன் முத்துலிங்கத்தையும் தேடியபோதும் இதே நிலைதான்.

ஒரு பெருத்த ஆச்சரியம் போல ருஸ்தம்கானை மட்டும் எந்தக் கட்டாரியும் குறி வைக்காதது அவனுக்கே கிலியை மூட்டியது.

ஓடி உடன் வந்த சகாக்கள் மார்பிலும் முதுகிலும் கட்டாரிகளை வாங்கிச் சரிய, இன்னும் சிலரோ ஈட்டிகளால் உயிரை விட, அவனது பீதி அதிகரித்துக் கொண்டே போனது. அப்போது ருஸ்தம்கானைத் தேடி வந்த சையூம் அதற்குத் தாளம் போட்டான்.

"ருஸ்தம்ஜீ... உள்ளே பயமில்லை என்று நினைத்தது மிகப் பெரிய தவறு. உள்ளேயும் எப்படியோ கிழவனின் ஆட்கள் ஊடுருவி விட்டார்கள். நாயக்கரையோ, மங்கம்மா தேவியாரையோ கூடக் காணவில்லை... பார்த்தீர்களா?"

"சையூம் கழுத்தை அறுக்காதே... எனது விசுவாசிகளை நான் ஒவ்வொருவராக இழந்து வருகிறேன். வெளியே நிலைப்பாடு எப்படி இருக்கிறது?"



"மன்னிக்க வேண்டும். படையை நடத்த வேண்டிய நீங்கள் ஆணை பிறப்பித்துவிட்டுப் பணயமாகப் பிடித்துக் கொள்ள அரசர் சிக்குவாரா, அவர் தம்பி சிக்குவாரா என்று பார்க்கிறீர்கள். ஆனால் வெளியே கிழவனோ கோட்டை மதில் மேலேயே குண்டு மழைக்கு நடுவில் ஊடுருவிப் பிரவேசிக்கிறார். அதைப் பார்த்துவிட்டு அவர் சகாக்களும் அசுர வேகம் காட்டுகின்றனர். நானும் எவ்வளவுதான் உங்களுக்கு எடுத்துச் சொல்வது...? இப்போது கூடக் கெட்டுவிடவில்லை. உடனடியாகக் குண்டு போடுவதை நிறுத்தி வெள்ளைக் கொடியை ஏற்றுங்கள். நாம் உயிராவது பிழைக்கலாம்..."

சையூம் அதைச் சொல்லவே வந்தவன் போலக் கெஞ்சலாகப் பேசினான்.

காதுகளை வெளியே உமிழும் குண்டுகளின் இடையறாத முழக்கங்கள் விடைக்க விட்டிருந்தன.

"சையூம்... வந்த படை கலகலத்து விட்டது என்றானே படக்குக் கோட்டை உப தளவாய்..."

ஹல்லா... இன்னுமா உங்களிடம் நம்பிக்கை? குண்டுகள் படையைக் கலகலக்க விட்டது நிஜம். ஆனால் அவை சில திசைகளில்தானே செயல்படுகின்றன. ஒளிந்தும் மறைந்தும் வருகிறவர்களை என்ன செய்ய முடியும்? உள்ளேயும் மறவர் படை. இந்த நொடி நான் உயிரோடு இருப்பதே பெரிய ஆச்சரியம். ருஸ்தம்ஜீ... உங்கள் வரையில் நீங்கள் எந்த நாட்டுக்கு அரசர்? அந்தப் பதவி போனால் மதிப்பும் மரியாதையும் மாண்பும் போய்விடும் என்று கருத... விவேகத்தோடு யோசித்துச் செயல்படுங்கள் நண்பரே..."

— சையூம் ருஸ்தமின் கரங்களைப் பற்றிக் கொண்டு பேசினான். ருஸ்தம்கானும் ஒரு க்ஷணம் தீவிர சிந்தனைவயப்பட்டான்.

"சிந்திக்காதீர்கள். உடனேயே ஒரு வெள்ளைக் கொடியைப் பிடியுங்கள். நீங்கள் காலில் விழ வேண்டும் என்பதால்

தான் உங்களைக் கொல்ல வாய்ப்பிருந்தும் உங்கள் மேல் ஒரு கட்டாரி கூடப் பாயவில்லை. உங்களுக்குப் புத்தி சொல்வது தான் என்னை விட்டு வைத்திருக்கிறார்களோ என்னவோ? வாருங்கள் சமாதானமாகப் போய்விடலாம்..."

— பேச்சோடு அருகில் சாளரம் ஒன்றில் தொங்கிய வெள்ளைத் திரைச்சீலையைக் கிழித்தான் கையூம்.

"இல்லை... இல்லை. சரணடைந்தால் அது கேவலம் மட்டுமில்லை. என்னை நிச்சயம் மன்னிக்கமாட்டார்கள். நாயக்கர் இருந்தாலாவது சமாளிக்கலாம். இப்போது அதற்கும் வழியில்லை. கையூம், எப்படியாவது நான் தப்பிக்க ஒரு வழியைக் கூறு."

ருஸ்தம்கான் போரிடுவது என்பதிலிருந்து விலகித் தப்பிக்கும் எண்ணத்திற்குத் தாவ, கையூமின் பார்வை நாலா புறமும் பார்த்தது.

அங்கங்கே காவல் வீரர்களின் பிரேதங்கள்.

எந்தத் தூணின் பின்னால் யார் ஒளிந்திருக்கிறார்களோ என்பதே தெரியாத மர்மமான ஒரு நிலைப்பாடு. அதை உறுதிப்படுத்துவதுபோல எரியம்பு ஒன்று ருஸ்தம்கானை நோக்கிச் சீறியபடி வந்தது. பக்கவாட்டில் விலகித் தூண் ஒன்றன் பின்னால் ஒளிந்து பெருமூச்சு வாங்க வேண்டிய தாயிற்று அவன் நிலை.

அந்தக் களேபரத்தில் உடன் இருந்த கையூம் எங்கே?

"கையூம்... கையூம்..."

குரல் எதிரொலித்தது. தெளிவாகக் கேட்கும் விதமாகக் குண்டு மழையும் அறவே நின்று போனது.

உச்சிச சாளரம ஒன்றின் வழியாகச் செங்குத்தாக விழுந்த சூரியக் கதிர் ஒன்று, நடப்பது நடுப்பகல் என்றது.

கதிரவன் கிழக்கில் நிமிர்ந்த போது ஆரம்பித்த யுத்தம், நடுப்பகலிலேயே முடிவுக்கு வரப் போகிறதா?



இவ்வளவுதானா என் பலம்?

இதற்குத்தானோ கஜானா வரிப்பணத்தில் நான் குண்டுகளையும், கந்தகக் கண்ணிகளையும் மரப்பலம் மரப்பலமாக வாங்கினேன்.

இதன் பலத்திற்கு முன்னால் ஆயிரம் சிங்கங்களும் அள்ள வேண்டிய கரிச் சாம்பலாகிவிடும் என்றானே தூத்துக்குடியில் உள்ள பரங்கியன் ஒருவன்.

எல்லாம் பொய்யா...?

ருஸ்தம்கான் தூணுக்குப் பின்னே ஒளிந்த நிலையில் எண்ணக் கொப்பளிப்போடு குமுற ஆரம்பித்தான்.

சீறி உமிழ்ந்த குழாய்க் குண்டுக் குழல் முகப்பில் புகைப் பிசிர்வு. அதையே உற்றுப் பார்த்தபடி இருந்தார் கிழவன்.

அருகில் மண்டியிட்டுத் தலை குனிந்திருந்தான், அதைக் கட்டளைக்கேற்ப இயக்கிய உபதளவாய்! இதே நிலைப்பாடு தான் கோட்டையின் எட்டுப் பக்கங்களிலும்...

சின்னகாத்ரி வடக்குப் பக்கத்தில் குண்டு போட்டபடி இருந்த கில்ஜி ஒருவனைக் குழாய் முகப்பு முன் நிறுத்தி பதிலுக்கு அவன் மேலேயே ஒரு குண்டைப் போடும் ஆவேசத் தில் இருந்தார்.

அவன் அலறிக் கொண்டிருந்தான்.

"மாவீரரே... நான் அம்பு. என்னை எய்தவர் உள்ளே இருக்கிறார். என்னை விட்டு விடுங்கள். என்னை விட்டு விடுங்கள்."

சின்னகாத்ரி அதைக் கேட்டுப் பலமாகச் சிரிக்கிறார்.

சப்தம் நெடுந்தூரத்திற்குக் கேட்கிறது. தளவாய் அம்பலக் காரன் ஒரு சாவடிக் கூண்டின் மேலேறி, "பாளையாதிபதி வெற்றி... வெற்றி..." என்று கத்துகிறான்.

கோட்டைக் கதவுகளை உள்ளிருக்கும் சிறுத்துப்போன கூட்டம் வேறு வழியின்றித் திறந்துவிட மடை வெள்ளமாய் மறவர் படைக்கூட்டம் பாய்கிறது.

அதுவரை எங்கிருக்கிறோம் என்பதே தெரியாமல் இருந்த கோவிந்தப்பையாவும், வெங்கடகிருஷ்ணப்பரும் கோட்டை உச்சியின் கொடி மரம் அருகே நிமிர்ந்து எழுகின்றனர்.

கொம்பு ஊதிக் கொக்கரிக்கிறது. தொடர்ந்து நாகராக்கள் சப்தமிடுகின்றன.

"வெற்றிவேல்_ வெற்றிவேல்_" என்கிற முழக்கம் எக்காளமாய் எழும்பத் தொடங்குகிறது. அம்பலக்காரன், சேதுநாட்டுப் பேரரசர் கிழவர் சேதுபதி..." என்று அடித் தொண்டையிலிருந்து கத்த, "வாழ்க_ வாழ்க_" என்கிற எதிர்கோஷம் எழும்பி விண்ணை முட்டுகிறது.

கோவிந்தப்பையயாவை வெங்கடகிருஷ்ணப்பர் மார்போடு அணைத்துக் கொள்கிறார். அங்கிருந்தபடியே கிழக்கு வாயிலின் உச்சத்தில் குண்டு மேடையில் ஒரு எழுஞாயிறு போலத் தெரியும் கிழவனைப் பார்த்துக் கைகளைக் கூப்புகிறார்.

கிழவனும் அதை உணர்ந்து பதிலுக்குக் கைகளைக் கூப்புகிறார்.

எல்லாம் சரி_

எங்கே அந்தக் குதிரைக்காரன்?

அரண்மனை என்றால் சுரங்கப்பாதை அதன் லட்சணங்களில் ஒன்றாயிற்றே?

அதிலும் மதுரை நாயக்கர் அரண்மனை மர்மமான சுரங்கப் பாதைகளை ஏகமாய்த் தன்னகத்தே கொண்ட ஒன்று.

ஒன்று மீனாட்சி ஆலயத்துக்குச் செல்லும் பிரதான பாதை. இன்னொன்றோ வைகை ஆற்றங்கரையின் கல் மண்டபத்திற்குச் செல்லும்.



மூன்றாவது, நகரின் வர்த்தகச் சாவடிக்கும், நான்காவது ஸ்ருங்கார மாளிகைக்கும் என்று போகக்கூடியது.

இதைப் பழுத்த ராஜ்ய விசுவாசிகள் கூட அறிந்திருக்க வாய்ப்பில்லை. இதன் முகப்படமும் நுழைவாயிலும் கூட விசித்திரமாக இருக்கும்.

அதில் வைகை ஆற்றங்கரைக்குச் செல்லும் பாதையை மட்டும் தெரிந்து வைத்திருந்த ருஸ்தம்கான் அதன் வழியே பிரவேசித்து ஆற்றில் விழுந்து நீந்தியாவது உயிர் பிழைத்து விடும் ஆசையில் இருக்க, அவனை வேண்டுமென்றே விட்டுப் பிடிக்க விழைந்தவராட்டம் பின்தொடர்ந்தார் குமாரபிள்ளை. அவன் உடன் இருந்த சையூமைச் சற்று முன்தான் ஈட்டியைப் பாய்ச்சிப் பரலோகமனுப்பியிருந்தார்.

உரிய பாதுகாப்பில் நாயக்கரையும், மங்கம்மாளையும் அகலாத போதையில் இருந்த முத்துலிங்கத்தையும் காப்பாற்றிக் கரை சேர்த்திருந்த அவருக்குள் தன் கைப்பட்ட ருஸ்தம்கானின் தலையைத் தான் மட்டுமே வாங்கும் வெறி தணலாய்ப் பெருகியிருந்தது.

அதற்குத் தூபம் போடுவது போல முந்தின தினம் நல்ல பிள்ளை எனும் நல்லமனை இந்தக் குதிரைக்கார நாடோடி பலி வாங்கிய சம்பவம் மனத்தைப் பிசைந்து கொண்டேயிருந்தது.

நல்லமன் தலையைச் சுமந்த அதே வேல் இந்தப் பேராசைக்காரன் தலையையும் சுமந்து ஊர்வலம் வர வேண்டும். அது மதுரைக்குப் புது வாழ்வு வந்துவிட்டதைச் சொல்லாமல் சொல்ல வேண்டும் என்று நினைத்த பிள்ளை, ஒரு தீப்பந்தம் தாங்கி மோத வரும் வண்டுக் கூட்டத்தை விலக்கியபடிச் செல்லும் ருஸ்தம்கானை விடாது பின் தொடர்ந்தார்.

"துரோகியே கல்மண்டப வாசலை அடைந்த பிறகு பார். அப்பொழுது தெரியும் உன் நிலை..!"

உண்மைதான் என்கிற மாதிரி கல்மண்டபத்தை எட்டி எழும்பிய ருஸ்தம்கானை எதிர்பார்த்துச் சுற்றிலும் மறவர் கூட்டம் நடுவில் கிழவன்! கிழவனைப் பார்த்த மாத்திரத்தில் விக்கித்து வெளிறிப்போய்த் திரும்பி, உள் இறங்கி வளைக்குள் ஓடும் வயல் எலி போல் ஓடப் பார்த்தவன் எதிரில் குமார பிள்ளை ஈட்டியை எதிரே நீட்டியபடி அவனைப் பின்னா லேயே செல்லும்படிச் செய்தார்.

கல்மண்டபம் வரை வந்து மேலேறிய பின் சுற்றிலும் பார்த்தான். கையைக் கட்டிக் கொண்டு கண்களில் மட்டும் கோபத்தோடு பார்த்தபடி நின்று கொண்டிருந்தது மறவர் கூட்டம்.

"அடேய் நரி_!"— அழைத்தார் கிழவன்.

வானத்துச் சூரியனிடமோ மேற்குச் சாய்மானம். அழைத்த ஜோரில் சூரியனைப் பார்த்தார். பின், "ஒருவகையில் நீ வீரன் தான். வெறும் கையால் முழம் போட்ட மகாவீரன் நீ. தாரதம்மியம், தகுதி என்று எதுவும் இல்லாமல் ஆசையை முதலாகப் போட்டு, அறிவைத் துணையாக வைத்துக் கொண்டு சிலகாலம் நாயக்க சாம்ராஜ்யத்தையே ஆட்சி செய்து விட்ட நீ வீரன் தான்_ ஆனாலும் அசுர வீரன் நீ. அசுரர்களுக்குத் தேவர்களாகிய நாங்கள் தரும் முடிவு என்ன தெரியுமா?"

கேள்வியோடு கிழவனின் குறும்பிடிவாள் ஒரு ஒடி மறையும் மின்னலைப் போல ஒளிரியபடி வீசி அடங்க, அந்த வீச்சில் ருஸ்தம்கானின் தலை ஒரு இளநீர்க்காய் போல் மண்ணில் விழுந்து உருளத் தொடங்கியது.

"சேதுபதிசசா_" என்று அதன் நிமித்தம் தன்னை முந்திக் கொண்ட கிழவனுக்காகக் குரல் கொடுத்த குமார பிள்ளையைக் கிழவனும் நிமிர்ந்து ஏறிட்டார்.

"என்ன குமாரபிள்ளை_? உங்கள் ஆசையை நான் கெடுத்து விட்டேனா?"

ஆமோதிப்பாய்த் தலையை அசைத்தார் குமாரபிள்ளை.



"பாதகமில்லை_ சிதைத்தது நானாக இருந்தாலும் புதைக்கப் போவது இனி நீங்கள்தான். இவனைப் புதைக்கும் கல்லறையில், 'ஒரு வீரமான துரோகி இங்கே உறங்குகிறான்' என்று எழுதி வையுங்கள்.

மறந்து விடாதீர்கள். இவன் உங்களை எல்லாம் ஆட்டி வைத்ததை வரலாற்றில் வேறு மாதிரி எழுதி விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்."

— கிழவன் பேச்சில் கொஞ்சம் குதர்க்கமிருந்தாலும் அதைப் பொருட்படுத்தாதபடி முன்வரும் குமாரபிள்ளை கிழவனின் கரத்தைப் பற்றுகிறார்.

"சேதுபதி_ சொல்லிலே நின்று விட்டீர். மதுரைக்கும் காவலனாகி விட்டீர்கள். ஒரு பெரிய பீடை அகன்ற மகிழ்ச்சியில் இருக்கிறேன் நான். எப்படி உங்களுக்கு நன்றி கூறப் போகிறேன்?"

குமாரபிள்ளையின் கண்கள் பனிக்க கிழவனின் கரத்தைக் கண்களில் ஒற்றிக் கொள்கிறார்.

ருஸ்தம்கானின் பிரேதமும் அப்புறப்படுத்தப்படுகிறது.

"கட்டளை_ அந்தத் தலை மதுரை நகர் முழுவதும் ஒரு முறைக்கு மூன்று முறை சுற்றி வரவேண்டும்."

— குரல் கொடுத்தபடி வருகிறார் கோவிந்தப்பையா. அவரை ஒட்டி வரும் வெங்கடகிருஷ்ணப்பர் கிழவனை நெருங்கி ஆலிங்கனம் புரிகிறார்.

ஜெய கோஷம் ஆரம்பமாகிறது. அடங்கமாட்டாது தொடர்ந்து கொண்டே போகிறது.

"ஆமாம் எங்கே சொக்கநாதர்?"— கிழவனின் கேள்வி முன் சற்று துயரமாக முகம் தூக்குகின்றனர் கோவிந்தப்பையாவும், வெங்கடகிருஷ்ணப்பரும்!

# 21

சொக்கநாத நாயக்கர் எங்கே என்கிற கேள்விக்குச் சோகப் பார்வை பார்த்த கோவிந்தப்பையாவையும் வெங்கடகிருஷ்ணப்பரையும் சற்று அதிர்ச்சியோடு பார்த்தார் கிழவன் சேதுபதி.

'ஒரு குதிரைக்காரனுக்காக நடந்த ஒரு நாள் கூத்தில் அவரைப் பலி கொடுத்துவிட்டுத்தான் வெற்றியைப் பெற்றிருக்கிறோமா?''

கேள்வி கண்ணில் விட்டுத் தெறிக்க, "என்னாயிற்று கோவிந்தப்பையா... எங்கே சொக்கநாதர்? எங்கே அவரது சகதர்மிணி? இவர்களுக்கெல்லாம் யாதொரு உற்பாதமுமில்லையே...?" என்று கிழவன் பதைக்கத் தொடங்கினார்.

"அரசருக்கு எந்தக் குந்தகமும் இல்லை. அரசியாரும் நலமாகத்தான் இருக்கிறார். எங்கள் குமாரபிள்ளையும் உங்கள் சோளகச் சேர்வைக்காரனும் சேர்ந்து அந்த ரத்தினங்களைப் பத்திரமாகப் பாதுகாத்துவிட்டார்கள். அதிசயம் போல அந்தக் குதிரைக்காரன் சகா கையூமும் துணை செய்தான். அவர்களுக்குத்தான் உங்களைப் பார்ப்பது என்பது சற்று நெருடலாக உள்ளது..."

வெங்கடகிருஷ்ணப்பர் சூழ்நிலையை உணர்ந்து சுருக்கமாகவும் விதரணையாகவும் சொல்லவும் இனியும் ராஜ்ய விஷயத்தை இப்படி ஒரு பொது இடத்தில் வைத்துப் பேசலாகாது என்று உணர்ந்த கிழவன் அடுத்து என்ன செய்யலாம் என்று யோசிக்கும்போதே அந்த வைகைக் கரை மண்டப வளாகத்தினுள் வரிசையாகச் சிவிகைகள் வந்து சேரத் தொடங்கிவிட்டன!



மிக உற்சாகமாக ஒரு கூட்டம் சிவிகைகளைச் சுமந்து வந்து கைகட்டி நின்று கொண்டது.

"எதற்கு இத்தனை சிவிகைகள் கோவிந்தப்பையா?"

"தாங்கள் அரண்மனை ஏகத்தான்."

"அதற்கு ஒன்று போதுமே!"

"இங்கிருக்கும் ஒவ்வொரு சேது நாட்டாருக்கும் ஒரு சிவிகை... எங்களுக்காகப் போராடிய திருமேனிகளை நாங்கள் நன்றியுடன் சுமந்து கொண்டாட விரும்புகிறோம்."

"இராமலிங்கம்... இராமலிங்கம்... நடக்கிற காரியமாகப் பேசுங்கள்..."

"நடக்கப் போகிறது பாருங்கள். அருள்கூர்ந்து தாங்கள் முதலில் சிவிகையில் ஏறுங்கள்."

— கோவிந்தப்பையா கிழவனின் கரத்தைப் பற்றிப் பட்டுக் கூரை தாங்கிய சிவிகை ஒன்றைச் சமர்ப்பித்து அதில் அவரை ஏற்றி அமர்த்தினார். அதைத் தொடர்ந்து அங்கிருக்கும் ஒவ்வொரு வீரரையும் பார்த்துப் பார்த்துச் சிவிகையில் ஏற்ற ஆரவாரத்துடன் சிவிகைகள் ஊர்வலம் போலப் புறப்பட்டன.

கொம்புகளை ஊதியும் முரசு கொட்டியும் ஒரு கூட்டம் வெற்றிக் களிப்பை மதுரை வீதிகளில் உற்சாகமாகக் கொண்டாடிக் கொண்டே போயிற்று. சந்தோஷமாக அதைப் பார்ப்பது போல வானத்து ஜோதியும் மேற்கில் இதமான சிவப்பில் அஸ்தமனம் நோக்கிச் சரிந்த வண்ணமிருக்க, நாளை உதிக்கப்போகும் சூரியன் ஒரு பிணியில்லாத, புதிய நாயக்க ராஜ்யத்தைப் பார்ப்பான் என்று நினைக்கத் தோன்றியது.

வீதிகளில் மிதந்து செல்லும் சிவிகைகளுக்கு மாநகரத்து மக்களும் குலவை போட்டு வரவேற்புக் கொடுத்தனர். பல பெண்கள் ஆரத்தி எடுத்து, அந்தச் செந்நீரைச் சாலை ஓரங்களில் இறைத்ததில் பழுப்பு நிறச் சாலை அங்கங்கே செந்நிறத்தோடு மேலும் சிவந்து மங்கலம் வந்து விட்டது என்று சொல்லாமல் சொன்னது...

அழுது வடிந்து கொண்டிருந்த அங்காடித் தெருவிலும் உற்சாகம் தொற்றிக் கொண்டுவிட்டது.

சிவிகைகள் அரண்மனை முகப்பை அடைந்த அதேசமயம் பூர்ணகும்பத்துடன் காத்துக் கொண்டிருந்தார் சொக்கநாத நாயக்கர். அருகிலேயே மங்கம்மாளும் முத்துலிங்கமும் புதிய உற்சாகத்தோடு காத்துக் கொண்டிருந்தார்கள். அரசியலில் அத்தனை ஈடுபாடு காட்டாத சொக்கநாத நாயக்கரின் புதல்வன் முத்துவீரப்பனும் அங்கே இருக்க, அடக்கமாக கையூமும் நின்று கொண்டிருந்ததுதான் பெரிய வியப்பைத் தந்தது!

குமாரபிள்ளைக்குக் கையூமைப் பார்த்ததும் ஆச்சரியமாய்ப் போயிற்று.

"கையூம்— நீ இன்னுமா உயிருடன் இருக்கிறாய்?"

— அந்தக் கேள்வியே கையூமைக் கலங்க வைக்கிறது.

"உங்கள் ஈட்டிப் பாய்ச்சல் பிசகி விட்டது. அதுமட்டுமல்ல பிள்ளை. நானே சாக முயன்றும் என்னைச் சாகவிடவில்லை தளவாய் கோவிந்தப்பையா. அந்த இறைவன் எதற்காக எனக்காக இன்னும் ஆயுளை நீட்டித்திருக்கிறான் என்றே தெரியவில்லை..."

— கையூம் வருந்துவது குமாரபிள்ளைக்குப் பேராச்சரியம் தருகிறது. ஊடே பட்டரின் மந்திரக் குரல் சூழாமோடு ஒலிக்கத் தொடங்க தற்காலிகமாகப் பிள்ளை அடங்கினாலும், பார்வை என்னவோ அவன் மேலேயே இருக்கிறது.

'எப்படி இவன் இங்கு வந்து ஒட்டிக் கொண்டான்...'— கேள்வி நெஞ்சைக் குத்துகிறது.

பரமேஸ்வர பட்டரின் தலைமையில் பட்டர் சூழாம் மந்திர முழக்கங்களோடு பூர்ணகும்பத்தைக் கிழவன் முன் எடுத்துச் செல்ல, கிழவன் அதைக் கண்களில் ஒற்றிக் கொண்டார். மந்திர முழக்கத்தைத் தொடர்ந்து ஜெயகோஷம் ஒலிக்கத் தொடங்கியது.



உடன் நிற்கும் சகாக்களை வெற்றிப் பெருமிதத்தோடு ஒரு பார்வை பார்த்தார். தாதியத் தேவனும் உடன் இருந்தான். அவனை வலப்பக்கமாக இழுத்து நிறுத்திக்கொண்டார். தன்னடக்கத்தோடு கூட்டத்தோடு கூட்டமாக நின்று கொண்டிருந்த சின்னகாதரியையும் இழுத்து இடப்புறமாக நிறுத்திக் கொண்டார். அம்பலக்காரனும் சோளகை சேர்வைக்காரனும் அதைப் பார்த்துப் பெருமிதம் பொங்கச் சிரித்தனர்.

கிழவனின் நிழலைப் போல விளங்கும் பெரிய உடையத் தேவரும் அரிதான அந்த மரியாதைக்குரிய நிகழ்வைப் பார்த்துச் செருமாந்து போனார்.

ஏதும் பேசாமல் விக்கித்து நின்று கொண்டிருந்த சொக்கநாதர் வசம் பரமேஸ்வர பட்டர் ஒரு மாலையைத் தர அதைக் கிழவனுக்கு அணிவித்த சொக்கநாதர் மார்போடு கிழவனை அணைத்தும் கொண்டார்.

காதோரமாக, "நன்றி சேதுபதி— மிக்க நன்றி" என்றார். கிழவனின் கரங்கள் செருக்கோடு பதிலுக்குச் சொக்கநாதர் கரங்களைப் பற்றியது.

"நாயக்கரே... நன்றியை எனக்கு மட்டும் கூறினால் எப்படி? இதோ இந்தக் கன்னிவாடி பாளையக்காரனுக்குச் சொல்லுங்கள். அப்படியே என் அருமைச் சகோதரன் தாதியத் தேவனுக்கும் சொல்லுங்கள். அனைத்திலும் எனக்குத் துணை செய்யும் பெரிய உடையத் தேவனுக்கும் சொல்லுங்கள். மற்றுமுள்ள என் வீரக்கண்மணிகளுக்கும் சொல்லுங்கள். அப்படியே அடிமைத்தனமும் ஆதிக்கச் சுபாவமும் எங்கிருந்தாலும் அதை வேரறுக்க இந்தக் கிழவன் சகலத்தையும் மறந்து ஓடிவருவான் என்றும் கூறுங்கள்."

— கிழவனின் பேச்சில் பரந்த உள்ளமும் தெளிந்த பார்வையும் பளீரிட்டது. மேனியில் யுத்தப் புழுதியும், ஆடைக் கிழிவும் இருந்தாலும் மனத்தில் எந்தப் புழுதிக்கும் கிழிசலுக்கும் குழப்பத்திற்கும் என்னிடம் இடம் இல்லை என்பதுபோல் இருந்தது கிழவனின் அந்தக் காட்டமான பேச்சு.

சொக்கநாதர் அதற்கு அங்கீகாரம் அளிக்கிற மாதிரி மீண்டும் கட்டியணைத்துக் கொள்கிறார். அப்படியே அணைந்த நிலையில், "அருமையான ஒரு நண்பர் நீங்கள் சேதுபதி. அற்புதமான வீரரும்கூட. பாம்பின்கால் பாம்பறியும். உங்களை நானறிவேன்" என்று கூறுகின்றவர் கோவிந்தப்பையாவையும் வெங்கடகிருஷ்ணப்பரையும் முன் அழைக்கிறார். தன்னடக்கத்தோடு ஒதுங்கி நின்ற குமாரபிள்ளையையும் சர்வத்தையும் பார்த்தபடித் தலைகுனிந்து விட்டிருந்த கையூமையும் கூட முன் அழைக்கிறார்!

"இறுதிக் கட்டத்தில் இவன் மட்டும் ஒத்தாசித்திருக்காவிட்டால் நான் உயிர் பிழைத்திருக்கவே முடியாது. ருஸ்தமுக்கு நல்ல நண்பனாக இருந்தாலும் அதைக் கெட்ட சகவாசம் என்று உணர்ந்துவிட்டவன். அவனைத் திருத்த இறுதிவரை முயன்றவன். திருத்தவே முடியாது என்றபோதும் அவனுடன் சேர்ந்து சாவதே நட்புக்கு இலக்கணம் என்று கூறிவிட்டுத் தற்கொலைக்கு முயன்றவனைக் கோவிந்தப்பையாதான் தடுத்தாட்கொண்டார். நல்லவேளை ஒரு நல்ல மனம் கொண்டவன் பிழைத்துவிட்டான். இவனை மன்னிப்பதுதானே சேதுபதி நமக்கு அழகு...?"

– சொக்கநாதரின் கேள்வியைத் தொடர்ந்து கையூம் கிழவனின் காலில் விழ வேகமாக முன்வந்தான். அதைத் தடுத்த கிழவன் அவனைத் தூக்கி நிறுத்தியவராக, "நீ காலில் விழலாகாது நண்பா... கர்ணனைப் போன்றவன் நீ" என்றபடியே கட்டியணைத்துக் கொண்டார்.

– கூட்டமே புல்லரித்துப் போயிற்று.

"சேதுபதி– வாருங்கள்! இந்த நொடிமுதல் ஒரு வார காலத்திற்கு இந்த அரண்மனையின் விருந்துபசாரங்களில் பங்கு கொள்ள வேண்டும் தாங்கள். பிறகுதான் சேதுநாட்டைப் பற்றியே நினைக்க வேண்டும். இந்த வெற்றியில்— இந்த விடுதலையில் மாநகரிலும் தானதர்மங்கள் போதும்போது



மென்கிற அளவு நடக்கவேண்டும். எங்கும் கேளிக்கைகள், கலாஉற்சவங்கள், ஆடல்பாடல்களில் மதுரையம்பதியே புதிய தெம்பினைப் பெற வேண்டும்."

– சொக்கநாதர் அரண்மனை முகப்பில் நின்றபடியே அனைவரின் காதிலும் விழும்படியாக முழக்கமிட்டார். மங்கம்மாள் அதை ஆமோதித்தாள். ஆனால் முத்துலிங்கமோ நடந்து முடிந்த இந்தக் குழப்பங்களுக்கெல்லாம் நானும் ஒரு காரணம் என்கிற மாதிரியே காட்சி தந்தான்.

அதைத் தொடர்ந்து கிழவனைச் சொக்கநாதரும், சின்ன காத்ரியை மங்கம்மாளும், தாதியத் தேவனைக் குமாரபிள்ளையும், பெரிய உடையத்தேவரைக் கோவிந்தப்பையாவும், அம்பலக்காரனையும் சோளசையையும் தளவாய்ப் பொறுப்பிலுள்ளவர்களும் தங்கள் தங்கள் தனிப் பொறுப்பில் உள்ளே அழைத்துச் சென்றனர்.

ஒரு யுத்தம் நடந்து முடிந்த சுவடே தெரியாதபடி அரண்மனை புதிய பொலிவுக்கு மாறி ஆங்காங்கே மாலைகள், தோரணங்களுடனும், தாழம்பூ மடல்களுடனும், தென்னம் பாளைப் பூக்களுடனும் அவர்களை வரவேற்றது.

அந்த சந்தோஷத்தில் பங்கு கொள்ள முடியாத ஒருவனைப் போல விலகிய கையூமை வெங்கடகிருஷ்ணப்பர் பார்த்துவிட்டுப் புரிந்தது போல அவனை அணுகினார்.

"கையூம்... இன்னும் என்ன சலனம்?"

"ஒன்றுமில்லை தளவாய். ருஸ்தம்கானால் நேரிட்ட இழப்புகளை ஒரு க்ஷணம் எண்ணிப் பார்த்தேன். இந்த மனைக்குள் மகிழ்ச்சி திரும்பி விட்டது. ஆனால் நடக்கக் கூடாத இந்த யுத்தத்தால் தங்கள் இன்னுயிரைத் தொலைத்து விட்ட வீரர்களும் உண்டுதானே? அவர்கள் குடும்பங்களை நினைத்துப் பார்க்கிறேன். ருஸ்தம் என் பேச்சைக் கேட்டுச் சரண் புகுந்திருந்தால் இந்த இழப்புக்கே இடமில்லையல்லவா?"

"உண்மைதான்— ஆனால் எப்பொழுதும் காலம் என்பது இழப்புகளுக்குப் பிறகுதானே பாடம் என்னும் பரிசைத் தருகிறது. கவலைப்படாதே. இறந்த அத்தனை பேரையும் வைகைக் கரை வாங்கிக் கொள்ள உள்ளது. நானே தகனக் கிரியைக்குத் தலைமை தாங்க உள்ளேன். இறந்த நம் வீரர்களின் குடும்பங்களுக்கு நமது அரசர் நிலங்களைத் தானமாகத் தந்து உதவுவார். அவர்கள் அதில் விவசாயம் செய்து ஜீவித்துக் கொள்ளலாம்.

இந்த யுத்தத்துக்கே கர்த்தாவான ருஸ்தம்கானின் உடம்பைக் கூட உங்கள் மதசாங்கியப்படி நல்லடக்கம் செய்துவிடத்தான் குமாரபிள்ளையிடம் சொல்லியுள்ளேன். ஊர்வலம் போகக் கிளம்பியவர்களைத் தடுத்துவிட்டேன். வெற்றி மிதப்பில் பழிவாங்கும் செயல்களோ, பாரபட்சமான நடவடிக்கைகளோ இருக்காது. நீ மனத்தைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதே—"

— வெங்கடகிருஷ்ணப்பர் தான் ஒரு தேர்ந்த தளவாய் என்பதை அவனுக்குப் புரியவைத்தவராக அடுத்த கட்டச் செயல்பாடுகளில் இறங்கத் தொடங்கினார்.

சூரியன் மறைந்தாலும் நிலவு நானிருக்கிறேன் என்கிறாற் போல் வெளிப்பட்டு வெற்றித் திருநகர் மேல் தன் குளிர்க் கிரணங்களைப் பாய்ச்சத் தொடங்குகிறது.

அந்த நிலவைத் தொட்டுப் பார்க்க விரும்புகிறாற்போல அடுக்கடுக்காய் சாரை மத்தாப்புகள் வானில் ஏகி வெளிச்சப் புள்ளிகளாகச் சிதறிக் கொட்டுகின்றன.

இதே நிலைதான் இராமநாதபுரத்திலும்...!

இராமலிங்க விலாசமே மகிழ்ச்சிக் களிப்பில் மிதந்தபடி உள்ளது.

சீதக்காதிதான் சகலத்துக்கும் தலைமை தாங்கியபடி இருந்தார். மூத்தவள் செவத்தநாச்சியும் கிழவனின் சகோதரி



உடையக்காவும் ஒருவருக்கொருவர் இனிப்புகளைக் கொடுத்து வாய்கொள்ளாதபடி மென்று மகிழ்கின்றனர். சேதியின் வீச்சு கிழவனின் பத்தினியர்களை அரண்மனைக்குள் ஒன்றுபடுத்தி விட்டிருக்கிறது.

காதலி நாச்சியும் அழகம்மையும் தாங்கள் சச்சரவில்லாத சக்களத்திகள் என்பதுபோல ஒன்றாக அமர்ந்து நிகழ்ந்தபடி இருந்த கிளிமானூர் சிலம்ப வீரர்களின் விளையாட்டை ரசித்தபடி இருந்தனர்.

அவ்வப்போது அழகம்மை காதலி நாச்சியிடம் புளகாங்கிதப்பட்டுக் கொண்டாள்.

"ஒரே நாளில் திட்டமிட்டபடி வெற்றி கிடைத்துவிட்டது. எனக்குத் தெரியும். நம்மவர்களுக்குத் தோல்வி என்பதே கிடையாது..."

"திட்டமிடுவதில்தான் நம்மவர் அதிசூரர் ஆயிற்றே— அது பிசிறு தட்டுமா என்ன?"

சீதக்காதி அதைக் கேட்டபடியே நெருங்கி வருகிறார்.

"அண்ணாவிற்கும் மகிழ்ச்சி பிடிபடவில்லை. இங்கே இருந்து கொண்டாடத்தான் நீங்களும் அந்தச் சண்டைக்குப் போகவில்லையா அண்ணா?"

— அழகம்மை அன்பொழுகக் கேட்கிறாள்.

"அப்படியில்லையம்மா... எனக்கென்னவோ யுத்தம், சண்டை என்றாலே மனது அதிர்கிறது. அன்பு செலுத்திக் கொண்டு முன் உதாரணமாகத் திகழ வேண்டிய மனிதக் கூட்டம் பகைமை பாராட்டிக் கொண்டு அடித்துக் கொள்வது அநாகரிகமல்லவா? ஆறாவதாக ஒரு அறிவிருந்தும் மனிதன் இப்படி நடந்து கொண்டால் எப்படி?"

— திருப்பிக் கேட்டார் சீதக்காதி.

"அது சரி... எல்லோரும் உங்களைப் போல நினைத்து விட்டால் சிக்கலே இல்லையே— அப்படி நினைக்காததால் தானே இத்தனை சங்கடங்களும்?"

"வேண்டாம் சகோதரி– இந்த மாதிரிப் பேச்சுக்களை என்னிடம் பேசாதே. இது பேசப்பேச முடிவில்லாமல் வளர்ந்து கொண்டே போகும். இறைவன் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு காரணத்துக்காகப் படைத்திருக்கிறான். அதைப் புரிந்து கொண்டு நாம் நம் கடமையைச் செய்ய வேண்டும்."

"அப்படியா– சரி உங்களை எதற்குப் படைத்திருக்கிறான். சொல்லுங்களேன் பார்ப்போம்..."

– அழகம்மை விடாமல் பேச்சை வளர்த்தினாள்.

"கொடுக்கத்தான்–"

"கொடுக்கவா?"

"ஆமாம்– உனக்கு, காதலி நாச்சிக்கு, அப்புறம் இந்த ராமநாதபுரத்து மக்களுக்கு அன்பையும் பொருளையும் கொடுக்கத்தான்–"

"இருக்கும்வரைதான் கொடுக்க முடியும். இல்லாத போது–?"

"என்னை மடக்கியே தீரவேண்டும் என்று பார்க்கிறாய் நீ. ஒன்றை நன்றாகப் புரிந்து கொள். நானிருக்கும் வரை என்னிடம் கொடுப்பதற்கு ஏதாவது இருந்தே தீரும். அதை நான் கொடுத்தபடியே இருப்பேன். அப்படிக் கொடுக்க ஒன்றும் இல்லாதபோது என் கடமையை இறைவன் முடித்து வைக்கிறான் என்று பொருள். அப்பொழுது நானும் இருக்க மாட்டேன்–!"

"அண்ணா–"– அழகம்மை எழுந்து சீதக்காதியின் கரங்களைப் பிடித்துக் கொண்டாள். கண்கள் கூடக் கலங்கி விட்டன.

"என்ன அழகு இது– எதற்குக் கண்கலங்குகிறாய்?"

"வேண்டாமண்ணா– உங்கள் வாயால் நான் முடிந்து விடுவேன் என இனிக் கூறாதீர்கள். நீங்கள் எங்களுக்குக் கிடைத்த பொக்கிஷம். உங்களுக்கு ஒரு குறைவு வர நிச்சயமாக



அந்த இறைவன் இடம் கொடுக்கமாட்டான். அவன் கொடுத்தாலும் நான் விடமாட்டேன். இது வெற்றி பெற்றிருக்கும் காலம். சந்தோஷமாகப் பேசுவோம்."

"நான் சந்தோஷமாகத்தானே இருக்கிறேன். மதுரையில் ஒரு துரோகிக்கு முடிவு வந்து விட்டது. ஒரு நல்லாட்சி இனி அங்கு உதயமாகும். அதைச் சாதித்தது என் அருமைச் சகோதரர் சேதுபதி அவர்கள். இதனால் மதுரையோடு இருந்த பிணக்கும் பகையும் கூட ஓடிப்போய்விட்டது. மதுரை இனி சேதுநாட்டின் மிகப் பெரிய நேச நாடு– இந்த ஒற்றுமை டெல்லி வரை கேட்கப் போகிறது. இது புதிய பலம். இதை எனது அருமை மறவர்கள் சாதித்திருக்கிறார்கள். இதை நானும் என் உற்றார் உறவினர்களும் கூடக் கொண்டாடி மகிழப் போகிறோம். நேற்றுத்தான் பினாங்கிலிருந்து புதிய பட்டு வஸ்திரங்கள் வந்து சேர்ந்தன. அதில் சரிபாதியைத் தானமாகக் கொடுக்கப் போகிறேன். வருகிறாயா– நீயே உன் கையால் அவைகளைத் தரலாம்..."

– சீதக்காதி குணப்பாட்டில் மீண்டும் விஸ்வரூபம் எடுத்தார்.

"அண்ணா, உங்களுக்கு எவ்வளவு பெரிய மனது! பொருள் உங்களுடையது. தானம் எனது கரங்களாலா?"

"பார்த்தாயா– அண்ணா, அண்ணா என்று அழைத்து விட்டு உன்னுடையது என்னுடையது என்று பிரிக்கிறாய். நம்முடையது என்று சொல்–"

– சீதக்காதி அவள் பேச்சைத் திருத்தும் சாக்கில் மனித நேயத்தின் உச்சிக்கும் ஏறினார்.

அதைக் கேட்டு அழகம்மையோடு, காதலி நாச்சியும் கண்ணீர் உகுத்தாள்!

# 22

கலங்கிவிட்ட நயனங்களுடன் நிற்கும் அழகம்மையையும், காதலி நாச்சியையும் பார்த்துச் சீதக்காதி சற்று கலங்கித்தான் போனார்.

"சகோதரிகளே, எதற்காக இப்படிக் கலங்குகிறீர்கள்? நீங்கள் இப்படிக் கலங்கும்படியாக நான் எதையும் கூறிவிடவில்லையே..." என்று பதிலுக்கு அவரும் கேட்க, "அண்ணா இது சந்தோஷமான கலக்கம். எங்கள் வெற்றியை நீங்கள் கொண்டாடுவதே பெரிது. அதனினும் பெரிது அதில் தாங்கள் புரியும் தருமம். அந்தத் தருமத்தையே கூட விட்டுத் தந்து எங்களை அழைக்கிறீர்களே... இந்த மனது யாருக்கு வரும்?" என்று அழகம்மை நெகிழ்ச்சியோடு திருப்பிக் கேட்டாள். சீதக்காதியின் முகத்தில் சிறியதாக ஒரு புன்னகை அப்படியே, "சகோதரிகளே... இப்படி என்னை மெச்சி நான் ஏதோ ஒரு செயற்கரிய செயல் செய்துவிட்ட ஒரு கர்வத்தை எனக்குள் உருவாக்கிவிடாதீர்கள். பேசியது போதும். புறப்படுங்கள்..." என்றபடி அவரும் புறப்பட ஆயத்தமானார்.

எப்படிப் பேசினாலும் அதனினும் அடங்கிப் பேசிச் சீதக்காதி உயர்ந்து கொண்டே போனதுதான் அவர்கள் அடைந்த ஆச்சரியங்களிலே பெரிய ஆச்சரியம்!

**நெ**டு நாட்களுக்குப் பிறகு நிம்மதியான உறக்கம் பிடித்த ஓர் இரவைப் பெற்றிருந்தது மாமதுரை. எங்கும் தானதர்ம நிகழ்வுகள் மிகுந்து காணப்பட்டதால் ஒரு பண்டிகைத் திருநாள் போல மகிழ்ச்சி பொங்கி வழிந்து கொண்டிருந்தது.

ருஸ்தம்கானால் சிறை பிடிக்கப்பட்ட விசுவாசிகள் எல்லாம் விடுதலையோடு பட்டயம் ஒன்றையும் பெற்றபடி இருந்தனர். அதன்படி மாமதுரை சாம்ராஜ்யத்தில் அவர்கள்



விரும்புகிற இடத்தில் அவர்களுக்கு ஐந்து வேலியிலிருந்து நூறு வேலி வரை நிலத்தைப் பட்டா போட்டுத்தர சொக்கநாதர் மணியக்காரர்களுக்கும், தலையாரிகளுக்கும் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

மறுநாளே பேரவை கூடப்போவதற்கான ஏற்பாடுகள் முடுக்கிவிடப்பட்டன. அதில்தான் கிழவன் சேதுபதியைப் பெரிதும் கௌரவிக்கும் வைபவம் நடைபெற இருக்கிறது. அரசவையே அது குறித்து ஆழ்ந்த விவாதத்தில் இறங்கி விட்டிருந்தது.

கோடிப் பொன்னைக் கொட்டிக் கொடுக்க வேண்டும் என்று ஒரு சாராரும் பொன்னெல்லாம் கிழவருக்கு ஒரு தூசுக்குச் சமம். அதற்குப் பதிலாக அவருக்கு ஏதும் பட்டமளிக்கலாம் என்று ஒரு சாராரும் பேசிக் கொண்டிருக்க 'என்ன பட்டமளிக்கலாம்? அதை எப்படி அளிக்கலாம்' என்கிற ஒத்திகைகளும் ஒரு புறம் ஓடிய வண்ணமிருந்தது.

விருந்தோம்பலிலும் நன்றி காட்டுவதிலும் நாயக்கர்கள் சளைத்தவர்கள் அல்ல என்று காட்ட ஆசைப்பட்டவர்களைப் போலக் கிழவனைக் கோவிந்தப்பையா திணற அடித்துக் கொண்டிருந்தார்.

நீராழி மண்டபத்தில் ஆழி நீரில் அத்தரையும் பன்னீரையும் சேர்த்து மதுரைக்கே மணம் சேர்க்கும் மல்லிகை இதழ்களையும் அதில் தூவித் தைல நீராட்டுப் புரிவித்து, பின்னர் மேனிக்குப் பட்டு வஸ்திரம் சாற்றி அடிக்கு ஒரு மலர் தூவி நடையை இதமாக்கி, தேர்ந்த கலைஞர்களை அழைத்துப் பாதம் முதல் சிகைவரை அலங்கரித்துக் கிழவனைத் திக்குமுக்காடச் செய்துவிட்டார்...!

அவரது ஓய்வறையில் ஏகத்துக்கும் பணியாட்கள். வகைக்கொரு பழரசமும், விதத்துக்கொரு பதார்த்தமும் செய்து கொண்டுவந்து அடுக்கி விட்டனர்...

மதுபானங்களுக்கும் பஞ்சமில்லை. அரசர்களுக்கென்றே பிரத்யேகமாகத் தயாரிக்கப்படும் சோமரசமும் திராட்சை மதுவும் மற்றும் டனிப்பேறிய கள் நிரம் பிங்கான் பாத்திரங் களில் வழிந்து கொண்டிருந்தன. அவ்வளவும் கடல் வழியாக வந்த சீனச் சரக்கு!

பகல் பொழுதெல்லாம் யுத்த முகாந்திரத்தில் தன்னுயிரை மறந்து போரிட்ட மறவர் பெருமக்களுக்கு அந்த இரவுப் போதில் அந்த மதுவகைகள் அளவுக்கதிகமான போதையை யும், போதையோடு கூடிய மகிழ்ச்சியையும் தந்து கொண் டிருந்தன.

சோளகை சோலைக்காரனும், அம்பலக்காரனும் பேதம் மறந்து குவளை குவளையாகக் குடித்துவிட்டு உருமாக்கட்டி ஒரு ஆட்டமும் போட்டுப் பார்த்தனர்.

அந்த ஆட்டபாட்டத்தில் அந்த நிலையிலும் சேது நாட்டுப் பெருமை பற்றிப் பேச அவர்கள் தவறாததுதான் ஆச்சரிய உச்சம்.

"ஆருன்னு நெனச்சே மனுஷா... மனுஷா!
வீர் சேது நாட்டான் நான் மனுஷா மனுஷா!
ராமலிங்கசாமி எங்க சாமி... மனுஷா மனுஷா!
வேற சாமி எங்க காமி மனுஷா மனுஷா!

புலிவாலைப் பிடிப்போம் புடிச்சி
கடவாயையும் கிழிப்போம்...!
அரிமாவையும் பிடிப்போம் அதன்
முதுகேறியும் படுப்போம்...!
வீரத்துல விளைஞ்ச மக்க மனுஷா... மனுஷா! —எங்க
தீரத்துக்கும் எல்லையேது மனுஷா மனுஷா!"

ஆட்டமும் பாட்டமும் ஒருபுறம் இப்படி அரங்கேறிக் கொண்டிருக்க அந்த மகிழ்ச்சியான வேளையை மங்கம்மாள் மீனாட்சி சன்னிதியில் விசேஷ பூஜை செய்து கொண்டாடி விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தாள்.



தன் அந்தப்புரம் நோக்கிப் போய்க் கொண்டிருந்தவள் சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தவளைப் போலத் தனது மெய்க்காப்பாளன் மணியன் என்பானிடம் கேட்டாள்.

"மணியா— தற்போது கிழவன் எங்கிருக்கிறார்?"

"நமது விருந்தினர் மாளிகையில் தேவி—"

"உறங்கிவிட்டாரா, இல்லை விழித்துக் கொண்டிருக் கிறாரா என்று பார்த்துவிட்டு வா— விழித்துக் கொண்டிருந் தால் நான் அவரைச் சந்தித்துப் பேச விரும்புவதையும் கூறி விட்டு வா—"

மங்கம்மாளின் திருவுள்ளப்படி மணியன் உடனே அங்கிருந்து விரைந்தான். விருந்தினர் மாளிகையின் உல்லாச சல்லாபங்களைப் பார்த்தபடியே கிழவன் இருக்கும் அறைப் பக்கம் சென்றான்.

தூப தீப வாசம் மூக்கைச் சிறுப்பியது.

உள்ளே கிழவன் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருப்பதும் காதில் கேட்டது. பணிவோடு அவர் எதிரில் போய் நின்றான். கோவிந்தப்பையா அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்.

"ஆமாம்... எங்கே வெங்கடகிருஷ்ணப்பா—?"

"வேண்டாம் சேதுபதி. இப்போது அவரைப் பற்றி எதுவும் கேட்காதீர்கள்..."

"என்ன கோவிந்தப்பையா இது? எல்லோரும் மகிழ்வாக இருக்கும் இந்த வேளையில் பிரதான தளபதியே இல்லை என்றால் எப்படி?"

"அவருக்கு வேறு பிரதான பணி இருக்கிறது. இன்றைய யுத்தத்தில் இறந்த வீரர்களின் ஈமக்கிரியைக்கு அவர்தான் தலைமை தாங்கியாக வேண்டும். அதோடு நாடெங்கும் நடை பெற உள்ள பல்வேறு அரசு சார்பு நிகழ்ச்சிகளையும் முடுக்கி விடும் வேலை வேறு அவருக்கு இருக்கிறதே? குமாரபிள்ளை யும் ஒத்தாசித்தபடி இருக்கிறார்—"

"ஓ— நான் அதை மறந்துபோய் விட்டேனோ?"

— கிழவன் முகம் அடுத்த நொடி அனலில் வெந்ததுபோல வாடிப் போனது.

"சேதுபதி— என்ன இது—? ஒரு வெற்றியின் மறுபக்கத்தில் இப்படிச் சில செயல்களும் இருக்கத்தானே செய்யும். இதற்காகவா வருந்துகிறீர்கள்?"— கோவிந்தப்பையா கேட்டபடி பழரசக் கிண்ணத்தை நிரப்பத் தொடங்கினார்.

"வருந்த வேண்டியதற்கு வருந்தத்தான் வேண்டும். இது ஒன்றும் பெரிய வெற்றியல்ல கோவிந்தப்பையா. காட்டில் மிருக வேட்டைக்குச் செல்பவர்களைப் போலத்தான் நான் இங்கு வந்திருக்கிறேன். வேட்டை முடிந்துவிட்டது. திரும்ப வேண்டும். ஆயினும் இந்த வேட்டையில் நான் என் சகாக்கள் பலரையும் கூட இழந்திருக்கலாம். அவர்களைப் பற்றிய கவலை கூட இல்லாமல் நான் வெற்றி என்று இந்த வேட்டையைப் பற்றி எண்ணிக் கொண்டு இறுமாந்து போனால் நானெல்லாம் மனிதனே இல்லை. நல்லவேளை உங்களால் விழிப்பு ஏற்பட்டது. தயவு செய்து என் சகாக்களை முதலில் வந்து என்னைச் சந்திக்கச் சொல்லுங்கள். அணி திரண்டு வந்த எங்களில் யார் யார் வீர சொர்க்கம் போனார்கள் என்பது எனக்கு முதலில் தெரிந்தாக வேண்டும்."

— கிழவனின் பதிலை மங்கம்மாளின் மெய்க்காப்பாளன் மணியனும் கேட்டபடிச் சற்று செருமாந்தான்.

'நல்ல அரச லட்சணம். நல்ல புருஷ லட்சணம்' என்று ஒரு சேர நினைத்தபடி கிழவனை நெருங்கினான். மங்கம்மாளின் ஆசையையும் கூறினான்.

"தாராளமாக வரச் சொல்லுங்கள்" என்று கிழவன் கூறவே மணியன் அந்தப் பதிலுடன் திரும்பத் தொடங்கினான்.

மங்கம்மாள் சொக்கநாதரின் ஓய்வறையில் இருந்தாள். அவரிடம் பெரிதாக உற்சாகமில்லை. ஒரு பெரிய வியாதி



வந்து அருமைச் சிகிச்சையால நோய் நீக்கப்பட்ட ஒரு மனிதனைப் போலத்தான் சொக்கநாதர் காணப்பட்டார்.

அதிலும் இந்த வியாதி தானே வரவழைத்துக் கொண்ட வியாதி— அதுதான் வெளியே ஊரே களிப்பில் இருக்கும் போதும் இவரைப் பிராண்டிக் கொண்டிருக்கிறதோ?

லஸ்தர் மெழுகுகள் உருகலோடு வெளிச்சத்தை இதமாக வார்த்தபடி இருக்கும் அந்த அறையில் சொக்கநாதரின் தலைக்கு மேல் பங்காத்திண்டும் அசைந்து காற்றைப் பிடித்து உலாவவிட்டுக் கொண்டிருக்கிறது.

"என்ன தீவிரமான சிந்தனை?"— மங்கம்மாள் மேற்படிக் கேள்வியைத் தன் தாய் மொழியான தெலுங்கில் கேட்கிறாள். சொக்கநாதரிடம் மௌனம்.

"நடந்ததை நினைத்துக் கவலைப்படுவதில் அர்த்தமில்லை. இனி நடக்கப்போவதைப் பற்றி யோசியுங்கள்..."— தெலுங்கிலேயே உரையாடல் தொடர்கிறது.

"இல்லை தேவி. இந்தச் சொக்கநாதன் தன் வாழ்நாளில் ஒரு குதிரைக்காரனுக்கு இடம் கொடுத்து விட்டான் என்கிற பழிச் சொல் எப்படியோ வந்து ஒட்டிக் கொண்டு விட்டது. அது நான் வாழ்ந்து மறைந்த பிறகும் வரலாற்றில் நின்று பேசும். ஒரு குறுநில மன்னனான கிழவன் சேதுபதி உதவி செய்தான். அதனால் மதுரைக்கு உயிர் வந்தது என்று அவனைத்தான் வாழ்த்தும்— பாராட்டும்."

— சொக்கநாதரின் கவலையில் எதிர்கால விசாரம். மங்கம்மாள் அதைக் கேட்டுச் சிரித்தாள். சொக்கநாதருக்கு வியப்பாகிப் போனது.

"ஏன் சிரிக்கிறாய் மங்கா...?"

"சிரிக்காமல்..."

"நீயும் என்னை நோகடிக்கிறாயே என் கவலை நியாயமானதுதானே? செப்பு..."

"அது சரி.. குதிரை போனபின் லாயத்தைப் பூட்டிய கதையாய் இருக்கிறது உங்கள் பேச்சும் வருத்தமும். இந்தச் சிந்தனை முதலிலேயே இருந்திருந்தால் இவ்வளவு குழப்பங்களுக்கு இடமே இருந்திருக்காதே."

"ஆம்.. புத்தி பிசகிவிட்டது."

"சரி.. அதையே நினைப்பதால் பலனில்லை. அந்த மீனாட்சி கருணையால் திரும்பவும் ஒரு புதிய வாழ்க்கை கிடைத்துள்ளது. கடந்த கால அனுபவங்களைப் பாடமாக எடுத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பொழுதும் இந்த மதுரையும் திருச்சிராப்பள்ளியும் சீர்பெற வழி பாருங்கள்."

"வேறு வழி.. அப்படிச் செய்தால்தான் வரலாறு துளியாவது வாழ்த்தும்."

"வரலாற்றைப் பற்றிய கவலையை விடுங்கள். கிழவனின் புதிய நட்பை எச்சரிக்கையோடு பிடித்துக் கொள்ளுங்கள். புது வீரத்தோடு அவனுடன் பேசுங்கள். அவன் கர்வத்தோடுதான் உதவி செய்திருக்கிறான். 'நீ என்ன பெரியவன். நான்தான் உன்னைவிடப் பெரியவன்' என்று காட்டத்தான் உதவி செய்திருக்கிறான். மற்றபடி ஆபத்துக்கு உதவும் நண்பனைப் போல உதவி செய்தான் என்பதற்கெல்லாம் அதில் துளியும் இடமில்லை."

"என்ன சொல்கிறாய் மங்கா நீ?"

"முழித்துக் கொள்ளுங்கள் என்கிறேன். அவசரப்பட்டு கிழவனிடம் இந்த உதவிக்குப் பதிலுக்கு உனக்கு என்ன வேண்டும் என்ற கேட்டுவிடாதீர்கள். அவன் புத்திசாலித்தனமாக இந்த மதுரையையே கேட்டு வாங்கிக் கொள்ளத் தெரிந்தவன்!"

"ஓ.. நீ அப்படி வருகிறாயா?"

"ஆமாம்.. நான் இப்பொழுது கிழவனிடம் பேசப் போகிறேன். அப்போது கிழவனின் உதவிக்கு ஒரு விலை பேசிக் கடனைத் தீர்த்துவிடுவதுதான் நல்லது என்று நினைக்கிறேன்."

மங்கம்மாள் சொக்கநாதரே வியக்கும் வண்ணம் தீட்சண்யம் காட்டினாள்.

"எப்படி.. எப்படி மங்கா கிழவனுக்குக் கணக்குத் தீர்க்கப் போகிறாய்?"

"அதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்" என்று அவள் கூறும் போது அவள் மைத்துனன் முத்துலிங்க நாயக்கன் அங்கு தயங்கித் தயங்கிப் பிரவேசித்தான்.

"ஓதினா.."— நயந்த குரலில் அழைத்தான்.

"என்ன விஷயம்?"

"உங்கள் ஆலோசனைகளில் எனக்கும் இடம் இருக்கிறது தானே?"— முத்துலிங்கம் தயங்கித் தயங்கிக் கேட்டான்.

"என்ன முத்துலிங்கம்.. அந்தக் குதிரைக்காரனுடன் சேர்ந்து போட்ட ஆட்டம் உன்னைக் குத்துகிறதா..?"

அவன் மௌனம் சாதித்தான்.

"ஒரு விஷயத்தை நன்றாக நினைவில் வைத்துக்கொள். எத்தனைதான் புத்தி பிசகித் தவறுகள் செய்தாலும் அரச வம்சாவழியினர் அரச வம்சாவழியினர்தான். பன்றியோடு சேர்வதால் பசுவிற்குச் சகவாச தோஷம் வேண்டுமானால் ஏற்படலாம். ஆனால் அது எந்த நிலையிலும் உருமாறிப் பன்றியாகிவிடாது. இதை நீ புரிந்து கொள்ள வேண்டும். அரச வம்சாவழியினர்க்கழகே திடமான கலக்கமில்லாத நெஞ்சுதான். நடந்து முடிந்ததையே நினைத்து உடைந்து போவதல்ல. முதல் காரியமாக நெஞ்சை நிமிர்த்து.. போ.. வைகைக் கரையில் வெங்கடகிருஷ்ணப்பர் ஈமக்கிரியைகளைப் புரிய உள்ளார். போய் அதில் பங்குகொள். யாருக்கெல்லாம் என்னென்ன குறை என்று கேள். அதைச் சரி செய்து தருவதாகக் கூறு. அதற்கான உத்தரவுகளை உன் அண்ணாவின் துணையோடு போடு. இனி மதுரையில் நாயக்கர் ஆட்சி மாசுமறுவில்லாத

ஆட்சி என்று எல்லோரும் நினைக்கும்படிச் செய். நடந்ததில் பாடம் கற்றுக் கொள். அவ்வளவுதான். குற்றவாளிபோலக் குறுகிப் போகாதே. போ–"

— மங்கம்மாள் முத்துலிங்கத்தைப் புடம் போட்டாள். சொக்கநாதர் வியந்து பார்த்துக் கொண்டிருந்தார். 'அருமைச் சகதர்மிணியே உன்னிடம் இப்படி ஒரு தீட்சண்யமா' என்பது போலிருந்தது அந்தப் பார்வை. கச்சிதமாக மணியனும் வந்து சேர்ந்தான்.

"தேவியாரே–"

"சொல்!"

"கிழவர் விழித்துக் கொண்டுதானிருக்கிறார். உடன் கோவிந்தப்பையாவும் இருக்கிறார். உங்களின் எண்ணத்தைச் சொன்னேன். வரச் சொல்லியுள்ளார்."

— அடுத்த நொடியே மங்கம்மாள் புறப்பட்டுவிட்டாள். ஞாபகமாக உக்ர சட்டியம் போடச் சொன்னாள். முதல் சாமத்திலேயே உறங்கத் துவங்கிவிடும் அரண்மனை அன்று அதிசயமாகப் பகல் பொழுதுபோல் நடவடிக்கைகள் கொள்ளத் தொடங்கியது.

"பாண்டிமாதேவி– புவனப்ரதாயினி– நாயக்க சாம்ராஜ்ய நலம் திகழ் நாயகி– ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சொக்கநாதர் பத்னி– மகாராணி ஸ்ரீதேவி, மீனாட்சி மாதா சேவகி பராக்... பராக்..."– என்று சட்டியக் குரல்கள் ஒலிக்க மங்கம்மாள் கிழவனின் ஓய்வறை நோக்கி நடைபோடலானாள்.

இடைவழியில் குறுக்கிட்டது தாதியத் தேவனின் ஓய்வறை. உள்ளே கள்ளருந்திய போதையிலும் கிழவனுக்காக உபசாரங்களை எண்ணிக் குமைச்சலோடு இருந்த தாதியன் தன் சகா மன்னாருடன் சாளரச் சீலை விலக்கி வெளியே பார்த்தான்.

மங்கம்மாள் தீச்சுடர் பந்தங்கள் நடுவில் சர்வாலங்கார பூஷிதையாக நடந்து கொண்டிருந்தாள்.



மன்னார் எடுத்துக் கொடுத்தான்.

"கிழவனைச் சந்திக்கத்தான் இத்தனை முஸ்தீபும். ஒரு சாதாரணச் சந்திப்புக்குக் கூட எத்தனை தர்பார் பார்த்தீர்களா? ராஜாங்க சமாச்சாரங்களே எப்போதும் இப்படித்தான்–"

— அவன் சொன்னது தாதியன் மனத்தில் வேறுமாதிரி சலனம் மூட்டத் தொடங்கியது.

# 23

மதுவின் மிதமான போதையுடன் மனத்தில் வழக்கம் போலத் தன்னை ஆட்டிப் படைக்கும் ஆற்றாமையுடன் தாதியத் தேவன், மங்கம்மாள் கிழவனைச் சந்திக்கச் செல்வதைப் பார்த்துவிட்டுத் திரும்பவும் அந்த அறைப் பஞ்சணையில் வந்து விழுந்தான். அவனோடு ஒட்டி வந்து நின்று கொண்டான மன்னார்.

இப்படி ஒட்டிக் கொள்பவர்களுக்கென்றே ஒரு குணம் உண்டு. அதுதான் எதையும் விசிறி விடுவது. மன்னாரும் விதி விலக்கில்லை. நன்றாகவே விசிறிவிட ஆரம்பித்தான்.

"என்ன யோசனை தேவரே? சேதுநாட்டு மரபுப்படி அரசாளும் உரிமையும் தகுதியும் உங்களுக்கிருக்க குறுக்கே புகுந்த கிழவனுக்கு நாயக்கரும் அவர் பத்தினியும் தரும் மதிப்பும் மரியாதையும் உங்கள் சுயமரியாதையையும் வீரத்தையும் கீறிக் கொண்டிருக்கிறது. இதைச் சகிக்க முடியவில்லை உங்களால்... சரிதானே?"

கச்சிதமாகக் கேட்ட மன்னாரைத் தாதியத் தேவன் சிவந்து விட்ட விழிகளுடன் ஏறிட்டுப் பார்த்தான்.

"எரியும் நெருப்பில் எண்ணெயை விடாதே மன்னார்– அந்த மதுச்சாடியை எடு."

— தாதியனின் உதடுகள் மன்னாரைக் கட்டுப்படுத்தப் பார்த்தாலும் மன்னார் அதற்குக் கட்டுப்பட மறுப்பவன் போல நடந்து கொண்டான்.

மதுச்சாடியை எடுத்து மதுவைத் தாதியனின் கண்ணாடிக் கிண்ணத்தில் விட்டபடியே பேச்சை வளர்த்தினான்.

"இப்படி நீங்கள் என்னைக் கட்டுப்படுத்துவது சரியில்லை தேவரே– உங்கள் கைகளைக் கொண்டே உங்கள் கண்களைக் குத்துவதுபோல மிகவும் திட்டமிட்டு நடந்து கொள்கிறான் அந்தக் கிழவன். என்னென்னவோ நினைத்தீர்கள். முதலில் இந்த மதுரைக்குக் கிழவன் உதவி எதுவும் செய்துவிடக் கூடாது என்றீர்கள். முடிந்ததா? அடுத்து, யுத்தத்தில் அவனைத் தீர்த்துக் கட்ட முயன்றீர்கள். அதாவது முடிந்ததா? அவனோடு சேர்ந்து நீங்களும் போராடி வெற்றியைப் பெற்றுவிட்டீர்கள். நீங்கள் மட்டுமா வெற்றிக்குக் காரணம்? சின்னகாத்ரி ஒரு பெரிய காரணம். சொல்லப் போனால் நடந்த யுத்தத்தில் கன்னிவாடி வீரர்களில் மட்டும் நாற்பது பேருக்கு மேல் வீர சொர்க்கம் போயிருக்கிறார்களாம். நம் தரப்பில் மிக மிகக் குறைவு. நாளை அவை கூடும்போது மாறி மாறிப் புகழப் போகிறார்கள் கிழவனை– அது எப்படியெல்லாம் கிழவனை இறுமாப்பில் கொண்டு விடும் என்று நானும் யோசித்துப் பார்க்கிறேன். இதுதான் சாக்கு என்று இந்த மதுரையோடு மிக உறுதியாக ஒரு உடன்பாட்டுக்கு வந்து காலகாலத்துக்கும் மதுரை தனக்குக் கட்டுப்பட்ட ஒரு நாடாகவே இருக்க வேண்டும் என்று கிழவன் ஒப்பந்தங்கள் செய்து கொண்டு விடுவான். நீங்கள் இப்படியே மது அருந்திக் கொண்டு மயக்கத்திலேயே இருங்கள்...!"



மன்னார் நன்றாகவே கருத்தி கூட்டினான். தாதியத் தேவனுக்குப் புரை ஏறிப்போனது. அதோடு கோபமும் கொந்தளிப்பும் சேர்ந்து கொண்டது.

"மன்னார்... நீ அதிகம் பேசுகிறாய். மறைமுகமாக என்னைக் கையாலாகாதவன் என்கிறாய். ஆனால் நான் எப்பொழுதும் இப்படியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க மாட்டேன். நினைவில் கொள். இனியும் நீ ஏதாவது பேசினால் எனது வாள் சும்மா இராது. எச்சரிக்கை."

— தாதியத் தேவன் பெரிதாகக் கத்தினாலும் இறுதியில் போதை வந்து தழுவியதில் கத்திய அவன் சரீரம் சவம் போலப் பஞ்சணையில் மேல் விழுந்தது. மன்னார் அதைப் பார்த்த படியே மீதமுள்ள பழரசத்தைத் தான் பருகத் தொடங்கினான்.

கிழவனிடம் மங்கம்மாள் மிடுக்கு குறையாதபடிப் பேசிக் கொண்டிருந்தாள்.

"போராற்றல் காட்டி இந்த மதுரையைப் பிடித்த பிணியை விலக்கிவிட்டீர்கள். அதற்கு முதலில் என் நன்றி. ஆனாலும் நாங்கள் நன்றி என்ற சொல்லோடு உங்களை விட்டுவிடப் போவதில்லை."

— கிழவன் மங்கம்மாளின் மனப்போக்குப் புரிந்தது போலப் பதில் பேசாமல் அவளையே பார்த்த வண்ணமிருந்தார். அவள் தொடர்ந்தாள்.

"ஒரு பாளையாதிபதியாக இருந்தாலும் மதுரை போன்ற பேரரசுக்கு நிகரான வல்லமை உங்களிடம் இருக்கிறது. அதற்கு என் மனமார்ந்த பாராட்டுக்கள்."

— மங்கம்மாள் பாராட்டும் சாக்கில் கிழவனை ஒரு பாளையாதிபதி என்று சொல்லாமல் சொன்னாள். நல்ல வேளை அந்த நள்ளிரவுப் போதில் கிழவனுடன் சோளகையோ, அம்பலக்காரனோ, இல்லை பெரியஉடையத

தேவியோ யாரும் இல்லை. இருந்திருந்தால் மங்கம்மாளிடம் ஆவேசமாகத் திருத்தம் மேற்கொண்டிருப்பார்கள். கிழவன் எப்பொழுதும் தானாக அப்படித் திருத்தங்களைச் செய்வதில்லை. அதிலும் பேசிக் கொண்டிருப்பவள் கொஞ்சம் கர்வச் செருக்கு கொண்ட ராணி. இவளிடம் நாம் பேசக் கூடாது. இவள்தான் நம்மிடம் பேச வேண்டும் என்று நினைப்பது போல இருந்தது கிழவனின் பார்வை.

"எங்கள் அரசர் பெயரில் மட்டும் சொக்கநாதரில்லை. குணத்திலும் சொக்கவைக்கும் நாதர் அவர். அதை அந்தக் குதிரைக்காரன் தவறாகப் பயன்படுத்திக் கொண்டு விட்டான்."

"நரிக்கு நாட்டாமை கொடுத்தால் அது கிடைக்கு நான்கு ஆடு கேட்கத்தானே செய்யும்...?"

— மங்கம்மாள் சொக்கநாதரின் பலவீனத்துக்கு முட்டுக் கொடுத்தாள். கிழவனிடம் அதன் நிமித்தம் கனிசமாய் அது புரிந்த புன்னகை. மங்கம்மாளை அது என்னவோ செய்தது.

'தன்னைப் போலவே கிழவனும் செருமாப்போடு பேசுவான். பேச்சில் வீரப்பிரதாபமும் கித்தாப்பும் கொடி கட்டிப் பறக்கும். அதிலும் கேளிக்கை மிகுந்த இரவில் மது மயக்கத்தில், வெற்றிச் செருக்கில் கிழவனைப் பாராட்டுவது போலப் பாராட்டித் தான் நினைப்பது போல அவனுக்குப் பொன்னையும் பொருளையும் மூட்டை கட்டிக் கொடுத்து பாளையங்களை உருவாக்கியளித்த விஸ்வநாத நாயக்கர் காலத்தின் பழைய கட்டுத் திட்டங்களுக்கும் உட்படுத்திப் பத்திரத்தில் கீறல் வாங்கி விடலாம் என்று நினைத்தால் கிழவன் இங்கே வாய் திறக்க மறுக்கின்றானே? கேளிக்கை உணர்ச்சியே துளிக்கூட இல்லாமல் இருக்கிறானே?' மங்கம்மாளின் மனத்தில் கேள்விகள் துள்ளிக் குதித்து ஓடுகின்றன.

கிழவனிடம் தொடர்ந்து அடப்பமான மௌனம், அளக்கும் பார்வை.



"இப்படிப் பார்த்துக் கொண்டே இருந்தால் எப்படி சேதுபதி? நான் மனம் விட்டுப் பேச வந்திருக்கிறேன்."— மங்கம்மாள் தயங்கியபடிக் கிழவனைத் தூண்டினாள்.

"என்ன பேசுவது... உன்னிடம் இந்த இரவில் நான் எதைப் பேசுவேன் மங்கம்மாதேவி..."— கிழவன் எந்த அர்த்தத்தில் அப்படிச் சொன்னார் என்பதை மங்கம்மாளால் யூகிக்க முடியவில்லை. முகபாவனைகளும், இதமான குரலும் ஒருவித அர்த்தம் கற்பிக்க, மங்கம்மா தேவி என்று பெயர் சொல்லி அழைத்த விதம் வேறு அர்த்தம் கற்பிக்கக் குழம்பிப் போனாள் மங்கம்மாள். அதை உடனே முகச் சுருக்கங்களாலும் காட்டினாள். மேலும் உன்னை அதிரவிடுகிறேன் பார் என்பது போலக் கிழவன் பேச்சைத் தொடரலானார்.

"நள்ளிரவு என்றும் பாராமல் நீ இங்கு வந்திருக்கிறாய். எனக்கான உபசரிப்புகள் எல்லாம் சரியாக இருக்கின்றனவா என்று பார்ப்பதில் உனக்கு ஒரு மகிழ்ச்சி. அதை நினைத்து நானும் மகிழ்கிறேன் மங்கம்மா. பழைய பகையை நினைத்துக் கொண்டு நான் உன்னிடம் மிகவும் காட்டமாக நடந்து கொள்வேன் என்றும் நீ எண்ணியிருக்கலாம். அதை நினைத்திருந்தால் நான் கோவிந்தப்பையாவும் வெங்கடகிருஷ்ணப்பரும் என் காலில் விழுந்த போதே மறுத்திருப்பேனே...? ஆனால் அது ஒரு பேரரசனுக்கு அழகா என்ன? அதிலும் சேதுநாடு பாவம் போக்கும் பூமி. எங்கள் ராமநாதஸ்வாமி இந்த அண்டம் காப்பவர். அவரது நாட்டுக்கு அரசன் நான். ஒரு அண்டை நாட்டைக் காவல் காக்காது விடுவேனா என்ன?"

— கிழவனின் பேச்சில் மங்கம்மாளுக்கு ஏற்ற பதில். பாளையாதிபதி என்கிற அவளது குத்தலுக்கு நான் பேரரசன் என்கிற பதில் குத்து... அதோடு சேது நாட்டுக்கும் சேர்த்து ஒரு புகழாஞ்சலி...

மங்கம்மாள் கிழவனின் சாதுர்யத்தை அந்த நிலையிலும் மிக ரசித்தாள். இனி இவனோடு பேசிப் பயனில்லை என்கிற

முடிவுக்கு வந்தவளாக, "உபசாரங்களில் ஒரு குறையும் இல்லையே?" என்று கிழவன் கேட்ட விதப்படியே நடந்து கொள்ளத் தொடங்கினாள்.

"குறையா— நான் இப்பொழுது எதையும் குறையாக நினைப்பதில்லை மங்கம்மா. குற்றப்பார்வை பார்க்கும்போது சிறுபிழை கூடப் பெரியதாகத் தெரியும். அதே சமயம் பெரிய மனதுடன் நாம் பார்க்கத் தொடங்கினால் குறைகளில் கூட ஒரு நிறை தெரியும். நான் இப்போது பெரிய மனதுடன் பார்க்கத் தொடங்கிவிட்டேன்."

"சேது நாட்டுப் பாளையாதிபதிகளிலேயே நீங்கள் மிக வித்யாசமானவர்தான்..."

"உண்மைதான்... நீ பாளையாதிபதி. பாளையாதிபதி என்று விளிக்கும்போதெல்லாம் எனக்கு என்ன தோன்றுகிறது தெரியுமா?"

— கிழவன் நறுக்கிச் சிக்கெனப் பிடித்தார். மங்கம்மாள் மருண்டுபோய்ப் பார்த்தாள்.

"ஒரு பாளையாதிபதிதான் சிறு பாளையத்தையே பெரு நாடாக— அதுவும் மதுரைக்கே உதவும் நாடாக மாற்றியவன். ஆகவே பழையதை மறந்து விடாதீர்கள் என்று எனக்கு ஞாபக மூட்டத்தான் அப்படிச் சொல்வதாகத் தோன்றுகிறது. அப்படித் தானே—?"

— கண் சிமிட்டலுடன் கிழவன் கேட்ட விதமும் மங்கம்மாள் திகைத்த விதமும் பார்க்க வேடிக்கையாக இருந்தது.

"நல்லது சேதுபதி— நான் புறப்படுகிறேன்..."— மங்கம்மா அதற்குமேல் அங்கு அமர்ந்து பேச்சைத் தொடர விரும்ப வில்லை. மீறித் தொடர்ந்தால் அது பேச்சாக இருக்காது. தனக்கான ஏச்சாக சாதுர்யமாக அது மாறும் என்று உணர்ந்து கொண்டவள் வெளியேறத் தொடங்கினாள்.

வரும்போது காட்டிய ஆரவாரங்கள் இப்பொழுது சுத்தமாக இல்லை.



அரண்மனையும் விடியலை எதிர் நோக்கி உறங்க ஆரம்பித்தது.

விடிந்துவிட்டது.

அரண்மனையின் எழுபத்து இரண்டு அலங்குகளிலும் துந்துபி முழங்கிட மத்தளச் சப்தமும் சேர்ந்து திமுதிமுவென முழங்கிற்று. மகிழ்ச்சியான திருவிழாக்கால நாட்களை நாயக்க அரசர்கள் இப்படித்தான் விடியலிலேயே வரவேற்பார்கள்.

அதைத் தொடர்ந்து பாண்டு வாத்தியக் குழு ஒன்று அரண்மனையை விட்டுக் கிளம்பி மாட வீதிகளைச் சுற்றிவரும். அவர்களுடன் பட்டக் குதிரையும் அலங்காரத்தோடு சேர்ந்து செல்லும்.

ஆங்காங்கே வப்பாளத்தான் நின்று நிதானித்து அன்றைய நிகழ்வுகளை விஸ்தாரமாக ஊராருக்கு எடுத்துச் சொல்லுவான்.

அன்றும் அதுபோல வப்பாளத்தான் அன்றைய நிகழ்வு களை எடுத்துச் சொல்லத் தொடங்கினான். முன்னதாக மீனாட்சி ஆலயத்தில் நவசக்தி பூஜா வழிபாட்டை மங்கம்மா தேவியார் புரிய இருப்பதையும் அதைத் தொடர்ந்து கிழவன் சேதுபதி ஆலயப் பிரவேசம் செய்ய இருப்பதையும் கூறியபின் உச்சிவேளையின்போது தர்பார் மண்டபத்தில் பரோபகாரிக் கிழவனுக்கு நாயக்கப் பேரரசர் சொக்கநாத நாயக்கரவர்கள் மதுரை மக்கள் சார்பாகப் பட்டமளித்துப் பரிசுமளிப்பார் என்றும் சொல்லிச் செல்ல, காலைப் பொழுதே களை கட்டத் தொடங்கிவிட்டது.

ஒரே நாளில் ருஸ்தும்கானின் கொட்டத்தை அடக்கிய கிழவனை நேரில் காணும் ஆவல் கொண்ட பல பாண்டி நாட்டு இளஞ்சிங்கங்கள் அப்பொழுதே மீனாட்சி ஆலயம் நோக்கிச் செல்லத் தொடங்கினர்.

கிழவன் என்கிற பெயர்க் காரணத்தைச் சிலர் ஆராய்ந்து கொண்டிருந்தனர்.

"இத்தனை வீரம் காட்டிய சேதுபதியைக் கிழவன் கிழவன் என்று விளிப்பதுதான் விநோதமாக உள்ளது. கிழவன் என்கிற பெயரை நானாக இருந்தால் ஆதவன் என்று மாற்றிவிடுவேன்" என்றார் ஒருவர்.

"பெயரில் என்ன இருக்கிறது. நம்முடைய நாயக்க அரசர் பெயரில் கூடச் சொக்க வைப்பவர் என்னும் பொருள் கொண்ட அமைப்பிருக்கிறது. அவர் யாரைச் சொக்க வைத்தார்? எல்லோரையும் அவ்வப்போது திகைக்க வைப்பதே அவர் செயலாக ஆகிவிட்டது."

"சரிதான்— சேது நாட்டாரைப் பாராட்டும் சாக்கில் நம்மை நாமே தாழ்த்திக் கொள்ள வேண்டுமா? அரசியல் தெரியாமல் பேசக் கூடாது. இப்பொழுதுதான் புனர்வாழ்வு கிடைத்திருக்கிறது. அதை எதையாவது பேசிக் கெடுத்துவிடாதே அப்பனே—" என்று மற்றொருவனும் பேச, எங்கும் மனித மன்றங்கள்தான். கூடிக் கூடிப் பேசும் களிப்பான பேச்சுக்கள் தான்.

மீனாட்சி ஆலயமும் வருகை புரியவிருக்கும் கிழவனுக்காகப் பூர்ணகும்ப சகிதம் காத்திருக்கிறது.

கிழவனும் சாக்க விடாதபடி நீறணிந்த நெற்றியும் தழைய உடுத்திய பருத்திக் கச்சமுமாக எந்தவித ஆபரணங்களும் இன்றி விருந்தினர் மாளிகையில் இருந்து நடந்தே மீனாட்சி ஆலயம் நோக்கிக் கிளம்புகிறார்.

"நடந்தா—? பல்லக்கில் போகலாமே..."

"இல்லை... ஆண்டவனைத் தரிசிக்கச் செல்கையில் ஆர்ப்பாட்டங்கள் கூடாது. பாதக் கமலங்கள் மண்ணில்பட நடந்து சென்று சாஷ்டாங்க நமஸ்காரம் புரிவதில்தான் புனிதம் இருக்கிறது."

— என்று கூறிக் கிழவனும் மதுரை வீதிகளில் தன் சகாக்களுடன் விரைந்து நடக்கத் தொடங்க அதை மாமதுரையே பார்க்கிறது.



கம்பீரநடை— நிச்சயமாகவும் சத்தியமாகவும் நிகரில்லாத நடைதான் அது. அதே வேளையில் என்ன ஒரு பணிவு— தன்னடக்கம்!

கிழவனை மதுரையே வியந்து பார்க்கிறது. மகிழ்ந்து மெச்சுகிறது. ஆலய முகப்பில் மங்கம்மாளும் இருந்து வரவேற்கிறாள்.

உள்ளே கருவறை முன்பு பலகைகள் போடப்பட்டிருக்க அதில் அமர்த்தப்படுகிறார்.

நேர் எதிரில் அன்னை மீனாட்சியின் எழில் தோற்றம். கிழவனின் மனக் கண்கள் ராமேஸ்வரத்து பர்வதவர்த்தினியை, காதலி எனும் சக்திதேவியை ஒரு வினாடி எண்ணிப் பார்க்கிறது.

'நான் வேறு அவள் வேறா சேதுபதி—?' என்று அந்த மாணிக்க மூக்குத்தி மின்னும் ராஜமாதங்கி கேட்கிறாற்போல் தோன்றுகிறது. படபடவெனக் கன்னத்தில் போட்டுக் கொள்கிறார் கிழவன்.

திரையிடப்பட்டு அபிஷேக அலங்காரம் ஆரம்பமாகிறது.

"அன்னைக்கான அபிஷேகத்தைக் காணக் கூடாதா?"— கிழவர் மங்கம்மாளிடம் கேட்கிறார்.

"இந்தச் சக்தி பீடத்தில் அதற்கு அனுமதியில்லை சேதுபதி—"

"எதனால்?"

"எனக்குத் தெரியாது. ஆகமங்கள் இங்கே அப்படித்தான் வலியுறுத்துகின்றன என நினைக்கிறேன்."

"ஆகமப்படிதான் இங்கே எல்லாமும் நடக்கிறதா?"

"அதிலென்ன சந்தேகம்? ஆறுகால பூஜை, பள்ளியறை சேவை என்று எல்லாமே ஆகமப்படிதான். மீறினால் அவளே நேரில் வந்து அதைத் திருத்திவிட்டுப் போய்விடுகிறாள்."

"ஓ- அன்னை இங்கே வெளிப்படவே செய்கின்றாளோ?"

"என்ன கேள்வி சேதுபதி இது..? அந்தப் பராசக்தியிடம் நேரில் பேசியவராயிற்றே எங்கள் திருமலை நாயக்கர்."

"நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். எனக்கும் ஒரு விக்ஞாபனம். அன்னை செவி சாய்ப்பாளா?"

— கிழவன் மங்கம்மாளிடம் புதிர் போட்டார்.

# 24

"திருந்துதரு மாதனமுஞ் சீவிதமுங் கோயிற்
செப்பவள ஞூர்களு மடப்புறமு மன்னம்
அருந்தவரு சத்திரநல் லூர்களு மறத்திற்
காக்கிய சிறப்புனது பாக்கியமி தல்லாற்
பெருந்தகைமை கொண்டபுல வோரினது வாழப்
பேணியுத வும்வயலி னூர்களை வாமோ
இருந்தவ முளராவது சேதுபதி யாதல்
எண் மயிலை யென்பருயர் வண்மையுள வேந்தே..."

*— சேதுபதி மன்னர் சேப்பேடுகள் நூலிலிருந்து—*
*(நன்றி: டாக்டர் எஸ்.எம். கமால்)*

**அ**லைகடல் தாலாட்டக் கிடக்கும் ராமேஸ்வரத்துக் கோயில் நினைப்பு கிழவனுக்குள் பீறிடுகிறது. மீனாட்சியம்மை ஆலயத்தையும் அதன் நிகரற்ற பூசனைகளையும் பார்க்கும் போது தன்னையுமறியாமல் கிழவன் எண்ணம் தனது மண்ணின் மகத்தான அந்த ஆலயம் பற்றிச் சிந்திக்கத் தொடங்கி விட்டதை மங்கம்மாளும் புரிந்து கொள்கிறாள்.



"என்ன சேதுபதி..? மீனாட்சி ஆலயத்தில் நின்றபடியே அவளைப் பார்த்த நொடி உங்கள் பர்வதவர்த்தினியின் நினைவு வந்துவிட்டதோ?"— கச்சிதமாகக் கேட்டாள்.

மங்கம்மாளின் அந்தக் கணிப்பு கிழவனை வியப்பில் ஆழ்த்தியது. அது கண்ணில் பிரள ஓர் ஆமோதிப்புப் பார்வை பார்த்தார்.

"என்ன பார்க்கிறீர்கள்?"

"கச்சிதமாகக் கணித்துக் கேட்டதை எண்ணித்தான்."

"எங்கே யார் எதை எண்ணுவார்கள் என்று எனக்குத் தெரியாதா என்ன?"

— மங்கம்மாளிடம் மெலிதான இறுமாப்பு.

"ஆனால் குதிரைக்காரர்களிடம் மட்டும் அது முடியாமல் போய் விடுகிறது. அப்படித்தானே?"

அந்த இறுமாப்புக்கு உடனடியாக ஒரு பதில் தந்த கிழவனை மங்கம்மாள் சற்று உபத்திரவப் பார்வை பார்த்தாள்.

வார்த்தைச் சகடத்தில் கிழவன் ஒரு புலவன் போலத் திகழ்வதையும் ரசித்தாள். அதன் எதிரொலியாக ரசனையோடு சிரித்தவள், "நான் அவனை வைக்க வேண்டிய இடத்தில்தான் வைத்திருந்தேன். ஆனால் என் பதிதான் சதி செய்து விட்டார்.." என்றாள் உடனே.

"என்ன செய்வது? விதி அப்படி அமைந்து சதி நான் என்றாக்கிவிட்டது. அப்படித்தானே?"

— அதற்கும் ஒரு பதிலைக் கிழவன் அழகாகச் சொல்ல அதையும் ரசித்தாள் மங்கம்மாள். இருந்தும் கிழவனை மடக்கிக் கட்டும் தீவிர எண்ணத்தோடு ஒரு நொடிப்பொழுது ஆலவாய்க்கரசியைப் பிரார்த்தித்துக் கொண்டவள், "மற்றவர்களிடம் எனக்கு மிகப் பிடித்ததே அவர்கள் உதவிகளைச் சொல்லிக் காட்டாமல் தொடர்ந்து செய்கிற அழகுதான்.." என்றாள்.

கிழவன் புரிந்துகொண்டார். மங்கம்மாள் தன்னை நல்றாகவே கட்டிப் போட்டு விட்டதை உணர்ந்தவர் கவனம் ஆலயத்தின் பக்கம் திரும்பியது.

எதிரில் பொற்றாமரைக் குளம் வீசும் காற்றில் நீரலை களோடு அவரைப் பார்த்தது.

சீரான கற்படிகள் நூல் பிடித்த மாதிரிக் காட்சி தந்து ஒரு பெரிய கல்பாத்திரத்தில் தளும்பத் தளும்ப நீர் இருப்பது போன்ற தோற்றத்தைத் தந்தது.

சுற்றிலுமான கல்தூண்களை ஒட்டி நாயக்க சாம்ராஜ்ய வீரர்கள் நின்றபடி இருந்தனர்.

அந்தத் திருக்குளத்தில் இறங்கி ஒருவாய் நீர் அருந்தும் ஆசை கிழவனுக்குள் துளிர் விட்டது. அதையும் மங்கம்மாள் கச்சிதமாகப் புரிந்து கொண்டாள்.

"என்ன சேதுபதி...? குளத்து நீரைப் பருகிப் பார்க்கும் ஆசை தோன்றுகிறதா?"

"ஆமாம் மங்கம்மாள்... எப்பேர்ப்பட்ட குளம் இது? சங்கப் பலகையைத் தன்னுள் வைத்துக் கொண்டு எத்தனைப் புலவர்களை இது உலகுக்கு அடையாளம் காட்டியுள்ளது. அடேயப்பா..."

"அது மட்டுமா? தாயைப் புணர்ந்த தருக்கனுக்கும் மோட்ச மளித்த குளம் இது என்றால் இதன் சக்தி எப்படிப்பட்டது என்று யோசித்துப் பாருங்கள்."

"உண்மைதான்... பார்வையாலேயே குஞ்சுகளை ரட்சித்து வளர்க்கும் தாய் மீனைப் போன்ற மீனாட்சி மாதாவின் சந்நிதிக்கு எதிரில் இருக்கும் குளமாயிற்றே?"

— கிழவன் வஞ்சனையின்றி மீனாட்சியைப் போற்றுவது மங்கம்மாளுக்குள் எல்லையில்லாத மகிழ்ச்சியைத் தந்தது. பதிலுக்குத் தான் ராமேஸ்வரத்துப் பர்வதவர்த்தினியைப் பாராட்டாமல் விட்டால் அதுவே ஒரு பாதகம் போலாகும்



என்று நினைத்தாளோ என்னவோ, "சேதுபதி... உங்கள் ராமேஸ்வரமும் தீர்த்தச் சிறப்பு பெற்ற ஸ்தலமாயிற்றே? ஒன்றுக்குப் பலவாக அங்குதான் எத்தனை தீர்த்தங்கள்? அதில் நீராடி வரும் மானுடர்களுக்கு உங்கள் பர்வதவர்த்தினியும் பாவ விமோசனமும் கதி மோட்சமும் வழங்குவதை நினைத் தால் எனக்கு மெய் சிலிர்ப்பே ஏற்படுகிறது."

— மங்கம்மாள் பேச்சைக் கேட்டு கிழவனின் மார்பு பெருமிதத்தோடு நிமிர்ந்தது. அவள் தனது அன்னையான பர்வதவர்த்தினியைப் பாராட்டிப் பேசியதை விடவும் அதில் 'உங்கள் பர்வதவர்த்தினி' என்று பங்கீடு செய்து பேசியதி லிருந்து அவள் சேது நாட்டை மதுரையோடு சேர்த்து நினைக்க வில்லை என்பது தெளிவாகப் புரிந்தது.

பதிலுக்கு 'உங்கள் மீனாட்சி' என்று தானும் பங்கீடு செய்து விடாதபடி, "மகிழ்ச்சி மங்கம்மா தேவி... மட்டற்ற மகிழ்ச்சி. நாம் நமது மீனாட்சியை மீண்டுமொருமுறை தரிசிக்கலாமா?" என்று கேட்டார்.

"மீனாட்சியை மட்டுமா? எங்கள் முக்குறுணி விநாய கனை, சொக்கநாதப் பெருமானை, கம்பத்தடி நந்திகேஸ் வரனை, ஊர்த்துவ காளியை, வடக்குவாயில் முனியனை என்று எல்லோரையும் தரிசிப்போம், செல்லலாமா?"

— பொற்றாமரைக் குளத்தினை ஒட்டியுள்ள அந்த ஊஞ்சல் மண்டபத்தை விட்டு நீங்கியபடியே கேட்டாள்.

"ஆமாம். எங்கே சொக்கநாதர்? அவர் தரிசிக்க வர வில்லையா?"

"அதிகாலை முதல் தரிசனமே ராஜ தரிசனம்தானே இங்கே? பொற்படி வழியாக வந்து அன்னை திருவடிகளைத் தொழுது விட்டு அரண்மனையில் இப்போது காரியஸ்தர் களோடு முக்கியமான கூட்டத்தில் இருக்கிறார் அவர்."

— மங்கம்மாள் சொன்னபடியே நடந்தாள். கட்டியக் காரர்கள் கட்டியம் போடத் தொடங்கினார்கள். குறிப்பாகக்

கிழவனை 'மதுராபுரிக் காவலர்', 'பாண்டிய சாம்ராஜ்ய ரட்சகர்', 'சொக்கர் திருவடிச் சேவகர்' என்றெல்லாம் சொல்லி ஆலயம் முழுக்க அழைத்துச் சென்றார்கள்.

முக்குறுணி விநாயகரைப் பார்க்கும்போது கிழவனுக்குத் தனது ராமலிங்க விலாசத்தின் கோட்டை வாசல் பிள்ளையாரின் நினைவு சேர்ந்தே கிளர்ந்தெழுந்தது.

"இந்த மூர்த்தி எங்கள் திருமலை நாயக்க சக்கரவர்த்தி திருக்குளம் தோண்டுகையில் வசப்பட்டவர். மயனே செதுக்கியது போன்ற மயக்கும் தோற்றம் கொண்ட இவர் உள்ளவரை மதுரையை எந்த அந்நியனும் ஏதும் செய்ய முடியாது."

மங்கம்மாள் கணபதியைப் போற்றுவது போலத் திரும்பவும் கிழவனை உரசினாள்.

"உண்மைதான்... இவரைத் தொழுத பிறகே நான் படை மேற்கொண்டேன். வெற்றியும் வாய்த்திருக்கிறது. அழகம்மை சொன்னது சரிதான்" என்று மங்கம்மாளுக்குள் கிழவனும் பூச்சி பறக்க விட்டார்.

வடக்குக் கோபுரத்தை அடைந்தபோது அங்கே சோளகை சேர்வைக்காரன் முதல் அம்பலக்காரன் வரை அனைவரும் நின்று கொண்டிருந்தனர்.

ராட்சஸமாய் பூப்பந்து ஒன்றும் கிழவன் பார்க்க ஒரு மேடையில் பட்டு வஸ்திரம் ஒன்றின் மேல் காட்சி தந்தது.

"என்ன இது?"

"இந்தக் கோபுரத்துக்குச் சாற்றுவதற்கான நிறைமாலைப் பந்து இது."

"கோபுரத்துக்கு மாலையா?"

"ஆமாம்... குமாரபிள்ளை, மதுரையில் நல்லாட்சி மலர்ந்தால் நிறைமாலை சாற்றுவதாக வேண்டிக் கொண்டாராம். அதன் எதிரொலிதான் இது."

"புது ஐதீகமாக உள்ளதே...?"



"மதுரையம்பதியில் இது போலப் பல ஐதீகங்கள் உள்ளன. அதனை ஆராய நமக்கு அறிவு போதாது. அனுசரித்தாலோ வாழ்றாளெல்லாம் வெற்றிதான்."

— குமாரபிள்ளையே முன் வந்து சொன்ன விளக்கம் கிழவனுக்கு ஆச்சரியம் தந்தது. அதன் பின் மங்கம்மாளும் கிழவனும் அந்த மலர்ப்பந்தைத் தொட்டுத் தர அது விறுவிறுவென்று அவிழ்ந்து கோபுரத்தின் இருபக்கத்திலும் மேலேறத் தொடங்கியது.

குரங்குபோல வித்தகம் காட்டி மேலேறிய வீரர்கள் இருவர் மாலையை உச்சிக் கலசம்வரை கொண்டு சென்று அழகாகக் கட்டியும் விட்டனர்.

இசைவாகச் சீழுள்ள முனீஸ்வரர் ஆலயத்து கண்டா மணியும் வெண்கல வட்டகமும் உச்சபட்ச சப்தமெழுப்பின.

கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

குமாரபிள்ளையின் கண்களில் பனிப்பு. கிழவன் அதைப் பார்த்து நல்ல உத்தமமான ஊழியன் இவன் என்று மனதில் குறித்துக் கொள்ளத் தவறவில்லை.

அங்கிருந்தே கிழவனின் நகரப் பிரவேசமும் தொடங்கி விட்டது.

யானை மேலான அம்பாரியில் ஊர்வலமாய் வர மாநகரத்து மக்கள் மலர்களை வாரி இறைக்கின்றனர்.

பகையை நினைக்காது வந்து கைகொடுத்தமைக்கு பாரிஜாதம், ஜனங்களுக்குப் பாதகமின்றி யுத்தம் நிகழ்த்தியமைக்காகப் பத்ம இதழாரம், எந்நாளும் இனி நட்பு தொடரப் பவழமல்லி என்று சொல்லிச் சொல்லி மலர் தூவுகின்றாற் போல ஒரு பிரமிப்புத் தட்டுகிறது கிழவனுக்கு.

அரண்மனை முகப்பிலோ ஏக அல்லோல கல்லோலம்...

சிவப்புக் கம்பளம் செம்பருத்தி இதழ்களைச் சுமந்தபடிக் கிழவனின் மலரடிகளை வரவேற்கிறது. பின் தொடருகின்றனர் கிழவனின் உற்ற சகாக்கள் அத்தனை பேரும்.

அதிசயமாக அதில் அந்த வேல்பட்டனைக் கருமானும் இருந்தான். சோளகை அவனை நன்றியோடு போய் அழைத்து வந்திருந்தான். "வா நண்பா— வெற்றித் திருவிழாவில் வந்து பங்கு கொள்..." என்று கட்டி இழுத்து வந்திருந்தான். அவனிடம் அத்தனை வேகம்.

அரண்மனைக்குள் அரியாசனத்தில் சொக்கநாதரும் சூரியப்புனலில் நீராடியவர்போலப் பேரழகுடன் நெஞ்சு நிமிர்த்தி அமர்ந்திருந்தார்.

எதிர்வரும் கிழவனை ஆசனம் விட்டு இறங்கி வந்து மார்புடன் தழுவி வரவேற்றார். துந்துபிகள் எக்காளிக்க, பேரவை ஆரவாரிக்க, மலரிதழ்கள் பறந்து வந்து விழ, ஆரத் தழுவிய கிழவனை அப்படியே அணைத்தபடி நடந்து தனக்குச் சரியான ஆசனம் ஒன்றில் அமர்த்திவிட்டு அவையைப் பார்த்தார். புலவர் பெருமக்களோடும் பட்டர்பிரான்களோடும் உற்ற மற்ற பாளையாதிபதிகளோடும் அவையிடம் ராஜ கம்பீரம். வெங்கடகிருஷ்ணப்பரும், கோவிந்தப்பையாவும் நெடுநாள்களுக்குப் பிறகு சொக்கநாதரை உரிய முறையில் பார்க்கின்றனர். கண்கள் பனிக்கின்றனர். குமாரபிள்ளை ஆசனம் எதிலும் அமராமல் தான் ஒரு பணிவான பணியாளன் என்கிற மாதிரி பிரதானிகளை ஒட்டி நின்று கொண்டிருந்தார். அவையும் மெல்ல அமைதிப்படுகிறது.

சொக்கநாதர் உணர்ச்சி ததும்பப் பேசத் தொடங்குகிறார்.

"மகா பிரதிநிதிகளே— மதுரையம்பதியின் செல்வங்களே! பொன்னான ஒரு நாள் இது. உள்ளிருந்தே கொல்லும் வியாதியைப் போல என் உடனிருந்தே ஒருவன் என்னைக் கொல்லப் பார்த்தான். குதிரையிடம் உண்ணி பார்க்க வேண்டியவன் இந்த மதுரைக்கே அரசனாகத் தன்னை எண்ணிப் பார்த்தான்.



சூதும் வாதும் செயல்படத் தொடங்கும்போது தர்மரே பாரதத்தில் சகலத்தையும் இழந்திருக்கிறார்.

நான் எம்மாத்திரம்?

ஆயினும் அந்த ஆலவாயப்பன் பெருங்கருணையாலும் அன்னை மீனாட்சி அருளாசியாலும் நமக்குக் கிழவனின் பேருதவி கிடைத்தது. அதைச் சாதித்துத் தந்த என் அருமைத் தளவாய் வெங்கடகிருஷ்ணப்பனை இவ்வேளையில் பெரிதும் போற்றுகிறேன். அவருக்கு உறுதுணையாக நின்று அனைத்திலும் ஒத்தாசித்த கோவிந்தப்பையாவையும் பெரிதும் போற்றுகிறேன்.

இவர்களை விஞ்சிவிட்டது உபகர்த்தர் குமாரபிள்ளையின் விசுவாசமும் வீரமும்—"

— சொக்கநாதர் பார்வை குமாரபிள்ளையின் மேல் அப்படியே படருகிறது. பிள்ளையின் கண்களில் அதற்கான நன்றிப் பிரகாசம்.

"இவர்களோடு சேர்ந்து கொண்டு இந்த வெற்றிக்குக் காரணமான கன்னிவாடி பாளையாதிபதி சின்னகாத்ரிக்கு இந்த நாயக்கன் எந்நாளும் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனது நன்றியைக் காட்டுமுகமாகக் கன்னிவாடி பாளையாதிபதி பன்னிரண்டு வருடங்களுக்குக் கப்பம் கட்டத் தேவையில்லை.

— சொக்கநாதரின் அறிவிப்பைத் தொடர்ந்து அரண்மனைப் பிரதிநிதிகள் உற்சாகக் கூச்சலிடுகின்றனர். சின்ன காத்ரி அதைக் கேட்டு மகிழ்ச்சியோடு கைகூப்பி நின்றார். அவையையும் வணங்கி மகிழ்ந்தார். சொக்கநாதரும் தன் உரையைத் தொடர்ந்தார்.

"அனைத்திலும் பெரிய சகாயம் கிழவன் ரகுநாத காத்த சேதுபதி புரிந்த சகாயம்தான்— கிழவன் சேதுபதி நினைத்திருந்தால் என்னை ஒரு பணையக் கைதி போலப் பிடித்து வைத்திருந்த அந்த ருஸ்தம்கானுடன் ஒரு ஒப்பந்தம் போட்டுக்

கொண்டு இந்த மதுரையை அபகரித்துக் கொண்டிருக்க முடியும். ஆனால் அப்படிச் செய்யவில்லை.

கிழவனின் அருமைத் தந்தையான சூரியத்தேவரை ஒரு தப்பான தருணத்தில் நமது வீரத்தளபதி வெங்கட கிருஷ்ணப்பனே கொல்ல நேர்ந்தது. இதனால் உருவான பகை உணர்ச்சி சேது நாடு முழுக்க நிரம்பி இருந்தது.

எனவே கிழவன் சேதுபதி பழி உணர்ச்சியோடு நடந்து கொண்டிருக்க நிறைய வாய்ப்பு இருந்தும் அதைப் புறந்தள்ளி விட்டுப் பழையதை மறந்து இந்த மதுரைக்குக் கிழவன் செய்திருக்கும் சகாயம் அற்புதமானது. அனந்தமானது. ஆகாயம் உள்ளளவும் போற்றுதலுக்குரியது.

அப்படிப்பட்ட கிழவனை என்ன சொல்லிப் பாராட்டுவ தென்றே தெரியவில்லை எனக்கு—

இந்த மாமதுரையின் நாயக்க சாம்ராஜ்யத்தை எழுபத் திரண்டு பாளையங்களாகப் பிரித்து அதற்குப் பாளையாதிபதி களையும் நியமனம் செய்தபோது சேதுநாட்டு எல்லைதான் இந்த மதுரைக்கே பெரிய சவாலாக இருந்தது.

அதன் பரந்த கடல்வெளிகள் வழியாக மிலேச்சர்கள் உள்ளே புகத் தொடங்கிவிட்ட நிலையில் அவர்களைக் கட்டுப் படுத்தி நாம் நாமாக இருக்க வழி பார்க்க வேண்டி இருந்தது. அதைக் கட்டிக் காக்க அந்தப் பகுதியில் வாழும் மறவர்களால் தான் இயலும் என்றே என் முன்னோர்கள் சேதுநாட்டை ஒரு தனிப் பெரும் பாளையமாக ஆக்கி அவர்கள் வசம் ஒப்புவித் தார்கள். காலப்போக்கில் அந்தப் பாளையம் ஒரு பெரு நாடாகவே உருவாகிவிட்டது.

நமக்கும் அதில் மகிழ்வே... ஆனால் இடைக்காலம் அரசியலில் சில கசப்புகளைப் பலவாறாக உருவாக்கிவிட்டது. அதே காலம்தான் இப்போது நேசத்தையும் உருவாக்கியுள்ளது.

இந்த நேசம் தொடர வேண்டும். மதுரை வேறு, சேதுநாடு வேறல்ல என்கிற நிலைப்பாடு இனி வளர வேண்டும். ஒருவர்க்



கொருவர் சகாயமாய் இந்தத் தென்பிராந்தியத்தை வலுவாய்க் கட்டிக்காக்க வேண்டும்.

அதற்குப் பாதை போட்டுப் பேருதவி செய்ததால் கிழவனைப் 'பரராஜ கேசரி' என்கிற பட்டத்திற்குச் சொந்தக் காரராக்கி உங்கள் அத்துணை பேர் சார்பிலும் அதை அளித்து மகிழ்ச்சிப் பிரகாசம் கொள்கிறேன்."

— சொக்கநாதர் நாயக்கர் சொல்லி முடித்த மறுநொடி குமாரபிள்ளை உற்சாகமாக 'பரராஜ கேசரி கிழவன் சேதுபதி' என்று உரக்கக் குரல் எழுப்ப அவையே "வாழ்க வாழ்க" என்று எதிரொலித்தது.

பரிசுகளில் பெரிய பரிசு இப்படி வாழ்த்துகளைப் பரிசாகப் பெறுவதுதான்.

கிழவனின் கண்களில் அதன் எதிரொலியாக ஆனந்தக் கண்ணீரின் திரட்சி!

கி.பி. 1680இல் நிகழ்ந்த இந்த நிகழ்வை வரலாற்று ஆய்வாளர்கள் பலரும் உணர்ச்சி ததும்பக் குறிப்பிட்டுள்ளனர்.

## 25

கிழவனின் கண்களில் தேங்கிவிட்ட ஆனந்தக் கண்ணீரை யார் கவனித்தார்களோ இல்லையோ, அம்பலக்காரன் கூர்ந்து கவனித்தான். அதன் தொடர்ச்சியாகச் சிலிர்த்துப் போய் தன்னை ஒட்டி நின்று கொண்டிருந்த சேர்வைக்காரனுக்கு ஜாடை காட்டலானான்.

ஆனால் சொல்ப அந்த நொடிப் பொழுதிற்குள் கிழவன் கண்ணீரைச் சுண்டிவிட்டுக் கொண்டு மிடுக்கோடு அவையைப்

பார்த்துக் கை கூப்பலானார். சம்பங்கியும் மல்லியுமான மாலைகள் நிறைந்த கழுத்தோடு சிங்கப்பிடரி போன்ற தலைமுடிமேல் எல்லாம் மலர் இதழ்கள் விழுந்து கிடக்க அதைக் கோதிவிட்டபடியே பேச ஆரம்பித்தார். ஆரவாரித்த அவையும் பாம்புச் செவியோடு கிழவன் பேச்சைக் கேட்க வேண்டி அமைதியாயிற்று.

"மீனாட்சிப் பட்டணத்துப் பெருமக்களே– உங்களையும் உலகையும் காத்து ரட்சிக்கும் மகாதேவியாம் அந்தச் சக்தியின் காலடி பணிந்து நாயக்கர் குல சிரேஷ்டரான ஸ்ரீஸ்ரீ சொக்க நாத நாயக்கருக்கு என் வந்தனங்களையும் இந்தப் பாராட்டுக்கு நன்றியையும் கூறிக் கொண்டு நாலு வார்த்தை பேசப் பிரயாசைப்படுகிறேன்–"

கிழவனின் தொடக்கமே மிக எச்சரிக்கையாகவும் மக்களை முதல் நிலையிலும் பின் தெய்வத்தை அடுத்த நிலையிலும் மூன்றாவதாக நாயக்கரையும் வைத்துத்தான் தொடங்கியது.

இதை மங்கமமாள் நுணுக்கமாக உணர்ந்தவள்போலக் கோவிந்தப்பையாவையும், வெங்கடகிருஷ்ணப்பரையும் கண்ணாலேயே ஒரு பார்வை பார்த்தாள்.

"பார்த்தீர்களா கிழவனை. சொற்களைக்கூட அளந்து விநியோகிக்கிறான். இவன் மன அழுத்தமோ, திட்டமோ யாருக்குமே வராது–" என்று அவள் சொல்வதாக உணர்ந்தவர்கள் கிழவனின் பேச்சின் தொடர்ச்சியில் கவனமானார்கள்.

"என் மேல் இன்று அன்பைப் பொழிந்துள்ளீர்கள். நேற்று வரை உங்கள் அன்பு அடகு பிடிக்கப்பட்டிருந்தது. அதை மீட்டுத் தரும் ஒரு வாய்ப்பை அந்தச் சொக்கன் இந்தச் சொக்கநாதர் மூலம் எனக்கு வழங்கினான்.

நானும் அதைச் செய்து முடித்தேன். அதற்காக நீங்கள் காட்டும் நன்றி எனக்கு மகிழ்ச்சியையும் வியப்பையும் அளிக்கிறது. மங்கம்மா தேவியும் உபசரணையில் என்னை உள்ளம் குளிரச் செய்து விட்டார்கள். அதற்கு மேலாகச் சொக்கநாத



நாயக்கர் இன்று இங்கே என்னைப் பராஜ கேசரியாக ஆக்கி விட்டார். அதே சமயம் இந்த மதுரையின் அத்யந்த காவல்காரன் நீ என்று சொல்லாமல் சொல்லிவிட்டார். நான் இனி சேது நாட்டுக்கு மட்டும் சொந்தமானவனில்லை. இந்த மதுரைக்கும் சேர்த்தே சொந்தமானவன்.

இந்த மதுரையின் நாலாபுறத்தில் ஒரு புறம் சீரடைந்தது விட்டது. மற்ற மூன்று புறங்களின் மேல் இனி எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

நானறிந்தவரை டெல்லி அரசர் நமக்கெல்லாம் மித்திரர்தான். அவருக்கு இருக்கும் செல்வத்திற்கு ஆயிரம் தையற்காரர்களை அவர் வைத்துக் கொள்ளலாம். ஆனால் தன் இடையாடையை அவர் தானே தைத்துக் கொள்கிறாராம். வேதம் படித்த நமது அந்தணர்களிடம் அதன் வியாக்கியானங்களைக் கேட்டறிகிறாராம். என் அருமைத் தம்பி சீதக்காதி வாயிலாக இதை அறிந்தேன். அந்தத் தம்பி டெல்லிப் பட்டணத்தில் பேரரசரின் அன்பு கிடைத்தும் அதைப் புறக்கணித்து விட்டு வந்து என்னோடு ஐக்கியமாகக் கிடப்பவன். நமது பாரதத்துக் கர்ணன்தான் என் தம்பி சீதக்காதியாக மறு ஜென்மமெடுத்து வந்திருக்கிறான். அவனது கொடை எனது குடையைக் காத்து ரட்சித்து வருவதை மறுப்பதற்கில்லை. அதே போல மங்கம்மாளும் இங்கே பெரிய கொடையாளியாக இருக்கிறாள். எனவே இந்தக் குடைக்கும் ஒரு கேடும் வந்துவிடாது. பகைவர்கள் கூட நண்பர்களாகிவிடுவார்கள். என்னைப் போல...

இனி எப்பொழுதும் கேடு வராது. வர நானும் விட மாட்டேன். நாயக்கரும் இனி விழிப்போடு இருப்பார். எதிரி தொலைவில் இருப்பதாகவே சில நேரங்களில் நினைத்து விடுகிறோம். ஆனால் கூடவே இருந்து குழி பறிப்பவர்களும் இருக்கத்தான் செய்வார்கள்–"

கிழவன் நீண்ட தன் பேச்சில் ஒரு சிறு இடைவெளி விட்டுத் தாதியனைப் பார்த்தார். தாதியன் முகம் சிவந்தும் மருண்டும் உடனே தாழ்ந்தும் போனது. கிழவனின் உரையும் தொடர்ந்தது.

"அப்படிப்பட்டவர்களை அடையாளம் கண்டு கொண்டு வைக்க வேண்டிய இடத்தில் வைத்துவிட்டால் எல்லாம் சரியாகிவிடும். இனி நமது நாயக்கர் அவர்கள் அதில் சரியாக இருப்பார். அவருக்குத் துணையாக அவரது இளவல் முத்து லிங்கமும் திகழ்வார்.

இவர்களை எல்லாம் ஓரம் கட்டச் செய்து விடுவாள் மங்கம்மா தேவி.

விசுவாசமிக்க வீரப்படை ஒன்றும் கோவிந்தப்பையா, வெங்கடகிருஷ்ணப்பா மற்றும் குமாரபிள்ளை ரூபத்தில் இங்கே இருக்கிறது. இவர்களில் குமாரபிள்ளையை என்னால் எக்காலத்திலும் மறக்க முடியாது. பிள்ளை நல்ல வீரத்தின் லட்சணம். பிள்ளை விவேகத்திற்கும் நல்ல இலக்கணம்..."

— கிழவன் குமாரபிள்ளையைத் திட்டமிட்டுப் புகழ்கிறாற் போல் தோன்றியது. அதன் எதிரொலிகள் உடனேயே கோவிந்தப்பையா முகத்திலும் வெங்கடகிருஷ்ணப்பர் முகத்திலும் நன்கு தெரிந்தன.

சொக்கநாத நாயக்கரும் க்ஷணத்தில் அதை இனம்கண்டு கொண்டார்.

கிழவன் மனதாரப் பாராட்டுகிறாரா, இல்லை இப்படிப் பாராட்டுவது போலக் குமாரபிள்ளையைத் தன்வசப்படுத்திக் கொள்ளப் பார்க்கிறாரா என்கிற கேள்விகளெல்லாம் நல்ல பூ நாகக் குஞ்சுகள் மலரிதழிற்குள் நெளிகின்றாற்போல நெளிந்து நாயக்கரின் நெற்றியிலும் வரிப் பந்தலிட்டன.

கிழவனின் உணர்ச்சிப் பெருக்குத் தொடர்ந்து குமார பிள்ளைக்கு ஒரு பெரிய புகழ்மாலையைச் சூட்டத் தொடங்கியது.



"உள்ளபடியே எனக்கு வழங்கப்பட்ட இந்தப் பட்டத்திற்கு மிகப் பொருத்தமானவர் குமாரபிள்ளைதான். ஒவ்வொரு இக்கட்டான தருணங்களிலும் பிள்ளை காட்டிய புத்திசாதுர்யமும் விஸ்வாசமும் என்னை வியக்க வைக்கின்றன— நான் மட்டும் இன்று நமது நாயக்கரின் இருப்பிடத்தில் இருந்தால் பிள்ளையை முதல் காரியமாக இந்த மதுரையம்பதிக்கே அனைத்துப் பிரிவுக்கும் சேர்த்துத் தலைமைத் தளபதி ஆக்கி விடுவேன். இப்படிச் சொல்வதற்காக என்னைக் கோவிந்தப் பையாவும் வெங்கடகிருஷ்ணப்பரும் கோபிக்கலாம். பாதக மில்லை. அவர்கள் கூட ஒரு கட்டத்தில் உணர்ச்சிவசப்பட்டு சிறையாளியாக ஆகிவிட்டார்கள். அப்போது குமாரபிள்ளை தான் நிதானமும் புத்திசாலித்தனமும் கொண்டு செயல் பட்டார். அவரால்தான் எனது சகாக்கள் அரண்மனை புக முடிந்தது. வெற்றியும் கிட்டியது. உண்மையில் குமாரபிள்ளை அசாத்ய சாதகர். சொக்கநாதரால வழங்க முடியாத கௌரவத்தை நான் அவருக்கு வழங்கப் பிரியப்படுகிறேன்.

அவர் எப்பொழுது ராமநாதபுரம் வந்தாலும் அவருக்கு ராஜோபசாரமும் திவ்ய நமஸ்காரங்களும் அவருக்கு அங்கே உண்டு. அவர் பெயரைச் சொல்லிக் கொண்டு வருபவர்களைக் கூட யானை மேலமர்த்தி வரவேற்போம். இதை எழுதாத பட்டயமாக இங்கே அறிவிக்கிறேன்."

— கிழவனின் அந்தப் பாராட்டும் அறிவிப்பும் பேரொலியை அவையில் கிளப்பியது. குமாரபிள்ளையின் கண்கள் பனித்து விட்டன. மறுமொழி பேசாமல் விறுவிறு வென்று நடந்த பிள்ளை, கிழவனின் காலில் விழுந்து தனது நன்றியைக் காட்ட ஆரம்பித்தார்.

கோவிந்தப்பையாவும், வெங்கடகிருஷ்ணப்பரும் ஒரு வினாடி விக்கித்து விட்டனர். மங்கம்மாள் தாமதிக்காமல் தன் இருக்கையை விட்டு எழுந்து சொக்கநாத நாயக்கர் காதுகளில் கிசுகிசுக்கத் தொடங்கினாள்.

"கிழவன் புத்திசாலித்தனத்தைக் காட்டத் தொடங்கி விட்டான்."

"என்ன சொல்கிறாய் மங்கம்மா?"

"கோவிந்தப்பையாவும், வெங்கடகிருஷ்ணப்பரும் நமது இனத்தவர்கள். அந்தண லட்சணம் உடையவர்கள். ஆனால் குமாரபிள்ளை இந்த மண்ணின் மைந்தன். நல்ல விசுவாசி தான். இருந்தாலும் இப்படிப் பாராட்டிப் பேசிக் காலகாலத் திற்கும் பிள்ளையைத் தன் நட்புப் பைக்குள் வைத்துக் கொள்ளத்தான் இத்தனை பாராட்டு-"

"அதிலென்ன தப்பு-?"

"சரிதான்- நாளை நாம் இங்கே எடுக்கும் முடிவுகள் எல்லாம் பிள்ளை மூலம் உடனுக்குடன் சேது நாட்டுக்கும் போய்விடும். புரிந்து கொள்ளுங்கள். பாருங்கள். பிள்ளையும் மயங்கிக் காலில் விழுந்து விட்டதை-"

"சரி- என்ன செய்யச் சொல்கிறாய்?"

"நீங்களே நல்ல முடிவு எடுங்கள். கிழவன் சொல்லி விட்டதற்காகத் தலைமைத் தளவாய் ஆக எல்லாம் பொறுப்பைக் கொடுத்துவிட முடியாது. அது கோவிந்தப் பையாவையும், வெங்கடகிருஷ்ணப்பரையும் காயப்படுத்தும்.

"சரி சரி. நீ போய் உட்கார். நான் இந்த இக்கட்டை எப்படிச் சமாளிக்கிறேன் என்று பார்."

— சொக்கநாத நாயக்கர் மங்கம்மாளை விலக்கி விட்டுச் சபையை ஏறிட்டபோது சபையே அவரைப் பார்த்தபடி இருந்தது. குறிப்பாகக் கிழவனின் பார்வையிலும் வண்டு போலத் துளையிடும் கூர்மை. உதட்டிலும் இருபொருள் தொனித்த கேள்வியின் புறப்பாடு.

"என்ன நாயக்கரே- மங்கம்மாள் தேவியார் என் பேச்சின் எதிரொலிகளைக் காட்டினாரோ?"

நாயக்கரும் அற்புதமாகச் சமாளிக்கத் தொடங்கினார்.



"ஆமாம் சேதுபதி. உங்கள் அற்புதமான உரையின் எதிரொலி அவள் வரையிலும் கூட அற்புதமாக வெளிப் பட்டது."

"எப்படி?"

"எங்கள் பிள்ளையை நீங்கள் உங்கள் பிள்ளை போலக் கருதிப் பேசியது அற்புதம்."

"அவர் நம் பிள்ளை நாயக்கரே-"

"ஆம் நம் பிள்ளைதான். அந்த நல்ல பிள்ளை இனி உங்கள் பிள்ளையும்கூட-"

"என்ன கூறுகிறீர்கள்?"

"உங்கள் பேருதவிக்கு என்ன பரிசளிக்கலாம், எப்படிப் பட்ட பரிசளிக்கலாம் என்கிற குழப்பத்தில் இருந்த எனக்கு உங்கள் பேச்சே சரியான வழித் தடத்தைக் காட்டிவிட்டது."

"எப்படி...?"

"பரராஜகேசரி என்கிற பட்டத்தை அளித்த நான் எங்கள் நாட்டுக் கேசரியான பிள்ளையையும் உங்களுக்கே பரிசாக வழங்கத் தீர்மானித்துவிட்டேன்."

"எப்படி- எப்படி?"— கிழவனிடம் சற்றும் எதிர்பாராத திணறல்—திகைப்பு. மங்கம்மாள் முகத்திலோ பதிலுக்குச் சரியாகக் காய் நகர்த்திவிட்ட இறுமாப்பு.

கோவிந்தப்பையாவும், வெங்கடகிருஷ்ணப்பரும் ஓர் அழுத்தத்திற்கு உள்ளாகிப் பின் அதிலிருந்து விடுபட்ட புளகாங்கிதத்தை முகத்தில் காட்டுகின்றனர்.

சொக்கநாத நாயக்கர் உற்சாகமாகக் குமாரபிள்ளை பக்கம் திரும்பி, "குமார பிள்ளை..." என்றார் இதமான குரலில்.

"அரசே..."

"உன் மேல் கிழவன் சேதுபதி காட்டிய அன்பைப் பார்த்தாயா?"

"பார்ப்பதா- திணறிவிட்டேன் அரசே திணறிவிட்டேன்."

"பதிலுக்கு நீ அவருக்கு நன்றிகாட்ட வேண்டாமா?"

"நிச்சயமாக."

"அதன் பொருட்டு நான் உன்னை அவருக்குப் பரிசாக அளிக்க விரும்புகிறேன். உனக்கு ஆட்சேபணையில்லையே?"

"நான் இந்த நாயக்க மண்ணின் நேயம் மிக்க விசுவாசி அரசே. இங்கே உங்கள் சித்தமே என் பாக்கியம்."

"நல்லது பிள்ளை. உன்னைப் போன்ற ஒரு விசுவாசியை இழப்பதில் எனக்கும் வருத்தம்தான். ஆனால் எப்பொழுதும் உயர்ந்த பொருளைத் தானமாகத் தருபவன்தான் உயர்ந்த சிரேஷ்டன் என்கிறது நமது வேதம். அதனால் உன்னை உன் அனுமதியோடு என் மண்ணையும், உயிரையும் காத்து ரட்சித்த சேதுபதிக்குப் பரிசாக அளிக்கிறேன். இந்த அவையும் அறியட்டும். நமது பிரதானிகளுக்கு இதில் ஆட்சேபம் ஏது மில்லையே?"

"இல்லை, இல்லை" என்று நாலாபுறத்தில் இருந்தும் எதிரொலிகள்.

"இந்த உயிர்ப் பரிசுக்கு வாழ்த்துக் கூறுங்கள்."

– இதுதான் சாக்கு என்று கோவிந்தப்பையாவும் எடுத்துக் கொடுத்தார். அடுத்த க்ஷணம் குமாரபிள்ளைக்கான வாழ்த்துக் குரல்கள் எதிரொலிக்க மலர்க்கொன்றைகள் வீசப்பட கிழவன் இருகரம் நீட்டி குமாரபிள்ளையை எதிர் நோக்கினார். பிள்ளை யும் நடந்து சென்று அந்தப் பிடிக்குள் அடங்கத் தொடங்கினார்.

அணைந்த நிலையில் கிழவனின் பார்வை மங்கம்மாளை ஊடுருவியது. மங்கம்மாள் முகத்தில் ராஜலட்சணமுள்ள சன்னமான ஒருவித ஏளனப் புன்னகையின் படர்ச்சி.

## 26

மங்கம்மாளின் புன்னகைக்குப் பதில் புன்னகையை அதே தினுசில் கிழவன் சேதுபதியும் உதிர்க்க, அவைகொள்ளாத ஆரவாரம் நெடுநேரம் வரை நீடித்தது.

ஒருவாறு அது அடங்கிய நிலையில் கிழவனின் அன்புப் பிடியில் இருந்து விடுபடும் குமாரபிள்ளை சின்னக் குழந்தை போலத் தேம்பித் தேம்பி அழவே தொடங்கிவிட்டார்.

அந்தக் காட்சி பிரதானிகளில் பலரையும் தொற்றிக் கொள்ள அவர்களிடமும் நெகிழ்வும் கண்ணீரும் இமைக் கதவருகே ஒரு கன்னிப் பெண் தலைகாட்டுவது போல எட்டிப் பார்க்கத் தொடங்குகிறது. சொக்கநாத நாயக்கர் கிழவனுக்கு என்ன பரிசு தரப்போகிறாரோ- அது எப்படிப்பட்ட பரிசோ என்றெல்லாம் கேள்வியில் இருந்த பலருக்கு இப்படி ஒரு உயிர்ப் பரிசையே தருவார் என்று யாருமே எதிர்பார்க்க வில்லை.

அதன் எதிரொலி, பேச முன்வரும் கிழவனிடம் வெளிப் படத் தொடங்குகிறது.

"ப்ரதானிகளே... மகாஜனங்களே! நான் இப்போது மிகவும் பூரித்த நிலையில் இருக்கிறேன். நாயக்கர் ஒரு மாவீரனை எனக்குப் பரிசாகத் தருவார் என்று துளியும் எதிர் பார்க்கவில்லை. சேது சிம்மாசனத்தில் அமர்ந்த நாள் முதல் நானும் எவ்வளவோ பரிசுகளைப் பெற்றிருக்கிறேன். ஆனால் இப்படி ஒரு வீரனைப் பரிசாகப் பெற்றதில்லை. அதற்காக நாயக்க மன்னருக்கு நான் என் நன்றிகளையும் எனது பரம சந்தோஷத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிறந்த வீட்டிலிருந்து திருமணமாகிக் கணவனின் வீடு நோக்கிச் செல்லும் ஒரு பெண்ணைப் போல நாயக்கர், குமார

பிள்ளையை என் வசம் ஒப்படைத்துள்ளார். இந்த நொடிப் பொழுதிலிருந்து பிள்ளை என் தளவாய்களில் ஒருவர். அந்த சமயம் பிறந்த வீட்டுக்கும் அவர் சொந்தமானவரே!

ஒரு மணப்பெண்ணால் இரண்டு வீடுகள் புதிய உறவுகளைப் பெறுகிற மாதிரி குமாரபிள்ளையால் நாயக்கர் சேது நாட்டு உறவை அழுத்தமாகச் சம்பாதித்துவிட்டார்.

குமாரபிள்ளை அதன் காரணமாகத் தந்தையைப் பிரியும் பெண்ணைப் போல அழத் தேவையில்லை. அவர் எங்களுக்குச் சொந்தமாகிவிட்டதாலேயே இந்த மதுரையோடு அவருக்குத் தொடர்பு அறுந்துவிடாது. அவர் விரும்பும்போதெல்லாம் அவர் இங்கு வந்து இளைப்பாறலாம். இவரை உத்தேசித்து நாயக்கரும் அவரது அருமைப் பத்தினி மங்கம்மாளும்கூட சேதுநாட்டுக்கு வந்து இளைப்பாறலாம்.

இந்தப் பரிமாற்றத்தால் நாயக்கர் ஒருவிதத்தில் எனக்குச் சம்பந்தி போலாகிவிட்டார். அவரது மக்களாகிய நீங்களும் சம்பந்தி வீட்டுக்காரர்களாகிவிட்டீர்கள்.

சம்பந்தி வீட்டுக்காரர்களை மறவர் குடியில் பிறந்தவர்கள் எப்படிச் சீராட்டுவார்கள் என்று நான் கூறத் தேவையில்லை. மொத்தத்தில் இந்தச் சம்பவத்தால் புதிய உறவு உருவாகியுள்ளது. அதை எண்ணிப் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்."

– கிழவன் சேதுபதியின் அந்த எழுச்சி உரைக்கு மீண்டும் பலத்த ஆரவாரம் ஆரம்பமானது. கூடவே ஜெயகோஷங்கள் அந்த அரண்மனை விதானமே அதிருமளவு எழும்பின.

ஆனால் அங்கே தாதியத் தேவன் மனத்தில் மட்டும் கனல் மூண்டிருந்தது. அனல் பெருகியிருந்தது.

அந்திவேளை...

நான்மாடக் கூடலை வளைய வரும் வைகைக் காற்றில் அந்த மண்ணின் பிரத்யேக மலரான மல்லிகையின் வாசம் இணைந்து கிடந்தது.



அரண்மனை மாடத்திலமர்ந்து கொண்டு அதைச் சுகிக்காதபடி எங்கோ பார்த்தபடி இருந்தார் சொக்கநாதர். கூடவே நாசியைச் சீண்டும் ஜவ்வாது வாசமும் சேர்ந்து கொள்ள அதற்குக் காரணமான ஆலவாய் அரசியின் மங்கலக் குங்குமம் நெற்றியில் மிளிர மங்கம்மாள் வந்து கொண்டிருந்தாள்.

தாதியர் கூட்டம் ஓர் அளவோடு நின்றுவிட சொக்கநாதரை நெருங்கியவள் மெய்க்காவலில் இருக்கும் நாயக்க வீரர்களைப் பார்வையாலேயே புறம் போகச் சொல்லிவிட்டு நாயக்கர் எதிரில் உள்ள மயிலாசத்தின் நுனியில் கை வளையலும் ஒட்டியாணப் பரலல்களும் ஒருங்கே சேர்ந்து சப்திக்க பவ்யமாக அமரலானாள்.

சொக்கநாதரும் அவளை ஏறிட்டார். பார்வையில் சோகப் பசை. மங்கம்மாளின் நாவில் சுந்தரத் தெலுங்கில் அது தொடர்பாய்க் கேள்வி.

"எதற்காக இத்தனை சோகம்?"

"உன் பேச்சைக் கேட்டு அவசரப்பட்டுவிட்டேன் மங்கா..."

"குமாரபிள்ளையை இழக்கிறோமே என்கிற கவலையா?"

"ஆம்! பிள்ளை நமக்குச் செய்த உதவிக்கு அவனைத் தளவாயாகவோ, ராயசமாகவோ ஆக்கிப் பார்க்காமல் கடைச் சரக்குப் போல விற்றுவிட்டேனே. மனது உறுத்திக் கொண்டேயிருக்கிறது."

"நடந்த யுத்தத்தில் எவ்வளவோ வீரர்கள் வீர சொர்க்கம் போனார்களே... அது உறுத்தவில்லையா?"

"எதற்கு எதை முடிச்சுப் போடுகிறாய் நீ...?"

"ராஜதந்திரம் என்றால் என்னவென்றே உங்களுக்குத் தெரியமாட்டேன் என்கிறது. நான் என்ன செய்வது?"

"ஆமாம். இப்படி நன்றியுள்ள வீரனைத் தூக்கிக் கொடுப்பதா ராஜதந்திரம்?"

"இல்லையா பிள்ளே..?"

"எப்படி என்று சொல்லேன்."

"குமாரபிள்ளை இப்போது யார்?"

"சேதுநாட்டுத் தளவாய்களில் ஒருவன்."

"அதேசமயம் நமது விசுவாசியும் அல்லவா?"

"அவன் எப்பொழுதும்தான் நம் விசுவாசி!"

"ஆனால் இதுவரையில் எந்தச் சேதுநாட்டுத் தளவாய் நமக்கு விசுவாசியாக இருந்திருக்கிறான்?"

— மங்கம்மாள் கேள்வி மெல்லத்தான் சொக்கநாதருக்குள் புரிவைத் தந்தது.

"ஓ– நீ அப்படி வருகிறாயா?"

"அப்படித்தான். நானாக இருந்தால் தளவாய் ஆக்கி யிருப்பேன்; பெரிய பதவிகள் தந்திருப்பேன் என்று சொன்னதை உத்தேசித்துத்தான் நான் குமாரபிள்ளையையே பரிசாகத் தந்துவிடும் முடிவிற்கு வந்தேன்.

கிழவனைத் தர்மசங்கடப்படுத்தத்தான் உடனே உங்களைக் குமாரபிள்ளையைப் பரிசாகவும் அறிவிக்கச் சொன்னேன். வேறு வழியே இல்லாதபடிக் கிழவனும் பிள்ளையைத் தனது தளவாயாக அறிவித்தான். தனது தடுமாற்றத்தைப் பூசி மெழுகத்தான் மணப்பெண், புகுந்தவீடு, பிறந்தவீடு என்றெல் லாம் பேசினான்.

எது எப்படியோ– ஒரு கல்லில் இரண்டு மாங்காய். ஒரு பக்கம் பரிசாகத் தந்ததுபோலவும் ஆயிற்று. அப்படியே சேது நாட்டு அரண்மனைக்குள் நமது வீரன் ஒருவனைத் தளவாயாக ஆக்கியது போலவும் அது அமைந்து விட்டதே.."

"ஆமாம் ஒதினா– நீங்கள் சொல்வதுதான் சரி, நான் கூடப் பிள்ளையைப் பரிசாக அறிவித்தபோது வருத்தப் பட்டேன். ஆனால் இப்போதுதான் புரிகிறது.."



— என்றபடியே முத்துலிங்க நாயக்கன் அங்கு பிரவேசிக்கத் தொடங்கினான்.

"வா முத்துலிங்கம்– நீயும் என்னைச் சரியாகப் புரிந்து கொண்டதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி."

— மங்கம்மாள் சொல்லி மகிழும்போதே காலில் விழுந்து வணங்கவும் செய்தான்.

"நிறைய மாறிவிட்டாய்..."– சிரித்தபடியே கூறினாள் மங்கம்மாள். ஆனால் சொக்கநாதர் தன் தம்பியைக் காணாதது போல வேறெங்கோ பார்த்தபடி இருந்தார். பழைய நினைவு களை அவர் அடக்கினாலும் அது பொங்கிப் பொங்கி எழும்பியதால் முத்துலிங்கத்தைக் காணவே பிடிக்கவில்லை.

முத்துலிங்கமும் புரிந்து கொண்டான்.

"ஒதினா– அண்ணனுக்கு என் மேலுள்ள கோபம் அடங்க வில்லை போல் இருக்கிறது" என்றான்.

"போகப் போகச் சரியாகிவிடும். கவலைப்படாதே" என்றாள் அவள் பதிலுக்கு.

"அண்ணா.."– முத்துலிங்கம் ஏக்கமாகக் குரல் எடுத்துச் சொக்கநாதரை அழைத்தான். பதிலுக்கு அரைப் பார்வை பார்த்தார் சொக்கநாதர்.

"பழையதைத் தயவு செய்து மறந்துவிடுங்கள். நான் அந்த ருஸ்தமுடன் சேர்ந்துகொண்டு செய்த செயல்களெல்லாம் ஒரு கெட்ட கனவு. இனி நான் கருத்தாய் இருப்பேன். கவனமாக இருப்பேன்."

"முத்துலிங்கம் நீ போ.. நான் அவரைச் சமாதானப் படுத்திக் கொள்கிறேன்."

மங்கம்மாள் அவனைக் கத்தரித்து அனுப்பி விட்டு நாயக்கர் பக்கம் திரும்பினாள்.

"என்ன இது.. என்ன இருந்தாலும் அவன்தான் அடுத்து இந்த நாட்டுக்கு வாரிசு."

— மங்கம்மாள் தனக்கு ஆட்சியில் ஆசை இல்லை, தன் மகனுக்கும் போதிய வயதில்லை என்பதையெல்லாம் உத்தேசித்தும், அவனை அடுத்து பதவிக்குத் தயார் படுத்துங்கள் என்றும் கூறுகிற மாதிரி இருந்தது அந்தப் பதில்.

"என்ன மங்கா கூறுகிறாய் நீ...?"

"பின் என்ன நீங்கள்... முத்துலிங்கம் நம் பிள்ளையைப் போல. ஏதோ வயதுக் கோளாறு; அந்தக் குதிரைக்காரனுடன் சேர்ந்து கூத்தடித்துவிட்டான். அதற்காக வருத்தமும் படுகிறான். மன்னித்து அணைத்துக் கொள்ளாமல் இப்படிக் கோபத்துடன் இருந்தால் எப்படி?"

"என்னால் முடியவில்லை மங்கா. இவன் மட்டும் ஒழுங்காக இருந்திருந்தால் அந்தக் குதிரைக்காரன் மதுரைப் பக்கமே வந்திருக்கமாட்டான். என்னையும் சந்தித்து மயக்கியிருக்க மாட்டான். நானும் மயங்கி என்னையே இழந்திருக்க மாட்டேன். கிழவன் சேதுபதியும் வந்து உதவி செய்து நம்மை மீட்கும் நிலையும் வந்திருக்காது."

"அதற்கென்ன செய்வது. அண்ணன், தம்பி இருவருக்குமே பட்டபின்புதான் புத்தி வரவேண்டும் என்றிருக்கிறது— அதற்காக நடந்ததை நினைத்தே குமைந்து கொண்டிருந்தால் அதனால் வேறு பாதகங்களும் வந்து விடலாம்."

"வேறு பாதகமா... எப்படி?"

"அண்ணன் மன்னிக்கமாட்டேனென்கிறார் என்று வருத்தப்படும் தம்பியை அந்த ருஸ்தம்கான் போல இன்னொருவன் வந்து 'நான் ஆறுதல்படுத்துகிறேன்' என்று தன்வசப்படுத்திக் கொண்டு விட்டால்...?"

"எப்படி... எப்படி...?"

"முன்பே நீங்கள் அவனை அன்பாக அணைத்துக் கொள்ளவில்லை. அதனால்தான் ருஸ்தமின் புதிய போலி அன்பு அவனுக்குப் பெரிதாகத் தோன்றியது. திரும்பவும் அதே தப்பைச் செய்யாதீர்கள்..."



— மங்கம்மாள் தான் மனைவி மட்டுமில்லை; சொக்கநாதர் வரையில் ஒரு ராஜகுருவும் கூட என்பது போலப் பேசியதில் சொக்கநாதருக்குள்ளும் ஒருவிதத் தெளிவு.

"நீ சொல்வதும் சரிதான்..." என்றார் பெருமூச்சோடு.

"இன்னொன்றையும் சொல்வேன் கேட்டுக் கொள்வீர்களா?" நயந்த குரலோடு பீடிகை போட்டாள் அந்த நாயக்க மகாராணி.

"என்ன மங்கா...?"

"கிழவனின் பங்காளிகளில் ஒருவனான தாதியத் தேவனைத் தங்களுக்குத் தெரியும்தானே?"

— அவள் கேட்கும்போதே அங்கே தாதியத் தேவனின் வருகையும் நிகழ்ந்து கொண்டிருந்தது!

## 27

முற்றிலும் எதிர்பாராத நிலையில் தாதியத்தேவன் வருகையை உத்தேசித்து அவனுக்கு இன்ப அதிர்ச்சி அளிக்கும் விதமாக மங்கம்மாள் தானே கட்டியங்களோடு பேசத் தொடங்கினாள்.

"வாருங்கள் தாதியரே வாருங்கள்.

சேதுநாட்டு சிங்கம், மகாதேவ பராக்கிரமர்,

செம்பிய குலதிலகர் எங்களைக் காணவந்தது குறித்து மகிழ்ச்சி..."

மங்கம்மாளின் விளிப்பும் மதிப்பான அணுக்கமும் தாதியனை அடுத்த க்ஷணமே புளகாங்கிதப் படுத்திவிட்டது.

எதேதோ பேச நினைத்து வந்த தாக்கம் மிகுந்த எண்ணங்கள் எல்லாம் ஓரமாக ஒதுங்கிவிட முகத்தில் சந்தோஷம் வந்து புன்னகைப் பந்தல் போட்டது.

சொக்கநாதருக்கே மங்கம்மாளின் அந்த அணுகுமுறை வியப்பைத் தந்தது.

தாதியனையும் மங்கம்மாளையும் சற்று மருட்சியோடு பார்த்தார்.

"மகிழ்ச்சி மங்கம்மா தேவி. தங்களின் மதிப்பான விளிப்புக்கும் அழைப்புக்கும் மிகவும் நன்றி."

— தாதியன் தன் மகிழ்ச்சியைச் சொற்களில் காட்ட, "அமருங்கள்" என்று அருகாமை ஆசனம் ஒன்றைக் காட்டினாள் மங்கம்மாளும்.

தாதியனும் அமர்ந்தபடி நிமிர்ந்தான்.

"ஏது இவ்வளவு தூரம்?"

"தங்களைக் கண்டு பேசத்தான் வந்தேன்."

"ஆஹா– பேசலாமே. மற்றபடி எங்கள் உபசரிப்பில் ஏதும் குறையில்லையே–?"

மங்கம்மாளின் விதரணையான கேள்வி முன் தாதியன் பதில் சொல்லாமல், குறையிருக்கிறது என்பது போலப் பார்க்கவும் சொக்கநாதரிடம் அதற்கான படபடப்பு பெருக ஆரம்பித்தது.

"என்ன தாதியரே... பதில் சொல்லுங்கள். நீங்கள் மௌனிப்பதைப் பார்த்தால் ஏதோ குறை இருக்கிற மாதிரித் தெரிகிறதே–" என்று கைகளை உதறிக் கொண்டார் சொக்கநாதர். தாதியன் மீண்டும் பதில் சொல்லாமல் இருவரையும் ஓர் ஆழப் பார்வை பார்த்தான்.

"என்ன தாதியரே? என்ன குறை? எதுவாக இருந்தாலும் சொல்லுங்கள். திருத்திக் கொள்கிறோம்."



"சொல்கிறேன்– சொல்கிறேன்."– தாதியன் வாயைத் திறக்க ஆரம்பித்தான்.

"சொல்லுங்கள்– உம் சீக்கிரம்."

"குறை ஒன்றுதான். அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்பார்கள். இங்கே எங்கள் கிழவனுக்கு நீங்கள் காட்டிய உபசரணை அது போலத்தான ஆகிவிட்டது.

பரராஜ கேசரிப் பட்டம்– பத்தாததற்குக் குமாரபிள்ளையையே பரிசாக அளித்தது என்று அளவிற்கு அதிகமாக அன்பையும் நன்றியையும் காட்டியதுதான் குறை–"

தாதியன் சொல்லி முடிக்கவும், "அப்பாடா– இவ்வளவுதானா– நான்கூடப் பயந்து விட்டேன்" என்று சொக்கநாதர் மார்பு தழையத் தொடங்கியது. மங்கம்மாளோ அவன் எங்கே வருகிறான் என்பது புரிந்தது போலப் பதில் கேள்வி கேட்கத் தொடங்கினாள்.

"நீங்கள் மட்டுமென்ன தாதியரே? உங்கள் பெரிய மனது தானே கிழவனைச் சேது நாட்டு அரியணையில் அமர வைத்திருக்கிறது. கிழவன் சேதுபதிக்காக நீங்கள் ராஜ பதவியையே விட்டுத் தரலாம். நாங்கள் பட்டம்தானா அளிக்கக்கூடாது–?"

மங்கம்மாளை அடுத்த நொடியே பரவசத்துடன் பார்த்தான் தாதியன்.

"மங்கம்மா தேவி– உங்களுக்கு என் உள் விலாசங்களும் தெரியுமோ?"

"தெரியாமல்தான் கேட்கிறேனாக்கும்?"

"என்ன சொல்கிறாய் மங்கம்மா? தாதியன் விட்டுக் கொடுத்துத்தான் கிழவன் அரசனானானா?"

"இல்லையா பின்னே? இன்று கிழவனுக்கு இத்தனை கௌரவங்கள் கிடைக்கக் காரணமே தாதியன்தானே?"

— மங்கம்மாள் தாதியனை மிகச் செயற்கையாக ஆகாயத்துக்குத் தூக்கினாள். புகழப்படும்போது பலரால் நிலை

கொள்ள முடியாது. சிலர்தான் அதன் காரண காரியங்களை ஆராய்ந்து நிதானத்துடன் நடந்து கொள்வார்கள்.

ஆனால் அந்தச் சிலரைச் சேர்ந்தவனில்லையே தாதியன்–

மங்கம்மாளை மகிழ்ச்சி பொங்கப் பார்த்தான்.

"இல்லை. இத்தனைத் தூரம் என்னைப் பற்றித் தெரிந்த நீங்கள் எப்படிக் குதிரைக்காரனிடம் மட்டும் ஏமாந்தீர்கள்?"

மங்கம்மாளை அந்தக் கேள்வி மிகவும்தான் சங்கடப் படுத்திவிட்டது. அதன் எதிரொலி நன்றாகவே தெரிந்தது.

"என் தவறு அது தாதியரே... என்னுடைய தவறு. மங்கம்மாள் எப்பொழுதும் விழிப்புள்ளவள். நான்தான் சற்று சித்தம் தடுமாறிவிட்டேன். போகட்டும். இனி நடக்கப் போவதைப் பற்றிப் பேசுவோம்."

– சொக்கநாதர் சமாளிக்க மங்கம்மாளும் அதையே பிடித்துக் கொண்டு தாதியத்தேவன் வந்த காரணத்தை அறியத் தொடங்கினாள்.

"தாதியர் இங்கே பேச வந்த காரணத்தை இன்னும் ஆரம்பிக்கவேயில்லை. என்னவென்று அறியலாமா?"

தாதியத்தேவன் மீண்டும் மௌனமானான்.

"என்ன தாதியரே? என்ன காரணம்? எதுவாக இருந்தாலும் தாங்கள் தாராளமாகப் பேசலாம்."– நெம்பியும் நெகிழ்த்தியும் விட்டாள் மங்கம்மாள்.

"ஒன்றுமில்லை மங்கம்மா தேவி. நான் பதவி ஆசை இல்லாதவன். அதனால்தான் கிழவனை முன் நிறுத்தி பின்னால் இருந்தபடி நான் அவனை இயக்கிக் கொண்டிருக்கிறேன்..."

"அதுதான் தெரிந்த விஷயமாயிற்றே."

"தெரிந்து என்ன பயன்...? கிழவனைச் சபையில் வைத்துக் கௌரவிக்கத் தெரிந்த உங்களுக்கு என்னையழைத்துக் கௌரவிக்கத் தெரியவில்லையே...?"



"ஓ... அந்த வருத்தமா? அதற்கென்ன? நாளையே அவையைக் கூட்டி உங்களையும் கௌரவித்துவிட்டால போயிற்று–"

– துளியும் தயக்கமின்றிப் பதில் வந்தது மங்கம்மாளிடம். சொக்கநாதருக்கே அந்தப் பதில் ஆச்சரியத்தைத் தந்தது.

"மங்கா... என்ன சொல்கிறாய் நீ?"

அந்த நாயக்க ராஜனின் குரலில் ஒருவித வேகம்.

"மன்னிக்க வேண்டும். தாதியன் கேட்டதில் தவறென்ன? தாதியரும்தானே நடந்த யுத்தத்தில் போராடியவர்?"

"அது சரி... இதற்காக ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவரைப் பாராட்டிக் கொண்டிருக்க முடியுமா? கிழவனைப் பாராட்டிப் பரிசளித்ததிலேயேதான் எல்லாம் அடங்கி விட்டதே?"

சொக்கநாதர் மங்கம்மாளின் ராஜதந்திரம் புரியாமல் பதில் கேள்வி கேட்டார். மங்கம்மாள் பெருமூச்சு விட்டாள்.

தாதியனோ தான் வந்த நோக்கம் ஈடேறும் மிதப்பில் மங்கம்மாளையும், அதற்குத் தடைபோடும் சொக்கநாதரை வெறுப்போடும் பார்த்தான்.

மங்கம்மாள் அயரவில்லை.

"தாதியத்தேவரே... என் வரையில் நீங்கள்தான் சேது நாட்டின் உண்மையான அரசர். கிழவன் பெயருக்குத்தான் அரசன். ஆயினும் சின்னகாத்ரியும், மற்ற பாளையக்காரர்களும் கிழவன் தலைமையில்தான் போராடினார்கள். அதனால்தான் பாராட்டை அவனுக்குத் தந்தோம்.

இருப்பினும் ஒரு அரச பரம்பரையைச் சேர்ந்த ஒருவர் இன்னொரு அரச பரம்பரையைச் சேர்ந்தவருக்குக் கௌரவம் செய்விப்பது என்பதுதான் தொன்றுதொட்டு வரும் மரபு. அதன்படி உங்களையும் கௌரவித்தே தீருவோம். கவலை வேண்டாம். அதுமட்டுமல்ல. எங்கள் வீரத் தளபதி குமார

பிள்ளையும் கிழவனுக்கு இணக்கமாக இருப்பதை விடவும் உங்களிடம்தான் அதிக இணக்கமாக இருப்பார்.

எங்களுக்கு உதவி புரிந்த உங்களுக்கு எங்களால் எப்போதும் எல்லாவிதமான உதவிகளும் உண்டு."

— மங்கம்மாள் எல்லாவிதமான என்கிற வார்த்தையில் அழுத்தம் சேர்த்துத் தாதியனுக்கு எது தேவையோ அதை எள்ளினும் எண்ணெயாக அறிவித்துவிட்டு அவன் முகத்தைப் பார்க்கலானாள்.

தாதியன் நிறைவிட்டான்.

"நன்றி மங்கம்மா தேவி நன்றி.. மிக்க நன்றி. மிக மிக நன்றி.." என்று எழுந்து நின்று கொண்டு கைகளைக் கூப்பத் தொடங்கினான். பின் அங்கிருந்து கிளம்பினான்.

அவன் அகன்ற மறுநொடியே சொக்கநாதர் மங்கம்மாளை அதுவரை இல்லாத கோபத்தோடு பார்த்தார்.

"மங்கா.. நீ பேசுவது துளியும் சரியில்லை. எதற்குத் தாதியனுக்கு இப்படி ஒரு முக்கியத்துவமளிக்கிறாய்? இங்கே எனக்கு வாய்த்த குதிரைக்காரன் மாதிரிதான் கிழவனுக்கு இவனும்.. இவன் ஒரு துரோகி."

"தெரியும். அதனால்தான் அவனிடம் அப்படிப் பேசினேன்."

மங்கம்மாளின் பதில் சொக்கநாதரின் கோபத்தை அதிகப் படுத்தியது.

"துரோகி என்று தெரிந்தும் அவனை ஊக்கப்படுத்துவது எந்த வகையில் சரி? அதிலும் சேது நாட்டுக்கும் நமக்கும் ஒரு நல்ல உறவு வளர்ந்திருக்கும் இந்த நேரத்தில்.."

"இதை நல்ல உறவு என்று நீங்கள் நினைக்கிறீர்கள். நான் அப்படி நினைக்கவில்லை. கிழவன் காரணமில்லாமல் உதவ வில்லை என்றுதான் நினைக்கிறேன்."



"சரி.. உன் எண்ணப்படியே இருக்கட்டும். அதற்காக இவனை நீ உற்சாகப்படுத்துவது எந்த வகையில் சரி?"

"வைரத்தை வைரத்தால்தான் அறுக்க வேண்டும்?"

"இல்லை.. உன் எண்ணம் தவறானது. இவன் கிட்டத் தட்ட இன்னொரு குதிரைக்காரன்.

"சரி. முடிவாக என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?"

"நான் உயிரோடு உள்ள வரை நீ அரசியல் பேசக்கூடாது."

— சொக்கநாதர் ஆக்ரோஷமாகப் பேசியபடி எழுந்து நின்றார்.

"அப்படியானால் தாதியனை நீங்கள் கௌரவிக்க மாட்டீர்களா?"

"அந்தப் பேச்சுக்கே இடமில்லை. குமாரபிள்ளையைக் கொடுத்ததற்கே என் மனம் சமாதானமாகாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறது.

இனியும் அடுக்கடுக்காகத் தவறைச் செய்ய நான் தயாரில்லை. நேற்றுவரைதான் தவறு செய்து விட்டேன். இனி யார் பேச்சையும் கேட்பது என்பது என் வரையில் கிடையாது.

மனசாட்சிதான் இனி என் முதல் தெய்வம். அதற்குச் சரி என்று படுவதைத்தான் செய்வேன். அதற்குக் கட்டுப்படாத வர்கள் யாராக இருந்தாலும் சரி அவர்களுக்குத் தவறுக்கேற்ப தண்டனை நிச்சயம்..."

— விஜயரங்க சொக்கநாத நாயக்கர் ஒரு பேரரசருக்குண்டான தோரணையோடு பேசிவிட்டு அங்கிருந்து நீங்கத் தொடங்கினார்.

மங்கம்மாளுக்கு முகத்திலறைபட்ட மாதிரி இருந்தது. நொடிந்து போனாள்.

'தாதியன் நாளை கௌரவிக்கப்படப்போவதாக எதிர் பார்த்துக் கொண்டிருப்பானே...? அவனை எப்படிச் சமாளிப்பது?'

— சேவ்வி திமாச சங்கடத்தோடு நெருக்கியது.

இப்படிச் சங்கடம் வந்தபோதெல்லாம் நீக்கி உதவியது கோவிந்தப்பையாதான்.

இப்பொழுதும் கோவிந்தப்பையாவிடமே உதவியைக் கேட்பது என்று தீர்மானித்தாள்.

எங்கே கோவிந்தப்பையா?

அரியணையில் சயனித்திருந்த கிழவனுக்கு உற்சாகமாக காலைப் பிடித்துவிட்டுக் கொண்டிருந்தான் சோளகை.

நிறையப் பேசி நிறைய ஸ்லாகித்திருந்தான். நடந்ததை எல்லாம் கனவா இல்லை நனவா என்று தெரியவில்லை என்பதிலிருந்து குமாரபிள்ளையையே பரிசாகத் தந்துவிட்ட நாயக்கருக்கு மிகப் பெரிய மனசு என்றெல்லாம் கூறியவன், மறவர் குலத்துக்கே தனிப்பெருமை ஏற்படுத்திவிட்டதாகவும் தன் வாழ்நாளில் இன்றுபோல் தான் ஒரு நாளும் மகிழ்ச்சியாக இருந்ததில்லை என்றும் கூறி அடைமழைத் துளிபோல விடாமல் பேச, அதைக் கேட்டு உடனிருந்த பெரிய உடையத் தேவர் முதல் அம்பலக்காரன் வரை எல்லோருமே சோளகையின் பெருமைப்பாட்டைக் கேட்டுப் போதும் போதுமென்றாகி அப்பொழுதுதான் அங்கிருந்து நீங்கியிருந்தனர்.

ஒரு வார காலத்துக்கு விருந்தினராக இருந்து கோலாகலங்களில் பங்கு கொள்ள வேண்டியதில் ஓரிரு நாள்கள்தான் கழிந்திருந்தன. அந்த உல்லாசங்களில் எத்தனையோ கலைச் சிறப்புகள் வேறு.

நாஞ்சில் நாட்டுக்காரன் ஒருவன் தீயை விழுங்கித் திகைப்பூட்டியிருந்தான்.

ஜம்புலிபுதூர் பொட்டு கட்டும் பரம்பரைப் பெண்களில் சிலர் சாஸ்திரிய நடனத்தையும் மலைப்பாங்காளர் கூத்தையும் கலந்து ஆடிக் களிப்பூட்டியிருந்தார்கள்.



சதுரகிரி மலைப் பளியன் ஒருவன் கண்ணைக் கட்டிக் கொண்டு கத்தி எறிந்து கதிகலக்கியிருந்தான்.

சேரிப்புரத்து மக்கள் தப்பாட்டத்தில் நாடி நரம்புகளில் புடைப்பே ஏற்படுத்திவிட்டனர்.

விடுதலைச்சுவை விரவிட உல்லாசம் பூத்துக் குலுங்கினாலும் எல்லாவற்றிலும் கிழவனிடம் அசராத நிதானம் இருந்ததுதான் ஆச்சரியம். அத்தனைக்கும் நடுவில் தாதியன் மேல் ஒரு பார்வை இருந்ததும், அவனை அவனுக்கே தெரியாமல் ஒருவன் கண்காணித்துக் கொண்டிருந்ததையும் தாதியத்தேவனோ, அவனது கைத்தடி மன்னாரோகூட அறிந்திருக்க வாய்ப்பில்லை. அந்தக் கண்காணிப்பில் அப்படி ஒரு எச்சரிக்கை.

சோளகை ஸ்லாகிப்போடு தன் இதயத்தில் இருக்கும் கிழவனுக்கு உற்சாகச் சேவகம் செய்யும் அந்த நொடிப் போதில் தாதியன் பற்றிய சேதியோடு கிழவனின் ஒற்றன் ஒருவன் கிழவன் எதிரே வந்து நிற்கத் தொடங்கினான்.

## 28

அந்த ஒற்றன் வந்து நின்று வணங்கவும் இங்கிதத்தோடு சோளகை விலகிக் கொள்ளத் தொடங்கினான். கிழவனின் பார்வை அவனை ஊடுருவத் தொடங்கியது. ஒற்றன் பேச ஆரம்பித்தான்.

"அரசே.. தாதியத் தேவர் தன்னிச்சையாக அரசர் விஜய ரங்க சொக்கநாதரையும் மங்கம்மா தேவியாரையும் சந்தித்துப் பேசியுள்ளார். அப்போது தங்களுக்கு அளிக்கப்பட்ட

கௌரவங்களையும் பாராட்டையும் பற்றி விவரிசித்ததாகத் தெரியவந்துள்ளது. தானும் அதுபோலப் பாராட்டப்பட வேண்டும் என்று அவர் விரும்பியதாகவும் அதற்கு மங்கம்மா தேவியார் இசைந்ததாகவும் ஆனால் சொக்கநாத நாயக்கர் மறுத்து, மங்கம்மா தேவியாரை இனி அரசியலே பேசக் கூடாது என்று கூறிவிட்டதாகவும் எனது நம்பிக்கைக்குரிய கம்பச் சேடியன் மூலமாக (கம்பம் போல் அசையாமல் நின்று காவல் புரிபவர்கள்) அறிந்தேன்.

இருப்பினும் நாளை அவைக் கூட்டத்தில் நமது தாதியர் வம்சாவழிச் சிறப்புள்ளவராகக் கருதிக் கௌரவிக்கப்பட ஏகத்துக்கு வாய்ப்புகள் இருக்கின்றன.

யுத்த வெற்றியைத் தொடர்ந்து நட்புறவைப் புதுப்பித்துக் கொள்ளும் சாசனம் ஒன்றும் வெட்டப்பட உள்ளது. அதில் தாதியர் பெயரைச் சேர்க்கவும் ஏற்பாடு செய்யப்படலாம் என்று தெரிகிறது."

— ஒற்றன் அமரிக்கையாகச் சொல்லிவிட்டு இரண்டடி பின்னால் போய் நின்றான். அந்த அறை முழுக்க விருந்துப சாரப் பொருள்கள் நிரம்பிக் கிடந்தன. அதில் மங்கம்மாள் சூட்டிய முத்துமாலையும் ஒன்றாக இருந்தது.

அதை நிமிர்ந்தெழுந்து எடுத்த கிழவன் கரங்கள் ஒற்றனின் தோளைப் பற்றி அவன் வசம் சேர்ப்பித்தது.

ஒற்றன் புளகாங்கிதப்பட்டுப் போனான்.

"நீ போகலாம்—" என்று அவனை வழியனுப்பிய கிழவன் வெண்கலத் தண்டாவைத் தட்டவும் இரண்டு சேவகங் காப்பாளிகள் ஓடிவந்தனர். சோளகையும் உடன் சேர்ந்து வந்தான்.

"சோளகை... திட்டப்படி நாம் எப்போது மதுரையை விட்டுக் கிளம்புகிறோம் உனக்குத் தெரியுமா?"

— கிழவன் காப்பாளிகளை வைத்துக் கொண்டே சோளகையிடம் கேள்வி எழுப்பினார்.



"ஆண்டே— இன்னும் நாலைந்து நாளாவது விருந்துப சாரம் இருக்கும்னுதான் நினைக்கறேன்."

"அதுவாட்டும் இருக்கட்டும். நாம் நாளை காலையிலேயே ராமநாதபுரம் புறப்பட்டாக வேண்டுமே—"

— அந்த 'வேண்டுமே'—யில் ஒரு கட்டளை ஒளிந்திருப்பது தொனித்தது.

"உத்தரவு ஆண்டே... அதுக்கு நான் என்ன செய்யணும்?"

அடுத்த நொடி கிழவன் சேவகங்காப்பாளிகளைப் பார்க்க அவர்கள் விலகிக் கொண்டார்கள். கிழவன் சோளகையிடம் விவரிக்கத் தொடங்கினார்.

**பெ**ரிய கோயில் மணிச் சப்தம் நாலாபுறமும் எதிரொலிக்கும் தஞ்சை.

காவேரியிலும் திமிலோக வெள்ளம். அதன் பாய்ச்சலால் பருவப் பெண்ணைப் போலச் செழித்து வளர்ந்திருக்கும் வயல் வெளிகளில் நண்டைத் தேடும் கொக்குகளும் நாரைகளும் நாலாபுறமும் நீந்தித் திரிந்தபடி இருக்க தஞ்சை ராஜவீதியில் ஒரு வீரனின் புரவி ஒன்று தளர்நடை போட்டபடி நடந்து கொண்டிருந்தது.

தஞ்சை மிகவும்தான் மாறிவிட்டது. வேளாளர்களும், வீர சோழியர்களும், வாணிபர்களும், வைசியர்களும் திரிந்த அந்த மண்மேல் இப்போது ஆடையிலிருந்து அணி வரை அனைத் திலும் மாறுபட்ட மராத்தியர்களும் புடவைக் கட்டிலிருந்து பூ வைத்துக் கொள்வது வரை எல்லாவற்றிலும் வேறுபட்டு விட்ட அவர்களின் பத்தினிகளும்தான் மிகுதியாகத் தெரிந் தார்கள்.

நடக்கவே பிடிக்காதவர்கள்போலக் குதிரை வண்டி ஜட்காக்களில் அவர்கள் போவதும் வருவதும் ஒரு புறம் இருக்க வீட்டு முகப்புகளில் மணி கட்டிய கொடிகளைக் கட்டிவிட்டுக்

கொள்வது என்பதும் அவர்களது வழக்கங்களில் ஒன்றாக இருந்தது.

கொஞ்சம் மொகலாயர் பாதிப்போடு ஹுக்கா பிடிக்கும் பழக்கமும் சிலருக்கு இருப்பதை அங்காடிகளில் பெரும் அளவில் கண்ணுக்குப் படும் வெண்கலக் குண்டானும் அதில் பற்ற வைக்கும் சூழலும் இருப்பதிலிருந்து அறிய முடிந்தது. எல்லாம் சில ஆண்டுகளில் நிகழ்ந்த மாற்றங்கள்!

சர்வத்தையும் கவனித்தபடி புரவியில் செல்லும் அந்த வீரனை ராஜவீதியில் சிலர் ஊன்றிப் பார்த்தார்கள். சிலர் தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டார்கள்.

அவனது தலைப்பாகையும் அதன் பிரதிச் சுருக்கமும் தனக்கு இடது புறமிருப்பதை வைத்துப் பார்க்கையில் அவன் நேராக மகாராஷ்டிரத்திலிருந்து வருகிறானோ என்று கூட நினைக்க வைத்தது.

வீர சிவாஜியின் படையைச் சேர்ந்தவர்கள் இப்படித்தான் எக்களிப்போடு வருவார்கள். தீர்க்கமாகச் சந்தனப் பொட்டும் செந்தூரக் கீறலும் வைத்திருப்பார்கள்.

இடையில் நிச்சயம் ஒரு முழு நீள வளை வாளும் கட்டாரியும் உறைக்குள் அடங்கித் தெரியும். அவர்களைக் காணும் தஞ்சை வணிகர்கள் மரியாதையாக நமஸ்கரிப்பதும் சிலர் சாலை என்றும் பாராமல் மண்டியிட்டே தொழுவதும் கூட உண்டு.

குறிப்பாகத் தஞ்சையரசன் வெங்கோஜியின் அரசாங்கிகள் யாராக இருந்தாலும் இப்படி வரும் வீர சிவாஜியின் சகாக்களிடம் பெரும் பணிவும் மரியாதையும் காட்டுவதைத் தஞ்சை வீர சோழியர்கள் பார்த்தால் நமுட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டு "அண்ணன் கூட்டத்திடம் தம்பிக்குத்தான் எத்தனை அச்சம்...?" என்று காதோடு காதாக ரகசியம் போலப் பேசிக் கொள்வதுண்டு.



வண்டி கட்டிக் கொண்டு செல்லும் வேளாளர்களோ இது போல் மெத்தனமாகச் செல்லும் வீரர்களைப் பார்த்து, "வந்தேறிகளே... எல்லாம் எங்களுக்குள் ஒற்றுமை இல்லாததால் வந்த வினை" என்று முணுமுணுப்பதுமுண்டு.

இதையெல்லாம் பார்த்தும் பாராமலும் உணர்ந்தும் உணராமலும் அந்த வீரன் தன் பயணத்தை அரண்மனையை நோக்கியே தொடர்ந்தபடி இருந்தான்.

அரண்மனை வாயிலை அவன் எட்டியபோது உள்ளிருந்து ஒரு பல்லக்கு வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

அரசர் வெங்கோஜியின் நண்பரும் அந்தரங்க ஆலோசகருமான சாந்தாராம் பாண்டேயின் பல்லக்குதான் அது. பாண்டே எப்போதும் திரைச்சீலையை விலக்கி வெளியே பார்த்தபடிப் பயணிப்பதுதான் வழக்கம். அரண்மனைக்கு எதிர்சாரியில் உள்ள செந்தூர அனுமன் கோவிலை ஒட்டி அவருக்கொரு மாபெரும் மாளிகையை வெங்கோஜி அளித்திருந்தான்.

பாண்டே பரம வைதீகர். தினமும் ராமாயண பாராயணங்களையும் பஜன்களையும் புரிவதில் அலாதியான நாட்டம் உடையவர். சற்றே ஜோதிட சாஸ்திரமும் அறிந்தவர். பாண்டேயிடம் சிவாஜிக்குப் பற்றுதல் உண்டு.

பல நேரங்களில் மாற்றாந்தாய் மக்களான சிவாஜியும் வெங்கோஜியும் முட்டி மோதிக் கொள்ள நேரும் போதெல்லாம் இருவருக்கும் இடையே சமாதானப் புறாவாய்ப் பறந்தவர்தான் பாண்டே.

'எல்லாவற்றுக்கும் மேலாக மகாராஷ்ட்ரன்தான் உன்னதமான பாரத புத்திரன். அவனே வீரமானவன். விவேகமானவன். மற்றவர்களெல்லாம் இரண்டாம் பட்சமானவர்களே' என்னும் ஒருவித திமிரான தீர்க்கமும் பாண்டேயிடம் உண்டு.

கிட்டத்தட்ட அறுபது வயதாகிறது இந்த ராஜாங்கப் பிரதானிக்கு. அவரது பார்வையில் பளிச்சென்று பட்டான் அந்தப் புரவி வீரன்.

ஒரு க்ஷணம் விக்கித்த சாந்தாராம் பாண்டே பல்லக்கை நிறுத்தச் சொல்லி முழுவதுமாகத் திரைச்சீலையை விலக்கித் தன் பெரிதான பாகைத் தலையோடு வெளியே எட்டிப் பார்த்தார்.

அவனும் அவர் பார்க்க வேண்டும் என்று காத்திருந்தவன் போல் அவரை ஊடுருவினான்.

"கிருஷ்ணா..."– அவர் அவன் பெயரை உற்சாகத்தோடு கூறி அழைக்க, அவன் முகம் ஆமோதிப்போடு சிரித்தது. அடுத்த க்ஷணம் பல்லக்கை விட்டுக் கீழிறங்கிய பாண்டே அவனை நோக்கி வேகமாக முன்னேறிச் சென்றார். அவனும் புரவியை விட்டுக் கீழே இறங்கி அவரை நோக்கி வந்தான்.

இருவரும் ஒருவரை ஒருவர் கட்டிக் கொள்ளத் தொடங்கினர்.

"கிருஷ்ணா... உன்னைப் பார்த்து எத்தனை மாதங்கள் ஆகிவிட்டது. எப்படி இருக்கிறாய்?"

– அவர் சௌராஷ்டிர பாஷையில் அவரிடம் கேட்க அவனும், "சொக்கட்ஸே... ஜீக்கு சொக்கட்ஸே பா– (நன்றாக இருக்கிறேன். மிக நன்றாக இருக்கிறேன் மாமா)" என்று சொல்லி அவரைத் திரும்பவும் தழுவிக் கொண்டான்.

"மதுரையில் இருந்து இப்பொழுதுதான் வருகிறாயா?"

"ஆமாம்."

"அற்புதம்... ஆனந்தம்... சற்று முன் கூட வெங்கோஜி உன்னிடமிருந்து ஒரு தகவலும் இல்லையே என்று சொல்லிக் கொண்டிருந்தான். வா போகலாம்."



பாண்டேக்கு மராத்தியின் சகோதர பாஷையான சௌராஷ்டிரமும் நன்கு தெரியும் என்பது கலகலப்பான அந்த நொடிகளில் பட்டவர்த்தனமாகியது.

"பா– மிகவும் களைப்பாய் இருக்கிறது. முதலில் குளிக்க வேண்டும். பிறகு அரசரைச் சந்திக்கலாமே."

"அதற்கென்ன... இந்தப் புரவியை விட்டுவிட்டு என்னோடு பல்லக்கில் வா. எனது மாளிகை எதிரிலிருக்கிறது?"

– பாண்டே அவனை உற்சாகமாகக் கையைப் பிடித்து அழைத்துச் சென்றார். பல்லக்கு ஒடுக்கமாகச் சிறியதாக இருந்தது.

"வேண்டாம் பா– நான் நடந்தே வருகிறேன்." அவன் பல்லக்கைத் தவிர்த்தான்.

"சரி– நானும் நடந்து வருகிறேன்."

"பா– வேண்டாம். நீங்கள் நடக்கக் கூடாது. பார்ப்பவர்கள் வித்தியாசமாக நினைப்பார்கள்."

"பரவாயில்லை. பீஜப்பூரிலும் பிலாஸ்பூரிலும் நடந்து திரிந்த சாதாரண மனிதன்தானே நான்–"

"அங்கு சாதாரணமாக இருக்கலாம். இன்று நீங்கள்தானே இந்தத் தஞ்சை மண்ணுக்கே ராஜகுரு."

"போதும் கிருஷ்ணா– என்ன பெரிய ராஜகுரு. என் பேச்சை வெங்கோஜியும் சரி, சிவாஜியும் சரி– இப்பொழுதெல்லாம் கேட்பதே இல்லை."

– சொல்லிக் கொண்டே அவனையும் இழுத்தபடி நடக்கத் தொடங்கினார் பாண்டே.

"ஆச்சரியமாக இருக்கிறதே–"

"ஆச்சரியம்தான்– அதை விடு. ஆமாம்– எப்படி இருக்கிறது மதுரை? அந்தக் குதிரைக்காரன் அரண்மனை சிம்மாசனத்திலேயே உட்கார்ந்து விட்டானாமே..."

– பாண்டே கேட்ட விதத்தில் மிகச் சாதாரணத்தன்மை. கிருஷ்ணா என்னும் அவன் அதற்காக ஆச்சரியமாக அவரை ஊடுருவினான்.

"என்ன கிருஷ்ணா– எதற்காக அப்படிப் பார்க்கிறாய்?"

"பா– உங்களுக்கு மதுரையின் தற்போதைய நிலை பற்றி எதுவும் தெரியாதா?"

"தெரியாது கிருஷ்ணா– நான் மூன்று நாட்களாக மௌன விரதத்தில் இருந்தேன். அதற்கு முன்பு உடல்நலமும் இல்லை. இன்றுதான் வெங்கோஜியைப் பார்க்கவே அரண்மனைக்கு வந்தேன்."

"சரிதான்– உங்கள் ஆசையை அங்கே வேறொருவன் ஈடேற்றி விட்டான். தெரியுமா உங்களுக்கு?"

"என்ன சொல்கிறாய்?"

"குதிரைக்காரன் ருஸ்தம்கான் கொல்லப்பட்டு இன்றோடு நாட்கள் நான்காகி விட்டது. இதாவது தெரியுமா?"

கிருஷ்ணா கேட்ட மறு நொடியே பாண்டேயின் முகத்தில் ஏகத்துக்கு அதிர்ச்சி.

"கிருஷ்ணா– என்ன சொல்கிறாய் நீ– உண்மையாகவா?"– பாண்டே, தஞ்சையின் பிரதான சாலையில் ஆச்சரியம் பீறிடப் பரவசமானார்.

"நான் எதற்குப் பொய்யுரைக்க வேண்டும் பா. குதிரைக் காரன் பிடியில் இருந்த மதுரையை மீட்க அருமையான சந்தர்ப்பம் இருந்தும் நீங்கள் கோட்டை விட்டுவிட்டீர்கள். ஆனால் பரமவிரோதி என்கிற நிலையில் இருந்தும் ஒருவன் அதைச் சாதித்து மதுரையைக் காப்பாற்றிவிட்டான்."

"யார் அது?"

"என்ன பா... அரசியலில் பழம் தின்று கொட்டை போட்டவர் நீங்கள். உங்களால் அது யாராக இருக்கும் என்று யூகிக்க முடியவில்லையா?"



– அடுத்த சொல்ப நொடிகள் பாண்டே தான் மடக்கப் பட்டதை உணர்ந்து தீவிரமாக யோசிக்கத் தொடங்கினார்.

உதட்டில் முணுமுணுப்பு.

"யாராக இருக்கும்...?"

மதுரைக்குத் தெற்கில் சாதாரண பாளையாதிபதிகள்தான். யாருக்கும் அதில் பெரும்பலமில்லை. இந்தப் பக்கமாக நாம– சற்றுத் தள்ளியுள்ள செஞ்சியும் வேலூரும்கூட சிவாஜியின் பிடியில். மைசூர்க்காரன் சத்தியமாக உதவிக்கு வரமாட்டான். அவனுக்கும் சொக்கநாதனுக்கும் கால்காசுக்கு ஆகாது.

இந்த நிலையில் டெல்லி வரை செல்வாக்குள்ள அந்த ருஸ்தம்கானைத் துணிச்சலாக எதிர்கொண்டு ஜெயித்தவல்ல நபர் யார்...? யார்...?

ஆங்– கிழவன் ரகுநாத சேதுபதியோ?"

– தொட்டுத் தொட்டு பாண்டே இறுதியாகக் கிழவன் பேரைச் சொல்ல கிருஷ்ணா தன் பாகையைக் கழற்றியபடியே புன்னகைத்தான்.

"அப்பாடா... ஒருவழியாகக் கண்டுபிடித்துவிட்டீர்கள். இதில் இன்னொரு விஷயத்தையும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். திரும்பின பக்கமெல்லாம் இந்து ராஜ்யமாகத் திகழ வேண்டும் என்று விரும்பிய நீங்கள் கூட அந்தக் குதிரைக் காரனை டெல்லி பாதுஷாவின் ஆசியைப் பெற்ற ஒருவன் என்று தவறாக நினைத்துவிட்டீர்கள். உங்களுக்குப் பயந்து கொண்டுதான் சொக்கநாத நாயக்கரும் அவன் அருகில் இருந்தால் நீங்கள் கிட்டே நெருங்க யோசிப்பீர்கள் என்று அவனுக்கும் அசாத்திய இடம் அளித்தார்.

இறுதியில் அவரும் ஏமாந்தார்– நீங்களும் ஏமாந்தீர்கள். ஆனால் கிழவன் ஏமாறவில்லை. மதுரையோடு நட்டும் வீரமான பெயரும் பெற்றுக் கிழவன் சேதுபதி உங்களை யெல்லாம் அரசியல் சதுரங்கத்தில் ஓரம் கட்டிவிட்டார்.

தென் பகுதியில் மட்டுமில்லை. இன்று இந்தத் தஞ்சை மண்ணிலும் கிழவனின் வீரமும் புத்திசாலித்தனமும் பேசப்பட உள்ளது. இவ்வளவு நடந்திருக்கிறது. நீங்களோ பூஜை, மௌன விரதம் என்று நாளைக் கழித்துவிட்டேன் என்கிறீர்களே பா.

இப்படி இருந்தால் மதுரையை எந்த நாளில் வெங்கோஜியோ அல்லது சிவாஜியோ கைப்பற்றுவது? இந்தத் தஞ்சையை நீங்கள் தக்கவைத்துக் கொள்வதே பெரும்பாடு என்று ஆகிவிடப் போகிறது. எச்சரிக்கை பா."

— கிருஷ்ணா தேர்ந்த அரசியல் வல்லுனன் போல் பேசியதைக் கேட்ட சாந்தாராம் பாண்டேயின் முகத்தில் மிதமான அதிர்ச்சி அலைகள்.

வெங்கோஜியால் தஞ்சையின் ரகசியப் பிரதிநிதியாக மதுரைக்கென நியமிக்கப்பட்ட கிருஷ்ணா என்னும் அந்த சௌராஷ்டிர வீரனோ, "இன்னும் ஒரு முக்கிய சேதி..." என்று அடுத்த விஷயத்துக்குத் தாவினான்.

## 29

**சா**ந்தாராம் பாண்டே மேலும் ஒரு விஷயம் என்று முத்தாய்ப்பு வைத்த கிருஷ்ணாவை என்றைக்குமில்லாத சிந்தனைகளோடு பார்த்தார்.

பாண்டே வெங்கோஜியின் உத்தம நண்பர் என்பதிலிருந்து வெங்கோஜியின் அரசாங்கத்தில் முக்கிய பொறுப்பு வகிக்கும் ஒருவர் என்பதும் தஞ்சை நகரவாசிகளுக்கு நன்கு தெரிந்திருக்கும் நிலையில் அவர் இப்படி ஒரு அழுக்குப் பாதசாரியுடன் ஒரு புரவியைப் பிடித்துக் கொண்டே நடப்பதும் பேசுவதும் பலருக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது.



பாண்டேயைக் கண்ணுக்குக் கண் பார்க்க நேரும் பட்சத்தில் கைகூப்பி வணக்கம் சொல்ல அவர்கள் தவறவில்லை. அதே சமயம் தங்களுக்குப் புரியாத ஒரு மொழியில் இருவரும் பேசிக் கொண்டு செல்வதிலும் அவர்களுக்குக் குழப்பம் நேராமலில்லை.

தஞ்சை இப்பொழுது முன்பு போல இல்லை. முன்பு தமிழைத் தவிர வேறொரு பாஷையைக் கேட்டறியாத அந்த மண்ணில் நாயக்கர்கள் தெலுங்கைச் சுமந்து வந்து அறிமுகம் செய்து வைத்தார்கள்.

வீதி முகப்பில் நாகாவை முழக்கிவிட்டு ஏதாவது அரசாங்கச் செய்தியைச் சொல்லும் தருணங்களில் செந்தமிழில் மட்டுமே பேசிய அரசாங்க அதிகாரிகள் இப்பொழுது தெலுங்கிலும் அந்தச் செய்தியைக் கூட்டிச் சொல்லும்படியாக ஒரு சூழ்நிலையைத் தஞ்சைக்குக் காலம் உருவாக்கியது.

இன்று அதிலும் ஒரு மாற்றம்.

வீர சிவாஜியின் தம்பியான வெங்கோஜியின் பிடிக்குள் தஞ்சை வந்த இந்த நான்காண்டுகளில் மராத்தியமும் உள்ளே நுழைந்து விட்டது.

நாயக்கர் காலத்திலேயே அவரால் மதுரைக்கு அழைத்து வரப்பட்ட சௌராஷ்ட்டிரர்களின் குடியேற்றமும் ஒருபுறம் அவர்களின் பட்டுத்தறி போடும் ஓசையும், அந்த விரல் நயமும் யாருக்கும் வராத நிலையில் சத்தியத்திற்கும் தர்மத்திற்கும் மிகப் பயந்த உழைப்பைத் தவிர வேறு ஒன்றையும் அறியாத அவர்களின் நம்பகத்தன்மை நாயக்க அரசர்களை மட்டும் கவரவில்லை. வெங்கோஜியையும் அது மிகக் கவர்ந்து விட்டதால் தான் அவர்களில் ஒருவனான கிருஷ்ணாவைத் தனது மதுரைப் பிரதிநிதியாக்கி அங்கேயே தங்கும்படியும் செய்திருந்தான்.

கிருஷ்ணாவும் தனக்களிக்கப்பட்ட கடமையைத் துல்லியமாகவே நிறைவேற்றினான்.

'இதோ... மிக முக்கிய விஷயம்...!' என்று அதன் தொடர்பாக ஒரு உச்சத்திற்கும் வந்துவிட்டான்.

"என்ன கிருஷ்ணா! அந்த முக்கிய விஷயம்?" ('காய் கிருஷ்ணா தெல்லே?')

"விஜயரங்க சொக்கநாத நாயக்கர் இப்பொழுது பழைய நாயக்கர் அல்ல— கிழவன் மூலமாக அவருக்குப் புதிய தெம்பும் தெளிவும் ஏற்பட்டிருக்கிறது—"

"எப்படி?"

"டெல்லிப் பேரரசர் வரையில் நம்மைப்போலக் கிழவன் தப்புக்கணக்குப் போடவில்லை. மறைமுகமாக டெல்லியின் நிலையைத் தெரிந்து கொண்டுதான் மதுரைக்கு உதவக் களத்தில் இறங்கினான். அப்படி இறங்கி அந்த ருஸ்தும்கானை அடக்கியது நாயக்கருக்கு உதவுவதற்காக மட்டுமல்ல..."

"என்ன சொல்கிறாய் நீ?"

"கிழவனின் அந்த யுத்தத்திற்குப் பின் பல்வேறு செய்திகள் உள்ளன—"

"என்ன அது?"

"மன்னர் சிவாஜிக்கு மதுரை மேல் எப்பொழுதுமே ஒரு கண் இருப்பது கிழவனுக்கும் தெரியும். வேலூர், செஞ்சி, தஞ்சை என்று இன்று இந்தத் தெட்சிணத்தின் ராஜ பட்டணங்கள் இன்று வீர மராத்தியர்களான உங்களின் கைகளில் இருப்பதும் அவனுக்குத் தெரியும்..."

"அதனால்—?"

"நாளை மதுரையையும் வசப்படுத்த மன்னர் வெங்கோஜியும், சிவாஜியும் முனையலாமல்லவா?"

"உம்— சொல்."

"மதுரைவரை நாம் சென்றுவிட்டால் பக்கத்தில்தானே இருக்கிறது சேது நாடு. அதன் மேலும் பார்வை படும் தானே?"



"ஓ— நீ அப்படி வருகிறாயா?"

"அப்படித்தான்— கிழவனின் தீர்க்கதரிசனம் யாருக்கும் வராது பா. ஒரு கல்லில் பல மாங்காய்களை அடிக்கத் தெரிந்த சாதுர்யக்காரனாகக் கிழவன் இருக்கிறான். இதைச் சொக்க நாதரும் புரிந்து கொண்டு மராத்தியர்களான நம்மைவிட மறவர்கள் மண்ணின் மைந்தர்கள், அவர்களே மேலானவர்கள் என்று உணர்ந்து அதற்கேற்ப பரராசகேசரி— அதாவது 'பக்கத்து ராஜ்யத்துக்கு உற்ற நண்பன்' என்கிற மிகத் தாராள மான ஒரு பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்திருக்கிறார்—"

"அப்படியானால் இந்த நொடி சேது நாடும் மதுரையும் ஒன்றுதான் என்று சொல்—"

"ஆமாம்!"— கிருஷ்ணா தன் கணிப்புகளையும் தான் சேகரித்த தகவல்களையும் திறந்த மனத்துடன் சாந்தாராம் பாண்டேயுடன் பகிர்ந்து கொண்டு முடித்த அந்த நொடி பாண்டேயின் மாளிகை வாசலும் வந்துவிட்டது.

சில வீர சேவகர்கள் ஓடி வந்து கிருஷ்ணாவின் புரவியைப் பிடித்துக் கட்ட இழுத்துச் செல்ல முன் வந்தனர். ஆனால் அது அவர்களிடம் முரண்டுபிடித்துக் கனைக்கத் தொடங்கியது.

கிருஷ்ணா அதை ஒரு பார்வை பார்த்து, "போடா" என்று சொல்லவும் அவர்களைப் பின் தொடர்ந்தது. அதை ரசித்த பாண்டே, "பரவாயில்லையே! குதிரையோடெல்லாம் கூடப் பேசக் கற்றுக்கொண்டு விட்டாயே" என்றார் சற்று உற்சாக மாக.

"அதனால்தானே பட்டும் பருத்தியும் நெய்ய வேண்டிய வன் உளவாளியாக அரண்மனை ஊழியம் பார்க்க முடிந்திருக் கிறது" என்று கிருஷ்ணாவும் பதிலுக்குக் கண் சிமிட்டினான்.

"சரி சரி... நீராடி உணவருந்திவிட்டு வா. அரண் மனைக்குப் போகலாம். என்னிடம் பேசியதை அப்படியே வெங்கோஜியிடம் சொல்லு. அதே சமயம் அவற்றை

அப்பொழுதுதான் அவனிடம் கூறுவதுபோலச் சொல். இல்லா விட்டால் அரசன் என்னை விட்டு விட்டு நீ எப்படி பாண்டே யிடம் இந்த ராஜாங்க விஷயங்களைப் பேசலாம் என்று கோபித்தாலும் கோபிப்பான்..."

"நீங்கள் சொல்வதைப் பார்த்தால் உங்கள் இருவருக்கும் இடையில் இடைவெளி நிலவுகிற மாதிரித் தெரிகிறதே..?"

"ஆமாம். நான் சமயங்களில் சிவாஜிக்கும் பரிந்து பேச வேண்டியிருக்கிறது. ஆனால் அது வெங்கோஜிக்குப் பிடிக்க வில்லை."

"ஆச்சரியமாக உள்ளதே.. மன்னர் சிவாஜி நம் மன்னருக்கு ஆதர்ஷ புருஷனாயிற்றே?"

"அது முன்பு.. எப்பொழுது வெங்கோஜி தன் வசமிருந்த மைசூரை மைசூர் சிக்கதேவராயருக்கு மூன்று லட்சம் பொன்னுக்குக் கொடுத்தானோ அப்பொழுதே அண்ணன், தம்பிகள் இடையே உரசல் ஏற்பட்டுவிட்டது. வெங்கோஜி செய்ததும் தவறு.. சிவாஜி இந்தத் தென்பகுதி முழுவதுமே மராத்தியர் வசப்பட வேண்டும்—அப்பொழுதுதான் மொகலாய அரசர்கள் தன்னைக் கண்டு அஞ்சுவார்கள் என்று கணக்குப் போடுகிறார்.

வெங்கோஜியோ, தஞ்சையை நிர்வகிப்பதே பெரும் பாடாக இருக்கிறது. மொழிப் பிரச்சினை வேறு.. இதில் மைசூர் கன்னடியர்களை என்னால் கட்டி மேய்க்க முடியாது என்று யதார்த்தவாதியாகப் பேசுகிறான்.

உடன் பிறந்த தம்பியாக இருந்தால் நிச்சயம் தன்னைப் போலத்தான் நினைப்பான். இவன் மாற்றாந்தாய் மகன்தானே.. அதனால்தான் வேறுமாதிரி நினைக்கிறான் என்றெல்லாம் சிவாஜி நினைக்கிறார்."

"சரிதான்.. இப்படி இவர்களிடையே உரசல் இருப்பது கிழவனுக்குத் தெரிந்தால் அது பெரிய ஆபத்து. புரிந்து கொள்ளுங்கள்..."



"நானும் நீயும் புரிந்து கொள்வதால் ஒரு பயனுமில்லை கிருஷ்ணா, வெங்கோஜி புரிந்து கொள்ள வேண்டும்."

"உண்மைதான்.." என்ற கிருஷ்ணா அங்கிருந்தபடியே மாளிகையை ஒட்டியுள்ள காவிக்கொடி பறக்கும் வீர ஆஞ்ச நேயன் கோவிலின் விமானத்தைப் பார்த்தான். கண்கள் இடுங்கக் கைகளைக் கூப்பிப் பிரார்த்தித்துக் கொள்ளத் தொடங்கினான்.

அதையும் சேர்த்து ரசித்தார் சாந்தாராம் பாண்டே! கிருஷ்ணாவை ஆசிர்வதிப்பது போலக் கோவில் மணிச் சப்தம் வேறு சேர்ந்து கொண்டு ஒலிக்கத் தொடங்கியது.

கிருஷ்ணா உற்சாகமாக அந்த மாளிகையில் நுழையத் தொடங்கினான்!

**நா**யக்கரின் மாளிகையை விட்டு வெளியேறத் தொடங்கி யிருந்தார் கிழவன் சேதுபதி.

மாளிகை முகப்பில் சொக்கநாதரும் மங்கம்மாளும் சற்றே இருண்ட முகத்தோடு நின்று கொண்டிருந்தார்கள். முத்து லிங்கமும், சொக்கநாதரின் அருந்தவப் புதல்வனும் அடுத்த வாரிசுமான முத்துவீரப்பனும், சின்னகாத்ரியும் கூட அங்கே இருக்க நாயக்கரின் அவையே திரண்டிருந்தது.

மங்கம்மாள் அரண்மனைக்குள் கூட வேண்டிய அவை, கிழவனின் திடீர் முடிவால் அரண்மனைக்கு வெளியே கூடியிருந்தது. வேங்கடகிருஷ்ணப்பரும், கோவிந்தப்பையா வும் மதுரையின் எல்லைப்புறத்தில் கிழவனை வழியனுப்பி வைப்பதற்காகச் சென்று விட்டிருந்தார்கள்.

அரண்மனைக்கு எதிரே சாலையின் இருமருங்கும் மதுரை நகர மக்களின் ஆக்கிரமிப்பால் திணறிக் கொண்டிருந்தது. காவலர்கள் கட்டுப்படுத்தியபடி இருக்கக் கிழவன் சேதுபதி தன் சகாக்களோடு பட்டு வஸ்த்ராபரண செளந்தர்யனாகச் சொக்கநாத நாயக்கரை நோக்கிச் சென்று அவர் கைகளைப் பற்றினார்.

"நல்லது— நான் விடைபெற்றுக் கொள்கிறேன். உத்தரவு தாருங்கள்."

சொக்கநாதர் எதும் பேசாமல் கிழவனைச் சற்றே கலங்கிய கண்களுடன் பார்த்தார்.

"எதற்கிந்தக் கலக்கம்? நான் என்ன கடல் கடந்து ரோமாபுரிக்கும் லண்டனுக்குமா செல்கிறேன்..."

"விருந்துபசாரங்களில் ஈடுபாடு காட்டாமல் இப்படி அவசர முடிவு எடுத்துப் புறப்படுவதை நினைத்தால் வருத்தமாக இருக்கிறது சேதுபதி..."

"என்ன செய்வது...? அங்கே உடையக்காவின் உடல்நலம் மிக மோசம் என்று செய்தி வந்துவிட்ட நிலையில் என்னால் இங்கு எப்படி உல்லாசங்களில் நாட்டம் செலுத்த முடியும்?"

"அதுவும் உண்மைதான்— நல்லது— மிக நல்லது. கோடி கோடி நன்றிகளும் கூட சேதுபதி..."

"பெரிய வார்த்தை நாயக்கரே— மிகப் பெரிய வார்த்தை. ஆனாலும் உள்ளத்தின் அடியில் இருந்து வருவதால் ஏற்றுக் கொள்கிறேன்"— என்றபடியே கிழவன் சின்னகாத்ரியையும் கட்டி அணைத்துக் கொள்ள, சின்னகாத்ரி கண்கள் பனிக்கப் பார்த்தார். அவரது கன்னத்தைத் தட்டிய கிழவனின் பார்வை அப்படியே மங்கம்மாளின் பக்கம் திரும்பியது. அவளோ கிழவனுக்குப் பின்னால் சிடுசிடுவென்று வாள் பிடியைத் திருகியபடி நிற்கும் தாதியத்தேவன் மேல் கவனமாக இருந்தாள்.

"புறப்படுகிறேன் மங்கம்மா தேவி..."— கிழவன் சேதுபதி கவன ஈர்ப்புச் செய்யவும் தடுமாற்றத்தோடு கிழவனை ஏறிட்டாள்.

"புறப்படுகிறேன்..."

"உடா நல்லது போய் வாருங்கள்!"— மங்கம்மாள் சொக்கநாதர் போலப் பிரிவுத் துயரத்திலோ, நன்றி உணர்வின் சிக்குச் சிடுக்குகளிலோ இல்லை என்பது பளிச்சென்று தெரிந்தது.



சேதுபதியின் வதனத்தில் அதன் எதிரொலிப் புன்னகை. மங்கம்மாளை அது கொஞ்சம் காயப்படுத்திற்றோ என்னவோ— "உடையக்காவின் உடல் நிலை தேறியவுடன் செய்தி அனுப்புங்கள்" என்றாள் சற்று ஏற்ற இறக்கங்களுடன்.

"நிச்சயமாக..." கிழவனின் பதிலிலும் ஒருவித ஏற்ற இறக்கம். அதுவே அவள் உடல்நலம் என்கிற விஷயத்தை நம்பவில்லை என்பதிலிருந்து— அவள் நம்பாமல் புழுங்க வேண்டும் என்பதுதான் தன் விருப்பமும் கூட எனக் கிழவனும் நினைப்பதை யார் புரிந்து கொண்டார்களோ இல்லையோ, தாதியத்தேவன் புரிந்து கொண்டான்.

எங்கும் எதிலும் தான் ஒரு அடி போட்டு முன்போகுமுன் மூன்று அடி போட்டு இரண்டு அடிகள் முன்னதாகக் கிழவன் போய் விடுகிற அந்தச் சாதுர்யம் அவன் நெஞ்சைப் பிசைந்த போது, பட்டுக்குடைகள் சூழ மணிகள் கட்டியாடும் பல்லக்கு முன்னால் வந்தது. கட்டியக் குரல்கள் ஒலிக்கத் தொடங்கின. கிழவன் அதை ரசித்தபடியே தாதியன் அருகில் சென்று அந்தப் பல்லக்கில் தாதியனைப் பற்றி இழுத்து வந்து ஏற்றினார். அடுத்த நொடி, "செம்பிய மறவர் தாதியா..." என்கிற முழக்கமும், "வாழ்க— வாழ்க"வென்னும் எதிரொலிகளும் கூட்டத்தில் எதிரொலித்தன.

தாதியன் ஏறிக்கொள்ளவும் அரைமனதாகத் தானும் ஏறும்முன் 'எங்கே குமாரபிள்ளை?' என்கிறாற்போலக் கிழவன் விழிகள் அவரைத் தேடவும், "பிள்ளை ஊர் எல்லையில் உங்களுக்கான விடையாற்றில் பங்கு கொள்ளத் தன் குடும்பத்தாரோடு முன்பே சென்றுவிட்டார்" என்கிற கச்சிதமான பதில் மங்கம்மாளிடம் இருந்து வந்தது.

"இங்கே ஒரு விடைப்பாடு— எல்லையில் ஒரு விடைப்பாடா?"

"அது எங்கள் தளவாய்களின் தனி விருப்பம். அத்துடன் அப்படிக் கௌரவிப்பதுதான் இந்த மதுரைக்கு வழக்கம்."—

செருக்குப் பூசிய மங்கம்மாளின் பதிலைத் தொடர்ந்து, "நல்ல பண்பான செயல்" என்கிற பதிலோடு கிழவன் பல்லக்கில் ஏறிக்கொள்ள அந்தப் பல்லக்கைப் பெரிய உடையத்தேவரின் பல்லக்கும், அம்பலக்காரனின் பல்லக்கும், மற்றுமுள்ள வீர மறவர்களின் பல்லக்குகளும் பின் தொடர, கிழவனோடு ஓட்டி வந்த சேது நாட்டின் குதிரைப் படையும், காலாட் படையும் கூடப் பின் தொடரத் தொடங்கின.

கிழவனின் பல்லக்கின் முன் மீனாட்சியம்மை ஆலயத்து யானையும், ரிஷபமும் கூடச் சேர்ந்து நடையிட்டுக் கொண்டிருந்தன. மதுரை வீதி ஆர்ப்பரித்தது. பலர் பூக்களை வாரி இறைத்தார்கள்– பலர் கையசைத்தார்கள்– அந்தப் பலரில் சையூமும் இருந்தான். கையில் ஒரு பட்டு வஸ்திரத்துடன் தன்னைக் கிழவன் பார்ப்பாரோ, மாட்டாரோ என்கிற தயக்கத்தோடு தன் சகாக்கள் சிலரோடு நின்று கொண்டிருந்தான்.

திரைச்சீலை விலக்கி வீதி மக்களைப் பார்த்துக் கையசைத்தபடிப் புறப்பட்டுவிட்ட கிழவனின் கண்களும் சையூமைக் கச்சிதமாகக் கண்டறிய, பல்லக்கு நிறுத்தப்படுகிறது. கிழவனும் கீழிறங்கினார்.

ஓடிவந்தான் சையூம்–

கண்களில் நன்றிப் பெருக்கு.

"வா நண்பா– இது என்ன எனக்கான பரிசா–?"

"ஆ– ஆமாம். என் எளிய பரிசு."

"எளியதா– உன்னதமானது நண்பா."– கிழவன் கரங்கள் அதை வாங்கி மளமளவென்று தலைப்பாகையாக அதைத் தரித்துக் கொள்ளத் தொடங்கியது.

சையூம் விக்கித்துப் போனான். கிழவன் தலைப்பாகை தரித்த நிலையில் இழுத்து அணைத்துக் கொண்டார்.

"சேதுபதி– சேதுபதி– நீங்கள் உன்னதமானவர்!"



"உன்னை விடவா?"– எதிர் கேள்வி சையூமின் கண்களில் குற்றாலத்தை இடம் பெயரச் செய்தது. சையூமால் அதற்கு மேல் பேச முடியவில்லை.

"புறப்படுகிறேன்– இன்று போல விசுவாசம் மாறாமல ஒற்றுமையோடு என்றும் நீ திகழ வேண்டும். அதுதான் என் விருப்பம்."

– சொல்லிய வண்ணம் திரும்பவும் பல்லக்கில் ஏறிக் கொள்ள, தாதியனையே அந்தக் காட்சி என்னவோ செய்தது.

இனி பல்லக்கினுள்–

"தாதியா– ஏன் ஒருமாதிரி இருக்கிறாய்?"

"ஒன்றுமில்லை– ஒன்றுமில்லை–"

"மனம்விட்டுப் பேசு தாதியா. எனக்கான இந்தப் பாராட்டை உன்னால் ஜீரணிக்க முடியவில்லை– அப்படித் தானே?"

"இல்லை– இல்லை–"

"உண்மையைச் சொல். நான் இங்கே எல்லோரிடமும் நடித்துக் கொண்டிருப்பதாக நினைக்கிறது உன் மனது."

"அது– அது–"

"ஒரு பேச்சுக்குச் சொல்கிறேன்– கெட்ட எண்ணங்களோடு சந்தனத்தில் கையை விட்டாலும் அது மணக்கும் தெரியும்தானே உனக்கு–?"

"காத்தா– நீ என்ன சொல்கிறாய்?"

"பார்த்தாயா– சேதுபதி நீ என்ன சொல்கிறாய் என்று உனக்குக் கேட்க வரவில்லை பார்த்தாயா–?"

"அது– அது–"

"தடுமாறாதே. எனக்கான இந்தக் கௌரவம் தொண்டயங்குடி மறவன் காத்தனுக்கல்ல– சேதுநாட்டு அரசன் சேதுபதிக்குத்தான். புரிந்து கொள்."

"எதற்கு இப்போது இந்தப் புது விளக்கம்?"

"என்னை நீ நன்றாகப் புரிந்து கொள்ளத்தான்_"

"இப்பொழுது என்ன நான் புரிந்து கொள்ளவில்லை?"

"புரிந்து கொண்டிருந்தால் நேற்று மங்கம்மாளைச் சந்தித்து நான்தான் முறையான சேது நாட்டு அரசன், என்னை ஏன் கௌரவிக்கவில்லை என்று யாசகம் கேட்பது போலக் கௌரவப் பிச்சை போடச் சொல்லிக் கேட்பாயா?"

"அதில் தவறென்ன? உன் மனசாட்சியைத் தொட்டுச் சொல், நான்தோனே வம்சாவளிப்படி நமது நாட்டுக்கு அரசன்?"

"மதுரைக்குக் கூட சொக்கநாதர்தான் அரசர். ஆனால் 'சிலகாலம் அந்தக் குதிரைக்காரன் அரசனாக இருந்தானே எதனால்? யோசி_"

"எதனால்_?"

"வம்சாவளி என்பதும் ஒரு பாதை. அவ்வளவுதான். ஆனால் அதில் போனால் ராஜ்ஜியம் நிலைக்காது எனும்போது மாற்றுப் பாதையில் போவதுதானே புத்திசாலித்தனம்_"

"என்ன சொல்கிறாய் நீ? நான் அரசனாகியிருந்தால் சேது நாடு நிலைத்திருக்காது என்கிறாயா?"

"நீயே சொல்_ நிலைத்திருக்குமா?"

"ஏன் நிலைத்திருக்காது? உனக்கு நான் எந்தவகையில் இளைத்தவன்?"

"உடல் வலிமை, வயது இவைகளை மட்டும் வைத்துப் பேசாதே_"

"புத்தியையும் வைத்துத்தான் கேட்கிறேன். எதில் நான் இளைத்தவன்?"

"அப்படியா_ சரி. இந்த மதுரைக்கு—என் தந்தையைக் கொன்ற இந்த மதுரைக்கு—அதிலும் இந்த விஜயரங்க சொக்க



நாத நாயக்கருக்கு நான் ஏன் உதவி செய்தேன்_? தவறு தவறு— நாம் ஏன் உதவி செய்தோம் என்பதற்கான சரியான காரணத்தை நீ சொல்வாயா?"

— தாதியன் கலக்கமும் குழப்பமுமாகக் கிழவனை ஊடுருவினான்.

"மிகச் சரியான உண்மையான காரணம் இந்த நொடிப் போது என் நண்பனும் அமைச்சனுமான சீதக்காதிக்குத் தெரியும். அந்தக் காரணம் எழுத்து வடிவில் ஒரு ஓலையாகவே அவனிடம் உள்ளது. நாம் ராமநாதபுரத்தை அடைந்த மறு நொடியே நீயே அதைக் கேட்டு வாங்கிப் பார்க்கலாம். அந்தக் காரணத்தை ராமநாதபுரத்தை நாம் அடைவதற்கு முன்னால் நீ கூறிவிட்டால் ராமநாதபுரத்தை அடைந்த அந்த நொடியே நான் அரச பதவியிலிருந்து விலகிக் கொண்டு உனக்கு முடி சூட்ட ஏற்பாடு செய்து விடுகிறேன்_ இல்லாவிட்டால்_"

— கிழவனின் இந்த இல்லாவிட்டாலில் ஓர் அசாத்திய அழுத்தமும் கோபமும் நன்றாகவே தெரிந்தது.

# 30

கிழவனின் அந்த அழுத்தமும் கோபமும் தாதியத் தேவன் முகத்தில் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் பரத்திக் காட்டியது. ஏதும் பேசாமல் திரைச்சீலையைச் சற்றே ஒதுக்கி வெளியே பார்த்தான். ஆரவாரம் செய்யும் மதுரை ஜனங்கள் கண்களில் பட்டார்கள்.

மதுரைக்குள் வலம்வரும் கிரிதிருமால் நதி வாய்க்காலில் நாவாய்களில் பொருள் ஏற்றிச் சென்று கொண்டிருந்தவர்கள்

கூட நாவாயை ஓரம் கட்டிப் படித்துறை இல்லாத பக்க வாட்டுக் கொடுஞ் செடிதழைப் புதர்களில் புகுந்து மேலேறிச் சாலைக்கு வந்து கிழவன் வரும் பல்லக்கைப் பார்த்து ஆரவாரம் செய்தார்கள்.

கிழவனுக்குள் அந்த நொடி வைகை ஆறும் அதன் கிளைப் பிரிவான கிரிதிருமால் நதி வாய்க்காலின் உள்ளோட்டமும் ஒரு நகருக்கு நீரின் தேவை எத்தகையது என்பதைச் சொல்லாமல் சொல்லி நின்றன.

"பார்த்தியா தாதியா— பாண்டியர்கள் வல்லாளர்கள்! வைகையின் நீரை ஒரு வாய்க்காலாக எப்படியெல்லாம் ஊருக்குள் வளைத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள் பார்த்தாயா— நமது இராமநாதபுரத்திலும் இது போல ஒரு வாய்க்காலை நாமும் வெட்டினால் மழை நீரை மட்டுமே நம்பி இருக்க வேண்டிய ஒரு நிலை நமக்கும் இருக்காது. என்ன சொல்கிறாய்?"

— முன்பு பேசிய பேச்சால் உருவான இறுக்கத்தைத் தளர்த்துவது போலக் கிழவன் கேட்கவும் தாதியன் சிரித்தான். ஓர் ஏளனச் சிரிப்பாகத்தான் அது கிழவனுக்கும் தோன்றியது.

"ஏன் சிரிக்கிறாய்?"

"இது ஒன்றும் நாயக்கர் வெட்டிய வாய்க்காலில்லை, காலம் காலமாகவே இது ஓடிக் கொண்டிருக்கிறது" என்றான்.

"ஓ— அது தெரியாமல் நான் பேசுவதாக நினைத்துத்தான் நீ சிரித்தாயாக்கும்?"

தாதியன் பதிலேதும் சொல்லாமல் மௌனத்தில் அதை ஆமோதித்தான்.

"எனக்கு இதன் முழுப் பின்னணியும் தெரியும் தாதியா— ஒரு சைவனாக இருந்து பின் வைணவத்துக்கு வந்து இந்தக் கூடல் நகருக்குள் இருக்கும் பெருமாளுக்குப் பெரியதாக ஆலயமும் கட்டித் தந்த பராந்தக நெடுஞ்சடையன்



காலத்திலிருந்தே ஓடிக் கொண்டிருக்கிறது இந்தக் கிரிதிருமால் நதி.

அவன் தந்தை கோச்சடையர் இதைக் காசிக்குள் ஓடும் கங்கைக்கு நிகரானதாகக் கருதித் தலை முழுகி எழுந்த வரலாறெல்லாம் எனக்கும் தெரியும்.

அதனால்தான் நாயக்கர்கள இந்த வாய்க்காலை உருவாக்கியதாகக் கூறாமல் கவனமாய்ப் பாண்டியர்கள் என்றேன்."

— கிழவனின் விவரிப்பால் தாதியன் சற்று பிரமிக்க மேலும் அந்தப் பிரமிப்பைக் கூட்டுவது போலக் கிழவன் தொடர்ந்தார்.

"இப்படி மதுரையை வளப்படுத்திய பாண்டியப் பேரரசர்களுக்குத் தானும் துளியும் சளைத்துவிடக் கூடாது என்றுதான் மன்னர் திருமலை ஒரு பெரிய குளத்தை வெட்டி அதன் நடுவே ஒரு மண்டபமும் எழுப்பி அதை வைகை ஆற்றோடும் சேர்த்து கால காலத்துக்கும் அதில் நீரிருக்க எல்லா வழிவகைகளையும் செய்திருக்கிறார். அதோடு மாரி மாறாமல் கருணை செய்யத்தான் அங்கே மாரியம்மனுக்கும் ஒரு ஆலயம் கண்டிருக்கிறார் போலிருக்கிறது."

கிழவனின் அந்தக் கணிப்புகளும் விவரிப்புகளும் எதற்காக என்கிறாற் போலத் தாதியன் அவரைக் கூர்மையாகப் பார்த்தான்.

"என்ன பார்க்கிறாய்—? ஒரு அரசன் என்பவன் எல்லைப் புறங்களைப் பற்றியே கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் ஊருக்குள் விருத்திகளைச் செய்யவே முடியாது.

அதிலும் வானம் பார்த்த பூமியையே பெரும்பாலும் கொண்டிருக்கும் நாம் அண்டை அயலில் பகையோடும் வெறுப்போடும் இருந்து கொண்டிருந்தால் நமது சேதுநாடு எப்போதும் சேதநாடாகத்தான் இருக்கும். இதை எல்லாம்

உணர்ந்துதான் பாதுகாப்போடு கூடிய ஒரு கோட்டைக்கு நான் அத்தனை ஆசைப்பட்டேன். ஊருணிகளுக்கும், கண்மாய்களுக்கும் கணக்குப் பார்க்காமல் வாரி இறைத்தேன். இறைத்தும் கொண்டிருக்கிறேன். இந்த நொடியில் மதுரையோடு நட்புக் கொண்ட நிலையில் திரும்பியும் கொண்டிருக்கிறேன்."

— கிழவனின் விளக்கம் எதற்கு என்று தாதியனுக்கு மெல்ல உறைக்கத் தொடங்கியது.

வள்ளல் சீதக்காதியின் பேருபகாரத்தோடு கிழவன் கோட்டை எழுப்பியபோதும், ராமநாதபுரத்துக்குத் தலைநகரை மாற்றியபோதும் இதெல்லாம் வெட்டி ஆடம்பரம், வீண் செலவு, கஜானாவுக்கு வைக்கும் வெடி என்று தான் கருத்துக் கூறியதற்கு வேளை பார்த்துக் கிழவன் பதிலைத் தருகின்றானோ?

அப்படியே எதிரிகளான நாயக்கர்களுக்குச் செய்த உதவிக்கான காரணத்தையும் கூறுகின்றானோ—? கேள்விகள் உள்ளோட தாதியனுக்குள் அந்த விளக்கங்கள் எரிச்சலைத் தான் மூட்டின.

"போதும் காத்தா— உனக்கு நன்றாகப் பேசத் தெரியும் என்பது எனக்குத் தெரியும். ஒரு சுற்றுக்குடிக்குச் சொல்வதைப் போல எனக்கு இனியும் நீ எதையும் சொல்லத் தேவையில்லை. நீ புராணம், வரலாறு எல்லாம் தெரிந்தவன். இராமநாதபுரத்தின் மேல் உனக்கு ஒரு பெரிய காதலே உண்டு. ஒப்புக் கொள்கிறேன். ஆனால் இப்படியெல்லாம் யோசிக்கவோ, முடிவெடுக்கவோ எனக்குத் தெரியவில்லை என்பது போல நீ பேசுவதை இந்த நொடியே நிறுத்திக் கொள்."

— தாதியன் பதிலுக்குச் சீறினான். அதைத் தொடர்ந்து கிழவனின் நயனங்கள் தாதியனைத் துளையிடுவது போலப் பார்க்க அதில் அதிசயமாக ஈரச் சேர்க்கை.



— அது— 'தாதியா என்று நீ என்னைச் சரியாகப் புரிந்து கொண்டு நேசிக்கப் போகிறாய்?' என்பது போலக் கன்னத்தில் துளிகள் எடுத்துப் புரண்டு விழுந்தது.

தாதியன் அதைப் பாராமல் ஒதுங்கி நிற்கும் திரைச் சீலைக்கு வெளியே பார்வையை விட்டான்.

கிழவன் மனதும் தனக்குள் சொல்லிக் கொண்டது. 'உன்னை வசப்படுத்தாத வரை நான் எதை வசப்படுத்தியும் அதனால் பெரிய பலனில்லை!'

எல்லைப்புறத்தில் ஏகத்துக்கும் திமிலோகம். கிழவனோடு வந்த படை வீரர்களில் இருந்து நாயக்கர் படை வீரர்கள் ஒரு மைதானத்தில் குழுமி நிற்பது போல நின்று கொண்டிருக்க சில சாரட்டுகளும் அங்கே அலங்காரத்தோடு கொடிகள் பறக்க நின்று கொண்டிருந்தன. வானம் வேறு இதமாக மேகப்பந்தல் போட்டுத் தந்திருந்தது.

சாலையைப் பார்த்தபடி கோவிந்தப்பையாவும் வெங்கடகிருஷ்ணப்பரும் காத்துக் கொண்டிருக்கக் குமாரபிள்ளை தன் குடும்பத்தார் சகிதம் கிழவனின் வருகைக்காக மதுரையில் இருந்து வரும் சாலையையே பார்த்தபடி இருந்தார்.

காங்கேயக் காளைகளால் பூட்டப்பட்ட பல வண்டிகளில் பரிசுப் பொருள்களும், வழியில் சமைத்துச் சாப்பிட தானியங்களும் பழ வகைகளும் குவிந்து அதில் கிடந்தன.

கிழவன் ரகுநாத சேதுபதி மதுரையை விட்டு நீங்கி எல்லைப் பக்கம் வந்து விட்டதை அவர்களைத் தொடர்ந்து வரும் வீரர்களில் சிலர் வேட்டுப் போட்டு ஊர்ஜிதம் செய்ய அந்தச் சப்தமும் கேட்கத் தொடங்குகிறது. எல்லோரும் சுறுசுறுப்படைய கோவிந்தப்பையாவும் வெங்கடகிருஷ்ணப்பரும் குமாரபிள்ளையை நெருங்கினார். பிள்ளை அவர்களைக் கண்கள் பனிக்கப் பார்த்தார்.

"என்ன பிள்ளை இது–? நாம் என்ன நிரந்தரமாகவா பிரியப் போகிறோம்?"– வெங்கடகிருஷ்ணப்பர் பிள்ளையை ஆறுதல் படுத்தினார்.

"அப்படியில்லை கிருஷ்ணப்பரே– என் விசுவாசத்தையே நான் இனி இடம் மாற்றிக் கொள்ள வேண்டும். அதை நினைத்தேன். அதுதான் மனது என்னையும் மீறிக் கலங்கி விட்டது."

"என்ன செய்வது? உன்வரையில் விதியின் போக்கு அப்படி இருக்கிறது. எது எப்படி இருந்தாலும் மதுரையின் மேல் இருக்கும் விசுவாசம் மாறக்கூடாது. அதைப் புரிந்து கொண்டு செயல்படு–"

"நிச்சயமாக–"

"கிழவன் சேதுபதிக்கு அச்சப்பட்டுக் கொண்டு தாதிய னிடம் விலகி இருந்து விடாதீர்கள்."

"இல்லை– நான் மனசாட்சிப்படியும் எதிர்காலத்தை உத்தேசித்துமே எதையும் செய்வேன்."

— பிள்ளை சொல்லி முடிக்கையில் கிழவனின் பல்லக்கும் மற்ற பல்லக்குகளும் அங்கே பிரவேசித்து நிற்க வாழ்த்துக் கோஷங்கள் வானெழும்பத் தொடங்கின.

கிழவன், தாதியனோடு பல்லக்கினின்றும் இறங்கி மதுரை நாயக்கர்களின் வீரம் மிக்க அந்தத் தளவாய்கள் இருவரைச் சமீபித்தார்.

"திவ்ய வந்தனங்கள் சேதுபதி– மகா திவ்ய வந்தனங்கள். எல்லையில்லாச் சந்தோஷத்தோடு உங்களை வழியனுப்பத் தான் காத்துக் கொண்டிருக்கிறோம்."

"மிக்க மகிழ்ச்சி தளவாய் பெருமக்களே– உள்ளே ஆயிரம் ஒற்றுமை வேற்றுமைகள் இருந்தாலும் புறத்தில் எல்லாமே என்னைப் புளகாங்கிதப்படுத்துகின்றன.



சிறப்பான உங்கள் கௌரவங்களுக்கு என் விசேஷப் பாராட்டுகள்."

"காலகாலத்துக்கும் நம் ஒற்றுமை தொடர வேண்டும். நமக்கெதிரான எதிரிகள் இந்த உலகில் எங்கேயிருந்தாலும் அவர்கள் இதை அறிந்து ஓரமாய் ஒடுங்கி விட வேண்டும். அதற்கு உதாரணமாய்த் திருப்புவனம் எல்லைச் சாவடியில் இருந்து அனைத்துச் சேது நாட்டு எல்லைச் சாவடிகளிலும் நம் இரு நாட்டுக் கொடிகளும் ஒன்றுபட்டே பறக்க வேண்டும்."

வெங்கடகிருஷ்ணப்பர் உணர்ச்சி பொங்கக் கூறியபடி குமாரபிள்ளையை அருகே அழைத்து கிழவனிடம் ஒப்புவிக்க, அதுவரை இடையில் தொங்கிக் கொண்டிருந்த அந்த மதுரை உடைவாளைப் பிள்ளை அவிழ்க்க மாட்டாது அவிழ்த்து வெங்கடகிருஷ்ணப்பர் வசம் ஒப்புவித்தார். கிழவன் ரகுநாத சேதுபதி அம்பலக்காரனைப் பார்க்க அவன் வளரி முத்திரை மின்னும் சேது நாட்டு உடைவாளைக் கச்சையோடு சேர்த்துக் கிழவன் வசம் ஒப்புவிக்கக் கிழவனின் கரங்கள் அதைக் குமார பிள்ளையின் இடையில் கட்டி விட்டன.

ஆரவாரமும் எழும்பி அடங்கத் தொடங்கிற்று. காத்துக் கொண்டிருந்த பாண்டிய மகளிர் கூட்டம் குலவையும் போடத் தொடங்கியது.

வாழ்த்துவது போல் வானிலிருந்தும் மெல்லிய பூந்தூறல். தொடர்ந்து சாரட்டுகளில் கிழவனும் மற்றவர்களும் ஏறி அமர்ந்து கொள்ளக் கொம்பு முழக்கத்தோடு சாரட்டுகள் சீறிக் கிளம்பின.

திடுதிடுவென்று பின்னே செல்லத் தொடங்கிய படை வீரர்களின் பின் தொடரலில் அந்தப் பயணம் பார்ப்பதற்கே பிரமிப்பாகவும் காண முடியாத ஒரு காட்சியாகவும் இருந்தது.

தஞ்சை அரண்மனைக்குள் கிருஷ்ணாவும் பாண்டேயும் நுழைந்தபோது அற்புதமான மாலை நேரம்.

அரண்மனைக்குள் முழுக்க சாம்பிராணி தூபதீபப் புகை சுற்றிவந்து சுழற்ந்து கொண்டிருக்க தபலா, கஞ்சீரா போன்ற இசைக் கருவிகளின் சப்தங்களும் காதில் கேட்கத் தொடங்கின.

"இன்று வெங்கோஜி இருட்டும் முன்பே நாட்டியம் பார்க்கத் தொடங்கிவிட்டான் போலிருக்கிறது" என்றபடியே பாண்டே கிருஷ்ணாவைப் பார்த்தார்.

எதிரில் சில பெண்கள் நாட்டியம் முடிந்தது என்கிற மாதிரி சலங்கைப் பரல் கால்களோடு குறுக்கில் புகுந்து ஓடிப் போனார்கள். அத்தோடு ஒருவிதமான மராத்தியப் பாணி உடை உடுத்தியிருக்கும் ஜாகிர்தார்கள் சிலரும் அவர்களைத் தொடர்ந்து பின்னால் போயினர்.

"யார் பா– இவர்களெல்லாம்?"

"அதை ஏன் கேட்கிறாய்..? பூனாவிலிருந்து ஒரு கூட்டமே இங்கே வந்து குடியேறியிருக்கிறது. அவர்களில் சவுக்கார்கள் என்று ஒரு பிரிவினர் ஆடல் பாடல்களில் அதி தேர்ந்தவர்களாம். அவர்கள்தான் இவர்கள்..."

"அது சரி... பானாஜியிலிருந்தும், பூனாவிலிருந்தும் வந்து குடியேறுகின்றவர்களுக்கு வீடும் நிலமும் அரசு சார்பில் வழங்கப்பட்டு அவர்களுக்கு யாதொரு வரியும் கூட இல்லையென்று கேள்விப்பட்டேனே– உண்மையா பா?"

"உண்மைதான். இந்தத் தஞ்சையில் இப்போது முப்பதாயிரத்துக்கும் மேல் சோழ வம்சாவளியினரும், நாயக்கர்களும் இருக்கிறார்கள். இவர்களில் மராத்தியர்கள் மூன்றில் ஒரு பங்கு கூட இல்லை. அதனால்தான் இந்த ஏற்பாடு. ஆமாம் எதற்குக் கேட்கிறாய்?"

"இப்படிச் செய்வதால் இது மராத்திய பூமி ஆகிவிடுமா பா?"

"ஏன் ஆகாது? ஆக வேண்டும். ஆகியே தீர வேண்டும்."– பாண்டே தீர்க்கமாகச் சொன்னபொழுது அரண்மனை



உள் முகப்பில் ஒரு வளைவில் திரும்பிச் செல்லும்படியாயிற்று.

அப்பொழுது பெரிய கண்ணாடிச் சாடிகளில் கறுப்பு நிறத்தில் மதுவகைகளைச் சுமந்தபடி ஒரு நாற்சக்கர சிறு வண்டி ஒன்று அவர்களைக் கடந்து போயிற்று.

அதன் புளிப்பு வாசம் கிருஷ்ணாவை முகம் சுளிக்க வைத்தது.

"என்ன பா இது மதுவகைகளா?"

"ஆமாம், வெங்கோஜியைக் காண இன்று சில வெளி நாட்டு வாணிகர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களுக்குத்தான் இது."

பாண்டே விளக்கியபடியே வெங்கோஜி இருக்கும் அறை முன்வரை சென்றார். முகப்பில் கம்பச் சேவகர்கள் நின்று பெருக்கல் மரிப்பில் இருந்தனர்.

பாண்டே வரவும் கிருஷ்ணாவை ஒரு மாதிரிப் பார்த்துவிட்டு உள்ளே விட்டனர்.

உள்ளே லஸ்தர் ஒளி. தரை முழுக்க மெத்தை விரிப்புகள், திண்டுகள். சுவரில் வாளலங்காரம்! போதாதற்கு அறையின் நான்கு மூலைகளிலும் நிர்வாணம் மிகுதியாக உள்ள பெண்களின் ஓவியங்கள். அறையின் நடுவில் திண்டை அண்டக் கொடுத்தபடிச் சரிந்து படுத்த நிலையில் பூனைக் கண்ணும் சாரைப் பார்வையுமாகப் பாண்டேயையும் கிருஷ்ணாவையும் பார்த்துக் கொண்டிருந்தார் மன்னர் வெங்கோஜி.

நெற்றி மையத்தில் செந்தூரப் பொட்டுப் பளிச்சென்று மின்னியது. தலையின் எழுடுக்கு மராத்தியப் பாணி பாகை சுழற்றி அருகில் தாங்கி ஒன்றின் மேல் இருந்தது.

கிருஷ்ணா அவரைப் பார்த்த நொடி மண்டியிட்டுக் கைகளைக் கூப்பி பிரணாம்களைச் சொல்லிவிட்டு மெல்ல நிமிர்ந்தான். அருகிலேயே அசமந்தமாக அமர்ந்து கொண்டார் பாண்டே

"வந்துவிட்டாயா கிருஷ்ணா?"

"ஆம் ராஜா ஜி நிறைய சேதிகளோடு வந்திருக்கிறேன்."

"என்ன எல்லாவற்றையும் பாண்டேயிடமும் சொல்லி விட்டாயாக்கும்?"– கேட்டபடியே கோணல் சிரிப்புச் சிரித்தார் வெங்கோஜி.

"ஐய்யோ இல்லை ஜி. உங்கள் சமூகம் இருக்க நான் அவரிடம் பேசுவேனா?"– சமாளித்தான் கிருஷ்ணா.

"நல்லது– விஷயத்தைச் சொல்!"

– கிருஷ்ணா உடனே கிழவன் சேதுபதியில் ஆரம்பித்து நடந்து முடிந்த அத்தனை விஷயங்களையும் சொல்லி முடித்தான்.

வெங்கோஜி முகம் அதிதீவிரமாக மாறிப்போய் விட்டிருந்தது. சட்டென்று திரும்பி, "அரே பா– நல்ல சந்தர்ப்பத்தை விட்டு விட்டோமே பா. கிழவன் முந்திக் கொண்டானே" என்றும் கத்தினார்.

"இப்போது அதைப் பற்றிப் பேசி என்ன புண்ணியம்? அடுத்து நடக்க வேண்டியதைப் பார்..."– பாண்டே வெங்கோஜியை ஒரு தினுசாகச் சமாதானப்படுத்தினார்.

"அடுத்து என்ன அடுத்து...? காசிக்கரை இந்து ராமேஸ்வரத்தில் தன் பயணத்தை முடிக்கிறான். அதே போல ராமேஸ்வரத்து இந்து காசியில் வந்து தன் பயணத்தை நிறைவு செய்கிறான்.

மகாராஷ்டிரர்களும் இந்துக்களுமான நமக்குக் காசி யாத்திரையும் ராமேஸ்வர யாத்திரையும் இரு கண்களைப் போல.

இது இரண்டுக்கும் இடைப்பட்ட நாடெல்லாம் ஒரே நாடாக வேண்டும் என்பதுதானே அண்ணா சிவாஜியின் ஆசை."

"உம், சொல்."



"என்னத்தைச் சொல்வது? மதுரை கூட நமக்குப் பெரிதில்லை. சேதுநாடுதான் பெரிது என்பதுதானே அண்ணாவின் ஆசை?"

"ஆமாம் அதற்கென்ன இப்போது–?"

"அப்படி ஒரு நாட்டான் ஒரு பக்கம் டெல்லிக்கு ஆதரவாகவும் இருந்து கொண்டு மறுபக்கம் எப்படி அந்தக் குதிரைக்கார ருஸ்தமையும் எதிர்த்தான். எங்கோ இடிக்கிறதே–"

வெங்கோஜி கைகளைத் தேய்த்தபடிக் கேட்ட கேள்விக்குப் பாண்டேயிடம் அடக்க முடியாத சிரிப்புதான் முதல் பதிலாகியது.

பின் நிதானமாக, "வெங்கோஜி... பேச வேண்டுமே என்றெல்லாம் பேசாதே. அரசியல் தெரிந்து பேசு" என்று சாந்தாராம் பாண்டே கிருஷ்ணாவை வைத்துக் கொண்டே கூறவும், வெங்கோஜிக்குக் கமறியது.

ஒரு பயங்கரக் கோபப் பார்வை பார்த்தார்.

# 31

'நதியாம் விரிசிலை நன்னகர் பொற்கோட்டை
பதியாந் துறைசைப் பதிக்கு விதியாக
தானமிட்டான் சேதுபதி தாரணி தானுள்ளளவும்
ஈனமில்லை யெந்த நாளும்.'

– திருவாவடுதுறை ஆதீனகர்த்தர்

**வெ**ங்கோஜிக்குக் கோபம் வந்தால் கை, கால்கள் எல்லாம் நடுங்கத் தொடங்கிவிடும். வார்த்தைகள் தடம் மாறி உளறலாக வெளிப்படும்.

பாண்டே அரசியல் தெரியாமல் பேசுகிறாய் என்று சொன்னதன் எதிரொலி வெங்கோஜியிடம் அலைவெல்லாம் நடக்கத் தொடங்கின.

"பாண்டே நீங்கள் அதிகம் பேசுகிறீர்கள். ஒரு நாளைக்கு ஒரு முறையாவது எனக்கு அரசியல் தெரியாது என்று கூறுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறீர்கள். நான் ஒன்றும் என் சகோதரனைப்போல் பேராசை பிடித்தவனில்லை... அவனுக்குத்தான் இந்து ராஷ்டிரம், எல்லா நாடும் என் நாடு என்கிற புத்தி. எனக்கில்லை. ஏதோ வயதில் பெரியவராயிற்றே என்று பார்க்கிறேன். இல்லாவிட்டால் செக்கினை ஆட்டி என்னை எடுக்கும்படிச் செய்துவிடுவேன். ஞாபகத்தில் கொள்ளுங்கள்."— வெங்கோஜியின் சீற்றம் அப்படி ஒன்றும் சாந்தாராம் பாண்டேயைப் பெரிதாகப் பாதிக்கவில்லை.

எனக்கு இதெல்லாம் மிக மிக சகஜம் என்கிற மாதிரி தாவாக்கட்டையைத் தடவிக் கொண்டார். தன்னை வைத்துக் கொண்டே அவரை ஒரு பிடிபிடித்து விட்டதை எண்ணி ஆச்சரியத்திலும் அதிர்ச்சியிலும் இருந்தான் கிருஷ்ணா.

வெங்கோஜியின் கோபத்தில் எதற்காக அவரது சகோதரர் சிவாஜி குறுக்கிட்டார் என்பதும் அவனுக்குப் பெரிய கேள்வியாக இருந்தது.

சில பல நொடிகள் அங்கே மௌனம் போல வந்து அடப்பமாகக் கவ்வி நிற்கத் தொடங்கியது.

அந்த மௌனத்தை எப்படி உடைப்பது. மேலும் பேச்சை எங்கிருந்து மீண்டும் ஆரம்பிப்பது என்பதெல்லாம் கிருஷ்ணாவுக்குப் பெரிய சங்கடமாக இருக்கும்போது பாண்டே தானே வாயைத் திறந்தார்.

"வெங்கோஜி எதற்காக இப்படிக் கோபிக்கிறாய்? நான் நல்ல அர்த்தத்தில்தான் உன்னைப் பார்த்து அப்படிச் சொன்னேன்" என்றார்.



"என்ன பெரிய நல்ல அர்த்தம்? சமாளிக்காதீர்கள் பாண்டே—"

"சமாளிக்கவில்லை, புரியும்படிச் சொல்கிறேன் கேள். நீ நினைக்கிறமாதிரி அந்தக் குதிரைக்காரனுக்கு டெல்லிப் பேரரசின் தயவெல்லாம் துளிக்கூட இல்லை. அவன் மிக நன்றாக உருது பேசுவான். அரபு தேசங்களுக்கு வர்த்தகப் பயணங்கள் அடிக்கடி நிகழ்த்தியதால் கொஞ்சம் வியாபாரத் தந்திரங்களும் தெரியும். கூடவே பிறர் நம்புகின்ற மாதிரிப் பொய் பேசுவதில் அவன் சமர்த்தன். இதெல்லாம்தான் அவனை விஜயரங்க சொக்கநாதரும், அவர் தம்பி முத்து லிங்கமும் நம்பியதற்குக் காரணங்கள்.

அவன் சுத்த வீரனில்லை, பொய்யன் என்பதை உணர்ந்து கொண்டதுதான் கிழவனின் சாதுர்யம். ஆனால் நீ அப்படி இல்லை. வெளுத்ததை எல்லாம் பால் என்று நினைப்பவன். அந்த அர்த்தத்தில்தான் உனக்கு அரசியல் தெரியவில்லை என்றேன்.

தெரிந்திருந்தால் இதோ இங்கே அருகில் இருக்கும் செஞ்சிக்குமல்லவா நீயே மன்னனாக இருப்பாய். உன் இன்னொரு சகோதரனான சாந்தாஜிக்கு இடம் கொடுத்திருப்பாயா என்ன?"

— பாண்டே வெங்கோஜியைச் சமாதானப்படுத்துவதற்காக விஸ்தாரமாகத் தயாராகிவிட்டதைக் கிருஷ்ணா புரிந்து கொண்டான்.

அதன் எதிரொலிகளும் வெங்கோஜியிடம் தெரிய ஆரம்பித்தது.

"வேண்டாம் பாண்டே— என் சகோதரர்களைப் பற்றி என்னிடம் பேசாதீர்கள். அவர்கள் என்னை மிகவும் தாழ்வாக நினைக்கிறார்கள். இந்தத் தஞ்சையைக் கூட என்னால் நிர்வகிக்க முடியாது என்பது அவர்கள் கருத்து. ஆனால் நான் அவர்கள் முகத்தில் கரியைப் பூசப் போகிறேன்."

"எப்படி வெங்கோஜி?"

"முதலில் அரசுக்கு நிலையான வருவாய் மிக முக்கியம். எனவே வரிவிதிப்பில் நான் நிறைய மாற்றங்களைச் செய்யப் போகிறேன். யாராக இருந்தாலும் சரி, அவர்கள் சம்பாத்தியம் எதுவாக இருந்தாலும் சரி, அதில் மூன்றில் இரு பங்கை ராஜாங்கத்துக்குக் கொடுத்துவிட வேண்டும். அப்படித் திரளும் தொகையில் இந்தத் தஞ்சைக்கென ஒரு தனிப் பெரும்படையையே உருவாக்கப் போகிறேன்.

அதில் ஒரு லட்சம் பேருக்குக் குறையாமல் இருப்பார்கள். இவர்கள் மூலம் தென்னகம் முழுவதையும் என் பிடிக்குள் கொண்டுவருவதுதான் என் திட்டம்.

என் தமையன் சிவாஜியும் சரி, சாந்தாஜியும் சரி மகாவீர அதிசூர பராக்கிரம மராத்திய திலகமாகப் பார்க்கத்தான் போகிறார்கள்.

கிருஷ்ணா, நீ இனி மதுரைக்கு மட்டும் உளவாளி இல்லை. ராமநாதபுரத்துக்கும் நீதான் உளவாளி. ஆயிரம் வராகன் கூடுதலாக இனி உனக்குச் சம்பளம் தரப்போகிறேன். அதோடு என் முத்திரைக் காப்பையும் தருகிறேன். நீ தங்கு தடையின்றி என்னை எப்போதும் எங்கும் சந்திக்கலாம். சரிதானே?"

– வெங்கோஜியின் கேள்விமுன் கிருஷ்ணா புளகாங்கிதங்களைக் காட்டினான். மண்டியிட்டு மகாபிரணாமும் சொல்லி நின்றான்.

அவன் தலைப்பாகை மேல் கைவைத்து வெங்கோஜி ஆசீர்வதித்தபோது பாண்டேக்குப் பெரிதும் ஆயாசமாக இருந்தது.

எல்லாவற்றிலும் பதற்றம்— அவசரம். துளியும் தீர்க்க தரிசனமே இல்லாத சராசரிப் பார்வை. பாண்டேயிடம் இரகசியமாகப் பெருமூச்சுப் பிரண்டெழுந்தது.



இராமலிங்க விலாச முகப்பு மைதானம் ஏக கிளோபரத்தில் இருந்தது.

பருத்திக்குடி நாட்டவர்களும், ஆப்பனூர் நாட்டவர்களும் தங்களது சிலம்பச் சங்கத்துச் சங்கதிகளை எல்லாம் காட்டிய படி ஜனக்கூட்டத்தைச் சந்தோஷப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

பட்டுக்கோட்டையிலும், அறந்தாங்கியிலும் இருந்து வந்திருந்த ஒரு கூட்டம் குழாய் வாண வெடிகளை இடைவெளியின்றி வெடித்து இராமலிங்க விலாசத்து வானத்தையே புகைக் கோட்டமாக்கி விட்டிருந்தது.

கிழவனின் மதுரை வெற்றி ஒரு காட்டுத்தீயைப் போலச் சேது நாடு முழுவதும் பரவியதன் எதிரொலி சீமைகளில் இருந்தும், நாடுகளில் இருந்தும், கூற்றங்களில் இருந்தும், பற்றுகள், வட்டகை, புரவுகள் என்கிற அத்தனை அமைப்பிலிருந்தும் ஜனக்கூட்டம் ராமநாதபுரத்துக்கு வந்து விட்டிருந்தது.

கிழவனின் விடியல் முதல் உறக்கக்காலம் வரை உடன் இருக்கும் அடப்பக்காரரான அழகுசுந்தரம் அவ்வளவையும் பார்த்தபடி ஊர் எல்லையில் இருந்து திரும்பிக் கொண்டிருந்தான்.

அடேயப்பா, என்ன ஒரு கோலாகலம்! என்ன ஒரு குதூகலம் ஜனங்களிடம்!

எங்கு பார்த்தாலும் ஓரம் கட்டி நிற்கும் மாட்டு வண்டிகள்.

சத்திரங்களில் உணவருந்துவதற்காக முண்டுதல்கள். அங்கங்கே சாலை ஓரம், வீட்டுத் தோட்டங்கள் என்கிற இடங்களிலெல்லாம் அடுப்பு மூட்டிச் சமைத்தபடி இருப்பதால் உருவான புகை வளையங்கள்—

பார்க்கப் பரவசமாக இருந்தது. இவர்களுக்கு நடுவில் ராமேஸ்வரம் நோக்கிச் செல்லும் வடநாட்டுக்காரர்களுக்கு எந்தவிதச் சிரமங்களும் வந்துவிடக் கூடாது என்பதற்காக

அரண்மனையின் ஒரு விசேஷ நகரச் சீரமைப்புப் பிரிவு தளகர்த்தரின் துணையோடு அவர்களுக்கு ஒத்தாசை செய்து கருப்பட்டியும், அரிசியும், வாழைக்காயையும் அரசாங்க விநியோகமாகத் தந்து கொண்டிருந்தது.

மொத்தத்தில் மகிழ்ச்சிக்குப் பஞ்சமேயில்லாத நாளாக அன்றைய தினம் இருக்க, அடப்பக்காரனும் அதை எல்லாம் ரசித்தபடி இராமலிங்க விலாச அரண்மனைக்குத் திரும்பிக் கொண்டிருந்தான்.

அரண்மனை கிழவனின் பத்தினிகளால் ஆக்ரமிக்கப்பட்டிருந்தது. பத்தினியர் பெருந்திரளாகத் தங்கள் உறவுக்காரர்கள் அத்தனை பேருடனும் அரண்மனை ஏகியிருந்தனர்.

அரண்மனைக் கோயிலான ராஜராஜேஸ்வரி கோவிலின் மணியோசை எதுவோர் காரணமாக ஓய்வின்றி ஒலித்துக் கொண்டிருந்தது. அரண்மனையின் சவுக்கைப் பகுதியில் அரண்மனையின் மொத்த ஊழியர்களும் வீர புருஷராய் நாடு திரும்பவும் கிழவனுக்கு ஒரு முகமாய்க் கூடி நின்று வரவேற்புத் தரவும், அவ்வேளையில் கரிப்பூசணியால் ஆரத்தி எடுத்தும், கறுப்புக் கோழிகளை அறுத்துப் போட்டும் திருஷ்டி கழிக்கவும் வல்லாளத்தார்களோடு தயாராக இருந்தார்கள்.

மொத்தத்தில் இராமநாதபுரமே பரராஜகேசரியான கிழவன் விஜயரகுநாத சேதுபதியை வரவேற்கவும் வாழ்த்துக் கூறவும் ஒரு பண்டிகை நாள் போல் உல்லாசத்திலும் உற்சாகத்திலும் இருக்க, ஒருவன் மட்டும் கிழவனைச் சந்தோஷப்படுத்திப் பார்க்க வேறுவிதத்தில் தயாராகிக் கொண்டிருந்தான். கையை மடித்துக் கட்டிக்கொண்டும் நாசித் துவாரங்களை மூடித் திறந்தும் மூச்சுப் பயிற்சியில் அவன் இருப்பதை அனுமானிக்க முடிந்தது.

அவன் எதிரில் தேவிப்பட்டினத்தின் பரந்து விரிந்த சமுத்திரப் பரப்பு. அதில் அலைகளின் சடுகுடு விளையாட்டு—



கரைமேல் நின்றுகொண்டிருந்த அவன் மேனிமேல் வேம்பும் வெந்தயமும் கலந்த மூலிகை எண்ணெய்ப்பசை உச்சிச் சூரிய ஒளியில் மின்னிக்கொண்டிருந்தது.

ஒரு கட்டுமரத்தை ஒட்டி நீண்ட தென்னார் கயிற்றுச் சுருளோடு நிற்கும் அவனோடு வயதான ஒரு பெரியவரும் மங்கை ஒருத்தியும் இருந்தனர். பெரியவர் பாகை தரித்து இடையணி மட்டும் உடுத்தியிருந்தார். மங்கையோ மீனவ குலத்தவள் போலப் பருத்திப் புடவையைக் கொசுவமாக உடுத்தி சிப்பிக் காப்பும், பவழத்தாலியும் தரித்திருந்தாள்.

அவள் பார்வையில் கலக்கம் மிகவும் பரவியிருந்தது.

"அட ஏ புள்ள நீ வேற— கடலாடறதும் முத்து முங்கறதும் நமக்குப் புதுசா என்ன— ஏன் இப்படி முகந்தூக்கி நிக்கே?"— அவன் மூச்சுப் பயிற்சிக்கு நடுவில் அவளைப் பார்த்துச் சடைத்துக் கொண்டான்.

அவள் பதிலேதும் சொல்லாமல் அவனையே வெறித்தாள்.

"பாக்காதே அப்படி— மூப்பரே சொல்லுமய்யா எனக்கு ஏதும் ஆயிடாது."

"ஆமாம்— ஆயிடாதாம்— முத்துச் சலாபத்துக்குப் போன ஒரு மனுஷன் திரும்பல— தெரியும்ல? ஆள் விழுங்கிச் சுறா அடிச்சுகிட்டுத் திரியும்போது சலாபம் கேக்குதோ?"

"இந்தச் சுறாவுக்கும் எறாவுக்கும் பயந்த ஆளு இல்லடி நா. என் ராசன் மகாராசனா ஜெயம் கொண்ட சிங்கமா வாரைல நம்ம வலையங்க பரிசா கைநிறைய முத்தும் பவழமும் தந்தா அப்பல்ல மதிப்பா இருக்கும். நம்ம ராசா நமக்குக் கொடுத்த தானங்களை நெனச்சிப்பாரு. அதுக்குப் பதிலா உசிரையேல்ல தரலாம்—"

— அவளால் அதற்குமேல் அவனுக்கொரு பதிலைத் தர முடியவில்லை. கலக்கத்தைக் கண்ணீரில் காண்பித்தாள்.

கடலையும் ஏறெடுத்தாள். அப்பொழுது அவள் பார்க்க முடிந்த தூரத்தில் ஒரு சுறா தன் பின்பாகத்தை வெளிக்காட்டிவிட்டுச் சமுத்திரத்தின் அடி ஆழம் தேடிப் போய்க்கொண்டிருந்தது.

பகீர் என்றது அவளுக்கு.

உதடுகள், "கடல் தாயே... நீதான் தாயி காப்பாத்தணும்" என்று முணுமுணுத்தன.

அவனும் கட்டுமரத்தைத் தள்ளிக்கொண்டு சீறி வரும் அலையைக் கிழித்துக் கொண்டு உள்ளே நுழையத் தொடங்கினான்.

தாவி ஏறியபடி கரைமேல் நின்றபடி வெறிக்கும் தன் மனைவியைப் பார்த்தவன் துயாராகக் கயிற்றின் தொடக்கத்தை எடுத்து இடுப்பில் உறுதிபடக் கட்டிக் கொண்டான்.

மூப்பர் என்று அவனால் விளிக்கப்பட்ட வலையர் துடுப்புப் போடுவதில் மும்முரமாக இருந்தார்.

கரைமேல் நிற்கும் பெண் கலக்கத்தோடு பார்த்துக் கொண்டே இருந்தாள்.

சில நாள்களுக்கு முன்புகூடச் சிலர் இதுபோல் முத்துக் குளிக்கச் சென்று மீள முடியாதபடிச் சுறாவின் பசிக்கு இரை யானது ஞாபகத்துக்கு வந்தது.

உடம்பின் ஒரு பாகம்கூடக் கரை ஒதுங்காதபடி அப்படியே முழுவதுமாக இரையாகிவிட்டிருந்தார்கள். உடம்பில்லாத அவர்களுக்கான சடங்குகளை அவர்களின் மனைவியர்கள் தங்களையே சடலமாக்கிக் கொண்டு செய்து விட்டுப் பின் மூங்கில் பரண்மேல் ஏறித் தீக்குழிக்குள் குதித்து உயிர் விட்டதெல்லாம் ஞாபகமாக ஞாபகத்தில் வந்து, சமுத்திர அலைகளைப் போலவே அலை மோதத் தொடங்கியது.

# 32

சமுத்திரம் என்றாலே அலை எகிறல்களும் கட்டுமரத்துக்கு அலைக்கழிப்புகளும் மிகவும் சகஜமான ஒன்றுதான். அதோடு சுற்றி வரும் சுறாக்களின் வீரியம் மிக்க தாக்குதல்களுக்கெல்லாம் ஈடுகொடுத்தால்தான் ஒருவன் கடலாட முடியும்.

சுறாக்கள் பார்க்கும்படியாகத் திரிகின்றன என்றால் அவை ஊடுருவித் திரியும் நீரின் அடிப்பரப்பில் அநேக மாற்றங்களும், அழுத்தங்களும் ஏற்பட்டிருக்க வேண்டும். அத்தோடு அவை விழுங்கி ஏப்பம் விடப் பார்க்கும் கடல்பசுக்களும் பொடிக் கத்திரி வாழை மீன்களும் கூட்டம் கூட்டமாக அந்தக் கடல் வெளி நாடி வந்திருக்கின்றன என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

இவற்றையெல்லாம் கணிப்பதில் மூப்பர் மிகமிகச் சமர்த்தர். எழுபது வயதாகிறது அந்தக் கிழவருக்கு. பத்து வயதிலிருந்து கடலாடி வருகின்றவர். தரையில் இருந்த நாட்களைவிடத் தண்ணீரில் இருந்த நாட்கள் மிக அதிகம்.

காற்று வீசும் திசை, தண்ணீரில் நிகழும் மாற்றம், மெலிதாக உணர முடிந்த ஒருவித அழுக்கு வாசம் என்று சர்வத்தையும் வைத்து அந்தக் கடல் வெளிமேல் நிகழும் மாற்றங்களைக் கச்சிதமாகக் கூறிவிடுவார். சுறாக்களைப் பார்த்துக் கணிசமாகப் பயந்த வலையனைப் பார்த்து, கடல் வெளி மேல் ஏகியிருக்கும் இன்றும் அவற்றை அவர் உற்சாகமாகக் கூறத் தொடங்கினார்.

"சங்கா தெகிரியமாப் போகலாம். இந்தச் சுறால்லாம் நம்ம ஒண்ணும் செய்யாது. இதுங்க நடுவீட்டை விட்டு வந்து

விளையாடிக்கிட்டிருக்குதுங்க. நம்மக் கண்டதும் உள்ள ஓடும் பாரு–" என்றார்.

அப்படித்தான் ஆனது..! கட்டுமரம் அலைகளின் மேல் எழும்பியும் தாழ்ந்தும் பயணப்பட்டு வருவதைப் பார்த்து அது வெகு தூரத்துக்கு ஓடத் தொடங்கியது.

மூப்பர் திரும்பிக் கரைப் பக்கம் பார்த்தார்.

ஒன்பது கிரகங்களும் ஒன்பது நவபாஷாணத் தூண்களாகிக் கடலின் உப்புக் காற்றுக்கும், அதன் உள்ளிருக்கும் குணங்களுக்கும் ஈடுகொடுத்து நிற்கும் தேவிப்பட்டினத்து கரும்ந்துறை என்னும் கரையும், அந்தக் கரை மேல் சங்கன் என்று அவர் விளிக்கும் வலையனின் மனைவியும் நிற்பது சுமாராகத் தெரிந்தது.

"சங்கா– உம் பொஞ்சாதி திரும்பாம நின்னு பார்த்த படியே இருக்காலே– நம்ம சுறா விழுங்கிப்புடும்னு அச்சம் அவளுக்கு–" என்றார்.

சங்கன் என்னும் அந்த வலையனும் திரும்பிப் பார்த்தான்.

"செங்காணிக்கு ஆனாலும் அச்சம் மூப்பரே– என்னை அவ கடலாடத் தெரியாத கைப்புள்ளையாவே நினைக்கா–" என்றபடி துடுப்பை வலித்தவன், "மூப்பரே– இன்னிக்கு நிறைய முத்து ஆப்படணும் மூப்பரே– ஆப்புடுமா?" என்று கேட்டான்.

"கட்டாயம் ஆப்புடும் சங்கா– வெரசா இல்லாமப் பூந் தூறலா பலமழை பெஞ்சுருக்கு பங்குனியில. அதோட ஒவ்வொரு சொட்டும் ஒரு முத்துதான்.

"எறாக்கூட்டம் மழைத் தண்ணியை வாயப் பொளந்துக் கிட்டு விழுங்குனதை நானே பார்த்தேனே. அதிலும் வடக்கு மழை வத்தாத முத்து மழைங்கறது உனக்குத் தெரியாதா?"

– மூப்பர் அனுபவ ஞானம் காட்டிப் பேசினார். காற்று சடசடவென்று அடித்து வீச்சலைக் கூட்டத் தொடங்கியிருந்தது. கட்டுமரம் அதற்கேற்பத் திசை திரும்ப,



"இப்படியே போலே– அதா அங்கன– அங்கனதான் மேகம் மண்டி மழை கொழுத்துச்சு. அங்கன மூங்குனா சத்தியமா நல்ல விளைஞ்ச சிப்பியா அள்ளலாம்–" என்று கடல் வெளியை நோக்கிக் கையை நீட்டிக் காட்டினார்.

அவர் காட்டிய திக்கில் பாய்மரக் கப்பல் ஒன்றும் கண்ணில் பட்டது. கப்பலின் மையக் கம்பத்தில் பச்சைக் கொடி ஒன்றும் பறந்தபடி இருந்தது.

"மூப்பரே... நம்ம மரைக்காயர் கப்பலோ?" என்று கேட்டான் சங்கன்.

"ஆமாம்... நம்ம தருமதுரை சீதக்காதி மரைக்காயர் கூட்டத்துக் கப்பலேதான். நாலு நா முன்ன கிழக்க போனிச்சு. இப்ப திரும்புதாட்டம் இருக்குது–"

– மூப்பர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அந்தப் பாய்மரக் கப்பலின் உள்ளிருப்போர் சங்கனையும் மூப்பரையும் பார்த்துவிட்டுக் கைகளை அசைத்தனர். கூடவே 'டமடம' வென்று மத்தளம் ஒன்றையும் தட்டிச் சப்தமெழுப்பினர்.

அதன் தட்டுச் சப்தத்திற்கேற்ப அர்த்தங்களுண்டு. ஓயாமல் சப்தம் ஒலித்தால் கப்பலுக்குப் பெரிய ஆபத்து ஏற்பட்டிருக் கிறது என்று பொருள். விட்டு விட்டு ஒலித்தால் அவர்கள் உல்லாசமாக இருப்பதாக அர்த்தம். மூன்று தட்டுக்கள் என்று சீரான அளவில் ஒலித்தால் ஏதோ உதவி கேட்கிறார்கள் என்று பெரிய பொருள் விளக்கங்களைக் கொண்டிருந்தது அது.

சிலர் வேட்டுப் போட்டு ஆபத்தை உணர்த்துவதும் உண்டு. எது எப்படியோ மரைக்காயரின் அழைப்பு சங்கனுக்கும் மூப்பருக்கும் துல்லியமாகப் புரிந்தது.

"சங்கா– கட்டானைக் (கட்டுமரத்தை) கப்பலைப் பார்த்துத் திருப்பு. சுக்கான் வலிக்கிறவன் கிட்டக் கூப்பிடறான் பார்–" என்றார். சங்கன் அடுத்த நொடி தன் கறுத்த தோள்பாகத்தில் திமில் கட்டுமளவு வலுக் கூட்டித் துடுப்பைப் போட்டுத் திருப்பினான். கழுத்திலும் தோளிலும் காட்டாறாக வியர்வைத்

தண்ணீர் ஒரு நீர்ப் பாம்பாட்டம் ஓடி அவன் இடைத் துணியில் போய் உறையத் துவங்கியது.

கிட்டே நெருங்க நெருங்க, பாய்மரமும் அவர்களை நோக்கித் திரும்பியது.

"ஹேய்ய்ய்..." பாய்மரக் கப்பலில் பாகை தரித்த ஒரு குறுந் தாடிக்காரர் முழுக்கையும் மூடிய அளவு சொக்காய் அணிந்த கரத்தை ஆட்டி அவசரம் என்கிற மாதிரி சைகை காட்டினார்.

"ஆருங்க அது– மரைக்காயர் ஆளுங்களா?"

"ஆமாம்– ஒரு சகாயம் செய்யத்தான் இரண்டு பேரையும் கூப்பிட்டேன்–"– அந்த மனிதரின் பதில் குரலைத் தொடர்ந்து சங்கனின் கட்டுமரம் அந்தப் பாய்மரக் கப்பலை ஒட்டி நிற்கவும் கப்பலிலிருந்து ஒரு நூலேணியைச் சரித்தார் அந்த மனிதர்.

அதில் ஏறாமல் கட்டுமரத்தில் நின்றபடியே, "என்ன சகாயம் மரைக்காயரே?" என்று எதிர்க்கேள்வி கேட்டான்.

"ஏறிவா சொல்றேன்– நீ சேதுக்கரையான்தானே?"

"ஆமாம் காயரே–" என்றபடியே நூல் ஏணியில் ஏறினான் சங்கன். மூப்பர் கட்டுமரத்திலேயே உட்கார்ந்து நடப்பதைப் பார்க்கத் தொடங்கினார்.

நூலேணி வழியாக ஏறிய சங்கன் கப்பல் தளத்தில் குதித்துப் பின் நிமிர்ந்து எழுந்தான்.

அந்தத் தளத்தில் நடமாடவே இடமில்லாதபடி ஏகத்துக்கும் பொருள்கள் குவிந்து கிடந்தன. ஒரு பக்கம் ஈச்சம்பாய் மேல் பனை வெல்ல உருண்டைகளும், மறுபக்கம் அரைகுறையாகப் பழுத்த ஈச்சம் பாளைகளும், இன்னொரு பக்கத்தில் உரித்த வெள்ளாட்டின் தோல்களும் குவிந்து கிடக்க, அவைகளைப் பிரம்புத் தட்டிகள் அரைகுறையாக மூடியபடி இருந்தன. அந்த வர்த்தகப் பொருள்களுக்கு நடுவில் ஓர் இளம் பெண்! உடல் முழுவதையும் சால்வையால் போர்த்திக் கொண்டு அடக்க



ஒடுக்கமாகவும், அதே சமயம் கண்களில் ஒரு பயப் பரவலோடும் உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

சுக்கான் அறையில் சிலர் நின்று கொண்டு அதன் நுழை வாயில் வழியாகக் கப்பல்தளத்தின் மேல் எழுந்து நிற்கும் சங்கனைப் பார்த்தபடி இருந்தனர். துண்டுத் தாடியோடு சங்கனைக் கூவி அழைத்திருந்த கப்பல் மரைக்காயர் அந்தப் பெண்ணை ஒரு பார்வையும், சங்கனை ஒரு பார்வையும் பார்த்தபடியே வாயைத் திறந்தார்.

"வலையா– நான் பாமியம் போய்ட்டு வரைல இந்தக் கடல்ல இந்தப் பொண்ணு தனியா ஒரு மரக்கட்டையைப் பிடிச்சுக்கிட்டுத் தத்தளிச்சுக்கிட்டிருந்ததைப் பார்த்தேன். காப்பாத்தி இங்க இடம் கொடுத்துருக்கேன். பாக்க உங்க சாதி ஆள் மாதிரி தெரியுது. 'யார் நீ– எப்படி இப்படி ஆச்சுது'ன்னு கேட்டா வாயைத் திறக்கமாட்டேங்கறா. கொஞ்சம் பாரு– இவ உங்க சாதி மகளா?"

— மரைக்காயரின் விளக்கம் சங்கனுக்குள் ஏராள அதிர்ச்சிகளைத் தோற்றுவித்தது. அந்தப் பெண்ணைத் திரும்பி ஆழமாகப் பார்த்தான்.

அவள் அவன் பார்க்கவும் சால்வையை இறுக்கமாகச் சுற்றிக்கொண்டு அவனை விழுங்கிவிடுகிறவள் மாதிரிப் பார்த்தாள். சங்கன் சற்று அருகே சென்று உடம்பை வளைத்து அவள் முகத்தின் அருகில் குனிந்து உற்றுப் பார்த்தான். அவள் தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

"காயரே– இது சத்தியமா எங்க சாதிப் பொண்ணுல்ல. இது– இது– ஏ புள்ள– யார் நீ? அதான் காயர் காப்பாத்தி ஒண்ட இடம் கொடுத்துருக்காருல்ல? சொல்லலாமில்லே–?"

— அவனது பதிலில் கேள்வியும் அதட்டலும் கலக்கவும் அவள் தொடர்ந்து மருண்டாள். சங்கன் அந்தப் பாய்மரக் கப்பலின் விளிம்புக்கு வந்து குனிந்து, கீழே கட்டுமரத்தில்

அமர்ந்திருந்த மூப்பரைப் பார்த்து அவரைக் கூப்பிடத் தொடங்கினான்.

"மூப்பரே– கொஞ்சம் மேல வாரும். ஒரு பொட்டக்குட்டி ஒருத்தி அழிச்சாட்டியமா உக்கார்ந்துக்கிட்டிருக்குது. வாரும்– மேல வாரும்."

அவன் அழைப்பைத் தொடர்ந்து மூப்பர் மேல் ஏறி வந்தார். தளத்தில் இறங்கி நிமிர்ந்தவர் முடங்கிக் கிடக்கும் அந்தப் பெண்ணையும் ஆச்சரியத்தோடு பார்த்தார்.

"என்ன சங்கா– என்ன விஷயம்?"

"இந்தப் பொண்ணு இந்தத் தண்ணி மேல அல்லாடிக் கிட்டு இருந்துருக்கு. காயர் காப்பாத்தியிருக்காரு. பாக்க நம்ம சாதி ஆள் போல இருக்கிறதால நம்மக் கூப்பிட்டிருக்காரு. ஆனா இதுவோ வாயைத் திறக்க மாட்டேங்குது. பண்ணையம் அடைஞ்ச வாயாட்டம் திகைச்சுப் போய்ப் பாக்குது. உமக்குத் தெரியுமா பாரும்– கிட்டப் போய்ப் பாரும்."

— சங்கன் மூப்பரைத் தூண்டிவிட மூப்பரும் கிட்டே நெருங்கிப் பார்த்தார். பார்த்த நொடி கண்கள் அகல, "ஆத்தி– நீ யாழ்ப்பாணக்காரில்லே–?" என்ற கேள்வி உதடுகளிடையே சப்தத்தோடு வெளிப்பட்டது.

மூப்பரின் திகைப்பு சங்கனுக்கும் ராவுத்தருக்குமே கூட அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் அளித்தன.

அந்தப் பெண்ணோ மருளலின் உச்சிக்கே போனாள்!

"மூப்பரே அப்ப இவளை உங்களுக்குத் தெரியுமாக் கும்?"– சங்கன் மூப்பரின் தோளை, கேட்டபடியே தொட்டான். மூப்பரின் முகத்தில் ஆமோதிப்பு.

மரைக்காயர் முகத்தில் ஒருவித நிம்மதிப் பரவல்.

"இந்தப் புள்ளையை எப்படி மூப்பரே உங்களுக்குத் தெரியும்? இவ நம்ம சாதிப் பொண்ணு இல்லையே–"– சங்கன் மூப்பரின் மௌனத்தை உடைக்க, தொடர்ந்து கேள்விகளைக் கேட்டான்.



"நம்ம ஜாதிப் பொண்ணா இருந்தாத்தான் தெரியணுமா– என்ன கேள்வி கேக்கே நீ? இவ யாழ்ப்பாணக்காரப் பொண்ணு. இவ நம்ம சேதுக்கரைக்கு எதுக்கு வந்திருக்கா தெரியுமா?"

— மூப்பர் ஆவேசத்தோடு திரும்பிக் கேட்டார். கடல் காற்று அவர்களைக் கோதிவிட்டுப் போய்க் கொண்டிருக்க பாய்மரம் காற்றால் தள்ளப்பட முடியாதபடி நடுவில் அதை ஒருவன் பாய்போல் சுருட்டிக் கொண்டிருந்தான்.

பாய்மரக் கம்பின் உச்சியில் கடல்நாரைகளும் கூழைக் கடாக்களும் வரிசையாகப் பள்ளிக்கூட மாணவர்களைப் போல உட்கார்ந்து கொண்டு சிறகுகளைச் சடைத்து விட்டுக் கொண்டிருந்தன.

மூப்பர் குரலில் தொனித்த கோபம் அவற்றைக்கூடக் கீழே பார்க்க விட்டன.

மூப்பரோ சங்கனுக்குப் பதில் சொல்லாமல் அவளைச் சமீபித்துக் கத்த ஆரம்பித்தார்.

"இதா பாரு... உன் எண்ணம் மட்டும் அரண்மனை ஆட்களுக்குத் தெரிஞ்சிச்சுன்னா உன்னை வெட்டிப் பொலி போட்ருவாங்க.

ஓடிப்போயிருன்னு உன்னை நான் தோணியில ஏத்தி விட்டும் நீ போவாம நடு வழில திரும்பப் பாத்துருக்கே.

இப்பவும் சொல்றேன். என் பேச்சைக் கேட்காம நீ ராம நாதபுரம் போகப் பார்த்தே... நடக்கறதே வேற... ஆமா...!"

— மூப்பர் எகிறிக் குதித்தார். மரைக்காயருக்கு எல்லாமே பெரிய புதிராக இருந்தது.

"மூப்பரே... என்னய்யா சேதி? எதுக்காக இப்படி இரையறீர்? யாரு இவ?"

அவரும் கேட்டார். ஆதலாதிசனோடு பாய்மரக் கப்பலின் மற்ற சகாக்களும் சூழ்ந்து நின்றபடி மூப்பர் சொல்லப் போவதைக் கேட்கத் தயாரானார்கள்.

"என்னன்னு சொல்வேன் சாயபே—? இவ ஒரு வைத்தியம் யாழ்ப்பாணத்துக் கரையாளர் பொண்ணான இவளுக்குச் சேது நாட்டுக்கு ராணியாகணும்கற ஆசை வரலாமா?"

— மூப்பர் திருப்பிக் கேட்கவும் அத்தனை பேரும் விக்கித்துப் போனார்கள்.

சங்கன் வாயைப் பிளந்துவிட்டான்.

"மூப்பரே என்னவேய் சொல்லுதீர்?"

"என்னவா— நான் சொன்னது புரியலியாக்கும்? இந்தப் பொண்ணுக்கு நம்ம சேதுபதி ராசா போ்ல காதலாம். கட்டுனா அவரைத்தான் கட்டுவாளாம். அதுக்காகவே தோணி ஏறி நம்ம சேதுக்கரைக்கு வந்த இவளை நான் சந்திச்சது இவளோட அதிர்ஷ்டமுன்னுதான் சொல்லணும்.

என்னாண்ட ராசாவை எப்படிப் பாக்கலாம், எங்க பாக்கலாம்னு கேட்டுத் தொணப்புனா. நீ எதுக்குப் பாக்கணும்னு நான் திருப்பிக் கேட்டேன்.

அப்ப நம்ம கரைமேலே அழகம்ம ராணி பல்லக்குல வந்தாங்க. அதைப் பார்த்துட்டு, நானும் ஒரு நா இதே போலப் பல்லக்கு ராணியா உக்காந்து வலம் வருவேன்னு சொல்லிப் பிலுபிலுன்னு பிடிச்சுக்கிச்சு. அப்பதான் எனக்கு இதோட எண்ணம் தெரிஞ்சிச்சு."

— மூப்பர் சற்று நீளப் பேசிவிட்டுக் கொஞ்சம் ஆசுவாசித்தார். அவர் பேசுவதை ஒடுங்கியபடியே கேட்டுக் கொண்டிருந்த அந்தப் பெண்ணும் ஒடுங்கியது போதும் என்று நினைத்தாளோ என்னவோ, சால்வையை உதறிவிட்டு விருட்டென்று எழுந்தாள்.



அப்பொழுதுதான் அவளது முழு உடலையும் பார்க்க முடிந்தது.

அற்புதமான அழகி என்பதற்கான அத்தனை சங்கதிகளும் அவள் மேனிமேல் பளிச்சிட்டன. கருநிறப் பட்டாடையில் கொசுவக்கட்டும் மார்புக்கு மஞ்சள் பட்டில் கச்சையும் கட்டியிருந்தாள். கழுத்தில் நன்கு விளைந்த கருநிற முத்துக்களால் வளைந்த மாலை.

தலைக் கூந்தல் புட்டம் கடந்து அதில் இன்னமும் ஈரமிருந்தது. கண்களில் சென்னையின் பிரளல். காதில் தங்க வட்டயம்.

சங்கன் மிரண்டு போனான்.

அவள் மூப்பரைத் தீர்க்கமாகப் பார்த்தாள்.

பின், "அய்யா கிழவரே என்ன ரொம்பத்தான் கதைக்கீர்? உம்மாண்ட நான் என் ஆசையைச் சொன்னது தப்பய்யா. நீர் என்ன இந்தக் கடல்புரத்துக்கே ராஜாவோ?

என்னை உம்ம ராஜா போகச் சொல்லுவாராக்கும்? என்னைக் கண்ட க்ஷணம் அவர் எனக்கு எல்லாம் செய்வார் தெரியுமோ?

நான் ராஜபத்தினியாவேன்னு மன்னார்ல ஒரு பௌத்த சன்யாசி விளக்குச் சோழி போட்டுச் சொன்னது உமக்குத் தெரியாது.

இன்று நேற்றில்லை—

உம்ம ராசா மேலே நான் உசிரை வெச்ச வருஷம் பலவாச்சு?

இப்போ சொல்லுறேன். அவருக்கு உயிருக்கே ஒரு பெரிய ஆபத்து வரப்போகுது. நான்தான் அவரைக் காப்பாத்தப் போறவ— அது கொண்டே நான் தோணியில போகலை. கடல்ல குதிச்சு நீந்தினதாக்கும்.

உமக்கு நம்பிக்கை இருந்தால் இன்னும் சில மணிக்குள் என்னை அரண்மனை கொண்டு போய்ச் சோதிக்கப் பார்த்துக் கொள்ளும்.

நான் போகாத பட்சத்தில் உம்ம ராசா உயிர் போகும். போயே தீரும்!"

— அவள் படபடப்பில் அதிர்ச்சி தரும் விஷயங்கள்!

## 33

இராமலிங்க விலாசம்!

சேது ஜனச் சமுத்திரத்துக்கு நடுவிலே அரண்மனை முகப்பில் வளரிக்கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்தது. நுழைவாயிலில் அரண்மனை யானை தன் வளைந்த தும்பிக்கையில் மலர்மாலை ஒன்றோடு காத்துக் கொண்டிருக்க, கிழவன் அங்கு வந்து தேங்கி நின்ற பல்லக்கினின்றும் வெளிப் பட்டு அந்த மாலையை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்.

அந்த மங்கல நிகழ்ச்சிக்குச் சுருதி சேர்ப்பது போல மத்தளக் கொட்டுகளும், துந்துபி முழக்கங்களும் சேர்ந்து கொள்ள, கிழவனின் அன்புச் சகோதரி உடையக்காளும் ஆசை மனைவி ,காதலி நாச்சியாரும் ஆரத்தித் தட்டுடன் எதிர் வந்தனர். கூடவே மற்ற பத்தினியர்கள்.

அந்தக் காட்சிகளும், மக்களின் எழுச்சியும் கிழவனோடு சேர்ந்து வந்து பின்னால் நின்றபடி இருக்கும் குமார பிள்ளைக் குள் பெரிய சிலிர்ப்பையே உண்டு பண்ணியிருந்தது.

ஆரத்தி எடுத்த கைகளோடு உடையக்காள் கிழவனைக் கர்வமிக்க ஒரு பார்வை பார்த்தாள். காதலி நாச்சியோ கிழவன் காலடியில் விழுந்து காலடி மண்ணை எடுத்து நெற்றியில் பூசியபடி இருந்தாள். மற்ற பத்தினியர்களும் அப்படியே செய்தார்கள்.



அதைக் காதலி நாச்சியின் அன்புச் சகோதரனும் கிழவனின் ஆப்த மைத்துனனுமான பெரிய உடையத்தேவன் பார்த்துச் செருமாந்து போனான். கிழவன் அனைத்தையும் கவனித்துச் சந்தோஷித்தபடி குமாரபிள்ளையின் பக்கம் திரும்பினார். பார்வையே பிள்ளையை முன்னால் அழைத்தது.

பிள்ளையும் அதை உணர்ந்து முன்னால் வர அந்தச் சபைக்கைப் பகுதியே போதாது என்பது போல நிரம்பி வழியும் அரண்மனைச் சனங்கள் எல்லோரும் அடுத்து நடக்க இருப்பதைக் காணத் தொடங்க கிழவன், பிள்ளைக்கு உடையக்காளை அறிமுகப்படுத்தத் தொடங்கினார்.

"குமாரபிள்ளை... இவள் என் அன்புச் சகோதரி உடையக்கா நாச்சியார். மண்ணிலிருந்து விழுந்து எழுந்தவள் என் பத்தினி காதலி நாச்சி. அதோ அவர்கள் எல்லாரும் கூட என் பத்தினியர்கள்தான். எங்கே என் அன்புச் சகோதரன் சீதக்காதி_?"

— அறிமுக விக்ஞாபனத்தோடு கிழவன் பார்வை நாற் புறமும் விரைந்ததில் அடப்பக்காரனோடு சேர்ந்தபடி அமரிக்கையாக நின்று கொண்டிருந்த வள்ளல் சீதக்காதி, கிழவனின் பார்வையில் பட கிழவன் உற்சாகமாக வள்ளலை அருகே அழைத்தார்.

"தம்பி_ வா அருகே_ அமைச்சன் நீ இப்படியா எட்டத்தில் இருப்பது?"

"மனத்தில்தான் எப்போதும் கிட்டத்தில் இருக்கிறேனே சேதுபதி?"— கேட்டபடி அருகே வந்த சீதக்காதி குமார பிள்ளை யைப் பார்த்து வணங்க, பிள்ளையும் பதில் வணக்கம் செய்தார்.

"தம்பி_ இனி பிள்ளை நம் தளவாய்களில் ஒருவர்."

"அறிவேன்– அறிவேன்–"

"பிள்ளை இல்லாவிட்டால் வெற்றி இல்லை."

"அதையும் அறிவேன்."

"பிள்ளை– இதோ உன் எதிரில் தெரியும் இந்த இராமலிங்க விலாசம் இருக்கிறதே இது இந்தத் தம்பி எனக்களித்த பரிசு– உள்ளிருக்கும் கலைநயம் ஒவ்வொன்றும் சீதக்காதி எத்தனை பெரிய ரசிகன் என்பதைச் சொல்லாமல் சொல்லும்–"

"என்ன சேதுபதி இது– பொன்னையும் பொருளையும் கொட்டிக் கொடுத்து வடிவமைக்கச் சொன்னது நீங்கள். அந்த ராமனுக்கு உதவிய அணில் போல ஏதோ என்னாலானதைச் செய்தேன். உடனே நானே அனைத்துக்கும் காரணம் என்பது போலப் பேசுகிறீர்களே–"

— வள்ளல் தான் எந்த நிலையிலும் பணிவையும் நன்றியையும் மறந்து விடாதவன் என்பது போலப் பேச, அதைக் கேட்டு அத்தனை பேருமே சிலிர்த்துப் போயினர்.

அடப்பக்காரர் அழகு சுந்தரம் நுழைவாயிலில் நிகழும் அன்புப் பரிவர்த்தனைகளை அரண்மனைக்குள் எடுத்துச் செல்லப் பிரயாசைப்பட்டவரைப் போல நெருங்கி வந்து திருவாய்முன் கைபொத்தி.

"சேதுபதியவர்கள் உள்ளேகலாம். நம் ஜனங்கள் காலை முதலே திரண்டு வந்து தங்களைக் காணத் துடித்தபடி இருக்கிறார்கள். தாங்கள் மேல் மாடம் ஏகி அங்கிருந்து காட்சி தந்தால் மிக மகிழ்வார்கள்" என்று பணிவாகக் கூற, கிழவனும் குமாரபிள்ளை மற்றும் பெரிய உடையத் தேவர், அம்பலக்காரன், சோளகை என்கிற தனது வீரமிக்கத் தளபதிகளோடு அரண்மனை மாடம் ஏகிடத் தயாரானார்.

கிழவனின் பத்தினியர் கூட்டமும், பந்துக்களும் அதைப் பார்த்து வழிவிட அவர்களில் தாதியனின் தர்மபத்தினியும்,



கிழவனின் தமக்கை மகளுமான பொன்னாத்தாள் மட்டும் அலைபாய்ந்தபடி இருந்தாள். விழிகளை உருட்டிக் கிழவனோடு வந்த பல்லக்குகளையும் அதில் இருந்து இறங்கி வந்த அவரது கூட்டத்தவரையும் சலித்தபடி இருந்தது அவள் பார்வை.

அத்தனை களேபரத்திலும் கிழவன் பார்வை அதை உணர்ந்து கொண்டதுதான் ஆச்சரியம்.

"பொன்னாத்தா அருகே வா–" என்று அழைக்க அவளும் மருட்சியோடு அருகே வர, "யாரைத் தேடுகிறாய்– தாதியனையா–?" என்று கச்சிதமாகக் கேட்க, பொன்னாத்தாள் முகத்தில் ஆமோதிப்பு உணர்வுகள்.

"தாதியன் இடைவழியிலேயே பிரிந்து தன் மனைக்குச் சென்றுவிட்டான். அதாவது உன் மாளிகைக்கு" என்று கிழவன் பதில் கூறவும் அவள் முகத்தில் மெலிதான அதிர்ச்சி.

"பொன்னாத்தா– தாதியன் இந்தப் போரில் எனக்குப் பேருதவி செய்தான். அவனது வீரத்தை விவரிக்க வார்த்தைகளே இல்லை. அவனுக்குச் சற்றே பயணக் களைப்பு. அதனால் தான் முன்னால் சென்றுவிட்டான்" என்று சற்றே பூசி மெழுகுவது போல அவர் பேசுவது அவளுக்குப் புரிந்து போனது.

மாமன் தன் மனது நோகக் கூடாது என்பதற்காக அப்படிப் பேசுகிறார் என்பதைப் புரிந்து கொண்டவள், "மாமா" என்றபடி கிழவனின் கைகளைப் பற்றிக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள். உடையக்காளை அந்தக் காட்சி உணர்ச்சி வசப்படச் செய்துவிட்டது.

'ச்சே... என்ன மருமகப் பிள்ளை இவன். வெற்றிக் களிப்பில் பங்கு கொள்ளக்கூட மனத்தில் இடமில்லாதபடி–'

— அவளுக்குள் வருத்த உணர்வுகள் புரண்டு நெளியத் தொடங்கின.

அதற்குள் கிழவனோ தன் வீர சகாக்களோடு மாடம் ஏகி மக்கள் வெள்ளத்தைப் பார்த்துப் பேசத் தொடங்கிவிட்டிருந்தார்.

"அருமைச் சேதுநாட்டுச் செல்வங்களே... அத்துணை பேருக்கும் என் வந்தனங்கள், வாழ்த்துக்கள்! மதுரைச் சிக்கலைத் தீர்த்துவிட்டு ஒரு வெற்றியோடு வந்திருக்கும் என்னை வரவேற்கத் திரண்டு வந்திருக்கும் உங்களை எல்லாம் பார்த்துப் பூரித்துப் போகிறேன்.

இந்த வெற்றிக்கெல்லாம் காரணம் என் சகாக்கள்தான். அதற்கும் மேலான காரணம் ஒன்று உண்டு. அதுதான் மறவர்களுக்கே உரிய வீரம்! நமது வீரம் ஓடும் புலியின் வாலைப் பிடித்து இழுத்து அதை நம் தோள்மேல் போட்டுக் கொண்டு கொஞ்சும் வீரமாகும். அதோடு உயிரைத் துளிக் கூடப் பெரிதாகக் கருதாமல் மார்பில் காயம் தாங்கும் மகத்தான வீரமாகும்.

இந்த வீரமும் தீரமும் நம்மோடு இருக்கும்வரையில் யாரும் நம்மை எதுவும் செய்துவிட முடியாது.

பழைய வரலாறு என்பது மறவன் ஒரு மாவீரன் என்பது மட்டும்தான். அதனால்தான் ஆட்சியாளர்களின் படையில் நாம் மிகுந்திருந்தோம். ஆட்சிக்குக் கேடு என்று வரும்போதெல்லாம் கேடயம் போல முன்னால் வந்து தடுத்து ஆட்சியாளர்களையும், நாட்டையும் காத்துத் தந்தோம்.

இன்று நமக்கே ஒரு நாட்டை உருவாக்கிக் கொண்டு நாமே ஆட்சி செய்யும் ஒரு நிலையை அடைந்துள்ளோம். இது சுயமரியாதை உணர்ச்சியால் வந்தது என்றால் மிகையே கிடையாது. அந்த உணர்ச்சியின் உச்சமாகத்தான் நான் இன்று ஒரு உதவியை மதுரை நாயக்க அரசாங்கத்துக்குச் செய்து கொடுத்துவிட்டு வந்திருக்கிறேன்.

ஒரு மறவன் முன்பு மகத்தான படை வீரன். இன்று அவன் ஒரு பர ராஜ கேசரி. அதாவது அவன் அரசன் மட்டுமல்ல. அயலார்க்கு அவன் நல்ல நண்பன். இது மதிப்பு மிக்க ஒரு மாற்றம்.



சேது நாட்டை ஒரு சின்னப் பாளையம் என்று சொன்னவர்கள்தான், இன்று சேது நாட்டைத் தங்களுக்கான காவல் கோட்டையாகப் பார்க்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

என்னை எத்தனையோ புலவர்கள் புகழ்ந்ததுண்டு. அப்பொழுதெல்லாம் வராத மகிழ்ச்சியை விட இப்பொழுது நான் மிக மகிழ்கிறேன். காரணம்— எதிரிலேயே நம்மை நண்பன் என்றும், காவலன் என்றும் பாராட்டியதால்தான்— மதுரை இனி நமக்குப் பகை நாடில்லை. நாமும் யாருக்கும் பகைவர்கள் இல்லை.

ஆனால் யாராவது பகைவர்களாக நினைத்தால் நாம் அதற்குப் பொறுப்பில்லை. நம்மிடம் வாலாட்ட நினைத்தால் அவர்கள் யாராக இருந்தாலும் சரி— அவர்களது வாலை ஒட்ட நறுக்கிச் சேது நாட்டு வீரத்தை நிலைநிறுத்துவதுதான் என் ஒரே நோக்கம்.

அதற்கு நமது அருட்பெரும் தெய்வமான அன்னை ராஜ ராஜேஸ்வரியின் அருள் துணை செய்யும். இராமநாத சுவாமியின் அருளும் பெருந்துணை செய்யும். நீங்களெல்லாரும் துணை செய்வீர்கள் என்று நம்புகிறேன்.

இந்த வேளையில் உங்களுக்கு எனக்கு அன்புப் பரிசாகக் கிடைத்த குமாரபிள்ளையையும் அறிமுகப்படுத்துகிறேன்."

— கிழவன் பேசி முடித்துவிட்டுக் குமாரபிள்ளையை முன் அழைத்து நிறுத்திக் கூட்டத்திற்குக் காட்ட, கூட்டம் ஆரவாரம் செய்ய, பிள்ளையும் கூட்டத்தைப் பார்த்து வணங்கும்போது, அந்தக் கூட்டத்தில் ஒருவன் மட்டும் கையில் பெரிய மலா மாலைக் கூடை ஒன்றோடு அதை எப்படியாவது கிழவனுக்கு அணிவித்துவிடும் வேகத்தோடு மாடத்தின் கீழ்ப்பாகம் நோக்கி முன்னேறியபடி இருந்தான்.

அந்த மலர் மாலைக்குள் சில பூ நாகங்கள் ரகசியமாக நெளிந்தபடி இருந்தன!

# 34

பாரக்கத் திடமாக ஆகிருதியோடு ஒரு வீர மறவனைப் போன்ற தோற்றத்தில் இருந்த அந்த மனிதன் முண்டிக் கொண்டு முன்னேறுவதை மாடத்தில் இருந்தபடியே கிழவனும் பார்த்தார்.

அவன் தோளில் கிடந்து தொங்கிய பூக்குடலையும் அதில் கிடக்கும் மாலையும் அவன் மாலையணிவிக்கத்தான் வருகிறான் என்று உணர்த்தினாலும் கூடவே அவனது வேகத்தில் ஒருவித சந்தேகமும் கிழவனுக்குள் ஏற்பட்டது.

இதற்குள் உடனிருந்த அடப்பக்காரர் அவனைப் பார்த்து விட்டு மாடத்தை விட்டுக் கீழே இறங்கி வரத் தொடங்கி னார்.

அவனும் பூமாலைக் குடலையோடு மாடத்துக்குக் கீழுள்ள நுழை முகத்து மண்டபத்தருகே வந்துவிட்டான்.

தான் இடித்துத் தள்ளியபடி வருவதை உத்தேசித்துக் கோபப்படுபவர்களைப் பற்றி அவன் துளிக்கூடக் கவலைப் பட்ட மாதிரியே தெரியவில்லை.

அடப்பக்காரரும் அவனை நெருங்கி நின்றார். பின்னா லேயே கிழவன் சேதுபதி உரையை முடித்து இறங்கி வருவது சலசலப்பினால தெரிந்து போனது.

ஜனக்கூட்டத்திடமும் அந்த வீரம் மிக்க உரையின் பிரதிபலிப்புகள். சலசலப்புகள்.

ஊடே அடப்பக்காரர் அந்த மாலைக்காரனைப் பார்த்து அருகே அழைத்துப் பேசத் தொடங்கிவிட்டார்.

"ஏய்.. யார் நீ? அது என்ன கூடையில்?"



"வந்தனம் அடப்பம். ராசாக்கு எங்க ஆப்ப நாடு சார்பா மாலை சாத்தலாம்னுதான் ஓடி வந்துருக்கேன்."

"அதற்காக இப்படியா கூட்டத்தில் புகுந்து நசுக்கிக் கொண்டு வருவது?"

"இல்லாட்டி இந்த நொடி உங்களப் பாக்க முடியுங்களா?"

— அவன் கேட்டு முடிக்க, கிழவன் சேதுபதியின தலை தெரியச் சரியாக இருந்தது.

"ராசா.. சேதுபதி ராசா.. பெருங்கும்பிடுங்க.." அந்த வீரன் அடப்பக்காரரை மீறிக்கொண்டு கத்தத் தொடங்கினான்

கிழவனும் அதைப் பார்த்துவிட்டு அவனைச் சமீபித் தார்.

முகத்தில் அவனை அளக்கும் ஒருவித மந்தகாசப் புன்னகை. அவன் குடலையைக் கீழே வைத்தபடி இருகைகளை யும் கூப்பி வணங்கத் தொடங்கினான்.

"என்ன விஷயம்?"

"ராசா நான் ஆப்ப நாட்டான். இது எங்க ஊர் ஐயனாரப்பன் கழுத்து மாலை. எனக்கு அந்த சாமி வேற— நீங்க வேற இல்ல. இந்த ஜெயங்கொண்ட வேளைல இந்த மாலையை உங்க கழுத்துல போட்டு அழகு பாக்க ஆசையா இருக்குதுங்க.."

பணிவாக வளைந்து நின்று கொண்டு அவன் பேசிய விதத்தைத் தொடர்ந்து கிழவனின் பார்வை அவனையே கூர்மையாய்ப் பார்த்தது.

பின் மாலை உள்ள கூடையை ஒரு பார்வை பார்த்தது. மாலையில் இருவாட்சி, முல்லை, மனோரஞ்சிதம் என்கிற மலர்களின் அணிவரிசை.

அப்போது கூட்டத்தில் இருந்து ஒரு பெண் குரல் தடுப்பது போல ஒலிக்கத் தொடங்கியது.

"அரசே, அந்த மாலையை அணிந்து கொள்ளாதீர்கள். அதில் பூ நாகங்கள் இருக்கின்றன."

அடுத்த நொடியே அடப்பக்காரன் முதல் அம்பலக்காரன் வரை அதிர்ந்து சப்தம் வந்த திக்கைப் பார்க்க, கூட்டத்தில் கப்பலில் அகப்பட்ட ஈழநாட்டுப் பெண் எதிர் வந்தபடித் தெரிந்தாள். உடன் மூப்பரும் சங்கனும் படபடப்போடு ஓடி வந்தபடி இருந்தனர்.

சற்றும் எதிர்பாராத அந்தக் குரல், அது மூட்டிய பீதி எல்லாமாய்க் கூட்டத்தையும் தொற்றிக் கொள்ளச் சோளகை சேர்வைக்காரன் புயல்போலப் பாய்ந்து அந்த மாலையைத் தன் குறுவாளால் குடைந்து அப்படியே தூக்கினான்.

அந்த வீரனோ மிரண்டு, பேய் முழி முழிக்க, குடலை யிலும், மலர் மாலையின் இடையிலும் ஊன்றிப் பார்த்தால் மட்டுமே தெரியும்விதத்தில் பூ நாகங்கள் நெளிந்து கொண் டிருந்தன.

"அடப்பாவி, என்ன கொடூர சதி?" பேச்சோடு அம்பலக் காரன் வாளை உருவிக் கொண்டு முன்னால் வருவதற்குள் அவசியமில்லை என்கிற மாதிரி அந்த வீரனே தன் இடைக் கட்டாரியை உருவித் தன் அடி வயிற்றில் ஆவேசமாகச் செருகிக் கொண்டான்.

செருகிக் கொண்ட வேகத்தில் சுருண்டு கீழேயும் விழத் தொடங்கினான்.

யாரும் எதிர்பார்த்திராத அத்தனைச் சம்பவங்களும் மிக அதிக பட்சமாக விரல் விடக்கூடிய சில நொடிகளில் நடந்து முடிய எல்லோர் முகங்களிலும் பதற்றமும் ஆவேசமும் அடக்க மாட்டாதபடி முன்னால் ஓடி வந்தது.

ஆனால் கிழவன் முகத்தில் மட்டும் எந்தவிதச் சலனமும் சஞ்சலங்களும் இல்லை.



கீழே விழுந்து, புழுவைப் போலத் துடித்தபடி இருக்கும் அந்த வீரனையே அவர் உற்றுப் பார்க்க அவரை வள்ளல் சீதக்காதியும் பொருள் பொதிந்த ஒரு பார்வை பார்க்க அந்த ஈழப் பெண் நெருங்கி வந்து மார்பு விம்ம, கைகளைக் கூப்பிய படிக் கிழவனைப் பார்த்தாள்.

கிழவனும் அவளைப் பார்த்துவிட்டு சீதக்காதியின் பக்கம் திரும்பினார்.

"தம்பி, இவனை உள்ளே அழைத்து வா. இவனைக் காப்பாற்றி ஒற்றறிய எந்த முயற்சியும் செய்ய வேண்டாம். விஷக் கட்டாரியைப் பாய்ச்சிக் கொண்டிருக்கும் இவனை எந்த வைத்தியனாலும் காப்பாற்ற முடியாது.

மக்கள் கூட்டம் சஞ்சலப்படாதபடிக் காரியங்களை முடித்து விடுங்கள்.

எனக்கு ஒன்றுமில்லை. இன்று மட்டுமில்லை. என்றும் எனக்கு எதுவும் நடக்காது.

என் உயிர் மூச்சை எந்த மனிதனாலும் எந்த நாளிலும் பறிக்க முடியாது.

அந்த இறைவனாக வந்து அழைத்துக் கொள்ளும்வரை நான் ஆபத்துகளை வென்று வாழ்ந்தபடி இருப்பேன்.

அதற்கும் நிறைய நாள்கள் இருக்கின்றன."

ஒரு சாசன உரை போலப் பேசிய கிழவனைப் பார்த்து எல்லோரும் நெற்றிப் புடைக்க, வியக்க, கிழவன் அங்கிருந்து அரண்மனை உள்ளேகத் தொடங்கினார்.

உடையக்காளும் மற்றவர்களும் பதற்றம் குறையாதபடிப் பின் தொடரத் தொடங்கினர்.

வள்ளல் சீதக்காதி மட்டும் உணர்ச்சிப் பெருக்கில் "யா அல்லாஹ்" என்றபடி அந்த நிலையிலும் பெருமூச்செறிந் தார்.

"அரசருக்கு ஒரு ஆபத்துமில்லை. எல்லோரும் நிம்மதியாக வீடு திரும்புங்கள்" என்கிற குரல்களும் அங்கே ஒலிக்கத் தொடங்கின.

இராமலிங்க விலாசத்தின் இடைக்கட்டு.

ரத்தினக்கம்பள விரிப்பின் முடிவில் கிழவன் சேதுபதி ஓய்வாக வந்து அமரும் இருக்கை கிழவனுக்காக அலங்காரங்களோடு கிடக்கப் பரிமளங்களோடும், பன்னீர்ச் செம்போடும் நிற்கும் பணியாளர்களும், விருதாவளி முழக்கயிடும் கட்டியங் காரர்களும் ஆளுக்கு ஆள் அவரவர் இடங்களில் காத்துக் கொண்டிருக்க, படைக்கலக் கொட்டாரம் வழியே கிழவனும் உடன் தொடரும் பத்தினியர்களும் வந்த வண்ணமிருந்தனர்.

உடையக்காள் உடைந்து போய்ப் புலம்பியபடியே வந்தாள்.

"காத்தா– எப்படி இந்த நிலையிலும் துளியும் பதட்டமே இல்லாமல் இருக்க உன்னால் முடிகிறது?"

அவளைப் பின்தொடர்ந்து காதலி நாச்சியின் குரல்.

"என்ன ஒரு கொடுமை? அவனுக்குத்தான் எத்தனை நெஞ்சழுத்தம்–! அண்ணா நீங்களும் இவருக்குச் சரியாக மௌனமாக இருக்கிறீர்களே– எப்படி?"

காதலியின் குரல் பெரிய உடையத்தேவரை நோக்கியும் திரும்பியது.

"ஐய்யோ– அந்த விபரீதம் மட்டும் நடந்து முடிந்திருந்தால் என்னவாகியிருக்கும்? நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் நடுங்கு கிறதே–" என்று மூத்தவள் செவத்த நாச்சியும் அலமலந்து போக, அழகம்மை மட்டும் கிழவனைப் போலவே எதையும் பேசாமல் அழுத்தமாக உடன் நடந்தபடி இருந்தாள்.

மற்ற பத்தினியர்களின் கலக்கத்தை அவர்களது கண்ணிமைகள் கண்ணீர்த் திரட்சியோடு காட்டிக் கொடுத்துக் கொண்டிருக்க, அங்கு நடைபெறும் ஒவ்வொன்றுமே அந்த



அரண்மனைக்கே புதியவரான குமாரபிள்ளைக்குப் புரிபடாத ஒன்றாக, பெரும் புதிராக இருந்தது.

இந்த ஜெயங்கொண்ட வேளையில் யார் இப்படிக் கிழவன் சேதுபதி உயிருக்குக் குறி வைத்தது? கேள்வி குடைந்து கொண்டிருக்க, புத்தி, சேதுநாட்டைச் சுற்றியுள்ள ராஜ்யாதிபதிகளையெல்லாம் நினைத்துப் பார்க்கத் தொடங்கியது.

தஞ்சை வெங்கோஜிதான் முதலில் தோன்றினார். 'வெங்கோஜிக்கு அப்படி ஒன்றும் தீராப்பகையெல்லாம் கிழவனோடு இல்லை. அவனது பகை எல்லாம் சொக்கநாத நாயக்கர் மேல்தான்.'

அவனை விட்டால் அருகாமையில் வேறு யாராக இருக்க முடியும்?

யாராவது பொறாமை கொண்ட பாளையாதிபதிகளாக இருக்குமோ? நெல்லைச் சீமைப் பாளையத்திலிருந்து கழுதிக் கோட்டைக் காவலன் தொட்டு, அறந்தாங்கி, வல்லம் என்று குமாரபிள்ளை வரிசையாக யூகித்தபடி வர, அதற்குள் இடைக் கட்டு வந்துவிட்டது.

சிலுசிலுவென்ற பன்னீர்ச் சொட்டுகள் மேல் விழ, பரிமள மலர்களும் சேர்ந்து அர்ச்சிக்கப்படுவது போல விழ, கட்டியங்காரர்கள் அடப்பத்தாலும், அவைப்பிரதானிகளாலும் புதிதாகச் சொல்லிக் கொடுக்கப்பட்ட 'பரராஜகேசரி' என்ற பட்டம் சேர்க்கப்பட்ட விருதாவளியை அந்த உணர்ச்சிமயமான வேளையிலும் பாடிக் கட்டியமும் சொல்லி முடித்தனர்.

கிழவனும் இருக்கையில் போய் அமர்ந்தபடித் திரும்பி அனைவரையும் ஏறிட்டார்.

ஏறிடலா அது? கூரிய, நேரிய , சீரிய துளைக்கும் பார்வை அது.

ஒரு க்ஷணம் அமைதி. அங்கே அழுத்தமாக வசப்பட்ட கிழவன் திருவாய் மலரத் தொடங்கினார்.

"அவையோரைத் தவிர யாரும் இனி இங்கிருக்கத் தேவையில்லை. நடந்து முடிந்த சதிச் செயலை ஏதோ ஒரு விதத்தில் நான் எதிர்பார்க்கவே செய்தேன். வெற்றிகரமாய் அதை நான் கடந்தும் விட்டேன். அரசர்கள் வாழ்வில் மிகச் சாதாரணமாய் நடக்கும் ஒரு சம்பவம்தான் நடந்து முடிந்துள்ளது.

இதற்காகக் கலங்கிப் போய் அதைப் பற்றியே மருகிக் கொண்டிருப்பவர்கள் என்னைச் சார்ந்தவர்களாக இருக்க முடியாது.

போங்கள்– போய் உரிய காரியங்களைப் பாருங்கள்."

கிழவனின் பேச்சைத் தொடர்ந்து அவையோரைத் தவிர அங்கே யாருமில்லாத ஒரு நிலை க்ஷணத்தில் ஏற்படத் தொடங்கியது.

கட்டியம் பாடியவர்களும் மற்ற ஏவலாதிகர்களும் கூட விலகிக் கொள்ள, அடப்பம் கிழவனை ஒரு மாதிரியாகப் பார்த்தார்.

"என்ன அழகு? எதற்கு இந்தக் கலக்கல் பார்வை? முதலில் உடையத் தேவனும், பிள்ளையும் மற்றவர்களும் அமர இருக்கைகளைக் கொண்டு வந்து போடுங்கள்."

"உத்தரவு ஆண்டே–" அடப்பம் எந்திர கதிக்கு மாறத் தொடங்கினார். குமாரபிள்ளை பார்வை அனைத்தையும் காதில் வாங்கியபடி அரண்மனையின் இடைக்கட்டைப் பார்த்த படி இருந்தது.

நாயக்கரின் அரண்மனையை விட எல்லாவிதத்திலும் மாறுபட்டு உரிய லட்சணங்களோடு இருந்தது இடைக்கட்டு.

சரளமாகக் காற்று வந்து போகச் சாளரங்கள். நான்கு யானைகள் ஒன்றாக உள்ளே வந்து நாலாபுறமும் நின்று கவரி போடலாம். அத்தனை விஸ்தாரமான உட்கட்டு வெளி–

"என்ன பிள்ளை? வந்ததும் வராததுமாக ஒரு விபரீதத்தைப் பார்க்க நேர்ந்துவிட்டதே என்கிற கலக்கத்தில் இருந்து இன்னமும் விடுபடவில்லையோ?"



கிழவனின் கேள்வி குமாரபிள்ளையைக் கலைத்தது. அசமந்தமான முகத்தோடு கிழவனைப் பார்த்தார் பிள்ளை.

அதற்குள் அடப்பத்தின் கட்டளையின் பேரில் இருக்கைகளை அரண்மனைப் பணியாளர்கள் சுமந்து வந்து போட்டுச் செல்ல "அனைவரும் முதலில் அமருங்கள்" என்றார் கிழவன்.

பிள்ளைக்கு அமர்ந்து பேசுவது என்பது புதிய ஒன்றாக, மரியாதை இல்லாத, பக்திக் குறைவான செயலாகத் தோன்றவே நின்றபடியே கிழவனைப் பார்த்தார்.

"உன்னைத்தான் பிள்ளை. அமர்ந்து பேசலாம்."

"இல்லை அரசே. நான் நின்றபடியே பேசுகிறேன்."

"உங்கள் மதுரையின் பழக்க வழக்கங்கள் இங்கே வேண்டாம். நீ நின்றால் எனக்கு இங்கே கால் வலிக்கும்."

கிழவனின் பதில் பெருத்த ஆச்சரியத்தைப் பிள்ளையிடம் ஏற்படுத்தியது. அது கண்களில் வழிந்தது. கூடவே அரண்மனையை ஏகிய நொடியே ஒரு அரசத் தோரணையோடு உரிமை கொண்டு, நெருக்கம் காட்டி, இடைவெளியைக் குறைத்துக்கொண்டு பேசியதில் ஆச்சரியம் அதிகரித்தது. மதுரையில் சொக்கநாதர் முன்பும், மங்கம்மாளின் முன்பும் தான் இதுவரை அமராததும், நின்று பணிவாகவே பேசியதும் அதையே அவர்கள் போஷித்ததும் கூட நினைவில் வந்து போயிற்று.

"உம் அமரு.. எப்படி இருக்கிறது என்னாட்டு மக்களின் அன்பு?"

"அபாரம்."

நுனி இருக்கையில் அமர்ந்தபடி பிள்ளை கூற, அடப்பம் ஒரு வெள்ளித் தட்டில் காளாஞ்சிகளையும், பழத்துண்டுகளையும் வைத்து எதிரே நீட்டினார். அதை வாயில் போட்டுச் சுவைத்தபடியே சேதுபதி பேசத் தொடங்கினார்.

"அழகு... நீ முதலில் நமது இராமலிங்க விலாசம் முழுவதையும் பிள்ளைக்குச் சுற்றிக் காட்டுகிறாய். அப்படியே ராயசத்திடம் சொல்லி இலச்சினை வளையம் ஒன்றைப் பொறித்து நாளை என்னிடம் தருகிறாய். அதை நான் பிள்ளைக்கு அணிவிப்பேன்.

பிள்ளை— நீயும் உன் குடும்பத்தாரும் தங்க, வடக்கு வீதியில் ஒரு மாளிகை உள்ளது. அங்கே சர்வ வசதிகளும் செய்து தரப்படும். பின் நாணயச் சாலை, தளவாடச் சாலை, கஜானா அலுவலகம், கணக்காயர் குடில், குதிரைக் கொட்டாரம், பத்திரக் கொட்டாரம், விருந்தினர் மாளிகை, அணிவகுப்பு மைதானம் என்று ஒவ்வொன்றையும் காணலாம்.

இங்குள்ளவர்களெல்லாம் அறிமுகப்படுத்தப்படுவார்கள். அதன்பின் இந்த இராமநாதபுரத்தைச் சார்ந்த நாடுகளுக்கும், ஊர்களுக்கும், கிராமங்களுக்கும் விஜயம் செய்தல் என்று உனது பணியைத் திட்டமிட்டு, உருவாக்கிக் கொள்ளலாம். இப்போதைக்கு— காத்திருக்கும் உன் குடும்பத்தினரோடு சேர்ந்து நீ முதலில் மாளிகைக்குச் செல்வதே உசிதம். பயணக் களைப்பு முகத்தில் தெரிகிறது. எனவே நன்கு ஓய்வெடுத்துக் கொண்ட பின் நாளை சந்திப்போம். என்ன?"

கிழவனின் கூர் தீட்டியது போன்ற அந்தப் பேச்சும் அதன் தீர்மானங்களும் பிள்ளைக்குத் தொடர்ந்து பிரமிப்பை மூட்டின.

"ஓய்வு எனக்கு மட்டுமா? உங்களுக்கு இல்லையா?" என்கிற எண்ணத்தோடு நடந்து முடிந்த அந்த உற்பாதம் பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசாத அந்தத் தீர்க்கமும் பிள்ளைக்குள் ஆச்சரியத்தை அள்ளிப் பூசும்போது, அரண்மனையின் இடைக் கட்டுக்குள் அந்த யாழ்ப்பாணத்துப் பெண் தன் சலங்கைக் கொலுசு சப்திக்க வந்தபடி இருந்தாள்.

கூடவே மிரள மிரளப் பார்த்தபடி சங்கனும் மூப்பரும் உடன் வர அவள் சங்கனிடம் சொன்னாள்.



"பாத்தியா? நான் சொன்ன மாதிரியே எல்லாம் நடந்துடிச்சில்லே. இப்ப சொல்றேன். கேட்டுக்கோ. இந்த அரணமனைக்குள்ள நுழைஞ்ச என் கால் இனி வெளியப் போகாது. ராணியாத்தான் போகும்."

அவளது தீர்க்கம் சங்கனை மிரட்டியது.

## 35

அந்த ஈழத்துப் பெண்ணின் பேச்சு சங்கனுக்குப் பிரமிப்பு மூட்டியதைப்போல, இராமலிங்க விலாச அரண்மனை அந்தப் பெண்ணுக்குப் பிரமிப்பு மூட்டிக் கொண்டிருந்தது.

"எங்க கதிர்காமத்துல கோயில் மனை ஒண்ணு இருக்கு. நான் பாத்ததுலேயே அதுதான் பெரிய மனை. அதனபின்னே இங்கதான் இத்தனைப் பிரம்மாண்ட மனையைப் பாக்கேன்" என்று நடக்கும் போது தன் கருத்தை வேறு வெளிப்படுத்தினாள்.

"இது ஒண்ணும் மனை இல்ல— அரம்மன! இபபடி அரம்மன இந்தச் சுத்துவட்டாரத்துலையே கிடையாது. எங்க ஊரும் பெரிசு. அரம்மனையும் பெரிசு.

டெல்லி சுல்தானே இதைப் பார்க்க ஆசைப்பட்டுருக்காராம் தெரியுமா?"

— சங்கன் அவளிடம் தானும் ஏதாவது பேசிவிட வேண்டும் என்பதுபோலப் பேசிச் சின்னக் குழந்தைபோலக் குதூகலித்துக் கொண்டான். மூப்பர் அமைதியாக நடந்தார்.

அவருக்கு அரண்மனையில் கால் பதித்து நடப்பது என்பது முதல் அனுபவம்.

பனை ஓலைக் குடிசையும் கயிற்றுக் கட்டிலும்தான் அவர் கண்ட நிழல் உலகம். எனவே அவரையும் அரண்மனை மிரட்டிக் கொண்டிருந்தது.

அங்கங்கே தெரிந்த கலரோவியங்கள், கண்ணாடி விளக்குகள், சிற்பப் பொம்மைகள், வழுவழுப்பான சிலிர்டும் வராண்டா வெளிகள், நடுநடுவே நீண்ட வேல் கம்பு சகிதம் விறைப்பாகத் தெரியும் காவல் வீரர்கள் என்று எல்லாமே அவருக்குள் பிரமிப்பை நிரப்பியிருந்தாலும் அதைப் பெரிதாக வெளிக்காட்டாதபடி நடந்தார்.

கச்சிதமாக நடுக்கட்டுக்கு முன் வரவும் அவர்கள் வருகையை அறிவிக்கும் விதமாகச் சேவகன் ஒருவன் சேகண்டியைத் தட்டிவிட்டு உள்ளே சென்றான். பின் அவர்களையும் வந்து அழைத்துச் சென்றான்.

மிகப் பணிவாக ராஜாங்க விருந்தினர்களை அழைத்துச் செல்வதுபோல அவன் அவர்களை அழைத்துச் சென்று நடுக்கட்டுக்குள் கிழவன் சேதுபதி முன்பாக நிறுத்த கிழவனும், "வர வேண்டும்— வர வேண்டும்" என்று அவர்களுக்கு முகமன் வாசித்தார். உடன் இருக்கும் பிள்ளையும், பெரிய உடையத்தேவனும், அம்பலக்காரனும், சீதக்காதியும் ஒருசேர அந்தப் பெண்ணைப் பார்த்து வியக்க ஆரம்பித்தனர்.

சித்திரத்தில் திருத்தமாய் எழுதியது போன்ற ஓர் அழகு. கருமையான கூந்தல்... பெரிய உடையத்தேவன் அவளைக் கூடுதலாக ரசித்தான்.

அந்தப் பெண் சரேலென்று கிழவனின் காலில் விழுந்து வணங்கினாள். இதைச் சங்கனும் மூப்பரும் எதிர்பார்க்கவில்லை. அவர்களும் உடனே அதுபோலக் கீழே விழுந்து வணங்கத் தொடங்கினார்கள்.



கிழவனுக்கு அந்தப் பெண்ணின் செயல் ஆச்சரியத்தை அளித்தது.

"நீ என்ன ஈழத்தைச் சேர்ந்தவளா?"— துல்லியமாகக் கேட்டார். அவள் அதைக் கேட்ட நொடி விளக்குப்போல முகத்தில் பளபளப்புப் பெற்றாள்.

"எப்படிக் கண்டறிந்தீர் ராசா...?" என்றாள் சற்று இழுவையான ராகமான குரலில்...

"பௌத்த பிட்சுக்கள் பௌத்த விகாரங்களில் மண்டியிட்டு அமரும் விதமும், முன்முதுகை வளைத்து நெற்றி தரையில் படச் சரியும் விதமும் அப்படியே உன் செய்கையில் பிரதிபலித்தது. அதுதான் அப்படிக் கேட்டேன்—

ஆமாம் நீங்கள்...?"— கிழவன் சங்கனையும் மூப்பரையும் பார்த்துக் கேட்டார்.

"ராசா நாங்க கடலாடிங்க... வலையர் குலம். இவர் மூப்பர். என் பேரு சங்கன். இந்தப் பொண்ணை முந்தாடப் போகையில நடுக்கடல்ல மரக்காயர் கப்பல்ல பார்த்தோம். யாருன்னு கேட்டதுக்கு வாயே திறக்கல. ஆனா ஒண்ண மட்டும் ஓங்கிச் சொன்னா.

மதுரைக்குப் போய் ஜெயிச்சுட்டு வர்ற உங்களுக்கு ஆபத்துன்னா. உங்களைக் காப்பாத்தியே தீரணுமின்னா..."

— சங்கன் விவரித்தான். சேதுபதி பார்வை அவளை உடனே துளையிட்டது. அம்பலக்காரன் உடனே சில அடிகள் முன் வந்து,

"பெண்ணே யார் நீ? உனக்கு எப்படி நடந்த சதிச் செயல் பற்றித் தெரியும்? சீக்கிரமாகச் சொல்" என்றான். அவளும் அக்கறையாகச் சொல்ல ஆரம்பித்தாள்.

"ராசா— என்ட பெயர் யாழினி. நான் அலதானிச்ச பிரதேசம் ஈழத்தில் தலைமன்னாராக்கும். இந்த ராமநாதபுரத்தில் இருந்து வர்த்தகம் பண்ண வரும் வேணுகோபாலப்

பிள்ளையே என் தந்தையாராவார். என் அம்மை நலை மன்னாரில் ஒரு உணவு விடுதி நடத்துபவள். என் தந்தை யப்பன் பசியாற வரும் சமயம் அம்மை மேல் காதல் வந்து பின்னே அவர்கள் திருமணமும் செய்து கொண்டதில் நான் பிறந்தேனாம்.

நான் பிறந்து எனக்கு ஏழு வயதாகிப் பாடசாலை செல்லும்வரை வந்து போன என் தந்தை அதன் பின்னே பத்தாண்டுகளாகிவிட்டன. வருவதே இல்லை...

அவரைக் காண நான் ராமநாதபுரத்துக்கு ஒரு தோணியில் வந்தேன். காட்டுப் பிள்ளையார் கோவில் அருகில் ஒரு சத்திரத்திலும் தங்கியிருந்தேன்.

சேதுபதி ராஜ்ஜியத்தில் பெண்டுகளை மாதா சக்தியாகக் கொண்டாடுவதை அறிவேன். இருந்தும் அந்தச் சத்திரத்தில் சில கள்ளர்கள் என்னை வேட்டையாட ஆசை கொண்டார்கள்.

அவர்கள் அதற்காகப் பேசுவதை நான் செவி கொண்டு கேட்கும் சந்தர்ப்பதை இறைவன் தந்தான்.

அப்பொழுதே தங்களைக் கொல்லத் திட்டமிட்டதையும் நான் அறிந்தேன்.

அதைச் சொல்லப் புறப்பட்ட என்னை அந்தக் கள்ளர்கள் கண்டு கொண்டு துரத்தினார்கள். நான் ஓடி ஒளிந்தது ஒரு கடல் வர்த்தகரிடமாக்கும். அவரிடம் நான் உங்களைக் காணும் விருப்பத்தைச் சொன்னேன்.

ராஜ தரிசனமெல்லாம் அத்தனைச் சுலபமில்லை என்றார்கள். எனவே நான் ஓர் உபாயம் செய்தேன். உங்களைக் கல்யாணம் கட்ட ஈழத்திலிருந்து வந்துள்ளேன் என்றேன். அது ஒரு சேதியாகி அரண்மனை போகும். பின்னே என்னைத் தேடி அரண்மனை அதிகாரிகள் யாரும் வரக்கூடும். அவர்களிடம் அதைக் கூறிவிடலாம் என்று திட்டமிட்டேன்.

ஆனால் அந்த வர்த்தகர் என்னை இலங்கையில் இறக்கிவிடத் திட்டமிட்டுத் தனது பெருங்கலத்தில் பாண்டங்



களோடு பாண்டமாய் என்னையும் ஏற்றிக் கொண்டு விட்டார்.

நானோ வழியில் அவர்களுக்குத் தெரியாமல் கடலில் குதித்து விட்டேன்.

எனக்கு அரண்மனை வந்து எச்சரிக்கை செய்தே தீர வேண்டும். அதுதான் குறி.

நல்லவேளை... அந்தக் கந்தன் சகாயம் இந்தச் சங்கனையும் மூப்பரையும் காண முடிந்தது. அதன் பின்னே ஓடிவந்து உங்கள் உயிரையும் காப்பாற்ற முடிந்தது..."

— அந்தப் பெண் மூச்சுவிடாமல் கடகடவென்று பேசியதைக் கேட்டு எல்லோருமே அதிசயித்து விட்டனர்.

சங்கனும், மூப்பரும் அவள் தங்களையே ஏமாற்றி விட்டதை அவளைப் பார்க்கும் விதத்தில் உணர்த்தினார்கள். கிழவன் அவளது ஈழத்தமிழ்ப் பேச்சைக் கேட்டுச் சொக்கிப் போய் விட்டிருந்தார்.

சீதக்காதி அர்த்தபுஷ்டியோடு கிழவனைப் பார்த்துச் சிரித்தார்.

"என்ன தம்பி சிரிக்கிறாய்...?"

"ஒன்றுமில்லை. ஒரு முறை ஈழக் கவிஞரைப் பாராட்டிப் பெரும்பொருள் தந்தீர்கள். அவர், 'எங்கள் மண்ணும் மக்களும் உங்களை வாழ்த்துவார்கள். நீங்கள் பல்லாண்டு வாழ ஈழமும் துணை செய்யும்' என்றார். அவர் வாழ்த்து பலித்து விட்டதை எண்ணினேன். அதுதான் சிரிப்பாய்த் துளிர் விட்டது சேதுபதி..."

"அருமையாகச் சொன்னாய். எப்பொழுதும் தலையைக் காப்பாற்ற தருமத்தால்தான் முடியும் என்றும் சொல்லாமல் சொல்லுகிறாய். வள்ளலல்லவா?"

அம்பலக்காரன் அவர்களின் சம்பாஷணையை ரசிக்காமல் காட்டுப் பிள்ளையார் கோவில் சத்திரத்தில் கூடிப்

பேசித் திட்டமிட்ட அந்தக் கள்ளர்கள் யாராக இருக்கும் என்பதில் ஊடாடத் தொடங்கிவிட்டான்.

பெரிய உடையத்தேவரின் புருவ வளைவும் அவர்கள் யார் என்று ஆராய்வதாகவே தோன்றியது.

சேதுபதியிடம் மட்டும் இதுபோன்ற சிந்தனைகள் துளியு மில்லை. உற்சாகமாய் அந்தப் பெண்ணையும் வலையர்களை யும் பார்த்தார்.

"நீங்கள் மூவரும் இந்த நொடி என் விருந்தாளிகள். இங்கே தங்கியிருந்து என்னைக் கௌரவிக்க வேண்டும்" என்றார் சிரித்தபடியே.

குமாரபிள்ளைக்கு எல்லாமே பெரிய வியப்பாக இருந்தது. சேதுபதியைப் புரிந்து கொள்வது என்பது சுலபமில்லை என்கிறாற் போலவும் தோன்றியது.

கிழவனின் கருத்துக்குத் தோதாக அடப்பம் அவரைப் பார்க்க, "இவரோடு போங்கள்– அடப்பம் இவர்கள் நமது விருந்தாளிகள். எனக்குச் செய்யும் எல்லா மரியாதையையும் இவர்களுக்கும் செய்ய வேண்டும். இன்றைக்கு எதாவது கலை நிகழ்ச்சி இருக்கிறதா?"

"ஆமாம் அரசே... திருவாரூரிலிருந்து மங்களாம்பிகை என்னும் பெண்ணரசி இன்றும் பரதம் புரியப் போகிறார்–"

"ஓ... மிக நல்லது. கலையரங்கில் இவர்களை நான் கௌரவிப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்து நீங்கள் செல்லலாம்.

சேதுபதியின் அந்த முடிவு மூவரையும் உச்சி குளிர வைத்துவிட்டது. அடப்பத்தோடு சேர்ந்து நடக்கத் தொடங்கி னார்கள்.

குமாரபிள்ளையும் கிளம்ப வேண்டியதுதான்– பெரிய உடையத்தேவனும் அம்பலக்காரனும் கூடிப் பேசத் தொடங்கி யிருந்தனர்.



"என்ன அம்பலக்காரா? அங்கே என்ன குசுமுசுப்பு–?"

அம்பலக்காரன் சட்டென்று திரும்பினான்.

"சத்திரத்துக் கள்ளர்கள் யாராக இருக்கும் என்று யோசித்தபடி இருக்கிறோம் அரசே–" என்றான். திரும்பவும் கிழவன் முகத்தில் அதைக் கேட்டு ஒரு சின்னப் புன்னகை.

"உங்களால் அவர்களைப் பிடிக்க முடியாது அம்பலக் காரா– முடிந்தால் பிடித்துக் கொண்டு வா. அப்போது உனக்கு லட்சம் பொன் தருகிறேன்" என்ற கிழவனின் பதில் குமார பிள்ளையைக் கொத்தியது.

"சரி– பிள்ளை நீயும் புறப்படு. நாம் முடிந்தால் கலை யரங்கில் சந்திப்போம்."

– சொல்லிவிட்டுக் கிழவன் புறப்பட்டு விட குமார பிள்ளைக்கு என்னவோ போலாகிவிட்டது.

வந்ததில் இருந்தே ஒவ்வொரு சம்பவமும் அதைக் கிழவன் அணுகும் விதமும் வியப்பளிக்கிறது. அமைச்சரான சீதக்காதி யிடமும் பதற்றமோ, உணர்ச்சிப்பெருக்கோ துளியும் இல்லை.

கிட்டத்தட்ட ஒரு யோகியைப் போலத்தான் அவர் நடந்து கொள்கிறார். எல்லாம் புதிராக இருக்கிறதே–

குமாரபிள்ளை யோசித்த வண்ணம் இருக்க சீதக்காதி நெருங்கி வந்து பிள்ளையின் எண்ண ஓட்டம் புரிந்தது போலச் சிரித்தார்.

"பிள்ளை– வந்து சில மணி நேரங்கள்தான் ஆகின்றன. அதற்குள்ளேயே சேது நாட்டு விஷயங்கள் பெரும் புதிராக இருக்கின்றதா?"

"ஆமாம் வள்ளலே... அரசர் கிழவன் சேதுபதியை என்னால் புரிந்து கொள்ளலே முடியவில்லை. கோபித்துக் குமுற வேண்டிய இடங்களில் சிரித்தபடி இருக்கிறார். மூளை யைக் கசக்கிக் கொள்ள வேண்டிய தருணங்களில் குழந்தை போல் தெரிகிறார்– ஏன் இப்படி?"

"பிள்ளையே— சேதுபதியின் முகத்தை வைத்து எதையும் எடையிட்டு விடாதீர். அகத்தின் அழகு முகத்தில் என்கிற பழமொழியை ஜெயித்தவர் எங்கள் சேதுபதி.

சில விஷயங்களைப் புரிந்து கொள்ளச் சில நொடிகள போதும் அவருக்கு—

நானறிந்தவரையில் நிகழ்காலத்தைப் பற்றிச் சிந்திப்பதை விட எதிர்காலத்தைப் பற்றியே அதிகம் சிந்திப்பவர் அவர்.

இப்போதைக்கு இந்த விளக்கம் போதும். நீங்களும் ஓய்வெடுக்கச் செல்லுங்கள். மற்றவற்றைப் போகப் போகத் தெரிந்து கொள்வீர்கள்—"

— சீதக்காதியும் சொல்லிவிட்டுத் தன் பொருட்டுக் காத்திருக்கும் சில உதவியாளர்களுடன் வெளியேற ஆரம்பித்தார்.

"தளவாய் அவர்களே— நாம் தங்கள் மனைக்குச் செல்லலாமா?"— திரும்பி வந்திருந்த அடப்பத்தின் குரல் அருகே இருந்து கேட்டது.

"உம்!"

சாரட்டை விட்டு இறங்கிய பொன்னாத்தாளின் நடையில் புழுதி பறந்தது.

அந்தக் கம்பீரமான முல்லைக் கொடி மேவிய மனைக்குள் அவள் நுழைந்த கணமே பார்வை துழாவத் தொடங்கிவிட்டது.

பணியாளர்கள் தங்களை ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"எங்கே அவர்?"

"தேவர் சமூகமா தாயி?"

"வேறு யாரை நான் கேட்பேன்? எங்கே அவர்?"

"மேலே உப்பரிகையில் மிகுந்த மதுவின் போதையில் இருக்கிறார் தாயி."



— அடுத்த நொடி பொன்னாத்தாள் தேக்குமரப் படிகளில் ஏறி உப்பரிகை நோக்கிச் சென்றாள்.

உப்பரிகைக் கட்டிலில் ஒரு வீழ்ந்து கிடக்கும் வேங்கை மரம் போல் கால்கள் அகண்டு கிடக்க, கண்கள் செருகிய நிலையில் கிடந்தான் தூதியத்தேவன்.

பொன்னாத்தாள் ஒரு வருத்தப் புயலாக வந்து நிற்பதைக் கூடப் பார்க்க முடியவில்லை.

அத்தனை போதை.

"உங்களுக்கே இது நன்றாக இருக்கிறதா? இப்படியா இடைவழியிலேயே திரும்பி வருவீர்கள்? இப்படி இருந்தால் ஜனங்களின் அன்பை எப்படிப் பெற முடியும்? மாமா சேதுபதி உங்களை விட்டுக் கொடுக்காமல் எப்படிச் சமாளித்தார் தெரியுமா?"

— அவள் கண்ணீர் கரையப் பேசுவது காதிலேயே விழவில்லை.

"ச்சே— ஏன் இப்படி எல்லாம் நடந்து கொள்கிறீர்கள்? உங்களை—"

— ஏதோ சொல்லவந்தவள் அடக்கிக் கொண்டாள். இறங்கித் திரும்பவும் கீழே வந்தாள். அதே சமயம் பாதிரியார் ஒருவர் தூய வெள்ளை அங்கியும் ஜெபமாலைக் கரமுமாக மனை வாயிலில் நுழைந்தபடி இருந்தார்.

"தோத்திரம் அம்மா—"— அவர் குரலில் சொல்ல முடியாத ஓர் இதம்.

"வாருங்கள். என்ன விஷயம்?"

"ஒன்றுமில்லையம்மா— அன்பரின் நலம் காண வந்தேன். அவ்வளவுதான்."

"அவர்— அவர் இப்போது தன்னிலையிலேயே இல்லை. நீங்கள் பிறகு வந்து சந்தியுங்கள்."

– பொன்னாத்தாளின் பதில் அவர் முகத்தில் ஒரு மெல்லிய சலனத்தை உண்டாக்கியது.

ஜெபித்தபடியே திரும்பி நடக்கத் தொடங்கினார்.

பொன்னாத்தாள் ஏனோ அவரை வெறுப்போடு பார்க்கத் தொடங்கினாள்.

## 36

**வெ**றுப்போடு அந்த மனைக்கட்டின் வாயலியம் நோக்கி நடந்த பொன்னாத்தாள் அங்குள்ள கிளிக்கூண்டின் முன் போய் நின்றாள்.

உள்ளே நான்கைந்து கிளிகள். அவ்வளவும் சோர்வாகக் கூண்டுக்குள் கட்டப்பட்டிருந்த பிரம்புச் சாரம் மேல் அமர்ந்து கொண்டிருந்தன. பொன்னாத்தாள் வரவும் அவளைச் சோம்பல் பார்வை பார்த்தன.

காதலி நாச்சியும் கிளி வளர்க்கிறாள். ஆனால் அவைகள் இப்படியல்ல– அவள் எதிரே அவளைக் கண்ட மாத்திரத்தில் பேசும். அதில் ஒரு கிளி 'ஓம் நமச்சிவாய' என்றுகூட மிக அழகாகச் சொல்லும். அதைப் பார்த்ததில் இருந்தே தானும் கிளிகளை வளர்த்து அவற்றோடு பேசிப் பழக வேண்டும் என்று பொன்னாத்தாள் ஆசைப்பட்டதன் விளைவுதான் அவள் இல்லத்திலும் கிளிகள்.

ஆனால் அவைகூட அவளைப் போலவே உற்சாகம் இன்றிச் சிறைக் கைதி போலச் சோம்பிக் கிடக்கின்றன. தனக்கு வாய்த்த புருஷனும் சரியில்லை– கிளிகளும் சரியில்லை என்று அவளுக்குத் தோன்றியது.



வாயிலில் ஒரு பவழமல்லிக் கொடி நட்டிருந்தாள்.

அது கூட வளருவேனோ என்கிறது!

இதிலும் காதலி நாச்சியின் மனைத்தோட்டம் ராமநாத புரத்துக்கே ஒரு முன்மாதிரி.

எல்லாவிதத்திலும் தனக்கு அதிர்ஷ்டமில்லை என்று நினைத்தவளுக்கு அழுகை பீறிடத் தொடங்கியது. அந்தக் கிளிக்கூண்டின் கதவைத் திறந்தாள். உள்ளிருக்கும் கிளிகளைப் பிடித்து வெளியே விட்டாள். ஆனால் அவை படபடவென்று கிடைத்தது சுதந்திர வானம் என்று சிறகடிக்காமல் சடசடத்த படிக் கீழே விழுந்தன!

பொன்னாத்தாளுக்கு ஆச்சரியமாகிப் போனது. சேடியர் கள் சிலர் அதைப் பார்த்துவிட்டு அவளை நெருங்கி வந்து பணிவாக நின்று கொண்டு பேசத் தொடங்கினர்.

"தாயி– அதுங்க பறக்க முடியாது. அதோட றக்கைகளை வெட்டிட்டோம்."

"றக்கைகளை வெட்டிவிட்டீர்களா?"

"ஆமாம் தாயி– அப்பத்தான் அதுங்க பறந்து போவாம இங்கனயே இருக்கும்."

பொன்னாத்தாள் அதைக் கேட்டுச் சலனப்படும்போது அவளது மனை வாயில் முகப்பில் உடையக்கா நாச்சியின் சாரட் வந்து தேங்கி நின்றது.

கூடவே இன்னொரு சாரட்டில் அரண்மனைச் சேடியப் பெண்களும் அவர்களோடு பழக்கூடைகளும் தேன் சாடிகளும் மேலும் பல பரிசுப் பொருள்களும் இறங்கத் தொடங்கின.

உடையக்காளும் குருவம்மாள் எனும் அவளது பிரதான சேடிய உதவிப் பெண்ணோடு சேர்ந்து கொண்டு மனைக்குள் நுழைய ஆரம்பித்தாள்.

தாயைப் பார்த்த பொன்னாத்தாள் ஒரு புதிய புயலைப் போல வேகம் கொண்டு ஓடி வரத் தொடங்கினாள்.

"அம்மா-"

"என்ன பொன்னா-? என்ன செய்து கொண்டிருக்கிறாய் கிளி மாடத்தில்?"

"என்னைப் போலத்தானே அந்தக் கிளிகளும். அதான் துக்கம் விசாரித்துக் கொண்டிருந்தேன்-"

பொன்னாத்தாள் தன் நிலையை இரண்டு வரிகளில் சொல்லிவிட்டுத் தாயைப் பார்க்கவும் உடையக்காள் முகம் இருண்டு போனது.

எதும் பேச முடியாமல் அருகே உள்ள ஆசனத்தில் அமர்ந்தாள். பின் பார்வையாலேயே குருவம்மாளை ஒரு பார்வை பார்க்க அவள் தாம்பூல வெள்ளிக் கைப்பெட்டியை உடையக்காள் அருகில் வைத்துவிட்டு விலகிக் கொள்ளத் தொடங்கினாள்.

பொன்னாத்தாள் தாயின் புடவை முந்தியில் உள்ள நூல் குஞ்சரங்களையே பார்த்துக் கொண்டிருந்தாள். உடையக்கா ளிடம் பேச்சு தொடங்கியது.

"என்னடா கண்ணு- எதுக்கு இத்தனை விசனம்?"

"விசனப்படாம- என்னை எதுக்கு இந்த மனுஷருக்குக் கட்டிக் கொடுத்தீக-?"

"ஏண்டா- என் மாப்பிள்ளைக்கு என்ன குறை?"

"அது சரி- மேலே போய் உப்பரிகைல பாத்துட்டு வா. தெரியும். எப்பப் பார் குடி. ஆற்றாமை. வினோதமான சாவகாசங்கள்-"

"இதெல்லாம் நம்ம ஆம்பளைகளோட புருஷ லட்சணம். அதிலும் ராஜ குடிகன்னா சும்மாவா-?"

"இல்லம்மா- நீ மாமாவோட பேச்சைக் கேட்டு மயங்கி என்னை இந்த மனுஷருக்குக் கொடுத்துட்டீங்க. இவரைப் பிடிச்சுத் தன் கைக்குள் வெச்சுக்க நினைச்ச மாமாவோட



ராஜசூத்திரத்துக்கு என் வாழ்க்கை பலியாகிப் போச்சன்னுதான் நான் நினைக்கேன்-"

– பொன்னாத்தாள் சொல்லி முடிக்கும்போது கண்களில் கண்ணீர் கொட்டத் தொடங்கிவிட்டது. அதற்கு உடையக்கா ளால் மறு பதிலைக் கூற முடியவில்லை. அடப்பமாக மௌனம் வந்து அவளை ஆக்ரமித்துக் கொண்டது.

"பார்த்தாயா- உனக்கே உன் குற்றம் தெரிவதை? அம்மா- அவருக்குச் சேது நாட்டு அரச பதவில அமரணும். அதுதான் அவரோட லட்சியம், ஆசை எல்லாம்- எல்லாத் தகுதியும் எனக்குத்தான் இருக்குன்னு அவர் சொல்றதுலையும் உண்மை இல்லாமல் இல்லை.

கிழவன் மாமாவோ அவரோட தகுதிகளைத் தன்னுடைய தகுதிகளால் தாண்டுவதை ஒரு அன்றாடச் செயலாகவே செய்துவிட்டு வரார். அதை அவரால் ஜீரணிக்க முடியல. இதனால அவர் குமுறுவதையும் கோபப்படுவதையும் என்னால எந்த நிலையிலேயும் தடுக்க முடியல.

இத்தனை நாள்ள அன்பா நாலு வார்த்தை அவர் என் கூடப் பேசினதில்லை. இனியும் பேசுவார்ங்கற நம்பிக்கையும் எனக்கில்லம்மா-"

– பொன்னாத்தாள் தொடர்ந்து வெடித்தாள். உடையக்காள் பதிலுக்கு அவளை வெறித்தாள்.

"சரி- இதற்கு என்னதான் முடிவுன்னு நீ நினைக்கே?"

"என்னதான் முடிவுன்னா- அவர் அரசராகணும். அப்ப தான் அவர் மனுஷராவார்."

"முதல்ல அவரை நல்ல மனுஷனா நடந்துக்கச் சொல். அப்பதான் பொன்னா மேலான ஆசைகள் கைகூடும்."

"இது அவருக்குப் புரியலையேம்மா-"

"புரிய வை. அதே சமயம் நானும் காத்தான் கிட்டப் பேசறேன். அவனுக்குப் பிறகு உன் புருஷன்தான் இந்தச் சேது

நாட்டுக்கு அரசன். அதனால்தான் இந்த உறவையே காத்தான் உருவாக்கினான். அது புரியல உன் புருஷனுக்கு—"

"அம்மா— இன்னிக்கு ஊரே திரண்டிருக்கிற இடத்துல அவர் இல்லாமப் போனதுல இருந்தே அவர் கோபமும் ஆற்றாமையும் உனக்குப் புரியலையா?"

"தெரிஞ்சுதான் பொன்னா இப்ப இங்க வந்துருக்கேன். உன் புருஷனை நம்ம பங்காளிகள்ள பலரும் கூடக் கெடுக்கறாங்க. காத்தான் ரொம்பப் பொறுமையா இருக்கான்.

அடித்தளத்துல உன் புருஷன் ரொம்ப நல்ல மனுஷன். நீதான் நம்பிக்கையூட்டணும். நாலு பேர் கெட்டது சொன்னா— ஒருத்தராவது நல்லதச் சொல்லணுமில்லியா?"

"சொல்றேம்மா— என்னால முடிஞ்ச அளவு நம்பிக்கையூட்டறேன். அதே சமயம் மாமாவும் இவரை நம்பி ராஜாங்க விஷயங்கள் பேசினாதான் இவருக்கு நம்பிக்கை வரும். குறைந்தபட்சம் இந்தச் சேதுநாட்டு மண்ணுல இருக்கிற பாளையாதிபதிகளை எல்லாம் கட்டி ஆளற ஒரு பொறுப்பை யாவது மாமா இவருக்குத் தரட்டும்—"

பொன்னாத்தாள் அங்கு தொட்டு இங்கு தொட்டு இறுதியாக வந்து நின்ற விதத்தைப் பார்த்து உடையக்காள் சிரித்து விட்டாள்.

"எதுக்கும்மா சிரிக்கறே?"

"உன் ஆசைக்குப் பொருள் என்ன தெரியுமா?"

"என்னம்மா?"

"சேது நாட்டுக்கு இரண்டு அரசர்கள் இருந்தா என்னன்னு நீ கேட்காமக் கேட்கறே?"

"அம்மா—"

"ஆமாண்டா கண்ணு— புருஷன் மேலே உனக்கு இருக்கிற பாசம் உன்னை இப்படிப் பேச வைக்குது. உனக்கு ஒரு விஷயம் சொல்றேன். கவனமா கேட்டுக்கோ.



காத்தான் சேது நாட்டுக்கு இணையா இன்னொரு நாட்டை உருவாக்கற ஆசைல இருக்கான். புதுக்கோட்டையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் உறுதிபடி இருக்கணும்கறது அவனுடைய ஆசை.

மதுரையால் இனி ஆபத்து ஏற்பட வாய்ப்புகள் இல்லை. ஆனால் மராட்டியர்களால சேது மண்ணுக்குப் பாதிப்பு ஏற்பட நிறைய வாய்ப்பு இருக்கு. அது தடுக்கப்படணும்னா தஞ்சைக்குப் பக்கத்துல இருக்கற புதுக்கோட்டை சேது நாட்டுக்கு ஒரு கேடயமா இருக்கணும். காத்தான் அதற்கான கனவுகளோட, திட்டங்களோட இருக்கான்!

அதைப் புரிஞ்சு உன் புருஷன் காத்தானுக்குத் துணை நின்றால் அப்படி உருவாக்கற புதிய நாட்டுக்கு உன் புருஷன் தான் அரசன்.

உன் புருஷனும், காத்தானும் ஒத்துமையா ஒரே மனதா இருந்துட்டா எந்த நாளும் சேது பூமியை யாரும் எதும் செய்துட முடியாது.

நான் இப்ப உனக்கு கோடிகாட்டியிருக்கேன். நீ புரிஞ்சு தாதியனை அதாவது உன் புருஷனை அதுக்காகத் தயார் செய்.

அதே சமயம் பங்காளிகளான கண்ணாயிரத் தேவர், கழுகுத் தேவர், திருவடித் தேவர் இவங்க மூன்று பேர்கிட்ட இருந்து உன் கணவரைப் பிரித்து வை.

உலை கொதிக்க இந்த மூன்று பேரும்தான் விறகா இருக்காங்க..."

— உடையக்காள் சொன்னபடியே பொன்னாத்தாளின் தலையை வாஞ்சையாக வருடி விட்டாள். பொன்னாத்தாளும் அந்தத் தாயன்பில் கரைந்து அவள் மடியில் ஒரு சிறு குழந்தை போல அடங்கத் தொடங்கினாள்.

அதே நிலைதான் கிழவனிடமும்.

ஆனால் அடங்கிக் கிடந்த மடிதான் வேறாக இருந்தது. காதலி நாச்சி மெத்தென்ற மடியில் கிழவனுக்கு அடைக்கலம்

கொடுத்துவிட்டு, அவரது சுருசுரு கூந்தலையும் கோதிவிட்டுக் கொண்டிருந்தாள் அவள்.

கிழவன் வருமுன்வரை பதைபதைப்பும் உணர்ச்சிப் பெருக்கிலும் திண்டாடிக் கொண்டிருந்தவள் கிழவன் வந்த நொடியில் சாதுப்பூனையாகிவிட்டாள்.

"என்ன காதலி– எதுவுமே பேச மாட்டேன் என்கிறாய்?"

"இப்படி ஒரு குழந்தை போல மடியில் விழுந்து கிடந்தால் எதைப் பேசுவது? உங்களை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை."– சிணுங்கினாள்.

"எல்லோரும் இதையேதான் சொல்கிறார்கள். நீயுமா?"

"நீயுமா என்றால்– போர்க்களத்தில் வேங்கை. இங்கே குழந்தை! ஒரு மனிதரால் எப்படி இப்படி இரண்டு விதமாக இருக்க முடியும் என்று யோசிக்கிறேன்."

"அரசன் என்றால் இரண்டுவிதமாக அல்ல– இருநூறு விதமாகக் கூட இருக்க அவனுக்குத் தெரிய வேண்டும்."

"அதனால்தான் உங்களைக் கொல்ல வந்தவன் எதிரிலும் முற்றும் துறந்த முனிவர்களைப் போலப் பதற்றமே இல்லாமல் இருந்தீர்களா–?"

"ஆமாம் காதலி– இப்படி எல்லாம் ஏதாவது நடக்கும் என்று எனக்கு முன்பே தெரியும்."

"தெரியுமா–? எப்படி?"

"எதற்காக விடைக்கிறாய்? காலையிலேயே சொன்னேனே– அரசர்கள் வாழ்வில் மிக சகஜமான ஒன்றுதான் நடந்திருக்கிறது என்று."

"பேச்சை மாற்றாதீர்கள்– உங்களுக்கு முன்பே தெரியும் என்றீர்களே– எப்படி? தெரிந்தும் ஏன் அதைச் சொல்லவில்லை?"

"இதோ பார் காதலி– என் உயிரை அந்த இறைவனே



கூட நேரில் வந்து தருகிறாயா என்று கேட்டுத்தான் எடுத்துச் செல்ல முடியும். மற்ற யார் எங்கே எந்தச் சதியில் ஈடுபட்டாலும் அதை என்னால் யூகித்து அதிலிருந்து மீண்டு விட முடியும். இதை நீ புரிந்து கொள். இதற்குமேல் இதைப்பற்றிப் பேசாதே– விட்டுவிடு. காலப்போக்கில் உண்மை தெரியவரட்டும். நான் பல நாட்கள் அன்னிய மண்ணில் அடைந்து கிடந்துவிட்டு வந்திருக்கிறேன். இங்கே இப்பொழுது எதற்கு அந்தப் பேச்செல்லாம்?"

"அதுசரி– நீங்கள் அக்கா செவத்த நாச்சியாரைச் சந்திக்கப் போவதாக அல்லவா எனக்குத் தகவல் வந்தது. அப்படி இருக்க என் இருப்பிடம் தேடி வந்திருக்கக் காரணம்?"

"பரவாயில்லை– தேவையற்ற விஷயங்களைப் பேசினாலும் தேவையான ஒரு கேள்வியையும் கேட்டுவிட்டாய். உன்னோடு பல விஷயங்களை மனம் விட்டுப் பேசவே வந்திருக்கிறேன் காதலி."

"நிஜமாகவா?"

"அதில் ஏன் உனக்கு இத்தனை சந்தேகம்?"

"சந்தேகப்படாமல்– உங்களைப் போன்ற அரசர் பெருமக்களுக்கு, அதிலும் மறவர்குடி ஆண்மக்களுக்கு என் போன்ற பெண்களிடம் மனம்விட்டுப் பேச என்ன இருக்க முடியும்? அதிலும் ஒருத்திக்குப் பத்துப் பேர் இருக்கும்போது–"

"என்ன சக்களத்திக் காய்ச்சலா?"

"இருக்காதா– இல்லை இருக்கக் கூடாதா?"

"அது ஆபத்தாயிற்றே–?"

"ஆபத்துதான் எப்பொழுதும் உங்கள் அணிகலனாயிற்றே."

"ஆனாலும் இது அழகிய ஆபத்து–"

"ஆபத்தில் கூட அழகிய ஆபத்து– அழகில்லாத ஆபத்து என்று இருக்கிறதா?"

"இருக்கிறதே— இப்பொழுது நீயே இருக்கிறாய். இதோ இந்தப் பாலில் நஞ்சைக் கலந்து எனக்குக் கொடுத்துக் கொல்ல முயலலாம் அல்லவா?"

— கிழவன் அப்படிக் கேட்ட மறுநொடி காதலி நாச்சி அரவம் கடித்தது போலச் சிலிர்த்து விட்டாள். கண்களில் ஜலத் திரட்சியும் ஆரம்பித்து விட்டது.

"அடடே— என்ன இது? ஒரு பேச்சுக்குச் சொன்னேன் காதலி. அதற்கா கலங்குகிறாய்?"

"பேச்சா இது— விஷம் கொடிய நாக விஷம். இதற்கு நீங்கள் என்னைக் குத்திக் கொன்றிருக்கலாம்."— காதலி பொங்கி எழுந்தாள்.

"கொஞ்சம் சாந்தப்படு காதலி— நான் கூற வந்ததே வேறு. என் காதலி எப்படிப்பட்டவள் என்று எனக்குத் தெரியும். ஆனால் என் உறவினர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று உனக்குத் தெரியாது பார். அதுதான் அப்படிச் சொன்னேன்."

"இல்லை— நீங்கள் நான் கேட்கும் ஒரு கேள்விக்குக்கூட ஒழுங்காகப் பதில் கூறவில்லை. என்னையும் இங்கே ஆழம் பார்க்க வந்தது போல இருக்கிறது.

நேரடியாகப் பேசுங்கள். என்ன வேண்டும் உங்களுக்கு?"

"பரவாயில்லை— நீ அதி புத்திசாலி. எத்தனை நேராக விஷயத்திற்கு வந்துவிட்டாய்—?"

"முதலில் விஷயம். பிறகுதான் மற்ற பேச்சு."

"சரி விஷயத்திற்கு வந்து விடட்டுமா—?"

"உம்— சீக்கிரம்—"

"எனக்குப் பிறகு இந்தச் சேது நாட்டுக்கு யார் வாரிசு என்று உனக்குத் தெரியுமா?"

"இப்பொழுது எதற்கு இந்தக் கேள்வி?"

"பதில் சொல் காதலி. யார் வாரிசு?"



"சந்தேகமென்ன? தாதியத்தேவர்தான்."

"தாதியனால் இந்த மண்ணைக் கட்டி ஆள முடியும் என்று நீ நம்புகின்றாயா?"

"அரச பதவி என்பது ஆளத் தெரிந்தவர்களுக்குத்தான் என்கிற நிலை வரும்போதுதான் உங்கள் கேள்விக்கு என்னால் பதில் கூற முடியும்.

இப்போதைக்கு வாரிசுத் தகுதிதானே இந்த மண்ணில் பிரதானம்?"

"அந்தப் பிரதானங்களைத் தூள்தூளாக்குவதுதான் இனி என் வேலை. அப்படி ஒரு நிலை இங்கு இல்லை. தகுதி உடைய ஒருவனுக்குத்தான் இந்த அரச சபையில் இடம் என்று வைத்துக் கொள். அப்பொழுது நீ யாரைச் சொல்வாய்?"

காதலி நாச்சி துளிகூட யோசிக்கவில்லை. "அப்படிப் பார்த்தால் என் சகோதரன் பெரிய உடையத்தேவன்தான் இந்த மண்ணிற்குத் தலைவனாகத் தகுதியானவன்" என்றாள்.

"சபாஷ். சரியாகச் சொன்னாய்" என்றது கிழவனின் குரலும்.

"அதுசரி— இப்பொழுது எதற்கு இந்தக் கேள்வி?"

— கிழவன் இந்தக் கேள்விக்கு மட்டும் பதிலைச் சொல்லாமல் இதற்கு மேல் கேள்வி கேட்காதே என்பது போல அவள் உதட்டின் மேல் தன் உதட்டைப் பதிக்கத் தொடங்கினார்.

இருட்டிவிட்டது.

இராமலிங்க விலாசக் கலா மேடையில் திருவாரூர் மங்களாம்பிகையின் நாட்டியத்துக்கான ஏற்பாடுகள் ஜரூராக நடந்து கொண்டிருந்தன.

திகுதிகுவென்று தீப்பந்த வரிசை.

சிலுசிலுவென்று காற்று.

மேடையில் வண்ணச் சேலைகளின் அலங்கரிப்பு. ஜரிகைத் தட்டிகள் வேறு மின்னி மின்னிக் கலையரங்கை வேறுபடுத்திக் காட்டிக் கொண்டிருந்தன.

பின்வாத்தியக் கலைஞர்கள் தங்கள் வாத்தியக் கருவி களை இறக்கி வைத்துப் பதம் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அந்தி வானில் அறுத்து வீசிய பூசணித் துண்டு போல நிலாப்பிறை அமட்டலாக நட்சத்திரங்கள்.

அரண்மனை இப்படிக் கலா உற்சவம் ஒன்றன் பொருட்டுக் களைமிகக் கொள்ளும்போது, அரண்மனை பின் வாயில் வழியாக மாட்டுவண்டி ஒன்று ஒரு மூட்டையுடன் வெளியேறத் தொடங்கியிருந்தது.

அந்த மூட்டையில்–?

## 37

மூட்டையோடு இரண்டு காவல் வீரர்களும் பின் தொடர்ந்தபடி இருந்தனர்.

அப்படி மூட்டையோடு ஒரு வண்டி பின்வழியாக வரும் என்று முன்பே பின்கட்டு வீரர்களுக்குத் தகவல் தரப்பட் டிருந்தது போலத் தோன்றியது. எனவே வீரர்களும் கோட்டை மதிலின் கதவுகளைத் திறந்து விட்டனர்.

அந்த மாட்டு வண்டி மூட்டையோடு அரண்மனை விட்டு நீங்கத் தொடங்கியது. அதே சமயம் அரண்மனைக் கலை யரங்கத்தில் இருந்து திருவாரூர் மங்களாம்பிகையின் நாட்டிய நிகழ்வு ஆரம்பமாகிவிட்டதற்கான கட்டியங்கள் கேட்கத் தொடங்கின. மத்தளம், மிருதங்கம், சப்பளா, ஜால்ரா மற்றும்



கடப்பாளைகளின் சப்தமெல்லாம் ஒருங்கே கலந்து கலவை யான ஒருவித சப்தம் கேட்கத் தொடங்கியது.

பின்கட்டு வீரர்கள் கதவைத் திரும்ப மூடிவிட்டு அந்தச் சப்தம் கேட்டு மனக்கண்ணில் அங்கு நடக்க இருப்பதை ரசிக்க ஆரம்பித்தார்கள்.

வண்டியோ ராமநாதபுரத்துச் சாலையில் விரைந்து கொண்டிருந்தது.

"உம்– சீக்கிரமாப் போ– இந்தப் பிணத்தை எத்தனை சீக்கிரமா எரிக்கிறோமோ அத்தனை சீக்கிரமாக நாம் வீடு திரும்பலாம்."

– பின் தொடரும் வீரர்களில் ஒருவன் வண்டி ஓட்டியைப் பார்த்துக் கத்தினான்.

அப்பொழுதுதான் வண்டி ஓட்டிக்கே அந்த மூட்டையில் ஒரு பிணம் இருக்கிறது என்பது தெரியவந்தது.

காளைகளின் வாலில் மடுக்கல் கொடுத்தான் வண்டி ஓட்டி. அது சிலிர்த்துக் கொண்டு ஓடத் தொடங்கியது. காவல் வீரர்களும் பின் தொடர்ந்து ஓடினர்.

ராமநாதபுரம் மயானம் வெறிச்சோடிக் கிடந்தது. அநேக நடுகற்கள், இறந்துபோய்ப் புதையுண்டு கிடப்பவர்கள் யார் என்பதை 'வீரதீரப் பராக்கிரம' எனும் அடைமொழியோடு சொல்லிக் கொண்டிருந்தன.

நன்கு இருட்டத் தொடங்கிவிட்ட வேளை–

அந்த மயான முகப்பை வந்தடைந்தது மாட்டு வண்டி.

காவல் வீரர்கள் பதவிசாக மூட்டையைக் கீழே இறக்கினர்.

கெச்சலாய் ஒரு மாதிரி வாசம் வீசிற்று.

"ஹூம்– அரண்மனை வைத்தியர் அவருக்குத் தெரிந்த முறி மருந்து அவ்வளவையும் கொடுத்தும் பலனில்லை பார்த்தாயா– அவ்வளவும் நாற்றமாக வீசுகிறது."

"உண்மைதான். நம்முடைய அரசர் சொன்னதுதான் சரி. 'அவன் பிழைக்கமாட்டான்– காப்பாற்ற முயற்சி செய்யாதீர்கள்' என்றார். ஆனால் அம்பலக்காரன் விடவில்லை. என்ன பிரயோஜனம்?"

இருவரும் பேசியபடி மயானத்தை ஊடுருவினார்கள். எங்கே மயானப் பராரி என்று தேடினார்கள். எங்கிருந்தோ மயானப் பராரியும் ஓடி வந்து கொண்டிருந்தான்.

ஓடி வந்தவன் மூச்சிரைத்தான்.

"ஆண்டே– வாங்க ஆண்டே என்ன ஆண்டே இது சவ மூட்டைங்களா?"

"பின்ன என்ன பொன்மூட்டையோடயா உன்னைப் பார்க்க வருவோம்? இந்தப் பிணத்தைப் புதைத்தாலும் சரி, எரித்தாலும் சரி அது உன் இஷ்டம். இந்தா அதற்கான முத்திரைக் கட்டை காரியத்தை முடித்துவிட்டுத் தலையாரியைப் பார்த்துக் கூலியாக நெல் மூட்டையையும், பொரி மூட்டையையும் வாங்கிக் கொள்.

அரசாங்கக் காரியம். கவனமாகச் செய்ய வேண்டும் என்ன?"

"உத்தரவு ஆண்டே–" என்றபடி அந்தக் காவல் வீரர்களில் ஒருவன் தூக்கி எறிந்த முத்திரைக் கட்டையைப் பிடித்துக் கொண்டே அந்தச் சாக்கு மூட்டையை நெருங்கினான் மயானப் பராரி.

அவர்கள், அடுத்து அவன் செய்ய இருப்பதைக் காணத் தொடங்கினார்கள். அவிழ்க்கப்பட்ட மூட்டையில் இருந்து சற்றே கறுத்துப் போன நிலையில் அந்தச் சடலம் கண்ணில் படத் தொடங்கியது.

அன்றைய பகலில் கிழவன் சேதுபதியைப் பூநாகங்களைக் கொண்டு கொல்ல முயன்ற அதே மனிதன்தான்!



கலையரங்குக்கு முன்னால் வரிசையாக ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. ஆசனங்களுக்கு நடுவில் பரமக்குடி பட்டு நூல்காரர்கள் பார்த்துப் பார்த்து நெய்திருந்த பட்டு வண்ண விரிப்புகளும், சாலியர்கள் அடித்தும் அழுத்தியும் நெய்திருந்த கம்பளி விரிப்புகளும் விரிந்து கிடந்தன.

அதில்தான் சங்கனும் மூப்பரும் அந்த இலங்கைப் பெண்ணான யாழினியும் அமர்ந்து கொண்டிருந்தனர்.

ஆசனங்களில் தலையானதில் கிழவன் ரகுநாத சேதுபதியும் துணையாசனங்களில் கிழவனின் பத்தினிகளான செவத்தக்காவும், காதலி நாச்சியும், அழகம்மையும் பிரதானமாக அமர்ந்திருக்க குமாரபிள்ளையும் அமர்த்திவைக்கப்பட்டிருந்தார்.

வள்ளல் சீதக்காதியை அங்கே பார்க்க முடியவில்லை. அடப்பம் மட்டும் அங்கும் இங்குமாக அலைந்து கொண்டு காளாஞ்சி தந்தபடியும், பழரசங்களைத் தாதியர்களைக் கொண்டு வழங்கியபடியும் இருந்தார்.

மங்களாம்பிகை நாட்டியத்தில் வெகு சிரத்தையானவள் போலத் தெரிந்தது. நட்டுவாங்கத்தின் போது பிய்த்து உதறினாள். நல்ல இளவயது. இருந்தால் இருபது இருக்கலாம். அங்கங்களில் அற்புதமான லாவண்யச் செழிப்பு.

அது காதலி நாச்சியைக் கொஞ்சம் உறுத்திற்றோ என்னவோ நாட்டியத்தின் இடையே மென்குரலில் அடப்பத்தை அழைத்து காதோடு காதாக விசாரிக்கலானாள்.

"அடப்பம் இந்தப் பெண் தாசி குலத்தவளா?"

"ஆம் தாயி."

"அந்தக் குலத்தில் இத்தனை அழகாகக் கூடவா பெண்கள் இருப்பார்கள்?"

"அது அவள் தாய் எந்த ஜமீனின் அரவணைப்பில் இருந்தாள் என்பதைப் பொறுத்தது தாயி–"

"ஆட்டம் முடிந்ததும் அவர்களுக்கு அளிக்க வேண்டியதை அளித்து ஊருக்கு அனுப்பிவிடு."

"அந்தப் பெண்ணுக்கு ராமேஸ்வரத்துக்குப் போய் புண்ணிய நீராடல் செய்ய வேண்டுமாம். அப்படியே அங்கே நாட்டியமாட வாய்ப்புக் கிடைத்தால் அது ராமலிங்க ஸ்வாமிக்குச் செய்யும் நாட்டியாஞ்சலியாகவும் இருக்கும் என்று சொன்னாள். வள்ளலிடம் கேட்டுவிட்டுச் சொல்வதாகக் கூறி யிருக்கிறேன்."

"எதுவானாலும் சரி- நிகழ்ச்சி முடிந்தவுடன் அவர்கள் புறப்பட்டுவிட வேண்டும். அரசரோடு உசாவக் கூடாது. நான் சொல்வது புரிகிறதா?"

— காதலி காற்றுக்குரலில் எச்சரிக்கை செய்த விதத்திற்கு அடப்பத்திடம் பலத்த தலையாட்டல்.

இப்படி ஆட்டம் கட்ட வந்த பல பெண்கள் கிழவனை மயக்கி, கலா மோகத்தில் கிழவனும் மயங்கி இருக்கும் தருணத்தில் என்ன வேண்டும் உங்களுக்கு என்று சித்தாப் பாகக் கேட்டுவிட மளாரென்று காலில் விழுந்து, 'தாங்கள் அந்தக் கடவுளுக்குச் சமமானவர். ஜனங்களின் காவலர். எங்களுக்கும் காவலாகத் திகழ வேண்டும்' என்று கூறிக் கிழவ னின் மனத்தைப் பிசைந்த கதைகள் அடப்பத்துக்கும் தெரியும். அதில் பலர் சாதுர்யமாகக் கிழவனின் கரத்தால் ஒரு பொன் சங்கிலியைக் கழுத்தில் கட்டிக்கொண்டு அதுவே அவர் கட்டிய தாலி, மனத்தாலும், குணத்தாலும் நான் இனி கிழவர் பத்தினி. என்னை இனி யாரும் தீண்டலாகாது என்று கூறிக்கொண்டு வாழ்ந்து கொண்டிருப்பதையும் அவர் அறிவார்.

இதனாலேயே கிழவனின் பத்தினியர்களின் எண்ணிக்கை இருகை விரல்களின் அளவை மீறிப் போய்விட்டது.

அவர்களுக்கெல்லாம் மான்யம், நிவந்தம், மச்சுவீடு என்று ராஜ உபசாரங்கள் வேறு- எல்லாவற்றையும் உத்தேசித்தே காதலி அப்படிக் கூறினாள்.



ஆட்டம் தொடர்ந்து கொண்டிருந்தது. அந்தத் திருவாரூர்க் காரப் பெண் ஒரு அபிநயத்தின்போதும், அடவுபிடிக்கும் போதும் சொக்க வைத்தாள்.

எதிலும் தன்னிலை மறப்பது என்பதே கிடையாது கிழவனுக்கு. ஆனால் கவிதை, நாட்டியம் எனும்போது மட்டும் அதில் விதிவிலக்கு பெற்றுவிட்ட ஒரு மனிதனாட்டம் திகழ்வது வழக்கத்தில் இருந்தது.

சாதாரணமாகக் கலை நிகழ்ச்சிகளுக்கு அரண்மனைக் கவிராயர்களும் புலவர் பெருமக்களும் வருவார்கள். கந்த சாமிப் புலவர், கர்ணக்கவிராயர், சண்முகசாமிப் பிள்ளை, ஈஸ்வர பட்டர் என்று ஒரு கூட்டமே நிகழ்ச்சிகளுக்குத் தவறாமல் வந்துவிடும்.

நிகழ்ச்சி முடிந்தபின் அதன் செறிவு அலசப்படும். அதில் ஆளுக்கு ஆள் வித்தகத்தைக் காட்டுவார்கள். ஈஸ்வரபட்டரிடம் சமஸ்கிருதமும், தெலுங்கும் குதிதாளம் போடும். கந்தசாமிப் புலவர் சிலேடை பிடிப்பதில் கெட்டிக்காரர்.

இன்று அவர்கள் கம்பளி விரிப்பின் மேல் அமர்ந்த படி ஆட்டத்தில் மூழ்கி இருந்தனர். அம்பலக்காரன் கூட அப்பொழுதுதான் அங்கு வந்திருந்தான்.

கிழவனின் இருக்கைக்குப் பின்னால் நின்றுகொண்டு திருவாரூர்க்காரியின் ஆட்டத்தை ரசிக்கத் தொடங்கியிருந்தான்.

குமாரபிள்ளைக்குப் புது அனுபவம்.

அவ்வப்போது கிழவனைப் பார்த்து ஒரு புன்சிரிப்பு சிரித்தார். உள் மனத்தில் பலவிதமான எண்ணங்கள் ஓடிக் கொண்டிருந்தன.

வானம் பார்த்த பூமியான சேதுநாடு ஒரு கருவேல மரக்காடாகவும், புளியமர வனமாகவும்தான் இருக்கும். மக்களுக்கும் கூட வயிற்றுப்பாடே பெரிதாக இருப்பதால் பெரிதாகக் கலைவிளக்கங்கள் இருக்காது என்று நினைத்துக்

கொண்டிருந்தவர் நடக்கும் ஒவ்வொரு சம்பவத்தாலும் வியர்த்துப் போகாத குறை.

மதுரை திருமலை நாயக்கரின் மகாலும் அங்கு நடை பெறும் நிகழ்ச்சிகளும் ஒருவிதம் என்றால் இங்கே அதைத் தூக்கிச் சாப்பிடும் விதமாகவே எல்லாம் இருக்கிறது.

மறவர்களின் வாழ்விலும் கலையம்சம் கலந்துதான் உள்ளது- அடேயப்பா கிழவனிடம் கூட என்ன ஒரு ரசனை_!

'ஆஹா- அற்புதம்- அபாரம்...' என்கிற கருத்துகளை அவர் உதடுகள் உதிர்த்தபடி இருக்கிறதே...?

அதிவீரன், மகாரசிகன் இன்னும் எத்தனை முகங்கள் இந்த மனிதனிடம்...?

குமாரபிள்ளை மனம் கணக்கிட்டுக் கொண்டிருந்தது. இந்த நொடிப்போது மதுரையம்பதி எப்படி இருக்கும் என்கிற கேள்வியைப் புறந்தள்ள முடியவில்லை. வேங்கடகிருஷ்ணப் பரும், கோவிந்தப்பையாவும் மனவெளியில் உலாவரத் தொடங்கினார்கள்.

பரிச்சயம் மிகுந்த அரண்மனை ஊழியர்கள் ராயசம் ரங்கதுரை, பிரதானி பெருமாளய்யா, கஜானா காப்பாளர் வீரவேலர் என்று குமாரபிள்ளை தன் சகாக்களை நினைக்க வும் விழித்திரை தன்னை ஈரப்படுத்திக் கொள்ளத் தொடங் கியது.

நல்லவேளை_

தீப்பந்த ஒளிநாக்குகள் குமாரபிள்ளையைத் துல்லியமாகக் காட்டாததால் தப்பித்தார் எனலாம்.

அப்பொழுது அங்கே மயானத்துக்கு மூட்டையோடு போன காவல் வீரர்களில் ஒருவன் மூச்சிளைப்பட ஓடிவந்து நின்றபடி நாட்டியத்தை ரசிப்பவர்களை ஒரு முறை நோட்டம் விட்டான். அந்த நோட்டத்தில் அம்பலக்காரன் அகப்படவும் முகத்தில் ஒருவித நிம்மதிப் பெருமூச்சு.



நயமான பூனை போல அம்பலக்காரனைச் சமீபித்த வனை அம்பலக்காரனும் பார்த்தான். காவல் வீரன் திருவாய் பொத்திக் கைகளை அசைத்து அழைப்பதை உணர்ந்து விலகி னான். பின்புறம் ஜதி சப்தத்தில் 'தா- தா- தை- தை தா தா- தை தை- தத்தா தை தை- தித்தா தைதை- ததிங்கிணாங்கு ததைதை...' என்கிற நட்டுவாங்கம் எதிரொலித்தபடி இருக்க, "என்ன எதற்கு அழைத்தாய்?"

"தளவாய்க்காரரே... ஒரு அதிசயம்."

"என்ன?"

"அந்தக் கொலைகாரன் சாகவில்லை."

"யாரையடா சொல்கிறாய்?"

"கானலையில் நம் கிழவருக்குக் குறி வைத்தானே- அந்தக் கொடூரனைத்தான் சொல்கிறேன்."

"என்னடா சொல்கிறாய் நீ?"

"உண்மையைத்தான் சொல்கிறேன். அவனைக் காப்பாற்றத் தாங்கள் முயன்றதும், நாடித் துடிப்பெல்லாம் குறைந்து அவன் இறந்துவிட்டதாகத் தீர்மானித்து அவன் உடலை மயானத்தில் கொண்டுபோய் எரித்துவிடச் சொன்னதையும் ஒரு வினாடி யோசித்துப் பாருங்கள்_"

"அதற்கென்ன?"

"மயானத்தில் அவன் சிதைக்குத் தீ மூட்டியபோது தடு தாளாமல் அவன் அலறிக்கொண்டு எழுந்ததை நான் கண்டேன். ஒருவினாடி அவன் பேயோ, பிசாசோ என்று கூட நினைத்துவிட்டேன். ஆனால் அப்படி எல்லாம் இல்லை. அவன் சாகவில்லை. அரண்மனை வைத்தியரின் மூலிகை முறிமருந்து எப்படியோ வேலை செய்து விட்டது-"

"எல்லாம் சரி. இப்பொழுது அவன் எங்கே_"

"மயானத்திலேயே பராரியின் குடிசையில் கிடக்கிறான். காவலுக்கு நமது வீரன் ஒருவன் இருக்கிறான்."

"அற்புதம்– அற்புதம். வா போகலாம்." அம்பலக்காரன் துள்ளிக் கொண்டு புறப்படலானான்.

போகும்போது எச்சரிக்கையாகக் கிழவன் தன்னைப் பார்க்கிறாரா என்று பார்த்தபடியே புறப்பட்டான்.

மயானம்.

உள்ளிலும் வெளியிலும் அடர்ந்த மௌனம். தீப்பந்தம் தாங்கிய நிலையில் திபுதிபுவென அம்பலக்காரனின் புரவியும், அந்தக் காவல் வீரனின் புரவியும் மயானப் பாதையில் புழுதியைக் கிளப்பிவிட்டன.

ஆங்காங்கே நடுகற்களின் நிமிர்வு யாரோ நின்று நோக்குவது போல ஒருவிதப் பயத்தைத் தந்து கொண்டிருக்க எரிமேடை ஒன்றில் அமட்டலாகக் கனன்று கொண்டிருந்தது சடலம் ஒன்று. அதன் நிமித்தம் உருவான புகை மூட்டத்தில் அம்பலக்காரன் புரவியும் காவல் வீரன் புரவியும் ஏதோ மேகப் படலத்தினுள் புகும் சிறகு முளைத்த குதிரைகள் போலத் தோற்றம் காட்டின.

இருவரின் விஜயத்தையும் குளம்படிகள் எடுத்துச் சொன்னதன் எதிரொலி மயானப் பராரி ஓடி முன்வந்தான். "ஆண்டே– ஆண்டே" என்று அந்த மயான மண்ணில் விழுந்து எழுந்தான்.

அம்பலக்காரன் பார்வை அவனை ஊடுருவிற்று. "எங்கே அந்தச் சண்டாளன்?" உதட்டில் கேள்வி. பதிலாக அவன் தன் குடிசையைக் காட்டினான். பனை ஓலைகளால் வேயப் பட்ட சிறிய குடிசை. வீசும் காற்றில் அந்த ஓலை போடும் சப்தம் கூட ஒரு மாதிரியாக இருந்தது.

அம்பலக்காரன் துள்ளிக்கொண்டு குடிசையை நோக்கி ஓடினான்.



உள்ளே கைகள் கட்டப்பட்ட நிலையில் வயிற்றிலும் துளி ரத்தக் கசிவோடு எறிடடான் அந்தப் பூராகக்காரன்.

அம்பலக்காரன் அவனைப் பார்த்த நொடி பலமாகச் சிரிக்க ஆரம்பித்தான்.

## 38

அம்பலக்காரன் முகத்தில் வெற்றிப் புன்னகை. அது அந்த இரவுப்பொழுதில் மயான வெளியையே அதிர விட்டது. எதிரே, தற்கொலைக்கு முயன்றும் உயிர் பிழைத்துவிட்ட அந்த வீரன். சுற்றிலும் காவல் வீரனும், மயானப் பராரியும் நின்றபடி இருக்க அம்பலக்காரன் அவர்கள் இருவரையும் பார்த்து, சற்றே வெளியேறுமாறு பார்வையாலேயே சமிக்ஞை செய்தான்.

இருவரும் வெளியேறினர்.

அம்பலக்காரன் அந்த வீரனைச் சமீபித்து நின்றபடி விசாரணையைத் தொடங்கினான்.

"மகாப் பெரிய வீரனே– யாரப்பா நீ? உன் பெயர் என்ன?"– அந்த வீரனிடம் மௌனம் தொடரத் தொடங்கியது. கத்தி பட்ட இடத்தில் வலிப்பதால் முகத்தில் அதன் எதிரொலியாகக் கசங்கல்கள் தெரிந்தன.

"தெரியும். நீ சாதாரணமாகக் கேட்டால் ஏதும் சொல்ல மாட்டாய் என்று எங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் நீ மிக மிகத் துரதிர்ஷ்டசாலி. அதைப் புரிந்து கொள். சாவின் வாசல்வரை சென்று விட்ட உன்னை நாங்கள் காப்பாற்றிக் கைதியாக உட்கார்த்தி வைத்திருப்பதில் இருந்தே நீ அதைப் புரிந்து கொள்ளலாம்.

இதிலிருந்தே தெய்வம் எங்கள் பக்கத்தில் இருப்பதை நீ புரிந்து கொள்ள வேண்டும். இனியும் மௌனம் சாதிக்காமல் நீ யார்? உன்னை ஏவியது யார் என்றெல்லாம் கூறினால் நான் இங்கேயே, இப்பொழுதே உன்னை விட்டு விடுகிறேன். என்ன சொல்கிறாய்?"

அம்பலக்காரன் ஆரம்பத்தில் சற்று முரட்டுத்தனமாகச் சிரித்திருந்தாலும் இப்பொழுது இதமாகத்தான் பேசினான். ஆனாலும் அந்த வீரன் அசைந்து கொடுக்கவில்லை. மௌனமாய் வலி முகத்தோடு அம்பலக்காரனைப் பார்த்தான்.

நிசப்தமான மயானப் பெருவெளியில் அவன் அப்படிப் பார்க்கும்போது தூரத்தில் இருந்து ஒரு கோட்டான் கோரமாக அலறும் குரல் கேட்டது.

அது அந்தச் சூழ்நிலையையே மிகக் கோரமாக மாற்றி இனம் காணமுடியாத ஒருவித உணர்ச்சியை இருவரிடையேயும் உருவாக்கிற்று.

"என்ன பார்த்துக் கொண்டேயிருக்கிறாய்? உண்மையைச் சொல்லி விடு. அது உனக்கும் நல்லது. எனக்கும் நல்லது. இல்லாவிட்டால் உன்னிடமிருந்து உண்மையை வரவழைப்பது எப்படி என்று எனக்குத் தெரியும்."

— அம்பலக்காரன் குரலில் ரௌத்திரம் தொனிக்க ஆரம்பித்தது. அதே சமயம் வெளியே பராரியும், காவல் வீரனும் நெருக்கமாக நின்று கொண்டு கிசுகிசுத்துக் கொண் டிருந்தார்கள்.

"என் வாழ்நாள்ல இப்படி ஒரு காட்சியைப் பார்த்த தில்லீங்க. உசுரோட இருக்கிறவங்க செத்து இங்கு வருவாங்க. ஆனா செத்த ஒருவன் இங்க வந்து உசுர் பொழச்சதுங்கறது என் நெத்தியைப் பேக்குது. அந்த ஆளுக்கு ஆனாலும் உசுரு கெட்டிங்க."

பராரியின் கருத்துக்குக் காவல்வீரனிடம் வேறுவிதமான பதில்.



"பாவம் அவன். பேசாமல் எரியும் நெருப்பில் எரிந்து சாம்பலாகியிருக்கலாம். உயிர் பிழைத்தது அவன் செய்த பாவம். இனி அவன் என்ன பாடெல்லாம் படப் போகின்றானோ?"

— சொல்லிவிட்டுத் தயக்கத்தோடும், பயத்தோடும் கூரை இடுக்கு வழியாக உள்ளே பார்த்தான். அம்பலக்காரன் ஒரு கத்தியை அவன் கண் எதிரே நீட்டியபடி நோண்டி விடுவேன் என்பதைப் போல் பேசிக் கொண்டிருப்பது தீப்பந்த ஒளியில் நன்றாகவே தெரிந்தது.

"நெனைச்சேன்— நடந்துக்கிட்டிருக்கு..." என்று முணுமுணுத்தது அவன் உதடிரண்டும்.

கலையரங்கில் மங்களாம்பிகை நாட்டிய நாடகத்தின் இறுதிச் சுற்றில் இருந்தாள். சுழன்று சுழன்று ஆடி முடித்த நிலையில் நட்டுவனார் மங்கள கீர்த்தனை பாட, அதற்கான நட்டுவாங்கமும், பாவங்களும் அவளிடம் வெளிப்பட்டுக் கொண்டிருந்தன. ஒரு கட்டத்தில் கைகளைக் குவித்து வணங்கியவள் இறுதிக் கட்டமாக அரச வந்தனம் செய்யும் எண்ணத்தோடு கிழவனைப் பார்த்து வணங்கிவிட்டு, அப்படியே மண்டியிட்டுக் கடவுளர்களைத் தொழுவது போல நெற்றியானது தரைமேல் படும் அளவு மண்டியிட்டு விட்டு எழுந்தாள்.

கிழவனிடம் பலத்த உற்சாகம்! உற்சாகமாகக் கைகளைத் தட்டித் தன் பாராட்டுகளையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்ள அவரைத் தொடர்ந்து அவையில் கூடியிருந்த அத்தனைப் பேரும் கைதட்டித் தங்கள் பாராட்டுகளைத் தெரியப்படுத்திக் கொண்டனர்.

கிழவனின் பார்வை அடப்பத்தை அருகில் அழைத்தது. அடப்பம் துள்ளிக் கொண்டு அருகில் சென்றார்.

"அந்தப் பெண்ணுக்கு உரிய பரிசுகள் தயாராக இருக்கிறதா?"

"அந்தப் பெண்ணுக்கு மட்டுமல்ல ஆண்டே, தாங்கள் பகலில் சொன்னதுபோல இலங்கைப் பெண்ணுக்கும், அவளை அழைத்து வந்த கடலாடிகள் இருவருக்கும் கூடப் பரிசுகள் தயாராக உள்ளன."

"நல்லது– அவைகளை எடுத்து வா."

கட்டளையைத் தொடர்ந்து அடப்பம் விலக, கிழவன் பார்வை ஒரு முறை சுற்றி வந்தது. புலவர் பெருமக்கள் ஒருபுறம். சங்கனும், மூப்பரும், யாழினியும் ஒருபுறம், குமார பிள்ளை மட்டும் தனியே தீவிர சிந்தனையில் இருந்தார்.

"பிள்ளை–"– கிழவன் குரல் கொடுக்கவும் துள்ளிக் கொண்டு முன்னால் வந்தார்.

"என்ன பிள்ளை...? ஏதோ தீவிரமாகச் சிந்திக்கிறாற் போலத் தெரிகிறதே?"

"ஒன்றுமில்லை அரசே– அந்தப் பெண்ணின் நடனம் என்னை எதை எதையோ நினைக்க வைத்து விட்டது. அவ்வளவுதான்."– பிள்ளை சமாளித்தார்.

கிழவன் ரசனையோடு அதைக் கேட்டுச் சிரிக்க அடப்பம் ஒரு பட்டுத் துணியால் மூடிய சில தாம்பாளங்களை ஏந்திய சேடியப் பெண்களோடு வந்து சேரச் சரியாக இருந்தது.

அதைப் பார்த்த கிழவன், "பிள்ளை உன் கையாலேயே அந்த நாட்டிய மங்கைக்கு நீ பரிசுகளைக் கொடுத்து விடு" என்று கூறிவிட்டு, அதுவரை பார்க்காமல் தவிர்த்த தன் பத்தினியர் மூவரையும் பார்த்தார். குறிப்பாக, காதலி நாச்சியை அவர் பார்த்த விதத்தில் ஆயிரம் அர்த்தங்கள். காதலிக்கும் புரிந்ததோ என்னவோ தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

குமாரபிள்ளை கிழவன் கூறிய பதிலால் சற்றுத் தடுமாறி விட்டிருந்தார்.

"அரசே– என்ன இது? தலை இருக்க வாலாடுவதா? அது அழகல்லவே–" என்று கேட்க, "அந்த வாலை ஆட்டுவதே



இங்கு தலைதானே?" என்று கிழவனும் சொல்ல, அதற்கு மேல் மறுமொழி கூற முடியவில்லை.

சேடியப் பெண்களிடம் இருந்த தாம்பாளங்களில் ஒன்றை வாங்கி மேடையில் தன் குழுவினரோடு இருக்கும் மங்களாம்பிகையை நோக்கிச் சென்று அதை அவளிடம் அளித்தார்.

அந்தப் பெண்ணும் அதை வாங்கி, தன் அருகில் நின்று கொண்டிருந்த பெண்மணியின் வசம் தந்துவிட்டு குமார பிள்ளையை நோக்கிக் கைகளைக் குவித்து வணங்கி, கீழே இறங்கிவந்து கிழவனின் காலில் மெத்தப் பணிவோடு விழுந்து எழுந்தாள்.

"வாழ்க வாழ்க– உன் கலையும் அதன் விலாசமும் நீடு வாழ்க" என்று கிழவனும் அவளை வாழ்த்திவிட்டு யாழினி யின் பக்கம் திரும்பினார்.

அவள் அவர் பார்க்கவும் பெருமிதத்தோடு சங்கனையும் மூப்பரையும் பதிலுக்குப் பார்த்தாள்.

சேடியப் பெண் ஒருத்தியின் வசம் இருந்த பரிசுத் தட்டை வாங்கிய கிழவர் அவள் அருகே சென்று, கம்பீரமாக அவளை ஏறிட்டு விட்டு, "இந்தா இது உனக்காக எனது பரிசு" என்றார். அவள் பரிசை வாங்காமல் கண்கள் பனித்துவிட்ட நிலையில் கிழவனை வெறித்தாள்.

"உம்– பரிசை வாங்கிக் கொள்."

"வாங்கிக் கொள்கிறேன் ராசா. அதற்கு முன் எனக்கொரு விக்ஞாபனம்–"

"தெரியும். இந்தப் பரிசை விடவும் பெரிய பரிசு ஒன்றை நீ எதிர்பார்க்கிறாய். அது என்னவென்றும் எனக்குத் தெரியும்."

– கிழவனின் பதில் அவளைச் சற்றுத் துணுக்குற விட்டது.

"யாரங்கே?"– கிழவன் சற்றே திரும்பிப் பின்புறமாய்ப் பார்க்க ஒருவன் ஓடி வந்து நின்றான்.

"என்ன வீரபத்ரா— இந்தப் பெண்ணின் தந்தையைக் கண்டுபிடித்துவிட்டாயா?"

"கண்டுபிடித்து அவரை நமது கணக்காயர் அறையில் அமர்த்தியும் வைத்திருக்கிறேன் அரசே..."

"அவரைப் போய் உடன் அழைத்து வா..."— கிழவன் சொன்ன நொடி அவனும் வணக்கத்தோடு விலக அதைக் கேட்ட அந்தப் பெண் திக்குமுக்காடிப் போனாள்.

"ராசா— இது ஆனாலும் அசுர வேகம். என் உள்ளம் நினைப்பதை நீங்கள் எப்படித்தான் கணிப்பாக்கிக் காரிய மாக்குகிறீர்களோ தெரியவில்லை. உங்களுக்கு என் கோடி வந்தனம்— கோடி வந்தனம்" என்று நெகிழ்ந்து போய்க் காலில் விழுந்து எழுந்தாள்.

"அவரோடு நீ தலைமன்னார் செல்லவும் ஏற்பாடுகள் செய்யப்படும். கவலையே படாதே. இந்தப் பரிசுகளையும் பெற்றுக் கொள்" என்றார். கிழவனை அவள் மீண்டும் ஒரு முறை வணங்கிவிட்டுப் பரிசுத் தட்டினைப் பெற்றுக் கொண்டாள்.

சங்கனும், மூப்பரும் நெகிழ்ந்து போயிருந்தனர். அவர்களுக்குப் பரிசைத் தர வந்த போது, சங்கன் முந்திக் கொண்டான்.

"ஆண்டே— நானும் உங்களுக்கு ஒரு பரிசைத் தர விரும்புகிறேன். இந்த ஏழையோட பரிசைத் தாங்கள் வாங்கிக்குவீங்களா?" என்று கேட்டபடியே அதுவரை யாருக்கும் தெரியாமல் மறைத்து வைத்திருந்த வலம்புரிச் சங்கு ஒன்றையும், முத்துமாலை ஒன்றையும் எடுத்துத் தன் கறுத்த கரங்களில் பிடித்தபடி நீட்டினான்.

"நான் பரிசு தருவதா பெரிசு... நீ தருவதுதான் சங்கா பெரிது. தா! தாராளமாகப் பெற்றுக் கொள்கிறேன்!" என்றபடிக் கைகளை நீட்டி அதை வாங்கிக் கொண்டார்.



"அபூர்வமான வலம்புரிங்க இது— இது இருக்கிற இடத்துல ஜெயம் கொழிக்கும்னு சொல்லுவாங்க."— மூப்பர் எடுத்துக் கொடுத்தார்.

கிழவனின் பார்வை அந்தச் சங்கினைப் பெரிதும் ரசித்துப் பார்த்தது. முத்துமாலையை உடனே அணிந்து கொள்ளவும் செய்தார். அப்படியே அந்த இரண்டு மீனவர்களையும் கட்டிக் கொள்ள அங்கே ரசமான ஓர் அன்புப் பரிவர்த்தனை—

மனிதத்தின் உச்சகட்டப் பரிமாணங்களின் மிக இயல்பான வெளிப்பாடுகள்.

குமாரபிள்ளையிடம் ஆச்சரியத்தின் சூறாவளி.

"நல்லது— நான் புறப்படுகிறேன்" என்ற கிழவனைப் புலவர் பெருமக்கள் மட்டும் சற்று ஏமாற்றத்துடன் பார்த்தனர். குறிப்பாகக் கந்தசாமிப் பிள்ளையிடம் ஏமாற்றம் பளிச்சென்று தெரிந்தது.

"என்ன புலவரே...? உங்களோடு பேசாமல் போகிறேனே என்று பார்க்கிறீரா?"

"ஆம் மன்னவா— எவ்வளவு நாளாகி விட்டது உங்களிடம் பேசி?"

"என்ன செய்யட்டும்? ராஜாங்க விஷயங்கள் அதுபோல ஒரு நிலையைத் தோற்றுவித்துவிட்டன. அதுதான் வந்து விட்டேனே. இனி அடிக்கடிப் பேசலாம்."

"தங்களின் மாமதுரை வெற்றியையும், வீரதீரத்தையும் உள்ளடக்கி 'பராக்ரம கேசரி விலாசம்' என்றொரு கவிதை நூலை எழுதப் போகிறேன்."

"மதுரை வெற்றி ஒரு சாதாரண விஷயம். அதற்கே கவிதையால் பாராட்டா?"

"தங்களின் ஒவ்வொரு செயலும் எங்களுக்கு அசாதாரணமான ஒன்று... அதிலும் இந்தக் கவிஞனுக்கு அது மிக

அசாதாரண ஒன்று. எனவே நான் பாடத்தான் செய்வேன்– நீங்களும் கேட்கத்தான் வேண்டும்."

– கந்தசாமிப் புலவர் தன் பதிலில் கொஞ்சம் உரிமையையும் எடுத்துக் கொண்டார்.

"நல்லது– பிறகு சந்திக்கிறேன். பிள்ளை, நாளை அரசவையில் சந்திக்கலாம். ஆமாம் எங்கே என் தம்பி சீதக்காதி? துவக்கம் முதலே அவன் தென்படக் காணோமே?"– நடந்தபடியே கிழவன் கேட்க, பத்தினியர் தொடர.

"அவருக்கு ஏதோ முக்கியப் பணி இருப்பதாகக் கூறினார் ஆண்டே..." என்கிற பதில் அடப்பத்திடம் இருந்து வந்தது.

"அது என்ன பணி– எனக்குத் தெரியாமல்?"– கிழவனின் நெற்றியில் ஓடியது கேள்வி.

கிழவனின் மனத்தில் எழும்பிய கேள்விக்கு விடையாக வள்ளல் சீதக்காதி தாதியத் தேவனுடன் பேசிக் கொண்டிருந்தார்.

தாதியத் தேவன் வாசலில் அவர் பயணித்து வந்திருந்த கோச்சு வண்டி நின்ற வண்ணமிருக்க, உள்ளே இறுக்கமான உரையாடலின் போக்கு–

"தாதியரே– உங்களை நான் நன்கு புரிந்தவன் என்கிற முறையில் சில விஷயங்களைப் பகிர்ந்து கொள்ளத்தான் வந்திருக்கிறேன். நான் இப்படி வந்திருப்பது அரசருக்கும் தெரியாது. இன்றைய தினம் ஊரே திரண்டு வந்து நமது கிழவன் சேதுபதி அவர்களைப் பாராட்டிய வேளையில் தாங்கள் இல்லாதது எவ்வளவு வருத்தத்தைத் தந்தது தெரியுமா?"

– வள்ளல் கேட்க தாதியன் அவரை மந்தகாசமாகப் பார்த்தான்.

"இப்படிப் பார்த்தால் எப்படி? ஆயிரம் கருத்து வேற்றுமைகள் இருந்தபோதிலும் அவருடன் யுத்தகளத்திற்குச்



சென்று சேது நாட்டு வீரத்தை மதுரையில் அழகாகப் பதிவு செய்து விட்டும் விட்டீர்கள். இப்படி வந்த நிலையில் ஒரு வீர ஆரத்திக்குக்கூட நில்லாமல் விலகிப் போவது சரியாகவா இருக்கிறது?"

"பெரிய வீர ஆரத்தி–! போதும் வள்ளலே. பேச்சை நிறுத்துங்கள். மதுரை வெற்றிக்குத் தான் மட்டுமே காரணம் என்று காத்தானை நாளை உலகம் சொல்லிவிடக் கூடாது. அதற்காகவே நானும் உடன் சென்றேன்.

என்னைப் போலத்தான் கன்னிவாடிக்காரர் சின்னகாத்ரியும் வந்தார். மற்ற பாளையக்காரர்களும் வந்தார்கள். அந்த வெற்றி ஒரு கூட்டு முயற்சி.

அதில் எல்லோருமே பாராட்டப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் காத்தானுக்கு மட்டும் பரராஜகேசரி பட்டம். மாவீரன் என்ற பாராட்டு– இது மட்டும் சரியா?"

"தலையைப் பாராட்டினால் தானாகவே அங்கங்களுக்கும் அது போய்ச் சேர்ந்து விடுகிறதே–? இது புரியவில்லையா உங்களுக்கு?"

"அந்தத் தலையாகக் காத்தானைக் கருதுவதைத்தான் என்னால் ஜீரணிக்க முடியவில்லை."

"உங்களைக் கருதவேண்டும் என்பது உங்கள் ஆசையா?"

"இந்த யுத்தத்தைப் பொறுத்தமட்டில் எல்லோரையும் பாராட்டியிருக்க வேண்டும். எல்லோருக்கும் பட்டமளித்திருக்க வேண்டும். ஆனால் அப்படி எல்லாம் நடக்காதபடிப் பார்த்துக் கொண்டு தன்னை மற்றவர்கள் வலிந்து வந்து பாராட்டும்படி நடந்து கொள்ளக் காத்தானுக்கும் நன்றாகத் தெரியும்– அது தான் நடந்தும் முடிந்திருக்கிறது."

"அப்படியானால் அவருக்கு இந்த நாட்டை நிர்வகிக்கத் தெரியவில்லை. நடிக்கத்தான் தெரிந்திருக்கிறது என்பது உங்கள் தீர்மானமா?"

"ஆமாம்."

"மதுரைக்கு உதவி செய்யப் போனதுகூட ஊரும் உலகும் பாராட்ட வேண்டும் என்பதற்காகத்தானா?"

"ஆமாம்— ஒரு உள்நாட்டுக் குழப்பத்திற்குத் தீர்வு கண்டதில் இந்தச் சேது நாட்டுக்கு என்ன லாபம்? காத்தான் பராராஜகேசரி என்று பட்டம் பெற்றதைத் தவிர—?"

"அப்படியானால் வேறு காரணமே இல்லை என்பது உங்கள் கருத்தா?"

"நிச்சயமாக இல்லை. ஏதோ அப்படி ஒரு காரணம் இருப்பதாகவும் அதைக்கூட உங்களிடம் ஓலையில் எழுதிக் கொடுத்துவிட்டுப் புறப்பட்டதாகவும் காத்தான் கூட என்னிடம் சொன்னான். அதை நான் சரியாகச் சொல்லிவிட்டால் என்னை அரசனாக்குவதாகக்கூடச் சொன்னான்.

அவன் கற்பனையில் ஆயிரம் எழுதியிருக்கலாம். அதைக் கூறி இந்த நாட்டுக்கு அதிபதியாக நான் ஆக வேண்டிய அவசியம் எனக்கில்லை—

அவனது இதுமாதிரி சாதுர்யங்களில் சிக்கிக் கொள்ளவும் நான் தயாரில்லை வள்ளலே—"

— தாதியன் தீர்க்கமாகத்தான் பேசினான். இது தெரிந்து தானோ என்னவோ வள்ளல் மடியிலேயே வைத்திருந்த மரப்பெட்டியைத் திறந்து அந்த ஓலையை வெளியே எடுத்தார்.

தாதியனைப் பார்த்தபடியே அதை அவனை நோக்கி நீட்டினார். தாதியனுக்குள் கோபம் பீறிட்டது.

"இந்தக் கற்பனையை நான் வாசிக்கமாட்டேன் வள்ளலே. உள்ளே வையுங்கள். போய் அவனிடமே தாருங்கள். என்னை மசிய வைக்க யார் எதைச் செய்தாலும் அது பலன் தராது. உங்களையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். புரிந்து கொள்



ளுங்கள்."— தாதியன் பேசிவிட்டு எழுந்து கொண்டான். வள்ளல் சீதக்காதி அவனை அதுவரை இல்லாத ஒரு பார்வை பார்த்தார்.

இலக்கிய முகம் கொண்ட இனிமை தவழும் தேஜஸ்வியான அவர் முகத்திலேயே ஒருவிதக் கடுமையின் பரவல்.

வள்ளலை யாருக்கும் கோபிக்கத் தோன்றாது.

காட்டுப் புலி கூட அவரைப் பார்த்தால் சாந்தம் கொண்டு தடுமாறும். அப்படிப்பட்டவர் முகத்தில் கடுமை பரவியது தாதியத் தேவனுக்கே ஆச்சரியமாகிப் போனது!

"என்ன வள்ளலே—? தாங்களா இப்படிப் பார்ப்பது?"

"என்னைப் பார்க்க வைக்கிறீர்கள் தாதியரே. எப்பொழுதும் அவசரம் உங்களை ஆட்டி வைத்துக் கொண்டே இருக்கிறது."

"சரி— விஷயத்திற்கு வாருங்கள். இப்பொழுது இதை நான் படித்துக் காரணத்தை அறிந்து கொள்ள வேண்டும். பிறகு கிழவன் சேதுபதியைப் பாராட்ட வேண்டும். அவ்வளவு தானே?"

"முதலில் படியுங்கள். இது கிழவர் எழுதிய ஓலை அல்ல."

"அப்படியா?"— கேள்வியோடு ஓலையை வாங்கி வாசித்த தாதியனின் முகம் வியப்பிலும், விதிர்ப்பிலும் நிலை மாற ஆரம்பித்தது.

# 39

அந்த பலத்த மாற்றத்தோடு தான் வாசித்த ஓலையைத் திரும்ப ஒரு முறை பார்த்தான் தாதியத்தேவன். 'தேவாதி தேவர் ஸ்ரீ ஸ்ரீ சேதுபதிக் கிழவன் அவர்களுக்கு, மாவீரர் அல்லாவின் செழுங்கருணை மிக்க மாமதுரைக் காவலர் ருஸ்தம்கான் அவர்களின் அந்தரங்க ஆலோசகர் குர்ஷித் கையும் எழுதிக் கொள்ளும் விகிதம் யாதெனில்...

இப்பவும் சொக்கநாத நாயக்கரவர்கள் ஆட்சி புரிய இயலாநிலையில் மனப்பிராந்தியுடையவராக இருக்கும் நிலையில் 'ருஸ்தம் ஜீ'யின் ஆளுமையால் மாமதுரை ராஜ்ய பரிபாலனம் நாளும் நடந்த வண்ணமிருக்க அதைக் குலைக்கும் நோக்கத்தோடு நாயக்கர் பிரதிநிதிகள் தங்களைச் சந்தித்து உதவி கோரிட உள்ளனர். மங்கம்மா தேவியாரும் அதற்கு உறுதுணை...

இந்த நிலையில் தாங்கள் இதில் தலையிடுவதை ருஸ்தம்ஜீ விரும்பவில்லை. மாறாக ருஸ்தமுக்குத் துணையாக நிற்கும் பட்சத்தில் மதுரையின் பாளையங்களில் சரிபாதியைத் தங்களுக்குத் தருவதோடு, தங்கள் ஆட்சிக்கும் மாட்சிக்கும் பெருந்தடையாக இருந்து உள்நாட்டிலும் கலகம் புரிந்து வரும் தங்களின் பங்காளியான தாதியவரையும் கொன்று தங்கள் மேல் பழிவராதவாறு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

அனைத்துக்கும் மேலாக டெல்லிப் பட்டணம் வரை தங்களுக்குச் செல்வாக்கும் செழுங்கிளைகளும் உருவாக்கிட ருஸ்தம்ஜீ அவர்கள் விழைவார்கள்.



இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திச் சிறக்க வேண்டுகிறோம். மாவீரர் ருஸ்தம்ஜீயின் விருப்பப்படி.

கையும்'

அந்த ஓலை தாதியனுக்குப் பயங்கர ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் முகத்தில் வாரி இறைத்திருந்தது.

வள்ளல் சீதக்காதி அவர்கள் அதை உணர்ந்து கொண்டு பேச ஆரம்பித்தார். "என்ன தாதியரே? இந்த ஏட்டின் செய்தியையும் பொய் என்றோ, சேதுபதி அவர்களே தயாரித்தளித்தது என்றோ கூறப்போகிறீர்களா?"

வள்ளலின் கேள்வி அவனை அதிகமாகவே சங்கடப் படுத்தியது போல் தோன்றியது. இருந்தும் வள்ளல் விடுவதாக இல்லை. "இந்த ஓலை மட்டும் வந்திருக்காவிட்டால் ஒருவேளை நமது சேதுபதி அவர்கள் மதுரை விஷயத்தில் இவ்வளவு அக்கறை காட்டியிருப்பாரா என்பது எனக்குக்கூடச் சந்தேகம்...

என்றைக்கு இப்படி ஒரு ஓலை வந்ததோ அப்பொழுதே அந்த ருஸ்தமை அடக்கி, ஒடுக்கக் கிழவன் சேதுபதி அவர்கள் முடிவுக்கு வந்துவிட்டார்.

இதை உங்களிடம் சொல்லி உங்கள் ஆதரவு, அனுதாபம் இரண்டையுமே பெற அவர் விரும்பவில்லை.

எப்பொழுது ஒரு குதிரைக்காரன் தன்னிலை மறந்து தன உயரம் தெரியாமல் இப்படிச் சதி செய்து அக்கம்பக்கத்திலும் பேரங்களைத் தொடங்கி விட்டானோ அவனை விட்டு வைக்கக் கூடாது என்பது அவர் கருத்து.

ராஜ்யாதிபதிகளுக்குள் இருக்கும் பகை அவர்கள் சொந்த விஷயம். அதை ஒரு மூன்றாம் தர நரி புத்தி கொண்டவனெல்லாம் கையாளும் அளவு அதை விடக்கூடாது.

இருந்தும் இந்த ஓலைக்குச் சம்மதம் என்று ஒரு பதிலை அனுப்பி வைத்தார். அப்படி அனுப்பியதன் காரணம் அவனை ஏமாற்ற.

ஒரு புறம் ஓலைபோகும்போது மறுபுறத்தில் கோவிந்தப் பையாவும், குமாரபிள்ளையும் வேங்கடவரும் வந்து உதவி கேட்டார்கள். அவர்களுக்குக்கூட இந்த விஷயம் தெரியாது.

பதில் ஓலையைப் பார்த்த ருஸ்தமும் மிதப்பாக இருந்தான். இருந்தும் கடைசிக்கட்டத்தில் விழித்துக் கொண்டான். அதன்பின் நடந்ததைத்தான் நீங்கள் அறிவீர்களே—

இந்த விஷயத்திற்கு இன்றும் சான்றாக சையும் இருக்கிறான். உங்களுக்குச் சந்தேகம் இருந்தால் சையுமிடம் நீங்கள் விசாரித்து அறிந்து கொள்ளலாம். சையுமை அழைக்கவா?"

வள்ளல் வியப்புக்கு மேல் வியப்பு அளித்தார். தாதியன பார்வையும் அதனால் விரிந்தது. 'சையும் இப்பொழுது மதுரையில் அல்லவா இருக்கிறான். திரும்பும்போது பட்டாடை கூடக் கொடுத்து வணங்கினானே—?'

கேள்வி உள்ளோடியது.

"உங்களுக்குச் சகலத்தையும் உணர்த்த வேண்டும் என்று கருதியே போர்க்களத்தில் அவனைக் கொல்லவில்லை. அது மட்டுமல்ல, அவனும் அம்பாகத்தான் இருந்தானேயன்றி மனத்தால் விசுவாசியாக, உத்தமனாகவே இருந்தான்— நீங்களே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்" என்ற சீதக்காதி கைகளைத் தட்ட சில நொடிகளில் அவர்கள் எதிரில் சையும் வந்து நின்றான்.

தாதியனுக்குப் பிரமிப்பாக இருந்தது. "எப்படி வந்தான் என்று பார்க்கிறீர்களா? நான்தான் அழைத்து வரச் செய்தேன்."

வள்ளல் கூற சையும் சலாமிட்டான். தாதியத்தேவன் அவனை ஆச்சரியக் குமிழ்களோடு பார்த்தான்.

"அவன் மட்டுமா?"

அருகாமைச் சாளரம் ஒன்றின் அருகே நின்று கொண்டு பொன்னாத்தாளும் அவ்வுளவையும் பார்த்துக் கொண்டு தானிருந்தாள்.



அவள் கண்களில் ஆனந்த பாஷ்யம்.

'அடேயப்பா இந்த மாமாதான் எத்தனை பெரிய ராஜ தந்திரி— இவருக்கும் எத்தனை பெரிய மனது—'

அவளுக்குள் எண்ண ஓட்டங்கள்.

தொடர்ந்து வள்ளலின் விளக்கங்களைக் கேட்கத் தொடங்கினாள்.

ஆனால் சையும் பேச ஆரம்பித்திருந்தான்.

"தேவர் பிரானுக்கு என் திவ்ய வந்தனங்கள். வள்ளல் பிரான் கூறியதெல்லாம் சத்தியமான வார்த்தைகள்.

எனக்கும் இது புனர்ஜென்மம். இதை நான் துளியும் எதிர் பார்க்கவில்லை.

நானறிய நிகழ்காலக் கவலை கொண்ட அரசர் பெருமக்கள் தான் அதிகம். ஆனால் கிழவன் சேதுபதி அவர்கள் மட்டும் அதில் விதிவிலக்கு. அவர் இன்னும் ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு சேதுநாடு எப்படி இருக்கவேண்டும் என்று திட்டமிடுகின்றவராக இருக்கிறார்.

ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்வேன். இந்த எண்பதாம் வருடம் (1680) என்றில்லை. இனி வரும் வருடங்களிலும் சேதுபதி அவர்கள் உயிரோடு இருக்கும்வரை இந்தச் சேது மண்ணை யாராலும் எதுவும் செய்ய முடியாது.

இவர் காலத்தில் வாழக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்."

சையும் சொல்லி நிறுத்த வள்ளல் அவனை ஓர் அர்த்த புஷ்டியுள்ள பார்வை பார்த்தார். அது— 'இனி நீ எதுவும் பேசத் தேவையில்லை. கிளம்பலாம் என்றது—

அவனும் புரிந்து கொண்டு மறு வணக்கம் புரிந்து விட்டு வெளியேறத் தொடங்கினான். தாதியத்தேவனிடம் பேச்சமூச்சில்லை.

"என்ன தாதியரே? இப்படி எல்லாமும் நடந்திருக்கும் என்று நீங்கள் கணித்திருந்தீரா?" நிதானமாகக் கேட்டார் வள்ளல்.

தாதியனால் பதிலேதும் பேச முடியவில்லை.

"அரசாள நினைப்பவர்களுக்கு ஆயிரம் கண்கள் இருக்க வேண்டும். அவை உறங்காமல் விழித்தும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நாட்டுமக்கள் கவலையின்றி நிம்மதியாக வாழ முடியும்.

இந்தச் சேது மண்ணைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதைக் கூட விட்டுவிடுங்கள். ஏனென்றால் நீங்கள் இப்போது அரசரில்லை. ஆனால் உங்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதாவது தெரியுமா?"

வள்ளல் அங்கு தொட்டு இங்கு தொட்டு அவனிடமே வரவும் தாதியனுக்குப் பேரதிர்ச்சியாகியது.

"என்னைச் சுற்றி... என்னைச் சுற்றி நடக்க என்ன இருக்கிறது?" வேகமாகக் கேட்டான்.

"நடந்ததை அறிந்தால் உங்களால் நம்ப முடியுமா?" மிக இதமாகப் பதில் கேள்வியைக் கேட்டார் வள்ளல்.

சாளரத்தை ஒட்டி நின்று கொண்டிருந்த பொன்னாத்தாளிடமும் ஆர்வம் அதிகமாயிற்று.

"உங்கள் பங்காளிகள் உங்களுக்கு உதவி செய்வதாக நினைத்துக் கொண்டு ஒரு பெரிய உற்பாதம் செய்திருக்கிறார்கள் தாதியரே..."

"எனது பங்காளியா? யார்... யார் அவர்கள்? என்ன உற்பாதம்?"

தாதியனுக்குத் தேகமே நடுங்கத் தொடங்கிவிட்டது.

"பதட்டப்படாதீர்கள். நான் பகை வளர்க்கவோ உங்களைச் சோர்வடைய வைக்கவோ இங்கே வரவில்லை. உங்களுக்கு உங்களைக் காட்ட வேண்டியது அவசியம் என்று தோன்றியது.



ஒரு அமைச்சனான எனக்கு அது கடமையும் கூட..."

"பீடிகை போதும் வள்ளலே. வந்தது முதலே அதிர்ச்சி மேல் அதிர்ச்சி என்று அளித்து வருகிறீர்கள். சீக்கிரம் சொல்லுங்கள். என் பங்காளிகள் செய்த குற்றம் என்ன?"

"நமது அரசரையே கொல்ல நினைத்ததுதான்..."

"என்ன? என் பங்காளிகள் கிழவனைக் கொல்லப் பார்த்தார்களா?"

"ஆமாம். நிரூபிக்கவா?"

"ஆச்சரியமாக மட்டுமில்லை. அதிர்ச்சியாகவும் இருக்கிறது."

"இப்பொழுது அந்த அதிர்ச்சி அதிகரிக்கப் போகிறது பாருங்கள். யாரங்கே?"

வள்ளல் பலத்த குரல் கொடுக்கக் காத்திருந்த மாதிரி அவர் முன் வந்தான் அம்பலக்காரன்.

தாதியரைப் பார்த்து முறையான வணக்கமும் செய்தான்.

"அம்பலக்காரரே... எங்கே அந்தக் கைதி?" வள்ளல் கேட்க, மயானப் பெருவெளியில் கருகிப் போகாமல் புத்துயிர் பெற்று எழுந்து அம்பலக்காரன் வசம் அகப்பட்டிருந்த ஆப்பநாட்டான் என்றும் தன்னைச் சொல்லிக் கொண்டிருந்த அந்தப் பூநாகமாலைக் கொலைகாரன் நிறுத்தப்பட்டான்.

அவனைப் பார்த்த க்ஷணம் தாதியனிடம் சொல்ல முடியாத அளவு தடுமாற்றம். "கடுவா? நீயா?" உதட்டில் கேள்வியின் பீச்சல்.

அவன் தலையோ தாழ்ந்து போனது.

"நீங்கள் கடுவன் என்று விளித்த இவனை உங்களுக்காக ஏவியது யார் தெரியுமா?" வள்ளல் மிக நிதானமாகக் கேட்டார்.

தாதியன் பார்வை வள்ளலை யார் என்ற கேள்வியோடு பார்த்தது.

"உங்கள் அருமைப் பங்காளி திருவாடானைச் சீமை கண்ணாயிரத்தேவர்தான்."

"கண்ணாயிரத் தேவரா?"

"ஆமாம். அவரேதான். இவன் எல்லா உண்மைகளையும் கூறிவிட்டான். அல்லா பெருங்கருணையுடையவன் தாதியரே– நான் அவனிடம் தினமும் சேதுபதிக்காகப் பிரார்த்திப்பேன். அவருக்கு நீண்ட ஆயுளைக் கொடு. விரோதிகள் இருந்தால் இனங்காட்டு என்று–

இதோ இறந்தவனுக்கு உயிர்தந்து இனங்காட்டிவிட்டான் அவன். இப்படிச் சொல்வதனால் நான் அந்த ராமலிங்க மூர்த்தியை மறந்து விட்டதாக எண்ணி விடாதீர்கள்.

எங்கள் வேதம் இறைத் தூதர்கள் எப்படி வெளிப்படு வார்கள் என்று தெளிவாகவே கூறியிருக்கிறது. மண்ணுக்கு மண் அவர்கள் வேறுபடக்கூடும். அந்த ராமபிரானை நான் அப்படி ஒரு இறைத் தூதனாகப் பார்த்து மனதார நமஸ்கரித்து அவனிடமும் பிரார்த்தனை செய்து கொண்டதுண்டு.

ஒன்றுக்கு இரண்டாகத் தெய்வங்கள் செய்த கருணை சேதுபதிக்கு ஏதும் ஆகவில்லை. எதிரிகளும் யார் என்று தெரிந்துவிட்டது.

ஆனால் இதை சபை கூட்டி நான் பிரஸ்தாபிக்கப் போவதில்லை. ஏன் தெரியுமா?" வள்ளல் புதிர்போட்டவராகத் தாதியனைப் பார்த்தார்.

"அப்படிச் சொல்வதால் உங்கள் மேல், நாட்டுமக்களுக்கு மேலும் கோபம் ஏற்படும்.

இதை முன்பே கணித்ததால்தான் சேதுபதி துளிக்கூட இந்தக் கொலை முயற்சி பற்றிப் பிரஸ்தாபிக்கவோ, கவலைப் படவோ இல்லை.



அதைப் புரிந்த நான் மட்டும் இதைப் பெரிதாகப் பிரஸ்தாபிக்கலாமா?" வள்ளலின் கேள்வி தாதியனை வாட்டிற்றோ என்னவோ இரண்டு கைகளாலும் முகத்தை மூடித் தேய்த்துப் பெருமூச்சு விடலானான்.

"அம்பலக்காரரே– இவனை இனி ஒன்றும் செய்யாதீர்கள். விட்டுவிடுங்கள். இதைவிடப் பெரிய தண்டனையை நாம் இவனுக்குத் தர முடியாது. தாதியரே நீங்களும் யோசியுங்கள். சேதுபதியவர்கள் உங்கள் அன்புக்காகவும் ஒற்றுமைக்காகவும் இந்த நொடி சமாதானமான மனத்தோடும், பெருந்தன்மையான உள்ளத்தோடும் காத்துக் கொண்டிருக்கிறார்.

ஆற்றாமை, அழுக்காறு இவைகளைத் தவிருங்கள். நல்ல முடிவை எடுத்து நாளையே அரசரைச் சந்தித்து அன்போடு அளவளாவுங்கள்.

இது அவரது ஆசை மட்டுமில்லை. என்னுடைய ஆசையும் கூட வருகிறேன்."

வள்ளல் விடை பெற்றுக் கொண்டார். புயல் அடித்து ஓய்ந்தது போலிருந்தது.

விஸ்வரூபம் எடுத்து வீரப்பிரதாபம் புரிய வேண்டும் என்று நினைத்தவனை ஓர் எறும்பின் அளவு சிறியவனாக்கிச் சாடிக்குள் அடைத்த மாதிரியும் இருந்தது. அப்படி அடைக்கப் பட்டதாலோ என்னவோ வள்ளல் கூறியது போல ஆற்றாமை, அழுக்காறு இவைகளைத் தவிர்த்து விட்டு உள்ளம் நெகிழத் தோன்றாமல் உதடு. 'கண்ணாயிரத் தேவரே' என்றுதான் ஆவேசமாகக் கத்திற்று.

பொன்னாத்தாள் சாளரத்தைவிட்டு நீங்கி மெல்ல அவன் எதிரில் வந்து நின்றாள்.

"அந்தக் குள்ளநரியை இப்பொழுது எதற்குக் கூப்பிட் டீர்கள்?" சாதாரணமாகத்தான் கேட்டாள்.

"என்னை இப்படியா தலை குனியச் செய்வான் அந்தத் துரோகி. யாருக்கு யார் இரக்கம் காட்டுவது? வெந்த புண்ணில்

வேலைப் பாய்ச்சி விட்டார் கண்ணாயிரத் தேவர். இப்படியா ஒரு முட்டாள் கொலைகாரனை அனுப்பி வைப்பார்?" தாதியன் பேசியதைக் கேட்ட பொன்னாத்தாள் அப்படியே ஒடிந்துபோய் அருகாமை ஆசனத்தில் விழுந்தாள்.

## 40

**அ**த்தனைதூரம் வள்ளல் சீதக்காதி பேசியும்கூடத் தாதியன் உள்ளத்தில் பெரிதாக எந்த மாற்றமும் ஏற்பட்டிராததையே தாதியன் கண்ணாயிரத் தேவர் பற்றிச் சொன்ன கருத்தின் மூலம் எதிரொலித்தது.

பொன்னாத்தாள் மிக நொந்து போனாள்.

வள்ளல் பேசியே கேளாதவர் இனி எவர் பேசியும் கேட்கப் போவதில்லை என்று நினைத்தாளோ என்னவோ, அதற்கு மேல் அந்த மனையில் இருக்கவே பிடிக்காமல் போய் விட்டது அவளுக்கு.

இதய பாகத்திலும் ஏகத்துக்கு இரைச்சல்.

எல்லாவற்றையும் உடையக்காளிடம் சொல்லி அழுதால் தான் தீரும் போலத் தோன்றியது அவளுக்கு–

புறப்பட்டுவிட்டாள்!

**பொ**ன்னாத்தாளின் மனநிலையை அப்படியே எதிரொலிக்கிற மாதிரி இருந்தது முகவை மண்ணிற்கு மேலான வானம். சாம்பல் தட்டிப் போய்ச் சூரியச் சூடுமின்றி, மழையின் பொழிச்சலும் இன்றி மந்தமாக இருந்தது.



இப்படி இருந்தால் எப்படிப் பட்டுப்பாவினை நீட்டி அதன் ஈரப் பிசிறை நீக்கி, இழைச் சிடுக்குகளையும் எடுப்பது என்பதுபோல வானத்தையே பார்த்தபடி இருந்தார் கங்காராம்.

பரமக்குடி பட்டுநூல்காரரான அவர் ராமநாதபுரத்திற்கு வந்து குடியேறக் காரணமே கிழவன்தான்.

பரமக்குடி பக்கமாய் ஒருமுறை கிழவன் திருஉலாப் போன சமயம், தான் நெய்த பட்டு வஸ்திரத்தைக் கிழவனுக்குச் சாற்றப் போக, கிழவன் அந்த வஸ்திரத்தைப் பார்த்து அசந்து போய் விட்டிருந்தார்.

அதில் அத்தனை அற்புதமான வேலைப்பாடு!

பாராட்டிய கிழவன் கங்காராமின் குடும்பமே ராமநாதபுரத்திற்கு வந்து அரண்மனைக்குத் தேவையான பரிசுப் பட்டுகளை நெய்து தரும் பெரும் பொறுப்பையும் அவருக்கு அளித்துவிட்டார்.

அப்படி ராமநாதபுரம் வந்த கங்காராம் முதலில் நெய்த பட்டு வஸ்திரம் ராமநாதபுரம் ஸ்வாமி கோயிலில் காதலியாகிய பர்வதவர்த்தினி அம்மனுக்குத்தான் முதலாகச் சாற்றப்பட்டது.

அதன்பின் எவ்வளவோ பட்டு வஸ்திரங்கள்– மயில் தோகைக்கண் விரிப்பிலிருந்து, சோலைக்கிளிகள் பறப்பது வரை விதம்விதமாகச் சால்வைகள், விரிப்புகள், புடவைகள் என்று கங்காராம் குடும்பம் கிழவனுக்கு ஏவல் புரியத் தொடங்கிவிட்டது.

இதனால் கங்காராமிடம் அரண்மனைப் பணத்திற்குப் பஞ்சமேயில்லாத நிலை.

வேறு நெசவாளர்கள் கூட அவரைப் பார்த்துப் பொறாமைப்பட்டனர். அவர்கள் நூல் புடவைகளிலும், மேலாடைகளிலும் வித்தை காட்டினார்கள்.

பட்டைக் கையாள்வதற்கு ஒருவித லாவண்யமும் பொறுமையும் மிகத் தேவைப்பட்டது. அதில் சாயம் ஏற்றுவதும் சாதாரண விஷயமில்லை.

அங்காடிச் சாயத்தில் எதோடு எதைச் சேர்த்தால் எப்படிப் பட்ட வண்ணம் கிடைக்கும், அதை எந்த அளவு கொதிக்கவிட வேண்டும், கொதிநீரில் சாயம் அழுத்தமாக ஒட்ட படிகாரத் திலிருந்து எதை எதையெல்லாம் சேர்க்க வேண்டும் என்பது வரை சங்காராம் ஒரு வகுப்பே நடத்துமளவு தேர்ந்த பட்டுநூல் சாயக்காரராகவும் இருந்தார்.

இதனால் எப்பொழுதும் அவர் வீட்டுக் கொல்லைப் புறத்தில் சாயநீர் அண்டாக்கள் கொதித்தபடி இருப்பதும், அதன் காரணமாக ஒருவித புகை சூழ்ந்த நிலையிலுமே அவர் மனை இருப்பதால் ஊருக்குள் அவர் வீட்டுக்குச் சாயக்காரர் வீடு, பட்டுநூல்காரர் வீடு என்றும் பெயர்...

வடக்கில் சௌராஷ்டிர தேசம்தான் மூதாதையர் தேசமாக இருந்தாலும் சங்காராம் பிறந்து வளர்ந்ததெல்லாம் கும்ப கோணத்தில்தான்...

சங்காராம் குடும்பமே பட்டு நெசவில் பெயர்போன குடும்பமாக இருந்தது. பின்னாளில் மதுரைக்கும், பரமக் குடிக்கும் வியாபார நிமித்தம் குடிபெயர்ந்ததில் சங்காராம், சேதுபதியின் அத்யந்த நெசவாளியாகவே பரிமளிக்கும் ஒரு நிலை ஏற்பட்டுவிட்டதைக் காலானுக்ரகம் என்று சொல்வார் செங்கய்யர்.

இப்போதும் மதுரைக்கும் கும்பகோணத்துக்கும் ஒரு நாள், கிழமை என்றால் போய் வரும் அவர் மனைக்கு மதுரையிலிருந்து ஒரு விருந்தாளிபோல வந்து நின்றான் ஒரு இளைஞன்.

முகத்தை மூடிக்கொண்டு தலைப்பாகை தரித்த நிலை யில் ஒரு புரவி மேல் வந்து இறங்கிய அவனைப் பார்த்த மாத்திரத்தில் அவரும் அரண்டுவிட்டார்.

தன் பந்துக்கள் யாரும் குதிரை ஏறியோ, வாளை வீசியோ க்ஷத்திரிய லட்சணங்களோடு இருந்து அவர் ஒருக்காலும் பார்த்ததில்லை. அப்படி இருக்க ஒருவன் ஒரு மர்ம



மனிதனைப் போல வந்து நின்றால் என்ன நினைப்பது— எதைத்தான் நினைப்பது?

ஒருவேளை அரண்மனை ஊழியர்கள்தான் யாராவது இப்படித் தன் எதிரில் வந்து தன்னைப் பயமுறுத்துகின் றார்களோ?

ஏற்கெனவே வானம் மேகமூட்டமாக இருப்பதால் தொழில் முனைப்புக் காட்ட முடியாமல் இருந்தவருக்கு எதிரில் ஒருவன் மிரட்டலாக வந்து நின்றால் எப்படி இருக்கும்?

வயிற்றைக் கலக்கிற்று.

"ஐயா— நீங்க யாருங்க? உங்களுக்கு என்ன வேணும்?"— பயமும் நடுக்கமுமாக அவர் கேட்க அவர் கேட்கும்போதே அவரது சகதர்மிணியான லட்சுமிபாயும், மகன் சத்யநாராயண னும் கூட அவர் அருகே வந்து நிற்கத் தொடங்கினர்.

அவர்களிடமும் லேசான பயம்.

அவர் கேள்விக்குப் பதில் சொல்லாமல் அந்த முகமூடி தரித்த இளைஞன் பெரிதாகச் சிரிக்க ஆரம்பித்தான்.

அந்தச் சிரிப்புச் சப்தம் சங்காராமை மேலும் பீதிக் குள்ளாக்கினாலும் சத்யநாராயணன் முகத்தில் ஒருவித அனுமானத்தை உருவாக்குவதுபோல இருந்தது.

தீவிரமாகச் சிந்தித்தவன் தொடர்ந்து சிரிக்கும் அந்த இளைஞனைப் பார்த்து ஒரு முடிவுக்கு வந்தவன் போல அவனும் சேர்ந்து கொண்டு சிரிக்கத் தொடங்கினான். சங்கா ராமுக்கு ஆச்சரியமாகிவிட்டது. சிரிக்கும் மகனைத் திகைப போடு பார்த்தவர், "டேய் நீயும் எதுக்குடா சிரிக்கறே? யாருடா இவர்? உனக்குத் தெரியுமா இவரை?" என்று கேள்வி மேல கேள்வி கேட்க, சிரித்த அந்த இளைஞனே சிரித்தது போதும் என்கிற மாதிரி தன் முகமூடி வஸ்திரத்தைக் காதுப்புறமிருந்து அவிழ்த்துவிட்டு அவரைப் பார்த்தான்.

அடுத்த நொடி அவரிடம் பலத்த ஆச்சரியம்.

உதடிரண்டும், "கிருஷ்ணா நீயா?" என்றது.

"நானேதான் மாமா– நானேதான். என்ன பயந்துட்டீங்களா?" என்றான் கிருஷ்ணா இணக்கமாக.

"பயப்படாம என்னடா இது கோலம்?"

– ஆசுவாசிப்போடு கேட்டார் கங்காராம்.

"கோலம்தான் மாமா– எப்படி இருக்கு எனது வீர தீரத் தோற்றம்?"

– சொன்னவன் ஒரு போர் வீரனைப் போல் வரிக்கச்சும் உடுத்தி மேலே அணிந்திருந்த இழைப்பூட்டுச் சொக்காயையும் காட்டியபடித் தலைப்பாகையையும் விலக்கத் தொடங்கினான்.

லட்சுமிபாய் மோவாயில் கையை வைத்து அவனைப் பார்த்து வியப்பைக் கொட்டினாள்.

"என்ன அத்தை..? அரண்மனைச் சேவகன் மாதிரி இருக்கேனா?" என்று அவளிடமும் கேட்டான்.

"அப்படியேதாண்டா இருக்கே.. அது சரி ஊரில் எல்லாரும் செளக்கியமா? உன் அப்பா, அம்மா, அக்கா, தங்கை..." என்று லட்சுமிபாயும் நைச்சியத்தோடு நலம் விசாரிக்கத் தொடங்கினாள்.

"எல்லாரும் செளக்யம் அத்தை. உங்களையெல்லாம் பார்க்கணும் போல இருந்தது. அதான் புறப்பட்டு வந்தேன்" என்றவன், "பசிக்கிறது அத்தை. சாப்பிட முதலில் எதாவது கொடு–" என்று உறவுக்குள்ள அந்த உரிமையோடு சிணுங்கினான்.

லட்சுமிபாய் உள்ளோடினாள்.

கங்காராமும், சத்யநாராயணனும் அவனோடு உசாவத் தொடங்கிவிட்டார்கள்.

"உன்னை நான் துளிகூட எதிர்பார்க்கவில்லை தெரியுமோ?" என்ற கங்காராம் ஒரு பிரம்பு மோடாவை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தார்.



"ஆமாம். எப்படி இருக்கு இங்க உங்க பிழைப்பு?" அவனிடமும் துருவல் ஆரம்பமானது.

"டேய்... நான் இப்ப அங்காடி வியாபாரி இல்ல. அரண்மனைக்கே வஸ்திரம் கொடுக்கிறவன். இப்ப கூட பார் ஒரு புலிக்கண் பட்டுதான் தறியில ஓடிக்கிட்டுருக்கு" என்று வீட்டினுள் உள்ள தறிமேடையைக் காட்டினார்.

"பட்டு நெய்ய இந்த ஊர்ப்பருவம் சாதகமா இருக்கா மாமா?"

"கொஞ்சம் கஷ்டமாத்தாண்டா இருக்கு. வானம் பார்த்த பூமி இது. மழையானாலும் சரி, காத்தானாலும் சரி எல்லாத்துலையும் கொஞ்சம் வேகம் அதிகம். அம்மட்டுல சேலம் போலவோ, ராசிபுரம் போலவோ இது வராது. மதுரைக்கும், இந்த மண்ணுக்கும் கூடப் பெரிய வித்தியாசமில்லை" என்று தொழில் சார்ந்த விஷயமாகவே பேசியவர், "நீ என்னடா செய்கிறாய்?" என்றார் கரிசனமாக.

"இன்னும் ஒரு நல்ல உத்தியோகம் படியல மாமா. அதான் உங்களைப் பார்க்க வந்தேன். அரண்மனைல அடப்பத்துக் கிட்டையோ, இல்லை தளவாய்கள் யார் கிட்டையாவதோ சொல்லி ஒரு உத்யோகம் வாங்கித் தர முடியுமா மாமா?"

கிருஷ்ணா, தான் யார் என்பதையோ, உண்மையில் எதற்காக வந்திருக்கிறான் என்பதையோ ஒரு துளியும் உணர்த்தாதபடிக் கொஞ்சமாக விசனப் பேச்சுதான் பேசினான்.

"அரண்மனையிலையா? சேது நாட்டு அரண்மனையிலையா? சரிதான். நீ அங்க பார்க்க என்னடா உத்யோகம் இருக்கு? பேசாம என்னோட சேர்ந்து சாய வேலை பார். எனக்கும் ஒத்தாசைக்கு ஆள் வேணும்" என்றார் கங்காராம்.

"சரி மாமா–" என்று உடனே சொன்னவன், "சேது நாட்டு அரண்மனை என்ன நாயக்கர் அரண்மனை போலத் தர்பாரான ஒண்ணா என்ன? இது ஒரு பாளையப் பகுதி

தானே?" என்று திட்டமிட்டுச் சற்று மட்டுப்படுத்திப் பேசவும் சுங்காராமிடம் சிவுசிவு என்று கோபம் பொங்கத் தொடங்கியது.

"வாயை மூடுடா பைத்தியக்காரா— எங்க அரண்மனை பற்றியோ, இல்லை எங்க ராஜா பற்றியோ உனக்கென்ன தெரியும்? இப்பகூட மதுரைல ஒரு பெரிய யுத்தமே பண்ணி அந்த மீனாட்சிப் பட்டணத்துக்கு ஒரு புது சுதந்திரத்தை வாங்கித் தந்திருக்கிறது யாராம்?

நீ ஒரு ஊர்சுற்றிதானே? உனக்கெங்கே தெரியப்போகுது இந்த மண்ணோட மகத்துவம்?"

— சுங்காராம் ஆத்மபூர்வமாகப் பேசினதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

"அடேயப்பா— மாமாக்குதான் என்ன ஒரு நாட்டுப்பற்று. என்ன மாமா இனி வாழ்வும் சாவும் இந்த மண்ணுலதான்னு முடிவே பண்ணிட்டீங்களா?"— சன்னச் சிரிப்போடு அவரைத் தொடர்ந்து கிண்ட ஆரம்பித்தான்.

"சொன்னாலும் சொல்லலேன்னாலும் இந்த மண்ணுல தாண்டா நான் சாகப் போறேன். மதுரை மாதிரி ஒரு குழப்ப மான நிலையெல்லாம் இங்க கிடையாது. எங்க சேது ராஜா வெச்சதுதான் இங்க சட்டம்.

மற்ற சேது ராஜாக்களைப்போல இல்ல எங்க கிழவர். அவருக்கு முதுகுலையும் இரண்டு கண் உண்டு. தெரிஞ்சுக்கோ—"

— சுங்காராம் கிழவனை ஆகாசத்துக்குத் தூக்கத் தொடங்கினார்.

நடுவில் லட்சுமிபாய் ஒரு வட்டிலில் அவித்த மரவள்ளிக் கிழங்கையும், பனை வெல்லமும் சுக்கும் மிளகும் திப்பிலியும் சேர்ந்த துவையலையும் கொண்டுவந்து நின்றாள்.

நிஜமாலுமே அடாத பசி கிருஷ்ணாவிடம்.



ஒரு பிடி பிடித்தான். கொஞ்சம் நெஞ்சையடைத்தது. வெண்கலக் குவளையில் தண்ணீர் கொடுத்துத் தலையிலும் தட்டிவிட்டாள் லட்சுமிபாய்.

பாத்துச் சாப்பிடுடா..."

"இந்த மரவள்ளி எப்பவும் இப்படித்தான். நெஞ்சைப் பிடிக்கும். ஆமா அரிசி, பருப்பெல்லாம் இங்க கிடைக்குதா?"

"அடப்பாவி... நாங்க என்ன பாலைவனத்துலையா குடி இருக்கோம். அரிசி, பருப்பு மட்டுமில்லைடா— புகை யிலையையே இங்க சாகுபடி செய்யறோம். தெரியுமா உனக்கு?"

— சுங்காராமின் பதிலில் நிஜமாலுமே கிருஷ்ணாவிடம் வியப்பு.

"என்ன பாக்கிறே? என்னோட பட்டுக்கு மதுரைல கூட நல்ல விலை கிடைக்காது. ஆனா இங்க ராவுத்தர்களும், மரைக்காயர்களும் அதை எவ்வளவு ஆசையா வாங்கறாங்க தெரியுமா?"

— சுங்காராம் ஆசை ஆசையாகச் சொல்ல சத்யநாராயண னுக்கும் அது தொற்றிக் கொண்டது.

"கிருஷ்ணா நீ மட்டும் எங்க இராமலிங்க விலாச அரண் மனையைப் பார்த்தா அசந்து போயிடுவே. ஆமா நீ ராமேஸ் வரம் கோவிலுக்குப் போயிருக்கியோ?"

"அது என்ன— தஞ்சாவூர் கோவிலைவிடவா உசத்தி?"

"அடப் போடா— தஞ்சாவூர் கோவில் ராஜராஜ சோழன் தன் பேர் சொல்றதுக்காகக் கட்டின கோயில். ஆனா எங்க ராமேஸ்வரம் கோயில் அப்படி இல்லை. அந்த ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியே வந்து வழிபட்ட கோயில்.

பார்த்தாலே பாவம் போயிடும். நினைச்சாலே உடனே முக்தி—"

"எல்லாம் சரி. அந்தக் கோவிலுக்குப் போய் வருவது அவ்வளவு சுலபமில்லை. வழிப்பறிக் கள்ளர்கள் உபத்ரவம் நிறைய இருக்கும்னு கேள்விப்பட்டேனே..."

"அதெல்லாம் முன்பு. இப்ப வழிநெடுக அன்னச் சாவடிகள். கள்ளர்களை எல்லாம் என்னமா அடக்கி ஒடுக்கி வெச்சிருக்கார் தெரியுமா எங்க கிழவர்...?"

"அடேயப்பா... விட்டா ஒரு சேது புராணமே பாடிடுவீங்க போல இருக்கே? அடியேன் அந்தக் கிழவரைப் பார்க்க முடியுமோ?"

"நீ எதுக்குடா அவரைப் பார்க்கணும்?"

"நீங்க இவ்வளவு பேசறதைப் பார்த்தா அவரைப் பார்க்கணும் போல இருக்கு... அதான் அப்படிச் சொன்னேன்."

"எல்லாம் பார்க்கலாம். முதல்ல ஓய்வெடு. பிறகு தொழில் பழகு. கொஞ்ச நாள் இருந்தா எல்லா விஷயத்தையும் தானா நீயே தெரிஞ்சுப்பே."

"தெரிஞ்சுக்கத்தானே வந்துருக்கேன்..."

— கிருஷ்ணா சொன்ன விதத்தில் மட்டும் அவர்களால் புரிந்து கொள்ள முடியாத ஒருவித மர்மம்!

இராமலிங்க விலாச அரண்மனையின் முகப்பில் நல்ல வேகத்தோடு நுழைந்த அந்தக் கறுப்பு நிறப் புரவியின் மேல் இருந்து மிகுந்த விசையோடு இறங்கிக் கொண்டிருந்தான் வீரன் ஒருவன்.

உள்ளே நுழையும் அவனை ஒருவரும் தடுக்காமல் வந்தனம் செய்வித்து வழியனுப்புவதில் இருந்து அவன் ஒரு பரிச்சயமான அரண்மனை ஊழியன் என்பது துல்லியமாகத் தெரிந்து போயிற்று.

வேகமாகவும், விரைவாகவும் நடந்தவன் செவத்த நாச்சியாரின் இருப்பிடம் நோக்கித்தான் சென்று கொண்டிருந் தான்.



நாச்சியாரும் மேல் மாடத்தில் சில தாதிப்பெண்களிடம் ஏதோ உசாவிக் கொண்டிருந்தாள்.

வீரன் வரவும் அவனைப் பார்த்துவிட்டு, "வா அங்கணா... ஏது இவ்வளவு தூரம்?" என்றாள் நிதானமாக.

"தாயி ஒரு துக்க செய்தி..."

— அங்கணன் என்று அவள் விளித்த அவனிடம் முதுகு வளைந்த நிலையில் சன்னக் குரல். அடுத்த நொடி செவத்தக்கா விருட்டென்று அவனை ஏறிட்டாள்.

"கோட்டைப் பட்டினத்துப் பெரியதனக்காரரும் உங்க உறவுக்காரருமான வெள்ளையத் தேவர் காலமாயிட்டாருங்க.

நாளை விடியக் கருக்கல்ல அவர் தகனமும் பத்தினியார்களோட பூக்குளிப்பும் நடக்க இருக்கு... அதச் சொல்லத்தான் வந்தேன்."

— அவன் சொல்லி நிறுத்த செவத்தக்கா கண் கலங்கத் தொடங்கச் சரியாக இருந்தது.

## 41

அங்கணன் சொல்லிவிட்டுச் சென்ற சேதி செவத்தக்காவைப் புரட்டி எடுக்கத் தொடங்கியது. கோட்டைப்பட்டினத்து பெரியதனக்காரரும் உறவினருமான வெள்ளைச்சாமித் தேவர் செவத்தக்காவின் அதீத பாசத்துக்கும் அன்புக்கும் உரிய ஒருவர்.

வீரத்திற்கும் இலக்கணம் எழுதியவர். சிலம்பத்திலும் கரை கண்டவர்...! குறிப்பாகக் கண்ணைக் கட்டிக் கொண்டு சிலம்புக்

கம்பைச் சுழற்றி மிகச் சரியாக உறிப்பானைகளை அடித்து நொறுக்குவதிலே வல்லவர். கோட்டைப்பட்டினத்திலேயே அவரளவு வர்த்தகம் செய்தவர்கள் யாருமில்லை எனலாம்.

அள்ளிக்கொடுப்பதிலும் வள்ளல் அவர்!

வெள்ளைச்சாமித் தேவர் பற்றி நினைத்த நொடி அவரது கீர்த்தி மிக்க செயல்களும், குணங்களும் ஒரு க்ஷணம் செவத்தக்காவின் மனத்தில் ஓடி காலத்தின் மேல் ஒருவிதக் கோபம் கூட மூளத் தொடங்கியது.

எது எப்பொழுது நடக்கும் என்கிற ரகசியங்களை எல்லாம் மூட்டை கட்டி வைத்திருக்கும் ஒரு மகா சக்தியாகத் தான் காலம் அவளுக்குள் அந்த க்ஷணத்தில் தோன்றியது.

யாரை அது எப்பொழுது அழைத்துக் கொள்ளும், யாரை அது விட்டு வைக்கும் என்பதெல்லாம் பெரிய மர்மமாகவும், அந்த மர்மங்கள் அவிழும்போது அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் போவதையும் நினைத்தவள், வெள்ளைச்சாமித் தேவரின் மரணத்தை ஒட்டி அவரது அருமைப் பத்தினியான மாரக்காவையும் நினைத்துப் பார்க்கத் தொடங்கினாள்.

செவத்தக்காவுக்கும், மாரக்காவுக்கும் அப்படி ஒன்றும் பெரிய வித்தியாசமில்லை. இருவருக்கும் சமவயதுதான். ஆனால் செவத்தக்கா கிழவனாகிய காத்தான் சேதுபதியை மணக்கும் முன்பாகவே மாரக்கா வெள்ளைச்சாமித் தேவரை மணந்து கொண்டதையும், அந்தத் திருமணம்கூட ஏழு நாள்களுக்கு அதிவிமர்சையாக நடந்ததையும் நினைத்துப் பார்க்கிறாள்.

தனக்கும் கிழவனுக்கும் நடைபெற்ற திருமணத்தில் கூட அத்தனைக் கொண்டாட்டங்களில்லை. ஏன்...? அப்போது கிழவனாகிய காத்தான் அரசனாகவே இல்லை. இந்தச் சேது நாட்டின் வீரமிக்க ஓர் இளைஞன் மட்டுமே...



ஆனால் வெள்ளைச்சாமித் தேவரோ அப்போதே பெரிய வணிகர். தனி மனிதராக பர்மா முதல் பினாங்கு, மலேசியா வெல்லாம் போய் வந்தவர்.

பொன்னும் மணியும் பரிசுகளாகக் குவிந்தன. ஊரே திக்குமுக்காடும் அளவு விமர்சையாக சர்வமும் நடந்து முடிந்தது.

பெருவாழ்வு வாழப்போகிறாள், பேரன், பேத்திகளை எல்லாம் காணப்போகிறாள் என்றெல்லாம் எல்லோரும் நினைத்திருக்க, காலம் இப்பொழுது அவளையுமல்லவா அழைத்துக் கொள்ளப் போகிறது?

உத்தமமான மறவர் குலப் பெண்மணிகள் கணவன் இறந்துவிட்டால் அவனது சிதையோடு சேர்ந்து தாங்களும் வானமேகுவதுதான் பத்தினித்தனமான ஒரு செயல் என்பதிலிருந்து மாரக்காவும் உடன்கட்டைக்குத் தயாராகிக் கொண்டிருப்பாள் என்பதுவரை நினைத்தவளுக்கு ஒரு க்ஷணம் குலை நடுக்கமே ஏற்பட்டது...

தன்னோடு காலம் முழுவதும் வாழப்போகிற ஒரு தோழியாக அவள் இருப்பாள் என்கிற நம்பிக்கை இப்படியா தகர்ந்து போக வேண்டும்?

செவத்தக்கா உள்ளம் கசிந்து கண்ணீர் பெருக்கத் தொடங்கிவிட்டாள்.

சாதாரணமாக இப்படி மனக்கலக்கம் ஏற்படும் தருணங்களில் அவள் அதை மறக்க அரண்மனைக்கு அவ்வப்போது வந்து அல்லி அரசாணியிலிருந்து, திரௌபதை சபதம் வரை உள்ள இதிகாசக் கதைகளைக் கேட்டுத் தனது துக்கத்தை மறக்க முயற்சி செய்வாள். இந்தக் கதைகளை எல்லாம் சொல்வதில் வேலப்பன் என்பவர் வித்தகர். பாட வேண்டிய இடத்தில் பாடி, ஆட வேண்டிய இடத்தில் ஆடித் தமிழிலும், தெலுங்கிலும் கதை சொல்வதில் வேலப்பரை விஞ்ச ஆள் இல்லை.

தாதி ஒருத்தியை அழைத்து வேலைப்பருக்கும் தகவல் சொல்லிவிட்டாள். சொல்லிவிட்டு மாடம் அருகே போய் நின்றாள். வெளியே விராலிமலைப் பக்கம் இருந்து பிடித்து வந்து வளர்க்கப்படும் மயில்கள் அகவியபடியே திரிந்து கொண்டிருந்தன. சாதாரணமாகப் பார்க்கும்போது உள்ளம் உற்சாகத்தில் துள்ளி எழும். வைத்த கண்ணை வாங்க விடாது. ஆனால் இப்போது அந்த அழகிய மயில் கூட்டம்கூட அவளுக்குச் சுதந்திரத்தை இழந்து திரியும் கைதிகளாகத்தான் தெரிந்தன.

இந்த மனம்தான் எத்தனை விசித்திரமான ஒன்று. உள்ளே விழும் விஷயத்திற்கேற்ப அதுதான் என்னமாய் மாறிவிடுகிறது?

குமாரபிள்ளையின் மனை ஏவலர்களின் கூட்டத்தோடும் இன்னமும் உரிய பொருள்கள் உரிய இடத்தில் வைக்கப் பட்டிராத நிலையிலும்தான் இருந்தது. மதுரையிலிருந்து கொண்டு வந்திருந்த மனைப்பொருள்களோடு பரிசுப் பொருள்களும் அப்படியப்படியே அங்கங்கே கிடக்க, பிள்ளையின் தர்ம பத்தினி ஏவலர்களோடு மல்லுக்கட்டிக் கொண்டிருந்தாள்.

பிள்ளையோ உப்பரிகையில் அமர்ந்து கொண்டு வானம் பார்த்துக் கொண்டிருந்தார். முகத்தில் தீவிர சிந்தனை. ராமநாதபுரம் வந்து நாள்கள் சில கடந்து விட்டன.

இந்தச் சில நாள்களிலேயே சேதுபதிக் கிழவனின் ஒவ்வொரு சொல்லும் செயலும் வியப்பும், திகைப்பும் அளித்துத் திக்குமுக்காடச் செய்துவிட்டிருந்தது என்றுதான் கூற வேண்டும்.

தான் பெரிதும் மதிக்கப்படுவதாக ஒரு நினைப்பு தோன்றும். அதே சமயம் தான் பெரிதும் கணிக்கப்படுவதாகக் கூட ஒரு நினைப்பு உள்ளோடியது– ஏன் இப்படியெல்லாம்



தோன்றுகிறது என்பதைக் கணிக்க முடியவில்லை. ஏதோ ஒரு இனம் புரியாத குழப்பம். இதை மதுரைப் பிரிவின் சோகத்தால் விளைந்தது என்பதா, இல்லை நடந்த நிகழ்வுகளின் தாக்கத்தால் விளைந்தது என்பதா...? ஒன்றும் புரியாத குழப்பம். ஒரு சமயம் இதெல்லாம் அலட்டல் என்பதாகக் கூட ஓா உணர்வு கூறியது.

அவ்வளவும் வித்தியாசமான அனுபவம். நாயக்கர் அரண்மனையில் ஒருநாள் ஒருபொழுதிலும் இது போலவெல்லாம் நேரிட்டதேயில்லை. வெளியே ராமநாதபுரத்தின் சாலைகளையும் மக்கள் நடமாட்டங்களையும் நன்றாகவே பார்க்க முடிகிறது.

மதுரைச சாலைக்கெல்லாம் ஒரு பொதுவான தன்மை உண்டு. எங்கே எப்படி அலைந்தாலும் இறுதியில் கால்கள் மீனாட்சியம்மை ஆலயத்தை அடைந்து விடும். அதிலும் புரவிக் கூட்டத்தின் பாய்ச்சலுக்குப் பஞ்சமே இராது. நடந்து பாதசாரியாகச் செல்வோரை விடவும் புரவி ஏறி அது சீறியபடிக் கிளர்ந்தெழ விரைந்து செல்லுவோரே அதிகம். நடுநடுவே பல்லாக்குகளும் செல்லும். பல்லாக்குத் தூக்கிகள் மூச்சுக் காற்றின் உந்துதலோடு 'ஹைஹா– ஹைஹா' என்றபடிப பாடிவருவதும் உள்ளே செல்வந்த மகளிர் மெல்லிய திரைச் சீலையின் ஊடே தெரிந்தும் தெரியாதபடி அமர்ந்திருப்பதும் செழிப்பான காட்சிகள்.

இங்கும் அதுபோன்ற காட்சிகளுக்குப் பஞ்சமேயில்லை.

வீட்டுக்கு வீடு புரவிகள்– சில புரவிகளில் இருவர் கூடப் பயணிக்கிறார்கள். ஏகத்திற்கும் அங்காடி வண்டிகள், கரும்பும் நெல்லும் கட்டுக்கட்டாகப் போவதில் செழிப்பின் விழிப்பு– வானம் பார்த்த பூமி என்று நினைத்த இடத்தில் இத்தனைச் செழிப்பென்றால் இந்தச் சேதுபதி வசம் வளமான நாடும் நதியும் புனலும் சிக்கினால் இங்கே பொன்னைக் கையில் அள்ளி விடுவார்களோ...?

குமாரபிள்ளைக்குள் எண்ணைச் சக்கரம் ஏகப்பட்ட கேள்விகளோடும் பதில்களோடும் உருண்டுகொண்டே இருக்க அவரது அருமைப் பத்தினி அவரைச் சமீபித்தாள்.

"என்ன தீவிர சிந்தனை?"

"சிந்தனைதான்_ சேதுநாடு என்னைப் பேசவிடாதபடிச் சிந்திக்க வைத்துக் கொண்டே இருக்கிறது அங்கயற்கண்ணி."

"உங்களை மட்டுமல்ல, என்னையும்தான்_"

"உன் மனம் இங்கே ஒன்றிவிட்டதா?"

"ஒன்றித்தானே தீர வேண்டும்."

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

"ஒன்றவில்லை என்றால் இங்கிருந்து திரும்பவா முடியும்?"

"நாம் ஒன்றும் கைதியில்லையே_?"

"கைதிக்குக்கூட என்றாவது ஒருநாள் விடுதலை உண்டு. ஆனால் ஒரு பரிசாகவே வந்துவிட்ட உங்கள் நிலை அப்படி இல்லையே..."

"நீ பேசுவதைப் பார்த்தால் இந்த மண்ணின் மீதான வாழ்க்கை உன்னைக் கவரவில்லை என்றே தெரிகிறது."

"அப்படியெல்லாம் இல்லை. நம்வரையில் இது புகுந்த வீடு. மனம் ஒன்ற சிலகாலம் ஆகலாம். அதுதான் அப்படிச் சொன்னேன்."

"உண்மைதான்... சிலகாலம் ஆகத்தான் வேண்டும். எனக்கும் என் கடமை என்னவென்றே இன்னமும் தெரியவில்லை..."

குமாரபிள்ளையும் அவர் பத்தினியும் ஆசுவாசத்துடன் பேசும் அந்தத் தருணத்தில் படபடவென்ற சிறகசைப்போடு வெள்ளைப் புறா ஒன்று நீண்ட தூரப் பயணக் களைப்போடு அவர் தோள் மேல் வந்து அமர்ந்தது.



"அடடே— உங்கள் அத்யந்த பறவைத் தோழி ஞானவாணி."— அங்கயற்கண்ணி உற்சாகக் குரலெடுத்தாள்.

"ஞானவாணி_ வந்துவிட்டாயா? பரவாயில்லையே. என் மனை தெரிந்து கச்சிதமாக வந்து விட்டாயே?" என்றபடியே அதைப் பற்றிப் பாசத்தோடு வருடிவிட்டார் பிள்ளை. அதன் செவ்வண்ணக் கால்களைப் பார்த்தார். செய்திச் சுருள் அழகாகக் கட்டப்பட்டிருந்தது.

ஆவலாக அதைப் பிரித்தார். விரித்துப் படிக்கும்முன் ஞானவாணி என்று அவர் விளித்த அந்தப் புறாவிற்கு நீரும் ஆகாரமும் தரத்தான் முதலில் விரும்பினார்.

"வாணியை என் வசம் தாருங்கள். நான் ஆகாரம் தருகிறேன்— சேதி என்னவென்று பாருங்கள்."

பிள்ளையும் மளமளவென்று செய்திச் சுருளை விரித்தார். உள்ளே கோவிந்தப்பையாவிடமிருந்து சேதி.

'அருமைப் பிள்ளை. ஐக்கியப்பட்டுவிட்டீர்களா? இங்கே உங்கள் பிரிவால் வாட்டம் தொடர்கிறது. அங்கே கிழவரைக் கொல்ல முயற்சி என்றறிந்தோம். யாரால் எதனால் என்றறிய விரும்புகிறோம். கிழவரின் நலன் குறித்தும் விசாரமுள்ளது. பதில் மடலை எதிர்பார்க்கும் கோவிந்தப்பையா_'

— செய்தியை வாசித்த குமாரபிள்ளை ஒரு க்ஷணம் கண்கலங்கினார். அங்கயற்கண்ணி ஞானவாணியை வருடிக் கொண்டே ஆவலாகக் கேட்டாள்.

"என்ன கலக்கம்? யாரிடமிருந்து சேதி?"

"அருமைத் தளவாய் கோவிந்தப்பையாவிடமிருந்துதான். நான் எந்தச் சேதியும் அனுப்பாமலே நமது அரசர் கிழவருக்கு நேரிட்ட உற்பாதம் பற்றிக் கோவிந்தப்பையா அறிந்திருக்கிறார். அதே சமயம் என் நலம் குறித்தும் விசாரித்து விகிதமிடக் கூறியிருக்கிறார்" என்றார்.

# 42

'சேதுபதி மன்னர் சீமையில் இடையர், சாணார், செட்டியார், கோமுட்டி செட்டியார், வாணியச் செட்டியார், வண்ணார், குரும்பர், சக்கிலியர், பண்டாரம் கொல்லர், தச்சர், வலையர், அம்பட்டர், குருக்கள், ராவுத்தர், மரைக்காயர் என்ற பிரிவு மக்களும் இருந்து வந்தனர்.

இந்த மக்களிடையே சௌஜன்யமும் கூட்டு மனப் பான்மையும் நிலவி வந்தது. வேளாண்மைத் தொழில் பொதுவான தொழிலாக இருந்தாலும், இதற்கு அடுத்தபடியாக நெசவுத் தொழில் இருந்தது. துலுக்கர், பட்டுநூல்காரர், இளம் பஞ்சுக்காரர், வள்ளுவர் ஆகிய மக்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டு இருந்தனர்!

— 'சேதுபதி மன்னர் செப்பேடுகள்' நூலில்
டாக்டர் எஸ்.எம். கமால்.

குமார பிள்ளை, கோவிந்தப்பையா அனுப்பிய சேதி பற்றிக் கூறிய மறுநொடி அங்கயற்கண்ணியின் முகத்தில் கோடி சூரிய பிரகாசம்!

"பரவாயில்லை... பரிசாகக் கொடுத்துவிட்டோம். இனி நினைக்க ஒன்றுமில்லை என்று இருந்துவிடாமல் கோவிந்தப் பையா உங்கள் நலன் குறித்து விசாரித்திருப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது" என்றாள் பதிலுக்கு.

"ஆம்... என்னுள்ளும் மகிழ்ச்சி பிரவாகிக்கத் தொடங்கி விட்டது. கூடவே ஒரு வியப்பும்..."

"என்ன?"

"நமது சேதுபதி மன்னரைக் கொலை செய்ய நடந்த முயற்சி பற்றியும் கேட்டிருக்கிறார் கோவிந்தப்பையா. நான்



கூறாமலே செய்தி மதுரையை அடைந்திருக்கும் வேகத்தைப் பார்த்தால் வியப்பாக இருக்கிறது."

"உண்மைதான்... ஒருமுறை அடிபட்டு விட்டார்கள் அல்லவா? எனவே இனி விழிப்போடு இருக்க வேண்டும் என்று தீர்மானித்திருப்பார்கள். நமக்கே தெரியாமல் கூட இங்கே மதுரை ஒற்றர்கள் இருக்கலாமல்லவா?"

"நிச்சயமாக... ஆனால் உளவு பார்க்கிறேன் என்று அத்தி பூத்த மாதிரி பூத்திருக்கும் ஒற்றுமைக்குக் குந்தகம் ஏற்படுத்தி விடக் கூடாது அங்கயற்கண்ணி."

"என்ன சொல்கிறீர்கள்?"

"கோவிந்தப்பையாவுக்குப் பதில் கடிதம் எழுதப் போகிறேன். இனி எந்த அரசியல் விஷயத்தையும் நேராகச் செய்துவிடுவதுதான் நல்லது. இன்று எனக்குக் கடிதம் வந்திருக்கும் விஷயத்தைக்கூட நான் மன்னர் கிழவரிடம் மறைக்கப் போவதில்லை."

"என்ன இது... கோவிந்தப்பையா உங்கள் நண்பர். ஆசையாக அவர் எழுதியிருக்கும் கடிதத்திலா நீங்கள் குறை காண்பது?"

"குறையிருந்தால் காணத்தானே வேண்டும்? எனக்குக் கடிதம் போட்டதில் தவறில்லை. ஆனால் அதில் உள்ள சேதி தான் உன்னையும் என்னையும் பலவாறு பேச வைக்கிறது.

அங்கயற்கண்ணி... திரும்பவும் கூறுகிறேன். மதுரையும் இந்த ராமநாதபுரமும் ஒரு அபூர்வ விஷயம்போல ஒன்றுபட் டிருக்கின்றன. இந்த மண்ணிலும் பார் எத்தனை அற்புதமான காட்சிகள். எத்தனை விதமான மனிதர்கள்! எத்தனை விதமான தொழில் முயற்சிகள்!

எல்லோரிடமும் ஒற்றுமை இணக்கம் பரவிக் கிடக்கிறது. குறுகிய காலத்தில் மதுரைக்கு நிகரான நகரச் சிறப்புக்கு இந்த மண்ணை மாற்றிவிட்டார் கிழவன் சேதுபதி...

அதி அற்புதமான அரண்மனை. உன்னதமான அமைச்சராக வள்ளல் சீதக்காதி. தேர்ந்த தளபதியாக அம்பலக்காரன். மன்னரின் வலதுகரம்போல பெரிய உடையத்தேவர். காதலி நாச்சியாரின் சகோதரன் ரகுநாதன்...

தாதியந்தேவர் மட்டும் பதவி ஆசையால் சற்றுத் தடுமாற்றத்துடன் இருக்கிறார். மற்றபடி இங்கே எல்லோரும் கிழவரிடம் காட்டும் அன்பும் மரியாதையும் என்னை வியக்க வைக்கிறது.

ஒரு பாளையாதிபதி பேரரசனாக இப்படி விசுவரூபம் எடுத்திருப்பது சாதாரண விஷயமில்லை. நான் ஒரு சரியான நாட்டுக்கும், சரியான அரசருக்கும்தான் பரிசாகி வந்துள்ளேன். வந்த நொடியில் இருந்து இந்த நொடிவரை நடப்பதை எல்லாம் பார்த்து வியக்கவே எனக்கு நேரம் சரியாக இருக்கிறது.

இப்படிப்பட்ட நிலையில் உளவும் ஒற்றும் எதற்கு? வெளிப்படையாகவே இதைப் பேசிவிட வேண்டியதுதான்..."

— குமாரபிள்ளை கொட்டித் தீர்த்தார். அங்கயற்கண்ணி அயர்ந்து போனாள்.

"கொஞ்சம் முன்புதான் இது புகுந்த வீடு... இன்னமும் மனம் ஒன்றவில்லை. சிலகாலம் ஆகலாம் என்றீர்கள். ஆனால் இப்போதே சேதுநாட்டுக்கு ஒரு காவியம் படைத்து விடுவீர்கள் போலத் தெரிகிறதே..."

"உணர்ச்சிகள் ஒன்றாதலால் அப்படிச் சொன்னேன். ஆனால் அறிவு எப்பொழுதும் உணர்ச்சிக் கலப்பின்றிச் சிந்தித்துப் பேசினால்தானே சரியாக இருக்கும்."

"எப்படியோ... இந்தக் கடிதம் உங்களை நடுநிலைக்குக் கொண்டு வந்து விட்டது. நல்லது நடந்தால் சரிதான்!"

— அங்கயற்கண்ணி இனி பேச எதுவுமில்லை என்கிற மாதிரி புறப்பட்டாள்.

குமாரபிள்ளையும் கிழவனைக் காண அரண்மனை நோக்கி நடையிடத் தொடங்கினார்.

கையில் கோவிந்தப்பையாவின் லிகிதம்.



ஞானவாணி என்னும் அந்தப் புறாவோ அங்கேயே அங்கயற்கண்ணியின் அன்புக்குக் கட்டுப்பட்ட ஒரு ஜீவனாகக் காத்திருக்கத் தொடங்கிவிட்டது.

அரண்மனை.

சவுக்கைப் பகுதியில் ஏகக் கலகலப்பு... எங்கு பார்த்தாலும் பணியாளர் நடமாட்டம்! அரண்மனை ஊழியர்களுக்கு நடுவில் ராயசம், பொக்கிஷம், தானாதிபதிகள், அடப்பக் காரர்கள், அட்டவணை படிப்பவர்கள், கைவிந்தாரக்காரர்கள் என்று வகைக்கு வகை பரபரப்பாகப் பணிகளில் ஈடுபாடு காட்டிக் கொண்டிருந்தார்கள்.

குமாரபிள்ளை நடந்து வரும்போது அவருக்கான மரியாதை மிகுந்த வரவேற்பையும் வந்தனங்களையும் ஒருவர் கூடச் சொல்லத் தவறவில்லை.

அங்கங்கே ஊழியர்களின் பணியாற்றல்கள். பொருத்தமான இடங்களில் மானாமதுரைக் களிமண்ணால் கை வேலைப்பாட்டோடு செய்யப்பட்ட நீர்ப்பானைகள். சீனத்துப் பீங்கான் ஜாடிகளுக்கும் பஞ்சமில்லாத நிலை.

சவுக்கையின் மையப் பாகத்தில் சிம்மாசனம் இடப்பட்டிருந்தது. தாம்பூலத் தட்டும், பழத் தட்டுகளும் சீராக ஓர் ஓரத்தில் மேஜைகளில் அடுக்கப்பட்டிருந்தன. சந்தனமும், பன்னீரும் பேலாக்களில் மணம் பரப்பிக் கொண்டிருந்தன.

மெய்க்காவலர்களும், சாமரம் போடுபவர்களும் தயாராக இருப்பதைப் பார்த்தபோது அரசர்பிரான் அங்கே இப்போது வரப்போவது துல்லியமாகத் தெரிந்து போயிற்று.

அதற்கேற்ப அங்கே நிலவும் இறுக்கமான அமைதியைப் பிளந்து கொண்டு கேட்கத் தொடங்கியது கட்டியக்குரல்.

மெய்க்காப்பாளர்களிடமும் ஒருவித விறைப்புத் தன்மை தொற்றிக் கொண்டது. அடப்பக்காரர் மட்டும் நாலாபுறமும் பார்த்தார்.

அவரிடம் அதீத விழிப்புணர்ச்சி.

குமாரபிள்ளைக்கு அந்தக் காட்சிகள் ஒவ்வொன்றும் வியப்பையும் மகிழ்ச்சியையும் அள்ளித் தந்த போது வள்ளல் பிரானோடு கிழவன் சேதுபதியும் அங்கு பிரவேசிக்க, குமார பிள்ளை உணர்ச்சி பூர்வமாகத் தனது வந்தனங்களைச் சொல்லி நின்றார்.

"வாருங்கள் பிள்ளை..." என்ற கிழவனின் பார்வையும் குமாரபிள்ளையின் இடைக்கட்டில் சற்றே வெளித் தெரிந்த கோவிந்தப்பையாவின் சேதி மடலைப் பார்க்க முடிந்தது.

"அமருங்கள்."

"பரவாயில்லை அரசே... தங்களைக் காணத்தான் வந்தேன்."

"காணவந்தால் அமரக் கூடாதா என்ன? அமருங்கள். தம்பி நீயும் அமரு..."

கிழவன் வள்ளலுக்கும் குமாரபிள்ளைக்கும் இரு கைகளைக் காட்ட சாமரம் போடுபவர்கள் தங்கள் பணிகளைத் தொடங்கினர்.

தயக்கத்தோடு அமர்ந்த பிள்ளை கிழவனை மலங்க மலங்கப் பார்த்தார்.

"என்ன பிள்ளை... ஏதும் முக்கியச் சேதியா?"

"ஆமாம்... சற்று விஸ்தாரமாகவே பேச வேண்டும்."

— அடுத்த நொடி வள்ளல் தன் இருக்கையை விட்டு எழுந்து கொண்டார். சுற்றி நிற்பவர்களையும் அடப்பத்தையும் ஒரு பார்வை பார்த்தார்.

க்ஷணத்தில் அவர்களும் புரிந்து கொண்டதுபோல விலகத் தொடங்கினார்கள்.

வள்ளலும் அங்கிருந்து நீங்கக் காலெடுத்தபோது,

"தம்பி... நீ எங்கே போகிறாய்? அமரு..."



"இல்லை சேதுபதியவர்களே. பிள்ளையவர்கள் ஏதோ அந்தரங்கமாகப் பேச விரும்புவது போலத் தெரிகிறது."

"அதனாலென்ன? பிள்ளை... என் தம்பி இங்கே இருக்கலாம் தானே?"

அடுத்த நொடி பிள்ளை பதறினார்.

"அரசே... வள்ளல்பிரான் ஒரு மாமனிதர். நான் அவரையும் உங்களையும் வேறாக நினைக்கவில்லை. அத்துடன் அவர் இந்த மண்ணின் அமைச்சர். நான் பேசப் போவதும் அரசியல் விவகாரம்தான். எனவே வள்ளல்பிரான் தாராளமாக இங்கே இருக்கலாம்."

பிள்ளையின் பதிலில் அவர் வந்த சில நாள்களிலேயே அனைவரையும் நன்கு புரிந்து கொண்டுவிட்டது பளிச்சென்று தெரிந்தது.

கிழவன் முகத்தில் அதன் எதிரொலிகள். பேச்சிலும்...

"பலே... பலே பிள்ளை பலே... சரி விஷயத்தைச் சொல்லு."

சற்று முன் மதுரையம்பதியிலிருந்து எனக்கொரு செய்தி வந்தது. அருமைத் தளவாய் கோவிந்தப்பையாதான் செய்தியை அனுப்பியவர்.

தாங்கள் வெற்றிச் சூரியனாக இங்கே வந்த சமயம் இங்கே நடந்த கொலை முயற்சி பற்றி அறிந்து மிகவும் வருத்தப்பட்டு, தங்கள் நலன் பற்றிக் கேட்டிருந்தார். இதோ சேதி..."

— பிள்ளை இடையில் இருந்து அந்தச் சேதி மடலை எடுத்துப் பணிவாகக் கிழவன் எதிரில் நீட்டினார். அதை வாசித்து முடித்த கிழவனும் அதை வள்ளல் வசம் தர, வள்ளலும் வாசித்து முடித்து விட்டு நிமிர்ந்தார்.

"நல்லது... நான் நலமாகத்தானே இருக்கிறேன்."

"உண்மைதான்... ஆயினும் என்னுள் சற்றே வேறு விதத்தில் சஞ்சலங்கள்."

"எப்படி?"

"அத்தி பூத்தது போல மதுரையும் சேது நாடும் ஒன்று பட்டிருக்கிறது. இந்த ஒற்றுமை நீடிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். கோவிந்தப்பையாவிற்குத் தங்கள் கொலை முயற்சி பற்றிய தகவல் எப்படித் தெரிந்தது என்று தெரியவில்லை. யாராவது ஒற்றர்கள் மூலமாக அவருக்குத் தெரிந்திருக்கலாம்! மதுரை ஒற்றர்கள் இங்கே இருக்கக்கூடும் என்பது என் யூகம். இன்றோ நாளையோ அவர்கள் இங்கிருப்பது தெரியவந்து அதன் காரணமாக மீண்டும் ஒரு பகை சேது நாட்டுக்கும் மதுரைக்கும் வந்துவிடக் கூடாது என்று விரும்புகிறேன். எனவே ஒற்றர்கள் இருப்பின் அவர்களைத் திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டும் என்று கோவிந்தப்பையாவிற்குத் தகவல் தர விரும்புகிறேன்..."

— பிள்ளை தனது ஆதங்கத்தைக் கொட்டிவிட்டுக் கிழவரை ஏறிட்டபோது கிழவன் பார்வை வள்ளலை ஊடுருவிக் கொண்டிருந்தது.

வள்ளல் முகத்தில் ஒருவித உற்சாகப் புன்னகை.

"தம்பி.. பிள்ளை தன் கடமையைக் கச்சிதமாக ஆற்றத் தொடங்கிவிட்டார் என்று நினைக்கிறேன். நீ என்ன நினைக்கிறாய்?"

"உண்மைதான் சேதுபதி. அதே சமயம் அவர் இப்படி ஆசைப்படுவதால் ஒற்றர்களே இல்லாமல் போய் விடுவார்கள் என்றும் எனக்குத் தோன்றவில்லை."

"ஏன் அப்படிக் கூறுகிறாய்?"

"நமக்கு மிக மிக இணக்கமான பாளையக்காரர்கள் தங்கள் ஒற்றர்களைக் கொண்டு நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம், என்ன செய்யப் போகிறோம் என்பதை அறிந்து கொள்ள ஆசைப்படும்போது நாயக்கப் பேரரசு பிள்ளையின் விருப்பத்தைக் கண்டு கொள்ளாது. மாறாகப் பிள்ளையைப்



பார்த்து, அதற்குள் உங்கள் விசுவாசம் மாறிவிட்டதா என்று தான் கேட்கும்."

வள்ளலின் கருத்தாழம் மிக்க பதிலுக்கு மறுபதிலை எப்படிச் சொல்வது என்பது தெரியாமல் பிள்ளை சற்றே தடுமாற, கிழவனே அதற்குப் பதில் சொல்லத் தொடங்கினார்.

"பிள்ளை, உன் ஆசைக்கு என் பாராட்டுகள். ஆனால் எப்பொழுதும் நாம் ஆசைப்படுகிற மாதிரி எல்லாம் எதுவும் நடப்பதில்லை. அரசியலில் அதன் தர்மங்கள் வினோதமானவை. அதை அதன் போக்கில் போய்ப் புரிந்து கொள்ள வேண்டும். ஒற்றர்கள் யார்? அவர்கள் என்ன செய்வார்கள் என்பதை எல்லாம் நான் நன்றாக அறிவேன். அவர்கள் அவர்களின் கடமையைச் செய்துவிட்டுப் போகட்டும். அதை எப்படிச் சந்திக்க வேண்டும் என்பது எனக்குத் தெரியும். அந்தத் தகவல் சொல்லிகளை வைத்து நான் மதுரையோடு பகை கொண்டு விடுவேன் என்று நினைத்து விடாதே. இங்கே மதுரை ஒற்றர்கள் மட்டுமில்லை. எல்லா நாட்டு ஒற்றர்களும் இருக்கிறார்கள். அவர்களை என்ன செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரியும். நீ கவலைப்படாதே.

உனது இந்த நல்லெண்ணம் தொடரட்டும். அதே சமயம் இப்போது போல் இதே வெளிப்படையோடு நீ எப்போதும் இருந்து விட்டால் உனக்கு ஒரு குறையும் இங்கு வராது. அதில் மாற்றம் வரும்போதுதான் சிக்கலே.."

— கிழவன் ஏற்ற பதிலைச் சொல்லிவிட்டு இறுதியாகச் சொன்னது பிள்ளையை ஒரு வினாடி அசைட்டியது.

அதிர்ச்சியோடு பார்த்தார்.

"என்ன பார்க்கிறாய்? நான் இறுதியாகப் பேசியது உனக்குப் புரியவில்லையா?"

"ஆமாம்.."

"புரியாதுதான். இந்தச் சேது மண்ணில் நான் பல விசித்திரங்களைப் பார்த்துவிட்டேன். எனது சகாக்களே முன்

ஒன்றும் பின் ஒன்றுமாக இருப்பதில் இருந்து ஒன்று மட்டும் எனக்குப் புரிகிறது. அரசியலில் ஒரே கருத்தோடு எல்லா நாளும் ஒருவர் உண்மையோடு இருந்துவிட முடியாது என்பதுதான் அது.

அதை எல்லாம் மீறி உண்மையோடு இருந்து வருபவன் என் தம்பி ஒருவன்தான். தம்பி என்று நான் யாரையோ சொல்லவில்லை. இதோ இங்கே அமர்ந்திருக்கிறானே ஈகைக்கு இலக்கணம் சொல்லும் சீதக்காதி— இவனைத்தான் சொல்கிறேன். இவனுக்கு எப்பொழுதும் எனது நலனும், இந்த மண்ணின் நலமும்தான் குறி. இல்லாவிட்டால் டெல்லிப் பட்டணத்தில் பாதுஷாவின் அருகாமையில் இருக்க வாய்ப்பு வந்தும் அதை விட்டுவிட்டு இங்கே வந்து என்னோடு இருப்பானா என்ன?"

— கிழவன் விளக்கமளிக்கும் சாக்கில் சீதக்காதியை மெச்சவும் அது அவரைக் கூச்சப்படுத்தியது.

"சேதுபதியவர்களே... போதும்! நான் சாமான்யன்" என்றார் வள்ளல்.

"இல்லை தம்பி, நீ சாமான்யன் இல்லை. அசாதாரணமானவன். ஓசைப்படாமல் நன்மை செய்வதில் சமர்த்தன். என்னைச் சகோதரனாகக் கருதுவதாலேயே என் பங்காளிகளையும் அதேபோலப் பாவிப்பவன். இல்லாவிட்டால் தாதியனைப் பார்த்து உரிய புத்திமதியைச் சொல்லிவிட்டு வந்திருப்பாயா? அதைப் பற்றி நானறிந்தால் வருந்துவேன் என்று எனக்குக் கூடச் சொல்லாமல் இருப்பாயா?"

— அங்கு தொட்டு இங்கு தொட்டுக் கிழவன் வள்ளலின் ரகசியச் செயலையும் அறிந்து பேசியபோது வள்ளலுக்கே மூச்சு முட்டிற்று.

"சேதுபதி— தாங்கள் அனைத்தையும் அறிவீரா?"

— உணர்ச்சிப் பெருக்குடன் கேட்க, குமாரபிள்ளையும் வியப்போடு பார்க்கக் கிழவனிடம் மந்தகாசமான புன்னகை.



வள்ளலும் கைகளைக் கூப்பியபடி மறு பதிலுரைக்கத் தொடங்கினார்.

"என்னை மன்னியுங்கள்— தங்களுக்குத் தெரியாமல் நான் அவ்வாறு செயல்படக் காரணம்..."

"அதுதான் கூறினேனே... நான் வருத்தப்படுவேன் என்று—"

"அதுதான் உண்மை!"

"அது எனக்கும் தெரியும். ஆனால் நான் இப்போது வருத்தங்களை எல்லாம் ஜீரணிக்கத் தொடங்கி விட்டேன். அதே சமயம் பழைய சேதுபதியாக இனி ஒருக்காலும் இருக்கப் போவதில்லை.

இந்த நொடிப் போதில் நீயும் சரி, பிள்ளையும் சரி என்னை வீரனாக மட்டுமில்லை, நேரிய மனிதனாகவும் பார்க்கிறீர்கள்.

ஆனால் இனி தொடர்ந்து விட்டுக் கொடுப்பவனாகவே நீடித்தால் அது ஆபத்தோ என்று தோன்றுகிறது..."

— கிழவனின் குரலில் முதல்முதலாக நடுக்கம். கூடவே ஏதோ ஒரு எடுக்கக்கூடாத புதிய முடிவை அவர் எடுத்து விட்டதைப் போலவும் ஒரு தோற்றம்.

"சேதுபதி என்ன இது...? தாங்கள் பேசுவதைப் பார்த்தால்..."

"நான் இதுநாள்வரை எதிரிக்கு மட்டும் சிம்ம சொப்பனமாக இருந்தேன். இனி எல்லாருக்குமே சிம்ம சொப்பனமாக இருக்கப் போகிறேன். அப்படி இருந்தால்தான் இந்த சேது நாடு தொடர்ந்து மேன்மையடைய முடியும் என்று என் உள்ளுணர்வு சொல்கிறது— இந்த மண்ணுக்குள் பல மோப்ப நாய்கள் அலையத் தொடங்கிவிட்டன. அவற்றின் வாலை அறுத்து, காலையும் உடைத்துத் திருப்பி அனுப்ப வேண்டும். அதில் ஒருவன்தான் என்னைக் கொலை செய்ய வந்தவன்.

இனி எனக்கு நாடுதான் பெரிது. நானோ, இல்லை என் பெயரோ புகழோ கூடப் பெரிது இல்லை என்கிற முடிவுக்கு வந்துவிட்டேன்–"

– கிழவன் சொல்லி முடித்தபோது கண்களில் அத்தச் சிவப்பு!

# 43

கிழவன் சேதுபதியிடம் இப்படி ஒரு மாற்றத்தை ஒரு போதும் யாருமே பார்த்ததில்லை. வள்ளலின் உள்ளமே கூட ஆச்சரியத்தால் அதிர்ந்து போனது. குமாரபிள்ளையும் முற்றிலும் அதுவரை பார்த்திராத ஒரு முகத்தைக் கிழவனிடம் பார்க்கத் தொடங்கினார்.

"என்ன பிள்ளை– நீ சொல்ல விரும்பியது இவ்வளவு தானா? இல்லை இதற்கு மேலும் ஏதும் இருக்கிறதா?"– கிழவன் ஒரு முடிவுக்கு வரும் தோரணையோடு கேட்பது போலத் தோன்றியது.

"அவ்வளவுதான் அரசே... அவ்வளவுதான்."

"நல்லது. மிக நல்லது. உங்களுக்கு நான் ஒரு பணியைத் தரப் போகிறேன். வெற்றிகரமாகச் செய்து முடிக்க வேண்டும். செய்து முடிப்பீரா?"

கிழவனின் அடுத்த கேள்வியில் மெல்லிசான மர்ம இழை.

"சொல்லுங்கள் அரசே. காத்துக் கொண்டிருக்கிறேன்."

– குமாரபிள்ளையும் பரபரத்தார். அடுத்து கிழவனின் பார்வை வள்ளல் பக்கம் திரும்பியது. வள்ளல் முகத்தில



ஒருவிதக் கூர்மை. அதே சமயம் கிழவன் அவருக்கும் தெரியாத படி எதைக் கூறப்போகிறார் என்கிற ஆர்வத் துடிப்பு.

"தம்பி– பிள்ளையை நமக்குக் கட்டுப்பட்ட பாளையங் களுக்கெல்லாம் போய்வரச் சொல்லலாம் என்றிருக்கிறேன். நீ என்ன சொல்கிறாய்?"

– கிழவன் கேட்கவும் வள்ளலுக்குப் புரிந்து போயிற்று.

"நல்லதுதான் சேதுபதி. அது பிள்ளை நமது பாளையங் களைப் பற்றித் தெரிந்து கொள்ள உதவும். நாம் நமது பாளையங்கள் இன்று எப்படி இருக்கின்றன என்று தெரிந்து கொள்ளவும் வகை செய்யும். அவருக்கு ஏற்ற பணிதான்" என்கிற வள்ளலின் பதிலில் தடுமாற்றமோ, அநாவசியக் குழப்பங்களோ ஏதுமில்லை. சேதுபதியின் உள்ளத்தை க்ஷணத்தில் படித்து அதற்கு உடன்பட்டு வழிமொழிந்த மாதிரி இருந்தது வள்ளல் சீதக்காதியின் கருத்து.

கொஞ்சம் போலச் சீற்றத்துக்கு மாறிவிட்டிருந்த கிழவன் சேதுபதி முகத்திலும் வள்ளலின் பதிலை ஒட்டி வந்த மலர்ச்சி பரவத் தொடங்கியது.

குமாரபிள்ளைக்கும் அவர்கள் பேச்சும் பார்வையும் வியப்பைத் தந்திருந்தது.

"என்ன பிள்ளை– நாளைக்கே நீ பயணத்தைத் துவக்கலாம் தானே?"

"தாராளமாக அரசே– தாராளமாக."

"உடன் சில சேது நாட்டு வீரர்களையும் துணைக்கு அழைத்துக் கொள்ளலாம்."

"அப்படியானால் நான் இன்னமும் மதுரையைச் சேர்ந்த வீரன் என்பதுதான் தங்கள் நினைப்பா?"

– எப்படியோ அந்தக் கேள்வி பிள்ளையிடம் துளிர்த்து விட்டது. கிழவனையும் சற்று திக்கு முக்காட வைத்தது.

"பலே... பலே பலே... என்னை நன்றாக மடக்கி விட்டாயே_"

"மடக்குவதற்காக நான் இப்படிக் கேட்கவில்லை. நான் மடங்கிவிட்டதை உணர்த்தவே அப்படிச் சொன்னேன்."

"பலே_ பலே பலே! எனக்குப் பூரிப்பாக இருக்கிறது பிள்ளை. மிகப் பூரிப்பாக இருக்கிறது. இப்படித்தான் உள்ளுணர்வுகள் இருக்க வேண்டும். அச்சப்பட்டுக் கொண்டு உள்ளேயே விழுங்கிவிடுவதை விட இப்படிப் பேசுபவர்களை எனக்குப் பிடிக்கும். உன் ஆதங்கம் எனக்கு மிகப் புரிகிறது. அதே சமயம் உன் பார்வையின் கூர்மையைத் தளபதி என்பதற்கு நீ எழுதப் போகும் பொருளுரையை நான் இனிதான் புரிந்து கொள்ள வேண்டும். எனது பாளையக்கார நண்பர்கள் சிலரிடம் நான் சில மாற்றங்களைப் பார்க்கிறேன். நமது சேது நாடு என்று சிந்திக்க வேண்டிய அவர்கள் எனது பாளையம் என்று பிரித்துச் சிந்திப்பதாகப் படுகிறது. அவர்களை நீ இனம் கண்டு கொள்ள வேண்டும்.

குறிப்பாகத் திருமயம் பாளையாதிபதி வில்லவராயனின் போக்கும் வழக்கும் சரியில்லை என்று அறிகிறேன். நான் அறிந்த விஷயம் சரிதானா என்பது எனக்குத் தெரிய வேண்டும்.

சேது மண்ணுக்கு ஒரு தனிக் குணம் உண்டு. அது உன் மூலமாக எதிரொலிக்க வேண்டும். ஒரு சங்கிலியில் கண்ணிகள் பலவீனமாக இருந்தால் அதைப் புதிய கண்ணியால் இணைத்துப் பலப்படுத்துவதைப் போல உனது செயல் இருக்க வேண்டும்.

எனது தூதனாக, சேது மண்ணின் வீரத் தளபதியாகப் பாளையாதிபதிகளைப் பார்த்துப் பேசி அவர்களின் மனோ நிலையைத் துல்லியமாக உணர்ந்து கொண்டு வா.

இந்த மண்ணுக்கு வந்து பல நாள்களாகிவிட்டது.



எனது கடமை என்னவென்று தெரியவில்லை என்று உன் மனத்தில் இருந்த குழப்பத்திற்கு இப்பொழுது விடை கிடைத்திருக்கும் என்று நினைக்கிறேன். சரிதானே?"

கிழவனின் நீண்ட விளக்கம் இறுதியாகத் தான் தன் பத்தினி அங்கயற்கண்ணியிடம் பேசியதற்கும் சேர்த்தே ஒரு விடையைத் தரும் என்று குமாரபிள்ளை எதிர்பார்க்கவில்லை.

திகைப்பும் மகிழ்ச்சியும் பிள்ளை முகத்தில் குதிதாண்டவமாடத் தொடங்கியது.

"நல்லது பிள்ளை_ இனி கருமமே கண்ணாக நீ மாறலாம். அடுத்து உன்னை நான் சந்திக்கும்போது நீ பாளைய விஜயங்களை முடித்திருக்க வேண்டும் என்ன_?"

— கிழவன் புறப்படு என்றும் சொல்லாமல் சொன்னார். நடுவில் எதற்காகவும் சந்திக்கத் தேவையில்லை என்பதும் அதில் பளிச்சிட்டது.

பிள்ளையும் விளைவுகளை வீணாக்காமல் வணங்கி விட்டுப் புறப்பட்டார். வள்ளல் பார்த்துக் கொண்டே இருந்தார். பிள்ளை நீங்கவும் சேதுபதியின் பக்கம் பார்வை திரும்பியது.

"என்ன தம்பி_ ஏதோ சொல்ல நினைப்பது போலத் தெரிகிறதே?"

"இல்லை சேதுபதி. நான் சொல்ல எதுவுமேயில்லை. ஒன்று வேண்டுமானால் சொல்லலாம்_"

"என்ன?"

"ஒரு அமைச்சரோ, தளபதிகளோ, இல்லை ராயசங்களோ யாருமே தங்களுக்குத் தேவையில்லை. ஒரு தனிமனிதனாக நின்றே இந்த மண்ணைப் பாதுகாக்க உங்களால் முடியும் என்பதுதான் அது..."

"புகழ்கிறாயா... இல்லை மற்றவர் பொறுப்புகளில் தலையிடாதீர்கள் என்கிறாயா?"

— கிழவன் சிரித்தபடிக் கேட்க வள்ளலும் பதில் கூறாமல் மௌனமாகச் சிரித்தார்.

"சரி... தாதியன் என்ன சொல்கிறான்?"— பேச்சு கிழவனின் அருமைப் பங்காளியிடம் வந்து நிற்கவும் சிரித்துக் கொண்டிருந்த வள்ளலின் முகத்தில் கொஞ்சம் போல இருள் படியத் தொடங்கியது.

"உன்னால் கூட அவன் மனத்தைத் தொட்டுச் சிந்திக்க வைக்க முடியவில்லை என்று சொல்..."

"இல்லை... நான் அப்படிச் சொல்லமாட்டேன். அவரை அதிகம் பொருட்படுத்துவது கூட ஒருவிதத் தவறாக எனக்குப் படுகிறது."

"அப்படியானால் அளவாகப் பொருட்படுத்திவிட்டுப் போகவேண்டியதுதான்."

"அதுதான் இனிமேலான நாள்களில் நமது முடிவாக இருக்க வேண்டும். ஒன்று உறுதி. அவர் தன்னையே உணராதவராக இருக்கிறார். என்று உணர்வார் என்பதுதான் இப்பொழுது கேள்வி."

"தன்னைப் பற்றி நினைக்கும்வரை அதற்கு இடம் இல்லை. மண்ணைப் பற்றி நினைக்கும்போது ஒருவேளை அதற்கு வாய்ப்பு வரலாம்."

"அப்படியானால் தாதியருக்கு இறுதிவரை வாய்ப்பு வரப் போவதில்லை என்று சொல்லுங்கள்."

"என்ன சொல்கிறாய் தம்பி நீ...?"

"மண்ணைப் பற்றி நினைக்கத்தான் நீங்கள் இருக்கிறீர்களே. அவருக்கு ஏது அந்த வாய்ப்பு...?"

— வள்ளலின் மடக்கலில் கிழவனின் இதழ்க்கடை உற்சாகச் சிரிப்பொன்றை உதிர்க்கையில் உடையக்கா நாச்சியாரின் விஜயம் அங்கே ஆரம்பமாகியிருந்தது.



கட்டியக்காரர்களிடம் அதன் எதிரொலி.

அடப்பம் ஓடிவந்து நாச்சியாரின் வருகையைச் சொல்லி நிற்க, "வரச்சொல்" என்ற ஒரு வார்த்தைப் பதில் உடையக்காவைச் சவுக்கைப் பகுதிக்குள் நுழைய விடுகிறது.

கிழவனிடமும் வந்தனோபசாரம்.

"வா சகோதரி... ஏது இவ்வளவு தூரம்?"

— உடையக்காள் அடுத்த நொடி கலக்கத்தோடு கிழவனையும் வள்ளலையும் பார்த்தாள்.

"என்ன உடையக்கா ஏதும் முக்கியச் சேதியா?"

உடையக்காள் மௌனத்தில் கொஞ்சம் போலக் குமைந்தாள்.

"என்ன இது...? கோட்டைப் பட்டினத்து வணிகரின் சிவலோகப்ராப்தி குறித்த கலக்கமா?"

"......"

"அதற்கான துக்கச் சீரைக்கூடச் செவத்தாள் கொண்டு சென்று விட்டாளே. ஒருவேளை நான் நேரில் போகவில்லை என்பது உன் வருத்தமோ?"

"......"

"இப்படிப் பழியாக நின்று கொண்டு மௌனத்தைத் தொடர்ந்தால் எப்படி? காரணமாகத்தான் நான் கோட்டைப் பட்டினத்திற்குச் செல்லவில்லை. சென்றால் அங்கே அவரின் பார்வையைப் பார்க்க நேரும். அவள் கூட உடன்கட்டை ஏறப்போவதாகவும் அதற்கான முகாந்திரங்கள் அங்கு நடப்பதாகவும் அறிந்தேன். அதைப் பார்த்தால் எனக்கு மனது தாங்காது. அதனால்தான் செல்லவில்லை..."

— கிழவன் பேசப்பேச உடையக்காளுக்கு என்னவோ போலாயிற்று. நிமிர்ந்து வெறித்தவள், "சாத்தா... போதும். சம்பந்தமில்லாமல் எதையாவது பேசாதே. நான் வந்த

விஷயமே வேறு" என்றாள் சற்றுக் கோபமாக. அப்படியே வள்ளலையும் பார்த்தாள். வள்ளலுக்குப் புரிந்தது.

"சேதுபதி, நான் உத்தரவு பெற்றுக் கொள்கிறேன்" என்று வள்ளலும் எழுந்து கொண்டார். சேதுபதியும் தடுக்கவில்லை. வள்ளலும் நீங்கிவிட்ட அமைதியான பொழுது– சவுக்கைப் பகுதிக்குள் வளையவரும் காற்றைத் தவிர வேறு யாரும் இல்லை. உடையக்காள் யாருமே இல்லை என்பதை உறுதி செய்து கொண்டபின் பேச்செடுக்கத் தொடங்கினாள்.

"காத்தா– எனது மகளும் உனது மருமகளுமான பொன்னாத்தாள் இப்பொழுது எப்படி இருக்கிறாள் தெரியுமா?"– சன்னமான குரலில் கேட்டாள்.

"நீயே சொல்லேன்…"

"அவளைப் பார்க்கச் சகிக்கவில்லை. எல்லாம் என் மருமகப் பிள்ளையால் வந்த வினை."

"விஷயத்திற்கு வா சகோதரி…"

"வரத்தான் நினைக்கிறேன். நாக்கு பிரண்டு போகிறது."

"அப்படியானால் உன் மனசாட்சிக்கே பிடிக்காத விஷயம் அது என்று சொல்…"

"உண்மைதான். காதிலும் பல விழக்கூடாத விஷயங்கள் விழுந்தன."

"என்னவென்றுதான் சொல்லேன்."

"உன்னைக் கொலை செய்ய முயன்றவர்கள் தாதியனின் ஆட்களாமே?"

"உன்வரை வந்துவிட்டதா சேதி?"

"சற்று முன்தான் பொன்னாத்தாள் வந்து அழுதுவிட்டுச் சென்றாள். ஒன்று அவர் திருந்த வேண்டும். இல்லையெனில் நான் மரணிக்க வேண்டும் என்று ஒரே பிலாக்கணம்…"

"நீ என்ன சொன்னாய்?"



"என்னால் என்ன சொல்ல முடியும்? நீதான் இதற்கு வழியைக் காணவேண்டும்.

"எப்படி என்றுதான் சொல்லேன்."

"தனக்கு ஒரு பதவியோ பொறுப்போ இல்லை என்பது தான் என் மருமகப் பிள்ளையின் பெரிய வருத்தம். அதுதான் அவரை இப்படியெல்லாம் குறுக்கு வழியிலும் தப்புப்பாதை யிலும் போக வைத்துக் கொண்டிருக்கிறது."

"அப்படியா?"

"என்ன காத்தா– அப்படியா என்கிறாய்? அதுதானே உண்மை…"

"சரி– நாளைக்கே எனது அரியணையைக் கொடுத்து விட்டுமா? திருந்திவிடுவாரா உன் மாப்பிள்ளை?"

– காத்தான் எனும் கிழவன் முகம் வெளிற இறுக்கமாக அப்படிக் கேட்கவும் உடையக்காளும் அதைப் பார்த்துச் சற்று பம்மினாள். கிழவன் இராமலிங்க விலாச மாடப் பரப்பைப் பார்த்தபடி இறுக்கத்தைத் தொடர, "காத்தா…" என்றாள் சபத மில்லாத குரலில்.

"சொல் சகோதரி– காதில் விழுகிறது."

"நான் சொல்ல வந்ததை நீ தவறாகப் புரிந்து கொண்டு விட்ட மாதிரித் தெரிகிறது."

"நீயும் சரியாக விஷயத்தை ஆரம்பிக்கவில்லை என்பதைப் புரிந்து கொள் சகோதரி."

"எனது ஆதங்கத்தில் ஒரு தவறும் இல்லையே…"

"ஆதங்கத்தில் தவறு இல்லை. ஆசையில்தான் தவறு."

"என் மருமகப்பிள்ளை ஒரு பொறுப்போடு இருக்க வேண்டும் என்று நினைப்பதா தவறு…?"

"பொறுப்போடு இருப்பது என்பது பாத்திரப்படைப்பு சகோதரி. பிறர் கொடுத்து வருவதில்லை அது. இந்தப்

பொறுப்பில் என்னை யார் தூக்கி வைத்தார்கள்? நானாக வரவில்லையா?"

"நீ என்னதான் சொல்கிறாய்–?"

"தூதியனைப் பற்றிச் சிந்திப்பதே தவறு. அவனை நானே மறக்க முயற்சி செய்கிறேன். நீயும் மறந்து விடு."

"அப்படி எல்லாம் செய்ய முடியுமா–? பெண்ணைக் கொடுத்துவிட்டோமே–"

"அப்படியானால் அவளோடு சேர்ந்து நீ வேண்டுமானால் உருகு. கவலைப்படு. ஆனால் அதனால் எதுவும் ஆகிவிடாது."

"இல்லை காத்தா– இன்று அவன் சகாக்கள் உன்னைக் கொல்ல முயன்ற மாதிரி இன்னமும் அதிகம் முயல்வார்கள்."

"முயலுகின்ற அளவு தோற்றுக் கொண்டும் இருப்பார்கள்."

"எல்லாக் காலத்திலும் எல்லோரும் விழிப்புடன் இருந்துவிட முடியாது."

"அது இந்தக் கிழவனுக்கு மட்டும் பொருந்தாது–"

"நீயும் மனிதன்தானே– ஒரு தெய்வம் போலப் பேசினால் எப்படி?"

"எப்பொழுது தெய்வம் இப்படி எல்லாம் பேசி நீ கேட்டிருக்கிறாய் சகோதரி–"

"காத்தா– இப்படிக் கேட்டால் நான் எப்படிப் பேசுவது? நான் என் மருமகப் பிள்ளைக்காக மட்டும் பேசவில்லை. உனக்காகவும்தான் பேசுகிறேன்."

"இனிமேல் இருவருக்காகவும் பேசாதே–"

"அது ஆபத்து. தூதியனை, அதாவது என் மருமகனை அது பாதை மாற்றி இழுத்துச் சென்றுவிடும்."

"இழுத்துச் செல்லும் பாதையில் அவனும் போகட்டும்."



கிழவன் ஒருபோதும் இப்படி வார்த்தைக்கு வார்த்தை பேசி உடையக்காள் கேட்டதேயில்லை. இன்று வார்த்தைக்கு வார்த்தை வந்த பதிலால் அவள் வதனம் வாடிப் போனது.

அதற்கு மேல் பேச ஏதும் இல்லை என்கிற மாதிரி அங்கிருந்து மௌனமாகப் புறப்பட ஆயத்தமானாள்.

"ஒரு நிமிடம்..."– கிழவனிடம் இருந்து சத்தரிப்பு. உடையக்காளும் திரும்பினாள்.

"இப்படிப் பேசிவிட்டதால் எனக்கு இதயமில்லை என்று நினைத்துவிடாதே. இதயம் இதயமாக இருப்பதால்தான் தூதியனை நான் சிறையில் அடைக்கவில்லை. வெளியே விட்டு வைத்திருக்கிறேன். பொன்னாத்தாளிடம் தைரியமாக இருக்கச் சொல்.

நீ இவ்வளவு பேசியதற்காக உனக்கு ஒரு விஷயத்தைச் சொல்கிறேன். நமது பாளையங்களை எல்லாம் ஒரு கட்டுக்குள் வைத்துக் கொண்டு எதிரிகளும் உள்ளே நுழையாதவாறு பார்த்துக் கொள்ள எனக்கு ஒரு உற்ற துணை தேவை. அதாவது எனது மைத்துனன் இரகுநாதனைப்போல–

அப்படி ஒருவனாகத் தூதியனை மாற்ற முடியும் என்று நீயோ, இல்லை பொன்னாத்தாளோ நம்பினால் என்னிடம் இனி தூதியனைப் பற்றிப் பேசுங்கள். இல்லாவிட்டால் விதியின் வழி தூதியனின் மதி செல்லட்டும்."

– கிழவன் சொல்லிவிட்டுத் தானும் சவுக்கைப் பகுதி விட்டு நீங்கத் தொடங்கினார்.

உடையக்காளிடம் மட்டும் தொடர்ந்து கலக்கம்.

அந்தப் பட்டு வஸ்திரங்கள் வண்ண மின்னல் போல ஒளிக் கூத்தாடின. அழகாக மூங்கில் கழி கொண்டு மடித்து உள்ளேயும் சில அரச இலைகளை வைத்து விறைப்புத் தன்மையை நிலை நிறுத்தி, கட்டுக்கட்டி எடுத்துக் கொண்டு அரண்மனைக்குப் புறப்படலானான் சத்தியநாராயணன்.

செங்கைய்யரின் அருமைப் புதல்வன் அவன் எப்பொழுது அப்படிப் புறப்படுவான் என்று காத்திருந்த மாதிரி ஓடி வந்து ஒட்டிக் கொண்டான் கிருஷ்ணா.

"கிருஷ்ணா, நீயுமா வருகிறாய்?"

"பின்னே... நான் உங்கள் அரண்மனையைப் பார்க்க வேண்டாமா?"

"ஐயோ... என்னையே ஒரு எல்லைக்கு மேல் உள்ளே விட மாட்டார்களே..."

"இன்று பார். நாம் முழு அரண்மனையையும் சுற்றிப் பார்க்கப் போகிறோம்."

"என்ன சொல்கிறாய் நீ..."

"நீ வா... வந்து பார் அப்பொழுது தெரியும் நான் கூறியதன் பொருள்."

– கிருஷ்ணா உரிமையோடு தோளில் கைபோட்டு இழுத்துச் சொல்லத் தொடங்கினான்.

வீட்டைவிட்டு வெளியே இறங்கின அவர்களை ஒரு சேது நாட்டு அரண்மனை வீரன் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

## 44

இராமலிங்க விலாசம்!

சேது நாட்டின் வளமைக்கும் பெருமைக்கும் சான்றாகவும், கட்டடக்கலையின் மாண்புக்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் பிள்ளையார் கோவில் மணிச் சப்தத்துடனும், வட்டம் கட்டிப் பறக்கும் சாம்பல் நிறப் புறாக் கூட்டத்துடனும் மாலைப் பொழுதினை எதிர்நோக்கிக் காத்திருக்க அரண்மனை முச்சூடும் ராஜாங்க ஊழியர்களின் பரபரப்பான நடமாட்டங்கள்.



சில நாள்கள் முன்புவரை அரண்மனையில் ஒருவித தளர்ந்த நிலை இருந்தது. வெகுஜனங்கள் வந்தும், பார்த்தும் வியந்தும் சந்தோஷித்த வண்ணம் இருந்தார்கள்.

ஆனால் இப்பொழுது நிலை பெரிதும் மாறிவிட்டது. எல்லாம் தளவாய் அம்பலக்காரனின் புதிய கட்டளையால் வந்த விளை.

எப்பொழுது அத்தனைக் கூட்டத்திலும் மேலேறி ஒருவன் வந்து கிழவன் சேதுபதி அவர்களையே கொல்லப் பார்க்கும் ஒரு நிலை வந்து விட்டதோ, இனி அரண்மனை ராணுவக் கட்டுக்கோப்புடன் இருந்தால்தான் கடைத்தேற முடியும் என்பது அம்பலக்காரனின் முடிவாகிவிட்டது.

சாதாரணமாய் ஊழியங்காப்பாளிகள் பெருக்கல் மறிப்போடு நிற்பார்கள். இல்லாவிட்டால் பாரா போய் வருவார்கள். சாவடிக் கூண்டுகளிலும் கண்காணிப்பு பலமாக இருக்கும். ஒரு மணிக்கொரு கட்டுமணிச் சப்தம் கேட்கும். அப்போது மட்டும் குதிரைப்படையைச் சேர்ந்த யாராவது சிலர் அரண்மனையைச் சுற்றி ஒரு வீச்சு வந்து விட்டுப் போவார்கள்.

இன்று எல்லா விஷயத்திலுமே இறுக்கம்.

ஊழியர்களுக்காக வரும் அன்னவண்டிக்குக் கூட அம்பாரமாய்த் துளையிடும் பார்வை பார்த்த பிறகே அனுமதி.

இப்படி ஒரு நிலையில் சத்யநாராயணனும், கிருஷ்ணாவும் எப்படி உள்ளே நுழையப் போகிறார்கள்?

சத்யநாராயணன் முகப்பில் கேள்வியோடு கிருஷ்ணாவைப் பார்த்தான். அவன் கையில் பட்டு வஸ்திரங்கள். அதைப் பருத்தித் துணியால் சுற்றிப் பாங்காகக் கட்டியிருந்தான்.

அவனை வாயில் காப்பவனுக்கும் தெரியும்.

எனவே நுழைவாயிலில் பெரிதாக மறிப்பு இல்லை.

"வாலே- அரண்மனைக்குப் பட்டா?" என்ற கேள்வியோடு உள்ளே விட்டுவிட்டான்.

உள்ளே நுழையும் கிருஷ்ணா முகத்தில் மட்டும் ஆச்சரியம் பிளந்து கட்ட ஆரம்பிக்கிறது.

"என்னடா அப்படிப் பாக்கறே-? அரண்மனை முகப்பே உனக்குத் திகைப்பைத் தருதா?"- இது சத்யநாராயணன்.

"ஆமாம் சத்யா- சும்மா சொல்லக்கூடாது உங்க கிழவரை- ஒரு பெரிய சாம்ராஜ்யக் கனவோடதான் இதைக் கட்டியிருக்கார்."

"கிழவர்னு பேரைச் சொல்லாதே. காப்பாளிகள் காதுல விழுந்தால் கொன்னுடுவாங்க- அரசர்னு சொல்லு."

"பலே- பலே-"

"என்ன பலே? பேசாம வா- விளையாட்டா எதையாவது பண்ணி வைக்காதே. எங்க பாரு பாரா உஷாரா இருக்கு-"

"அரண்மனைன்னாலே அப்படித்தான் இருக்கும். அதுக்காக நாம அசந்துடக்கூடாது. எங்க தஞ்சாவூர் அரண்மனைகூட இப்படித்தான். ஆனா இப்படி ஒரு இறுக்கம் கிடையாது.

"உங்க தஞ்சாவூர் அரண்மனையா- நீ எப்ப அங்கல்லாம் போனே?"

"அது- அது-"- கிருஷ்ணா லேசாகத் தடுமாறும்போதே கோட்டை வாயிலில் உள்ள இரண்டு வீரர்கள் சத்யநாராயணனைப் பார்த்துவிட்டுப் பெருக்கல் மறிப்பினைப் போட்டார்கள்.

சத்யநாராயணன் கவனம் அந்த மறிப்பால் சற்று மாற, கிருஷ்ணாவும் பேசுவதை விட்டு விட்டு அவர்களைக் கவனித்தான்.



"நான் பட்டு கொண்டு வந்திருக்கிறேன். அடப்பத்தைப் பார்க்க வேண்டும்" என்றான்.

"அப்படி அந்தக் கொட்டாரத்தில் போய்க் காத்திரு. உள்ளே தகவல் தந்து அனுமதி கிடைத்தால் அனுமதிக்கிறோம்."

"நான்- நான் வழக்கமாக வருபவன். இது அடப்பம் ஏற்கெனவே கேட்டிருந்த பட்டு. விருந்தாளிகளுக்கு என விசேஷமாக நெய்தது."

"எதுவாக இருந்தாலும் அனுமதி கிடைத்தால்தான் உள்ளே விட முடியும். ஆமாம் இது யார் புதிதாக-?"

"இவன்- இவன் என் உறவினன்-"

"இத்தனை நாளாய்ப் பார்த்ததில்லையே-?"

"அது- அது- இவன் மதுரையில் இவ்வளவு நாள் இருந்து விட்டு இப்பொழுதுதான் வந்திருக்கிறான்."

"ஓ- மதுரைக்காரனா? அப்படியானால் எச்சரிக்கையாகத்தான் இருக்க வேண்டும். அனுமதியும் உன் ஒருவனுக்குத்தான்."

- காப்பாளிகளின் பதிலில் கொஞ்சம்போலத் தினவு. கிருஷ்ணாவை அதன் காரணமாக சத்யநாராயணன் ஒரு மாதிரிப் பார்க்க, கிருஷ்ணாவே பேசத் தொடங்கினான்.

"மதுரையில் இருந்து வருகிறவர்களுக்கு வந்தனோபசாரம் பலமாக இருக்கும். இந்நாடும் இப்பொழுது நல்ல அன்யோன்யத்தோடு இருப்பதாகக் கூறினாயே சத்யா-"

உண்மையிலேயே சத்யநாராயணன் அப்படி எல்லாம் கூறவே இல்லை. அதனால் சத்யா கொஞ்சம் போலத் திகைக்க, காப்பாளி அதைக் கேட்டு அதிர்ந்தான்.

"ஏதேது- வாயாடுவாய் போலத் தெரிகிறதே? வந்தனோபசாரமெல்லாம் அங்கிருந்து ராஜாங்க விஷயமாய் வருபவர்களுக்குத்தான்- வருவோர் போவோர்க்கெல்லாம் இல்லை."

"அப்படியானால் அந்த நாட்டுப் பிரஜைகளைப் பொருத்தவரை பழைய நிலையே நீடிப்பதாக எடுத்துக் கொள்ள வேண்டியதுதானா...? நான் அப்பொழுதே சொன்னேனே சத்யா? நீதான் எங்கள் அரண்மனையைப் பார்த்தால் அசந்து போவாய் அப்படி இப்படி என்று பெருமை பீற்றிக் கொண்டாய். இப்பொழுது பார்த்தாயா?"

— கிருஷ்ணா சளைக்காமல் பேசிக் காப்பாளிகளை மேலும் அதிரவிட அவர்கள் முகத்தில் ஆச்சரியமும் அதிர்ச்சியும் கட்டிப் புரள ஆரம்பித்தது.

அது மேலும் அதிகரிப்பது போல உள்ளிருந்து இருவருக்குமாகவே அனுமதி தரும்படித் தகவல் வரவும் அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

'சத்யநாராயணன் ஒருவன் வந்திருப்பதாகத்தானே கூறினோம். எப்படி இரண்டு பேர் என்று தெரிந்து அழைப்பு வந்தது?' அவர்கள் விழிக்க கிருஷ்ணா அவர்களைப் பார்த்துச் சிரித்தபடி உள்ளே நுழையலானான்.

"கிருஷ்ணா நீ அதிர்ஷ்டக்காரன்டா. உன் வாய்க்குப் பயந்து கொண்டே உள்ளே விட்டு விட்டார்கள் பார்த்தாயா...?" என்று சத்யநாராயணனும் புளகாங்கிதப்பட்டுப் போனான்.

கிருஷ்ணாவின் காதில் அதெல்லாம் விழவில்லை. சுற்றிச் சுற்றிப் பார்த்தபடியே நடந்தான்.

கணக்காயர் அறையை ஒட்டி அடப்பம் நின்று கொண்டு யாரோடோ பேசிக் கொண்டிருந்தார்கள். சத்யாவையும் கிருஷ்ணாவையும் பார்த்துவிட்டுத் திரும்பினார்.

சத்யா தலையைச் சரித்து அடப்பத்தைப் பார்த்து வணங்கினான். அடப்பமோ அதைப் பாராதபடி கிருஷ்ணாவையே பார்க்கத் தொடங்கினார். கிருஷ்ணாவும் அடப்பம் பார்ப்பதை உணர்ந்து கைகளைக் குவித்து வணங்கினான்.

"என்ன தம்பி? நமது பட்டு நெசவாளருக்கு உறவா நீ?"



— அடப்பம் கேட்க கிருஷ்ணா ஆமோதித்தான்.

"ஆமாங்க... இவன் பேர் கிருஷ்ணா, என் உறவினன். மதுரையில் இருந்து வந்திருக்கிறான். இனி இங்குதான் இருப்பான்."

"அப்படியா... கைகூப்பி வணங்குகிற விதத்தைப் பார்த்தால் தஞ்சாவூர்க்காரனோ என்று நினைத்தேன்."

— அடப்பம் கேட்ட விதத்தில் கொஞ்சம் ரகசியத் தன்மை கிருஷ்ணாவுக்கும் சுரீர் என்றது.

"அது எப்படிங்க... வணங்குவது கூட ஊருக்கு ஊர் மாறுபடும்?" கிருஷ்ணாவும் விடாது சமாளிக்க முனைந்தான்.

"தலைமுடி திருத்துவதில் இருந்து, உடை உடுத்துவதில் இருந்து, மீசையைத் திருத்தமாக வைத்துக் கொள்வது வரை ஒவ்வொரு நாட்டுக்கும் வித்தியாசம் இருக்கே தம்பி..."

— அடப்பம் பதிலளித்த கையோடு, "யாரங்கே?" என்று கேட்டுக் கைதட்ட இரு காவலர்கள் வந்து நின்றனர்.

"இந்தத் தம்பிக்கு நம் அரண்மனை மொத்தத்தையும் சுற்றிக் காட்டுங்கள். சத்யா நீயும் உடன் போய்விட்டு வா" என்று அடப்பம் கட்டளையிட சத்யநாராயணனுக்கு வியர்த்து விட்டது.

"ஐயா... இவனுக்கு அரண்மனையைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்பது ஆசை. அது இவன் சொல்லாமலே உங்களுக்கு எப்படித் தெரிந்தது?"

— தயங்கித் தயங்கிக் கேட்டான். அடப்பம் பதில் சொல்லவில்லை. சிரித்தார். கிருஷ்ணா அந்தச் சிரிப்பில் ஏகப்பட்ட பொருள் இருப்பதைப் புரிந்து கொண்டான். காவலர்களோடு அரண்மனையைச் சுற்றி வரவும் காலெடுத்தான். சத்யா கொண்டு வந்த பட்டைக் கணக்காயர் அறையிலிருந்து வந்த கஜானா ஊழியர் ஒருவர் பெற்றுக் கொண்டு உள்ளே சென்று விட்டார்.

சத்யநாராயணனும், கிருஷ்ணாவும் மொத்த அரண்மனையையும் சுற்றிவரத் தொடங்கினார்கள். கிருஷ்ணாவிடம் வரும்போது இருந்த உற்சாகமும் மதர்ப்பும் இப்போது இல்லை.

நல்ல திடமான கோச்சு வண்டியில் முன்னும்பின்னுமாக அரண்மனைக் காவலர்கள் சிலரோடும், பட்டயக்காரர், குறிப்பேட்டுக்காரர் மற்றும் கஜானாவைச் சேர்ந்த மூத்த ஊழியர்கள் சிலரோடும் குமாரபிள்ளை பாளையப் பகுதிக்கான விஜயத்தைத் தொடங்கிவிட்டிருந்தார்.

அரண்மனை மறுபாகத்தில் இருந்து புறப்பட்டுவிட்ட அந்த விஜயத்துக்கான கட்டியக்குரல் அரண்மனையைச் சுற்றிவரும் கிருஷ்ணா, சத்யா காதுகளிலும் விழவே செய்தது.

"ராஜாதிராஜர், ராஜமார்த்தாண்டர், சேதுபுரக் காவலர் பரராஜகேசரி ஸ்ரீமான் கிழவன் சேதுபதி ராஜாவின் அத்யந்த தளவாய் மதுரை யுத்த ஜெயவீரர் மல்லாண்ட தளவாய் குமார பிள்ளை அவர்களின் பாளையப்பாட்டு விஜயம் பராக்..." என்கிற அந்தக் குரல் மெலியத் தேய்ந்து காதில் விழ திபுதிபு வென்னும் குதிரைக் குளம்படிச் சப்தமும் தொடர்ந்து கேட்கத் தொடங்கியது.

கிருஷ்ணா அர்த்தப் புஷ்டியோடு சத்யநாராயணனைப் பார்த்தான்.

"என்ன பாக்கறே... எங்க தளவாய் ராஜாங்க விஷயமா எங்கேயோ கிளம்பிட்டார். அதான் கட்டியம் கேட்குது. கொஞ்சம் முந்தி வந்திருந்தா அவர் புறப்பட்டுப் போறதையே பார்த்துருக்கலாம்" என்று கொஞ்சம் இறுமாப்போடும் பேசினான் சத்யா.

"அவர் எங்கையோ போகலை... பாளையங்களுக்கு விஜயம் செய்யப் போறார். எல்லாரையும் பார்த்துக் கப்பமெல்லாம் வசூலிக்கணுமே..."

"கப்பமா... என்னடா சொல்றே?"



"உனக்கு நெசவைத் தவிர வேறென்ன தெரியும்? இதெல்லாம் ராஜாங்க விஷயங்கள்."

"ஆமா நீ பெரிய ராஜாங்க வேலைக்காரன் பாரு. ஏதோ உன் அதிர்ஷ்டம் இன்னிக்கு அரண்மனையைப் பாக்கற வாய்ப்பு வந்திருக்கு..."

"அது சரி... உங்க படையெல்லாம் எங்க இருக்கும்?"

"யாருக்குத் தெரியும்? அது அதுக்கு மைதானம் இருக்கு. ஆமா, இதையெல்லாம் எதுக்குக் கேக்கறே...?"

"ஒரு அரசாங்கத்துக்கு அரண்மனையைவிட அதன் படை பலம்தான் பெரிசு. அதை வெச்சுத்தானே அந்த அரசாங்கத் தோட எதிர்காலத்தையே நிர்ணயம் செய்யறோம்."

"கிருஷ்ணா உனக்குப் பல விஷயங்கள் தெரிஞ்சிருக்கே பலே... பலே..." — சத்யா அவனைப் பாராட்ட உடன் வந்த காவல் வீரர்களில் ஒருவன் நைச்சியமாக, "படைக் கொட்டாரத் திற்குச் செல்ல வேண்டுமா?" என்று கேட்டான். கிருஷ்ணாவையே அந்தக் கேள்வி ஒரு ஆட்டு ஆட்டியது.

"படைக் கொட்டாரத்திற்கெல்லாம் போக முடியுமா... பார்க்க விடுவீர்களா?"

"உங்களுக்கு விருப்பமென்றால் காட்டச் சொல்லி உத்தரவு..."

— இந்தப் பதில் கிருஷ்ணாவைக் கொஞ்சம்போலக் கட்டிப்போட்டது. சத்யநாராயணன் வெகுளியாகக் கேட்டான். "படைக் கொட்டாரத்தில் பார்க்கப் பெரிதாக என்ன இருக்க முடியும்... அங்கே பார்க்க ஒன்றுமேயில்லை" என்றான். கிருஷ்ணாவோ மௌனமாக யோசித்துவிட்டு, "நான் அவசியம் பார்க்க வேண்டும்" என்றான்.

"முதலில் எங்கு செல்லலாம்... தளவாடச் சாலையை ஒட்டியுள்ள காலாட்படை மைதானத்துக்கா... இல்லை பச்சை மைதானத்தை ஒட்டியுள்ள குதிரைப்படைப் பிரிவுக்கா...?"

"இங்கே இரண்டு படைப்பிரிவுகள்தானா?"

"மூன்றாவதாக விசேஷப்படை மைதானம் உண்டு. இங்கு வில்லம்பு, யானை ஏற்றம், சுழிப் பிரயோகம், அக்னிப்பந்துப் பிரயோகம் இதெல்லாம் இருக்கும். பலரும் பயிற்சியில் இருப்பார்கள். அவர்களில் சிலர் உங்களைச் சீண்டவும்கூடும். சண்டைக்கு அழைக்கவும் செய்யலாம். அப்படி அழைத்தால் அவர்களோடு மோதத் தயாராக இருக்க வேண்டும்."

— காவல் வீரன் சாதாரணமாகத்தான் சொன்னான். ஆனால் சத்யநாராயணன் பதறினான். "ஐய்யோ— அதெல்லாம் வேண்டாம். கிருஷ்ணா, நாம் அரண்மனையை மட்டும் பார்த்துவிட்டுப் போய்விடலாம்" என்றான்.

கிருஷ்ணா முகத்தில் ஏகத்துக்கும் ஆச்சரியம். என்ன நினைத்தானோ— "சரி உன் இஷ்டம்—" என்று கூறிவிட்டு அரண்மனையை மட்டும் சுற்றிவரத் தொடங்கினான்.

ஆனால் உள்மனதோ வேறு கணக்கைப் போடத் தொடங்கியிருந்தது.

'தான் யார் என்பது தெரிந்துவிட்டதோ—? இல்லை நிஜமாலுமே சாதாரணமாகத்தான இங்கு எல்லாம் நடக்கிறதா—'

கேள்விகள் உள்ளோட மொத்த அலங்கங்களையும் மாடங்களையும் கொட்டாரங்களையும் பார்த்து முடித்துவிட்டு, அப்படியே சவுக்கைப் பகுதிக்கு வந்தபோது அடப்பம் காத்துக் கொண்டிருந்தார்.

"என்ன எல்லா இடங்களையும் பார்த்து முடித்துவிட்டீர்களா—?" விதரணையாகக் கேட்டார்.

"ஆஹா— எல்லாவற்றையும் பார்த்தேன். அற்புதம். அரசவை கூடும் அழகைத்தான் பார்க்கக் கொடுத்து வைத்திருக்கவில்லை எனக்கு—" என்றான் கிருஷ்ணா.



"அதற்கென்ன— அதையும் ஒருநாள் பார்த்தால் போயிற்று. இப்பொழுது தாங்கள் விரும்பினால் அரசரையும்கூடப் பார்க்கலாம்—"

"அரசரையா—?" அதிர்ந்தான் சத்யா.

"ஆமாம்— அவரிடம் உங்கள் வெள்ளந்தியான ஆசையைச் சொன்னேன். பார்க்கலாமே என்றார்."

"நாங்கள் அரசரைப் பார்க்க வேண்டும் என்றெல்லாம் சொல்லவேயில்லையே—"— சத்யா தொடர்ந்து நடுங்காத குறையாகச் சொன்னான்.

"சொன்னால்தானா— உங்கள் மனத்தில், குறிப்பாக இந்த இளைஞன் மனத்தில் அந்த ஆசை இருப்பதுதான் பளிச்சென்று தெரிகிறதே—"

— அடப்பத்தின் வனைப்பு கிருஷ்ணாவை ஒரு க்ஷணம் உலுக்கியே விட்டது. அவன் தொடர்ந்து சிந்திக்க இடம் கொடுக்காதபடி, "வாருங்கள் போகலாம்—" என்று அழைத்தார். சத்யநாராயணன் தங்கி நின்றான்.

"என்ன தயக்கம்?"

"அரசர் பிரானைப் பார்ப்பது என்றால்— எனக்குப் பிரமிப்பாக இருக்கிறது. அவரை நேருக்குநேர் பார்க்க எனக்குத் தைரியமில்லை."

— அடப்பம் அதைக் கேட்டுச் சிரித்தார். பின், "சத்யா— உனக்கு வேண்டுமானால் தைரியமில்லாமல் இருக்கலாம். ஆனால் இந்த இளைஞன் தயாராக இருக்கிற மாதிரிதான் தெரிகிறது. என்ன தம்பி— நான் சொல்வது சரிதானே?"

கிருஷ்ணாவும் அதைக் கேட்டு மென்று விழுங்கினான். உள்ளுணர்வு, மாட்டிக்கொள்ளப் போகிறாய் என்றது. இருந்தும் வீர உணர்ச்சி, 'இப்பொழுது பின்வாங்குவது அழகல்ல—' என்றது.

"சரி நான் வருகிறேன்_" என்றான். அடப்பத்தோடு புறப்பட்டான். சத்யநாராயணன் அங்கேயே தேங்கி நின்று விட்டான்.

"கிருஷ்ணா பார்த்து– அவரிடம் வாய்த்துடுக்காக எதை யாவது பேசிவிடாதே_"– அவன் உதட்டில் முணங்கல்.

அரண்மனையின் அந்தப்புரத்து மாடப் பகுதி. உச்சத்தில் பட்டுத் துணியால் வேய்ந்த பங்காத்திண்டு மெலிதாக ஆடிய படிக் காற்றை உசாவி விட்டுக் கொண்டிருக்க, கீழே ஏதோ ஒரு ஏட்டுக்கட்டைச் சீன தேசத்துக் கண்ணாடிப் பிறைத்துண்டு ஒன்றன் உதவியுடன் பார்த்துக் கொண்டிருந்தார் கிழவன் சேதுபதி.

அடக்கமாக வந்து நிற்கும் அடப்பத்தை நிமிர்ந்து பார்த்தார்.

"எங்கே_ வந்துவிட்டானா அந்த இளைஞன்?"

"வெளியில் நின்று கொண்டிருக்கிறான்."

"உள்ளே அனுப்பு."

– உத்தரவைத் தொடர்ந்து கிருஷ்ணா உள்ளே நுழைய, கிழவரிடம் உற்சாகமான வரவேற்பு.

"வரவேண்டும் ராஷ்ட்ரீய இளைஞனே வரவேண்டும். எப்படி இருக்கிறார் உங்கள் வெங்கோஜி மன்னர்? நலமாக இருக்கிறாரா_?"

– கிழவனின் கேள்வி கிருஷ்ணாவைப் பொட்டில் அடித்துச் சாய்த்ததுபோல் இருந்தது.

# 45

கிருஷ்ணாவின் முகத்தில் அதிர்ச்சி பரவியபோதும் அந்த வீரன் அதனால் குலைந்தது போலக் காட்டிக் கொள்ளாதபடி, "மிகுந்த நலம் அரசர்பிரான் அவர்களே_ எங்கள் வெங்கோஜி மிக மிக நலமாக உள்ளார். தங்கள் நலனுக்குத்தான் அடிக்கடி ஊறுவந்து கொண்டே இருக்கிறாற் போலத் தெரிகிறதே?"

– என்று பதறாமல் சிதறாமல், தன்னைச் சேதுபதி உணர்ந்து கொண்டதன் நிமித்தம் தான் தண்டிக்கப்படுவோம் என்கிற பயமும் கொள்ளாமல் கிருஷ்ணா மறுமொழி பகன்ற விதத்தில் அவன் ஒற்று இலக்கணம் மட்டுமல்ல, நெருக்கடி யான காலகட்டங்களில் நெஞ்சை எப்படி நிமிர்த்திக் கொள்வது என்பது தெரிந்த ஒருவனாகவே சேதுபதி முன் தோற்றமளித்தான். சேதுபதியும் அதன் காரணமான ஆச்சரியப் பார்வையை அவனை நோக்கிச் செலுத்தத் தவறவில்லை. அப்படியே பதிலும்...

"அரசர்கள் சிரத்தின்மேல் பார்க்கும்படியாகக் கிரீடம் இருக்கும். பார்க்க முடியாதபடி எப்பொழுதும் ஒரு கத்தி அதற்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கும். அது ஒரு சாபக் கேடான விஷயம். என் வரையில் நாட்டுக்கு வெளியே எவ்வளவோ எதிரிகள் என்றால் உள்ளே சிலர்_ அனைவரை யும் சமாளித்தால்தானே நான் அரசன்_?"

"நானும் உங்களை அரசன் என்றுதான் எண்ணிக் கொண் டிருந்தேன். ஆனால் இப்பொழுது உங்களோடு பேசிக் கொண் டிருக்கும் இந்த நொடியில் என் கருத்து மாறிவிட்டது."– கிருஷ்ணா புதிர்போட, கிழவன் சேதுபதியின் முகத்தில் சற்றே

சலன ரேகைகளும் பரவ, கிருஷ்ணாவே சிரித்தபடித் தொடர்ந்தான்.

"நீங்கள் அரசராக மட்டுமன்றி அதற்கு மேலும் ஒரு படி கூடுதலாகவும் எனக்குத் தெரிகிறீர்கள். அரசர் எனும் பதம் மதுரை மன்னர் சொக்கநாத நாயக்கருக்கும் பொதுவானது. எங்கள் தஞ்சை மன்னர் வெங்கோஜிக்கும் பொதுவானது. அந்தப் பொதுப்பெயரால் உங்களை விளிப்பதில் எனக்கு உடன்பாடு இல்லை. வேண்டுமானால் உங்களை அரசர்க்கு அரசர் என்று கூறலாம். இது தெரிந்துதானோ என்னவோ மதுரை மன்னர் உங்களுக்குப் பரராஜகேசரி பட்டம் அளித்திருக்கிறார்."

— கிருஷ்ணா திருஷ்டாந்தமாகப் பேசப் பேசக் கிழவனிடம் வியப்பின் விரிவு. கூடவே மணி கொட்டியது போல ஒரு சிரிப்பு.

"பலே— பலே— நன்றாகப் பேசவும் தெரிந்திருக்கிறதே உனக்கு. பலே பலே..." என்றார்.

"ஆமாம். என் மேல் உங்களுக்குக் கோபம் ஏதுமில்லையா?"

"கோபமா— உன் மேலா?"

"ஆம். நான் தஞ்சை ஒற்றன். இந்த மண்ணிற்கு உறவினரைப் பார்க்க மட்டும் நான் வரவில்லை. உங்கள் ஆட்சியின் மாட்சி, மக்களின் எண்ணம், இங்குள்ள குழப்பங்கள் என்று சகலத்தையும் அறிய வந்த ஒருவன்..."

"நீ இங்கு வந்ததில் எனக்கு மகிழ்ச்சிதான். அதை விடப் பெரிய மகிழ்ச்சி நீ இப்படி உண்மை பேசுவது..."

"மானம் காக்கும் ஆடை வனைவது, மாறாத உண்மைக்கும் சத்தியத்துக்கும் கட்டுப்பட்டு நடப்பது, வேறு எதற்கும் அஞ்சாமல் வாழ்வது என்பதே எங்கள் பெரியவர்கள் எங்களுக்குக் கற்றுத் தந்த பண்புகளாகும்."



"அதனால்தான் உன்னை நான் அறிந்த நிலையிலும் அஞ்சாமல் என்னுடன் உன்னால் நினைப்பதைப் பேச முடிகிறதோ?"

"உண்மைதான் அரசர்பிரான் அவர்களே— அதேசமயம் எப்படி என்பால் கோபமோ குரோதமோ கொள்ளாமல் இருக்கிறீர்கள் என்பது எனக்கு இப்பொழுதும் வியப்பாக இருக்கிறது."

"எய்தவனிருக்க அம்புகளை நொந்து கொள்பவன் நானில்லை தம்பி. முடிந்தால் அந்த அம்பை நான் திரும்ப எய்து 'தன்வினை தன்னைச் சுடும்' என்பதை நிருபிக்க முயலுவேன்."

— கிழவனின் பதில் கிருஷ்ணாவைச் சற்றே யோசிக்கச் செய்ய அதற்கான சிந்தனையோடு கிழவனைப் பார்த்தான்.

"என்ன பார்க்கிறாய்? உன்னை எப்படி நான் திரும்பச் செலுத்தப் போகிறேன் என்றா?"

"ஆமாம்... அதே சமயம் அது சாத்தியமில்லை என்பதையும் மிகப் பணிவோடு உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்."

"என்ன தம்பி— உன் விஸ்வாசம் உன்னை இப்படிப் பேச வைக்கிறதோ?"

"ஆம். விஸ்வாசபங்கம் எனக்கோ என் மக்களுக்கோ தெரியாத ஒன்று."

"அரசியலில் அதற்குச் சாதுர்யம் என்று இன்னொரு பேர் உண்டு. அது தெரியுமா உனக்கு?"

"என் வரையில் நான் அரசியல் செய்பவனில்லை. அரசியலாரிடம் கடமையாற்றுபவன். அந்தக் கடமையைக் குந்தகமின்றி நிறைவேற்ற வேண்டும். அதுதான் என் விருப்பம்."

"பலே... சிறிய வயது. ஆனால் தெளிவான புத்தி. உன்னைப் பாராட்டுகிறேன். சரி உன் பார்வையில் சேதுநாடு எப்படி இருக்கிறது?"

"விமர்சனம் செய்யச் சொல்கிறீர்களா?"

"ஆம். அப்படித்தான் வைத்துக் கொள்ளேன்."

"ஒரு ஒற்றனாக அது என் வேலையில்லை. இருந்தும் ஒரு மனிதனாகக் கூறுகிறேன். உண்மையில் எனக்குப் பிரமிப்பைத் தந்திருக்கிறது. சில கற்பனைக் கதைகளில் ஒரே மடுவில் புலியும் பசுவும் நீர் அருந்தி ஒற்றுமையோடு வாழ்ந்திருந்தன என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அதை இந்த மண்ணில் கண்கூடாகப் பார்க்கிறேன்.

ஒரு பாளையம் ஒரு நாடானது உண்மையில் விந்தை. அந்த நாடு பிற நகரங்களுக்குச் சவால் விடுவது போலப் பெருநகரமாகிக் கொண்டிருப்பது அதனிலும் விந்தை."

"நல்லது... இங்கே எந்த மடுவில் புலியும் பசுவும் நீரருந்தி நீ பார்த்தாய்?"

"அது உவமானம் அரசே... புலியும் பசுவும் இன்று மனித மனங்களில் அல்லவா இருக்கின்றன. அந்த மனித மனங்கள் இந்தச் சேதுமண்ணில் ஒன்றுபட்டு வாழ்வதைப் பார்த்திருக்கிறேன். எல்லாவிதமான தொழில் முயற்சிகளும் இங்கே நடப்பது எனக்கு வியப்பிலும் வியப்பு.

ஒருமுறை சந்தைப் பக்கம் போய் வந்தேன். சீனத்துப் பட்டும் கிடைக்கிறது. எங்கள் ராஷ்ட்ரீயர்களின் வெண்பட்டும் கிடைக்கிறது. கண்ணாடிப் பொருள்கள் அபூர்வமாகவே விலைக்கு வருபவை. அவை இங்கே அன்றாடமும் கிடைப்பது பெரிய ஆச்சரியம்..."

"எல்லாம் மரக்காயப் பெருமக்களின் வர்த்தகத்தால் நிகழ்பவை..."



"உண்மைதான். வானம் பார்த்த பூமி இது. ஆனால் இங்கே மூன்று போகத்திற்கு முயற்சி நடப்பதே பெரிய விஷயம். பேராச்சரியம் புகையிலையை இங்கே நீங்கள் விளைவிப்பது தான்..."

"அப்படியானால் முடியாததெல்லாம் முடிந்திருக்கிறது இங்கே... அப்படித்தானே?"

"அதில் சந்தேகமில்லை. மத ஒற்றுமை, இறை விசுவாசம், கடின உழைப்பு, வெற்றிச் சுடரொளி என்று அனைத்தையும் இங்கே பார்க்கிறேன்."

"இதெல்லாம் எதனால் என்று நினைக்கிறாய்?"

"இது என்ன கேள்வி? எல்லாம் தங்களால்தான்!

"இல்லை தம்பி. நான் இங்கே ஒரு கருவி. என் மூலமாக இங்கே அந்த இறைவன்தான் இவைகளைச் செய்கிறான்.

வடக்கில் ஒரு காசி. அது போலத் தெற்குக்கு ஒரு ராமேஸ்வரம். பாவம் போக்குவதற்காக இறைவன் அளித்த நன்கொடை இந்த மண். இந்தக் கொடையைப் பாதுகாக்க வேண்டும். அதுதான் இப்பொழுது என் ஒரே நோக்கம்."

"நிச்சயமாக அதற்கு ஊறு வரவே வராது. எங்கள் அரசர்க்கு நிச்சயமாகச் சேது மண்ணைக் கொள்ளை கொள்ளும் எண்ணம் எல்லாம் இல்லை."

"என்றால் நீ நோட்டம் போட வந்த காரணம்?"

"உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டதன் பிரமிப்பு. அதை ஊர்ஜிதம் செய்து கொள்வதுதான் எங்கள் அரசின் நோக்கம்."

"நிச்சயமாக அவ்வளவுதானா?"

"இன்றைய தினம் இன்றைய பொழுதுக்குச் சத்தியமாகவும் அவ்வளவுதான். ராஜ்ய பரிபாலனம் பற்றி நான் சேது மண்ணில் கண்டதை அப்படியே எங்கள் அரசரிடம் கூறுவேன். வரிச்சுமை இல்லாத, பாதுகாப்பான ஒரு

அரசாங்கத்தை மக்கள் உணர்வதுதான் ஒரு அரசுக்கு மிக முக்கியம். அது இங்கே இருக்கிறது. தஞ்சைக்கும் அது வர வேண்டும்."

"அப்படியானால் இப்பொழுது அப்படி ஒரு நிலை அங்கே இல்லை என்று சொல்."

"ஆம். உழுது பயிரிட்டு அறுவடை செய்வதில் சரி பாதிக்கும் மேல் அரசாங்கக் கிட்டங்கிக்குப் போய்விடுகிறதே. மஹாராஷ்டிராகளுக்குத் தனிச் சலுகை. மற்றவர்களுக்கு ஒரு விதமான போக்கு என்று சற்றே பாரபட்சம் இருக்கிறதே..."

"எல்லாம் சரி... நீ ஒற்றனா? இல்லை சிந்தனையாளனா?"

"இரண்டும் கலந்த மனிதன்."

"இந்த மனிதன் மதுரையைப் பற்றி என்ன நினைக்கிறான்?"

"தங்களுக்குத் தெரியாததையா நான் கூறப்போகிறேன்?"

"தெரிந்ததாகவே அது இருந்தாலும் நீ ஒரு முறை சொல்லும் போது எனக்குத் தெரிந்தது சரியானதுதான் என்கிற ஊர்ஜிதம் ஏற்படுமல்லவா?"

"நல்லது... மதுரை இந்த நொடிப்பொழுது மகத்தான உருமாற்றம் பெறத் தொடங்கிவிட்டது. அன்னை மீனாட்சியின் பெருங்கருணை என்றும் அந்த மண்ணின் மேல் இருப்பதால் எதிர்காலத்திலும் வரலாறு படைக்கும்.

விஜயநகரப் பேரரசின் கிளைகளாக வந்த நாயக்கர்கள் மதுரை நவீனப்பட பெரிய காரணமாக இருக்கிறார்கள்.

ஒரு திருமலை நாயக்கர் மகால் போதுமே... காலகாலத்துக்கும் அவர்களின் செல்வச் சிறப்பையும் ஆட்சியின் மாட்சிமையையும் எடுத்துக்கூற..."

— கிருஷ்ணா அங்கு தொட்டு இங்கு தொட்டு மகாலைப் பற்றிக் கூறவும் கிழவனின் முகத்தில் சற்றே வருத்தச் சுருக்கங்கள்...



"என்ன அரசே? நான் கூறும் உண்மை தங்களுக்குக் கசப்பது போலத் தெரிகிறதே?"

"இல்லை தம்பி... என்னுள் அது நெருப்பைத்தான் மூட்டுகிறது. ஒரு இராமலிங்க விலாசம் உனக்குப் போதாது என்று அது சொல்லாமல் சொல்கிறது..."

"இந்த நெருப்பு மேலும் பற்றி எரியட்டும். இதனால் இந்த மண்ணில் நிச்சயம் பல அற்புதங்கள் நிகழும். கட்டடங்கள்தான் பெயர் சொல்ல வேண்டும் என்று இல்லை. உங்கள் பெயரைக் காலம் நிச்சயமாகச் சொல்லும்.

எல்லோரும் போகின்ற ஒரு பாதையில் போகின்ற ஒரு அரசராக நீங்கள் இல்லை. அப்படி இருந்திருந்தால் தலைநகர் போகலூர் இராமநாதபுரத்திற்கு இடம் பெயர்ந்திருக்குமா?

இங்கே ஒரு இராமலிங்க விலாசம்தான் ஏற்பட்டிருக்குமா? ஒரு மறவர் சாம்ராஜ்யத்தில் மகத்தான ஒரு இசுலாமியர் அமைச்சராகப் பொறுப்பேற்றிருப்பாரா? எங்கள் பட்டு நூல் கைத்திறம் பரமக்குடியில் தறிபோட்டு, பாகனேரியில் சடை போட்டு இராமநாதபுரம் அரண்மனைக்குள்தான் நுழைந்திருக்குமா?

விளையாத புகையிலையைத்தான் விளைவித்துப் பார்த்திருப்பீரா? ஊருணி, கண்மாய்களில்தான் நீரிருக்குமா? எல்லாம் சாதனைதானே?

இருப்பதில் எடுப்பதில் ஏதுமில்லை. இல்லாததில் இருந்தும் எடுப்பதுதானே சாதனை?"

— கிருஷ்ணா ஒரு தேர்ந்த பிரசங்கியைப் போலப் பேசியதைக் கேட்டு உச்சி முதல் உள்ளங்கால்வரை சிலிர்த்துவிட்டது கிழவனுக்கு.

"பலே... பலே தம்பி பலே... நீ தேர்ந்த உளவாளி மட்டுமல்ல, நாவுக்கும் அரசன். என்னையே மயக்கிவிட்டது உன் பேச்சு. உன்னைப் போல மூன்றாவது கண் கொண்டு பார்க்க

முடிந்த உளவாளிகள் இருந்து விட்டால் நாட்டுக்கு நாடு சேதம் ஏற்படாது. சிநேகம்தான் ஏற்படும். உன் வெங்கோஜி உண்மையில் கொடுத்து வைத்தவன். அவனையும் வாழ்த்துகிறேன். உன்னையும் வாழ்த்துகிறேன். எங்கள் அவைப் புலவர்கள் தோற்றுவிக்காத மகிழ்ச்சியை நீ எனக்கு அளித்துவிட்டாய். உனக்கு என்ன வேண்டும் கேள்..."

"ஒன்றுதான்..."

"என்ன...?"

"மதுரையோடான உங்கள் நட்பும் அன்பும் என்றும் தொடர வேண்டும்."

"இரண்டுமே ஒரு வழிப் பாதையல்ல என்பது உனக்குத் தெரியும்தானே?"

"நன்றாகத் தெரியும். தெரிந்துதான் கூறுகிறேன்."

"இதை மங்கம்மாளிடம் போய் நீ கூறுவதுதான் சாலச் சிறந்தது. ஆமாம் மதுரை மேல் இத்தனை காதல் கொண்டு பேசுகிறாயே... நீ தஞ்சையின் உளவாளியா? இல்லை மதுரையின் உளவாளியா?"

"நான் தஞ்சைக்காரன்தான். இதை நான் காரணம் இல்லாமலும் கூறவில்லை."

"வாரே வா... இப்பொழுதுதான் நீ ஒற்றன் என்பதற்கேற்ப எனக்கான விஷயத்திற்கு வந்திருக்கிறாய். என்ன அது?"

"மதுரை இதுநாள் வரை ஒரு உள்நாட்டுக் குழப்பத்தில் இருந்தது. இப்பொழுது அதன்மேல் மைசூர்க்காரர்கள் பார்வை விழுந்திருக்கிறது. அவர்கள் எப்பொழுது வேண்டுமானாலும் மதுரையைப் பிடிக்க முயலலாம். மதுரை வசப்பட்டால் திருச்சியும் வசப்பட்டுவிடும். பக்கத்தில்தானே இருக்கிறது தஞ்சை? அந்தப் பயம்தான் எனக்கு..."

— கிருஷ்ணா மைசூர் பற்றிச் சொன்ன நொடி கிழவன் முகத்தில் அதீத கூர்மை.



"என்ன பார்க்கிறீர்கள் அரசே...? இது என் யூகம். உங்கள் நட்பு இருப்பதால்தான் மைசூர்க்காரர் தற்சமயம் தயங்கிக் கொண்டிருக்கிறார். இல்லாவிட்டால் பெரும்படையுடன் வந்து நீங்கள் செய்ய நினைத்த உதவியைச் செய்வதுபோல் செய்து மதுரையைத் தன் வசப்படுத்திக் கொண்டிருப்பார்கள்."

— கிருஷ்ணாவுக்குள் ஒரு அமைச்சனும் இருந்து கொண்டு பேசினான். கிழவன் அதைக் கேட்டுச் சிரித்து விட்டு "இது தெரிந்துதானே நான் முந்திக் கொண்டேன். அது தெரியுமா உனக்கு?" என்று எதிர்க் கேள்வி கேட்கவும் கிருஷ்ணா திக்கு முக்காடிப் போனான்.

கிழவனிடம் அதன் எதிரொலியாய்ப் பெருஞ்சிரிப்பு. ராமலிங்க விலாசச் சவுக்கைப் பகுதியே அதிரும் சிரிப்பு. அந்தச் சிரிப்பு நிற்கவும் கிருஷ்ணா மென்மையான குரலில் கேட்டான்.

"அரசே உங்களுக்கு எத்தனை கண்கள்? எத்தனை காதுகள்? எத்தனை கைகள்? நீங்கள் ஒருவரா? இல்லை ஆயிரமவரா...?"

— அவன் சரியாகத்தான் கேட்டான். மீண்டும் இடிச்சிரிப்பு கிழவனிடம்... அந்தச் சிரிப்பும் ஒரு கட்டத்தில் முடிந்து போக, "உனக்கொரு முக்கியச் சேதி. போய் உன் அரசரிடம் சொல். சொக்கநாத நாயக்கர் இருக்கும் வரை அன்பும் நட்பும் தொடரும். அவருக்கு ஒன்றாகும்போது அந்த அன்பும் பாசமும் கூட அறுந்து போய்விடும். அங்கே இருக்கும் சிலர் இப்பொழுதும் மதுரைதான் பெருநகரம். சேது மண் அவர்களின் துணை நகரம் என்பது போன்ற எண்ணத்தில் இருப்பதுதான் காரணம்.

எனவே மிக அதிகபட்சம் இன்னும் இரண்டு வருடத்தில் மீண்டும் யுத்தம் வரும். வந்தே தீரும். அப்பொழுது நான் என்ன செய்வேன் என்பது எனக்கே தெரியாத ரகசியம். இதை மட்டும் போய்ச் சொல் என்ன...?"— கிழவன் கண்களைச்

சிமிட்டியபடிச் சொன்னதைக் கேட்ட கிருஷ்ணா அதன் நிமித்தம் கலங்கித்தான் போனான்.

அவனை அதன்பின் கிழவன் வெறுங்கையுடன் அனுப்ப வில்லை. பொன்னையும் பொருளையும் கொடுத்துத்தான் அனுப்பிவித்தார்.

அவனோ அதை எல்லாம் தன் உறவினரிடமே கொடுத்து விட்டு எப்படி வந்தானோ அப்படியே திரும்பி விட்டான்_

பாளையங்களைப் பார்த்து அதன் நாடித் துடிப்பறியச் சென்று வந்த குமாரபிள்ளையும் உற்ற சேதிகளைக் கொண்டு வந்தார். பாளையக் குழப்பங்கள் தற்காலிகமாக நீங்கி வலுவடையத் தொடங்கின.

கிழவனின் ஆளுமைத் திறம், நாட்டுப்பற்று எல்லாவற்றுக் கும் மேலாக இது இப்படித்தான் ஆகும். இந்த விதை இந்த மரமாகத்தான் வளரும் என்கிற அந்தத் திடமான கணிப்பு எல்லாமாய்க் கிழவனை உயர்த்திக் கொண்டே போக, மதுரை யோடு மைசூர் போர் தொடுக்கும் என்கிற கிருஷ்ணாவின் ஊகத்துக்கும், அதை எதிர்பார்த்திருந்த கிழவனின் எதிர் பார்ப்புக்கும் ஏற்ப 1682-ல் மைசூர்க்காரர்கள் மதுரையோடு மோத நாள் குறித்து விட்டனர். அப்பொழுது மதுரை இருந்த விதமும் விநோதமாகத்தான் இருந்தது–

எப்படி–?

# 46

கி.பி. 1682! வெக்கை தகிக்கும் கோடைக் காலத் துவக்கம்.

சித்திரைத் திருவிழாவின் கலகலப்புக்கு மாமதுரை தயாராகிக் கொண்டிருந்த ஒரு பரபரப்பான மாலைப்



பொழுதில் சித்திரை வீதிகளிலும், மாசி வீதிகளிலும், ஆவணி வீதிகளிலும், ஆடி வீதிகளிலும் ஒரு சேர அறிவிப்பாளர்கள் வரப்போகும் சித்திரைத் திருவிழா எல்லா விதத்திலும் உன்னத மானது. வித்தியாசமானது. அதன் பொருட்டு வண்டியூர் தெப்பக்குளம் அருகிலும், பசுமலையிலும், நாகமலையிலும், யானை மலையிலும் கொடியேற்றங்கள் நிகழ இருக்கின்றன எனும் அறிவிப்பினை எப்பொழுதுமில்லாதபடித் தெருவுக்குத் தெரு அறிவித்துக் கொண்டிருந்தனர்.

உள்ளூருக்குள் அவர்கள் திருவிழா கலகலப்பை மூட்டிய வண்ணமிருக்க பலநூறு தபால் ஊழியர்கள் இராயசங்களின் முடுக்கலில் சுற்றுப்பட்டுப் பாளையங்களுக்கும், ஜமீன்களுக்கும் திருவிழாச்சேதியைச் சுமந்து சென்றபடி இருந்தனர்.

என்னவோ தெரியவில்லை. இந்த முறை திருவிழாவுக்கு ஒரு அதீத முக்கியத்துவம் அளிக்கப்படுகின்ற மாதிரியும், அது ஒரு அரசு நிகழ்ச்சியாகவே ஆகிவிட்ட மாதிரியும் கூடப் பலருக்குத் தோன்றியது.

அது உண்மைதான் என்கிறார்போலச் சொக்கநாத நாயக்கரும் இராயசம் ரத்னசாமிப் பிள்ளையை அழைத்து விசாரித்துக் கொண்டிருந்தார்.

"என்ன இராயசம் திருவிழாத் தகவல் எல்லோருக்கும் போய் விட்டதா?"

"ஆஹா– மொத்தமாக 1664 ஓலைகள். ஒரு முக்கியப்பட்ட வர்கள் பாக்கியில்லை. வீதிகளிலும் அறிவிப்புகள் ஒலிக்கத் தொடங்கி விட்டன. அன்னை மீனாட்சி ஆலயத்திலும் அதற்கான கொடியேற்றம் வெகு விமரிசையாக நடந்து முடிந்து விட்டது. நமது ராணியார் மங்கம்மா தேவி அவர்கள் விழா நிகழ்ச்சியில் முக்கியப் பங்கு வகித்து சிறப்புச் செய் தார்கள்."

"ஒருவருக்குக்கூடச் செய்தி விடுபட்டுவிடக் கூடாது–"

"அதில் கவனமாக இருக்கிறேன் அரசே. இந்த முறை நமது மதுரை மாநகர் எந்நாளும் காணாத ஒரு கூட்டத்தைக் காணப் போகிறது."

"அதுதான் எனக்கும் வேண்டும். இந்தச் சித்திரை மாதம் மதுரையின் கோலாகல மாதம் என்று உலகம் சொல்ல வேண்டும். விழாச் சமயத்தில் பசிக்கிறது என்று ஒரு உயிர் வாடி விடக்கூடாது. எட்டுத் திக்கிலும் அன்னதானங்களும், கலை நிகழ்ச்சிகளும் ஒரு குறையும் இன்றி நடக்க வேண்டும்."

சொக்கநாத நாயக்கர் மிகத் தீவிரமான குரலிலும் மிகப் பெரிய எதிர்பார்ப்போடும் கூறியது இராயசத்துக்கே பெரிய ஆச்சரியமாகிப் போனது. கொஞ்சம் அதிர்ச்சியாகவும் இருந்தது. அது அவர் முகத்திலும் தெரிந்தது.

நாயக்கர் அவர்கள் வைகையாற்றின் நீரோட்டம் குறித்தும் கேட்டார்.

"ஆற்றில் தண்ணீருக்குப் பஞ்சமில்லை தானே?"

"அப்படிச் சொல்ல முடியாது. இந்த முறை பருவமழை அத்தனை செழிப்பாக இல்லை. எனவே வைகையில் வெள்ள மில்லை. கோடையும் சற்று கூடுதலாகவே வாட்டும் போலத் தெரிகிறது."

"அதனாலென்ன? மீனாட்சி ஆலய பட்டருக்கும், அழகர் மலை பட்டருக்கும் சொல்லி அனுப்புங்கள். ஒரு பெரிய வருண ஜெபத்துக்கும், வேள்விக்கும் கூட ஏற்பாடு செய்து விடுவோம்."

எதனாலோ திருவிழாவில் துளிக்கூடப் பின்னங்கள் இருக்கக்கூடாது என்பது போன்ற எதிர்பார்ப்பில் சொக்க நாதர் பேசினார். போன ஆண்டில் கூட அவர் இப்படி எல்லாம் அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை.

நாயக்கர் முன் இராயசம் 'சரி அதற்கென்ன அப்படியே செய்து விடுவோம்' என்று தலையாட்டினாலும் உள்ளுக்குள்



ஒரு திகட்டல் இருக்கவே செய்தது. பஞ்சகாலம் என்று பிரகடனப்படுத்த வேண்டிய சமயத்தில் திருவிழாக் கொண்டாட்டம் எடுபடுமா?

இன்று வைகையில் மட்டுமா நீரில்லை?

காவிரியும் கூட வெள்ளமின்றிக் கொஞ்சம் வறண்டு தான் கிடக்கிறது. தஞ்சையிலும், திருச்சியிலும்கூட அதன் எதிரொலிகள். எங்கும் பெரிதாக வெள்ளாமையில்லை.

நாயக்கர் அவர்கள் ஒருபுறம் இப்படி ஏற்பாடுகளில் தனிக் கவனம் செலுத்த வேண்டியிருக்க அந்தப்புரத்தில் மங்கம்மா தேவியிடமும் அதன் எதிரொலிகள்.

கோவிந்தப்பையாவிடம் அது எதிரொலித்தபடி இருந்தது.

"கோவிந்தரே- விழா ஏற்பாடுகள் எப்படி இருக்கின்றன?"

"வழக்கத்தைவிட வேகமாகவே இருக்கிறது தேவியாரே. நமது நாயக்கர்பிரானே இம்மட்டில் அதீதக் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறார்."

"பெருங்கூட்டம் கூட வேண்டும். சாதி, மத பேதமின்றி மக்கள் வெள்ளமும், கோலாகலமும் கொடிகட்டிப் பறக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். போன ஆண்டில் திருவிழாவில் சில குந்தகங்கள். குடிக்கத் தண்ணீர் இல்லை. அன்னதானங்களும் பெரிதாக இல்லை. எனவே விழாவுக்கு வந்த மக்கள் வாடிப் போய் விட்டார்கள். அதன் எதிரொலி தான் இந்த ஆண்டு இயற்கை சதி செய்து சரியாக மழை பெய்யவில்லை என்பது அவர் கருத்து."

"இயற்கை சதி செய்யும்போது நாம் என்ன செய்ய முடியும் தேவியாரே?"

"வைகை விஷயத்தில் இயற்கை சதி செய்துவிட்டது என்பது சரி. காவிரிக்கு என்ன வந்தது கோவிந்தரே?"

"பருவ மழை இந்த முறை தென்பாகத்தை மட்டுமல்ல, அகண்ட பாரதம் முழுவதையும் பாதித்திருக்கிறது. காவிரியின் தலைப்பகுதியான மைசூரிலும் இம்முறை வறட்சி."

"அப்படியானால் அங்கும் விளைச்சலில் பெரிய பாதிப்பா?"

"மைசூர் அரசர் சிக்கதேவராயர் காவிரியின் குறுக்கில் அணை எழுப்பி நீரைத் தேக்கி வைத்து தன் நாட்டுக்குத் தக்கம் வராதபடிப் பார்த்துக் கொண்டு விட்டார். அதன் எதிரொலிதான் நமது திருச்சிராப்பள்ளி நகரில் நீரில்லாத வாட்டம்."

"அதுசரி. தஞ்சையில் வெங்கோஜி எப்படி இதைச் சமாளித்துக் கொண்டிருக்கிறார்?"

"அங்கேயும் இடர்ப்பாடுதான். தன்வசமிருந்த பெங்களூரைச் சிக்கதேவராயருக்கு விற்றுவிட்ட தன் தவறை இப்போதுதான் வெங்கோஜி உணர்ந்திருக்கிறார். மைசூரைச் சுற்றிய பல பகுதிகள் இன்று தன்வசம் இருந்திருந்தால் அதன் விளைச்சலால் வறட்சியைச் சமாளித்திருக்கலாம் என்பது அவர் எண்ணம்."

"வெங்கோஜி எதிலும் அவசரக்குடுக்கை. தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிப்பதில் சூரர். நாம் கூட அப்பொழுது பெங்களூரை மைசூர்க்காரர்களுக்குத் தந்து விட வேண்டாம் என்று செய்தி அனுப்பினோமில்லையா?"

"என்ன பயன்? சிக்கதேவராயர் எப்பொழுதும் கெட்டிக்காரன். நம்மை முந்திக்கொண்டுவிட்டார். இன்னொரு விஷயம் தேவியாரே—"

"என்ன?"

"இந்த வறண்ட சூழ்நிலையில் பெரிய அளவில் திருவிழா ஏற்பாடுகளைச் செய்வது எனக்குச் சரியாகப் படவில்லை. ஆனால் நாயக்கர்பிரானே இப்பொழுதுதான் எப்பொழுதும் இல்லாத அளவு அக்கறை காட்டுகிறார்."



"சமாளிக்க வேண்டும். திருவிழாக்கள் மலியும் பூமியில் தான் வறட்சி ஏற்படாது என்பது அவர் உள்ளுணர்வு."

"உண்மைதான். தேரோட்டங்களும், திருவிழாக்களும் ஊரைக் கோவிலாக்குபவை. மக்கள் மனதில் இறை உணர்ச்சியை ஓங்கி வளரச் செய்பவை. எத்தனைக்கெத்தனை அது வளர்ந்திருக்கிறதோ அத்தனைக்கத்தனை இறைமை கருணை செய்யும். அங்கே மகிழ்ச்சி பெருகும் என்பதை உணர்ந்ததால்தான் நமது மாமன்னர் திருமலை நாயக்கர் அவர்கள் இந்தச் சித்திரைத் திருவிழாவையே மதுரையின் நிகரில்லாத திருவிழாவாகவே மாற்றியருளினார்.

சைவம், வைணவம் என்கிற பேதங்களுக்குக் குறுக்கே பாலம் கட்டி அனைவரையும் ஒருங்கிணைத்தார். அத்தோடு காணாபத்யம், கௌமாரம், சாக்தம் என்றெல்லாம் பிரிந்து கிடந்ததை ஒன்றுபடுத்தி அவ்வளவையும் நமது மீனாட்சி ஆலயத்துக்குள் வைத்த நிகழ்ச்சிகளில் கட்டிப் போட்டார்.

முக்குறுணி விநாயகனை, பரங்குன்ற மணிவேலனை, அழகர் மலைத் திருமாலை, அன்னை சக்தியாம் மீனாளை, சைவ ஸ்வரூபியாம் சொக்கநாதனை அவர் ஒருங்கிணைத்து, தானும் ஆராதித்து, உலகும் ஆராதிக்க வழிவகை செய்திருப்பதும் அதை ஊரே திரண்டு வந்து கொண்டாடுவதும் நமது நாயக்க சாம்ராஜ்யம் இந்தத் தென்னாட்டுக்குச் செய்திருக்கும் கைங்கர்யம். இதை வருங்காலம் நிச்சயமாக உணர்ந்து போற்றப் போவதும் சத்தியம்."

"இதை எதையும் நான் மறுக்கவில்லை.

அதே சமயம் வறட்சியும் பகையும் சுற்றி நிற்கும் இந்தத் தருணத்தில் எப்படி இதைச் சமாளித்து வெற்றிகரமாக நடத்தி முடிக்கப் போகிறோமோ தெரியவில்லையே?"

"வறட்சி சரி. பகை என்று எதைக் குறிப்பிடுகிறீர்கள்?"

மங்கம்மாள் இழுத்துப் பிடித்துக் கேட்க கோவிந்தப் பையாவின் முகம் கோணத் தொடங்கியது.

"என்ன கோவிந்தரே? எனக்கு இப்பொழுது பதை விளக்கம் தேவை."

"சொன்னால் கோபிக்க மாட்டீர்களே?"

"சீக்கிரமாகச் சொல்லுங்கள்..."

"இப்பொழுதெல்லாம் எந்தவித அழைப்புகளும் சேது நாட்டுக்கு அனுப்பப்படுவதில்லை. நாயக்கர்பிரான் அனுப்ப விரும்பினாலும் தாங்களும், தங்கள் புதல்வர் முத்து வீரப்பரும் அதைத் தடுத்து விடுகின்றீர்களே அதைச் சொன்னேன்..."

"அதுசரி... அந்தக் கிழவனிடமிருந்தோ, இல்லை நமது பரிசுப் பொருளாக, பிரதிநிதியாக அங்கு சென்ற குமார பிள்ளையிடமிருந்தோ கூட அவர்கள் தரப்பு சேதி நமக்கு வருகின்றதா? அதை எண்ணிப் பார்த்தீர்களா?"

"பிள்ளை சேதுபதிக்கு விசுவாசமாக நடந்து கொள்ள விரும்புவதாலும், நமக்கு நன்மை செய்ய விரும்புவதாலும்தான் அவர் தலை இருக்க வாலாடக்கூடாது என்று விசுவாசத்தோடு நடந்து கொள்கிறார். அதை நான் நன்கறிவேன், ராணியாரே..."

"ஏதேது... குமாரபிள்ளை மேல் உங்களுக்கு இவ்வளவு பற்றும், பாசமும் இருப்பதைப் பார்த்தால் உங்களுக்குள் ஒரு தொடர்பு நித்தமும் இருப்பதைப்போலத் தோன்றுகிறதே?"

"நிச்சயமாக இல்லை ராணியாரே... பிள்ளை அங்கு இருப்பதால்தான் நமது பல அலட்சியங்கள் கிழவன் சேது பதிக்குத் தெரியாமல் போய்க் கொண்டிருக்கிறது."

"நான் தெரியவேண்டும் என்று நினைப்பதை பிள்ளை தான் கெடுத்துக் கொண்டிருக்கின்றாரா?"

மங்கம்மாள் குரலெடுத்தாள்.

"அப்படி இல்லை. மிகச் சிரமப்பட்டு உருவான நட்பைக் கஷ்டப்பட்டுக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார். இப்பொழுது கூட இந்தச் சித்திரைத் திருவிழாவிற்கான அழைப்பு அவருக்குப் போகாமல் செய்யப்பட்டிருக்கிறது. சித்திரைத் திருவிழாவின் கலகலப்புக்கு அடிநாதமாகத் திகழ்பவர்கள் சேதுநாட்டவர்கள். அந்நாட்டு மறவர்களை அங்குசத்தைக் கொண்டு யானையை அடக்குவதைப் போல நமது அழகர் மலை திருமாலைக் கொண்டே அடிபணிய வைத்து விடலாம். நாமதாரிகளாக, வைணவதாசர்களாக 'அழகா... அழகா' என்று அவர்கள் பாடியபடி வண்டி கட்டி வரும் அழகிற்கு ஈடில்லை; இணையில்லை. அந்தக் கள்ளழகனும் அந்த வீரர்களின் அன்பிற்கும், பக்திக்கும் மிகக் கட்டுப்பட்டவன்தானே?"



"முடிவாக என்னதான் சொல்கிறீர்கள்?"

"எதனாலோ இந்தச் சித்திரைத் திருவிழா வறட்சியின் பிடியிலும் பெருவிழாவாக நடக்க வேண்டும் என்று நமது நாயக்கர்பிரான் விரும்புகிறார். இதில் கிழவர் சேதுபதி அவர்களும் பங்கு கொள்வது நமக்கு இப்பொழுது மிக அவசியம் என்று நான் கருதுகிறேன்."

"வந்தால் நிச்சயமாக வராதீர்கள் என்று யாரும் இங்கே சொல்லப் போவதில்லை கோவிந்தரே..."

"அதற்கு முன் ஒரு சம்பிரதாய அழைப்பாவது கிழவன் சேதுபதிக்கு அனுப்பப்படுவதுதானே மரியாதை."

"அது சரி... இந்த வறட்சியை அந்த வானம் பார்த்த பூமிக்காரர்கள் எப்படிச் சமாளிக்கிறார்கள்?"

"ஒரு அதிசயம் ராணியாரே! சேது மணணில் மட்டும் இந்த முறை மழை பொய்க்கவில்லை."

"ஆச்சரியமாக இருக்கிறதே?"

"ஆச்சரியப்பட ஒன்றுமேயில்லை. திருப்புல்லாணித் திருவிழாவாகட்டும், ராமேஸ்வரத்துக் கைங்கர்யங்கள் ஆகட்டும், ஒன்றிலும் அங்கே குறையில்லை. மகான் தாயுமானவ ஸ்வாமிகள் எங்கும் கிட்டாத இன்பம் எனக்கு இங்கே கிடைத்தது என்று சேதுபதியிடம் கூறியிருக்கிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்."

"சரி- சரி- விட்டால் கிழவன் புராணமாகவே படித்து ஒரு சதகம் கூடப் பாடி விடுவீர்கள் போல இருக்கிறதே. அது சரி, வறட்சியில் தப்பித்து விட்டான் கிழவன். கூட இருந்தே குழி பறிக்க நினைக்கும் பங்காளிகளிடம் எப்படித் தப்பிக்கிறானாம்?"

"ஒன்றும் தெரியாததைப் போலக் கேட்டால் எப்படி ராணியாரே? இப்பொழுது அவரது பங்காளிகள் அடங்கி ஒடுங்கி விட்டனர். அதிலும் கிழவரின் நேர்விரோதியாக இருந்த தாதியன் சத்தமாக மூச்சுக்கூட விடுவதில்லை. கிழவரின் கவனமெல்லாம் இப்பொழுது மண்ணின்மேல்தான்."

"அப்படியானால் எந்த நாட்டின் மேல் படையெடுக்கலாம், எந்த ஊரைப் பிடிக்கலாம் என்பதில் கவனமாக இருக்கிறான் கிழவன் என்று சொல்லாமல் சொல்கிறீரா?"

"மன்னிக்கவேண்டும் ராணி. கிழவர் சேதுபதி விஷயத்தில் தாங்கள் எப்பொழுதும் ஒருவிதப் புகைச்சலோடு சிந்திப்பது எனக்குக் கவலையைத் தருகிறது."

கோவிந்தப்பையா துணிச்சலாகத் தன் கருத்தைக் கூறி விட்டுத் தலையைத் தாழ்த்திக் கொண்டார். மங்கம்மாள் அவரை முறைத்துப் பார்த்தார்.

அன்னை மீனாட்சி ஆலயம்.

பள்ளியறைச் சேவைக்காகச் சொக்கநாதர் சந்நிதி முன் திருப்பல்லக்குக் காத்திருக்க, ஓதுவார் குழு தேவாரத் திருப்பதிகங்களைப் பாடிக்கொண்டிருந்தது.

நள்ளிரவை நோக்கி முன்னிரவு நகரும் அந்த இரவுப் பொழுதில் திடீரென்று சலசலப்பு. விரிசடையும், பட்டு வஸ்திரம் மூடிய மார்பும், கூப்பிய கரமுமாகச் சொக்கநாத நாயக்கரவர்கள் எந்தவிதக் கட்டியக்குரலுமின்றி, மெய்க் காப்பாளர்கள் எவருமின்றிச் சுரங்கவழியில் கோயிலுக்குள்



பிரவேசித்துச் சொக்கர் திருச்சந்நிதி நோக்கியும்வர, பட்டர் குழாமும், பக்தர்களும் பார்த்துவிட்டுப் பரபரப்போடு ஓடி வந்தனர்.

"வரவேண்டும் வரவேண்டும், நாயக்கர்பிரான் அவர்கள் திருவடிகளைத் தொழுது வரவேற்கிறோம். வரவேண்டும், வரவேண்டும்."

தேவாரம் பாடிக்கொண்டிருந்த ஒரு குருக்கள் ஓடி முன் சென்று தெண்டனிட்டு வணங்கி வரவேற்பு முகமன் வாசித்தார்.

பட்டரும் ஓடிவந்து நடுநடுங்கியபடி நின்றார்.

"நாயக்கர்பிரானவர்கள் இப்படிப் பள்ளியறைச் சேவைக்கு வருவது எங்களுக்குத் தெரியாது போய்விட்டது. தெரிந்திருந்தால் ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருப்போம். ஒருநாளும் இப்படித் தாங்கள் முன்னறிவிப்பின்றி வந்ததில்லையே-" பட்டர் பணிவோடு பேசி நின்றார். சொக்கநாத நாயக்கரோ திருச்சந்நிதியின் கருவறைக்குள் தீபஒளியில் தெரியும் லிங்க சொரூபத்தின் மேலேயே பார்வையை வைத்திருந்தவராக, "என்னவோ தெரியவில்லை பட்டரே. எனக்கு இந்தப் பூமியில் உயிர்வாழச் சொற்ப நாள்களே இருப்பது போல ஒரு உள்ளுணர்ச்சி. மதுரையை ஒரு ஆபத்து மீண்டும் அணுகப்போவது போலவும் ஒரு சலனம்-"

நாயக்கரவர்கள் சொல்லிமுடிக்கவும் பிராகாரத்தில் ஒரு கவளி அதனை ஆமோதிப்பதாகச் சப்தமிடவும் சரியாக இருந்தது.

# 47

மன்னர் சொக்கநாத நாயக்கரின் அதிர்ச்சியளிக்கும் அந்தக் கலக்கமான பேச்சைக் கேட்டுப் பட்டர் கலங்கிப் போக, நாயக்கர் கண்களில் கண்ணீரின் பளபளப்புப் பெருக ஆரம்பித்தது.

பள்ளியறைச் சேவைக்காக வந்திருந்த பக்தர்கள் அத்தனை பேரும் அதைப் பார்த்துத் தங்களுக்குள் விதிர்க்கத் தொடங்கினர். பட்டர் சூழ்நிலையைப் புரிந்து கொண்டு சமாளிக்க ஆரம்பித்தார். படுவேகமாகத் திரும்பவும் அன்னையின் கருவறைக்குள் நாயக்கரைப் பணிவோடு அழைத்துச் சென்றார். அன்னை மீனாட்சியும் வெண்பட்டுத் தரித்து, மாணிக்க மூக்குத்தி மின்ன, தலைமகனைப் புன்னகையோடு பார்த்தாள்.

"அரசர் பிரானே– துளியும் கலக்கமின்றி அன்னையை வேண்டிக் கொள்ளுங்கள். அவள் கருணை செய்தால் அரை நொடி கூட அதிகம். அனைத்தும் மாறிவிடும்"– இது பட்டர்.

"உண்மைதான்– ஆனால் அந்த அரை நொடிக்குக் கூட நான் தகுதியில்லாதவன் என்று அன்னை நினைக்கிறாள். இல்லாவிட்டால் இந்த மதுரையை இப்படி நீரின்றி அலை மோத விடுவாளா"– இது நாயக்கர்.

"காரணமில்லாமல் காரியங்களில்லை என்பதுதான் நம் முன்னோர் நமக்கு அழுத்தம் திருத்தமாகக் கூறிச் சென்றிருப்பது. இன்றைய நிலைக்கும் நிச்சயம் ஒரு காரணம் இருக்கும். இதைவிட ஒரு மோசமான தருணத்தில் இருந்த போதே இவள் சேதுநாட்டு அதிபதி கிழவன் சேதுபதி மூலமாக வந்து தங்களைக் காத்து ரட்சிக்கவில்லையா? இப்பொழுதும் அதுபோல நிச்சயம் யார் மூலமாகவாவது வந்து ரட்சிப்பாள்."



"உண்மையில் ரட்சித்துத்தான் தீரவேண்டும். உண்மையில் இந்த மதுரைக்கு நான் அதிபதியல்ல. இவள்தான். இது இவளது பூமி. இங்கு நடக்கும் அத்தனை நல்லவை கெட்டவைகளுக்கும் இவளே பொறுப்பு," சொக்கநாதர் விம்மினார்.

பட்டரும் பதிலுக்குப் பதில் பேசிக் கொண்டிராமல் நெய்த் தீபம் காட்டிவிட்டுத் திருவடி மலர்களையும் சந்தன, குங்குமத்தையும் எடுத்து வந்து நாயக்கர் கரங்களில் தந்துவிட்டுப் பள்ளியறை முன் கண்ணூஞ்சல் பாட வந்திருக்கும் ஓதுவார்களை நோக்கி நடையிடத் தொடங்கினார்.

சொக்கநாத நாயக்கரோ அவர்களைப் பின்தொடராமல் அன்னையையே பார்த்தபடி நிற்க ஆரம்பித்தார். பட்டருக்குத் தர்மசங்கடமாகிப்போனது. திரும்பித் திரும்பிப் பார்த்தவர் மீண்டும் நெருங்கிவந்து, "பள்ளியறைச் சேவை ஆரம்பமாகப் போகிறது. இப்பொழுது கருவறையில் ஏகாந்தமே இறைவிக்குப் பிரசாதம். எனவே தாங்கள் கருவறையை விட்டு வெளியே வந்தால் தேவலை" என்றார்.

"எனக்கென்னவோ விடிய விடிய இங்கேயே அமர்ந்து அன்னையுடன் பேசிக் கொண்டே இருக்கவேண்டும் போலத் தோன்றுகிறது பட்டரே."

"மன்னிக்க வேண்டும். பகல்பொழுதென்றால் பாதகமில்லை. இது இரவுக்காலம். ஆலய நிர்மாணங்களில், ஆகம விதிகளில் இதற்கு இடமில்லை. உலகம் இன்புற ஸ்ரீசக்தியும் சிவமும் ஒன்றுபடுகிறார்கள் என்பதுதான் பள்ளியறைச் சேவை நிகழ்ச்சி உணர்த்துவது. அதற்குப் பங்கம் வந்துவிடக் கூடாது. இப்படிச் சிவமும் சக்தியும் கூடிக் களிக்கும் இந்த இரவுப் பொழுதில் சிவாலயங்களைக் காலபைரவ மூர்த்தி காவல் காக்கிறார் என்பது நம்பிக்கை. எனவே ஏகாந்தபங்கம் எதுவுமின்றிப் பூசனையை முடித்துவிட்டு நாம் வெளியேறி விடவேண்டும்."

பட்டர் நீண்ட விளக்கம் தந்து முடிக்க நாயக்கரும் பெருமூச்சுடன் கருவறையை விட்டு வெளியே வர—

அடர்ந்த பனிப் பொழிவில் அந்த மாதேஸ்வரன் மலைக் காடே மறைந்து போய்விட்டிருந்தது. ஆங்காங்கே யானைகளின் பிளிறல்களும் செம்போத்துப் பறவைகளின் கூக்குரல்களும் மிருகக் கூட்டத்தையே குளிரில் ஆட்டிப் படைப்பதை உணர்த்திக் கொண்டிருந்தன.

பரந்த அந்த மலைவனத்தின் மையத்தில் இருந்துமட்டும் இந்த மிருகக் குரல்களை ஊடுருவியபடி ஒருவித செம்பொன் மணி நாதமும் சேர்ந்து ஒலித்துக் கொண்டிருந்தது.

அந்த முன்னிரவில் இப்படி மணி ஒலிப்பதும் அதைத் தொடர்ந்து புரவிக் குளம்படிச் சப்தம் கேட்பதும் சமீப காலமாகவே வழக்கமாகி வருகிறது. அடர்ந்த அந்த மலைக் காட்டில்தான் இருக்கிறான் மந்தராயக் கிழவன். மலைக் குடியன். மலை மேல் நடு சமவெளிபோல் உள்ள பகுதியில் குடிசை அமைத்துக் கொண்டு, சுற்றிலும் மலை ஆடுகளுக் கெனப் பட்டி அமைத்து அதில் ஆடுகளை அடைத்துவிட்டு, விடிய விடியக் காவல் காப்பதுதான் அவன் வேலை.

ஆட்டுப்பட்டிகளில் எண்திசை முனையிலும் ஒதிய மரத்தண்டுகளைப் போட்டுத் தீ மூட்டி, அதன் வெப்பத்தை இதமாகத் தந்து கொண்டு, சிறுத்தைப் புலிகளின் சீண்டல் களுக்கு இடமில்லாதபடிப் பார்த்துக் கொள்வது அவன் வேலை.

மாதேஸ்வரன் மலைக்காடு என்பது ஒன்றும் சாதாரண வனப்பகுதியல்ல. அதில் மனிதர்கள் உயிர்வாழ்வதே அபூர்வம். இதில் ஆடுகளை வளர்ப்பதென்பதோ அசாதாரணம். ஆனாலும் அதை ஒரு சாதாரண செயலாகவே கருதிச் செய்து வந்திருக்கிறான் மந்தராயக் கிழவன். மணிச் சப்தம் காதில் மோதவும் கன்னத்தில் போட்டுக் கொள்கிறான்.



ஆயிற்று. இன்னும் சில நிமிடங்களில் ஒரு பெரும் புரவிக் கூட்டமே அவனது குடிலை நோக்கி வந்துவிடும். அவர்களுக்கு ஆட்டுப்பாலும், தேனும், தினை மாவும் தந்து உபசரிக்க வேண்டும். பட்டிக் கணப்புகளில் அவர்களும் விடிய விடியக் குளிர் காய்வார்கள். விடிந்ததும் திரும்ப ஆலயப் பிரவேசம் செய்து வணங்கிவிட்டுப் போய்விடுவார்கள்.

அத்தனை பேரும் மைசூர் அரண்மனைப் பிரதிநிதிகள். எந்தக் கேள்வியும் கேட்க முடியாது. சாதாரணமாக அரண் மனைக்காரர்களில் சிலர் எப்போதாவது வேட்டைக்குத்தான் வருவார்கள். இவர்களோ மிக வித்தியாசமாக ஆலய வழிபாட் டுக்கு என வந்திருக்கிறார்கள். மந்தராயக் கிழவனுக்கு எல்லாமே வியப்பாக இருக்கிறது. இன்றைக்கு அவர்களிடமே காரணத்தைக் கேட்டு விடுவது என்ற முடிவிற்கு வந்து விட்டான் அவன். அவன் நினைப்பிற்கு ஏற்ப அதோ திபுதிபு வெண் புரவிகள் கூட்டம்.

அந்தப் பனிப் பொழிவிலும் புரவிக் கூட்டத்தின் திமுதிமுக்கும் குளம்படிகள் மண்கவளங்களைக் கெல்லி எடுத்து எறிந்தன. தீப்பந்த ஒளியில் அவை துல்லியமாகவும் தெரிந்தன.

மந்தராயக் கிழவன் கம்பளியை இழுத்துக் கட்டிக் கொண்டு எழுந்து நின்றான். பட்டி ஆடுகளெல்லாம் மிரண்டு போய்க் கத்தத் தொடங்கின. குதிரைகளின் கனைப்பொலிகள் ஊடே நுழைந்து, புதுவிதமான சப்தப் பரிவர்த்தனை அங்கே நடந்து முடிய, மந்தராயக் கிழவன் தன்னை நோக்கி வரும் ஆஜானுபாகுவான ஒரு வீரனைப் பார்த்துக் கைகூப்பினான். பின் அவனது தாய் மொழியான கன்னடத்தில் வரவேற்றுப் பேச ஆரம்பித்தான்.

"வரணும் தேவரே வரணும்—"

"சந்தோஷம் மந்தராயா— இன்னிக்கு நான் உனக்கு ஒரு பரிசு தரப் போறேன்."

"பரிசா— எனக்கா?"

"ஆமாம்— ஒரு மண்டல காலம் நாங்க ஒரு பெரிய கூட்டமா தினமும் இங்க வந்து தங்கியிருந்தோம். எங்களுக்கு எல்லாவிதமான உபசாரணையும் நீ செய்திருக்கே. அதுக்குப் பதில் நன்றியை நான் காட்ட வேண்டாமா?"

சொல்லிக் கொண்டே அந்த வீரன் தனக்கு அருகில் நின்று கொண்டிருந்த ஒருவரைப் பார்த்தான். அவரைப் பார்த்தபோது அவர் ஓர் அரண்மனை வீரர் போலவே இல்லை. அவரது உடையும் பாகைக் கட்டும், அவர் அரண்மனையில் பெரிய பொறுப்பில் இருக்க வேண்டும் என்று சொல்லாமல் சொன்னது. ஜரிகை வேலைப்பாடு மிகுந்த சொக்காய் தரித்துக் கச்சம் உடுத்தியிருந்தார். அந்த வீரன் பார்க்கவும் அவர் ஒரு பொன் மூட்டையை எடுத்து மந்தராயன் முன் நீட்டினார்.

"தேவரே— என்ன இதெல்லாம்?"

"பொன் மந்தராயா— அரசாங்கப் பொன்!"

"பொன்னா?"

"ஆமாம்— உனக்கு நாங்க தரும் அன்புப் பரிசு..."

"பரிசா— எனக்கா?"

"ஆமாம்— இந்த மாதேஸ்வரன் மலைக்காட்டில் எங்கள் ஜெப வீர விரத பூஜை இன்றோடு முடிகிறது. நாங்கள் நாளை முதல் வரமாட்டோம். அதனால்தான் உன்னைப் பார்த்துப் பரிசு தர வந்திருக்கிறேன்."

"ஜெப வீர விரத பூஜையா...? என்னென்னமோ சொல் றீங்களே?"

"உனக்கு எதற்கு அதெல்லாம்? பரிசை வாங்கிக் கொள்."

"இருக்கட்டும் தேவரே. நான் இதற்கெல்லாம் ஆசைப்பட்டு உங்களுக்கு உதவவில்லை."



"அது எனக்குத் தெரியும். எதிர்பார்த்துச் செயல்படுகின்றவர்களுக்கு நான் எதையும் தருவதில்லை. உம்— வாங்கிக் கொள்."

— அந்த வீரனின் குரலில் கட்டளைத் தொனி ஒலிக்க ஆரம்பித்தது.

"பரவாயில்லை தேவரே. நான் இதை வாங்கிக் கொண்டு என்ன செய்யப் போகிறேன்? எனக்கு இந்த மலைக்காடுதான் எல்லாம். என்னைப் பார்த்துக் கொள்ள அந்த மாதேஸ்வரன் இருக்கிறான். அவன் எனக்குக் கொடுத்ததையே நான் உங்களுக்குக் கொடுத்தேன். எனவே நான் இதைப் பெற்றுக் கொள்ளத் தயாரில்லை. எனக்கு நீங்கள் தந்துதான் தீர வேண்டுமென்றால் அதை அந்த மாதேஸ்வர ஸ்வாமி ஆலயத்தின் உண்டியலில் சேர்த்து விடுங்கள்."

— மந்தராயக் கிழவனின் பதில் அந்த வீரனை வியப்பில் போட்டுப் புரட்டியது. அதன் எதிரொலி பெருமிதமாக முகத்தில் வழிந்தது. பார்வையும் பொன் மூட்டையோடு நிற்கும் மனிதனின் பக்கம் திரும்பியது.

"ஸ்தானாதிபதியவர்களே— இந்தக் கிழவனின் பேச்சைக் கேட்டீர்கள்தானே...?"

அவரும் அதைக் கேட்டுச் சிரித்தார். பின் "பொன்னுக்கும் பொருளுக்கும் மசியாத பெரிய மனமு இவனுக்கு நஞ்சுண்டா..." என்றார் அவர்.

"ஆமாம்... எனக்கென்னவோ நமது மண்டல பூஜை தந்த திருப்தியைவிட இந்தக் கிழவனின் பேச்சும் செயலும் அதீத திருப்தியைத் தருகிறது. என்ன சொல்கிறீர்கள்?"

நஞ்சுண்டன் என்று ஸ்தானாதிபதியானவர் விளித்த வீரன் திரும்பிக் கேட்டான்.

"உண்மைதான்."

"பேசாமல் இவனிடமே வனதுர்க்கைக்கான பலி பூஜைக் குரிய பொறுப்பை ஒப்படைத்துவிடலாமா?"

"இல்லையில்லை... அதை நாம்தாம் செய்துமுடிக்க வேண்டும்."

அவர்கள் பேச்சு கிழவனை மேலும் ஆச்சரியப்படுத்தியது.

"தேவரே- இந்தப் பூஜைகள் எதற்காக..? நமது அரசாங்கத் துக்கு ஏதாவது இக்கட்டா..?" தயங்கித் தயங்கிக் கேட்டான்.

"இக்கட்டுதான். விஜயநகர சாம்ராஜ்ஜியம் இன்று வேறு விதமாக மாறுவது இக்கட்டு இல்லையா?"

"எப்படி?"

"அது ஒரு பெரிய அரசியல் விஷயம். உனக்குச் சொன் னால் புரியுமோ புரியாதோ? சுருக்கமாகச் சொல்கிறேன். வடக்கில் முகலாயப் பேரரசர் ஔரங்கசீப் உறுதிபட அரசாட்சி செய்து கொண்டிருக்கிறார். மகாராஷ்டிரம் ஒன்றைத் தவிர மற்ற எல்லாம் அவரது பிடிக்குள்தான் இருக்கின்றன.

ஆனால் தெற்குப் பகுதியோ ஏகத்துக்குப் பிரிந்து கிடக்கிறது. அதில் நமது மைசூர் சாம்ராஜ்ஜியம் வடவர்களின் கால்மாட்டில் முதலில் கிடக்கிறது. குடமலையும் காவிரியாறும் நமது மைசூரின் தனிப்பெருஞ் செல்வங்கள். காலச் சூழ்நிலை யாலும் பெங்களூரும் மைசூரும் இயற்கையன்னை கொஞ்சி விளையாடும் மேட்டுப்பாங்கான செழிப்பான பகுதிகளாக உள்ளன. இதனால் இந்த மண்ணை அபகரித்து வாழ எல்லா முயற்சிகளையும் வடக்கத்திய ஆட்சியாளர்கள் செய்யப் பார்க்கிறார்கள். மைசூர் சாம்ராஜ்யம் ஒரு பாளையம் போலக் குறுகிக் கிடப்பதால் சுலபமாகக் கைப்பற்றிவிடலாம் என்றும் நினைக்கிறார்கள்.

வடக்கில் இருக்கும் முகலாயர்களுக்குத்தான் இந்த ஆசை என்று இல்லை. புதிதாக இந்த மண்ணில் நுழைந்திருக்கும் பரங்கியர்களிடமும் இந்த ஆசை அரும்பியிருக்கிறது. இதன் எதிரொலிகளைத்தான் மைசூரிலும் பெங்களூரிலும் தினமும் பார்க்கிறோம்.



எங்கு பார்த்தாலும் மொகலாய ஒற்றர்கள். பரங்கியர் களின் ஊடுருவல்கள். என்றைக்கு எந்தப் பகுதியில் யுத்தம் நடக்குமோ என்று கவலைப்பட்டுக் கவலைப்பட்டு நமது அரசர் சிக்கதேவராயருக்கு நெஞ்சுக்கூடே இளைத்துவிட்டது. இதன் எதிரொலி திரும்பவும் சிதறிக் கிடக்கும் விஜயநகர சாம் ராஜ்யத்தை ஒன்றுபடுத்துவதுதான். அதற்குத் தென்னகம் முழுவதையும் ஒரு குடைக்கீழ் கொண்டு வருவதுதான் ஒரே தீர்வு. இதற்காகத் தெற்கில் உள்ள மதுரையை முதலில் வசப்படுத்துவது எங்கள் நோக்கம். எங்கள் நோக்கம் ஈடேறத் தான் இந்த மலைநாட்டின் பெருங் கடவுளான மாதேஸ்வர ஸ்வாமிக்கு ஜெப வீர விரத பூஜை புரிந்தோம்.

மொத்தமாய் ஆயிரத்தெட்டு வீரர்கள் வீரத்தளபதி குமரய்யாவின் தலைமையில் கங்கணம் கட்டிக் கொண்டு விரதம் இருந்து பூஜித்திருக்கிறோம். எங்கள் விரதம் இன்றுடன் பூர்த்தி அடைந்துவிட்டது. வனதுர்க்கைக்குப் பலி பூஜை ஒன்று மட்டும் பாக்கி உள்ளது. அதையும் முடித்து விட்டால் குமரய்யா வின் தலைமையிலான எங்கள் வீரப்படை தென்னக அரசுகள் ஒவ்வொன்றையும் வசப்படுத்தித் திரும்பவும் அதை விஜய நகரப் பேரரசு போல ஆக்கிவிடும். முதலில் மதுரை. பிறகு தஞ்சை. பிறகு செஞ்சி. அதன் பின் மொத்த பாரத தேசத்தை யும் வியப்பில் ஆழ்த்திக் கொண்டிருக்கும் சேதுநாடு என்று ஒவ்வொன்றையும் வசப்படுத்துவதுதான் இனி எங்கள் நோக்கம். இதுதான் விஜயநகரப் பேரரசின் அடித்தோகையும நுனி முடியுமாகத் திகழ்ந்த சங்கம வம்சச் சிங்கமான குமார கம்பணரின் அவா. அவரின் வழித்தோன்றல்களான எங்கள் ஆசையும் லட்சியமும் கூட அதுதான்."

நஞ்சுண்டன் என்னும் அந்த வீரனின் நீண்ட அந்த விளக்கம் மந்தராயக் கிழவனின் முகத்தில் ஆயிரம் ஆயிரம் உணர்ச்சிகளைப் பரப்பிக் காட்டியது.

# 48

மந்தராயக் கிழவனின் முகத்தில் சொந்தளிக்கும் உணர்ச்சிகளைப் பார்த்தவாறு நஞ்சுண்டன் தொடர்ந்தான்.

"இல்லை— நாளைய பொழுதில் எங்கள் பிரதிநிதி மதுரை அரசர் சொக்கநாதரைச் சந்தித்து மீண்டும் விஜயநகரப் பேரரசு உருவாக வேண்டிய அவசியம் குறித்துப் பேசுவார். மைசூருடன் ஒத்துப் போகச் சொல்லி பழையபடி கப்பம் கட்டச் சொல்லுவார். இதை நாயக்கர் கேட்கப் போவதில்லை. மறுப்பார். அதைத் தொடர்ந்து அறிவிப்புச் செய்வோம். இப்பொழுதே பழனிக்குத் தெற்கிலும் வடக்கிலும் பெரும்படைகளைக் குவித்தாகி விட்டது. கோவை, சேலம், தருமபுரி, திருப்பூர், பல்லடம் என்று சர்வ ஊர்களும் இன்று சிக்கதேவராயர் வசமுள்ளன. மதுரைக்குத் தெற்கிலான பாளையங்களும் தஞ்சையும் தொண்டை மண்டலமும் சேதுநாடும்தாம் பிடிக்கப் பட வேண்டியவை. மதுரை வசப்பட்டுவிட்டால் மற்ற ஊர்கள் வசப்பட்டே தீரும்.

"என்ன இருந்தாலும் தற்போதைய மைசூர் அரசை விட மதுரை பெரியதாயிற்றே?"

"இப்போது அங்கே வறட்சிதான் பெரிதாக உள்ளது. அதை முதலில் புரிந்து கொள் கிழவனே... மதுரையும் திருச்சியும் நீரின்றித் தவித்துக் கொண்டிருக்கின்றன. பஞ்சம் தலை விரித்தாடத் தொடங்கிவிட்டது. இதிலிருந்து தப்ப நாயக்கருக்கு இருக்கும் ஒரே வழி மைசூருக்குப் பணிவது. பணிந்துவிட்டால் காவிரியில் நீர் பாயும். பஞ்சமும் விலகி ஓடும். எல்லா இடத்திலும் கடிவாளம் அப்போது நம் கையில்..."

—



— நஞ்சுண்டன் தீர்க்கமாக எல்லா முனைகளிலும் தீர்க்கத்தோடு பேசினான். ஸ்தானாதிபதி அதையெல்லாம் கேட்டுப் பூரித்துப் போயிருந்தார்.

"சரி நஞ்சுண்டா... இந்தக் கிழவனிடம் நீ இவ்வளவு பேசியதே அதிகம். வனதுர்க்கைக்கான பலி பூசையை முடித்து விட்டுப் புறப்படுவோம்" என்று நஞ்சுண்டனைத் துரிதப்படுத்தவும் செய்தார். மந்தராயக் கிழவனை வாஞ்சையாகப் பார்த்து அவனது கைகளைப் பற்றிக் கண்ணில் ஒத்திக் கொண்டவனாகப் புறப்படத் தயாரானான்.

"இருங்கள்— வந்ததிலிருந்து எதுவும் சாப்பிடவில்லையே—" என்று மந்தராயக் கிழவனும் உபசரிக்கத் தொடங்கினான்.

இதற்குள் சிலர் தப்பட்டைகளைத் தட்டிக் கொண்டு வனதுர்க்கைக் கோவிலுக்குச் செல்லத் தயாராகிவிட்டனர்.

நாயக்கர் மகாலுக்குள் பிரதான ரஸ்தா வந்து முடியும் இடத்தில் இராயசம், அடப்பம், ஸ்தானாதிபதிகள் புடை சூழ, தீவிர யோசனையில் இருந்தான் முத்துவீரப்பன். மதுரை சொக்கநாத நாயக்கரின் அருந்தவப் புதல்வன். அருகிலேயே அவன் ஏறிப் புறப்படத் தயாராக இருந்தது கோச்சு வண்டி ஒன்று.

"இனி எக்காரணம் கொண்டும் அப்பாவைத் தனியாக எங்கேயும் போகவிடாதீர்கள். மெய்க்காவலர்கள் அவரை விட்டு அங்குலம் கூட நகரக் கூடாது. அதை மீறி அவர் எங்காவது சென்றார் என்று தெரியவந்தால் ஒரு மெய்க்காவலன் உடம்பிலும் தலை இருக்காது. எச்சரிக்கை."— முத்துவீரப்பன் பேச்சைக் கேட்டு மொத்த பேரும் தலையை அசைக்க அடுத்த நொடியே அவன் கோச்சில் தாவி ஏறினான்.

அந்தக் கோச்சும் வைகையின் போக்கைக் காணத் திருவேடகம் நோக்கிப் பயணப்படத் தொடங்கியது.

மங்கம்மாள் இதை மாடத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தாள். அருகிலேயே நின்று கொண்டிருந்தார் வெங்கட

கிருஷ்ணப்பர். அவர் கரங்களில் மைசூரிலிருந்து வந்திருந்த ஓலை.

"கிருஷ்ணப்பரே– அரசர் என்ன முடிவெடுத்திருக்கிறார்?"

— தாம்பூலம் தரித்த உதடுகள் எச்சிலைப் பிலிற்ற கமறலோடு கேட்டாள் மங்கம்மாள்.

"திருச்சிக்கு உடனே புறப்பட வேண்டும் என்றார்..."

"எதற்கு?"

"அரங்கநாத ஸ்வாமியைத் தரிசிக்க வேண்டுமாம்? பிறகு தான் ஒரு முடிவுக்கு வருவாராம்."

"மைசூர் ராயனின் எச்சரிக்கைக்கு இதுதான் பதிலா?"

"தெய்வபலமில்லை. அதனால்தான் இப்படிச் சலனம் நேருகிறது என்பது அவர் எண்ணம்."

"புத்தி பலமில்லை. அதுதான் இப்படிச் சலனம் நேரக் காரணம். இது உங்களுக்குத் தெரியாதா?"

"மன்னிக்க வேண்டும். இதை நான் எப்படி அரசரிடம் கூற முடியும்?"

"கூற வேண்டும். கூறுவதுதான் அமைச்சரின் பணி."

"பத்தினியாரே தயங்கும்போது நான் எம்மாத்திரம்?"

"எனக்கு அவர் வாய்ப்பூட்டுப் போட்டு நெடு நாளாகி விட்டதே. தெரியாதா உங்களுக்கு?"

"சரி முயற்சிக்கிறேன்."

"முடித்துக் காட்டுகிறேன் என்று கூறுங்கள். சித்திரைத் திருவிழாவைவிட இப்பொழுது இதுதான் முக்கியம். முத்து வீரனும் இனி சும்மா இருக்கப் போவதில்லை. அதன் எதிரொலிதான் அவனது புறப்பாடு..."

"அப்படியானால் யுத்தத்திற்குத் தயாராக வேண்டியது தானா?"



"வேறு வழியேயில்லை. அந்தச் சிக்கதேவராயன் பகல் கனவு காணுகிறான். விஜயநகர சாம்ராஜ்யத்தை அவன் என்ன நிறுவுவது? அவன் நம்மோடு ஒத்துழைத்தால் நாம் நிறுவி விட்டுப் போகிறோம். ராயனைவிட நாம் எந்தவிதத்தில் குறைந்தவர்கள்?"

"அதற்கு நமது சுற்றுவட்டாரம் ஒத்துவர வேண்டுமே?"

"சுற்று வட்டாரம் என்று எதைச் சொல்கிறீர்கள்?"

"இந்தப் பக்கத்தில் தஞ்சை, செஞ்சி, அந்தப் பக்கத்தில் சேது நாடு..."

"இவர்கள் ஒத்துவர மாட்டார்கள் என்பது உங்கள் முடிவா?"

"ஆமாம்... தஞ்சையும், செஞ்சியும் இன்று நம்போல் நாயக்கப் பட்டினமாக இல்லை. அவை மகாராஷ்டிர பூமியின் கிளைப் பகுதிகள் ஆகிவிட்டன. சேதுநாடு ஒன்றுதான் தனித்தமிழ் மண்ணாக, மறவர் பூமியாக உள்ளது.

மறவர்கள் நாயக்கர்களாகிய நமக்கே கட்டுப்படாத நிலையில், விஜயநகர சாம்ராஜ்யம் என்கிற பழைய கட்டமைப்புக்கெல்லாம் எப்படி ஒத்துவருவார்கள்."

"அப்படியானால்...?"

"சிக்கதேவராயரின் கனவைக் கிழவன் சேதுபதி நினைத்தால் சாதித்துக் காட்ட முடியும்."

"என்ன சொல்கிறீர்கள்?"

"இந்தத் தென்பகுதி முழுவதையும் ஒரு குடைக்குக் கீழ் கொண்டு வரும் ஆற்றல் கிழவனிடம் இருப்பதாகக் கருதுகிறேன்."

"என்ன வேங்கடப்பரே– அவன் ஒரு சாதாரண பாளையாதிபதி. தனி நாடு, பேரரசன் என்று அவனாக மார்தட்டிக் கொண்டு திரிகிறான். நமது தலையெழுத்து– அவனை விட்டு வைத்திருக்கிறோம்.

இதைப் புரிந்து கொள்ளாமல் என்ன உளறல்?"

"உளறல் இல்லை. உண்மை. இதுதான் தற்சமயம் நம் அரசரின் கருத்தும்..."

"என்ன சொல்கிறீர்கள்?"

"பதறாதீர்கள். இந்த இக்கட்டில் இருந்து தப்பித்து சிக்க தேவராயனுக்குப் பாடம் புகட்ட கிழவனிடம் உதவி கேட்பது தான் சரி என்பது நமது அரசர்பிரான் எண்ணம். அதற்கு முன் அரங்கர் தரிசனத்தை முடித்துவிட்டு அங்கிருந்தே கிழவனுக்கு ஓலை போக்க முடிவு செய்திருப்பதாக அறிகிறேன்."

"என்ன ஒரு மடமை... இப்படித் தொட்டதற்கெல்லாம் கிழவனிடம் போனால் அவன் நம்மைப் பற்றி என்ன நினைப்பான்? எப்படி மதிப்பான்?

எது நடந்தாலும் சரி. இது மட்டும் நடக்கக் கூடாது. அனைத்தையும் நாம் தனியாக நின்று சமாளிப்போம்."

"மன்னிக்க வேண்டும் தேவியாரே. இதை நீங்களே நாயக்கர்பிரானிடம் தெரிவித்துவிடுங்கள்..."

"அதுதான் சரி... என் வாய்ப்பூட்டை நானே உடைத் தெறிகிறேன். இனி என் பேச்சையும் என் மகன் பேச்சையும் தான் அவர் கேட்க வேண்டும். மறுத்தால் ஒரு நொடியும் நான் இங்கே இருக்கமாட்டேன். க்ஷேத்ராடனம் புறப்பட்டு விடுவேன்."

"அவசரம் வேண்டாம். இந்த முறை மைசூர்ப் படை குமரய்யா தலைமையில் ஒரு சூறாவளியாகவே வரப் போகிறது. இங்கே நமது படையோ பஞ்சத் தாக்கத்தில் துவண்டு கிடக் கிறது..."

"இதற்கெல்லாம் பயந்து கொண்டு கிழவனிடம் உதவி கேட்பதற்கு, பேசாமல் சிக்கதேவராயனிடம் போரிடாமல் சரணடைந்துவிடுவது ஆயிரம் மடங்கு மேல் எனக்கு..."



— மங்கம்மாள் ரௌத்திரகதியில் உறுதிபடப் பேசினாள்.

வெங்கடகிருஷ்ணப்பர் முகத்தில் சயாடவில்லை.

மங்கம்மாள் பட்டவர்த்தனமாக யுத்தத்திற்குத் தயாராவதே மேல் என்கிற மாதிரிப் பேசிக் கிழவனை ஒதுக்கி வைத்தது வெங்கடகிருஷ்ணப்பரை என்னவெல்லாமோ செய்தது.

இது ஒரு சுவாரஸ்யமில்லாத யுத்தம்.

சிக்கதேவராயரிடம் பேசிப் பார்க்கலாம் என்பதெல்லாம் அவர் கருத்தாக இருந்தது. ஆனால் மங்கம்மாளோ சண்டைக்கு வந்தால் பதிலுக்குச் சண்டை போடுவதுதான் சரி என்கிற மாதிரி நினைக்கிறாள்.

சரி...

சொக்கநாத நாயக்கர் என்ன நினைக்கிறார்?

கலங்கிப் போய் உட்கார்ந்திருந்தார் சொக்கநாத நாயக்கர். என்ன பேசுவது, எதைப் பேசுவது என்பது புரியாத குழப்பமும் கவலையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருப்பதாகத் தோன்றி யது. சுற்றிலும் அவைப் பிரதானிகள் சூழ்மியிருந்தார்கள். சொக்கநாதர் வாயைத் திறந்தால் அதற்கேற்பக் கருத்துக் கூறலாம் என்று நினைக்கிற மாதிரித் தோன்றியது. இருந்தும் கோவிந்தப்பையா துணிச்சலாக இந்த யுத்தத்தைத் தவிர்ப்பது நல்லது என்று நினைத்து அதற்கேற்பப் பேச ஆரம்பித்தார்.

"அரசர் பிரான் இப்படி மௌனமாய் இருப்பது ஏனோ? இப்பொழுது ஒன்றும் ஆகிவிடவில்லை. மைசூர்க்காரன் மீண்டும் விஜயநகர சாம்ராஜ்யக் கனவு காண்கிறான். நீயே மதுரையை ஆளலாம். ஆனால் மைசூரைத் தலைமையாகக் கொள் என்று சொல்லாமல் சொல்கிறான். அவ்வளவுதான். அது பற்றிப் பரிசீலிக்கலாம்... யுத்தம் வேண்டாம் என்று தகவல் தருவோம்."

"நாம் வேண்டாம் என்று சொல்வோம் என்பது அவனுக் கும் தெரியும். யுத்தத்திற்கான எந்தச் சூழ்நிலையிலும் நாம்

இல்லை. ஒரு பக்கம் சித்திரைத் திருவிழா. மறுபக்கம் வறட்சி. சமீபகாலமாக அண்டை அயலாரும் ஒன்றும் பிரமாத நெருக்கம் இல்லை. எனவே தெரிந்துதான் இப்போது யுத்த முழக்கம் செய்கிறான்."– இது ஒரு பிரதானியின் கருத்து.

"இப்பொழுது யுத்தம் நடந்தால் நாம் வெற்றி பெற்றாலும் நமக்குச் சேதம் மிகவும் ஏற்படும். இயற்கை ஏற்கனவே நம்மை வாட்டிக் கொண்டிருக்கிறது. இதில் யுத்த சேதம் என்னும் பாரம் வேறு நம் தலைமேல் விழும். எப்படிப் பார்த்தாலும் யுத்தம் இப்பொழுது நடப்பது அழகல்ல."

"சரி. நமது சார்பாக வெங்கடகிருஷ்ணப்பரை அனுப்பி வைக்கலாம். அவர் போய்ச் சமரசமாகப் பேசிப் பார்க்கலாம். மழைக்காலம் வரை பேச்சு வார்த்தையிலேயே நாளைக் கடத்தி விட்டால் பிறகு சமாளித்து விடலாம்."

– ஆளாளுக்குப் பேசினார்கள். ஆனால் சொக்கநாத நாயக்கரிடம் பேச்சே இல்லை. முக்கியமான தருணத்தில் ஒரு அரசர் இப்படி இருக்கலாமா?

கோவிந்தப்பையாவுக்குக் குமைச்சலாக இருந்தது. நல்ல வேளை என்கிற மாதிரி முத்துவீரப்பனும் வந்து சேர்ந்தான்.

"என்ன முடிவாகியிருக்கிறது?" என்று கேட்டான்.

"இப்பொழுது யுத்தம் செய்ய யாரும் விரும்பவில்லை. சமரசம் பேசலாம் என்பது எண்ணம்."

"நைனா– இதுதான் உங்கள் முடிவா?"– தந்தையான சொக்கநாதர் பக்கம் திரும்பி ஆவேசமாகக் கேட்டான்.

சொக்கநாதர் மைந்தனைக் குழப்பம் விலகியிராத கண் களோடு பார்க்கலானார்.

"வாயைத் திறந்து பேசுங்கள்– அந்த மைசூர்க்காரன் நமக் கெல்லாம் மானரோஷமில்லை என்று முடிவு செய்துதான் இப்படியெல்லாம் செய்கிறான். அவனைச் சும்மா விடக் கூடாது."



"என்றால் யுத்தம் செய்யலாம் என்கிறீர்களா?"

"ஆமாம்– அவனைவிட எந்த விதத்தில் நாம் தாழ்ந்த வர்கள்?"

"கேள்வி இப்பொழுது அது அல்ல? யுத்தம் செய்ய நமக்கு இது சரியான காலமா என்பதுதான் கேள்வி."

"பஞ்சத்தைக் காட்டி அவன்தான் மிரட்டுகிறான் என்றால் நாமுமா பணிந்து போவது?"

"இளவரசர் புரியாமல் பேசுகின்றார்– இப்பொழுது நாம் பணிவது போலப் போக்குக் காட்டுவதுதான் நல்லது–"

"அது கேவலம். சித்திரைத் திருவிழாவுக்குச் செலவழிக்க எண்ணியிருக்கும் வராகன்களை யுத்தத்திற்குத் திசை திருப் புங்கள். திருவிழாவை அடுத்த வருஷம் பார்த்துக் கொள்ள லாம்.

அந்த மைசூர்க்காரனை உண்டு இல்லை என்று செய்து விட வேண்டும். இதுதான் சந்தர்ப்பம். அவன் வீழ்ந்தால் மைசூர் நம் வசமாகும். அதன் பின் காவிரியில் தண்ணீர் ஓடும். கல்லணையில் அதைத் தடுத்து நிறுத்தி அதையே காரணமாக வைத்துத் தஞ்சாவூர் மகாராஷ்டிரக்காரனான அந்த வெங்கோஜியையும் நாம் மிரட்டலாம்."

– முத்துவீரப்பன் பொரிந்து தள்ளினான். சொக்கநாத நாயக்கர் கேட்டுக் கொண்டே இருந்தார். வாயைத் திறக்கவே அவருக்குப் பிடிக்கவில்லை. இல்லை– மகன் சொல்வதுதான் சரி என்று நினைக்கிறாரா என்றே தெரியவில்லை?

"அப்படியானால் நமது தென்பகுதிகளைச் சேர்ந்த பாளை யாதிபதிகளையும் சேதுநாட்டுக் கிழவனையும் துணைக்கு அழைத்துக் கொள்வோம். இப்படிச் செய்வதால் யுத்தத்திலும் நமக்கு உத்தரவாதமான வெற்றி கிட்டலாம்."– ராயசம் தன் கருத்து என்று கூறியது முத்துவீரப்பனை மூர்ச்சனைப் போலப் பார்க்கவிட்டது.

"யாரை வேண்டுமானாலும் துணைக்கு அழைக்கலாம். ஆனால் கிழவனை மட்டும் துணைக்கு அழைக்கக் கூடாது. இதை மனத்தில் கொள்ளுங்கள்."

"ஏன்?"

"வெற்றிக்குப் பங்காக அவன் மதுரையையே கேட்பான். நம்மை மைசூருக்குப் போகச் சொல்லத் தயங்க மாட்டான்."

"ஒரு இக்கட்டான தருணத்தில் அவரால்தான் இந்த மதுரை தப்பிப் பிழைத்தது. அதை மறந்துவிடக் கூடாது."

"அதற்குத்தான் பட்டம், பரிசு என்று எல்லாவற்றையும் அளித்துக் கௌரவப்படுத்தியாயிற்றே– இன்னும் என்ன?"

"இப்பொழுது அவரை மறுதலிக்க வேண்டிய அவசியம்–?"

"ஏன்– உங்களுக்குக் காரணம் தெரியாதா? குமாரபிள்ளை நமது பிரதிநிதி. கடந்த இரண்டு ஆண்டில் ஒருமுறையாவது அவர் இந்த மதுரை வந்து நம்மைச் சந்தித்திருப்பாரா? இல்லை– அந்தக் கிழவன்தான் நாம் எப்படி இருக்கிறோம் என்று விசாரித்தாவது இருப்பாரா? இங்கே ஒரு வண்டியூர் தெப்பக்குளம் என்றால் அங்கே ராமானுஜப் பேரி–! இங்கே மீனாட்சி ஆலயத் திருவிழா என்றால் அங்கே ராமேஸ்வரத் திலும் திருவிழா. இங்கே ஒரு மகால் என்றால் அங்கேயும் போட்டியாக ஒரு அரண்மனை. எல்லாவிதத்திலும் தான் மதுரையைவிடப் பெரிய ராஜ்ஜியக்காரன் என்கிற மமதை. மதுரைக்கே உதவி செய்துவிட்டதாக ஒரு கர்வம். அதற்கு இடம் கொடுத்தது நம் குற்றம். ஒரு முறை தவறு செய்து விட்டோம். தொடர்ந்து அந்தத் தவறைச் செய்வது நமக்கு அழகில்லை. கிழவனிடமெல்லாம் உதவி கேட்கப் போய்தான் நமது முழங்கால் உயரம் கூடத் தேறாத மைசூர்க்காரன் எல்லாம் இன்று நம்மை யுத்தத்திற்குக் கூப்பிடுகிறான்.



ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். தென் னிந்தியாவிலேயே நாயக்க ராஜ்ஜியம்தான் பெரியது. தலை சிறந்தது. சேதுநாடு, தஞ்சை, மைசூர், செஞ்சி, திருப்பதி, குண்டூர் என்று எல்லா ஊர்களையும் நாம் நமது குடைக்குக் கீழ் கொண்டு வருவதற்கு வழி காண வேண்டும்.

மொத்த பாரத தேசத்தில் இரண்டு ராஜ்யம்தான் இருக்க லாம். ஒன்று தலைவாசலில் உள்ள டெல்லி. இன்னொன்று திருவடியில் உள்ள நாம். தென்னகமே ஒன்றுபட்டு பாரதத்தின் கால்பகுதி பலம் பெற்றுவிட்டால் தலையைக் கூட நாம் தட்டிப் பார்த்துவிடலாம். ஒரு நாள் மொத்த பாரத தேசத்தையே கூட நாயக்கர் தலைமையில் ஆளலாம்.

மகாராஷ்டிரனான சிவாஜியின் கனவு இதுதான். நாமும் காணலாம். தப்பில்லை. எப்பொழுது கேவலம் ஒரு சிக்கதேவ ராயனுக்கே பரந்த ராஜ்ய ஆசை வந்துவிட்டதோ இனியும் நான் சும்மா இருக்கப் போவதில்லை. நாம் யாரென்று காட்டுவோம். முதலில் படைகளைத் திரட்டி யுத்த முனைப்புக் கொள்வோம்.

சித்திரைத் திருவிழா இந்த முறை இல்லை. பதிலுக்கு யுத்தம். இந்த யுத்தத்தில் மதுரைக்கும் திருச்சிக்கும் இடைப்பட்ட ஒரு பேரூர்க்காரன் கூட விடுபடக் கூடாது. கிழவனைத் தவிர, அவனுக்குத் தாளம் போடும் சிலரைத் தவிர அத்தனை பேருக்கும் தகவல் அனுப்புங்கள். ஒரு லட்சம் பேராவது இந்த முறை யுத்தத்திற்கெனத் தயாராக இருக்க வேண்டும். மைசூர்க் காரனை என்ன என்று கேட்டு விடுகிறேன்."

– முத்துவீரப்பன் போர்முனைப் பிரசங்கம் போல ஒரு பிரசங்கமே நடத்தி முடித்துவிட்டான்.

விஷயம் அப்படியே சேதுநாட்டுக்கும் போயிற்று.

# 49

இராமலிங்க விலாச அரண்மனை. அரண்மனை வளாகம் நடுநிசியை நோக்கி நகரும் வேளை. குலதெய்வமான ராஜ ராஜேஸ்வரி அம்மன் கோயிலின் இறுதிக் கட்டளைப் பூஜை பம்பை, செண்டை வாத்திய ஒலிகளோடு அடங்கிவிட்டிருந்தது.

அரண்மனையைச் சுற்றிலும்கூட பாரா உஷார்க்காரர்கள் முதலாவது பாரிக்குள் நுழைந்திருந்தனர். கோட்டைச் சேர்வைக் காரர் ஒரு கறுப்புப் புரவியில் ஒரு வலம் வந்துவிட்டுப் போயிருக்க அந்த இரவுப் பொழுதில் சவுக்கைப் பகுதியில் பரபரப்புக் காணப்பட்டதுதான் ஆச்சரியம்.

தீப்பந்தத் திகுதிகுப்புக்கு நடுவில் பெரும் கண்ணாடிச் சாடிகளுக்குள் முழங்கைப் பருமனில் மெழுகுவர்த்திகளும் எரிந்தபடி உருகிக் கொண்டிருக்க அதன் ஒளிப்புனலில் கிழவன் தனது அரண்மனைச் சகாக்களின் பேச்சில் கவனமாக இருந்தார்.

குறிப்பாக முக்கியச் சேதியோடும் ஒரு முடிவை எதிர் பார்த்தும் வந்திருக்கும் செஞ்சியரசன் சாந்தாஜியின் தளவாய் அரசமலையன் பேச்சில் அதீதக் கவனத்தோடு இருந்தார்.

"இந்த யுத்தத்தில் மைசூர்க்காரனும் ஜெயிக்கக் கூடாது. மதுரைக்காரனும் ஜெயிக்கக் கூடாது. இருவரும் தோல்வி காண வேண்டும். இல்லாவிட்டால் நாம் அனைவருமே ஒழிந்தோம்..."

"எப்படி?"

"இரண்டு பேருக்குமே இந்த ஒரு குடையின் கீழ் தென் னாட்டைக் கொண்டு வருவது என்பது கனவாகிவிட்டது. மைசூர்க்காரன் மதுரையை ஜெயித்தால் அவனது அடுத்த



குறி இந்தப் பக்கம் தஞ்சை, செஞ்சி, அந்தப் பக்கம் சேது நாடுதான்..."

"அவன் குறி வைத்தால் ஆயிற்றா... வெற்றி பெற வேண்டாமா? மறவர்கள் கைகள் என்ன மல்லிகைப் பூவா பறித்துக் கொண்டிருக்கும்?"

"சரி மதுரை நாயக்கர் ஜெயித்தால்...?"

"மீண்டும் மதுரை முழு வலிமை பெற்றுவிட்டது என்று கொக்கரிப்பார். பாளையங்களை உருட்டி விளையாட ஆசைப் படுவார்."

"ஆக எப்படிப் பார்த்தாலும் இவர்கள் இருவரும் ஜெயிக்கக் கூடாது என்கிறாயா அரசமலை?"

"ஆமாம்..."

"ஒரு யுத்தத்தில் இருவர் போரிடும்போது அது எப்படி இருவரும் தோற்க முடியும்? யாராவது ஒருவர்தானே தோற்க முடியும்?"

"இதை இருவருக்குமான யுத்தமாக நினைத்தால்தானே அந்தக் கேள்வி வரும். அப்படியல்ல, இது மூவருக்கு இடையில் நடைபெறும் யுத்தம்..."

"அதாவது தஞ்சை, செஞ்சி, சேதுநாடு மற்றுமுள்ள புதுக் கோட்டைச் சீமை, பட்டுக்கோட்டைச் சீமை, அறந்தாங்கிச் சீமை, பெருநாழிப்பட்டினம், கமுதிச் சீமை, சிவகங்கைச் சீமை என்று நாம் சார்ந்த அத்தனை பேரும் மூன்றாவது அணி... அப்படித் தானே?"

"அப்படியேதான்... இரண்டு பேரும் அடித்துக் கொள் ளுங்கள்... யார் வெற்றி பெற்றாலும் சரி... அவர்கள் இந்த மூன்றாவது அணியோடு மோதி வென்றால்தான் இறுதி வெற்றி என்று கூறுவோம்."

– செஞ்சித் தளபதி அரசமலை துடிப்போடு பேசினான். தளவாய் அம்பலக்காரன் நிதானமாகக் கிழவனை ஏறிட்டான்.

"என்ன அம்பலக்காரா– நீ என்ன சொல்ல நினைக்கிறாய்?"

"அரசமலை சொல்வது போல நடக்க வாய்ப்பில்லை என்று நினைக்கிறேன்."

"வேறு எப்படி நினைக்கிறாய்...?"

"மதுரையோடு இந்த நொடி நமக்குப் பகை இல்லை, மைசூர்க்காரனும் நமக்கு நண்பனில்லை. அவன் செய்வதும் அத்துமீறல். எனவே மதுரை விரும்பினாலும் விரும்பா விட்டாலும் நாம் மதுரையை முந்திக் கொண்டு மைசூர்க்காரனோடு யுத்தம் செய்வதுதான் எனக்குச் சரியென்று படுகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக இந்த ஒரு குடைக்குக் கீழ் நாட்டைக் கொண்டுவரும் ஆசை இவர்களுக்கு மட்டும்தான் தோன்ற வேண்டுமா? சொல்லப்போனால் இன்றைய தினம் டெல்லியில் பேரரசர் ஔரங்கசீப்புக்குப் பிறகு நிகரில்லாத ஒரே அரசர் எங்களது கிழவன்தான். கங்கை பாயும் பூமியின் தலைப்பாகம் இருக்கிற மாதிரி ராமேஸ்வரத்து மண்ணில் கால்பாகம் இருப்பதுதான் சரி.

இந்த ஒரு குடைக்குக் கீழ் தென்னாட்டையே கொண்டு வர எங்கள் கிழவனால்தான் முடியும். எனவே மைசூர்க்காரனை அடக்கி ஒடுக்கி விட்டு அப்படியே மதுரைப் பக்கம் திரும்பி எங்களைப் புறக்கணித்த உன்னையும் இனி விட மாட்டோம் என்று மார்தட்டுவோம். அதுதான் சரி."

— தளவாய் அம்பலக்காரன் பேசி முடிக்கக் குமார பிள்ளை அதைக் கேட்டுச் சிரித்தார். கிழவன் சேதுபதியும் குமாரபிள்ளையைப் பார்க்க, குமாரபிள்ளை வாயைத் திறக்க ஆரம்பித்தார்.

குமாரபிள்ளையின் சிரிப்பும் அழுத்தமும் கிழவனை உற்று நோக்க வைக்க நெற்றியிலும் வரிபந்தல். இனி வாய் திறக்காமல் இருந்தால் கிழவனும் விடமாட்டார் என்பதால் குமாரபிள்ளையே பேச ஆரம்பித்தார்.



"அருமை அரசே– என் இனிய சகாக்களே– ஒரு யுத்தத்திற்காக நாம் இப்படி நள்ளிரவில் கூடி விவாதிப்பது ஒருபுறம் எனக்கு வேதனையையும் இன்னொருபுறம் சிரிப்பையும்தான் தருகிறது..."

பிள்ளை சற்று இடைவெளி விட்டார். அனைவரும் அவரை அழுத்தமாகப் பார்வையிட்டனர்.

"எப்படி என்று விளக்கமாகச் சொல்லுங்கள் பிள்ளை" என்றார் கிழவன் சேதுபதி.

"சொல்லத்தான் போகிறேன்– விஜய நகர சாம்ராஜ்யம் எனும் குமாரகம்பணரின் அந்த நாள் ஆசைக்கு இந்த நாளில் ஒரு விடையைத் தேடிப் புறப்பட்டிருக்கிறார் மைசூர்த் தளவாய் குமரய்யா.

வறட்சியாலும், முன்னர் நடந்த யுத்தங்களாலும் மதுரை பலவீனமாக இருப்பதாக ஒரு நினைப்பு குமரய்யாவுக்கு இருக்கிறது. அத்துடன் நாமெல்லாம் இன்னொரு முறை மதுரைக்கு உதவ மாட்டோம் என்றும் நம்பியிருக்கிறான் மைசூர்க்காரன். அதுதான் அவனது புறப்பாட்டிற்குக் காரணம். அவனது யூகப்படியே மதுரை நாயக்கரும் வருவது வரட்டும் என்று யுத்தத்திற்குத் தயாராகி விட்டது ஒரு வேதனைக்குரிய விஷயம்.

எது எப்படியோ... குமரய்யாவுக்குச் சாதகமாகவே இப்பொழுது நாமும் பேசிக் கொண்டிருக்கிறோம். இதுவும் வேதனைக்குரிய விஷயமே!

நமது சேது நாடு தனிப்பெரும் பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கும் இந்த வேளையில் இப்படி யுத்தம், தற்காப்பு என்று யோசிப்பது சரியா என்று எனக்குத் தெரியவில்லை. நம்மையும் அறியாமல் நாம் யுத்தம் பற்றிச் சிந்தித்து எதிர்காலம்

பற்றிய பயத்தோடு பேசுவதை நினைத்தால் கொஞ்சம் சிரிப்பாகவும் இருக்கிறது-"

— குமாரபிள்ளை முடிக்கும் முன் கத்தரித்தான் அம்பலக்காரன்.

"பிள்ளை... வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று சொல்லுங்கள். மதுரைக்கும் மைசூருக்கும்தான் யுத்தம் நமக்கென்ன வந்தது என்று இருக்கச் சொல்கிறீர்களா- இல்லை பழைய பாசத்தோடு மதுரைக்கு நாமாக வலியப் போய் உதவ வேண்டும் என்கிறீர்களா?"

"சபாஷ்- அப்படிக் கேள்-" என்றான் கிழவனின் மைத்துனனும் கண்ணிமை போன்றவனுமான இரகுநாத தொண்டைமான்.

"மைசூர்க்காரன் நம்மையெல்லாம் கையாலாகாதவன் என்று நினைத்துக்கொண்டு அசட்டுத்தனமாகப் படை திரட்டிக் கொண்டு வருவான். நாம் அதை வேடிக்கை பார்க்கவா- இன்று மதுரை- நாளை நாம்தான் அவன் குறி என்பதை மறக்கலாமா பிள்ளை-?"- இது பெரிய உடையத் தேவர்.

"அப்படியானால் இந்த யுத்தத்தில் மதுரை தோற்றுப் போகும் என்பது உங்கள் எண்ணமா?"

"ஒருக்கால் தோற்றுவிட்டால்- அந்த வெற்றிச் சந்தோஷத்தோடு நம்மைக் குறிவைக்க அவனுக்கு எவ்வளவு நாளாகும்?"- இது அரசமலை.

"அப்படிக் குறி வைக்கும்போது பதிலடி கொடுப்போமே-"

"அப்படியானால் இப்பொழுது கையைக் கட்டிக்கொண்டு வேடிக்கை பார்க்கவா?"

"என் கருத்தை நான் கூறிவிட்டேன். பிறகு இந்தக் கூட்டத்தில் என்ன முடிவெடுத்தாலும் சரி நான் கட்டுப்படத் தயார்-"



"சேதுபதியவர்களே- பிள்ளை நாளைய பொழுதைப் பற்றிச் சிந்திக்காமல் பேசுகிறார். நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

விஜய நகர சாம்ராஜ்யக் கனவை நாம் வேடிக்கை பார்க்கப் போகிறோமா- இல்லை சேது நாடு அதைத் தகர்த்துத் தென்னகத்துக்கே தலைமை தாங்கப் போகிறதா?"

— அந்த இரவுப் பொழுதில் விவாதங்களில் அனல் பறந்தது. மைசூரில் இருந்துகொண்டு குமரய்யா மூட்டிய நெருப்பு சேதுநாட்டு அரண்மனையான இராமலிங்க விலாசத்திலும் பற்றிக்கொண்டு எரிய ஆரம்பித்தது.

புறத்தில் நடுச்சாமம் வந்துவிட்டதற்கு அடையாளமாக மூலைக் கொத்தள மணிச் சப்தமும் கேட்டது.

கிழவன் முகத்தில் அதீத சிந்தனை.

இறுதியில் ஒரு தீர்மானத்தோடு வாயைத் திறந்தார் கிழவன்.

"இந்த யுத்தத்தை நான் வேடிக்கை பார்க்க விரும்பவில்லை" என்றுதான் ஆரம்பித்தார். சொல்லிவிட்டுப் பாதாளப் பழரசம் என்றும் வெள்ளையர்களால் ஒயின் என்றும் விளிக்கப்படும் கருநீல மதுரசத்தில் ஒரு மடக்கினை எடுத்துக் குடித்துவிட்டு மீசையை நீவியும் விட்டுக் கொண்டார்.

"அப்படியானால் யுத்திக்கப் போகிறோம் என்று கூறுங்கள்-"- உற்சாகமாகக் கேட்டபடி ஒரு கதலிப் பழத்தை எடுத்துத் தோலை உரித்தான் நளவாய் அரசமலை.

"ஆமாம் யுத்திக்கப் போகிறோம்- இது ஒரு தவிர்க்க முடியாத யுத்தம்..."- கிழவன் திரும்பவும் மதுரசத்தைப் பருகி விட்டுக் குமாரபிள்ளையைப் பார்த்தார்.

பிள்ளையின் இமைகளிடம் படபடப்பு.

"மன்னிக்க வேண்டும் பிள்ளை... உன் எண்ணப்படி நடந்தால் என்னவாகும் என்று ஒருமுறை என்னை நான் கேட்டுக் கொண்டேன்.

குமரய்யா தன் கணிப்புப்படியே எல்லாம் நடப்பதாக நினைத்துக் கொக்கரிப்பது என் மனக்கண்ணில் தோன்றியது. அதன்பின் அவன் தஞ்சைக்கும், சேது நாட்டுக்கும் குறி வைப்பான் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

ஆக ஏதோ ஒருவிதத்தில் இப்பொழுது இருக்கும் நிலையில் சேது நாடு யுத்தத்திற்குத் தயாராகியே தீரவேண்டும்.

எதிரி வலுவாகிவிட்ட நிலையில் எதிர்ப்பதைவிட, அவன் அதற்காக முயற்சிக்கும்போதே எதிர்ப்பதுதான் புத்திசாலித்தனம்.

அதற்காக மதுரைக்கு உதவப் போகிறோம் என்பது பொருளில்லை. மதுரைக்கு உதவுவது போல நடித்து மதுரைக்குப் பாடம் புகட்டப் போகிறோம். எப்படி என்பதை யுத்தத்தின் போது சொல்கிறேன். இப்போதைக்கு யுத்த ஆயத்தம் கொள்வதுதான் சரியான முடிவாகும்.

என்ன தம்பி— என் முடிவு சரிதானே?"

— கிழவன் உறுதியான பேச்சோடு அதுவரை எதுவும் பேசாமல் அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த சீதக்காதியின் பக்கம் திரும்பினார்.

வள்ளலின் முகத்தில் மந்தகாசப் புன்னகை. அது அங்கீகாரப் புன்னகையா— இல்லை ஏளனப் புன்னகையா என்பதை இனம் பிரிக்க முடியவில்லை.

தளவாய் அம்பலக்காரன் அதன் நிமித்தம் வள்ளலைப் பார்த்து, "வள்ளலே— வாயைத் திறந்து பேசுங்கள். உங்களுக்குச் சண்டை என்றாலே வேப்பங்காய் என்பது எனக்குத் தெரியும். அதற்காக இப்படி மந்தகாசமாகச் சிரித்தால் எப்படி?" என்றான்.

வள்ளலும் வாயைத் திறந்தார்.

"காலகாலத்துக்கும் இந்தச் சேது மண்ணிற்குப் பெருமை சேரும் விதமாக வெற்றி யுத்தமாக இது இருக்கட்டும். சேதுபதி



சொன்னதுதான் சரி— நாளை வந்துவிடும் என்று கருதக்கூடிய ஒரு பெரிய யுத்தத்தைத் தவிர்க்கும் ஒரு சிறிய யுத்தமாகவே இதை நான் பார்க்கிறேன்.

இனி யுத்த தந்திரங்களைப் பற்றி யோசியுங்கள். சாம்ராஜ்யக் கனவோடு வரும் குமரய்யாவுக்கும் பாடம் கற்றுக் கொடுத்து அனுப்புங்கள்..."

வள்ளலின் பேச்சு கிழவனைக் கைதட்ட வைத்தது. "அருமை தம்பி... அருமை" என்றார்.

அதன்பின் தந்திரங்களில்தான் பேச்சு சென்றது. பொழுதும் விடிந்தது. சேது நாடும், தஞ்சையும், செஞ்சியும் குமரய்யாவைப் பொது எதிரியாகக் கருதிக் குறிவைத்துவிட்ட தகவல் மதுரைக்கும் போனது.

சொக்கநாத நாயக்கர் ஒருபுறம் மகிழ்ச்சியும் மறுபுறம் குழப்பமும் அடைந்தார்.

மகனிடம், "இப்பொழுதும் கெட்டுவிடவில்லை. வெட்கப்படாமல் கிழவனிடம் உதவி கேட்போம். அதில் தவறில்லை" என்று பேசிப் பார்த்தார். அவனோ முன் வைத்த காலைப் பின் வைக்க மாட்டேன் என்றான்.

சித்திரைத் திருவிழாவில் மதுரை சீரிளமை கொள்ளப் போகிறது என்கிற நிலை மாறிப் போய் எங்கும் யுத்த அலை வீசியது.

பல்லடத்திற்குத் தெற்கில் குமரய்யாவும் பெரும் படையுடன் கிளம்பி வந்துவிட்டான். அவனை எல்லை தாண்ட விடாதபடி மதுரைப் படை ஒருபுறமும், சேது நாட்டுப் படை மறுபுறத்திலும், அதோடு கலந்து தஞ்சைப் படையும் செஞ்சிப் படையும் ஒரு கடகக் கால்போல் சுற்றி வளைக்க, குமரய்யா கதிகலங்கிப் போனான்.

தன் திட்டம் மாறிப் போகக் கிழவன்தான் காரணம் என்பதைப் புரிந்து கொண்டவன் அந்த இக்கட்டிலும்

கிழவனுடன் பேரம் பேசத் தொடங்கித் தூது அனுப்பினான்.

# 50

குமாரய்யாவின் சமாதானத் தூதுவனாக நஞ்சுண்டையாவே தயாரானான். "நஞ்சா... போட்ட கணக்கெல்லாம் பொய்யாகிவிடும் போல் தெரிகிறதே. திரும்பின பக்கமெல்லாம் நாயக்கருக்கு ஆதரவாகப் படை திரண்டு வந்து விட்டதே எப்படி?"

"அதுதான் எனக்கும் தெரியவில்லை..."

"தெரியவில்லை என்று சொல்லவா நீ இருக்கிறாய்? எதற்கு இருக்கிறார்கள் ஒற்றர்கள்? இவர்கள் மூலமாகத் தஞ்சை, செஞ்சி மற்றும் சேது நாட்டின் நிலைப்பாட்டை நீ ஏன் முன்பே தெரிந்து வைத்துக் கொள்ளவில்லை?"

"என் கவலையெல்லாம் சொக்கநாத நாயக்கர் மீதே இருந்தது. அவர் உதவி கேட்க விரும்பிய போதும் அவரது புதல்வர் விரும்பாததால், உதவி என்கிற ஒரு விஷயமே இல்லாமல் போய், நாயக்க பூமி வசமாக மாட்டப் போகிறது என்று நினைத்து விட்டேன்."

"போதும் உனது அசட்டுச் சமாதானம். இப்போதைய நாயக்கப் படையின் வலிமைக்கே பிரதான காரணம் சேது நாட்டுக் கிழவன்தான். உதவி கோராமலே அவன் உதவி செய்ய வந்திருக்கிறான் என்றால் உள் காரணம் ஏதோ இருக்கிறது. அனேகமாக நம்மைக் குறித்த எதிர்கால அச்சம் காரணமாக இருக்கலாம்..."



"என்ன கூறுகிறீர்கள்?"

"இன்று மதுரையைக் குறி வைத்திருக்கும் நாம் நாளை சேது நாட்டையும் குறி வைப்போம் என்று கருதி, அப்போது போரிட்டு அழிவதற்கு இப்போது போரிடுவது புத்திசாலித்தனம் என்று கருதியிருக்கலாம். இல்லாவிட்டால் செஞ்சிக்காரனும், தஞ்சைக்காரனும் கூட ஏன் ஒன்றுபடப் போகிறார்கள்?"

"அப்படியானால் தென்னகம் என்றால் நாங்கள்தான் என்று கூறுகிறார்களா?"

"அப்படித்தான் பொருள் கொள்ள வேண்டும். இப்போது நம் நிலைப்பாடுதான் மோசமாக உள்ளது. இவ்வேளையில் கிழவன் சேதுபதி மட்டும் நம் விருப்பத்திற்கு வளைந்து கொடுத்து நடக்க முன் வந்துவிட்டால் நாம் இந்த யுத்தத்தில் வெற்றி பெற்று விடலாம்."

"போரிடுவதற்காகப் புறப்பட்டு வந்து விட்டவன் எப்படி வளைந்து கொடுப்பான்?"

"இந்த யுத்தம் என்ன கிழவனுக்கும் நமக்குமானதா! சொக்கநாத நாயக்கரும் மதுரையும்தானே நமது குறி...?"

"அதனால்...?"

"கிழவனைச் சந்தித்து மைசூர் அரசுக்கு நீங்கள் பகையாளி இல்லை என்று சொல்..."

"கேட்பாரா?"

"அது பேசுவதில் இருக்கிறது..."

"சாதுர்யமாகவே பேசுகிறேன். ஒப்புக் கொள்ள மறுத்து விட்டால்...? நாம் அச்சப்படுகிறோம் என்பதையும் புரிந்து கொண்டு விட்டால்...?"

"என் நெஞ்சைத் தாக்கும் கேள்விகளாகவே கேட்காதே நஞ்சுண்டா. எப்படியாவது கிழவனைச் சமாதானப்படுத்தப்

பார். அதற்கு விலையாக நாம் வெல்லப் போகும மதுரையின் புறநகர்ப் பகுதிகள் அவ்வளவையும் கூடத் தந்து விடுவதாகச் சொல்..."

"என்ன இது—? நமது விஜயநகர சாம்ராஜ்யக் கனவை நீங்கள் பஞ்சுப் பொதிபோல நினைத்துப் பேசுகிறீர்களோ?"

"ஆசை வேறு— யதார்த்தம் வேறு. இங்கே வந்த பிறகல்லவா தெரிகிறது தென்னாடே ஒன்றுபட்டு நிற்பது..."

"எனக்கென்னவோ இப்படிக் கிழவன் காலில விழுவதற்கு நாம் போரிட்டுச் செத்து மடிவது மேல் என்று தோன்றுகிறது."

"உணர்ச்சி வசப்பட எனக்கும் தெரியும் நஞ்சுண்டா. யுதத்திலும் சில விட்டுக் கொடுத்தல்களும், தந்திரங்களும் வேண்டும். எதிரியின் வலியறிந்து அதற்கேற்ப போக வேண்டும். உயரமாக இருக்கிறது தென்னை, எனவே அதில் நான் ஏறமாட்டேன் என்று கூறுவதைவிட, அதிலும் ஏறிக் கனிகளைப் பறிக்க முயற்சி செய்வது போன்றதுதான் இந்த விஷயம்."

"என்னனென்னவோ சொல்கிறீர்கள். உங்கள் ஆசையை ஏன் நிராசையாக்க வேண்டும்? கிழவனிடம் பேசிப் பார்க்கிறேன்...!"

நஞ்சுண்டையா குமரய்யாவின் விருப்பங்களை நெஞ்சில் சுமந்து கொண்டு திண்டுக்கல் கடந்து, கன்னிவாடியை ஒட்டி சின்னகாத்ரியின் சரமஞ்சரக் கொட்டாரத்தில், தன் படைப் பிரிவோடு ஓய்வெடுக்க வந்திருக்கும் கிழவனை ஒரு வெள்ளைக் கொடி பிடித்தபடி வந்து சந்தித்தான்.

சுற்றிலும் பாளையக்கட்டுக்கள், பெரிய உடையத்தேவர், மைத்துனன் இரகுநாதன், மெய்க்காப்பாளன் போலச் சோளகை சேருவைக்காரன், அம்பலக்காரன் என்று புடை சூழ அமர்ந்திருந்த கிழவனும் நஞ்சுண்டையாவைக் கூர்மையாக ஏறிட்டார்.



"வந்தனங்கள். அடியேன் மைசூர் அரசின் ராஜயப் பிரதிநிதி. நஞ்சுண்டையா என் திருநாமம். எங்கள் வீரத்தளவாயின் தூதுவனாகத் தங்களிடம் சில ராஜ்ய விஷயம் பேச வந்திருக்கிறேன்."

— நஞ்சுண்டையா சொல்லிவிட்டுச் சுற்றிலும் இருப்பவர்களைப் பார்த்தான். எல்லோரும் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் அட்டபமாகப் பதிலுக்கு அவனை வெறித்தார்கள்.

அசாத்தியமான ஒருவித மௌனம்.

அது நஞ்சுண்டையாவை என்னவோ செய்தது.

"இப்படி மௌனமாக இருந்தால் எப்படி? நான் ஒரு முக்கியச் சேதியோடு வந்திருக்கிறேன்."

— நஞ்சுண்டையா இரைந்து கத்தினான்.

"என்ன? உங்களோடு நாங்கள் மோத வரவில்லை. நாமிருவரும் நண்பர்கள் என்று சொல்லி அனுப்பியுள்ளானா உங்கள் குமாரய்யா?"

— பெரிய உடையத்தேவர் கச்சிதமாகக் கேட்டார். நஞ்சுண்டையா முகத்தில் திகைப்பின் ரேகை வரிகள்.

"என்ன பார்க்கிறாய்? காய்ந்து கிடக்கிறது மதுரை. அதைப் பாய்ந்து பிடித்து விடலாம் என்று பார்த்தால் கடகக்கால் போல நாலாபுறம் நாங்கள் கூடி வந்து நின்று கொண்டிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தி விட்டதோ?"

"அதனால்தானே யுத்தமிட வந்த இடத்திலும் சமாதானமாகப் போகத் தூது வந்திருக்கிறான் இவன்..."

"இவர்களாக நினைத்தால் யுத்த முழக்கம் செய்வார்கள். இவர்களாக நினைத்தால் சமாதானக் கொடியும் தூக்குவார்கள். என்ன அப்பனே? இதுதான் விஜயநகர சாம்ராஜ்யத்தை உருவாக்கும் லட்சணமா?"

நஞ்சுண்டையா வாயைத் திறந்து எதையும் கூறாமலே அவன் சொல்ல வந்ததை ஒவ்வொருவராகப் போட்டு உடைக்க நஞ்சுண்டையா திணறிப் போனான்.

"என்ன விழிக்கிறாய்? யுத்த முழக்கம் செய்தபடி வந்து விட்டுப் போரிட்டு இரண்டில் ஒன்று பார்க்காமல் இந்த இடைப்பாட்டுச் சமாதானங்கள் யாரை ஏமாற்ற?"

– கிழவனைச் சுற்றியிருப்பவர்களின் கேள்வியால் விழி பிதுங்கிற்று நஞ்சுண்டையாவிற்கு.

அதுவரை எல்லோரையும் பேசவிட்டுப் பார்த்துக் கொண்டிருந்த கிழவன் அதன் பின் ஒரு பார்வை பார்க்க, அவர்கள் வாய் அடங்கியது.

நஞ்சுண்டையா வியர்த்து வெலவெலத்துப் போயிருந்தான்.

"வீரனே– நீ சமாதானம் பேச வந்திருப்பவன். உன்னிடம் நான் அதிகம் பேச விரும்பவில்லை. உன் தளவாய் குமரய்யா உன்னிடம் சொல்லியனுப்பியிருப்பதாகக் கூறியிருக்கும் விஷயங்களை நான் எதை வைத்து நம்புவது?"

கிழவன் அப்படிக் கேட்பார் என்று ஒருவரும் எதிர் பார்க்கவில்லை. நஞ்சுண்டையாவோ இது ஏது புது மாற்றம் என்கிறாற் போல் சிலிர்த்து இடையணியிலிருந்து குமரய்யா எழுதிக் கொடுத்த ஓலையை எடுத்து நீட்டினான்.

வாங்கிப் பார்த்த கிழவனும் அதை வாசித்துப் பார்த்தார். பின் குறுநகை சிந்தியபடி, "நல்லது– இந்த உடன்பாட்டில் எனக்குச் சம்மதம் இல்லை என்று கூறிவிடு. அப்படியே விஜயநகர சாம்ராஜ்ய ஆசைக் கனவையும் விட்டுவிடச் சொல்" என்றார்.

மைத்துனன் இரகுநாத தொண்டைமான் அவன் பங்கிற்கு வாய் திறந்தான். "சேதுப் பேரரசு வேண்டுமானால் உருவாகலாம். ஆனால் உங்கள் ஆசை ஒருபோதும் ஈடேறாது.



இயற்கை மட்டும் எங்களுக்குக் கருணை செய்தால் உங்கள் மண்ணில் ஊற்றெடுத்து ஓடும் ஒரு காவிரிபோல எங்கள் மண்ணில் ஒரு ஜீவநதி இருந்திருந்தால், ராமநாதபுரத்தைத் தலைமையகமாகக் கொண்ட ஒரு சேது பாரதத்தையே எங்கள் கிழவன் உருவாக்கி விட்டிருப்பார். உங்களைப் போல ஆற்றைப் பிடித்து அணைகள் கட்டிக் கொண்டு கண்ணாமூச்சி யெல்லாம் காட்டமாட்டார்.

போய்ச் சொல்– இருப்பதைக் காப்பாற்றிக் கொள்வது தான் புத்திசாலித்தனம். இதற்கு மேலும் உங்களுக்குப் புரியா விட்டால் இந்த யுத்தத்தில் நாங்கள் அதை உன் அரசனுக்குப் புரிய வைப்போம்."

இரகுநாத தொண்டைமான் உள்ளார்ந்த பொருளோடு பேசி நஞ்சுண்டையாவை அனுப்பி வைக்க, பெருத்த ஏமாற்றத் தோடு திரும்பத் தொடங்கினான் அவனும்.

திரும்பி வந்து அவன் சொன்ன சேதியைக் கேட்டு குமரய்யா குமுறும் அய்யாவாக மாறிப் போனான்.

அதே சமயம் முத்துவீரப்பன் தலைமையில் கோவிந்தப் பையாவும், வேங்கடகிருஷ்ணப்பரும் அழைத்து வரும் நாயக்கரின் படை திண்டுக்கல் தாண்டி, தாராபுரம் நோக்கி விரைந்து கொண்டிருந்தது. ஒரு படை கரூர் நோக்கியும் செல்ல ஆரம்பித்தது.

முத்துவீரப்பனுக்கும், தளவாய்களுக்கும் கிழவனின் படையும், செஞ்சி, தஞ்சையின் படைகளும் ஒட்டன்சத்திரம் கடந்து முகாமிட்டிருப்பதும், குமரய்யா சமாதானம் பேச முன் வந்ததும், பதிலுக்குத் திருப்பி அனுப்பியதும் தகவல்களாக வந்து சேர்ந்தன.

முத்துவீரன் கிழவனின் பெருந்தன்மையை, எதிர்கால அரசியல் அறிவைப் புரிந்து கொள்ளாமல் பேசினான். "நாம் தனியாகப் போராடி வெற்றி பெற்றுவிட்டால் என்ன செய்வது

என்கிற பயம் கிழவனுக்கு. அதனால்தான் அழையாத விருந்தாளியாக வந்து வெற்றியில் பங்குபோட்டுக் கொள்ளப் பார்க்கிறான்" என்றான்.

எது எப்படியோ குமரய்யாவின் எந்த முயற்சியும் பலிக்கவில்லை. அவன் பொல்லாத நேரம் யுத்தத்தில் இறங்கிவிட்டுப் பின்வாங்கவும் முடியவில்லை.

பொறியில் அகப்பட்டுக் கொண்ட எலிபோல ஆனான். நான்குபுறமும் சுற்றி வளைத்த, ஒன்றாமல் ஒன்றுபட்ட படை குமரய்யாவைக் கிள்ளி எறிந்தது. சொச்ச வீரர்கள் திரும்பி ஓடிப் போனார்கள். கிழவனுக்கோ, இல்லை மற்றவர்களுக்கோ ஒரு நன்றிகூடக் கூறாமல் முத்துவீரப்பன் மதுரை திரும்பினான். சொக்கநாதர் இதையறிந்து, கவலை மிகுந்து போனதால் உடல் நலமிழந்து படுத்த படுக்கையானார்.

ஆனால் கிழவனோ அற்புதமாய் ஒரு காரியத்தைச் செய்தார். குமரய்யா எழுதிய ஓலையைக் குமாரபிள்ளையிடம் கொடுத்து சொக்கநாத நாயக்கரிடம் அதைக் காட்டி வரச் சொன்னார். அப்படியே உடல் நலம் குறித்தும் விசாரித்து வரக் கட்டளையிட்டார்.

குமாரபிள்ளையும் மதுரையை அடைந்து நாயக்கரைத் தரிசனம் செய்து க்ஷேம நலன்களைப் பேசி முடித்து விட்டு, குமரய்யாவின் ஓலையைக் காட்டினார்.

சொக்கநாத நாயக்கரின் கண்ணிரண்டும் குளமாகி விட்டன.

"கிழவன் ரகுநாத சேதுபதியவர்கள் என் பொருட்டு என் மகனை, அவனது பெருந்தன்மையற்ற செயலைப் பொருட்படுத்தவில்லை என்பதைப் புரிந்து கொண்டேன். எனக்கும் உடல்நலமில்லாமல் போய்விட்டது. என் வார்த்தைகட்கும் இங்கே மதிப்பில்லாமல் போய்க் கொண்டிருக்கின்றன. என்ன செய்வது? எல்லாம் என் தலைவிதி!" என்று கண்ணீர் வடித்த சொக்கநாதர், "அன்று நான் கேட்டதன் பேரில் உதவிய



கிழவன் இன்று கேட்காமலே உதவியிருக்கிறார். நான் அளித்த பட்டமான பரராஜகேசரி பட்டத்திற்கு உண்மையில இப்பொழுதுதான் பொருள் சேர்த்திருக்கிறார். அவரது பாதாரவிந்தங்களுக்கு எனது நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். இந்த நவரத்தின மோதிரத்தை அவரிடம் தர வேண்டும் நீ" என்றபடி சொக்கநாத நாயக்கர் தன் விரலில் தரித்திருந்த மோதிரத்தைக் கழற்றிக் குமாரபிள்ளையிடம் நீட்டினார்.

நீட்டும்போதே அதில் கண்ணீர்த் துளியிரண்டு பட்டுத் தெறித்தது.

"மோதிரத்தை விடவும் இந்தத் துளிகள்தான் மதிப்பு மிக்கவை. இதை நான் எப்படி எடுத்துச் செல்லப் போகிறேன்" என்றது குமாரபிள்ளையின் உதடிரண்டும்.

அதன்பின் மங்கம்மாளையும் முத்துவீரப்பனையும் பார்த்தபோது அவர்கள் குத்தலாக, "இப்பொழுதுதான் வழி தெரிந்ததோ?" என்று கேட்டுப் பிள்ளையைச் சற்றே சோகியாக்கினர்.

கோவிந்தப்பய்யாவும், வேங்கடகிருஷ்ணப்பரும் பழைய ஸ்நேகத்தைத் துளியும் மறக்கவில்லை.

"கிழவனவர்கள் சமயத்திற்கு வந்திராவிட்டால் இந்த மதுரை இந்த நொடி கைமாறியிருக்கும்" என்று கூறித் தங்கள் நன்றியுணர்ச்சியையும் வெளிப்படுத்திக் கொண்டனர். அதன் பின் சம்பிரதாயத்திற்கு ஒரு நன்றி மடலை முத்துவீரன் செஞ்சிக்கும், தஞ்சைக்கும், சேதுநாட்டுக்கும் அனுப்பி வைத்தான்.

அதில் கீறல் பெறக்கூடச் சொக்கநாத நாயக்கரிடம் வரவில்லை. அவனே கீறலிட்டு அனுப்பி வைத்தான்.

குமரய்யாவை வெற்றி கொண்ட மதர்ப்பு, மதுரையின் அடுத்த வாரிசு என்கிற உரிமை எல்லாமாய் அவனை ஒருபுறம் இயக்க, மறுபுறம் நாளுக்கு நாள் சொக்கநாதர் உடல் நிலை மிக மோசமாகிப் போனது.

அதற்கேற்பச் சித்திரை வெய்யிலின் உக்கிரமும் மதுரை நகரைப் பொசுக்கி எடுத்தது. வறட்சியில் ஆடுமாடுகள் எல்லாம் செத்து விழுந்தன.

'மழையை எதிர்நோக்கி மக்கள் கூட்டம் வானம் பார்த்து நிற்க, மக்களின் துயரத்தையும், தனது அந்திமத்தின் கடினத்தையும் உத்தேசித்து உத்தேசித்தே சொக்கநாத நாயக்கரின் நாடித்துடிப்பும் மெல்ல அடங்க ஆரம்பித்தது.

1682—ஆம் ஆண்டு, ஆனி மாதம் 2—ஆம் தேதி அதாவது ஜூன் 16—ஆம் நாள் தடுமாறியபடி மீனாட்சி ஆலயம் வந்து திரும்பிய சொக்கநாத நாயக்கர் நல்ல மதிய வேளையில் பகலவன் தகிக்கும்போது கைகூப்பியபடியே மரித்துப் போனார்.

அந்த மரணச் சேதியோடு ஒரு மணிப்புறா ராமநாதபுரத்துக்கு விரைய ஆரம்பித்தது.

இராமநாதபுரத்து அரண்மனையில் சவுக்கையில் அமர்ந்து ராஜ்ய பரிபாலனத்தில் ஈடுபட்டிருக்கையில் புறாவின் சேதி கிழவனை அடைந்தது. சேதியை அறிந்த மறுநொடி சர்வ பிணக்குகளையும் மீறி, அந்த மன்னனின் மரணத்தை எண்ணிக் கண்ணிரண்டும் கலங்கிக் கண்ணீரை ஏந்திப் பிடித்தன கிழவனிடம்.

குமாரபிள்ளை கொண்டு வந்து தந்திருந்த மோதிரம் விரலிலேயே இருந்தது. அதைப் பார்த்து அழுத்தமாக நாயக்கர் நினைப்பில் விழுகையில் கண்ணீரும் அதன் மேல் விழுந்து பட்டுத் தெறித்தது.

அவையே ஆச்சரியமாகப் பார்த்தது. ராஜநேசம் என்பது எப்படிப்பட்டது என்பதற்கான அத்தாட்சியாக அது விளங்கியதாகத் தோன்றியது. அதன்பின் அன்றைய அரண்மனைப் பணிகளை ஒதுக்கி வைத்துவிட்டு நேராக அந்தப்புரத்தில் உள்ள மாடத்தில் போய் ஆசுவாசிப்போடு நிற்கத் தொடங்கினார். பார்வை எதிரில் தெரியும் நீலவானின் மேலேயே இருந்தது.



உள்ளமோ மதுரையில் இறந்து போனது நாயக்கர் மட்டுமில்லை, தனக்கும் மதுரைக்கும் இருந்த ஒருவித உறுதியான பிணைப்பும் கூட என்றுதான் நினைத்தது. அதற்காகக் கவலைப்படுவதை விட அந்த நொடிப்பொழுதில் இறந்துவிட்ட சொக்கநாத நாயக்கரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பது உத்தமம் என்று தோன்றியதோ என்னவோ?

கிழவனின் கைகள் கூப்பின. உதடிரண்டும் 'இராமலிங்கம் இராமலிங்கம்' என்றும், 'அம்மா தாயே இராஜேஸ்வரி' என்றும் பிரார்த்திக்கத் தொடங்கியது.

அதற்கான அங்கீகாரம் போல அரண்மனைக் கோவில் மணியானது அதிர்வோடு ஒலிக்கத் தொடங்கியது.

**முற்றும்**